எண்.326

சிவமயம்.

தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,

திருவள்ளுவர் நூல் நிலையம்,

பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் வெ. பெரி. பழ. பழனியப்ப செட்டியார் அவர்களால் இணைவளிக்கப்பெற்றது.

..... ஆண்டு ..... திங்கள் ——— நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.


PONDICHERRY

சிவமயம்.

ஸ்ரீ ஸ்ரீ

தாண்டவராயஸ்வாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

கைவல்லிய நவநீதம்

மூலமும்,

ஸ்ரீ-சிதம்பரத்திலெழுந்தருளியிருந்த

ஸ்ரீ - கோவிலூர்

ஸ்ரீ ஸ்ரீ

பொன்னம்பலஸ்வாமிகள்

இயற்றிய

தத்துவார்த்ததீபமென்னும்

உரையும்.

இவை

ஷி ஸ்வாமிகள் மாணக்கரும்

மடாதிபதியுமான

ஸ்ரீ சிதம்பரஸ்வாமிகளால்

பார்வையிடப்பட்டு,

ஷி ஸ்வாமிகளினுத்திரவின்படி

சென்னை :

ஆநந்தாஸ்ரம ஸாது மஹா சங்கத்தாரால்

வைஜயந்தி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1913.

[நான்காம் பதிப்பு.]

[காபி ரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.]

(*All Rights Reserved.*)

விலை ரூபா **2.**

MADRAS:

PRINTED AT THE VAIJAYANTI PRESS,

(MADRAS TIMES PRINTING & PUBLISHING & CO., LD.)

BY

W. F. GRAHAME ESQ., I.C.S. (RETIRED) AT 82, MOUNT ROAD.

ஓம்:

தத்சத்

பரப்பிரஹ்மணேநம:



ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள்.

முக்கிய அறிவிப்பு.

இப்புத்தகத்தை வாங்கும் ஒவ்வொருவரும் அடியிற்கண்டபடி சிதம்பரம் கோ. சித. மடாலயம் ஏஜெண்டு முத்துக்கிருஷ்ண சுவாமிகளின் கையெழுத்துடன் பார்த்து வாங்கவேண்டியது. இக் கையெழுத்து இல்லாத புஸ்தகங்கள் சரியானவையல்லவாகையால், அவற்றை வாங்குபவர்களும் விற்பவர்களும் சட்டப்படி தண்டனைக்குள்ளாவார்களென்று இதனால் தெரிவிக்கப்படுகிறது.

☞ கையெழுத்து : முத்துக்கிருஷ்ணசுவாமி

உ

சிவமயம்.

ஓம்

தத் ஸத்

பரப்பிரஹ்மணேநம:

முகவுரை.

உலகின்கண் ஆன்மாக்கள் விரும்பத்தக்கது துக்கத்தினீக்கமும், சுகத்தினடைவுமாமென்பது யாவருந் தெற்றெனவுணர்ந்த விஷயமேயாம்.

இத்தகையவடைவு கேவலம் பிரஹ்மஞான மொன்றிலுலேயே யடையப்படும். இதன்பொருட்டே பரம கருணாநிதியாகிய பரமேசுரன் அதிகாரிகளின் வேறுபாட்டிற் கிணங்க கன்மம், பக்தி, யோகம், ஞானமென்னும் நான்கினையும் வேதங்களின் வாயிலாகக்கூறியருளினர்.

இவற்றுள் கன்மம், பக்தி, யோகம் மூன்றும் சித்தசுத்திக் கேதுவாயும் ஞானமொன்றே அநர்த்த நிவிர்த்தி, ஆநந்தப்பிராப்திவடிவ மோக்ஷத்தைப் பயப்பதாயுமிருத்தலின் பண்டையகாலத்து நம்மகரிஷிகள் ஞானத்தினையே பிரதி பாதிப்பதாகிய உபநிஷத்து, கீதை, பிரம சூத்திரமென்னு மூன்றினையும், அநுசரித்து வழிநூல், சார்புநூல்களாக வாசிட்டம், பஞ்சதசி, விவேக சூடாமணி முதலிய கிரந்தங்களை இயற்றியருளினர், தமிழ்ப் பாஷையின்கண் அவைகளின் பொருளையெளிதி லுணருமாறு இவைகளையெல்லாம் சங்கிரகித்து கைவல்ய நவநீதம் என்னும் நூலை ஸ்ரீ தாண்டவராய ஸ்வாமிகள் செய்யுள்வடிவா யியற்றியருளினர். அதற்கு எமது பரமகுருவாய் விளங்கிய ஸ்ரீமத் பொன்னம்பல ஞான தேசிக ரவர்களால் மூதனூல்களைத் தழுவி, "தத்துவார்த்ததீப" மென்னும் உரை யியற்றப்பட்டது. அது மடாலயத்தின்பேரால் காபி ரைட் ரிஜிஸ்தரா யிருக்கிறது. அவ்வாறியற்றிய உரையின் முதற்பதிப்பு தஞ்சை, "நாஷனல்" பிரஸிலும், இரண்டாம்பதிப்பு, கொண்ணூர் மாணிக்க முதலியாரால் சென்னை நோன்மணி விலாஸம் பிரஸிலும், மூன்றாம்பதிப்பு சென்னை சாது மஹாத்மாசை. ஐத்தின செட்டியார் குமாரர் சிவசங்கர செட்டியாரவர்களால் தமது

ரிப்பன் பிரசிலும் எங்கள் உத்தரவின்மீது அச்சிடப்பட்டன. அம்மூன்று பதிப்பும் ராயல் 12 பக்கவளவில் பதிப்பிக்கப்பட்டுள்ளன். சென்னையின்கண் சிலர் எங்கள் உத்திரவின்றி ராயல் 12 பக்கங்கொண்ட இந்த வளவிலேயே அச்சிட்டு டைடல் பேஜில்லாமலும் பிரசின் பேரில்லாமலும், விற்கிறையஞ் செய்கின்றார் களென்று தெரிவதால், அதினின்றும் வேறுபடுத்துதற்காகவே இந்நான்காம் பதிப்பு டிம்மி எட்டுப்பக்கங் கொண்ட வளவாய்ப் புஸ்தகத்தைப் பெரிதாக்கி பிரசங்கத்தொகை எண்களை இங்கிலீவிலும் கவித்தொகை எண்கள் முதலியவற்றைத் தமிழிலுமாக்கி, இப்பதிப்பை **சென்னை ஆனந்தாஸ்ரம சாதுமஹா சங்கத்தார்க்குக்** கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனதால், இப்புத்தகத்தை வாங்கு மொவ்வொருவரும், முற்கண்டபடி ராயல் 12-பக்க வளவுள்ள மூன்றுபதிப்பு முற்றும் விற்றுவிட்டமையின், இப்புத்தகத்தை நன்கு கவனித்துச் **சென்னை ஆனந்தாஸ்ரம சாதுமஹா சங்க** காரியதரிசிகளாகிய கு. ஸ்ரீநிவாச நாயகர், ப. ஷண்முக முதலியார் இவ்விருவர்கள் கையெழுத்திருக்கப் பார்த்து, டி புத்தகங்களை வாங்கவேண்டும். எங்கள் உத்திரவின்றி மறைவாய்ப் பதிப்பித்துள்ள அப்புஸ்தகம் மிகவும் நிஷ்டையாக அச்சிட்டிருப்பதால் அதை வாங்குவது பயனற்றதாம். அப்புஸ்தகத்தை வாங்கி விற்பவர்கள் அறிக்கையிற் கண்டபடி புத்தகத்தின் நஷ்டத்துக் குத்தரவாதிகளாவதுமன்றித் தண்டனைக்குமுள்ளாவார்களென்பதை இதன் மூலமாய்த் தெரிவித்திருக்கிறேன்.

இங்ஙனம்:

ஏஜெண்டு,

முத்துக்கிருஷ்ணசாமி,

ஸ்ரீ பொன்னம்பல ஸ்வாமிகள் மடாலயம்,

சிதம்பரம்.

காரியதரிசிகள்,



சென்னை ஆனந்தாஸ்ரம சாதுமகா சங்கம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தத்துவவிளக்கப்படலத்தின்

அநுக்கிரமணிகை.

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
1	மங்களாசரணை	நூ
2	ஆசையனேகத்தும் மூவேடணையுளடங்கல்	சு
3	அஞ்ஞானிகளிடத்து விராகம் மந்தம், ஞானிகளிடத்து விராகம் திடம் எனல்	,,
4	பொன்னிலமாதர் என்பதற்கு வேறுபொருள் ...	நி
5	சேதனப் பிரபஞ்சமாத்திரத்தில், சாட்சித்தன்மை யுண்மையும், அசேதனப் பிரபஞ்சத்தி லஃதின்மையும் ...	,,
6	விசேஷண லட்சணம், உபாதிலக்ஷணங்களோடு அவச்சேதவாதத்தன்மை, ஆபாசவாதத்தன்மைகள் ...	சூ
7	இந்நூலாசிரியருக் காபாசவாதமே உடன்பாடு அவச்சேதவாதமன்றெனல்	எ
8	அவச்சேதவாதத்திற் ரோடம்	,,
9	தேகத்திற்குப் புறம்பே ஆபாசப் பிரகாசமும், சாட்சிப் பிரகாசமும்	அ
10	உள்ளே ஆபாசப்பிரகாசமும், சாட்சிப்பிரகாசமும் ...	,,
11	சாட்சிப் பிரகாசத்தில் விருத்தி யங்கீகாரபட்சம் ...	கூ
12	ஆகாசதிருஷ்டாந்தத்தாற் கொள்ளக்கிடந்ததோரிரகசியம் ...	,,
13	மஞ்ஞல்யமே பிரஹ்மோபலப்தி ஸ்தானமெனல் ...	கo
14	செய்யுளின் மூன்றும் பாதத்திற்கு வேறுமொருபொருள் ...	கக
15	ஏகநாயகன் என்றதற்குப் பொருள்	,,
16	காரணபிரஹ்மத்திற்குச் சாட்சித்தன்மை அசம்பவமாகாமை	,,
17	பதங்கள் என்றது, விவாத விஷயமாதலால், அதற்குச் சமாதானம்	,,
18	வேதாந்தாசாரிய சிரோமணியாகிய வியாசபகவான் கருத்து ...	கஉ
19	அந்நியத்தின் நிந்தை ஒன்றன்றுதியின்பொருட் டென்பதற்குத் திருஷ்டாந்தம்	,,
20	ஐந்துதேவதைகளி னுபாசகர்க்கும் சமபயன் ...	கங

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
21	பரமாத்மா வொருவரிடத்து நாநாகாமரூபங் கூடுமாறு ...	கந
22	புராணவாக்கியங்களின் விரோதசங்கைக்கு முக்கியசமாதானம்.	கச
23	மந்தப்பிரக்ஞர் காரியப் பிரஹ்மத்தை உபாசிக்குமாறு ...	,,
24	காரணப்பிரஹ்மத்தை உபாசிக்குமாறு	கடு
25	உபலட்சணம்	,,
26	வியாசர் அபிப்பிராயமறியாமற் சைவாதியோர் தூக்கிக்குமாறு.	கசு
27	சீவப்பிரஹ்மங்களின் ஏகத்துவம் பேதபரமன்று சுபாவசித்தமா மெனல்	கஅ
28	நூற்கு அதிகாரி	உக
29	நூற்கு விஷயம்	,,
30	நூற்குச் சம்பந்தம்	உங
31	நூற்குப் பயன்	,,
32	சாதன சதுஷ்டயம்	உடு
33	தாபத்திரயம்	உஅ
34	அதிகாரிபேதம்	உக
35	விதிவத்துபசந்நத்துவம்	,,
36	தீட்சை செய்தியற்கை குணஞ்சோதித்தல்	நக
37	கஅ - முதல் உ0 - வது செய்யுள் வரையும், போதனுப்பிரகாரம்.	நஉ
38	சீவாதி சத்தவாச்சியம்	நச
39	சாக்கிராதி அவஸ்தைகளினியல்பு	நள
40	அத்தியாச சாமக்கிரிகள்	நக
41	திருஷ்டாந்தத்தில் அத்தியாரோபவிலக்கணம் ...	ச0
42	சத்கியாதிவாதி நிரூபணமும், கண்டனமும்... ...	சக
43	அசத்கியாதிவாதிகள் கொள்கை	சஉ
44	ஆத்மக்கியாதிவாதிகள் கொள்கை	,,
45	அந்நியதாக்கியாதிகள் கொள்கை	,,
46	அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்நியதாக்கியாதிகள் நீதிகண்டனத்தோடு அக்கியாதிவாதிகள் கொள்கை ...	சந
47	அக்கியாதி மதகண்டனம்	,,
48	அத்வைத சித்தாந்தமாகிய அநிர்வசனீயக்கியாதி நிரூபணம் ...	சச
49	பரிணமவிவர்த்தங்களினிலக்கணம்	சடு
50	மித்தியாசர்ப்பத்திற்கதிஷ்டானம் இரச்சுவுபஹிதசேதனம்எனல்.	,,
51	இரச்சுஞானத்தால் சர்ப்பநிவிர்த்தி கூடாதெனல் ...	சசு
52	இரச்சுஞானத்தால் சர்ப்பநிவிர்த்தி கூடுமாறு ...	,,
53	இரச்சுஞானத்தால் சர்ப்பஞான நிவிர்த்திகூடாதெனல் ..	,,
54	இரச்சுஞானத்தால் சர்ப்பஞான நிவிர்த்தி கூடுமாறு ...	சள

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
55	நிவிர்த்தி இருவகைத்தெனல்	சஎ
56	மற்றுமொரு சமாதானம்	,,
57	பின்னுமொரு சமாதானம்	,,
58	சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானமொன்றே யெனல்	,,
59	சதசத்விலட்சணத்திற்குப் பொருள்கூறுவது பொருந்தாதெனல்	சக
60	அதற்குச் சமாதானம்	,,
61	அத்தியாசவிலக்கணம்	,,
62	அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை கூறினதற்குத் தாற்பரியம்	ஙக
63	அத்தியாச வேறுபாட்டிற்குதாரணம்	,,
64	தாஷ்டாந்தத்தில் அத்தியாசவிலக்கணம்	ஙஉ
65	அவ்வியத்தாதி சத்தங்கட்குப் பொருள்	ஙஙி
66	முக்குணங்களினுருவமாதி	,,
67	மற்றொருவகைச் சிருஷ்டி	ஙசு
68	சகத்துற்பத்தியில் சுருதிக்கபிப்பிராயமின்றெனல்	ஙஎ
69	சகத்துற்பத்திக் கிரமத்தில், சூத்திரகாரர், பாஷியகாராபிப்பிராயம்	,,
70	அவித்தை அநந்தம் என்பது முதலிய வாசஸ்பதிமதம்	சo
71	வாசஸ்பதி மதத்தின்றேடம்	,,
72	அஞ்ஞானம் ஏகம், அம்சம் அநேகம்	,,
73	அஞ்ஞானம் சுவாச்சிரய சுவவிஷயமெனும் பட்சம்	,,
74	விரோசனன் மதம்	சுஎ
75	சார்வாக ஏகதேசிகளின் இந்திரியாத்மவாதம்	சுஅ
76	பிராணாத்மவாதம்	,,
77	பாஞ்சராத்திரமதானுசாரியார் கொள்கை	சுக
78	கணிகவிஞ்ஞானவாதம்	,,
79	பாட்டமதம்...	,,
80	சூனியவாதியான பௌத்தர்மதம்	எo
81	பிரபாகரமதம்	,,
82	சரீரத்திரயங்களே ஈசுவரனுக்குக் கோசமாகக் கூறியதற்குத் தாற்பரியம்	எக
83	அத்தியாரோபத்தி னுபயோகம்	எஉ
84	சாக்கிரபதார்த்தத்தின் ஸ்மிருதியாகலின், சொப்பனம் சத்தியமென்னும் பூர்வபட்சம்	எங

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
85	மற்றும் பூர்வபட்சமாகச் சொப்பனம் சத்தியமெனல் ...	எங
86	சொப்பனம் ஸ்மிருதியென்பாரை மறுத்தல்... ...	,,
87	பிரத்தியட்சஞானம் இருவகைத்தெனல்	,,
88	சொப்பனம் சத்தியமென்னும் மற்றொரு பூர்வபட்சமறுப்பு ...	எச
89	சொப்பன பதார்த்தங்கட்கு அநிர்வசனீயமாக உற்பத்தியுண் டெனல்	எஞ
90	சொப்பனபதார்த்தம் உற்பத்தியாமேல், சத்தியமாமென்னுஞ் சங்கைக்குச் சமாதானம்	எசு
91	சாக்கிரசொப்பனம் இரண்டிற்கும் அதிஷ்டானமும், உபாதான மும் ஒன்றெனில், அவற்றிற்குப் பேதங்கூடாதென்னுஞ் சங்கையும் சமாதானமும்	எள
92	சொப்பனம்போலச் சாக்கிரத்திற்கும் தேசகால சாமக்கிரியின்மை	எஅ
93	சாக்கிரப் பிரபஞ்சத்திற்குத் தேசகால சாமக்கிரியின்றென்ப திற் பிரமாணம்	,,
94	மதுசூதன சுவாமிகளின் வாக்கியம்பற்றிச் சாக்கிரப் பிரபஞ் சத்திற்கு யோக்கிய காலதேசம் உண்டெனல் ...	,,
95	சாக்கிரப் பிரபஞ்சத்திற்கு யோக்கிய காலதேசம் உண்டென்று மதுசூதன சுவாமிகளுக்கு அபிப்பிராயம் இன்றெனல் ...	எக
96	மதுசூதனசுவாமிகள் அபிப்பிராயம்	,,
97	தேசகாலங்களிற் காரணத்தன்மை யின்மைக்கு ஏதுக்கள் ...	,,
98	பூர்வபட்சமாகத் தேசகாலங்கட்குக் காரணத்தன்மை உண்டெ ன்பதில் ஏதுக்கள்	,,
99	பிரஹ்மத்தின் காரணத்தன்மை தேசகாலங்களில் அந்நியதாக் கியாதிரீதியாற் றோற்றுகின்றதெனல்	அ0
100	பிரஹ்மத்தின் காரணத்தன்மை அந்நியதாக்கியாதிரீதியால் சர் வத்திலுந் தோன்றவேண்டுமென்னும் பூர்வபட்சியின் சங் கைக்குச் சமாதானம்	அக
101	திருஷ்டாந்தமுகத்தால் பரமார்த்தமாகத் தேசகாலங்களிற் கார ணத்தன்மை இன்றெனல்	அஉ
102	சொப்பன பதார்த்தத்திலும் சாக்கிரபதார்த்தம் விலட்சணமா மெனல்...	,,
103	சித்தாந்தம்	அங
104, 105, 106	சாக்கிரபதார்த்தங்கள் சொப்பனபதார்த்தங்கள்போல ஓவித்தையின் பரிணாமமல்ல வெவ்வேறு காரணங்களி னின்றுமுண்டாகின்றனவென்னுஞ்சங்கையும் அதன் மறு ப்பும், திருஷ்டி சிருஷ்டிவாதமும்	,,

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
107	சசு - வது சள - வது செய்யுளில் அபவாதவிலக்கணம் ...	அசு
108	சக - வது முதல் ருஉ - வது செய்யுள்வரையும், ஆவரண சத்தியின்றன்மை	கo
109	சாமான்ய விசேஷவிலக்கணம்	கஉ
110	ஈசுரனிடத்தில் ஆவரணம் அங்கீகாரம் அத்வைத கிரந்தங்களில் இன்றெனல்	கச
111	ருங - முதல் ருரு - ம் செய்யுள்வரையும், விட்சேபசக்தி, ஆவரணசத்திகளாலுறும் நன்கு தீங்கு	,,
112	விட்சேபசத்தி பொய்யாகலின், அதனால் பெறப்படு முத்தியும் பொய்யாமென்னுங் கடாவும், அதற்கு விடையும் ...	கஅ
113	கற்பிதநிவிர்த்தி அதிஷ்டான ரூபமெனல்	,,
114	அவித்தை நீங்குமாறு	,,
115	ருஅ - முதல் சுங - ம் செய்யுள்வரையும், திருஷ்டாந்தத்தோடு சீவசப்தாவஸ்தை	கக
116	சுச - முதல் அஉ - ம் செய்யுள்வரையும் மஹாவாக்கியவிசாரம்.	கoங
117	சக்திவிருத்தி, லட்சணவிருத்திகளினியல்பு... ...	,,
118	பிரஹ்மத்தினியல்பு	கoச
119	ஈசுரனியல்பு	கoரு
120	கூடஸ்தனியல்பு	கoசு
121	சீவனியல்பு	கoள
122	சுள - முதல் சுஅ - ம் செய்யுள்வரையும், பஞ்சகோச விவேகம்.	கoஅ
123	ஆன்மவிலக்கணமும், அநான்மவிலக்கணமும் ...	கoக
124	அப்பிரகாசமாகிய கடஞானம் அநுவியவசாயத்தால் பிரகாசிக்கிறதென்னும் நியாயமதத்தில் அநவஸ்தாதோஷம் ...	ககரு
125	நியாயமதகண்டனம்	ககசு
126	முராரிமிசிரமதகண்டனம்	ககஅ
127	பட்டர்மதகண்டனம்	,,
128	பிரபாகரமதகண்டனம்	,,
129	எசு - முதல் எள - ம் செய்யுள்வரையும், அநுபவரூப ஆன்மா அநுபவ விஷயமாகாதெனல்	ககக
130	வாச்சியார்த்தங்கள் பேததர்மமுடையனவாகலின், அவற்றிற்கு அயிக்கியங்கூடாதெனல்	கஉo
131	எஅ - முதல் அஉ - ம் செய்யுள்வரையும், மூவகை இலக்கணையும், அவைகளின் உதாரணமும்	கஉக
132	தாஷ்டாந்தத்தில் பாகத்தியாகலட்சணையால் சாமவேத மஹாவாக்கியத்திற்குப் பொருள்கோளியல்பு ...	கஉச

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
133	ஏனைய மஹாவாக்கியங்களின் பொருள்கோளியல்பு ...	கஉடு
134	சத்தியாதிபதங்களின் பொருள்கோளியல்பு... ...	,,
135	துவிதவிருத்தியாதி	கஉசு
136	அநுபூதிநிலை	கஉள
137	அக - முதல் கஉ - ம் செய்யுள்வரையும், பிரதிபந்தத் திரயமும், அவைகளின் விரோதிகளான சிரவணாதிகளினியல்பும்	கஙக
138	கசை - முதல் க0சை - ம் செய்யுள்வரையும், ஜீவன்முத்தரின் பாகுபாடும், அவர்களினியல்பும்	கஙடு
139	ஜீவன்முத்தரின் மகிமை	கசச
140	கர்மத்திரயவொழிபு	கசடு
141	சஞ்சிதாகாமியங்களைப்போலப் பிராரத்தமும் பொருந்தாதென்று ஓர்விடத்திற் கூறுவதற்கு அபிப்பிராயம் ...	கசசு
142	நாநாசரீராரம்பகமான ஓர்கருமத்தால் பிரதமசரீரத்தில் ஞானம் உண்டாகில், அவனுக்கு அந்நியசரீரப் பிராப்தியுண்டென்னுஞ் சங்கைக்குச் சமாதானம்	,,
143	பிராரத்தாநுபவகாலத்தில் ஞானியின் றேகத்தாலுளதாகும் ஆகாமியம்போம்வழி	கசள
144	விதேகமுத்தியினியல்பு	கசஅ
145	ஞானிகள் தேகபாதத்தில் காலதேசாதி நியமமின்மை ...	கசக
146	உபாசகர்க்குத் தேகபாதத்தில் காலதேசாதிகளினபேட்சை ...	,,
147	ஞானிகடேகம்சவமாய் வீழில் அது விதேகைகவல்லிய மன்ரு மென்னும் ஆசங்கைக்குச் சமாதானம்	கடு0
148	பிரஹ்மத்துவம் ஏற்கெனவேயுள்ளதன்றி நூதனமாகவுண்டானதன்றெனல்	கடுஉ

தத்துவவிளக்கப்படலத்தின்

அநுக்கிரமணிகை

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சந்தேகந்தெளிதற்படலத்தின்

அநுக்கிரமணிகை.

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
149	சமுசயபேதம்	கஞ்சு
150	ஐவகைப்பேதம்	கஞ்க
151	பிரஹ்மம் பிரமாணுதீதமெனல்	கசுக
152	பிரத்தியட்சாதி சட்பிரமாணங்களுள், மதஸ்தர்களுடன்பாடு...	,,
153	பிரமாஞானவிலக்கணம்	கசுஉ
154	பிரஹ்மம் பிரத்தியட்சப் பிரமாண விஷயமாகாமை ...	கசுங
155	அநுமானப் பிரமாணம்	கசுச
156	வேதாந்தார்த்தாநுசாரமாக அநேக அநுமானம் ...	,,
157	பிரஹ்மம் அநுமானப் பிரமாண விஷயமாகாமை ...	கசுஞ
158	பிரஹ்மம் உபமானப் பிரமாண விஷயமாகாமை ...	,,
159	சப்தப் பிரமாணத்திற்குப் பிரஹ்மம் விஷயமாதலும், விஷயமாகாமையும்	,,
160	இவர் பிரமாணம் நான்கென்றெடுத்ததற் கபிப்பிராயம் ...	கசுசு
161	அர்த்தாபத்திப் பிரமாணம்	,,
162	சிஞ்ஞாசுக்கநுகூலமாகிய அர்த்தாபத்தியின் உதாரணம் ..	,,
163	அநுபலப்திப்பிரமாணம்	கசுஎ
164	சிஞ்ஞாசுக்கநுபலப்தி நிரூபணவுபயோகம்	,,
165	பிரஹ்மம் வாக்குக்கு விஷயமாமாறு	கசுஅ
166	பிரஹ்மம் வாக்குக்குக் கோசரா கோசரமாமென்பதற்கு வேறு மொரு சமாதானம்	,,
167	க0 - முதல் கச - ம் செய்யுள்வரையும், இரண்டாம் சங்கைக்குச் சமாதானம்	கசுக
168	அஞான்மபதார்த்தங்களில் விருத்தி வியாப்தி பலவியாப்தி ...	கஎ0
169	ஆன்மாவில் விருத்தி வியாப்தி மாத்திரம்	கஎஉ
170	பிரஹ்மம் மனத்திற்குக் கோசரமாமாறும், அகோசரமாமாறும்.	,,

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
171	பிரஹ்மம் மானசஞான விஷயமன்றென்னும் நிஷேதத்திற் கபிப்பிராயம்	களஉ
172	மானதவிஷயத்தன்மை நிஷேதம்போலப் பிரஹ்மம் சப்தவிஷயத்தன்மை நிஷேதத்திற் கபிப்பிராயம்... ...	,,
173	மனது சமாதியடையுமாறு விளுதல்	களங
174	கசு - முதல் கஅ - ம் செய்யுள்வரையும் மனது சமாதியடையுமாறு	களச
175	மனதின் சொரூபம்	,,
176	வாசனையின் சொரூபமும், அதன் பேதங்களும் ...	களஞ
177	மலினவாசனை	,,
178	உலகவாசனை	,,
179	உலகவாசனை மலினமென்பதற் குதாரணம்	,,
180	உலகவாசனை நசித்தற்குபாயம்	,,
181	சாஸ்திரவாசனையின் பேதம்...	களசு
182	சாஸ்திரபாடாபிமானம் மலினமென்பதற்குதாரணம் ...	,,
183	சாஸ்திரத்தினர்த்தாபிமானம் மலினமென்பதற் குதாரணம் ...	,,
184	அநுஷ்டானுபிமானம் மலினமென்பதற் குதாரணம் ...	,,
185	தேகவாசனையின் பாகுபாடு	,,
186	லௌகீக சாஸ்திரீயபேதத்தால் தேகத்திற்குக் குணசம்பாதனங்கள்	களள
187	லௌகீக சாஸ்திரீயபேதத்தால் தேகத்தின் ரோஷத்தைப் போக்குவன	,,
188	தேகவாசனை, உலகவாசனை, சாஸ்திரவாசனை மூன்றும் மலினமாதலால், அவை விடற்பாலனவாம் என்பதற்குக் காரணங் கூறி மறுத்தல்	,,
189	சுத்தவாசனையின் சொரூபம்...	களஅ
190	மனமிறந்தாற் போகமும், மனமிருந்தால் ஜீவன்முத்தியும் கூடுமாறெங்ஙனெனல்	கஅ0
191	இருவகை மனநாசம்	,,
192	அருவமனமிருத்தலாற்போகமும், உருவமனமிறத்தலாற் சீவன்முத்தியுங் கூடுமாறு	கஅக
193	திடஞானம், அதிடஞானம்	கஅங
194	உச - முதல் உஞ - ம் செய்யுள்வரையும், மாகர்த்தன் மாபோகி மாத்தியாகிகளினியல்பு...	கஅஞ
195	உசு - ம் செய்யுளிலும், உள - ம் செய்யுளிலும் சரீரதாரியாய்ப் பிராரத்தவசத்தால் கிரியையில் நிற்பவன் எங்ஙன் கிருதகிருத்தியனுவனெனும் விளுவும், விடையும் ...	கஅஅ

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
196	உஅ - ம் செய்யுளிலும், உக-ம் செய்யுளிலும் ஞானிக்கு ஞான திடத்தின் பொருட்டுச் சிரவணாதி வேண்டுமேயெனும் வினவும், அதற்கு விடையும்	கஅக
197	கூ0 - முதல் கூடி - ம் செய்யுள் வரையும், ஆரூடரின் கிருத கிருத்தியத்தன்மையைக் கடாவிடைகளா லுணர்த்துதல்...	கக்க
198	சமாதியினியல்பு	கக்ங
199	ஆரூடனுக்குக் கர்த்தவ்விய மின்மையும், வியவகாரமும், ஞான மும் ஒன்றற்கொன்று விரோதமின்மையும் ...	கக்ச
200	ஒருவாற்றான், ஞானி ஈசுரனோடு ஒப்பாமெனல் ...	கக்சு
201	கூஎ - முதல் கூக - ம் செய்யுள்வரையும். ஞானி சர்வான்மா வாயின், அவன் முத்தியடைந்து ஏனையோ ரடையாமைக் குக் காரணமென்னையெனுங் கடாவும், விம்பப் பிரதிவிம்ப நியாயத்தால் அதற்கு விடையும்	,,
202	சஅ - முதல் சஉ - வது செய்யுள்வரையும், ஈசுரவிபூதிகளில் லாத ஞானி அவரோடொப்பாமா றெங்கனெனும் வினவும், அதற்கு விடையும்	கக்அ
203	ஈசுரன் அணிமாதி, முனிகளுக்குண்டாயிருத்தற்குக் காரணம்.	உ00
204	சக, சடி - ம் செய்யுளில் வாதராயணர் முதலிய பூர்வாசாரியர் போல இக்காலத்து ஞானிகளிடத்துச் சித்தியும், ஞான மும் எனில்லையெனும் வினவும், அதற்கு விடையும் ...	உ0க
205	சித்திகளாற் பயனின்மையின், பூர்வகாலத்து ஞானிகளிலும் சிலர் சித்தியடையாமை	உ0உ
206	சித்திகளாற் பயனின்றேல், பூர்வகாலத்து ஞானிகளிற் சிலர், அவற்றிற்கு மெய்வருத்தமுற்றதெற்றிற்கெனும் வினவும், விடையும்	,,
207	சக, டி0, டிக இம்மூன்று செய்யுளாலும், தாந்தாஞ்செய்த கர் மம் அநுபவித்தாலன்றித் தீராதென்றும், சஞ்சிதகர்மங் கண் முழுதையும் ஞானாக்கினி சுடுமென்றும் கூறுநிற்குஞ் சுருதிவாக்கியங்கள் ஒன்றற்கொன்று விரோதமாகலின், அவற்றில் யாதுண்மையெனும் வினவும், அதற்குவிடை யும்	உ0ங ,,
208	அறிந்தோரும் ஞானமான்மிய மறியாமல் கர்மப்படுகுழியில் வீழ்வானேனெனும் வினவும், அதற்கு விடையும் ...	உ0சு
209	டிச - முதல் டிஅ - ம் செய்யுள்வரையும், ஈசுரசிருஷ்டியும், சீவ சிருஷ்டியும் வேறென்று வினவை முன்னிட்டுச் சுருதி யுத்தி யநுபவங்களாலுணர்த்தல்	உ0எ

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
210	அச்சுவத்தமென்னும் சுருதிக்குப் பாஷியார்த்தம் ...	உகo
211	வியஞ்சனவிருத்தியின் சொரூபம்	உகக
212	தற்செயலான காமாதிகளைத் தற்செயலென்னாது ஈசுரச்செய லென்பவரும், அவை ஈசுரச்செயலல்ல தற்செயலேயென் பவரு மடையும்பயன்	,,
213	சுo - முதல் சுக - ம் செய்யுள்வரையும், ஈசானிடத்து வைஷம் மிய தோஷமின்றென்பதைக் கடாவிடைகளா லுணர்த்தல்	உகஉ
214	தமக்குறுதி வேண்டினரால் செயற்பாலனவான சோபானம்...	உகச
215	ஞானத்திற்கு முக்கிய வந்தரங்க சாதனமாகிய விசாரசொரூபம்.	உகடி
216	ஞானத்திற்கு அந்தரங்க பகிரங்க சாதனங்கள் ...	உகசு
217	சுச - முதல் சுஎ - ம் செய்யுள் வரையும், நிஷ்காமகர்மா நுஷ் டானம் சித்தசுத்தி வாயிலாலல்லது, நேரே விசாரம்போல ஞானத்திற்குக் காரணமன்றென்பதைக் கடாவிடைகளா லுணர்த்தல்	உகஅ
218	சுஅ - முதல் எக - ம் செய்யுள்வரையும், மோக்ஷசாதனம் ஞான மேயல்லாது, கருமமன்றெனக் கடாவிடைகளா லுணர்த் தல்	உஉo
219	எஉ - முதல் எசு - ம் செய்யுள்வரையும், ஞானமே சுகத்தைப் பயவாநிற்குமென்னுஞ் சுருதி கர்மத்தாலும் அஃதுளதா மென்னல் எற்றிற்கென வினவும் அதற்கு விடையும் ...	உஉங
220	எஎ - முதல் எகo - ம் செய்யுள்வரையும் அகம் பிரஹ்மமென் னும் அந்தக்காரணத்தின பரோட்ச விருத்தி ஞானமே மூலாஞ்ஞான விரோதியெனக் கடாவிடைகளா லுணர்த் தல்	உஉசு
221	அஞ்ஞானத்தின் விரோதியை விரித்துரைத்தல் ...	உஙக
222	அவச்சேதவாதத்தில் அஞ்ஞான விரோதி	,,
223	ஆபாசவாதத்தில் அஞ்ஞான விரோதி	,,
224	அo - முதல் அஙo - ம் செய்யுள்வரையும், கருமமும், ஞானமும் அந்தக்கரண காரியமாயினும் அஞ்ஞான விரோதி கர்மமல்ல ஞானமே யென்பதை வினவை முன்னிட்டுணர்த்தல் ...	உஙஉ
225	வஸ்துதந்திர கர்த்ததந்திரங்களி னியல்பு	உஙடி
226	அச - முதல் அடி - ம் செய்யுள்வரையும் தியானம் உண்மை யன்றாயினும், அதற்குண்மையான முத்திபயக்கும் ஆற்ற லுண்டென்பதைக் கடாவிடைகளாலுணர்த்தல் ...	உஙசு
227	தியானத்தான் முத்திவரின் விசாரமும் ஞானமும் எனென் னும் வினவிற்கு விடை	உஙஅ

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
228	அகண்டாநுபவசித்தி கூடுமாறு விளவும், விடையும் ...	உங
229	அகண்டாநுபவஞ் சீவன் முத்தரிடத்திருக்குமாறு ...	உசo
230	செகத்தில் அநாதர புத்தியுண்டாதற்கு ஓர் ஆக்யாயிகை ..	உசக
231	காரணந் துச்சமாகலின், காரியமும் அங்ஙனேயென வுணர்த்திப் பொய்யிலுறக்கமும் மெய்யில் விழிப்புமாயிருவெனல்.	உசஉ
232	கக - முதல் கங - ம் செய்யுள்வரையும், மித்தையான செகத்தை மித்தையென்பதால் தோஷமின் றென்பதைக் கடாவிடைகளாலுணர்த்தல்	உசங
233	மாயையினியல்பறிய அதனை அறுவகையாக விளதல் ...	உசசு
234	முதல் நான்குவிளக்களுக்கு விடை	,,
235	மாயை அவாச்சியவடிவாமென்பதை விரித்துணர்த்தல் ...	உசஎ
236	கசு - முதல் கஅ - ம் செய்யுள் வரையும், மாயையும், பிரஹ்மமும் வேறெனின்;—வஸ்து துவிதமாமே? ஒன்றெனின்;—வஸ்து மித்தையாமே? என்னும் இரண்டுவினாக்களுக்கு விடை	உசக
237	கக - முதல் க00 - ம் செய்யுள் வரையும், பரமார்த்தமாகச் சத்தியில்லையாயினும் வியவகாரத்தில், யுத்தியினாற் கொள்ளற்பாலதெனல்	உஞஉ
238	மாயாநிவிர்த்தி முத்தியாகலின், அதை நீக்குமாறு விளதல் ...	உஞங
239	மாயா நிவிர்த்தி யுபாயம்	உஞச
240	பிருகதாரணிய சுருதியின் ரூற்பரியமும், சாந்தோக்கிய சுருதியின் பொருளும்	உஞஞ
241	திருஷ்டாந்தத்தில் காரியம், சத்தி, ஆதாரம் இவைகளினியல்பு.	உஞசு
242	அநுமானத்தானும் கடமித்தையெனல்	உஞஎ
243	மண்சத்திய மென்பதில் அநுமானம்	,,
244	பரிணம ஆரம்பவாதங்களின் மறுப்பும், சித்தாந்தமாகிய விவர்த்த வாதமும்	,,
245	சூட்சுமதிருஷ்டியால் கடாதி சகல கற்பிதங்களுக்கும் சேதனமே அதிட்டானமெனல்	உஞஅ
246	உண்மையிலில்லாத அசத்தாதிகளை நிவிர்த்திக்குமாறு விளதலும், அதற்கு விடையும்	,,
247	இதனாற் பயனின்று இதனாற் பயனுடண்டெனல் ...	உஞக
248	அத்வைதாநந்தம்	உசo
249	சர்வவிருத்திகளிலும், ஆநந்தந் தோன்றுமைக்குக் காரணம் விளதலும், அதற்கு விடையும்	உசக
250	சச்சிதாநந்த விலக்கணம் விளதலும் அதற்கு விடையும் ...	உசஞ

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
251	சத்திலக்கண விரி	உசுசு
252	சித்திலக்கண விரி	,,
253	ஆநந்த விலக்கணவிரி	உசுஅ
254	ககஉ - முதல் ககச - ம் செய்யுள் வரையும், ஆன்மாவினிடத்துச் சச்சிதாநந்த வநுபவம்விளுதலும், அதற்கு விடையும்...	உசுக
255	ஆன்மா சுகசாதனமன்றெனல்	உஎந
256	ஆன்மாவிடத்துள்ள பிரியம் நிரதிசயமெனல் ...	உஎச
257	ஆன்மா துவேஷத்திற்கு விஷயமாமோவெனில்;—அன்றெனல்	உஎடு
258	வித்தபுத்திராதிகளில் ஆன்மாவைக் கிட்டினதற்குத்தக்க தாரதம்மியப் பிரீதியும், ஆன்மாவின் முக்கியப்பிரீதியும் உளதெனல்	உஎசு
259	கௌணன்மா முதலியவற்றுள், இத்தருணத்திவ்வான்மா முக்கியமெனல்	உஎஅ
260	கௌணவிருத்தி	உஎக
261	ஆன்மாநந்தம்	உஅ0
262	ஆநந்தபேதங்கூறல்	உஅக
263	மூன்றுநந்தத்தில் ஏனையவாநந்தம் அடங்குமாறு ...	,,
264	தொகுத்து எண்வகையாநந்தங்களி னியல்புகூறல் ...	உஅஉ
265	விஷயாநந்தவியல்பு	உஅங
266	பிரஹ்மாநந்தவியல்பு	உஅச
267	சுழுத்தியாநந்தத்திற்குச் சுருதியிற்கூறும் ஐந்துதிருஷ்டாந்தம்.	,,
268	குமாரன் முதலிய மூவரை உதாரணங் கூறினதன் றுற்பரியம்.	உஅடு
269	சுழுத்தியாநந்தத்திற்குச் சுருதியுத்தி யநுபவம் ...	உஅசு
270	கஉசு - முதல் கஉஎ - ம் செய்யுள் வரையும், ஆநந்த மயனநுபவம் விஞ்ஞான மயனிடத்தில் எங்ஙனம் உதிக்கலாமெனவிளுதலும், அதற்கு விடையும்	உஅஎ
271	பிரஹ்மாநந்தத்தி லழுந்திஞான் அதை விடவும் வெளிவரவும் காரணம் விளுதலும், அதற்கு விடையும் வாசனாநந்தவியல்பும்	உஅக
272	நிஜாநந்தவிலக்கணம்	உக0
273	முக்கியாநந்தவிலக்கணம்	உகக
274	முக்கியாநந்தமகிமை	உகஉ
275	சார்வபூமன் முதலியோர் இனையரெனல்	உகங
276	முக்கியாநந்த மடைந்தோனைத் துதித்தல்	,,
277	சச்சிதாநந்தங்களி லொருமையறிய விளுதல்... ...	உகடு

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
278	திருஷ்டாந்த முகத்தால் சச்சிதாநந்தங்களி லொருமையுணர்த்தல்	உகசு
279	சச்சிதாநந்தங்களி லொருமையைச் சுருதியாலுணர்த்தப் புகுந்து பிரஹ்மத்திற்குச் சுருதியிற் சொல்லிய விதிநாமங் கூறல்	உகள
280	விலக்குநாமங்கள்	நஂ0
281	விதிவிலக்குக் குணங்களாகச் சொன்னதற்குக் காரணமும், அவை குணங்களல்ல பிரஹ்மத்தின் சொரூபமெனலும் ...	நஂச
282	கசக - முதல் கசஉ - ம் செய்யுள்வரையும் சச்சிதாநந்தங்களி லொருமையை யுத்தியாலுணர்த்தல்	நஂசு
283	சச்சிதாநந்தங்களி லொருமையை அநுபவத்தாலுணர்த்தல் ...	நஂஅ
284	சீடன் குருவருளின்படி அநுபூதியினின்றும் உத்திதனுயாரூடனுதல்	நகஂ
285	அஞ்ஞானபூமிகளினுமம்	நகஉ
286	கசள - முதல் கசஅ - ம் செய்யுள்வரையும், அஞ்ஞான பூமிகளினியல்பு...	நகங
287	ஞானபூமிகளினுமம்	நகஙி
288	கஙி0-முதல் கஙிக-ம் செய்யுள்வரையும், ஞானபூமிகளினியல்பு.	,,
289	ஞானபூமிகளேழையும் ஐந்தவத்தைகளாகக் கூறல் ...	நகள
290	விதேககைவல்லியத்தைத் துரியாதீதமென்பவ ரபிப்பிராயம்...	நகஅ
291	ஞானபூமிகளையடைந்தோர்க்குறும் நாமவேறுபாடு ...	நகக
292	கஙிஙி - முதல் கஙிசு - ம் செய்யுள்வரையும் ஞானபூமிகளின் பெருமை	நஉ0
293	முத்திக்குத் துறவே காரணமெனச் சிலர் கூறுமயக்க மகற்ற வேண்டுமெனல்	நஉஉ
294	கஙிஅ - முதல் கசுங - ம் செய்யுள்வரையும் துறவுக்குக் காரணமும், துறவின் வேறுபாடும் சங்கைக்குச் சமாதானமும் ...	நஉங
295	பிராமணவர்ண மாத்திரத்திரத்திற்குச் சன்னியாசவதிகாரம் ...	நஉள
296	துறவறமன்றியும் இல்லறத்தார்க்கும் ஞானமுண்டெனல் ...	,,
297	க்ஷத்திர வைசியர்க்கு வித்துவச் சன்னியாசத்தி லதிகாரமுண்டு விவிதஷாசன்னியாசத்தி லதிகாரமில்லையெனல் ...	,,
298	வார்த்திககாரர் கொள்கை	,,
299	மற்றொரு கிரந்தகாரர் கொள்கை	நஉஅ
300	சூத்திரர்க்கு ஞானவேதவான சிரவணத்திலதிகாரமில்லையென்னும் ஓர் கிரந்தகாரர்மதம்	நஉக

பிரசங்கத் தொகை.	விஷயம்.	பக்கத் தொகை.
301	சூத்திரர்க்கு இதிகாச புராணதிகளின் சிரவணத்தி லதிகாரமும், அவர்க்கு உபதேசநிடேதத்தின் அபிப்பிராயமும், வித்தையினுபயோகிகளான கர்மத்தினபாவத்தா லதிகாரமில்லையென்பதற்குச் சமாதானமும், வேதத்திற்குப் பின்னமான அத்தியாத்ம கிரந்த சிரவணதிகளிலதிகாரமும், இவ்வாறே பாஷியகாரர் அபிமதமாமெனலும் ...	நஉக
302	வேதாநுசாரிகளேப்போலச் சகலமநுடர்க்கும் தத்துவஞானத்தி லதிகாரமுளதெனல்	நகo
303	ஞானவேதுவான தெய்வசம்பத்தினியல்பும், அது தாரதம்மியமாயிருத்தலும் அதனிலாபத்தால் சூத்திரர்க்குப் புராணதிகளின் விசாரத்தாலும், அந்தியசாதிகட்குப் பாஷாப்பிரபந்தாதிகளின் சிரவணத்தாலும் ஞானவாயிலாக முக்தியுண்டாமெனல்	,,
304	கசுச - முதல் கசுள - ம் செய்யுள்வரையும், துக்காபாவம் ...	நகக
305	கசுஅ - முதல் களக - ம் செய்யுள்வரையும், சருவகாமாப்தி ...	நகச
306	களஉ - முதல் களந - ம் செய்யுள்வரையும், கிருதகிருத்தியம்.	நகள
307	களச - முதல் களள - ம் செய்யுள்வரையும், பிராப்தப் பிராப்பியத்தன்மை	நகஅ
308	நூற்பயன்	நசo
309	நூல்செய்ததற்குக் காரணம்	நசக
310	திருஷ்டாந்தமுகமாக நூலால்விளேபயன்	நசஉ

சந்தேகந்தெளிதற்படலத்தின்

அநுக்கிரமணிகை

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கைவல்லிய நவநீத

உரைச்சிறப்புப்பாயிரம்.

இஃது

திருப்பாதிரிப்புலியூர்

க. ரா. சிவசிதம்பர முதலியாரியற்றிய

நேரிசையாசிரியப்பா.

திருவளர் தெய்வச் செழுமறை முடியி ன்
பொருளதைச் சூத்திரம் புகன்றனன் மேனு ட்
டயாவுடை வல்லபத் தனிமுனி வரனு ம்
வியாத னுங்கதற்கு விரித்தனர் பாடிய ம்
பற்பல ரவையெலாம் பக்க பரத ச்
சொற்பயில் வனவே தூயவவ் வியாத ன்
பொங்கர வணிந்த புராந்தகன் கலே யே
சங்கர நாமந் தயங்கவோர் பாற்க ர
னென்னத் தோன்றி யெனதுசூத் திரத்து க்
குன்னத மெய்ப்பொரு ளுரைத்துமற் றும்ப ல
அற்புத நடத்தி யயிர்தரு மென வே
பொற்புறு மற்புத புராண மதனி ல்
முந்துரைத் திடுமருண் மொழிப்படி கலியு ள்
வந்தவ தரித்து வதரிநன் னு த
மூர்த்தியைத் தேவ முழுங்குநீர் நதியினி ன்
னூர்த்தெடுத் தத்தலத் தமர்தாத் தாபன ஞ்
செய்துபுன் சமண்முதற் செறிபல மதத்தை யு
மைதுவென் றேங்கு மரியசீர்ச் சங்க ர

பகவற் பாதர்சேய் பாடிய மது வே
தகவிற் பொதுமையாத் தழைத்துமன் னியதா ல்
அன்னபா டியவழி யறிஞர்பற் பலரு ம்
சொன்னநூல் தமக்கோ தொகையிலை யவையெலா ம்
தெள்ளிதி னுய்ந்துணர் சிந்தையன் றெய்வத க்
கள்ளிவர் தருமதுக் காடெனப் பெயரி ய
திருநன் னிலத்தொளி திகழ்தகு மாபி ல்
வருமொரு தாண்டவ ராயநா மத்தோ ன்
நாரா யணப்பேயர் நயந்ததன் னுசா ன்
சாராத் தனதுயர் சமாதியோ கத்தி டை
அன்பநீ யொருவே தாந்தநூ லறைகு தி
யென்பதா வருளிய வின்னுரை கடைப்பிடி த்
தாய்ந்தபன் னூற்பொரு ளனைத்தையுந் தரட்டிநீ ர்
வாய்ந்தகை வல்லிய மாநவ நீதமா ம்
பெயரிற் புகன்றனன் பேசுமந் நூற் கோ
அயர்வுறு முரைபல ரறைந்துள ரவைநிற் க
இந்தநா ளினிலோ ரினியநற் பேரு ரை
முந்துநூற் பொருளெலா முழங்கிமன் விளங்க ச்
சொன்னயம் பொருணயந் தொடைநய மா தி
யெந்நயங் களுஞ்சிறந் தெழுந்துமே லோங்க த்
தத்து வார்த்ததீ பம்மெனத் தகுபேய ர்
வைத்தினி தியற்றி மகிக்கு வழங்கின ன்
அங்கவ னுரெனி வறைகுவன் முன்புக ல்
சங்கர பகவற் பாதர்தம் மாபி ற்
போந்தொரு சமிவனப் புண்ணிய கேத்திர ம்
ஆந்தகு மான வணிவணி கர்கள்வா ழ்
தருதிருக் கோயிலூர்த் தண்ணறும் பதிக்க ட்
டிருநெல்லை நாயகித் தேவியோ டமர்ந் த
கோற்றவா ளீசர்பொற் கோயில்வா னளா வி
யுற்றகோ புரங்களு மொளிர்விமா னங்களு ம்

வளமலி விடைமதிள் மண்டபங் களுந்திரு க்
குளமுநீ ராழிக் கோதில்மண் டபமு ம்
மற்றைய பிறவும் வயங்கிமன் பொலி வு
பெற்றிட வியற்றிப் பெரியோர் வசித்திட த்
தகுமடா லயமதுஞ் சால்புறச் சமைத்து த்
தொகுமடி யார்க்கெலாந் தூசன முதவி ச்
சாற்றுமத் தகுவே தாந்தநன் குணர்த் தி
வீற்றினி திருந்த விழுத்தவ சீ ல
முத்துரா மலிங்க முதல்வனுண் மலர டி
சித்தத் திருத்தித் திகழ்தே சிகனு ம்
சிதம்பர முனிபத சேகர னெவர்க்கு ம்
இதம்பகர் வாய்மை யின்சொன் மாட்சிய ன்
கற்றவர்க் கினியன் கவின்றழை யுருவ ன்
உற்றவர் குறைதப வுதவுசீ ருதார ன்
தென்கலை வடகலை திகழிந்துத் தா னி
மன்கலை யாதியும் வாய்மடித் துயர்ந்தோ ன்
சீவகா ருணியத் தெள்ளமு தக்கட ல்
பாவக வீசுர பத்தியா ரணிய ம்
வரமுறு பாச வயிராக் கியம ஆ
பிரம ஞானப் பெருந்தனிப் பாற்கர ன்
விரும்புற் றெத்தவ மேலவ ருஞ்சா ர்
பெரும்பற் றப்புலி யூரமர் பெரியோ ன்
தன்னம் பினர்க்கொரு தருவெனு ம்
பொன்னம் பலப்பெயர்ப் புனிதமா தவ னே.

முற்றிற்று.

கட்டளைக்கலித்துறை.

பெற்றவன் சிற்சபைப் பிஞ்ஞக னேக்கம் பிரமநிலை
யுற்றவன் மெய்த்தவத் தொண்டருக் குற்றவ னேங்குரசை
யற்றவ னுறு சமய வதீத வரும்பொருணூல்
கற்றவன் போன்னம் பலப்பெயர்ப் போதக காரணனே.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொற்றவா ளீசர்திரு நெல்லைநா யகியொடமர்
கோயிலூர்ப் பதியிலன்னோர்
கோதிலருள் பெறுமுத்தி ராமலிங் கக்குரவர்
கூறுமது பவநிலைமையி
னுற்றிடு சிதம்பரக் குரவர்பத சேகர
னேங்குபொன் னம்பலப்பே
ருறுதவன் யௌவனைச் சுரர்தத்வ தேசிகர்க்
குயர்கோயில் கட்டுவித்தோன்
மற்றும்வே தாந்தசூ டாமணி கைவல்லிய
மலிபகவற் கீதைக்கியன்
மாண்புரை வகுத்தவன் சாலிவா கனசகாப்
தத்தின்மூ வாறுசதமுன்
னுற்றவிரு பானேழ தாகுங்கு ரோதியாண்
டுத்துலி மதிச்சித்திரை
தன்னுநா ளிற்சிதம் பரநகரி லொளிர்சுயஞ்
சோதிபத மூற்றனனரோ.

உ

கணபதிதுணை.

சிவமயம்.

கைவல்லிய நவநீதம்.

உரைப்பாயிரம்.

குருவணக்கம்.

வேத நான்கினுட் பொருளினை மறைத்தவெந் *தமக்குப்
போத பாதுவாய்ப் புனிதநல் லருளுருப் புனைந்து
சேது வாம்பர சுகத்தினைத் திகழ்தர விளக்கும்
வாத ராயணன் மலரடி முடிமிசை வைப்பாம். (க)

இதுவு மது.

பொங்கருண் ஞான நங்கள் புண்ணிய மனைத்து மொன்றுய்
அங்குபுல் லென்ன வந்தாண் டருமறைப் பொருளை யார்க்கும்
அங்கையி னெல்லி போல வளித்தரு ளமலா நந்த
சங்கர பகவற் பாதன் முண்மலர் நந்த லைக்கே. (உ)

இதுவு மது.

உகந்த தேசிக னெண்டனிப் பதத்தையிவ் வுலகை
இகந்த முத்தரா மப்பெய ரிறைமல ரடியைச்
செகந்த னுதனுஞ் சிதம்பர தேவனற் றூளை
அகந்தை தீரவெம் மகத்தினுஞ் சிரத்தினு மணிவாம். (ங)

---

* தமத்துக்கு எனற்பாலது, அத்துச்சாரியை குறைந்து தமக்கென நின்றது.

நூலாசிரியர் வணக்கம்.

மாண்ட மெய்ப்பொருள் கையிலா மலகமே யென்ன
ஈண்டி யாவரு மெளிதினி லுணர்த்த வெவையும்
தூண்டு சோதியே வந்ததென் றியாவருந் துதிக்கும்
தாண்ட வப்பெருந் தண்ணருண் மூர்த்திதாள் சார்வாம். (சு)

தற்சிறப்புப் பாயிரம்.

அன்ப ராய்த்தனை நினைபவ ரகத்திருந் தருளும்
இன்ப நாடகத் திறைமல ரடியுளத் திருத்தி
முன்பு கன்றமூ தறிஞர் நூன் முறைபிற ழாமே
என்பு லத்தள விதற்குரை யியம்புவ னெடுத்தே. (நு)

உரைப்பாயிரம் முற்றிற்று.

கணபதிதுணை.

சிவமயம்.

கைவல்லிய நவநீதம்.

மூலமும், தத்துவார்த்த தீபவுரையும்.

நூன்முகம்.

முதனூலிருக்கவும் வழிநூல், சார்புநூல் செய்யப்புகுவோர் ஆதிக்கண்ணே மங்கலஞ் செயற்பாலது அவசியமே; என்னை? கிரந்த சமாப்திக்குப் பிரதிபந்தங்களாகவுள்ள எவ்வித விக்கினங்களும் அம்மங்கலத்தால் நாசமுறுதலின். விக்கினமென்பது பாவம்: பாவத்திலுல் சுபகாரியங்கள் சமாப்தியாகா; ஆகலின் அப்பாவங்களைப் போக்கவல்ல மங்கலம்வேண்டும். பாவமின்மையாயினுரோவெனின்? அவரானும் மங்கலஞ்செய்யத் தக்கதேயாம்; இன்றேல் அந்நூலை நோக்குவோர்க்கெல்லாம் நூலாசிரியரிடத்து நாஸ்திகப் பிராந்தியுண்டாகி அந்நூற்கண் ஊக்கஞ்செல்லாதென்க.

(1) அப்படிச் செய்யும் மங்கலம் வஸ்து நிர்த்தேச ரூபமங்கலமென்றும், நமஸ்கார ரூபமங்கலமென்றும், ஆசீர்வாத ரூபமங்கலமென்றும் மூவகைத்தாம். சகுணம், அல்லது நிர்க்குணமாகவுள்ள பரமாத்மாவே வஸ்துவாம். அவ்வஸ்துவின் கீர்த்தனமே வஸ்துநிர்த்தேச மங்கலமெனப்படும். அப்படிக்கன்றி அவ்வஸ்துவுக்கு வணக்கங் கூறுவது நமஸ்கார ரூபமங்கலமாம். தனது, அல்லது மாணுக்காது வாஞ்சித வஸ்துவைப் பிரார்த்திப்பது ஆசீர்வாத மங்கலம்.

[இந்நூலாசிரியர், இங்கே சிஷ்டாசாரத்தாற் பெற்ற இஷ்ட தெய்வ நமஸ்கார ரூபமங்கலத்தை அங்கீகரிக்கின்றார்.]

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளம்
தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்
எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி. (க)

(இதன் பதப்பொருள்.) பொன் நிலம் மாதர் ஆசைபொருந்தினர் பொருந்தார்=பொன்னுசை மண்ணுசை பெண்ணுசை இயைந்த அஞ்ஞானிகளும், இயையாத ஞானிகளுமாகிய இவர்களது—உள்ளந்தன்னில்=அந்தக்கரணங்களில்—அந்தரத்தில்=(தாரதம்மியமான மட்குடம், பொற்குடங்களிற்பெய்

யும் பண்டங்கட்குத்தாரதம்மியமற அவகாசங் கொடுப்பதுமாத்திரமாய் நிற்கும்) ஆகாயத்தைப்போல—சீவசாட்சிமாத்திரமாய் நிற்கும்=சீவசாட்சிமாத்திரமாக நிற்கின்ற—ஏகநாயகன்=அகண்டைகரஸஞன சிவபெருமானுடைய—பதங்கள் போற்றி=சீர்பாதங்கட்கு நமஸ்காரம்.—என்றவாறு.

நிலத்திற் குரிமையுடைய மைந்தனை ஆகுபெயரால், "நிலம்" என்றார்.

(2) அங்ஙனமாயினும் விடயபேதத்தால் மனோரதங்கள் அநேகமாயிருக்கவும், இவர் மூவகையாகத்தொகுத்தது யாது கருதியோவெனின்? எல்லா ஆசையும் அம்மூவகையுள் அடங்கியிருத்தல்பற்றி என்க. இவ்வாறே,

"மனைவியு மகரும் பொன்னு மமதைசெய் தமுதம் போல
நினைவினு னையஞ் செய்து நீணிலத் துள்ள வெல்லா
மனையவர்க் காகச் செய்வர்"—

என வாசிட்டத்தும்,

"விழைவெ னப்படு கின்றது மென்மெல
வழல்வி ரிந்த கனகத் தரும்பிமென்
மழலை மாதர் மருங்கிற் படர்ந்துபைங்
குழவி மீதுகொ ழுந்துவிட் டோங்குமால்"

எனப் பாகவதத்தும் மனோரதங்களனைத்தையும் அம்மூவேடணையுளடக்கிக் கூறியிருக்கின்றமை காண்க. அருணகிரிநாதரும் இக்கருத்தே பற்றியன்றே, "ழவே டணையென் முழுடிந் தீடுமோ"—என்றார்.

(3) அற்றேலஃதாகுக. உலகில் அஞ்ஞானிகளுள்ளும் சில்லோர் மனைவி, மக்கள், அர்த்தவேடணைத் தியாகிகளாகக் காணப்படுதலின், "ஆசையினையாதார் ஞானிகள்" எனவிரித்தது *அதிவியாப்தியாமேயெனின்? மூவேடணைமாத்திரமொழித்த அவர்கட்குப் பிரபஞ்சத்திற் றோடதிருஷ்டியினும், பரோட்சமித்தியா புத்தியினும் விராகமுண்டாயிருப்பினும், பிரபஞ்சத்தின்கண் அபரோட்ச சத்தியபுத்தி பிரபலமாக விருத்தலின்றோடங்கண்ட விடயங்களிற் காலாந்தரத்தில் நல்லதென்னும் புத்தியுளதாம்; அஃதுளதாகவே விராகநீக்கி இராகமுளதாமாகலின், அஞ்ஞானிகள்பாலுள்ளவிராகம் மந்தவிராகமாம். ஞானிகள்பாலோவெனின்? அவர்கட்குப் பிரபஞ்சத்தில் அபரோட்ச மித்தியாபுத்தியால் விராகமுளதாயிருத்தலின், அது திடவிராகமாம்.

"குறையுமாப் பிணிப் புற்றாலுங் கொண்டவிப் புலன்க ளெண்ணி
லறைகட லனைய நெஞ்சத் தவாவறு னறிவி னில்லான்"—

---

* "அதிவியாப்தி"=இலக்கியமல்லாத தன்கண்ணுமிருப்பது: அது "ஆவிற்குக் கோடுடைமை" "அவ்வியாப்தி"=இலக்கியத்தின் ஏகதேசத்தின் இலக்கணமில்லாமை: அது "ஆவிற்குக் கபிலநிறத்தன்மை" "அசம்பவம்"=இலக்கிய முழுதினுமின்மை: அது "ஆவிற்கு ஏற்றைக்கொம்புடைமை."

எனக் கீதையில் பகவானுலருளிச்செய்யப்பட்டிருப்பதால், ஏடணைத்திரயத்தியாகிகளான அஞ்ஞானிகட்குச்சுட்சுமமான அநுபவத்தவாசையுள்ளதே; ஆதலால், "ஆசை பொருந்தாதார் ஞானிகள்" என்றது, அதிவியாப்தியாகாதென்க. [அநுபவத்தவாசை=புலப்படாவாசை.] வாசிட்டத்தும்,

"அடக்கமா யுரைத்தே மஃதறிந் தவர்க்கு மறிகிலா தவர்க்குநற் குறிக, டொடக்கமில் சன்மாத் திரமதா மறிவின் சொரூபநின் றசை விலா தவரே, விடற்கருங் காம முதற்பகை கடந்தோர் மெய்யறி விலார்கடப் பரியோர்"—

என ஆசையின்மையும், உண்மையும் ஞானி, அஞ்ஞானிகட்குச் சின்னமாகக் கூறியிருப்பது காண்க.

(4) "பொன்னிலமாதர்" என்பதை பொன்னில் அம்மாதர் எனப் பிரித்துத் திருமகள்போலும் அழகினையுடைய பஞ்சவிடய சமஷ்டி ரூபமான பெண்களிடத்து எனப்பொரு ளுரைப்பினும் அமையும்; இஃதமையுமாறு,

"பாரியை யுடையோன் யாவ னவனுக்கே பற்றும் போகம்
நாரியை யில்லா தார்க்குப் போகத்தி னலமெங் குண்டாங்
காரிகை தன்னை நீங்கிற் கருத்துறு சுகத்து நீங்கும்
பேரியற் சுகத்து நீங்கிற் பிரிவில்பே ரின்ப முண்டாம்"—

என வாசிட்டத்திற் கூறியுள்ள இராகுநந்தனர் திருவாக்கானும்,

"நெய்விட்ட கருங்குழலார் தம்பால் வைத்த நெஞ்சொழிந்தா ரைம்புலன்சே ரின்ப நோக்கி, கைவிட்டா ரொழியாவா நந்த போகக் காமுகராய் முடிந்தபடி காண்மின் காண்மின்"—

என்னும் அஞ்ஞவதைப் பாணியின் செய்யுளானும் அறிக.

(5) "ஆசைபொருந்தினர் பொருந்தார்" எனச்சிறப்புப்பற்றி உயர்திணைமேல் வைத்துச் சொன்னரேனும்,

"ஒரு மொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே"—

என்பதனால், பிரமாமுதற் றம்பபரியந்தமான சேதனப்பிரபஞ்சமுழுவதுங் கொள்ளற்பா லனவாம். "உள்ளம்" என்றது, அந்தக்காரணம். "உள்ளந்தன்னில்" என்றது, சாதி யொருமை.

கிரிஞதியாதிய வசேதனப்பிரபஞ்சத்தின்கண் ணந்தக்காரணமின்மையின், அவைகளில் அவச்சின்னசேதனம் ஞானமென்றும், சாட்சியென்றுஞ் சொல்லப்படவில்லை.

"ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தாத்திற்சிவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்"—

என்றதால், அந்தக்காரணமொன்றே பிரமாதாவுக்கு விசேடணமும், சாட்சிக்கு உபாதியுமாம் என்பது பெற்றும்.

(6) அங்ஙனமாயின், அவ்விரண்டின்றன்மையும் யாவையோவெனின்? ஒன்றன் சொரூபத்திற் பிரவேசித்து வியாவர்த்தகமாகிநிற்பது விசேடணம். அந்நியத்தினின்றும் ஒன்றை வேறுபடுத்துவது வியாவர்த்தகமாம். எது வேறுபடுத்துக் காட்டப்படுமோ அது வியாவர்த்தியமாம். நீலக்குட மென் புழி நீலத்தன்மை குடத்தின் விசேடணம். என்னை? நீலக்குடத்தில் நீலத் தன்மை பிரவேசித்து அதனைப் பொன்மைக்குட முதலியவற்றினும் வேறு படுத்துக் காண்பித்தலான்; அந்நீலத்தன்மை விசேடணமாம். அவ்வாறு, பிரமாதாவுக்கு அந்தக்காரணம் விசேடணமாம். என்னை? பிரமாதாவின் சொரூபத்தி லந்தக்காரணம் பிரவேசித்து அதனைப் பிரமேய சேதனத்தினின்றும் வேறுபடுத்துக் காண்பித்தலால் என்க.

ஒன்றன் சொரூபத்திற் பிரவேசியாமல் வியாவர்த்தகமாய் நிற்பது யாது அது உபாதியெனப்படும். நியாயமதத்தில் *கர்ணசட்குலியின் அவச்சின்ன காயஞ் சுரோத்திரேந்திரியமெனப்படும்; அங்கேகர்ணசட்குலி சுரோத்திரேந்திரியத்திற்கு உபாதியாம்; என்னை? சுரோத்திரேந்திரியத்தின் சொரூபத்திற் கர்ணசட்குலி பிரவேசியாமல் வாகியவாகாயத்தினின்றும் சுரோத்திரேந்திரியத்தை வேறுபடுத்துக் காண்பித்தலால் உபாதியாம். வேறுமொரு திருஷ்டாந்தம்;—கடாகாயமானது †மணுபரிமாண அந்தத்திற்கு அவகாசங்கொடுப்பதால் ஆகாயத்திற்குக் கடம் உபாதியாம், என்னை? மணு அந்தத்திற்கு இடங் கொடுக்கு மாகாயத்தின் சொரூபத்தில் கடம்பிரவேசியாமல் வியாபகவாகாயத்தினும் வேறுபடுத்துக் காண்பித்தலால் மணு அந்தத்திற்கு அவகாசங்கொடுக்கும் ஆகாயத்திற்குக் கடம் உபாதியாம்.

அதுபோல அந்தக்காரணவுபகித சேதனம் சாட்சியாமென்புழி, அந்தக்காரணம் சாட்சிக்கு உபாதியாம். என்னை? அந்தக்காரணம் சாட்சியின் சொரூபத்தில் பிரவேசியாமல், பிரமேய சேதனத்தினும் சாட்சியை வேறுபடுத்துக் காட்டுவதால் என்க. அந்தக்காரண மொன்றேசாட்சிக்கு உபாதியாகவும், பிரமாதாவுக்கு விசேடணமாகவும் நின்றமைகாண்க; இவ்வாற்றால், அந்தக்காரணவுபகிதசேதனமோ சாட்சியாம்; அந்தக்காரண விசிட்டசேதனம் பிரமாதாவாம்.

உபாதியுடையது, உபகிதமென்றும், விசேடணமுடையது, விசிட்டமென்றுங் கூறப்படும். அந்தக்காரண விசிட்டமான பிரமாதாவே கர்த்தா, போக்தா, சுகி, துக்கி என்னும் சம்சாரியாகிய சீவனும்; இது அவச்சேதவாதத்தின் றன்மை.

இனி ஆபாசவாதம்:—ஆபாசவாதத்தில், ஆபாசகிதவந்தக்காரணம் சீவனுக்கு விசேடணம். ஆபாசகிதவந்தக்காரணம் சாட்சிக்கு உபாதியாம்; ஆத

---

* கர்ணசட்குலி = செவித்துளை.

† மணு = மணங்கு என்னும் ஓரெடுத்தலளவை.

லால், ஆபாசத்தோடுகூடின வந்தக்காரண விசிட்டசேதனம் சீவனும். ஆபாசத் தோடுகூடின வந்தக்காரணவுபகித சேதனம் சாட்சியாம். இரண்டுபட்சத்திலும் விசேடணத்தோடு கூடினசேதனம் சீவனும்; அவனே சம்சாரியாம். ஆயினும், விசேடியபாகமான சேதனத்தின் கண்ணேயோ, ஜநநமரணமுதலிய சம்சார சம்பவமில்லை. விசேடணமாத்திரத்தில் அச்சம்சாரம்உண்டு. ஆதலான், இக் கருத்தை யறிவித்தற்பொருட்டே பிரமகீதையில்,

"பருதி நெஞ்சினு மொழிந்தவர் நெஞ்சினும் பானே
கரிய தாகிநின் றறிபவன்"—எ - ம்,

"உருத்திரன்மான் முதலாகத் தம்பமீறுவுள பொருட்குஞ் சான் றுகுமொருவன்"—எ - ம்,

பாகவதத்தில்,

"சொன்ன புந்தியிற் கரியெனத் தோன்றிய வறிவை"—

என்றும் கூறியிருப்பது போல,

"ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிற் சீவ சாட்சியாய் நிற்கும்"

என்றுழியாது, "சாட்சி மாத்திரமாய் நிற்கும்" என்று "மாத்திர' பதந்தந்து விசேடித்துக் கூறினர்.

(7) ஆபாச சாட்சியென்னுது "சீவசாட்சி" எனப் பொதுப்படக் கூறினமையின், இவ்வாசிரியர்க்கு அவச்சேதவாதந்தான் உடன்பாடாமோ வெனின்? இரண்டாம் படலத்தில்,

"உன்முகம் போற்கண்ணுடிக் குள்ளொரு முகங்கண்டாற்போல்
சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்"—

என்றுபாசவாதங் கூறியிருப்பதால், இவர்க்கஃதுடன் பாடன்றென்க; இவருடன் படாமைக்குக் காரணமென்னேயோவெனின்? பாஷியகாரர் ஆபாசவாதமங்கீகரித்திருப்பதானும், வித்தியாரண்ணிய சுவாமிகள் அவச்சேத வாதத்திற் றூடஞ்சொல்லி யிருப்பதானுமென்க.

(8) வித்தியாரண்ணியசுவாமிகள் அவச்சேதவாதத்திற்சொல்லிய தோட மென்னேயோவெனின்? அதுகூறுதும். ஆபாசாகிதவந்தக்காரண வவச்சின்ன சேதனத்தைப் பிரமாதாவாக வொப்பிடில் கடாவச்சின்னசேதனமும் பிர மாதாவாகவேண்டும். என்னே? எப்படி அந்தக்காரணம் பூதங்களின் காரியமோ அப்படிக்கடமும் பூதகாரியமாம்; அன்றியும், அந்தக்காரணம் சேதனத்தின் வியாவர்த்தகமாக எப்படியுளதோ அப்படிக் கடமும் சேதனத்தின் வியாவர்த் தகமாம்; ஆதலால், அந்தக்காரண விசிட்டம்போலக் கடவிசிட்டமும் பிரமாதா வாதல்வேண்டும். அந்தக்காரணத்தின்கண் ணுபாசக்கிரகணம் அங்கீகரிக்கில்

இவ்வாறுன தோடமின்றும். என்னே? அந்தக்காரணமோ பூதங்களின் சத்துவகுணகாரியமாகலின் சொச்சமாம்: கடமுதலியவை பூதங்களின் றமோகுணகாரியமாகலின் சொச்சமல்ல; யாது சொச்சபதார்த்தமோ அதுவே ஆபாசயோக்கியமாம். மலினபதார்த்தம் ஆபாசயோக்கியமாகா; இஃதெது போலவெனின்; கண்ணுடியும் அதன் மூடியும் போலவென்க; இவ்வாற்றால், அந்தக்காரணத்தின்கண் இருவிதப்பிரகாசமுள; ஒன்றே வியாபகமான சேதனப்பிரகாசம்: மற்றொன்றுபாசப்பிரகாசம். சரீராதிகளிலும், குடமுதலியவற்றிலும் ஒருவியாபகமான சேதனத்தின் பிரகாசமோவுண்டு: மற்றோராபாசப்பிரகாசமில்லை; ஆதலால் இருவிதப்பிரகாசத்தோடு கூடின அந்தக்காரண விசிட்ட சேதனமே பிரமாதாவெனப்படும்: ஒருவியாபகசேதனப்பிரகாசத்தோடு கூடின கடாதி விசிட்டசேதனம் பிரமாதாவன்று. எவருடைய மதத்தில் அந்தக்காரணத்தில் ஆபாசமில்லையோ, அவருடைய மதத்தில் கடாதிகளைப்போல அந்தக்காரணத்திலும் ஆபாசப்பிரகாசமில்லை: வியாபகசேதனத்தின் யாதொரு ஏகப்பிரகாசம் அந்தக்காரணத்தின் கண்ணுண்டோ, அவ்வியாபக சேதனத்தின் பிரகாசமே கடாதிக்கண்ணும் உளது. ஆதலால், அந்தக்காரண விசிட்டம்போலக் கடவிசிட்டசேதனமும், சரீரவிசிட்டசேதனமும், குட்டியவிசிட்ட சேதனமும் பிரமாதாவாதல் வேண்டும்; அங்ஙனமாகாமையின், ஆபாசவாதமே உத்தமம்: அவச்சேதவாதம் அன்று; இவ்வாறுன தோடங் கூறியிருத்தலின், அவச்சேதவாதம் இவர்க்கு உடன்பாடன்றென்க.

(9) எப்படி அந்தக்காரணம் ஆபாசசகிதமாகவுளதோ, அப்படியே அந்தக்காரணத்தின் விருத்தியும் ஆபாசசகிதமாகவேயுளது. அந்தக்காரணவிருத்தி நேத்திரேந்திரிய வாயிலாகப் புறம்போந்து விடயசமாஞகார மடையும்; அப்போது அவ்விருத்திபாகத்தால் விடயத்தின்கண் ஆவரணம்பங்கமாம்; ஆகவே, ஆபாசஞல் இதுகடம், இதுபடம்என இவ்வாறு விடயம் பிரகாசியா நிற்கும். இவ்வாறே, ஏனைய விந்திரிய வாயிலாகப்புறம்போந்துறும் விருத்திகளிலும் ஊகிக்க. புறம்பேசாட்சிப் பிரகாசம் எவ்வாறுள்ளதோவெனின்? கடத்தை நான் கண்டேனென்று கடஞானத்தின் பின்னிகழாநிற்கும் பிரகாசமே சாட்சியாமென்க. [பிரகாசமெனினும், ஞானமெனினும் ஒக்கும்.]

(10) இனி, உள்ளே இருவிதப்பிரகாசங்களைக் கூறுதும். இச்சை, ஞானம், கிரியை, சுகம், துக்கம், துவேடம் இவை ஆறும் பிரதான குணங்கள். நியாயமதத்தில், இவைகளே ஆன்மாவின் குணமென்பர். வேதாந்தத்தில், அந்தக்காரணத்தின் பரிணமமென்ப. இவைகளில், ஒன்று பிரகாசமாகும் போது சிதாபாசனைக்காணலாம்: அல்லாதபோது அவனைக்காணக்கூடாது; ஆகலின், தப்தாயபிண்டத் தக்கினிபோன்று அவைகளே தாஞகப்பிரகாசிப்பவன் ஆபாசன். சாக்கிர சொப்பனங்களில் விருத்திகள், விருத்திகளின் அந்தராளம், சுழுத்திமுதலியவற்றில் விருத்திகளின் அபாவம் ஆகிய இவைகளைப் பிரகாசிப்பிப்பது சாட்சியாமென்க. சாட்சிப்பிரகாசத்தில் விருத்தியங்கீகாரபட்சம் உரைக்கப்பட்டது.

இனி, விருத்தியங்கீகாரபட்சம்.

(11) அவித்தை, அந்தக்கரணங்களின் பரிணமம் விருத்தியெனப்படும். குரோதசுகாதிகளும், ஆகாசாதிகளும் முறையே அந்தக்கரணம், அவித்தை இவைகளின் பரிணமமாயினும் அவைகளால் யாதொரு விஷயமும் பிரகாசியாமையின், அவை விருத்தியென்று சொல்லப்படவில்லை. மற்றெதை விருத்தியென்பரோவெனின்? அவித்தை, அந்தக்கரணங்களின் ஞானரூபபரிணமத்தால் விடயங்கள் பிரகாசமாகலின், அதனையே விருத்தியென்பர். சுகதுக்கம், காமகுரோதமுதலிய எவ்வளவு அந்தக்கரணத்தின் பரிணமமுண்டோ அவைகளனைத்தையும், விருத்தியென்று சாஸ்திரங்களில் விவகரித்திருக்கினும் தத்வாநுசந்தானம், அத்வைத கௌஸ்துப முதலிய கிரந்தங்களில் பிரகாசகபரிணமமே விருத்தியென்றனர். ஆதலான், மாயை, அந்தக்கரணங்களின் ஞானரூபபரிணமமே விருத்தி சத்தத்திற்கு அத்வைதமதத்தில் * பாரிபாஷிகப் பொருளாம்; அவ்விருத்தி ஞானம் இருவகைத்தாம்; ஒன்று பிரமாரூபம்: மற்றொன்று அப்பிரமாரூபம். பிரமாணஜந்நிய ஞானத்தைப் பிரமாவென்பர். அதனின்வேறான ஈசுரஞானம், சுகாதிகோசரஞானம், ஸ்மிருதிஞானம், பிரம [ஹ்ரீ] ஞானம் ஆகிய இவை அப்பிரமாரூபமாம்; அவற்றுள், ஈசுரஞான மூதலியவை யதார்த்த அப்பிரமா: பிரம [ஹ்ரீ] ஞானம் அயதார்த்த அப்பிரமா. இவைகளின் விரிவை யறியவேண்டின் விருத்திப்பிரபாகர கிரந்தத்திற் காண்க; இது நிற்க, எப்போது அந்தக்கரணத்தின் பரிணமம் சுகரூபமாக, அல்லது துக்கரூபமாகவுளதாமோ அப்போது அந்தக்கரணத்தின் ஞானரூப விருத்தி சுகதுக்க கோசரமாகவுளதாகும்; அவ்விருத்தியின்கண் ஜடரூடமான சாட்சி அவைகளைப் பிரகாசிப்பிக்கின்றது. ஆதலின், கிரந்தகாரர் சுகதுக்கம் சாட்சிக்கு விடயமென்றனர். விருத்தியன்றிக் கேவலம் சாட்சிக்கு விடயமாகா.

ஈண்டிது இரகசியம்.

(12) "அந்தரத்தில்" என ஆகாயத்தை உவமானமாகக் காட்டினமையின் ஆகாயத்தின்கண் கடாகாயமென்னு நாமமும், சலம்கொணர்தலாகிய காரியமும் கடரூப உபாதி திருஷ்டியாற்றோன்றிக் கடரூப உபாதிதிருஷ்டியன்றி அவைதோன்றாமல் கடாகாயமாத்திரமே தோன்றுவதால் கடாகாயம் எப்படி மகாகாயரூபமோ அப்படிச் சேதனத்தின்கண் சாட்சியென்னுநாமமும், சுகதுக்காதி தர்மங்களோடு கூடின வந்தக்கரணத்தின் பிரகாசரூபமாகிய காரியமும் அந்தக்கரணரூபவுபாதி திருஷ்டியாற்றோன்றி அவ்வந்தக்கரண ரூபவுபாதி திருஷ்டியன்றிச் சாட்சியென்னு நாமமும், சுகதுக்காதி தர்மங்களோடு கூடின அந்தக்கரணத்தின் பிரகாசரூபமான காரியமுந்தோன்றாமற் சைதந்நிய மாத்திரமான பிரமமே தோன்றுவதால்சாட்சி, "பிரமரூபமே" என்னும் ஈதோரிரகசியார்த்தமும் கொள்ளக்கிடந்தமை காண்க. கடவுபாதி

* சாஸ்திரத்தின் அசாதாரணசங்கேதம் பரிபாஷை; பரிபாஷையினூற் சொல்லும்பொருள் பாரிபாஷிகப் பொருளாம்.

யினுற் கடாகாயமும் நாநாவாய்ப் பரிச்சின்னமாயிருப்பினும், மகாகாயத்திற் குப் பின்னமாக விராமல் மகாகாயரூபமே யாகின்றதுபோல அந்தக்கரணவுபா தியால் சாட்சியும் நாநாவாய்ப் பரிச்சின்னமாயிருப்பினும் வியாபகமான பிர மத்திற்குப் பின்னமாகாமற் பிரமரூபமாகவே யுள்ளது; ஆதலால்,

"ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தரத்திற் சீவசாட்சி மாத்திரமாய் நிற்கு மேகநாயகன்"—
என்றார்.

["சீவசாட்சி" என்பது, சீவனது சாட்சி, சீவனுக்குச்சாட்சி, சீவன்கட் சாட்சி எனவிரியும்.]

"எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவும்"—

என்றது, ஏகநாயகனுக்கு விசேடணம். இ - ள். எந்நிலங்களினும்= (சாங்கியர், யோகியர் முதலிய மதஸ்தர்களால் நாநாபேதமாகக் கூறப்பட்டுள்ள னவாகிய) ஞானபூமிக ளனைத்தினும்—மிக்க எழுநிலம்=(நிரதிசயாநந்தத் தைத்தருதலால் ஆன்றோர் கட்கபிமதமாகச்) சிறந்தவை (சுபேச்சைமுதலிய ஞான) சத்தபூமிகளாம்;—அவற்றில்= அப்பூமிகளுள்,—மேலாம் நன்னிலம் மருவும்=மேலாகிய துரியபூமியின்கட்பொருந்தி யொளிராநிற்கும்—ஏகநாய கன் பதங்கள்போற்றி.—எ - று.

துரியத்திற்குமேல் விதேககைவல்லிய மாவதேயல்லாமல் வேறுபூமியின் மையின், "மேலாம்நன்னிலம்" எ - ம், மகாநந்தமயமாதலின் துரியத்தை, "நன்னிலம்" எ - ம், தன்சொரூபமுள்ளவாறு வெளிப்படுந் தானமாகலின், "நன்னிலமருவும்" என்றுங்கூறின ரென்க. இரண்டாம்படலத்தினந்தத் தில்ஞானசத்தபூமிகளே இவ்வாசிரியரே விஸ்தாரமாகக் கூறியிருப்பதால் அவைகளை ஈண்டுவிரித்திலேம். சுபேச்சை, விசாரணை, தநுமானசி, சத்து வாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியம், என்பன அப்பூமிகளின் நாமங்களாம்.

(13) சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் அவஸ்தைகளினபிமா னமே பந்தமெனப்படும்; அவ்வவஸ்தைகளும் கோரம், சாந்தம், மூடம் என் னும் மூலவிருத்திகளாதலால் விசாரரூபம், அல்லது, தியானரூபமாகிய பிர மாநுசந்தானவலியால் அவைகளுசமாம்; ஆகவே, அவைகட்குக் காரணமான மனதும் பிரமப்பிரகாசத்தில் விலீனமாம்; ஆகவே, பிரமம் அகண்டைகரச மாய்த் தன்மயமாகவே விளங்காநிற்கும். நெடுங்காலம், நிரந்தரம் ஆதரவோ டும் அநுஷ்டித்துவாராநின்ற பிரமாநுசந்தானவலியால் அஞ்ஞானமும், அதன் காரியங்களுமாகிய வனர்த்தங்களின் நீங்கி நிரதிசயாநந்த மாத்திரமாகப் புரு டன் விளங்காநிற்கும் ஸ்தானமே முடிந்த நிலமான துரியமாம். பிரமவித்து, வான், வரியான் என்னுமிம்மூவர்க்குமேலாய் நான்காமவனெனவரிட்டனு லடை யப்படுவதாகலின், துரியமென்று பெயராம்.

(14) அல்லது, "நன்னிலம்" என்பது, துரியத்திற்கு வேதாந்தத்தின் பரிபாஷையாகிய சத்தமன்மையின்,

"எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவும்"—

என்பதற்கு, எல்லாப்பதிகளினுஞ் சிறந்தொளிராநிற்கும் சத்தபுரியினுஞ் சிறந்த நன்னிலமென்னுந் தலத்தின் கண்ணே எழுந்தருளாநிற்குமென்று வேறுமொருபொருள் கூறினுமமையும்; இஃதமையுமாறு,

"நன்னிலந் தனிலெழுந்த நாரணன் கிருபை யாலே
தன்னிய னானேன் நான்"—

என்று இந்நூலினந்தத்தில் வித்தியாநந்தங் கூறுங்காலையிற்கூறியிருக்குங் காரணத்தினுல் அறிக. "நன்னிலம்" என்பது, சிலேடையாய்த் துரிய பூமியையும், மதுவனமென்னும் ஸ்தலத்தையும் உணர்த்தாநின்றது.

(15) அயனரியுருத்திராதியர்போற் றோற்றமொடுக்க மின்மையின், "ஏகம்" எ - ம், அன்னோர்க்கும் தான் இறையாகலின், "நாயகன்" என்றுங்கூறினர்; இவ்வாற்றுல், இது காரணப்பிரமமென்பதுபெற்றும்.

(16) மாயாவிசிட்ட சைதந்யத்தைக் காரணப்பிரமமென்று கூறியிருக்கின்றனராகலின் அதற்கு, "உள்ளந்தன்னிற் சாட்சிமாத்திரமாய்நிற்கை" அசம்பவமாமேயெனின்? அது பரமார்த்தமாகச்சுத்தப்பிரமமேயாகலான், சாட்சித்தன்மை அதற்கு அசம்பவமாகாதென்க.

(17) இவ்வாற்றுல், இஃது தோடமின்றுயினுங்க. "பதங்கள்" என்னுஞ்சத்தம் உபலட்சணமாய் ஆபாதமஸ்தக பரியந்தமானமூர்த்தி போதகமாயிருத்தலின், இது சுத்தப்பிரமத்திற்கும், அப்படியே காரணப்பிரமத்திற்கும் பொருந்தாதாகலின் சரீரவிசிஷ்ட சைதந்நியங்களான காரியப்பிரமங்களுள்ளே, யாதானுமொன்றைக் கூறலாமேயெனின்? அங்ஙனங்கூறுதற்குச் சதுர்ப்புஜ, திரிநேத்திர, ஸதுண்ட, அஷ்டபுஜாதிகளான காரியப்பிரமங்களின் சின்னங்களுள்ளே, யாதானுமொருசின்னங்களையெடுத்துவிசேஷித்திருத்தல் வேண்டும்; அங்ஙனம் விசேஷியாமல், "ஏகநாயகன் பதங்கள் போற்றி" என்றதால், காரியப்பிரமங்களுள், யாதானுமொன்றைக்கூறுதல் பொருந்தாது. ஆயின், "பதங்கள்" என்றது, காரணப்பிரமத்திற்கு அசம்பவமாமேயெனின்? அக்காரணப்பிரமம் ஓரோர் காலையில் பக்தானுக்கிரகார்த்தம் அவர் வேண்டிய அருளுருகொண்டாவிர்ப்பவிக்கும் ஆற்றலுடைத்தானமையின், அதற்குப்பாதங்கூறியது உபசாரமும், அசம்பவமுமாகாது. இதனை,

"புருட னென்றுரை செயப்படு வதுபரி பூரண மாகின்ற
சொருப நின்றவா நிற்கவிங் கருளொடு தோன்றவல் லவன்றானே
யானு மன்றுமா லயனுமன் றெவர்க்குமூள் ளாகியே யாவர்க்குந்
தெரிவ ருஞ்சிவ னவனையிங் கொருங்கிய சிந்தையார் தெளிவாரே."—

என்னும் பிரமகீதையினுனும்,

"சாவாது பிறவாது தனிமுதலா யிருந்தநா
ளாவாவிவ் வுலகுபடு மழிதுயர்தீர்ப் பதற்காக
மேவாது நின்றேயென் மாயையினுன் மெய்யேபோ
லோவாது பிறந்திடுவே னுகந்தோறு முகந்தோறும்".

என்னும் பகவற்கீதையினுனும்,

"துயரில் சுடரொளி தன்னுடைச்சோதி நின்றவண்ண நிற்
கவே, துயரின் மலியும் மனிதப்பிறவியிற் றோன்றிக்கண் காணவந்து,
துயரங்கள் செய்துதன் றெய்வநிலை யுலகிற் புகவுய்க்குமம்மான், றுயர
மில்சீர்க்கண்ணன் மாயன் புகழ்துற்ற யானோர் துன்பமிலேனே."—

என்னுந் திருவாய்மொழியினுனும்,

"தன்பாபாப மதானதிரு மேனிநிலையிற் சலனமின்றி யொரு
தன்மையினி னின்றருளியே, யன்பரானவர்க ணெஞ்சினிலு வந்த
வடிவா யங்குவந்தவர்க ளுய்யும்வகை செய்தவருளும்"—

என்னும் அஞ்ஞவதைப் பாணியினுனும் அறிக; இது, சிஞ்ஞாசையு
டையோர் உபாசிக்கத்தக்கது காரணப்பிரமமே யென்னும் சாஸ்திரார்த்த
தைத் தனது ஒழுக்கத்தால் உபதேசித்ததாம்.

(18) ஸ்ரீ-வியாசபகவானது அபிப்பிராயமும் இதுவே. என்னே? வியா
சபகவான் ஒருவரே ஸ்காந்தபுராணத்தில் சிவனுக்கு, சுதந்தரத்துவமுதலிய
ஈசுரத்தன்மங்கூறினர். அந்நியதேவர்க்கு, சிவகிருபையினுல் சர்வவியூதி
யின் பிராப்திகூறி அதனுல் சீவதன்மங்கூறினர். அப்படியே ஒருவர்க்குப்பு
ராணத்திலும், ஒருவர்க்குஉபபுராணத்திலுமாக விஷ்ணு, சிவன் இவரின் வே
றான கணேசாதிகட்கும், ஈசுரத்தன்மை கூறினர்; இவ்வாற்றுல், வியாசரு
டைய வாக்கியங்களில் விரோதந்தோன்று நிற்கின்றதே எனின்? அதற்குச்ச
மாதானம்;—சர்வமும் ஈசுரனே. எந்தப்பிராகாணத்தில் அந்நியதெய்வத்தின்
நிந்தை கூறியிருக்கிறதோ, அந்நிந்தை அதனுபாசனைத்தியாகத்தின் பொருட்
டன்று; அப்படி வியாசர்க்கு அபிப்பிராயமில்லை மற்றென்னையோவெனின்?
வைஷ்ணவபுராணங்களில் சிவன் முதலியோர் நிந்தையும், விஷ்ணுவின் துதி
யும் விஷ்ணுவின் உபாசனையில் பிரவிர்த்திப்பதற் கேதுவாயிருக்கிறது. அப்
படியே சிவபுராணங்களில் விஷ்ணுவாதிகளின் நிந்தையும், அவர்களினுபாச
னைத்தியாகத்தின் பொருட்டாகாமல் சிவனுடையஉபாசனையில் பிரவிர்த்திப்
பதற்கே ஏதுவாம். ஓர்பிராகாணத்தில் அந்நியத்தினுடைய நிந்தை தியாகத்தின்
பொருட்டேயாமாயின், சர்வதெய்வங்களினுடைய உபாசனைகளுமன்றோ
தியாகமாகும்; அதனுல் அந்நியத்தின் நிந்தை ஒன்றன் ஸ்துதியின்பொருட்
டாகவே உளது: தியாகத்தின் பொருட்டன்று.

[இதற்குத்திருஷ்டாந்தம்.]

(19) வேதத்தில் அக்னிஹோத்திரத்திற்கு இரண்டு காலங்கூறியிருக்
கின்றது; ஒன்றுசூரியோதயத்திற்குப் பிரதமம்: மற்றொன்றுசூரியோதயத்

திற்கநந்தரகாலம். அங்கே, உதயகாலத்தின் பிரசங்கத்தில் அநுதயகாலத்தை நிந்தித்திருக்கிறது: அநுதயகாலத்தின் பிரசங்கத்தில் உதயகாலத்தை நிந்தித்திருக்கிறது; அந்நிந்தையின் முர்பரியம் தியாகத்திலாமாயின், இரண்டு காலத்திலும் ஓமத்தின்றியாகமாம். நித்தியகர்மத்தின் தியாகங்கூடுமோ? ஆகலின், உதயகாலத்தைத் துதித்தற்பொருட்டு அநுதயகாலத்தையும், அநுதயகாலத்தைத்துதித்தற்பொருட்டு உதயகாலத்தையும் நிந்தித்திருக்கிறது; அப்படி ஓர்தேவதையின் உபாசனையின் பிரசங்கத்தில் அந்நியத்தின் நிந்தை ஒன்றன் ஸ்துதியில் தாற்பரியமாம்: அந்நியத்தின் நிந்தையில் அன்று.

(20) எப்படிச் சாகாபேதத்தால் ஒருவர் உதயகாலத்தில் ஓமஞ்செய்ய, ஒருவர் அநுதயகாலத்தில் ஓமஞ்செய்ய பயன் இருவருக்குஞ் சமானமாக உண்டாகின்றதோ! அப்படி இச்சாபேதத்தால் ஐந்து தெய்வங்களில் எதனை உபாசித்தாலும் பிரமலோகப்பிராப்தியாம்; அங்கே போகங்களைப்புசித்திருந்து இறுதியில் விதேகமோட்சமும்அடைவர். விஷ்ணுவாதிகளின் உபாசனைகளால் வைகுண்டலோகாதிகளின் பிராப்திபுராணங்களிற் கூறியிருக்கின்றதன்றிப் பிரமலோகத்தின் பிராப்தி கூறவில்லையே யெனின்? அங்ஙனம் கூறியிருப்பினும் உத்தம உபாசகராய், விதேகமுத்திக்கு அதிகாரிகளாயினோர் சகலரும் தேவையானமார்க்கத்தால் பிரமலோகத்திற்கே போகாநிற்பர். பிரமலோகம் ஒன்றே, வைஷ்ணவ உபாசகர்க்கு வைகுண்ட ரூபமாகத் தோன்ரு நிற்கும்; அவ்வுலகவாசிகளனைவரும் அவர்க்குச்சதுர்ப்புஜ * பார்ஷதரூபராய்த் தோன்ரு நிற்பர்: தாமும் சதுர்ப்புஜமூர்த்தியாக நிற்பர்; அப்படியே சைவ உபாசகர்க்கும் பிரமலோகமே சிவலோகமாகத் தோன்ரு நிற்கும்; அவ்வுலகவாசிகளனைவரும் திரிநேத்திரமூர்த்திகளாகத் தம்மோடு கூடத் தோன்ரு நிற்பர்; இவ்வாற்ரல், சர்வஉபாசகர்க்கும் பிரமலோகமொன்றே தமது உபாசியத்தினுடையலோகமாகத் தோன்ரு நிற்கும். என்னை? தேவயானமார்க்கமன்றி அந்நியமார்க்கத்தால் யாவர் செல்லா நிற்பரோ! அவர்க்கு மீளுதலுண்டாகும்; இது நியமம். தேவயானமார்க்கம் ஓர் பிரமலோகத்திற்கேஉள்ளது. ஆகலின், விதேகமோட்சத்திற்கு யோக்கியரான உபாசகரனைவரும் பிரமலோகத்திற்கே போகாநிற்பர்; அதுஉபாசகருடையஇச்சையின் அநுசாரமாகச் சகல சாமக்கிரிகைகளோடு கூட அவரவர்க்குத் தோன்ரு நிற்கும்; இப்படிப்பட்டஅற்புதமகிமை அந்தப்பிரமலோகத்திற்கே உள்ளது. இவ்வாற்ரல், ஐந்துதேவதைகளின் உபாசகர்க்கும் பயன் சமமாகவே யுண்டாகா நிற்கும்.

(21) அங்ஙனமாயின், ஐந்துதேவதைகளுக்கும் நாமரூபங்கள்வெவ்வேரூகக் கூறியிருக்கின்றன. ஈசுரனே ஒருவன்; ஒரு ஈசுரனுக்கு நாநாநாமரூபம் எங்ஙனங்கூடுமெனின்? அதற்குச்சமாதானம்; பரமார்த்தமாக நாமரூபங்களொன்றும் பரமான்மாவின்கண்ணே உளதாக இல்லை. மந்தபுத்தியுடையோர்க்கு உபாசனையின் பொருட்டு நாமரூபாதிதமான பரமான்மாவுக்கு, மாயையினாற் பண்ணப்பட்டகற்பிதநாமரூபங்கள்கூறினர். ஆதலால், ஓர்பரமான்

* பார்ஷதர்=கணங்கள், அல்லது சபையிலிருப்பவர்.

மாவின் கண்ணே மாயையிஞற் பண்ணப்பட்ட நாநாஞகற்பித நாமரூபங்கள் கூடும்; இவ்வாற்ருல் சர்வபுராணவாக்கியங்களின் விரோதமும் நிவிர்த்தியாய் விடும்.

(22) புராணவாக்கியங்களில் விரோதசங்கைக்கு முக்கியசமாதானம் யாதெனில்? விஷ்ணு, சிவன், கணேசன், தேவி, சூரியன் என்பன முதலாக எவ்வளவு நாமங்கள் ஒவ்வொன்றற்குண்டோ! அவைமுழுவதும் காரணப்பிரமத்தினுடைய நாமங்களேயாம். காரியப்பிரமங்கட்கும் அவைமுழுவதும் நாமங்களாகப்பொருந்தும்; அது எங்ஙனம்? மாயாவிசிட்டமான காரணத்தைப்பிரமமென்றவர், இரண்யகர்ப்பரான காரியத்தையும் பிரமமென்றனர்; ஆகலின் விஷ்ணு, சிவன், கணேசன், தேவி, சூரியன் என்னும் பதங்கள் காரணப்பிரமத்தையும், காரியப்பிரமங்களேயும் உணர்த்துகின்றன; அப்படியே அப்பதங்களின் பரியாயநாமங்களாயுள்ள நாராயணன், நீலகண்டன், விக்கினேசன், சத்தி, பாநு இவைமுதலிய அநந்தபதங்களும் அவ்விருவகைப்பிரமங்களேயும் உணர்த்துகின்றன. பிரசங்கத்திற்கு ஏற்கஓரிடத்தில் காரணப் பிரமத்தையும், ஓரிடத்தில் காரியப்பிரமங்களேயும் உணர்த்தும்.

அஃதெப்படியெனின்? ஸைந்தவபதம் அசுவம், லவணம் இரண்டனேயும் உணர்த்துமேனும், போஜனப்பிரசங்கத்தில் லவணத்தையும், கமனப்பிரசங்கத்தில் அசுவத்தையும் உணர்த்துவதுபோலென்க. வைஷ்ணவபுராணத்தில் விஷ்ணு, நாராயணுதிபதங்கள் காரணப்பிரமத்தையும், சிவன், கணேசன், சூரியாதிபதங்கள் காரியப் பிரமங்களேயும் உணர்த்தாநிற்பனவாம். ஆதலால் வைஷ்ணவ கிரந்தத்திலுள்ள விஷ்ணுவின் துதிக்கும், சிவன் முதலியோர் நிந்தைக்கும் வியாசரது அபிப்பிராயம் காரணப்பிரமம் உபாசிக்கத்தக்கது: காரியப்பிரமங்கள் உபாசிக்கத்தக்கன வல்லவென்பதாம்; அப்படியே, ஸ்காந்த புராணமுதலிய சைவகிரந்தங்களில் சிவன், மகேசன் முதலிய பதங்கள் காரணப்பிரமத்தையும், விஷ்ணு, கணேசன், தேவி, சூரியாதிபதங்கள் காரியப் பிரமங்களேயும் உணர்த்துவனவாம். ஆதலால், அவைகளிலும் காரணப் பிரமத்தின் ஸ்துதியும், காரியப்பிரமங்களின் நிந்தையும் உள. கணேசபுராணத்தில் கணேசபதம் காரணப்பிரமத்தின்வாசகம். விஷ்ணு, சிவன் முதலிய பதங்கள் காரியப்பிரமங்களின் வாசகங்களாம்; அதிலும் காரணத்தின் ஸ்துதியும், காரியங்களின் நிந்தையும் உள: காளிபுராணம், சூரியபுராணங்களிலும் அப்படியே உண்டு. இவ்வாறு, சகலபுராணங்களிலும், காரியகாரணங்களின் நாமசங்கேதங்கட்குப் பேதம் உள; கொள்ளற்பாலதும், தள்ளற்பாலதும் ஆகிய பொருள்கட்குப் பேதமில்லை. சகல புராணங்களிலும் காரணப்பிரமத்தின் உபாசனே கொள்ளற்பாலதும், காரியங்களின் உபாசனே தள்ளற்பாலதுமாம்; அதஞல் சகல புராணங்களும் ஓர் காரணப் பிரமத்தை உபாசிக்கத்தக்கதாகவே உணர்த்துகின்றன; அவைகளுக்குத் தம்மில் விரோதமில்லை.

(23) எப்படியும் சதுர்ப்புஜ, திரிநேத்திர, ஸதண்ட, அஷ்டபுஜாதி மூர்த்திகள் மாயையின் பரிணமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம்; ஆகலின்;

காரியம்: அவைகளின் உபாசனையுங்கூறியிருக்கின்றது; அங்ஙனங் கூறியிருப்பினும், அச்சதுர்புஜாதி மூர்த்திகளுக்கும், மாயாவிசிட்ட காரணப்பிரமத்திற்கும் விசாரிக்குமிடத்துப் பேதமில்லை. ஆதலால், காரியப்பிரமங்களின் ஆகாரங்களை * வாதித்து அவர்களைக் காரணரூபமாக உபாசிக்கவேண்டுமென்பது தாற்பரியம். என்னை? ஆகாரம் காரியமாதலின், துச்சம்: காரணம் சத்தியம். யாவரது மந்தப்பிரஞ்ஞை ஆகாரத்திலேயே ஸ்திதமாமோ! அவர்சாஸ்திரத்திற்சொன்ன ஆகாரத்தையே உபாசனைசெய்க; அதனாலும் பிரஞ்ஞை நிச்சலமாய்க் காரணப்பிரமத்தின் உபாசனையில் ஸ்திதிபெறும்: இவ்வாறே திருவாய்மொழியினும்,

"உணர்ந்துணர்ந் திழிந்த கன்றுயர்ந் தருவியந்த விந்நிலைமை,
யுணர்த்துணர்ந் துணரினு மிறைநிலை யுணர்வரி துயிர்கா, ளுணர்ந்
துணர்ந் துரைத் துரைத் தரியய னரனென்னு மிவரை, யுணர்ந் துணர்ந் துரைத் துரைத் திறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே"—எ - ம்,

"ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினு ணின்ற
நன்றெழி லுரண ஞன்முக னரனென் னுமிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே"—எ - ம்,

அருளிச்செய்திருப்பது காண்க.

(24) ஜகத்காரணன், சத்தியகாமன், சத்தியசங்கற்பன், சர்வஞ்ஞன், சுதந்தரன், சர்வப்பிரேரகன், கிருபாலு என்றிவ்வாறு ஈசுரத்தன்மங்களைச் சிந்திப்பாயாகவென்று காரணப்பிரமத்தின் உபாசனை கூறியிருக்கின்றது. காரணப்பிரமமன்றி வேறே அநேகமூர்த்திகளும் சாஸ்திரங்களிற் கூறியுள்ளன; அவையெல்லாம் உபாசனையின் நிமித்தம் அன்று. சகலமும் காரணப்பிரமத்தின் உபலட்சணமாகவே கூறியிருக்கின்றன.

(25) உபலட்சணமாவது: ஒன்றன் ஏகதேசத்திருப்பதும், ஓர்போதிருப்பதும், † வியாவர்த்தக மாயிருப்பதும் யாது அது. என்னை? காகமிருப்பது தேவதத்தனதுகிரகம் என்னும் வாக்கியத்தில் காகம் உபலட்சணம். எங்ஙனம் காகமானது தேவதத்தனது கிரகத்தின் ஏகதேசத்திருப்பதாயும், ஓர்போதிருப்பதாயும், வியாவர்த்தகமுமாயிருக்கிறதோ அங்ஙனம் ஜகத்காரணபிரமத்தின் ஏகதேசத்தில் சதுர்ப்புஜாதி மூர்த்திகள் உள்ளன: ஓர்போது உண்டாகின்றன; அச்சதுர்ப்புஜாதி மூர்த்திகள் காரணப்பிரமத்தின் கண்ணேயே உண்டாகின்றன; அந்நியத்தின்கண் இல்லை என வியாவர்த்தகமாகவிருத்தலின், அவை உபலட்சணமாம். உபலட்சணத்திற்கு விசேஷியவஸ்து

---

* வாதித்தல்=காரியம், காரணப்பிரமமே அந்நியமன்று என்பதாம்.

† வியாவர்த்தகம்=அந்நியத்தினின்றும் ஒன்றை வேறுபடுத்துமது; இஃது, சு - வது பிரசங்கத்திற்காண்க.

வின்சொரூபஞானம் உளதாதலே பிரயோஜனமாம். காகத்தால் தேவதத்தனது கிரகத்தின் ஞானம் உளதாதலே பிரயோஜனமல்லாமல் அந்நியப்பிரயோஜனம் இல்லாததுபோல சதுர்ப்புஜமுதலிய ஆகாரங்களால்நிராகாரமான காரணப்பிரமத்தின்ஞானமே உபாசனையின்நிமித்தம்மூர்த்திப்பிரதிபாதனத்தின் பிரயோஜனமல்லாமல் அந்நியமில்லை.

(26) மந்தப்பிரஞ்ஞை யுடையோர், சாஸ்திராபிப்பிராயம் அறியாமல் அவ்வாகாரங்களில் ஆக்கிரகஞ் செய்கின்றதுமன்றி "சியாலசாரமேய நியாயத்தால்" பரஸ்பரம் கலகமும் விலக்கின்றனர். "சியாலன்" என்பது, ஒரு ஸ்திரீயின் தமையன்பெயர். "சாரமேயன்" என்பது, நாயின்பெயர். "நியாயம்" என்பது, திருஷ்டாந்தம். ஒரு ஸ்திரீயினுடைய தமையனுக்கும், அவள் கணவன் வீட்டுக்கு அடுத்தவீட்டு நாய்க்கும் உற்பாலகன் என்று பெயர் இருந்தன. அந்தஸ்திரீயின் தமையனுடைய சத்துருவுக்கும், அவள் கணவன் வீட்டு நாய்க்கும் தாவகன் என்று பெயர் இருந்தன ; இப்படியிருக்க, அந்தஸ்திரீயானவள் பிரதமத்தில் கணவன் வீட்டுக்குவந்தாள் ; அப்போதுமேற்கூரிய இரண்டு நாய்களும் ஒன்றோடொன்று சண்டைசெய்து கொண்டிருந்தன ; அதைக் கண்ட அவளுடையகணவன், அடுத்தவீட்டுநாயாகிய உற்பாலகனே பன்றி, கழுதை என்பன முதலியவார்த்தைகளால் வைது, தன்னுயைத்தாவகனைப் போற்கிடையாதென்று பெருமைப்படுத்திக்கொண்டாடினன் ; அதைக்கேட்டிருந்த அந்தஸ்திரீக்குத் தன்தமையனே வைகிறதாகவும், தமையனுடைய சத்துருவைக்கொண்டாடுகிறதாகவும், பிராந்தியுண்டாகி அதனால் அவள் துக்கமுடையவளாய்த் தன்பர்த்தாவோடு கிலேசித்திருந்தாள். நாயகன் அப்பிராயம் அறியாமல் சமானமான நாமத்தாலேபிராந்திகொண்டு அவள் எப்படிக் கிலேசித்திருந்தாளோ அப்படியே வைணவகிரந்தங்களில் சிவன்முதலிய நாமங்களால் காரியப்பிரமங்களே நிந்தைசெய்திருப்பதைக்கண்டசைவர் முதலியோர்களும், சைவ கிரந்தங்களில் விஷ்ணு நாமத்தால்காரியப்பிரமத்தை நிந்தைசெய்திருப்பதைக் கண்டவைணவர்களும் துக்கத்தையடைகின்றனர். காரணப்பிரமம் உபாசிக்கத்தக்கது, காரியப்பிரமங்கள் விடத்தக்கனவென்பதே சகலபுராணங்களின் அபிப்பிராயமாம். மாயாவிசிட்டசேதனம் காரணப்பிரமமென்றும், மாயையினால் பண்ணப்பட்ட காரியவிசிட்டசேதனம் காரியப்பிரமமென்றுஞ் சொல்லப்படும். பாரதவியாக்கியானத்தின் ஆரம்பத்தில் அறிஞர்சிகாமணியாகிய நீலகண்டபண்டிதரால் இவ்வாறெழுதப்பட்டிருக்கிறது. சகலவேதாந்தங்களின் சித்தாந்தமும் இதுவேஎன்று விசாரசாகரத்தின் எழாந்தாங்கத்திற் கூறியிருக்கின்றது. இந்நூலாசிரியர், இவ்வபிப்பிராயத்தை அறிவித்தற்பொருட்டே காரியப்பிரமங்களின் சின்னங்களான சதுர்ப்புஜ, திரிநேத்திர, ஸதண்ட, அஷ்டபுஜாதிகளுள்ளே யாதொன்றையும் எடுத்து விசேடியாமல் "ஏகநாயகன் பதங்கள் போற்றி"—என்றார்.

இலக்ஷ்மியினால் தன்னநுபூதிமயமான இருக்குவேத மஹாவாக்கியப் பொருளையே சிந்தித்ததாம்.

[ஆன்மசொரூப நமஸ்காரரூப மங்கலம்.]

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனுய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யநந்தமூர்த் தியுமாய் நிற்கும்
பூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனுய் நாளும்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே. (உ)

இ-ள். தானே,—ஈன்று = உலகத்தைச்சிருஷ்டித்து,—அளித்து = இரட்சித்து—அழிக்கும் = சம்மாரிக்கும், — செய்கைக்கு = இம்முத்தொழிற்கும்,—ஏதுவாம் = காரணமாகும்,—அயன் ஆய் = பிரமனுகியும், — மால் ஆய் = நாராயணனுகியும்,—ஆன்றஈசனும் ஆய் = மாட்சிமைபொருந்தியஉருத்திரனுகியும்,—அநந்தமூர்த்தியும் ஆய் = (இன்னும்) அளவிறந்த சுர, நர, திரியக்காதி சேதனப்பிரபஞ்சங்களாயும், கிரிநதியாதிய அசேதனப்பிரபஞ்சங்களாயும்,—பூன்றமுத்தனும் ஆய் = (அனைத்தினும்) பூரணமாகும் நித்தியமுத்தனுன ஈசானுமாய்,—நிற்கும் = (நிறைந்து) நிற்கின்ற,—இன்பப்புணரி ஆதவன் ஆய் = ஆநந்தசமுத்திரமாயும், (பர) மாதித்தனுயும்,—நாளும்தோன்றிய = சதாகாலமும் விளங்குவதாகிய,—விமலபோதசொரூபத்தை = நிர்மலமான ஆன்மசொரூபத்தை, பணிகின்றேன் = வணங்குகின்றேன்.—எ-று.

"தானே, ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவாமயனுய் மாலா[ம்
யான்றவீ சனுமா யநந்தமூர்த் தியுமாய்ப் பூன்றமுத் தனுமாய் நிற்கு
விமலபோத சொரூபத்தைப் பணிகின்றேன்"—

எனக்கூட்டுக.

"அயனுய் மாலாயான் றவீசனு மாயி" என்றது, காரியப்பிரமங்களை. "பூன்றமுத்தனுமாயி" என்றது, காரணப்பிரமத்தை. இங்ஙனமனைத்துமாய் நிற்பதும் தனது ஏகதேசத்தில்; அதுவும் சோற்றாவுமாத்திரமேயென்னும் பொருடோன்ற "இன்பப் புணரியாதவனுயி" என்றுர். அன்றியும், "இன்பப்புணரியாதவனுயி" என்றதை, ஏதுகர்ப்ப விசேடணமெனினுமமையும். "இன்பம்" என்பது, பிரசித்தசமுத்திரத்தினும் ஆன்மசுகாதிக்குள்ள விலட்சணத்தன்மையையும், "நாளுந்தோன்றிய" என்பது, பிரசித்தசூரியனினும் பரமாநித்தனுக்குள்ள விலட்சணத்தன்மையையும் குறிப்பித்துநின்றது. "விமலபோதம்" என்றதால், பஞ்சகோசங்களே ஆன்மாவென்பாரையும், "போதசொரூபம்" என்றதால், ஆன்மாவிற்கு ஞானங் குணமென்பாரையும் மறுத்தனர்—எ-ம், "தானே" என்றதால், அந்நிய நிமித்தோபாதானம் இன்மையைக்குறிப்பித்தனர்—எ-ம். கொள்க.

"ஈதனேத்தும் ஆன்மாவே" என்னுஞ் சுருதியால், தானேவணங்கினதாம். (உ)

[குருவின் நமஸ்கார நபமங்கலம்.]

எவருடை யருளால் யானே யெங்குமாம் பிரம மென்பால்
கவருடைப் புவன மெல்லாங் கற்பித மென்ற றிந்து

சுவரிடை வெளிபோல் யானென் சொரூபசு பாவமா னேன்
அவருடைப் பதும பாத மநுதினம் பணிகின் றேனே. (கூ)

இ - ள். எவருடை அருளால் = (தாயினுஞ்சிறந்த) யாவருடைய கிருபையினால், — சுவரிடை வெளிபோல் = கூட்டியத்தின்கண் (அதனாலாச்சாதிக்கப் பட்டுள்ள) ஆகாயத்தை (அக்கூட்டியத்தை யிடித்தொழித்து அதுவே மகாகாயமென்றறிந்தாற்) போல, — யானே = (அசங்கசிதாத்மாவான வென்னை யாச்சாதித்துள்ள பஞ்சகோசங்களையும், அவை என்னலறியப்பட்டுச் சடமாயிருத்தலின் இதுநானல்ல, இதுநானல்ல என்று நேதித்து, மேலே அவைகளினபாவரூபமான சூனியத்தையும் ஒழித்து அவைகட்குச்சாட்சியாய், அசங்கசிதாத்மாவான) நானே, — எங்கும் ஆம்பிரமம் = அரி, அயன், சிவன், அந்தகன், இந்திராதிய வீடந்தோறும் (முத்தினுள்நூல்போல அநுசூதமாய், சாட்சியாய்) நிறைந்திருப்பதாகிய பிரமமாம் :— என்பால் = (இப்படிப்பரப்பிரமமான என்னிடத்து,) — சுவருடைப் புவனம் எல்லாம் = நாநாகூறுபாடுடைய பிரபஞ்சமெல்லாமும், — கற்பிதம் = (கானற்சலம்போல அத்தியஸ்தமாதலின்,) மித்தையாம், — என்று அறிந்து = என்று (சமுசயமில்லாமற் சாட்சாத்கரித்து, — சுபாவம் = சுபாவமாக, — யான்என்சொரூபம் ஆனேன் = நான் எனது நிசசொரூபமாயினேனே, — அவருடைப்பதுமபாதம் = அக்கருணாமூர்த்தியினுடைய தாமரைமலர்போலுந் திருவடியை, — அநுதினம் பணிகின்றேன் = நாடோறும் வணங்குகின்றேன். — எ - று.

எவருடையருளால் ஆனேனெனக்கூட்டுக.

யாவரும் முடிமேற் கோடலானும், யாவரினும் பெருமையுடைமையானும், அபக்குவர் அண்மைக்கணிருந்தும் அடையாமையானும், பக்குவர் சேய்மைக்கணிருந்தும் சேடிவந்தடைதலானும் "பதுமபாதம்" என்றார். ஞானம் வந்தபின்பணிதலொழியின் "செய்ந்நன்றி கொன்ற" தோடம் வருமென்பதை, "அநுதினம்" என்னும்பதத்தாற் குறிப்பித்தனர்.

(27) "சுபாவம்" என்றபதத்தால் அம்ஸாம்வித்பாவம், விகாராவிகாரிபாவம், உபாசகவுபாசியபாவமுதலியனபோல எனக்கும், பிரமத்திற்கும் கொஞ்சமும் பேதமின்றென்பதையும், பேதமின்மையின் காரியத்தன்மை, பிரகாசியத்தன்மை, ஆதேயத்தன்மை ஆகிய பரதந்திரமுடையனன்றென்பதையும் குறிப்பித்தனர். "யானே யெங்குமாம் பிரமம்" என்பதற்கு, உதாரணம் பிரபுலிங்கலீலை,

"வான மல்லேன் வளியல்லே னழனீ ரல்லேன் மண்ணல்லேன்
ஞானமல்லேன் விஞையல்லே னுனே சிவமென் றெண்ணிலே
னூன மில்லா வொருசிவமே யாவ னிவ்வா றுன்னுதா
னீன மெல்லா முடையவுடம் பெடுத்துச் சுழலு மெஞ்ஞான்றும்"—

எனவரும் மற்றும்வருவனவற்றுற்காண்க. "அநுதினம்பணிகின்றேனே" என்றதற்கு, உ - ம் - பிரமகீதை,

"மாய வன்புலத்தெழாவகை தீர்ந்ததன் வாய்மையான் மயிர்க்காலாற்
பாயவின்னமு திருசெவித் துளைவழி பாய்ச்சினன் பதுமத்தா
டாயுந் தந்தையுஞ் சுற்றமுமற்றுநற் றனமுமென் றடைவான்றன்
காய முள்ளள வும்புகழ்ந் தேத்துவான் கற்றதோர் கலையாலே"—

எனவரும் மற்றும்வருவனவற்றுற்காண்க. "யானே" என்பது, மஹா வாக்கியத்தின் "அகம்" பதம். "எங்குமாம்பிரமம்" என்பது, "பிரம" பதம். "ஆனேன்" என்பது, "அஸ்மி" பதம்.

அநுபூதிவாக்கியார்த்த ஸ்மிருதியோடு குருவினது பெருங்கருணையை வியந்ததாம். (ங)

[குருவின் சீர்பாதவல்லபத்தைத் துதித்தல்.]

என்னுடை மனது புத்தி யிந்திய சரீரமெல்லாம்
என்னுடை யறிவி னுலே யிரவிமுன் னிமமே யாக்கி
என்னுடை நீயு நானு மேகமென் றைக்கியஞ் செய்ய
என்னுடை குருவாய்த் தோன்று மீசனை யிறைஞ்சி னேனே. (ச)

இ - ள். என்னுடை மனது = எனது (சமூசயரூபமான) மனதும்,—புத்தி = (நிச்சயரூபமான) புத்தியும்,—இந்தியம் = ஞான கருமேந்திரியங்களும்,—சரீரம் = (பிராணபஞ்சகத்தோடு இவ்விலிங்க தேகத்திற்கிடமான தூல) சரீரமும்,—எல்லாம் = இவ்விரண்டிற்கும் மூலமான அஞ்ஞானக்கூறென்னும் காரணசரீரமும், இவைகளைப்பற்றி வாராநின்ற சாக்கிராதி அவத்தாத்திரயமும், விசுவாதி அபிமானித்திரயமும், இன்னும் விராட்டாதி சமட்டி சரீரத்திரயங்களும், சிருஷ்டியாதி அவத்தாத்திரயமும், வைசுவானராதி அபிமானித்திரயமும் ஆகிய துவம்பத, தற்பதங்களிலுள்ள மாயாகற்பிதங்கள் அனைத்தையும்,—என்னுடை அறிவினுலே = (தம்மாற்போதித்த யுத்தியினுலேயுளதாகிய) எனது பிரஜ்ஞையினுலேதானே,—இரவிமுன் இமமே ஆக்கி = சூரியன்முன்னேபனியைப்போலவே (அபாவ) மாக்கி,—நீயும் = (துவம்பத லட்சியார்த்தமென்னும் கூடஸ்தனாகிய) நீயும்,—நானும் = (தற்பதலட்சியார்த்தமென்னும்பிரமமாகிய) நானும்,—ஏகம் என்று = (கடாகாயம், மடாகாயம்போல) ஒன்றேயென்று,—என்னுடைய ஐக்கியம்செய்ய = என்னுடைய ஐக்கியத்தை (எனக்) குபதேசித்தருள,—என்னுடைக்குரு ஆய்த் தோன்றும் ஈசனே = என்னுடைய குருமூர்த்தமா யெழுந்தருளிய ஈசனே,—இறைஞ்சினேன் = வணங்கினேன்.—எ - று.

தத்துவசமூகங்களுள் மனதை முன்னே காட்டினது, வாசிட்டத்தில்,

"பரமமா மறிவின் முன்னே புறப்படும் பொய் யாமுள்ளம் புவனவிகற் பங்களெனும் பொய்யைக் காட்டும்"

எனக் கூறியபடியே, சகல சகலர்களுக்கும் மனதேகாரணமாதல்பற்றி "எல்லாம்" என்றபதத்தால், சமஷ்டி சரீரத்திரயமுதலியவை வருவித்தாம்.

‘ எல்லாம், இரவிழுன் னிமமேயாக்கி ” என்பதால், அநர்த்தநிவிர்த்தியும், “ஐக்கியஞ்செய்ய ” என்பதால், ஆநந்தப்பிராப்தியும் குருவினுல் உளவாயின வென்பது பெற்றும். இப்பேறு குருவின் சீர்பாதவல்லபத்தாலாதலின், இதுவே குருவின் சீர்பாதவல்லபமாமென்க. “ நானும் ” என்றது, “ பிரம வித்துபிரமமே ” என்னும் சுருதியாலென்க. ஐக்கியந்தனக்கு எற்கனவே உளதாயிருத்தலான்,

“ என்னுடைய ஐக்கியம் ”—எ - ம்,

“ ஈசனிங் கருள் செய்யவந் திருக்கிற விடமிவன் றிருமேனி ”

என்னும் சுருதியால்,

“ என்னுடைக் குருவாய்த்தோன்று மீசனே ”

என்றுங்கூறினுர். [“ ஈசன் ” என்பதற்கு, ஐசுவரியசம்பன்னனென்று பொருள்.] இறைஞ்சாநின்றேன் என்றது, “ இறைஞ்சினேன் ” என்று, இறந்தகாலத்தாற்கூறினது ஜகதீசுரன் குருமூர்த்தமாய் வந்தருளியதும், கீழ்ப்போன அநந்தஜநநங்களில் யான்நிஷ்காமனுய் உபாசித்துவந்த உபாசனை யின் பெரும்பேறுமென்னுங் குறிப்பு. “ குரு ” என்பதில், “ குகாரம் ” = அஞ் ஞானம் : “ நுகாரம் ” = ஞானமாம் ; ஆகவே, ஞானத்தால் அஞ்ஞானத்தை நிவிர்த்திசெய்பவரே குருவாம் : மற்றையர் குருசத்தத்திற்கு அருகரல்லரென் றறிக. இதற்கு, உ - ம் - பிரமகீதை,

“ உண்டுபோற் றேன்று முலகெலா முண்மை யன்றெனவுணர் த்தி யெப் பொருளுங், கண்டசான் றதனைக்காட்சியதறவே கண்டிடக் கரியெனக் காட்டும், பண்டைவே தாந்த வாக்கியஞ் சொன்ன படி யிலே பரமனே டொன்றுய், விண்டிடா வண்ண முணர்த்துவான் றன்னை வியன்குரு வென்றிடும் வேதம் ”—எ - ம்,

“ காட்சியை யெல்லாங் கண்ணதாய்க் கரைத்துக் கண்ணெழிற் தொருபொரு ளில்லா, மாட்சியை யளிக்க வல்லவன் குருவா மாரி போன் மாறுவேண் டாதே, மீட்சியில் பதத்தைக் கருணையா லளிக் கும் வித்தகக் குருவனே யெவருந், தாழ்ச்சிசெய் தேத்தற் குரியதத் துவமாஞ் சங்கர னென்றிடத் தகுவான் ”—எ - ம் வரும்.

மற்றும் வருவனவற்றுற்காண்க.

குருவின் திருமேனிக்கண்ணிருந்து சாமவேதமஹாவாக்கியத்தை உப தேசிப்பதும், ஈசரனேயென்னுஞ் சுருதியின் பொருளே யறிவித்ததாம். (ச)

[குருவைவணங்கி அவராருளால்நூல்செய்புகுந்து நூலின் அதிகாரி, சம்பந் தம், விடயம், பயனென்னும் அநுபந்தசதுஷ்டய மறிந்தாலல்லாமல் விவேகிக்கு நூல்கேட்டற்கண்ணுகிகம் பிறவாதாகலின், அவற்றை இரா ண்டுசெய்யுளான் முன்னே கூறத்தொடங்கி இதில் அதிகாரியையும், விடயத்தையுங் கூறுகின்றார்.]

அந்தமு நடுவு மின்றி யாதியு மின்றி வான்போல்
சந்தத மொளிரு ஞான சற்குரு பாதம் போற்றிப்
பந்தமும் வீடுங் காட்டப் பரந்தநூல் பார்க்கமாட்டா
மந்தரு முணரு மாறு வத்துதத் துவஞ்சொல் வேனே. (ரு)

இ - ள். ஆதியும் நடுவும் இன்றி = (தனக்குத்) தோற்றமும், திதியுமில்லாமல்,—அந்தமும் இன்றி = நாசமுமில்லாமல்,—வான்போல் = ஆகாயம்போலச் (சூட்சுமமாய், வியாபகமாய், அசங்கமாய்)—சந்ததம் ஒளிரும் = சார்வகாலமும் விளங்காநிற்கும்,—ஞானசற்குருபாதம்போற்றி = ஞானமயமான *சற்குருவினுடைய சீர்பாதங்களைத்துதிசெய்து (அப்பாதாம்புஜப் பிரசாதலேசத்தால்),—பந்தமும் வீடும்காட்ட = பந்தலட்சணம் இன்னது, மோட்சலக்ஷணம் இன்னதென்று (அதிகாரிக்கு) அறிவித்தற்பொருட்டு,—பரந்த நூல் = வாதராயணர் முதலிய பூர்வாசாரியரால் அருளிச்செய்யப்பட்டுள்ள சூத்திரம், பாடியம், வார்த்திக முதலிய) வேதாந்தநூல்களை,—பார்க்கமாட்டா மந்தரும் = விசாரித்தறியச் சாமர்த்தியமின்றிய மந்தபுத்தியுடைய வதிகாரிகளும்,—உணரும் ஆறு = (அப்பந்தமோட்சசொரூபங்களையெளி) தறியும்படி, —வத்துதத்துவம் சொல்வேன் = வஸ்துவின் உண்மையை (இந்நூலின்கட்) சொல்லுவேன்.—எ - று.

"மந்தர்" = இந்நூலின் அதிகாரி. "வத்துதத்துவம்" = இந்நூலின் விடயம்; "வத்து" = சிவபிரமங்கள்; "தத்துவ" = அவைகளின் ஏகத்துவம்.

(28) சகலபிராணிகளின் அந்தக்கரணத்துள்ள † மலம், விட்சேபம், ஆவரணம் என்னும் மூவகைத் தோடங்களுள்ளே நிட்காமகர்மானுட்டானத்தால் மலதோடமும், உபாசனையால் விட்சேபதோடமும், ஞானத்தால் சொரூபாவரணரூபமான அஞ்ஞானதோடமும் நீங்காநிற்குமென்று கூறியிருப்பதால், நிட்காமகருமத்தால் மலதோடமும், உபாசனையால் விட்சேபதோடமும் நீங்கி ஓரஞ்ஞானதோடமாத்திரத்தோடு கூடி நான்கு சாதனங்களையுமுடைய புருடரே இந்நூற்கதிகாரிகளாம்.

(29) பிரதிபாதனம் பண்ணப்படுவதுயாது? அதுவிடயமெனப்படும். இந்நூலின்கண்ணே சிவபிரமங்களின் ஏகத்துவம் பிரதிபாதனஞ்செய்திருத்தலின், அவ்வேகத்துவமே இந்நூற்குவிடயமாம்.

"மந்தரும்" என்பதில், உம்மை இழிவுசிறப்பாய்க் கூரியமதியுடைய வனையோரும் என எதிரது தழீஇ நின்றது.

"மந்தரு முணரு மாறு வத்துதத்துவஞ்சொல் வேன்"—

என்பதன் கருத்து, பூர்வாசாரியரான வாதராயணர் முதலியோரால் செய்வவாணியால் வெகு யிரந்தங்கள் முன்னமே அருளிச்செய்யப்பட்டிருக்க, நீர் நூதனமாகச் செந்தமிழ்ப்பாஷையா லியற்றும் நூலானது நிட்பலமாமென்று வரும் ஆசங்கையைப்பற்றித் தெய்வவாணியாலுள்ள அந்நூல்களாற் கூரிய

* சற்குரு = சத்துபதேசஞ் செய்பவர். † மலம் = பாவம்.

மதியுடையோர்க்கே போதம் உளதாம். மந்தபுத்தியுடையோர்க்குப் பாஷர் கிரந்தங்களல்லாமல் அந்நூல்களால் போதம் உளதாகாதென்பது துணிவாதலால், நூதனமாக விந்நூலாரம்பிப்பது சபலமாமென்பது. (ரு)

[ஆனால், சேந்தமிழ்ப்பாஷையினும் பிரபந்தங்கள் அநேக மிருத்தலின், நீர் நூதனமாகச்செய்வதில் விசேட மின்மையின் இது நிட்பிரயோஜனமா மென்றசங்கித்துத் தாம் நூதனமாகச் செய்யப் புகுகநூலின் விசேடத்தைத் தெரித்துணர்த்துகின்றார்.]

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடன் மொண்டு முன்னூற்
குடங்களி னிறைத்து வைத்தார் குரவர்க ளெல்லாங் காய்ச்சிக்
கடைந்தெடுத் தளித்தே னிந்தக் கைவல்யநவநீ தத்தை
அடைந்தவர் விடய மண்டின் றலைவரோ பகியிலாரே. (சு)

இ - ள். படர்ந்தவேதாந்தம் என்னும்=(அனேகமாய்) விரிந்துள்ளஉபநிஷத்துக்க ளென்றுகூறும்,—பாற்கடல் மொண்டு=பாற்கடலில்முகந்து,—முன் நூல் குடங்களில்=(சூத்திரம், பாஷியம், வார்த்திகமுதலிய) புராதன கிரந்தங்களென்னுங் குடங்களில்,—நிறைத்துவைத்தார்=பூரித்து வைத்தார்கள்,—குரவர்கள் எல்லாம்=(வாதராயணர் முதலிய) பூருவாசாரியர்களெல்லாம்,—காய்ச்சி=(உபநிஷத்து வாக்கியங்களென்னும் அப்பால்களைச் சற்குரு சந்நிதித்தியிற்) காய்ச்சி,—கடைந்து=எனதநுபூதிமத்தான் மதநஞ் செய்து,—எடுத்து அளித்தேன்=(திரட்டி) எடுத்துக்கொடுத்தேன்,—இந்தக்கைவல்ய நவநீதத்தை=இக்கைவல்ய நவநீதமென்னும் ஞானநூலினை,—அடைந்தவர்=இதனை யநுபூதியளவிற் பெற்றோர்,—விடய மண்டின்று=(சாரமற்ற) விடயமாகிய மண்ணையுண்டு,—அலைவரோ=(அவ்விடயவாசனையான் மீண்டும், மீண்டும் ஜநநமரணங்களையடைந்து) வருந்துவரோ (வருந்தார்) என்னை ?—பகியிலார்=திருப்தராகலின்.—எ - று.

அர்த்தகெம்பீரத்தால் அளத்தற்கரிதாகலானும், பரிபூரணபரமானந்தரூபமான சீதளத்தைப் பயத்தலானும், அமலமாயும், அற்புதமாயுமிருத்தலானும் வேதாந்தத்தைப், "பாற்கடல்" எ - ம், பூர்வாசாரியராகிய வாதராயணர் முதலியோர் தாம் உபதேசிக்கும் வகைக்கேற்கத் தமக்கு வேண்டியவாக்கியங்களை அங்கங்கே எடுத்துக்கொண்டதை, "மொண்டு" எ - ம், அவ்வாக்கியங்களை நூலாகப்பூர்த்திசெய்ததை, "முன்னூற்குடங்களில் நிறைத்து" எ - ம், அப்புராதன கிரந்தங்களை இவ்வாசாரியர் குருமுகமாக வாராய்ந்து அவற்றில் இன்னது பூர்வபட்சம், இன்னது சித்தாந்தம் எனத் தாம்தேர்ந்ததை, "காய்ச்சி" எ - ம், சித்தாந்தத்திலும் * ஆக்யாயிகை † ஆக்யான முதலியவற்றை ஒழித்துச் சாராம்சமான பிரகரணார்த்தங்களைத் தமது அநுபவ பலங்கொண்டு பலபடவிசாரித்ததை, "கடைந்து" எ - ம், பிரமாண்மவைக்கிய

* ஆக்யாயிகை=பிரத்தியட்ச தடத்தசத்தார்த்தம்.

† ஆக்யானம்=பரோட்சவிருத்தாந்தம்.

ஞானத்திற்கு முக்கிய உபயோகிகளான பதார்த்தங்களைத் தமது மனதிலே தாரணைசெய்ததை, "எடுத்து" எ - ம், அவைகளைப்பத்தியரூபப் பிரபந்த மாகச் செய்ததை, "அளித்தேன்" எ - ம் இக்காரணத்தான் இந்நூற்குக் கைவல்லிய நவநீதமென நாமமிட்டேமென்பார் * "கைவல்ய நவநீதத்தை" எ - ம், இதைக் குருமுகமாகவே கேட்டு அநுபூதிபெற்றவர் செய்யத்தக்கவை யெல்லாஞ் செய்து, அடையத்தக்கவையெல்லாம் அடைந்தேம் என்னும் அமைதிரூபமான நிரங்குசதிருப்தராய்ச் சம்சாரவனர்த்தத்தினின்றும் முத் தராவர் என்பார், "விடயமண்டின் றலைவரோ பசியி லாரீ" என்றுங்கூறி னர். "எடுத்தளித்தேன்" எ - து, சம்பந்தம். "விடயமண்டின் றலைவரோ பசியி லாரீ" எ - து, அநர்த்தநிவிர்த்தி, ஆநந்தப்பிராப்திரூபமான இந்நூலின் பயன்.

(30) கிரந்தத்திற்கும், விடயத்திற்கும் பிரதிபாத்திய, பிரதிபாதகபாவ சம்பந்தம். கிரந்தம், பிரதிபாதகம்; விடயம், பிரதிபாத்தியம்; யாது பிரதி பாதனஞ் செய்வதோ! அது பிரதிபாதகம்: யாது பிரதிபாதனஞ் செய்ய யோக்கியமாமோ! அது பிரதிபாத்தியமாம். அதிகாரிக்கும், பலத்திற்கும் பிராப்பிய, பிராபகபாவசம்பந்தம். பலம், பிராப்பியம்: அதிகாரி, பிராபகன்; யாதொன்று பிராப்தமாமோ! அது † பிராப்பியம்: எவனுக்குப் பிராப்த மாமோ! அவன் ‡ பிராபகன் அதிகாரிக்கும், விசாரத்திற்கும் கர்த்திரு, கர்த் தவ்வியபாவசம்பந்தம். அதிகாரி, கர்த்தா: விசாரம், கர்த்தவ்வியம்; செய் பவன் யாவன், அவன் கர்த்தாவாம். யாது செய்யயோக்கியமாமோ! அது கர்த் தவ்வியமாம். கிரந்தத்திற்கும், ஞானத்திற்கும் ஜந்நிய ஜநகபாவசம்பந்தம்: விசாரவாயிலாகக் கிரந்தம், ஞானத்திற்கு ஜநகமாம். ஞானம், ஜந்நியமாம்: உற்பத்திபண்ணுவது யாது! அது ஜநகமாம். யாது உற்பத்தியாமோ! அது ஜந்நியமாம். இவைமுதலான சம்பந்தங்கள் இன்னும் அநேகம் உள.

(31) பிரபஞ்சத்திற்குக் காரணமான அஞ்ஞானமும், பிரபஞ்சமும் ஜநந மரணரூபமான துக்கத்திற்கேதுவாகலின், அவை அனர்த்தமாம்; ஆகவே, அவ்வனர்த்தநிவிர்த்தியும், பரமாநந்தப்பிராப்தியும் மோட்சமெனப்படும்; இதுவே, கிரந்தத்திற்குப் பரமப்பிரயோஜனமாம்: அவாந்தரப்பிரயோஜனம் ஞானமாம். யாதொன்றனிடத்துப் புருடனுக் கபிலாஷையுண்டாமோ? அது பரமப்பிரயோஜனமாம்; அதனையே புருஷார்த்தமென்ப; அவ்வபி லாஷை துக்கநிவிர்த்தியிலும், சுகப்பிராப்தியிலும் சர்வபுருடருக்கும் உள தாம்; அதுவே மோட்சத்தின் சொரூபமாம். ஆகவே, பரமப்பிரயோஜனம் மோட்சமாம்: ஞானம் அன்று. என்னை? ஞானம் சுகப்பிராப்திக்கும், துக்க நிவிர்த்திக்கும் சாதனந்தான்; ஆயினும், ஞானம் சுகப்பிராப்தி, துக்கநிவிர்த்தி ரூபமானதன்று; இதனுன் ஞானம் அவாந்தரப்பிரயோஜனமாம்; யாதொரு வத்துவின்வாயிலாகப் பரமப்பிரயோஜனம் பிராப்தமாமோ அது அவாந்தரப் பிரயோஜனமெனப்படும்; அப்படிப்பட்டது ஞானம். என்னை? கிரந்தத்தி னல் ஞானவாயிலாக மூத்திரூபமான பரமப்பிரயோஜனம் பெறப்படுதலின்,

---

* "கைவல்ய நவநீதம்" என்பது, கைவல்லியத்தை ஞானவாயிலாகப் பயக்கத்தக்க நவநீதம்போன்றதுஎன இரண்டாம் வேற்றுமை உருபும், பொரு ளும் உடன்றொக்க தொகையாய் நூற்கு உவமவாகு பெயரென்னும் காரணக் குறியாயிற்று. "கைவல்லியம்" = மோக்ஷம். "நவநீதம்" = வெண்ணெய்.

† பிராப்பியம் = பேறு. ‡ பிராபகன் = பெறுபவன்.

ஞானம் அவாந்தரப்பிரயோஜனமாம். இவ்வாறான சம்பந்த, பிரயோஜனாதிகளை இவ்வாசிரியர் இரண்டுசெய்யுளாற் றொகுத்துக் கூறினர்.

சொல்லிய உருவகத்தால், இந்நூலானது சகலவேதாந்தசாஸ்திரார்த்த சாராம்சங்களையும் சூத்திரம்போலச் செய்யுளுள்ளே அடக்கிக்கொண்டிருப்பதென்பதும், ஓரிடத்திலாவது வேதாந்தசாஸ்திரத்திற்கு விரோதமில்லாததென்பதும், ஞானத்திற்கு முக்கிய உபயோகிகளான பதார்த்தங்களைப் பிரதிபாதிப்பதென்பதும், ஏனைய பாஷாகிரந்தங்களோடு இணையானதன்று சர்வ பாஷாகிரந்தங்களினும் உத்தமோத்தமமாம் என்பதும் பெற்றாம். (சு)

[இந்நூலின் படலவகை கூறுகின்றார்.]

முத்தனை வேங்க டேச முகுந்தனை யெனையாட் கொண்ட
கர்த்தனை வணங்கிச் சொல்லுங் கைவல்ய நவநீ தத்தைத்
தத்துவ விளக்க மென்றுஞ் சந்தேகந் தெளித லென்றும்
வைத்திரு படல மாக வகுத்துரை செய்கின் றேனே. (எ)

இ - ள். முத்தனை = சம்சாரபந்தம் விடுபட்டவனை,—வேங்கடேச முகுந்தனை = வேங்கடமென்னு மலைக்கிறைவனான திருமாலை,—எனை ஆள்கொண்ட கர்த்தனை = என்னை அடிமைகொண்ட கருத்தனை,—வணங்கிச் சொல்லும் = (என்மயமாக) வணங்கிச்சொல்ல எடுத்துக்கொண்ட,—கைவல்லியநவநீதத்தை = கைவல்லியநவநீதமென்னும்பெயரையுடைய இந்த ஞானநூலினை, தத்துவவிளக்கம் என்றும் சந்தேகம் தெளிதல் என்றும்,—இரு படலமாக வகுத்துவைத்து = இரண்டுபடலமாகப் பிரித்துவைத்து,—உரை செய்கின்றேன் = சொல்கின்றேன்.—எ - று.

"ழ" எ - து, முத்தி: "த" எ - து, புத்தி: இவைகளை முறையே ஞானிகட்கும், பத்திமான்கட்குங் கொடுப்பவன், "முதுந்தன்" ஆம். "முத்தன்" எ - து, விடுபட்டவனென்னுஞ் சுருதியால் சுபாவமாகச் சமுசாரபந்தம் இவனுக்குச் சர்வாத்மநா இல்லை; இதனால், "முத்தன்" யாதொரு சகாயமும் அபேட்சியாமல் பிரபஞ்ச சிருட்டியைச் சுதந்தரனாகச் சுவேச்சையினாலே பண்ணுகின்றமையால், கர்த்தாவாம்; இங்ஙனம் விஷ்ணுசகஸ்திரநாம பாஷ்யத்திற் கூறியிருக்கின்றனர். நாராயண தேசிகனென்னும் நாமத்திற்கியைய "வேங்கடேசமுகுந்தன்" என்றார். குருவருளுடையோர்க்கே சகல சுருதிப் பொருள்களும் உள்ளவாறு தோன்றுமாகலான், "எனையாட்கொண்ட கர்த்தனை வணங்கிச் சொல்லும்" என்றார். இதனால் குருவினது கிருபாபலங்கொண்டு இந்நூல் சொல்லுகின்றேனல்லாமல் எனது புத்தி வலிகொண்டு சொல்லவில்லையென்பது குறிப்பு.

இங்ஙனங்கூறியது அவையடக்கம்.

சிவபிரமங்களின் ஐக்கிய ஞானத்தைப் பிரகாசிப்பித்தலால் முதற்படலத்திற்கு, "தத்துவவிளக்கம்" எ - ம், அதன்கண்ணுளவாகும் சந்தேகங்களைத் தெளிவித்தலால் இரண்டாம்படலத்திற்கு, "சந்தேகந்தெளிதல்" எ - ம் நாமஞ்சூட்டினர். "படலம்" = கிரந்தபேதம்; அதாவது நூலினுட் பிரிவு. (எ)

பாயிரம் முற்றிற்று.

கணபதிதுணை.

சிவமயம்.

கைவல்லிய நவநீதம்.

முதலாவது,

தத்துவவிளக்கப்படலம்.

[குருசீட சம்வாதரூபமாக அர்த்தநிரூபணஞ் செய்வதால் அநாயாசமாகப் போதம் உண்டாமாகலின், அங்ஙனம் இந்நூல் நுவலத்தொடங்கி இதுகேட்கும் அதிகாரிக்குரிய சாதனங்களை இங்கே கூறுகின்றார்.]

(32) நித்திய வநித்தி யங்க ணிண்ணயந் தெரிவி வேகம்
மத்திய விகப ரங்கள் வருபோகங் களினி ராசை
சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதியென் முறுகூட்டம்
முத்தியை விரும்பு மிச்சை மொழிவர்சா தனமிந் நான்கே. (அ)

இ - ள். நித்திய அநித்தியங்கள் = நித்தியா நித்தியவஸ்துக்களினுடைய,—நிண்ணயம்தெரி விவேகம் = நிச்சயமானதன்மையை அறியாநிற்கும் விவேகமும்,—மத்திய இகபரங்கள் = மத்தியமான இகலோகபரலோகங்களில்,—வருபோகங்களில் நிராசை = (முறையே கருமஜந்நியமாய்) வருகின்ற (மாலை, சந்தனமுதலியனவும் அப்சரஸ்திரீ, அமுதமுதலியனவும் ஆகிய) போகங்களில் விராகமும்,—சமாதி ஆறுகூட்டம் = சமாதிசட்கசம்பத்தியும்,—முத்தியை விரும்பும் இச்சை = மோட்சத்தையடைய விரும்பாநிற்கும் இச்சையும்,—(ஆகிய) இந்நான்கே,—சத்தியம் உரைக்கவேண்டும் = உண்மையாக (அதிகாரிக்குரியனவாகக்) கூறத்தக்க,—சாதனம் என்று மொழிவர் = சாதனமாமென்றுசொல்லுவர் பெரியோர்.—எ - று.

"நித்தியம்" = ஆன்மா. "அநித்தியம்" = தேகாதிப் பிரபஞ்சம். "நிண்ணயம்" = ஆன்மா நாசமின்மையதும், கிரியையின்மையதுமாம், பிரபஞ்சம் நாசமுடையதும், கிரியையுடையதுமாம் என்னுந்தன்மை; இவைகளின் பகுத்தறிவு, "விவேகம்." இகலோக பரலோகங்களிலுள்ள போகங்களில் அநித்தத்துக்காதி தோடதரிசனத்தால் வாந்தாசன மூத்திர புரீஷங்களிற்போல அருவருப்புற்று ஆசைவிடுவதே, "இகாமுத்தார்த்த பலபோகவிராகம்." சமமுதலிய ஆறின் பிராப்தியே, "சமாதிசட்கசம்பத்தி." பிரமப்பிராப்தி

யும், அனர்த்த நிவிர்த்தியும் மோட்சத்தின் சொரூபமாகலின், இவற்றின் கண்ணுளதாகும் இச்சை, "முழுட்சுத்துவம்." சமமுதலிய ஆறையும் ஒரு சாதனமாக எண்ணியிருப்பதால் சாதனம் ஒன்பதல்லவென்பார், "நான்கே" எனத்தேற்றங் கொடுத்தார். "சத்தியி னுரைக்கவேண்டும்" எ - து, பாடமாயின், வைராக்கியமும் சரீரவலியினளவு கூறவேண்டுமென்று பொருளுரைத்துக்கொள்க. சாதன நான்கனுள்ளே முன்னர் விவேகத்தைச்சொன்னது, முன்னே விவேகம் உளதாயிற்றான் பின்னர் வைராக்கியாதி உத்தர சாதனங்கள் உளவாம்; அஃதுளதாகாதேல் உத்தரசாதனங்களுளவாகாவாகலின் என்க. (அ)

[சமாதிசட்கங்களின் நாமமும், அவைகளின் இலக்கணமுங்கூறல்.]

சமந்தமம் விடல்ச கித்தல் சடாதானஞ் சிரத்தை யாரும்
சமமகக் கரண தண்டந் தமம்புறக் கரண தண்டம்
அமர்தரு கருமம் பற்று தறுத்தலே விடலென் றுகும்
மமர்செயுங் காம மாதி வினடக் குதல் சகித்தல். (கூ)

இ - ள். சமம் தமம் விடல் சகித்தல் சமாதானம் சிரத்தை = சமம், தமம், உபரமம், திதீட்சை, சமாதானம், சிரத்தை (எனும்இவை,—ஆறு ஆம் = ஆறன் நாமமாம்,—[இனிச் சமமுதலிய நான்கன் இலக்கணம்.] சமம் = சமமாவது,—அகக்கரண தண்டம் = அந்தக்கரணத்தைத் தண்டித்து விடயங்களினின்றுந் தகைதலாம்,—தமம் = தமமாவது,—புறக்கரணதண்டம் = வாகிய கரணங்களைத் தண்டித்துச் சத்தாதி விடயங்களினின்றுந் தகைதலாம்,—அமர்தரு கருமம் பற்றுது அறுத்தலே = (ஸ்திரீ, தனம், சாதியபிமானமுதலிய * சாமக்கிரிகளோடு) பொருந்திய சகல கருமங்களையும் பரித்யாமற்றியாகஞ் செய்தலே,—விடல் என்று ஆகும் = உபரமமென்று சொல்வதாம்,—சகித்தல் = திதீட்சையாவது,—மமர் செயும் காமம் ஆதிவினின் = மயக்கத்தைச்செய்யுங் காமமுதலியவை (பூருவ வாசனையினுல் அந்தக்கரணத்தில்) எழுமாயின்,—அடக்குதல் = (விவேகத்தினுல் அவற்றை விரியவிடாமல்) அடங்கச்செய்வதாம்.—எ - று.

வெய்யில், சீதம், பசி, தாகமுதலியவற்றைச் சுபாவமாகச் சகித்தலே, "திதீட்சை" என்றுங் கூறுவர். மம்மர் எனர்பாலது, தொடைநோக்கி, "மமரீ" எனத் தொக்குநின்றது. (கூ)

[சமாதான, சிரத்தைகளின் இலக்கணம்.]

சிரவணப் பொருளைத் தானே சித்தஞ்சிந் திக்கு மாறு
சரதமா வைக்கு மித்தைச் சமாதான மென்பர் மேலோர்
பரமசற் குருநூ லன்பு பற்றலே சிரத்தையாகும்
வரமிகு சமாதி யாறு வகையின் சொற் பொருளி தாமே. (கo)

* சாமக்கிரி = சாதனம்.

இ - ள். சித்தம் = (விடயங்களினின்றுந் தகையப்பட்ட சித்தமானது,— சிரவணப்பொருளேத்தானே = (பெரியோர்களிடத்திற்) கேட்டஞான சாஸ்திரார்த்தங்களேயே,—சிந்திக்கும் ஆறு = (அநுபவத்திற்குவரச்) சிந்திக்கும்படி,— சாதமாவைக்கும் இத்தை = உள்ளபடிவைக்கும் இதனே,—சமாதானம் என் பர்மேலோர் = சமாதானமென்று சொல்லுவர் பெரியோர்,—பரம சற்குரு நல் அன்புபற்றலே = உத்கிருஷ்டமான ஞானுசாரியராலும், ஞான சாஸ்திரங்களாலும் (உபதேசிக்கபட்ட வாக்கியங்களில் இவை சத்தியமாமென்று) விசுவாசம் வைத்தலே,—சிரத்தை ஆகும்,—வரம் மிகு = சிரேஷ்டமிக்க,— சமாதி ஆறுவகையின் = சமமுதலிய ஆறு வகைகளின்,—சொற்பொருள் இது ஆம் = மொழிப்பொருளிவையேயாம்.—எ - று.

சமதமாதி சாதனமுடையவனே அதிகாரியென்று சாஸ்திரங்களில் ஆங்காங்கு எடுத்து வர்ணித்திருத்தலால், "வரமிதுசமாதி" எ - ம், விடயத்தினின்றுமீட்ட மனத்தை ஓர்போதும் விட்சேப மடையவிடாமல் என்னும் பொருடோன்ற, "சிரவணப் பொருளேத்தானே" என்றுங் கூறினர். (கo)

[சொல்லிப்போந்த சாதனங்களின் பயனே விதிமுகத்தானும், எதிர்மறை முகத்தானும் உணர்த்துகின்றார்.]

சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லே
ஆதலா லிந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண் டாகும்
நூதன விவேகி யுள்ள நுழையாது நுழையு மாகில்
பூதசன் மங்கள் கோடி புனிதனும் புருட னீமே. (கக)

இ - ள். சாதனம் இன்றி = (எழுத்தாணி, மண்வெட்டிமுதலிய) சாதனங்களில்லாமல்,—ஒன்றை = (எழுதுதல், மண்வெட்டுதன் முதலிய காரியங்களுள்) ஒருகாரியத்தை,—சாதிப்பார் = செய்துமுடிக்கவல்லோர்,—உலகில் இல்லே = உலகின்கண் (ஒருவரும்) இல்லே;—ஆதலால் இந்தநான்கும் அடைந்தவர்க்கு = ஆகையால் விவேகம், விராகம், சமாதிசட்கசம்பத்தி, முமுட்சுத்துவம் என்னும் இந்நான்கு சாதனங்களேயும் (அவதிபரியந்தம்) பெற்றோர்க்கே,—அறிவு உண்டாகும் = பிரமான்ம வைக்கியஞானம் (* பிரதிபந்தமின்றி) உண்டாம்,—நூதன விவேகி உள்ளம் நுழையாது = புதிய விவேகியின் உள்ளமானது (ஞானவழியிற்) செல்லாது,—நுழையும் ஆகில் = செல்லுமாயின்,—(அவன்) பூதசன்மங்கள் கோடி = கீழ்ப்போன அநந்தஜந்மங்களில்,—புனிதன் ஆம் புருடன் ஆம் = (நிஷ்காம கர்மங்களே அநுட்டித்து வந்ததால்) அந்தக் காரணசுத்தியை யுடையவனென புருடனும்.—எ - று.

நான்கும் என்னும் முற்றும்மை, அவைகளிலொன்று குறையினும் ஞானம் பலியாதென்பதை விளக்கிநின்றது. சற்சங்க சகவாசத்தால் வெகு காலந் தொடுத்துச் சாதனங்களே யநுட்டித்து வாராமையால், தீவிர வைராக்கியாதி சாதனங்களின்றிச் சன்மாந்தர புண்ணியத்தாலுண்டான மந்தஞ்

* பிரதிபந்தம் = சமுசயவிபரீதங்கள்.

ஞாசையினுற் குருவை யடைந்து ஞானம் கேட்கும் புதிய விவேகிக்கு அவர் தயையினு லுபதேசிப்பினும், அவன் உள்ளமானது அவ்வுபதேசவழியிற் சென்று பிரமான்மவைக்கிய ஞானத்தைப் பிரதிபந்தமின்றி அடையமாட் டாது என்பார், "நூதன விவேகி யுள்ள நுழையாது" என்றார். "இந்த நான்து மடைந்தவர்க் கறிவுண்டாதும் நூதன விவேகியுள்ள நுழையாது" என்பதற்கு, உ - ம் - அத்துவிதவுண்மை.

"மேலாஞ் சதுட்ட சாதனங்கண் மேவி நிறைந்த பேர்க்குரைக்கின்
மேலா மதுநா மெனத்திடமாய் விளங்கு மவையில் லாதவர்க்கு
மேலாம் பரமன் மான்மழுவாய் விளங்கியுரைத்தும் விளங்காது
மேலாஞ் சாத னங்கள்வர மேவவேண்டுஞ் சா துசங்கம்"—எ - ம்,

வரசிட்டம் -

"தியக்குறுபோ கத்தாசை தீர்ந்துபுந்தி தெளிந்தவுணப்போல்
வார்க்கே திகழத்தோன்றும்"—எ - ம் வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

[தீவிரமான வைராக்கியாதி சாதனநந்தரம் அதிகாரியின் செய்கையைக் கூறுகின்றார்.]

இவனதி காரி யாஞை னிந்திரி யங்க ளாலும்
புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலும்
தவனமூன் றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்
பவமறு ஞான தீர்த்தம் படிந்திடப் பதறி ஞனே. (கஉ)

இ - ள். இவன் அதிகாரி ஆஞன் = இச்சாதன சதுட்டய சம்பன்னனே (இந்நூல்கேட்டற்குரிய) அதிகாரியாம்,—இந்திரியங்களாலும் = அத்தியான் மிகத்திஞனும்,—புவன தெய்வங்களாலும் = புவனத்திற்குரிய தெய்வங்களினுலும்,— பூதபௌதிகங்களாலும் = பூதகாரியங்களாலும், — தவனம் மூன்று அடைந்து = (உளவாகும்) தாபத்திரயமென்னும் அக்னியையடைந்து,—வெய்யில் சகித்திடாப்புழுபோல் = வெய்யலின் (ரூபத்தைச்) சகிக்கமாட்டாதபுழுவைப்போல,—வெம்பி = வாடி,—பவம் அறும் = சம்சார (தாபம்) ஒழிதற்கேதுவாகும்,— ஞானதீர்த்தம் படிந்திட = சுவான்ம தீர்த்தத்தின் கண்ணே மூழ்க,—பதறிஞன் = விரைந்தனன்.—எ - று.

பிராமணதிவருணம், பிரமசரியாதி ஆச்சிரமங்களுள்ளே இவ்வருணத்தன், இவ்வாச்சிரமத்தன் இந்நூற்கு அதிகாரியென்னுமியமமின்று; எவ்வருணத்தனுயினும், எவ்வாசிரமியாயினும் விவேகாதி சாதனசம்பன்னனே அதிகாரியாமென்பது தோன்ற, "இவனதிகாரியாஞன்" என்றார். இது, இந்நூலின் அந்தத்தில் விரித்து உரைக்கப்படும்.

(33) வியாதி, பசிமுதலானவைகளால் உண்டாகுந் துக்கம். அத்தியாண்மிகதுக்கம். இயக்க, இராக்கத, பிரேத, கிரகாதிகளாலும், சீத, வாத,

ஆதபங்களானும் உண்டாகாநிற்குந்துக்கம், அதிதெய்வதுக்கம். சோர, வியாக்கிர, சர்ப்பாதிகளால் உண்டாகுந்துக்கம், அதிபூததுக்கம். இவ்வதிகாரிமந்தன், மத்திமன், உத்தமன் என்னும் இம்மூவர்க்கும் மேலான உத்தமோத்தமஞதலால், "வெய்யிற் சகித்திடாப் புழப்போல் வெம்பி" என்றார். அம்மூவரோவெனின்? வெய்யிலைத் தாரதம்மியமாகச் சகிக்கும் எருமை, பறவைக்குஞ்சு, நீர்ப்பாம்புகள்போலத் தாரதம்மியமாகச் சகிப்பரென்க.

(34) விவேகாதி நான்கு சாதனங்களையும் ஏதுமாத்திரமாகவுடையவன் மந்தன், சொரூபபரியந்தமுடையவன் மத்திமன், காரியபரியந்தமுடையவன் உத்தமன், அவதிபரியந்தமுடையவன் உத்தமோத்தமன் என்றறிக; இதனை, அத்வைதபோத தீபிகையிற்காண்க. ஆன்ம அஞ்ஞானத்தினால் உண்டாகிய துக்கம் ஆன்மஞானத்தினாலேயே நிவிர்த்தியாவதால், "பவமறு ஞான தீர்த்தம்" எ-ம், அத்தியந்த துக்க நிவிர்த்தியும் பிரதிபந்தரகிதமான ஆருட ஞானத்தினாற் முனே உண்டாகத் தக்கதாகலின், "படிந்திட" என்றுங் கூறினார்.

"பதறினன்" எ-து, சம்சாரதுக்கம் நமக்கு எதனால் வந்தது? எதனால் நிவிர்த்தியாம்? இதன் நிவிர்த்தியுபாயத்தை உபதேசிக்க வல்லபெரியோர் யாவர்? அவர் எங்குளர்? அவரை எவ்வாறடைவேம் என்றடிக்கடி விசாரிப்பதையென்க.

"பதறினன்" எ-கு, உ-ம்-அஞ்ஞவதைப்பரணி.

"தெருளு றுங்கலை பலவு ணர்ந்தொரு சிறித லம்பிறவா வருளு றுங்குரு பரனி ருந்திட மறிய வென்றெழுமே" என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஉ)

[தீவிரசிஞ்ஞாசையினநந்தரம் அதிகாரியின் வியவகாரத்தைச் சொல்லுகிறார்.]

(35) ஆனபின் மனைவி மக்க ளர்த்தவே டணைகண் மூன்றில்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடு மான்போல
போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணஞ் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்றுக வணங்கி னானே. (கஙு)

இ-ள். ஆனபின்=இவ்வாறான தீவிரசிஞ்ஞாசையினநந்தரம்,—மனைவி மக்கள் அர்த்த ஏடணைகள் மூன்றில்=தாரம், புத்திரர், தனமென்னும் ஏடணைத்திரயங்களி னின்றும்,—கானவர் வலையில் பட்டு=வேடர்களுடைய வலையி லகப்பட்டு,—கைதப்பி ஓடுமான்போல்=(அவ்வலையைக் கிழித்துக் கொண்டு அவர்கள்) கையிலகப்படாமல் ஓடா நிற்கும் மானைப்போல,—போனவன்=(துறந்து சற்குருவைத் தேடிப்போன அதிகாரியானவன்,—வெறும் கையோடே போகாதவண்ணம்=வெறுங்கையோடே போகாதபடி,-சென்று=(காதலத்திற் பத்திர, புஷ்ப, பலாதிகளைக்கொண்டு) சென்று,—ஞானசற்

குருவைக்கண்டு = ஞானுசாரியரைத் தரிசித்து,—நன்றுக வணங்கினேன் = (அவர்க்குச்) சந்தோஷமுண்டாகப் (பத்திர, புஷ்பாதிகளால் திருவடியில் அர்ச்சித்துப் பன்முறைவலம்வந்து) பணிந்தனன்.—எ - று.

ஏடணை = விருப்பம்; அது விரும்பப்படு பொருள்களுக்கு ஆதபெயராயிற்று. "மான்போற் போனவன்" என்று மானை உவமானமாகச்சொன்னது, இங்ஙனந் துறந்தோனுக்குக் குடும்பத்தின் கண் மீட்டு எண்ணம் எழாமையின் என்க. "ஞானசற்குரு" எ - து, ஆசாரியர் இலக்கணம். "ஞான சற்குருவைக் கண்டு" என்றதால் சரியை, கிரியை, யோகங்களை உபதேசிப்பவரும், உதாரநிமித்தம் பொருள் விழைவான் ஞானியென்று பெயரிட்டுக் கொண்டிருப்பவரும் ஆகிய அநாசாரியரைவிட்டென்பது அருத்தாபத்தியாற் பெற்றும். "வணங்கினேன்" எ - து, குருசேவை; சேவையினுலேதான் உபதேசரூபமான திருஷ்டபலத்திற் கேதுவாகிய சந்தோஷங் குருவுக்குளதாகுமென்று அறிஞர்கூறுவதால், "நன்றுக" என்பதற்குச் சந்தோஷமுண்டாகவென்று பொருளுரைக்கப்பட்டது. இதற்குத் திரிகாணசுத்தியாகவென்று பொருள் கூறுவாரும் உளர். குருசேவை ஆத்தம், அங்கம், தானம், சற்பாவம் எனநான்காம்; இவைகளை "வேதாந்தசூடாமணியிற்" காண்க. விரிவாய் அறியவேண்டில் விசாரசாகரகிரந்தத்தின் முன்றாந்தாங்கத்திற் கண்டாவது, கேட்டாவது அறிக. (கஉ)

[சேவையினுற் குருவைச் சந்தோஷிப்பித்துத் தனது துறையிரத்தல்.]

வணங்கினின் றழுது சொல்வான் மாயவாழ் வெனுஞ்சோ கத்தால்
உணங்கினே னைய னேயென் னுள்ளமே குளிரும் வண்ணம்
பிணங்கிய கோச பாசப் பின்னலைச் சின்ன மாக்கி
இணங்கிய குருவே யென்னை யிரட்சித்தல் வேண்டு மென்றான். (கச)

இ - ள். வணங்கினின்று அழுதுசொல்வான் = பணிந்து (எழுந்து இருகரங்கூப்பி) நின்று இரங்கி விண்ணப்பஞ்செய்வான்,—மாயவாழ்வு எனும் சோகத்தால் = பொய்யான சம்சார வாழ்வென்னுந் துக்கத்தினுல்,—உணங்கினேன் = (யான் அநேக காலமாக) வாடினேன்,—என் உள்ளம் குளிரும்வண்ணம் = என்னுடைய அந்தக்கரணம் சீதளமாகும்படி—பிணங்கிய = (ஒன்றினுள் ஒன்றுக) நெருங்கிய—கோசபாசப் பின்னலை = பஞ்சகோசங்களில் (யான், எனது எனவெழும்) அபிமானரூபமான பந்தத்தை—சின்னம் ஆக்கி = நாசமாக்கி—இணங்கிய = (தக்கிகளான என்போலிகளை இரட்சிக்கக் கருணையே திருவுருவாகப்) பொருந்திய—ஐயனே குருவே = (எனது) பிதாவாகியஆசாரியரே,—என்னை இரட்சித்தல்வேண்டும் என்றான் = நாயேனைக் காத்தருளல் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான்.—எ - று.

[சின்னமாக்கி, இரட்சித்தல்வேண்டும் எனக்கூட்டுக.]

உள்ளம், சம்சாரவபிமானத்தினுல் அடைந்துள்ள துக்கம் அதனோடு சம்பந்தத்தாற் றனக்கு வந்ததாகலான், அது சீதளமாகிற்றனுஞ் சீதளமாகலாமென்னுங் கருத்தினுல், "உள்ளமேதுளிரும் வண்ணம்" என்றான். (கச)

[குறையிரந்த சீடனுக்கு ஆசாரியர் செய்த அருளினை இனிக்கூறுகின்றார்.]

(36) அன்னதன் சிசுவை யைய ஞமைமீன் பறவை போலத்
தன்னகங் கருதி நோக்கித் தடவிச்சந் நிதியி ருத்தி
உன்னது பிறவி மாற்று முபாய மொன் றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பா யாகிற் றொடர்பவந் தொலையு மென்றான்.()

இ - ள். அன்ன = அப்படிக் குறைகூறியிரந்த — தன்சிசுவை = தனது சீடனை — ஐயன் = குருவானவர் — ஆமை (போல) = ஆமையானது (கரைக் கண்ணீன்றமுட்டையைத் தனதகத்திற்பாவிப்பது) போல, — தன் அகம் கருதி = (அஞ்ஞானம்ஒழிந்து அவன் தனது நிசரூபமாகும்படி) தமதுதிருவுள் ளத்திற்பாவித்து, — மீன் (போல) = மீனானது (தனதுசினையைப் பார்ப்பது) போல, — நோக்கி = (அவனது சஞ்சிதவினைகள்கெடும்படி அநுபூதியோடுகூடி விளங்காநிற்குந் தமதுகிருபாவீட்சணத்தால்) ஈட்சித்து, — பறவைபோல = பறவையானது (தன்சிறகிஞல் முட்டையைத்தடவுவது) போல, — தடவி = (முடிவான ஆன்மவிசாரம் இவனுக் குதயமாகுகவென) அஸ்தமஸ்தக சை யோகஞ்செய்து — சந்நிதி இருத்தி = எதிரே இருக்கவைத்து — உன்னது பிறவி மாற்றும் = உனது சம்சாரதுக்கத்தை ஒழிவிக்கும் — உபாயம் ஒன்று உண்டு = ஒருபாயம் உளது — சொல்வேன் = (அதனை உனக்கு) உபதேசிப் பேன்; — சொன்னதுகேட்பாய் ஆகில் = (யான்) உபதேசிப்பதைத் (தவறு யல்) அநுஷ்டிப்பாயாகில், — தொடர்பவம் = (அநாதிகாலமாய் உன்னைத்) தொடர்ந்துவந்துள்ள சம்சாரமானது — தொலையும் என்றான் = நிவிர்த்தியாய் விடுமென்று அருளிச்செய்தார். — எ - று.

அன்னை தன்சிசுவைஎனவும் பாடமுளது. "சொன்னது கேட்பாயா கில்" எ - து, அவனது இயற்கைகுணஞ் சோதித்தற்பொருட்டென்க.(கடு)

[சீடன் ஆசாரியர் செய்த ஆதரவினும், உபாய முபதேசிப்பே னென்றமையானும் தனது காரியசித்தியாவதிற் சந்தேக மின்றென்றுகருதி ஆநந்தமடைந்து விண்ணப்பஞ் செய்யத் தொடங்கல்.]

தொடர்பவந் தொலையு மென்று சொன்னதைக் கேட்ட போதே
தடமடி மூழ்கி ஞண்போற் சரீரமுங் குளிர்ந்துள் ளாறி
அடருமன் பொழுகு மாபோ லாநந்த பாஷ்பங் காட்டி
மடன்மலர்ப் பாத மீண்டும் வணங்கினின் றீது சொல்வான். (கசு)

இ - ள். தொடர்பவம் தொலையும்என்று சொன்னதை = (அநாதிகால மாய்த்) தொடர்ந்துவந்த ஜநமானது நிவிர்த்தியாய்விடுமென்று (ஆசாரி யர்) அருளியதை — கேட்டபோதே = கேட்டஅந்தக்கணமே — தடமடி மூழ்கி ஞண்போல் = (வெய்யிலாற் றபிக்கப்பட்டுவாடி) விசாலமான மடுவிலே மூழ் கினவனைப்போல, — உள் ஆறி = மனவெப்பந் தணிந்து, — சரீரமும் குளிர்ந்து

=தேகமும் சீதளமாய்—அடரும் அன்பு=(உள்ளே) நெருங்கிய அன்பானது—ஒழுகுமாபோல்=(ததும்பி வெளியே) ஒழுகுமாறுபோல,—ஆனந்தபாஷ்பம் காட்டி=ஆனந்தக் கண்ணீர்விட்டு—மடல்மலர்ப்பாதம்=இதழ்களையுடைய தாமரைப் பூப்போலுந் திருவடியை,—மீண்டும் வணங்கிநின்று=மீட்டும் பணிந்தெழுந்து (இரு காங்களையுஞ் சிரமேற் கூப்பி) நின்று—ஈது சொல்வான்=இதனை விண்ணப்பஞ்செய்வான்.—எ - று. (கசு)

சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனு னுலுஞ் சுவாமி
நின்னது கருணை யாலே நீரெனை யாள லாமே
உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டென் றீரே
இன்னதென் றதைநீர் காட்டி யீடேற்றல் வேண்டு மென்றான். (கள)

இ - ள். சொன்னது கேட்கமாட்டா=(தேவரீர்) உபதேசிப்பதைக் கேட்டுத்தவறுமல் அநுட்டிக்கமாட்டாத—தொண்டன் ஆனாலும்=அடிமையாயினும்,—சுவாமி நின்னது கருணையாலே=குருவே தேவரீரது கிருபையினாலே—நீர் எனை=தேவரீர் அடியேனை—ஆளல் ஆம்=ஆளுதன்முறைமையாம். உன்னதுபிறவி மாற்றும்=உனது ஜநநத்தையொழிக்கும்—உபாயம் ஒன்று உண்டு என்றீரே=உபாயமானது ஒன்றுளதென் றருளினீரே;—இன்னது என்று=இப்படிப்பட்டதென்று—அதை=அவ்வுபாயத்தை—நீர் காட்டி=தேவரீர் போதித்து—ஈடேற்றல் வேண்டும் என்றான்=(ஜநநசங்கடத்தினின்றுங்) கடைத்தேற்றல்வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான்.—எ - று.

உலகின்கண் ணரசராயினோர், தமது ஆணைவழிச் செல்லாதோரைச் சதுர்விதவுபாயங்களான் வசமாக்கித் தமது ஆணைவழியே செலுத்தியாள்வது போல நீர் சுவாமியாகலானும், அடியேன் உமது ஆளாகலானும் எவ்வாற்றானும் என்னை யாள்வது உமக்குக் கடமையேயாகலான் யான்முகமன் சொல்ல வேண்டுவது என்னை! என்பான்,

"சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனு னுலுஞ் சுவாமி,
நின்னது கருணை யாலே நீரெனை யாள லாமே"—என்றான். (கள)

[பரீட்சையிலுல் கீடனது இயற்கைதுணுஞ் சோதித்த
ஆசாரியர் பின் உபதேசிக்கத் தொடங்கல்.]

(37) அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் னூதுங் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவு மான்ம சொரூபமே மருவ வேண்டி
உடம்பினுட் சீவ னைப்பார்த் துபதேச மோது வாரே.

இ - ள். அடங்கிய விருத்தியாள் என்று அறிந்தபின்=(இவன் அகம்பாவ) விருத்தியொடுங்கினவனென்று சோதித் தறிந்தபின்னர்,—செறிந்த மண்ணின் குடம்பை உள்=நெருங்கிய மண்ணிலுலாகிய கூட்டினுள்ளே

(சோதித்தெடுத்துவந்து வைத்த)—புழுமுன்=புழுவுக்குமுன்னே—ஊதும் குளவியின் கொள்கைபோல=(அக்கீடந் தன்னுருவமாகும்படி) தொனிசெய் யும் பிரமரத்தின் றன்மைபோல,—தொடங்கியகுருவும்=(உபதேசிக்க) ஆரம் பித்தகுருவும்—ஆன்மசொரூபமே மருவவேண்டி=(அவன் ஸாபாசவந்தக் கரண வுபகிதமான) தனது விசேடரூபத்தைத் (தாதான்மியமாகப்) பொரு ந்தவேண்டி—உடம்பின் உள்=அவனது தேகத்தினுள்ளே—சீவனைப் பார் த்து=(ஸாபாசவந்தக்கரண விசிட்டனை) சீவனைப் பார்த்து,—உபதேசம் ஓதுவார்=உபதேசஞ்செய்வாராயினர்.—எ - று.

குளவியானது புழுவைக் கொட்டிப்பார்த்து மிகத் துடிப்பதையும், துடி யாமற் கிடப்பதையும் ஒழித்து மத்தியதுடிப்புடையதை யெடுப்பதுபோல குருவும், "இயற்கைதனைஞ் சோதித்து" என்னும் விதிப்படி சோதித்தே உபதேசிக்கப் புகுந்தமையின், "குளவியின் கொள்கைபோல" எ - ம், பந்த முடையவன் சீவனுதலால், "சீவனைப் பார்த்து" என்றுங் கூறினர். (கஅ)

[சம்சார நிவிர்த்தியுபாயம் இனி உபதேசிக்கத் தொடங்கி அது வந்ததற்குக் காரணமும், அதற்கவதியும் உபதேசிக்கின்றார்.]

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்து றந்து
தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
போராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே. (ககூ)

இ - ள். வாராய் என்மகனே,—தன்னை மறந்தவன்=(பிரத்தியகபின்ன பரமான்மாவான) தன்னை (நான்யாரென்று விசாரித்து) அறியாதவன்—பிற ந்து இறந்து=(சுரநரதிரியக்காதியோனிகளிற்) சனித்து, மரித்து—தீராத சுழல்காற்று உற்ற செத்தைபோல்=நீங்காத சுழற்காற்றிலகப்பட்ட தரணம் போல,—சுற்றிச் சுற்றி=இகலோகத்தினின்று பரலோகத்திற்குப் போவ தும், பரலோகத்தினின்றும் மீட்டிகலோகத்திற் றலைகீழாக வீழ்வதுமாய்— போராத காலநேமிப்பிரமையில் திரிவன்=ஒழியாத காலசக்காரமாகிய சுழற்சி யிற் சுழலாநிற்பன்—போதம் ஆராயும் தன்னை=ஞானதிருஷ்டியினுல் (யாரு ரென்று) விசாரித்தறியத்தக்க பிரத்தியகான்மாவாகிய தன்னை—தான் என்று =பிரமமென்று—அறியும் அவ்வளவும்=சாட்சாத்கரிக்கும் பரியந்தமும்.— எ - று.

தனது சந்நிதியிற் கேட்டுக்கொண்டிருப்பவனை, "வாராயென் மக னே" எ - து, யான் உபதேசிக்கு முபாயத்தில் சித்தத்தையும், சிரவணத் தையும் சாவதானமாக்கிக்கொண்டு கேளென்றவனை அபிமுகமாக்கியதென்க. நாள், மாதம், ஆண்டு, உகங்களாகக் காலம் மீண்டு மீண்டுற்பவித்தலால், "நேமி" எ - ம், படைப்பதும், படைத்தவையனைத்தையுந் துடைப்பதுங் காலமாகலால், "பிறந்திறந்துகால நேமிப்பிரமையிற் றிரிவன்" என்றுங் கூறினர். இங்ஙனங் கூறியவாற்றுன், ஆன்ம சாட்சாத் காரமுடையவன் காலாதீதனுவனென்பதுபெற்றும்.

[ஈண்டிதுவிவேகம்.]

(38) ஆபாசனனவன் தன்னையும், தனக்காதாரமும், தன்னிஜரூபமுமாகிய கூடஸ்தனையும் தனது சொரூபமாகக்கருதியுளன். யாண்டும் ஆபாசனென்னும் சத்தத்திற்கு, அந்தக்கரணசகிதமாகவே ஆபாசனைக்கொள்ளல் வேண்டுமெனக் கூறியிருத்தலின், தான் எ - ம், சீவன் எ - ம், ஆன்மா எ - ம், சாஸ்திரங்களில் எங்கேவரினும் அவைகட்கு ஆபாசம், ஆசிரயம், அதிஷ்டானம் ஆகிய மூன்றனையும் பொருளாகக் கொள்ளல்வேண்டும்; அங்ஙனம் கொள்ளாக்கால், பாகத்தியாகலட்சணை வியர்த்தமாம்; இதனை ஊகித்துணர்க.

[இனி உபாயம் உபதேசித்தல்.]

தன்னையுந் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேல்
பின்னையத் தலைவன் ருனைப்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிந்தா யாகி லுனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித் தேனே. (உ0)

இ - ள். தன்னையும் = (ஆபாசனை) தன்னையும்,—தனக்கு = (ஆபாசனை) தனக்கு—ஆதாரத் தலைவனையும் = ஆதாரமாகிய கூடஸ்தனையும்—கண்டானேல் = ஒருவன் கண்டானாயின்,—பின்னை = கண்டபின்—அத்தலைவன் தானாய் = அக்கூடஸ்தன் தானாய்,—பிரமம்மாய் = கூடஸ்தனைநானே பிரமமென்னும் அநுபூதியுடையவனாய்—பிறப்புத்தீர்வன் = ஜநநத்தினின்றும் விடுபடுவன்.—உன்னை நீ அறிந்தாய் ஆகில் = நீ இப்படி உனதுநிஜரூபமான கூடஸ்தனை (அகம் பிரமமென்று) அறிந்தாயாயின்,—உனக்கு ஒருகேடும் இல்லை = உனக்கு (சம்சாரவனர்த்தங்களுள்ளே) ஓரனர்த்தமும் உளதாதலில்லை; (நீ ஆநந்தக்கடல் வடிவேயாவாய்.)—என்னை நீ கேட்கையாலே = என்னை நீ (சரணடைந்து) கேட்டமையின்,—ஈது உபதேசித்தேன் = (அதிரகசியமான) இதனை உனக்குபதேசித்தேன்.—எ - று.

"என்னை நீ கேட்கையாலே யீதுப தேசித்தேன்" எ - து, இது ஏனைய உபதேசம்போலச் சாதாரணமாக வுபதேசிக்கத் தக்கதன் றென்னும் அதனருமை தோன்றக் கூறினதாம். பகவற்கீதையில்,

"நல்ல காதல்செய் நண்பனு மாயினை, யல்ல தியாவு மறியலை யாதலாற், சொல்லன் மேயினன்"—

என்று ஸ்ரீ - பகவானாலு மருளிச்செய்யப்பட் டிருக்கின்றது. "தன்னையும்" எ - கு, கூடஸ்தனையும் என்று பொருள் கூறுவாருமுளர்; அங்ஙனங் கூறின், கூடஸ்தனுக்கு ஆதாரம் பிரமமென்று கொள்ளல் வேண்டும்; கொள்ளவே, கூடஸ்தன் ஆதேயமாம். இங்ஙனங்கூடஸ்த பிரமங்களே ஆதேயவாதார மென்றுதல், காரியகாரணமென்றுதல், ஆரோபவதிஷ்டான மென்றுதல் கூறவது சம்பிரதாயப் பொருளன்றும்; இதனை, இப்படலத்தின் சுச - ம், செய்யுளில், "என்னிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டும்" என்னும் சீடன் கடாவினனும் உய்த்துணர்க. (உ0)

[அருளிய உபதேசத்தினுற் சீடன் அமையாது மீண்டும் வினுதல்.]

என்னைத்தான் சடஞ வுள்ளத் தெண்ணியோ சொன்னீ ரையா
தன்னைத்தா னறியா மாந்தர் தரணியி லொருவ ருண்டோ
பின்னைத்தா னவர்க ளெல்லாம் பிறந்திறந் தழலு வானேன்
நின்னைத்தா னம்பி னேற்கு நிண்ணய மருளு வீரே. (உக)

இ - ள். ஐயா = எனது குருவே,—என்னை = அடியேனை—சடஞ = மூடனாக—உள்ளத்து = திருவுளத்தின்கண்—எண்ணியோ = கருதியோ—சொன்னீர் = ("உன்னை நீ யறிந்தாயாகி லுனக்கொரு கேடுமில்லை") என்று அருளினீர்.—தன்னைத்தான் அறியாமாந்தர் = தம்மைத்தாம் அறியாத மநுடர்—தரணியில் = பூமண்டலத்தில்—ஒருவர் உண்டோ = யாரேனும் ஒருவர் உளரோ! (இலர்.)—பின்னை அவர்கள் எல்லாம்—பிறந்து இறந்து = ஜநித்து, மரித்து—உழலுவான் ஏன் = சுழலா நிற்பது என்னை?—நின்னை = தேவரீரையே—நம்பினேற்கு = (மாதா, பிதா, குரு, தெய்வமாக) விசுவசித்துள்ள வெனக்கு—நிண்ணயம் அருளுவீர் = அந்நிச்சயத்தை உள்ளவாறுபதேசிப்பீராக.—எ - று.

தான், எ - து, மூன்றிடத்தும் அசைநிலை. "தன்னைத்தா னறியா மாந்தர்" எ - து, ஒருமையிற் பன்மை மயங்கிய வழுவமைதி.

சாதன சம்பன்னனுய்க் குடும்பக் குற்றங்கண்டு ஏடணைத்திரயத்தினின்று நீங்கி எங்கெங்குந் தேடிவந்து மகேசனுக்கொப்பான உம்மைச் சரணடைந்த சுமதியான வென்னை இங்ஙனஞ் சொல்லன் முறைமையாவென்பான்,

"என்னைத்தான் சடஞ வுள்ளத் தெண்ணியோ சொன்னீ ரையா"—எ - ம்,

"காசாணுதி மட்டா நானிவ னென்று காணுந், திரமது தானே மூன்று மகங்காஞ் செகத்தோர்க்கெல்லா, முரியதாம்"

என்னும் அபிப்பிராயத்தினுல்,

"தன்னைத்தா னறியா மாந்தர் தரணியி லொருவ ருண்டோ"

என்றுங் கூறினன். (உக)

[தேகாதீம விவேகியே தன்னைத்தான் அறிந்தவனுமெனல்.]

இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வான் யாவன்
அன்னவன் றன்னைத் தானென் றறிந்தவ னுகு மென்றூர்
சொன்னபின் றேகி யாரித் தூலமல் லாம லென்றுன்
பின்னது கேட்ட வைபர் பிழைபு நகையுங் கொண்டார். (உஉ)

இ - ள். இன்னது தேகம்=(கடம்போல அறியப்படுவதான) இது தேகம்,—இவன் தேகி=(அறிபவனுன) இவன் இதற்குவேருனதேகி—என உணர்வான்யாவன்=என்றிவ்வாறு (சிற்சடங்களைப்) பிரித்தறிபவன் யாவனே!—அன்னவன்=அப்படிப்பட்ட விவேகியே—தன்னைத்தான் என்று அறிந்தவன் ஆகும் என்ருர்=தன்னைப்பிரமமென்றறிந்தவனுமென்ருசாரிய ருளினர்;—சொன்னபின்= (இவ்வாருசாரியர் தன்னையறியும் நிர்ண யத்தை) அருளியபின்னர்,—இத்தூலம் அல்லாமல்=இந்தத்தூலதேகமே தானல்லாமல்—*தேகியார்=வேறேதேகியாவன்? (காணேன், இருந்தாற் காணப்படானே! படாமையின், அவன் இல்லை)—என்ருன்=என்று (சீடன்) கூறினன்;—பின்=பின்னர்,—அதுகேட்ட ஐயர்=அதனைக்கேட்ட ஆசா ரியர்,—பீழையும் நகையும் கொண்டார்=துன்பமும், மகிழ்வுங்கொண்ட னர்.—எ - று.

"தேகியாரித் தூலமல்லாமல்" என்னும், இவ்வியவகாரத்திற் கேதுவே ஆவரணமாமென்க. தூர்க்கடகடனுசமர்த்தையான அவித்தையினல் நமது உபதேசத்தை இவன் அறியாமற் போயினன். வெறும்பொய்யான இவ்வவித் தையினுலன்ருே! சகலபிராணிகளும் ஜநநமரணரூபமான சம்சாரசமுத்திரத் தின்மூழ்கி வருந்தாநிற்கின்றனவெனத் தமது திருவுள்ளத்தின்கண்ணே எழும் இரக்கத்தை, 'பீழை' எ - ம், இவ்வவித்தியாநாசகமான அநேகசுருதி, யுத்தி, அநுபவம் நம்பால் இருத்தலின், ஓர் முகூர்த்தநேரத்தில் இதனை நிவிர்த் தித்து இவனை ஆநந்தக்கடலின்கட் டிளைக்கப்பண்ணுவாம், இதுநமக்கு ஓர் அருமையா எனத் தமது திருவுள்ளத்தி லெண்ணி மந்தகாசங்கொண்டருளி யதை, "நகை" என்றுங்கூறினர். இதற்கு, வேறுபொருள் கூறுவாருமுளர்.

[சந்தேக விபரீதங்களை நிவிர்த்தி சுருதி, யுத்தி, அநுபவம்
என்னுமூன்றனுள் அநுபவத்தின் கண்ணதேயாகலின்
தேகத்திற்றத் தான் வேறென்ப தவனுக்குத்தானே
அநுபவமாதும்படிக்கு அவனைத்தானே விளைதல்.]

தேகமல் லாமல் வேறே தேகியார் காணே னென்ருய்
மோகமாங் கனவில் வந்து முளைத்தவ னெவனீ சொல்வாய்
சோகமாங் கனவு தோன்ருச் சுழுத்திகண் டவனுர் சொல்வாய்
ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னேது சொல்வாய். (உசு)

இ - ள். தேகம் அல்லாமல்=(நான் மதுடனென்னும் அநுபவத்தால்) தேகமே தானென்பதற்குப் பொருளல்லாமல்,—வேறேதேகி ஆர்காணேன் என்ருய்=அதற்கு அந்நியமாகத்தேகியென்பவன்யாவன் (இருந்தாற்) காணப் படானே? (படாமையின், அவன் இல்லை) என்று சொன்னாய்;—(அங்ஙனமா மேல்,) மோகம்ஆம் கனவில்வந்து=(ஆன்மாவென் றுணக்கபிமதமான தேகம்

* "தேகியாரித் தூலமல்லாமல்" என்பழி, இருந்தாற் காணப்படானே? படாமையின் அவன் இல்லை என்னுந் தொடர்மொழி எச்சமாய்நின்ற குறிப் புப்பொருளை வெளிப்படுத்தலாற் குறிப்பெச்சம்.

சேட்டையற்றுக்கிடக்கவும்) நித்திராமோகத்தா லுளதாகுஞ் சொப்பனத்தின் கண்வந்து—மூலத்தவன் எவன் நீசொல்வாய்=தோற்றி(ச்சத்தாதிவிடயங் களை) யறிபவன் யாவன்? நீசொல்லு;—சோகம் ஆம் கனவுதோன்ற=(இஃ தன்றிச் சத்துரு, சர்ப்பாதிகளால்) துன்பமுளதாகும் அச்சொப்பனமுந் தோன்ற—சுழுத்திகண்டவன் ஆர்சொல்வாய் ஆக=சுழுத்தியின்கண்ணே (அஞ்ஞானத்தை) யறிந்தவன் யாவன்? சொல்லுவாய்.—நனவில் எண்ணும் அறிவுதான் ஏது நீ சொல்வாய்=(தாருவிஞற்செய்த யானை யினுட்புகுந்து அதனையியக்காநிற்கு மவன்போலச்சொப்பன, சுழுத்திகளிற் சேட்டையற் றுக்கிடந்த இத்தேகத்தைத்தரித்துநின்று அக்கினி, சந்திராதித்தியப் பிரகாச மொழிந்தபோதும்) சாக்கிரத்தில் (சத்தாதிவிடயங்களை) அறியாநிற்கும் அறி வுதான்யாது? நீ சொல்லுதி.—எ - று.

[தடஸ்தலட்சணங் கொண்டிங்ஙனம் விஞவினரென்க.]

(39) சொப்பனவுபத்தை, சுழுத்தியவத்தைகளின்வேறாய் இந்திரியங்க ளாற் றோன்றும் ஞானத்திற் காதாரகாலம் யாது? அது சாக்கிராவத்தை. இந்திரியங்களாற் றோன்றுவதல்லாத விடயகோசரமான அந்தக்கரணத்தின் அபரோட்ச விருத்தியின் அவத்தை சொப்பனவுபத்தை. சொப்பனத்தில் ஞேய, ஞானங்கள் அந்தக்கரணத்தின் பரிணாமமாம். சுககோசரமும், அவித் தியாகோசரமுமான சாட்சாதஞ்ஞானத்தின் பரிணாமரூபவிருத்தியி னவத் தையைச் சுழுத்தியென்பர்; சுழுத்தியில் அவித்தியாவிருத்தியின் கண் ஆரூட மான சாட்சி அவித்தையையும், சொரூபசுகத்தையும் பிரகாசிப்பிக்கின்றது. சுழுத்தியவத்தையிற் சுகாகார அவித்தியாகார பரிணாமமாக எவ்வஞ்ஞானக் கூறுண்டோ! அவ்வஞ்ஞானக்கூற்றில் அப்புருடனுடைய அந்தக்கரணம் விலீனமாகி நிற்கும். சாக்கிரகாலத்தில் அவ்வஞ்ஞானக்கூற்றின் பரிணாம மாக அவ்வந்தக்கரண முண்டாகின்றதாகலின், அஞ்ஞானவிருத்தியினல் அநுபவித்த சுகத்தினது ஸ்மிருதி சாக்கிரத்திலுண்டாகின்றது; உபாதானத் திற்கும், காரியத்திற்கும் பேதமின்மையினல் அநுப, ஸ்மாரணத்திற்கு விரோதமின்றென்றறிக. [கூறு எனினும் அம்சமெனினுமொக்கும்.] சாக் கிர, சொப்பனங்களிரண்டிலும் அந்தக்கரண விருத்தியுண்டு; சுழுத்தியிலோ! அஞ்ஞான விருத்தியுண்டு; ஆகலின், அவத்தை மூன்றும் விருத்தியின் அதீ னமாம்: சுகாதிஞானகாலத்தையும், உதாசீனகாலத்தையும் சாக்கிரத்தில் அந் தர்ப்பாவமாகக் கூறுவர்; மரணம், மூர்ச்சை இவைகளைச் சிலர் சாக்கிரத்தி லும், சிலர் சுழுத்தியிலும் அடக்கிக்கூறுவர். "அவத்தை" எ - து காலத் துக்குப்பெயர்.] (உக)

[சுவாமிகளுபதேசித்தவண்ணம், தேகத்திற்றுத்தேகி
அந்நிய மென்பது இவ்வநுபவத்தினல்
எனக்கு ஒக்குமெனல்.]

நனவுகண் டதுநான் கண்ட நனவுள நினைவு நீங்கிக்
கனவுகண் டதுஞ்சு ழுத்தி கண்டதும் வேறொன் றேபோல்

தினமது பஷிப்ப தொக்குந் தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னே மறைக்கும தருளு வீரே. (உச)

இ - ள். நனவு கண்டதும் = சாக்கிரத்தில் (திரமானசத்தாதிவிடயங்களை) அறிந்ததும், — நான்கண்ட = யானறிந்த — நனவுஉள நினைவுநீங்கி = சாக்கிரத்திலுள்ள நினைவுகளொழிந்து — கனவு கண்டதும் = சொப்பனத்தின் கண்ணே (அஸ்திரமான சத்தாதிவிடயங்களை) அறிந்ததும், — சுழுத்தி கண்டதும் = சுழுத்தியில் (மூலாஞ்ஞானவிருளை) அறிந்ததும் — வேறு ஒன்றே போல் = (இத்தேகத்திற்கு) அந்நியமான ஒரு தேகியேபோல, — தினம் அநுபவிப்பது ஒக்கும் = நாடோறும் (யான்) அநுபவிப்பது ஒவ்வும்; — [ஆயின், அவ்வநுபவத்திலிருத்தியெனின் ?] தெரியவும் இல்லை = (அஃதுள்ளபடி சார்வகாலமுந்) தோற்றவில்லை — சற்று மனதினில் உதிக்கும் பின்னே மறைக்கும் = இமைப்போது (சுவாமிகளுபதேசத்திஞலுண்டாகிய) விவேகத்தில் விளங்குகின்றது. பின்னர், (இமைநேரத்தில் இருளாக அஞ்ஞானமானது) மறைக்கின்றது; — அது அருளுவீர் = அது (அங்ஙனம் மறைபடாமற் சார்வகாலமும் அபரோட்சமாகும்படியான உபாயம்) உபதேசிப்பீராக. — எ - று.

("மனது" எ - து, விவேகத்தை.) "சற்றே மனதினி லுதிக்கும் பின்னே மறைக்கும்" எ - து, உ - ம் - வாசிட்டம்.

"இம்மொழிகளா லிமைப்போ திருளா மீள விமைப்போது வெளியாகு மிவ்வாறுகி, மைம்முகிலா லற்பமாய் வெய்யிற் சீதம் வந்துவந்து போகின்ற மழைநா ளொத்தேன்" — எ - ம்,

"இந்தவடி வாமெனக்கோ ரேதுகாணே னிடர்மனத் தாருவின் விதையா மகங்காரத்தை, யுந்தும்வகை யறிகிலேனுந்த வந்த வோடி வரு மதனுளுள் ளுடைந்தேன்" — எ - ம், வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (உச)

[இனி, விசேடமாக உபதேசிக்கத் தொடங்கல்.]

தாலத்தின் மாங்கள் காட்டித் தனிப்பிறை காட்டு வார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரார் தொடங்கி னரே. (உரு)

இ - ள். தாலத்தின் மாங்கள்காட்டி = பூமியின்கண்ணுள்ள விருட்சங்களின் (சாகைநுனியை முன்னே) காட்டி, — தனிப்பிறை காட்டுவார் போல் = (பின்னே) மூன்றும் பிறையைக் காட்டுபவரைப்போலவும், — ஆலத்தின் உடுக்கள்காட்டி = ஆகாயத்தின்கண்ணே (வசிட்டர் முதலிய தூல) நட்சத்திரங்களை முன்னேகாட்டி, — அருந்ததிகாட்டு வார்போல் = (சூட்சும மான) அருந்ததிநட்சத்திரத்தை (ப் பின்னே) காட்டுபவரைப்போலவும் —

தூலத்தை முன்புகாட்டி = தூலமான சகசீவபரங்களை முன்னே தரிசிப் பித்து,—சூக்குமசொரூபம் ஆனமூலத்தை = சூட்சுமரூபமான சகத்காரண பிரமத்தை—பின்புகாட்ட = பின்னேதரிசிப்பிக்க,—முனிவர் = மனனசீல ருள், சிரேஷ்டரான ஆசாரியர்—தொடங்கினர் = ஆரம்பித்தனர்.—எ - று.

"தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டல்" சாகாசந்திர நியாயம். "ஆலத்தி னுடிக்கள் காட்டி யருந்ததி காட்டல்" தூலாருந்ததி நியாயம். "ஆலம்" = பெருமை; அது குணவாகுபெயராய் ஆகாயத்தை யுணர்த்திற்று. (உடு)

[பந்த மோட்சங்களுக்கு முறையே காரணங்களாகிய அத்தியாரோ பாபவாதங்களுள் அத்தியாரோபங் கூறத்தொடங்கல்.]

அத்தியா ரோப மென்று மபவாத மென்றுஞ் சொல்லும்
உத்தியாற் பந்தம் வீடென் றுரைக்கும்வே தாந்த மெல்லாம்
மித்தையா மாரோ பத்தாற் பந்தமா மபவா தத்தான்
முத்தியா மிவ்வி ரண்டின் முந்தியா ரோபங் கேளாய். (உசு)

இ - ள். வெளி.

"மித்தை" என்றபதத்தை, ஆரோபத்திற்குவிசேடணமாகக்கொள்ளில், சுத்தியின்கண் அத்தியஸ்தமான இராஜதத்தையும், ஊஷர பூமியில் அத்தியஸ்த மான சலத்தையும் சத்தியமென்று கூறுஞ் சத்கியாதிவாதத்தை மறுத்தனர் எ - ம், பந்தத்திற்கு விசேடணமாகக் கொள்ளில், சித்தாந்தத்தில் அத்தியாச சாமக்கிரிகள் கூடாமையின் பந்தம் மித்தையன்று, சத்தியமாம் ஆகலின், தனக்குறுதிவேண்டின் நித்தியாதிகருமங்கள் செய்யற்பாலதேயா மென்னும் ஏகபவிகவாதத்தை மறுத்தனர் எ - ம் கொள்க.

(40) அத்தியாச சாமக்கிரியாவன:—அதிஷ்டானம் சாமான்யரூபத்தால் ஞாதத்துவமும், விசேடரூபத்தால் அஞ்ஞாதத்துவமும், வஸ்துஞான ஜந்நிய சம்ஸ்காரமும், பிரமாத்ருதோடமும், பிரமாணதோடமும், பிரமேயதோடமு மாம் என்க. விஸ்தாரபயத்தால் இவைகளை இங்குவிரித்திலேம்; சிஞ்ஞாசை யுளதேல், விசாரசாகர கிரந்தத்தி லிரண்டாந்தாங்கத்திற் கண்டுகொள்க. அகங்காராதிகளும், அவைகளின் ஞானங்களும் பந்தமாம்; அவைகளின் அத்தியந்தநிவிர்த்தியே முத்தியாம்.

"பந்தத் துருவங் கேட்டுணரிற் பரவீட் டுருவுமேல் வெளி யாம்"—

என வாசிட்டத்திற் கூறியிருப்பதால்,

"முந்தியா ரோபங்கேளாயி" எனக்கூறினர். பந்தமுத்தி இலக்கணம் வாசிட்டத்தில்,

"இந்தச் சகரீ நான்முதலா மிவைமெய் யென்றல் பந்தமதா, மந்தக் கருத்து நிற்பளவு மரிதா முத்தி"—எ - ம்,

"துன்றுவா தனையே பந்தந் தொல்லிவீ டதனைத் தீர்தல்"—எ - ம்,

"ஈன மான வகம்பாவப் பிராந்தி யன்றே விடர்பந்த, மான வீடா வதுமடமை யந்த காரங் கெடலன்றே"—எ - ம்,

மற்றுங் கூறியிருப்பன கொண்டுங்காண்க. (உசு)

(41) [அத்தியாரோபத்தின் பரியாயநாமங்களோடு திருஷ்டாந்தத்தில் அதன் இலக்கணங்கூறல்.]

ஆரோப மத்தி யாசங் கற்பனை யாவ வெல்லாம்
ஓரோர்வத் துவினில் வேறே யோரோர்வத் துவினை யோர்தல்
நாரூடு பணியாய்த் தோன்ற னாலுகித் தறியிற் றோன்றல்
நீரூடு கானற் றோன்ற னிறந்தலம் வெளியிற் றோன்றல். (உஎ)

இ - ள். ஆரோபம் அத்தியாசம் கற்பனை,—ஆவ எல்லாம்=ஆவனவனைத்தும்—ஓர் ஓர் வத்துவினில்=ஒவ்வொரு வத்துவினிடத்து—வேறே ஓர் ஓர் வத்துவினை ஓர்தல்=அந்நியமான ஒவ்வொருவத்துவை உணர்தலாம்,—(அது) நார் ஊடு பணி ஆய்த் தோன்றல்=(சர்ப்பமின்மையிடமான) இரச்சுவின்கட் சர்ப்பமுளதாகித் தோற்றுதலும்,—தறியில் நரன் ஆகித் தோன்றல்=(புருடனின்மையிடமான) தாணுவின்கட் புருடனுளனாகித் தோற்றுதலும்,—கானல் ஊடு நீர் தோன்றல்=(நீரின்மையிடமான) கானலிடத்துச் சலமுளதாகித்தோற்றுதலும்,—வெளியில் நிறம் தலம் தோன்றல்=(நிறந்தலங்களின்மையிடமான) ஆகாசத்திலே நீலவர்ணமும், (கொப்பரை கவித்தாற்போலுள்ள) இடமும் உளதாகித்தோற்றுதலும், (பிறவுமாம்.)—எ - று.

"பணியாயி" என்றதால், அர்த்தாத்தியாசமும், "தோன்றல்" என்றதால், ஞானத்தியாசமும்பெற்றும். இன்மையெனினும், அபாவமெனினும் ஒக்கும். தோன்றலெனினும், அவபாசமெனினும் ஒக்கும். "ஓரோர்வத்துவினைவேறேயோரோர்வத்துவெனவோர்தல்" எனவும் பாடமுளது; அங்ஙனம் பொருள்கொள்ளில், நியாயவைசேடிகமதாநு சாரியரான சிந்தாமணிகாரர்க்குடம்பாடான அந்நியதாக * கியாதி என்றும். வேதாந்தசித்தாந்தத்தில் அநிர்வசனீயக் கியாதியே உடம்பாடாகலின் அது பாடமன்று; எட்டிலெழுதினவர்களுடைய புத்திதோஷத்தாற் பிறழ்ந்ததேயாம்.

"நாரூடு பணிமை யோர்த னரன்மைதா ணுவிலோர்தல்பேய்த், தேரூடு நீர்மை யோர்த றெரியுநீ லிமைவிண்ணோர்தல்"—எ - ம், பாடமுளது.

---

* கியாதி=ஞானம், அல்லது வார்த்தை.

திருஷ்டாந்தஞானமின்றித் தாஷ்டாந்தஞானமுதியாதாதலால், திருஷ்டாந்தத்தைத்தானே நன்முகவிரித்து விகாரிப்பது ஆவசியகமாமாகலின் அதனைவிரிக்குதும் :—இரச்சுசர்ப்பம், சுத்திரஜத முதலிய பிரம [ஸ்ரீ] ஸ்தலத்தில் சத்கியாதி, அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்நியதாக்கியாதி, அக்கியாதி எனவைந்து மதங் கேட்கப்படுகின்றன. வைணவர் முதலியோர், சத்கியாதிவாதிகள். சூனியவாதி, அசத்கியாதிவாதி. கூணிக விஞ்ஞானவாதி, ஆத்மக்கியாதிவாதி. நியாயவைசேடிகர், அந்நியதாக்கியாதி வாதிகள். சாங்கிய பிரபாகரர், அக்கியாதிவாதிகளாம்.

(42) இவர்களுள், க - வது சத்கியாதிவாதிகள், சுத்தியினுடைய அவயவங்களோடி இரஜதத்தினவயவமும் எப்போது மிருக்கின்றதெனவும், சுத்தியினவயவம் சத்தியமாவதுபோல இரஜதாவயவமுஞ் சத்தியம், மித்தையன்றெனவும், தோடத்தோடுகூடிய நேத்திரசம்பந்தத்தால் சித்தாந்தத்தில் அவித்தையின் பரிணமமாக அநிர்வசனீயரஜதம் உண்டாவதுபோலத் தோடத்தோடுகூடிய நேத்திரசம்பந்தத்தால் இரஜதாவயவங்களினின்று சத்தியரஜதமும் உண்டாகின்றதெனவும், சித்தாந்தத்தில் அதிஷ்டானஞானத்தால் அநிர்வசனீயரஜத நிவிர்த்தியாவதுபோலச் சுத்திஞானத்தால் சத்தியரஜதமும் தனதவயவத்திற் றெம்சமாமெனவுங்கூறுவர்; அது நிராகரிக்கத்தக்கது. யாதினுலெனின்? சுத்திரஜத திருஷ்டாந்தத்தினுல் பிரபஞ்சம்மித்தையென்னும் அநுமிதியுண்டாகின்றது. சத்கியாதிவாதத்தில் சுத்தியில் ரஜதஞ்சத்தியமாம்; ஆகவே, அதைத் திருஷ்டாந்தமாகவைத்துப் பிரபஞ்சத்தில் மித்தியாத்வசித்தி பெறுவது கூடாதாதலாலென்க; இன்னும், இந்தப்பட்சத்திற் பிரபலதோடங்கள் அநேகமுள; அவை சுத்திஞானத்திற்குப்பின் சுத்தியில் காலத்திரயத்திலும் இரஜதமே இல்லையென்று சுத்தியினிடத்துத் திரைகாலிகரஜதாபாவப் * பிரதீதியுண்டாகின்றது; சித்தாந்தத்தில் அநிர்வசனீய ரஜதமோ! மத்திய காலத்தில் மாத்திரம் உண்டு; வியாவகாரிக ரஜதாபாவம் திரைகாலிகமாக இருக்கின்றது. சத்கியாதி வாதிமதத்தில் வியாவகாரிக ரஜதம் உண்டாகுங் காலேயில் வியாவகாரிக ரஜதாபாவங்கூடாது; ஆகலின், திரைகாலிக ரஜதாபாவப்பிரதீதியினுல் வியாவகாரிக ரஜதஞ்சொல்லுகை விருத்தமாம்; அன்றியும், அநிர்வசனீய ரஜதத்தின் உற்பத்தியில் பிரசித்த ரஜதத்தின் சாமக்கிரி வேண்டுவதில்லை. தோஷசகித அவித்தையினுல் அதனது உற்பத்திகூடும்; வியாவகாரிக ரஜதத்தின் உற்பத்தி பிரசித்தரஜதத்தின் சாமக்கிரியின்றிக் கூடாது. சுத்தியின் கண்ணே இரஜதத்தின் பிரசித்த சாமக்கிரியில்லை; ஆதலால், சத்தியரஜத உற்பத்திசுத்தியில் உளதாமென்கைகூடாது. சுத்தியின் கண் இரஜதாவயவம் உண்டு; அதுவே சத்திய ரஜதத்தின் சாமக்கிரியாம் எனின்? அது உற்பூதரூபமா? அநுற்பூதரூபமா? உற்பூதரூபமெனின்? இரஜதத்தினுற்பத்திக்கு முன்னரே அது பிரத்தியட்சமாதல்வேண்டும். அநுற்பூதரூபமெனின்? இரஜதமும் அநுற்பூதரூபமுடையதாம்; ஆகவே, அவ்விரஜதம் பிரத்தியட்சமாகாது.

---

* பிரதீதி = ஞானம்.

அன்றியும், ஒரிரச்சுவின்கட் பத்துப்புருடர்க்கு வெவ்வேறுக ஒருவனுக்குத்தண்டம், ஒருவனுக்குமாலே, ஒருவனுக்குச் சர்ப்பம், ஒருவனுக்குச் சலத்தின்றாரை என இப்படிபிரம [ஹ்ரீ]ம் உண்டாகிறது. அங்கே தண்டமுதலிய பதார்த்தங்களின் அவயவங்கள் சொற்பரச்சு தேசத்தில் உண்டெனல் கூடாது. என்னே? மூர்த்தத்திரவியங்கள் ஸ்தானத்தைத் தகையுமாதலால் என்க. சித்தாந்தத்தில், அநிர்வசனீயங்களாகத் தண்டமுதலியவை உண்டாகின்றனவாகலான் வியாவகாரிகதேசத்தை அவை தகையாவாம். சத்கியாதிவாதியும் தண்டமுதலியவற்றில் ஸ்தானத்தைத் தகைவது முதலிய பயனை ஒப்பாவிடின், தண்டமுதலியவற்றைச் சத்தியமென்று கூறுதல் விருத்தமும், நிஷ்பலமுமாம். தண்டமுதலியவை தோற்றாவு மாத்திரந்தான், அந்நியமானகாரியம் அவைகளால் உளதாகாதென்னின்? அப்போது அநிர்வசனீயவாதமே சித்தமாம். பிரம [ஹ்ரீ] ஸ்தலத்தில் சத்பதார்த்த உற்பத்தி ஒப்பிடில், அக்கினியோடுகூடிய ஊஷர பூமியில் சலப்பிரம [ஹ்ரீ]ம் உண்டாமாயின் அங்கே அச்சலத்தால் அவ்வக்கினி சாந்தமாதல் வேண்டும். பஞ்சின்மீதுவைத்த குன்றிமணிக்கொத்தில் அக்கினிப்பிரம [ஹ்ரீ]ம் உண்டாமாயின் அங்கே பஞ்சானது எரிதல் வேண்டும். தோடத்தோடு கூடிய காரணத்தினின்றும் உண்டான பதார்த்தம் அந்நியனுக்குத் தோற்றமாட்டாது; யாவனுடைய தோடத்திலுண்டாயிருக்கிறதோ! அவனுக்கே தோற்றுநிற்கும். தோடத்தின் காரியமான சலத்திலும், அக்கினியிலும் நனைத்தலும், தகித்தலும் உளவாகாவென்னில்? அப்போது அவைகளைச் சத்தியமென்று சொல்லுதல் கேவலம் நகைத்தற்கே ஏதுவாகுமல்லது வேறில்லை; அதனால், சத்கியாதிவாதிகளின் வார்த்தையுத்தியில்லாத வார்த்தை என அந்தப்பட்சம் நிராகரிக்கத்தக்கதேயாம்.

(43) உ - வது சூன்யவாதீ, இரச்சுவினிடத்துச் சர்ப்பம் அத்தியந்தம் அசத்தாம்; அப்படியே அந்நியதேசத்திலும் அத்தியந்தம் அசத்தாம்; இப்படி அத்தியந்தம் அசத்தாகிய சர்ப்பம் இரச்சுவினிடத்துத் தோன்றுநின்றதென்பன்.

(44) ஊ - வது க்ஷணிக விஞ்ஞானவாதிகள், பழுதையினிடத்தும், அப்படியே அந்நியதேசத்தும் புத்திக்குப்புறம்பே ஓரிடத்தும் சர்ப்பமானது இல்லை; சகல பதார்த்தங்களும் புத்தியினும் வேறுக இல்லை; சகலபதார்த்தங்களின் ஆகாரத்தையும் புத்தியே தரிக்கின்றது; அந்தப் புத்தியும் க்ஷணிக விஞ்ஞான ரூபம்; க்ஷணத்தில் நாசமும், க்ஷணத்தில் உற்பத்தியும் அடையாநின்ற விஞ்ஞானமே சர்ப்பரூபமாகத் தோன்றுநின்றதென்பர்.

(45) சு - வது நியாயவைசேடிகர், புற்றுமுதலிய ஸ்தானங்களில் யதார்த்தமாகிய சர்ப்பமுளது; அது நேத்திரத்திலுற் காணப்படுகின்றது. நேத்திரத்திலுள்ள தோடபலத்தால் எதிரே சமீபத்தில் இரச்சுதேசத்திற் றோன்றுகின்றது. யதார்த்த சர்ப்பத்திற்கும், நேத்திரத்திற்கும் மத்தியில்

பித்தியாதிய * அந்தாயங்கள் இருப்பினுந் தோடசகிதநேத்திரத்தால் அது காணப்படுகின்ற தென்பார். ஷி சிந்தாமணிகாரர், தோடசகித நேத்திரத் திலுல் புற்றினிடத்துள்ள சர்ப்பஞானம் உண்டாமாயின், மத்தியிலுள்ள வேனைய பதார்த்த ஞானங்களும் உண்டாதல் வேண்டும்; ஆதலால் பித்தியாதி அந்தராயசகித வத்துவின்ஞானம் நேத்திரத்தால் உண்டாகாது. பின்னே யோ? தோடசகித நேத்திரத்திலுல் இரச்சுவானது நிசரூபமாகத் தோன்ரு மல் சர்ப்பரூபமாகத் தோன்ருநின்றது; இப்படி ஒன்று மற்ரொன்ருகத் தோன்ரு நிற்பதே அந்நியதாக்கியாதி யென்பர்.

(46) ரு - வது அக்கியாதிவாதியர், அசத்தானது தோன்று மாயின் வந்தியாபுத்திர, சசசிருங்கங்களுந் தோன்றவேண்டும்; அங்ஙனந் தோன்ரு மையின், அசத்கியாதி அசங்கதம். கூணிக விஞ்ஞானத்தின் ஆகாமே சர்ப் பாதிகளாமாயின், கூணிகமாத்திரத்தால் அதிககாலத் தோற்றரவு கூடாது; ஆதலால், ஆத்மக்கியாதியும் அசங்கதம். அந்நியதாக்கியாதியின் பிரதமரீதி சிந்தாமணி மதத்தால் தூஷிக்கப்பட்டதுபோலவே சிந்தாமணி மதரீதியிலுற் கூறும் அந்நியதாக்கியாதிமதமும் அசங்கதமாம். எதலுலெனின்? ஜேயவஸ்து சாரமாகவே ஞானமுண்டாகின்றது. ஜேயம் இரச்சு; அதில் சர்ப்பஞானங் கூறுதல் அத்தியந்தவிருத்தமாமாதலின் என மறுத்து, எங்கே இரச்சுவின் கட் சர்ப்பப்பிரம [ஹ்ரீ] முண்டாமோ! அங்கே இரச்சுவினுடனே நேத் திரத்திற்குத் தன்விருத்திவழியாகச் சம்பந்தமுண்டாய் அவ்விரச்சுவினிட த்து இதுவென்னும் ரூபமாகச் சாமான்யஞானமும், சர்ப்பத்தின் ஸ்மிருதி யும் உண்டாகின்றன; அவ்விரண்டில், இதுவென்னுங்கூறு இரச்சுவின் சாமான்யப் பிரத்தியட்சஞானம். சர்ப்பமென்பது ஸ்மிருதிரூபஞானம். ஆகலான், இது சர்ப்பமென்புழி இரண்டு ஞானமுண்டாம்; அப்படியுண்டா தற்குப் பிரமாதாவின்கட் பயதோடமும், பிரமாணத்தின்கட்டிமிரதோட முமே காரணமாம்; அவற்றின் வலியால் புருடனுக்கு இதுவென்பது இரச் சுவின் சாமானியப் பிரத்தியட்சஞானமென்றும், சர்ப்பமென்பது பூருவங் கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதிஞானமென்றும் விவேகம் உண்டாகவில்லை; இவ்விருவகை ஞானத்தின் அவிவேகமே பிரம [ஹ்ரீ] மென்பர். சத்கியாதி யும், அக்கியாதிவாதியால் மறுக்கப்பட்ட அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அந் நியதாக்கியாதிகளும் ஆகிய நான்குமதங்களும் யுத்திக்கினமாவதால் எப்படி அசங்கதமென்று தள்ளப்பட்டனவோ! அப்படியே அக்கியாதிமதமும் அசங்கதமாம்.

(47) எதலுலெனின்? இது சர்ப்பமென்னும் ஞானத்தில் முன்னே இதுவென்னுங் கூறு இரச்சுவின் சாமானியப் பிரத்தியட்ச ஞானமாம், சர்ப்பமென்னுங்கூறு பூர்வங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மரணஞானமாம் என் பது அக்கியாதிவாதிகள்மதம்; அங்கே பூர்வங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மர ணமே ஒப்பி எதிரே இரச்சுதேசத்தில் சர்ப்ப ஞானம் ஒப்பாவிடில் எதிரே

* அந்தாயம் = மறைப்புக்குக்காரணம்.

கிடக்கும் இரச்சுவினின்றும் புருடனுக்குப்பய முண்டாகித்திரும்பி ஓட வேண்டுவதில்லை; எதிரேகண்ட இரச்சுதேசத்திலேயே சர்ப்பஞானம் உண்டாகின்றதாதலால் அது பூருவங்கண்டசர்ப்பத்தின் ஸ்மிருதியல்ல; அன்றியும், இரச்சுவின் விசேடரூப யதார்த்தஞானம் உண்டானதன் பின்னர் எனக்கு இரச்சுவினிடத்துச் சர்ப்பஞானம் மித்தையாக உண்டாயிற்றென்னும் *பாதமானது உண்டாகின்றது; இப்பாதத்திலுலும் இரச்சுவினிடத்து சர்ப்பஞானம் உண்டாகின்றதே யல்லாமற் பூருவங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதியுண்டாகவில்லை. இது சர்ப்பமென்புழி, ஞானம் ஒன்றே தோன்றுநின்றது; இரண்டில்லை. எககாலத்தில் அந்தக்காரணத்தினின்று ஸ்மிருதிரூபமும், பிரத்தியட்சரூபமும் ஆகிய இரண்டு ஞானமுளவாகா; ஆதலால் அக்கியாதிமதமும் அத்தியந்தம் அசங்கதமாம் என்க. இம்மதங்களின் பிரதிபாதனமும், கண்டனமும் விவரணம், ஸ்வாராஜ்யசித்தியாதிய கிரந்தங்களிலும், விருத்திப்பிரபாகர கிரந்தத்துங் காண்க.

(48) இனிச்சித்தாந்தமாகிய அநிர்வசனீயக்கியாதியின் கோள்கை கூறுதும்:—அந்தக்காரணத்தின் விருத்தி நேத்திராதி இந்திரிய வாயிலாகப் புறம்போந்து விடயசமாஞகாரத்தை யடையும்போது அதனுல் விடயத்தின் ஆவரணம் பங்கமாம்; ஆகவே, அவ்விடயந்தோன்றுநிற்கும். அங்கே பிரகாச சகாயமும் வேண்டும்; இன்றேற்பதார்த்தங்க டோற்றுவாம். ஆதலால், எங்கே இரச்சுவில் சர்ப்பப்பிரமமுண்டு அங்கே முற்கூறியவாறு அந்தக்காரணத்தின் விருத்தி நேத்திரேந்திரிய வாயிலாகப் புறம்போந்து இரச்சுவோடு சம்பந்தமாயினும் திமிராதி தோடப்பிரதி பந்தமிருக்கில் விருத்தியின் சொரூபம் இரச்சுவின் சமாஞகாரமாகாது; அஃதங்ஙனமாகாதபோது இரச்சுவின் ஆவரணம் பங்கமாகாது. இவ்வாறு ஆவரணபங்கநிமித்தம் விருத்திசம்பந்தமுளதேனும், எப்போது இரச்சுவின் ஆவரணம் பங்கமாகவில்லையோ! அப்போது இரச்சுசேதனத்துள்ள அவித்தையினிடத்து †க்ஷோபமுண்டாய் அவ்வவித்தை சர்ப்பாகார பரிணமத்தையடையும்; அவ்வவித்தையின் காரியமாகிய சர்ப்பம் சத்தெனின்? இரச்சுஞானத்தாற் பாதமாகாது; பாதமாகலின் சத்தன்று. அசத்தெனின்? வந்தியாபுத்திரன் போலத் தோற்றாவாகாது; ஆகலின், அசத்துமன்று; மற்றெத்தன்மையதோவெனின்? சதசத்விலக்ஷண அநிர்வசனீயத்தன்மையதாம். இங்ஙனம் சர்ப்பமானது அவித்தையின் பரிணமமாவதுபோல அதன் ஞானரூபவிருத்தியும் அவித்தையின் பரிணமமே; அந்தக்காரணத்தின் பரிணமமன்றும். என்னே? இரச்சுஞானத்தால் சர்ப்பம் பாதமாகின்றதுபோல அதன் ஞானமும் பாதமாகின்றது. அந்தக்காரணத்தின் பரிணமமாயின் அது பாதமாகாது. ஆதலால், சர்ப்பஞானமும் சர்ப்பம்போல அவித்தையின் காரியமாய்ச் சதசத்விலட்சண அநிர்வசனீயத்தன்மையதேயாம். இங்ஙனம் சர்ப்பமும், அதன்ஞானமும் அவித்தையின் பரி

---

* பாதம்=மித்தையென்னும் நிச்சயம். [ஸாயஃ] எனும் வடமொழி தற்பவமாய், பாதம் எனவரும்; ஏனையவிடங்களிலும் இதுவே பொருள்.

† க்ஷோபம்=காரியாபி முகாவஸ்தை.

ணமேயாயினும் இரச்சுவுபகித சேதனத்துள்ள தமோகுணப்பிரதான வவித்தைக்கூற்றின் பரிணமம் சர்ப்பமும், சாட்சி சேதனத்துள்ள வவித்தையின் சத்துவகுணப் பரிணமம் விருத்திஞானமுமாம். எச்சமயத்தில், இரச்சு சேதனத்துள்ள வவித்தை சர்ப்பாகார பரிணமமாமோ! அச்சமயத்திலேயே சாட்சியாசிரிதமான வவித்தை ஞாலுகாரபரிணமமாம். என்னை? இரச்சு சேதன வாசிரிதமான வவித்தையிடத்து யாதொருகூஷாப நிமித்தமுளதோ! அந்நிமித்தத்திலுலேயே சாட்சியாசிரித வவித்தைக் கூற்றினிடத்தும் கூஷாபம் உளதாதலினென்க; இங்ஙனங் கூறியவாற்றுல் சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அவித்தை உபாதானகாரணமும், இரச்சுவின் அப்பிரதீதியினுல் இரச்சுவவச்சின்ன சேதன வாசிரிதமான வவித்தையின்கண்ணுளதாகும் கூஷாபம் நிமித்தகாரணமும் ஆம். இவ்வாறு பிரம [ஈசுவர] ஸ்தலத்தில் சர்ப்பாதிவிடயங்களும், அவற்றின் ஞானங்களும் கூடவே உண்டாய் இரச்சுவாதி அதிஷ்டானஞானத்தாற் கூடவே லீனமாம்; இவ்வாற்றுல், சர்ப்பமுதலிய பிரம [ஈசுவர] த்தில் புறவவித்தைக்கூறு சர்ப்பமுதலிய விடயங்களுக்கும், சாட்சியாசிரிதமான அகவவித்தைக்கூறு அவ்விடய ஞானரூப விருத்திகட்கும் உபாதான காரணமெனப்படும். சொப்பனத்தினிடத்துச் சாட்சியாசிரிதமான வவித்தையின் தமோகுணக்கூறு விடயரூப பரிணமத்தையும், சத்துவகுணக்கூறு ஞானரூப பரிணமத்தையும் அடைகின்றமையின், சொப்பனத்தில் அகவவித்தையே விடயத்திற்கும், ஞானத்திற்கும் உபாதானகாரணமாம்; இவ்வாற்றுல், வாகியமான இரச்சுசர்ப்பாதிகளும், ஆந்தரமான சொப்பன பதார்த்தங்களும் சாட்சிபாசியமென்று சொல்லப்படும். அவித்தியாவிருத்தியின் வாயிலாக யாதொன்றைச் சாட்சியானது பிரகாசிப்பிக்குமோ! அது சாட்சிபாசியமாம். இரச்சுவாதிகளில் அநிர்வசனீயமான சர்ப்பாதிகளும், அவைகளின் ஞானங்களும் பிரம [ஈசுவர] மென்றும், அத்தியாசமென்றுஞ் சொல்லப்படும். அந்தப் பிரம [ஈசுவர]ம் அவித்தையின் பரிணமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம்.

(49) உபாதானகாரணத்திற்குச் சமானசுபாவமுடையதாயும், அந்நியதாசொரூபமாயுமுள்ளது பரிணமம். அதிஷ்டானத்தினும்விபரீதசுபாவமுடையதாயும், அந்நியதாசொரூபமாயுமுள்ளதுவிவர்த்தம். உபாதானகாரணமான அவித்தை எப்படி அநிர்வசனீயமோ! அப்படியே இரச்சுசர்ப்பமும், அதன் ஞானமும் அநிர்வசனீயமாவதால் அவித்தைக்குச் சமானசுபாவமுடையன; அந்நியதாசொரூப மென்பது அவித்தையினும் வேறுபிரகாரமான ஆகாரம்; அப்படியே இரச்சுவவச்சின்ன வதிஷ்டானசேதனம் சத்ரூபம்; சர்ப்பமும், அதன் ஞானமும் சத்தினும் விலக்ஷணமாவதால்விபரீதசுபாவமுடையனவாம். அந்நியதாசொரூபமென்பது சேதனத்தினும் வேறு பிரகாரமான ஆகாரம்.

(50) மித்தியாசர்ப்பத்தின் அதிஷ்டானம் இரச்சுவுபகிதசேதனமாம்; இரச்சுவல்ல. என்னை? சர்ப்பத்தைப்போல இரச்சுவும் கற்பிதம்; கற்பித

வத்து அந்நியகற்பிதத்திற்கு அதிஷ்டானமாதல் கூடாது. ஆதலால், இரச்சு வுபகிதசேதனமே அதிஷ்டானமாம்; இரச்சுவல்ல. இரச்சுவிசிட்டத்தை அதிஷ்டானமென்று சொல்வோமாயின், இரச்சுவும், சேதனமும் ஆகிய இரண்டும் அதிஷ்டானமாம்; ஆகவே, இரச்சு பாகத்தில் அதிஷ்டானத் தன்மை பாதிக்கப்பட்டிருத்தலின், இரச்சுவுபகிதசேதனமே அதிஷ்டான மாம்; இரச்சுவிசிட்டசேதனம் அதிஷ்டானமன்று. அப்படியே சர்ப்பஞானத் திற்குச் சாட்சிசேதனம் அதிஷ்டானமாம்; இவ்வாற்றால், பிரம [ஹ்ரீ] ஸ்த லத்தில் விடயத்திற்கும், அதன்ஞானத்திற்கும் உபாதிபேதத்தால் அதிஷ் டானம் பின்னமாம்; ஒன்றன்று. விசேடரூபமாக இரச்சுவினது அப்பிர தீதி அவித்தையில் கூபவாயிலாக இரண்டின் உற்பத்தியிலும் நிமித்த மாவதுபோல இரச்சுஞானமும் இரண்டன் நிவிர்த்தியிலும் நிமித்தமாம்.

(51) சங்கை—மித்தியாவஸ்துவிற்கு யாது? அதிஷ்டானமோ! அவ் வதிஷ்டான ஞானத்திஞல்மித்தியாவஸ்து நிவிர்த்தியாமென்பது அத்வைத வாதத்தின் சித்தாந்தம்; இங்கே மித்தியாசர்ப்பத்திற்கு அதிஷ்டானம் இரச் சுவன்றும், இரச்சுவுபகித சேதனமாம் என்று கூறினமையின் இரச்சுஞானத் தால் சர்ப்பநிவிர்த்தி கூடுமோறெங்ஙனேயெனின்?

(52) உத்தரம்—இரச்சுவாதி ஜடபதார்த்தங்களின் ஞானம் அந்தக்கர ணத்தின் விருத்திரூபமாக உண்டாகுமேல் அங்கே ஆவரணபங்கம் விருத்தி யின் பிரயோசனமாம்; அவ்வாவரணம் அஞ்ஞானத்தினது சத்தியாகலான். ஆவரணம் ஜடத்தின் ஆசிரிதமன்று; ஜடத்திற்கு அதிஷ்டானசேதனத்தின் ஆசிரிதமாம். ஆகலான், இரச்சுவின் சமாஞகாரமான அந்தக்கரணத்தின் விருத்தியிஞல் இரச்சுவவச்சின்னசேதனத்தின் ஆவரணமேபங்கமாம். விருத் தியின்கண்ணுள்ள சிதாபாசஞல் இரச்சுமாத்திரம் பிரகாசிக்கும். சேதன பாகம் சுயம்பிரகாசமாவதால் அதன்கண் ஆபாசனுக்கு உபயோகமில்லை; இவ்வாற்றால், சிதாபாசஞேடுகூடின அந்தக்கரண விருத்திரூபமாகிய ஞான த்திலுள்ள விருத்திபாகத்திற்கு ஆவரணபங்கரூபபயன் சேதனத்திலும், சிதா பாசபாகத்திற்குப் பிரகாசரூபபயன் இரச்சுவிலும் உள்ளன. ஆதலால், ஸாபாசவிருத்திஞானத்திற்குக் கேவலம்சடமாகிய இரச்சு விடயமன்று. பின்னேயோவெனின்? அதிஷ்டான சேதனத்தோடு கூட இரச்சுவானது ஸாபாசவிருத்திக்கு விடயமாம்; இக்காரணத்தால், சித்தாந்தகிரந்தங்களில் அந்தக்கரணத்தினின்றுஞ் சுயாநிற்கும் விருத்திஞானங்கண்முழுதும் பிர மத்தைவிடயம்பண்ணுகின்றன வென்று கூறப்பட்டிருக்கின்றது; இவ்வாறு இரச்சுஞானத்தால் நிராவரணமாய்ச் சர்ப்பத்திற் கதிஷ்டானமாகிய இரச்சுவி னவச்சின்னசேதனமும், தனது பிரகாசத்தால் விளங்குவதால் இரச்சுவின் ஞானமேசர்ப்பத்தின் அதிஷ்டான ஞானமாகலின்சர்ப்பநிவிர்த்திகூடும்.

(53) சங்கை—இங்ஙனம் சர்ப்பநிவிர்த்தி இரச்சுஞானத்தாற் கூடுமேல் கூடுக. சர்ப்பஞானத்திற் கதிஷ்டானமாகிய சாட்சிசேதனம் அஞ்ஞானமாயி ருத்தலின், சர்ப்பஞான நிவிர்த்திகூடுமோறு எங்ஙனேயெனின்?

(54) உத்தரம்—விடயத்தின் அதீனமாக ஞானமூளதாகலின் விடயத் தினபாவத்தால் சர்ப்பஞானந்தானே நிவிர்த்தியாம். கற்பிதநிவிர்த்தி அதிஷ் டான ஞானமின்றி உளதாகாதென்று மீட்டும் சங்கிக்கிற் கூறுதும் :—

(55) நிவிர்த்தி இருவகைத்தாம் : ஒன்று அத்தியந்தநிவிர்த்தி, மற் றொன்று காரணத்தில்லயரூபமானநிவிர்த்தி. சகலகற்பிதவஸ்துக்களின் கார ணம் அதிஷ்டானவாகிரிதமான அஞ்ஞானம் ; அவ்வஞ்ஞானத்தோடுகூடக் காரியங்களினிவிர்த்தி அதிஷ்டானஞானத்திலேயேயுளதாம். காரணத் தின்கண் லயரூபமானநிவிர்த்தி அதிஷ்டான ஞானத்திலன்றியும் சுழுத்தி யிலும், பிரளயத்திலும் சர்வபதார்த்தங்கட்கு முளவாம். அங்கே, சர்வப்பதார்த் தங்களினது லயத்தில் போகப்பிரதமான கர்மங்களினபாவம் நிமித்தமாக விருப்பதுபோல, அதிஷ்டான ஞானமின்றியே சர்ப்பஞானம் லயமாமிடத் துச்சர்ப்பஞானத்திற்கு விடயமான சர்ப்பத்தினபாவம் சர்ப்பஞானலயத்தில் நிமித்தமாகவுளது ; இவ்வாறு சர்ப்ப நிவிர்த்தி இரச்சுஞானத்தாலும், சர்ப்ப ஞானத்தினதுலயம் அதன்விடயமான சர்ப்பத்தினபாவத்தாலும் உளவாம்.

(56) அல்லது சர்ப்பமும், அதனது ஞானமுமாகிய இரண்டனது நிவிர்த்தியும் இரச்சுஞானத்தாற் றானே யுளவாம். என்னை ? எப்போது இரச்சுவின் பிரத்தியட்சஞானமூளதாமோ ! அப்போது அந்தக்காரணத்தின் விருத்தி நேத்திரவாயிலாகப்புறம்போந்து இரச்சுதேசத்தை யடைந்து இரச்சு விற்குச்சமானமாகிய ஆகாரமாமாதலால், இரச்சுவின் பிரத்தியட்சசமயத்தில் விருத்தி உபகிதசேதனமும், இரச்சுவுபகிதசேதனமும் பேதமின்றி ஏகமாம் ; இதற்கேதுகூறுதும் :—சேதனத்திற்கு உபாதிபேதத்தாலன்றிச் சொரூபத் தால் யாண்டும் பேதமில்லை. விருத்தி உபகிதசேதனம், இரச்சுவுபகிதசேதனங் களின் பேதகவுபாதி விருத்தியும், இரச்சுவுமாம் ; அவ்விருத்தியும், இரச்சுவும் வெவ்வேறு தேசத்திருக்கில் அப்போது உபாதியுடைய சேதனங்கட்குப் பேத முண்டு. இரண்டுபாதியும் ஓரிடத்திருக்கில் அப்போது உபகிதசேதனங்கட் குப் பேதமின்று. இவ்வார்த்தை வேதாந்தபரிபாஷாதி கிரந்தங்களிற் கூறி யிருக்கின்றது. இவ்வாற்றால், இரச்சுவின் பிரத்தியட்ச ஞானசமயத்தில் இரச்சுவுபகிதசேதனமும், விருத்தி உபகிதசேதனமும் ஏகமாம். அந்தக்கா ணத்திலும், அதன்விருத்தியிலும் உள்ள அவைகளின் பிரகாசகமான சேதன மாத்திரம் சாட்சியெனப்படுதலின், இரச்சுஞானசமயத்தில் இரச்சுவுபகித சேதனத்தோடு அபின்னமானசாட்சியும் அவ்விரச்சுஞானத்தாற்றானே பாத மாவதால் கற்பிதசர்ப்பஞான நிவிர்த்திகூடும்.

(57) அன்றியும், சாட்சியானது தான் அஞ்ஞாதமாயின் திரிபுடிஞானம் அச்சாட்சியிலுற்பொருந்தாது ; ஆதலால், சர்வதிரிபுடிகளின்ஞானத்திலும் சாட்சிஞானம் அவசியமிருக்கின்றது ; அச்சாட்சிஞானத்தால் சர்ப்பஞான நிவிர்த்திகூடும். சர்ப்பத்திற்கும், அதன்ஞானத்திற்கும் அதிஷ்டானம் வெவ் வேறுகக்கூறினமையின் இவ்வளவு சங்கை சமாதானங்க ளுண்டாயின.

(58) இனி சர்ப்பத்திற்கும், அதன்ஞானத்திற்கும் அதிஷ்டானம் ஒன்றே என்னும் பட்சங்கூறுதும் : வாகியமான ஓரிரச்சு சேதனத்தைச் சர்ப்

பத்திற்கும், அதன்ஞானத்திற்கும் அதிஷ்டானமென்னல்கூடாது. எதனு லெனில்? எத்துணைஞானமுளவாகாநின்றனவோ அத்துணையும் பிரமாதா, அல்லது சாக்ஷியினுசிரிதமாம். வாகியமான இரச்சுசேதனவாசிரிதமாக ஞானங் கூடாது; அப்படிச் சர்ப்பத்திற்கும், ஞானத்திற்கும் அதிஷ்டானமாக அந்தக் கரண வுபகிதசாட்சிசேதனத்தை யொப்பிலுல் சரீரத்தினுள்ளே அந்தக்கரண தேசத்தில் சர்ப்பந்தோன்றவேண்டும். இரச்சுதேசத்திற் சர்ப்பந்தோன்ற வேண்டுவதில்லை. அகத்தே உதியாநின்ற சர்ப்பத்தின்மூற்றம் புறத்தே மாயையின் வலியாலுளதாமென வொப்பிலுல் ஆத்மக்கியாதிமதம்சித்தியாம் ஆகலின், இரச்சுவுபகிதசேதனம் ஞானத்திற்கதிஷ்டானமாதலும், அந்தக் கரணவுபகிதசேதனம் சர்ப்பத்திற்கதிஷ்டான மாதலுங்கூடாது. இவ்வாற் றல் சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானம் ஒன்றென்கை பொருந்தாதேனும், நேத்திரேந்திரியவாயிலாகப் புறம்போந்து இரச்சுவின்சமீ பமடைந்த இதுவெனும் ஆகாரமான அந்தக்கரணத்தின் விருத்தியுபகிதசேத னத்தின் ஆசிரிதமாயுள்ள வவித்தையின் தமோகுணக்கூறு சர்ப்பாகாரபரிணம மும், சத்துவகுணக்கூறு ஞானகாரபரிணமமுமாம். ஆதலால் விருத்தி உபகி தசேதன வாசிரிதமானவவித்தை சர்ப்பத்திற்கும், அதன்ஞானத்திற்கும் உபா தானகாரணமாம்; விருத்தியுபகிதசேதனம் அதிஷ்டானமாம். விருத்தி இரச் சுதேசத்தில் புறம்பே நேத்திரவாயிலாகப் போந்திருத்தலால் விருத்தி உபகித சேதனமும் புறம்பே உளது. இக்காரணத்தால், சர்ப்பத்திற் காசிரயமாதல் கூடும். அந்தக்கரணத்தினது சொரூபம் எவ்வளவுளதோ! சாட்சியினது சொரூபமும் அவ்வளவேயுளது. சரீரத்தினகத்தேயுள்ள அந்தக்கரணமே விருத்திரூப பரிணமமடைதலின், விருத்தியுபகிதசேதனம் சாட்சியாம்; ஆகவே அது ஞானத்திற் காசிரயமாதலுங்கூடும். எப்போது, இரச்சுவினது சாட்சாத்காரமாமோ! அப்போது இரச்சுசேதனம், விருத்திசேதனம் எனும் இரண்டும் ஏகமாம். ஆதலால் இரச்சுவின்ஞானத்தால் சர்ப்பநிவிர்த்தியும், அதன்ஞான நிவிர்த்தியுங்கூடும். ஓரிரச்சுவில் பத்துப்புருடர்க்குச்சர்ப்பம், தண்டமுதலிய பத்துப்பதார்த்தங்கள் வெவ்வேறுகத்தோன்றுக; அல்லது, சகலர்க்கும் சர்ப்பம் ஒன்றே தோன்றுக; அங்கே எவனுக்கு இரச்சுவின் சாட் சாத்காரமாமோ! அவனுக்கு அவனது விருத்திசேதனத்திற் கற்பிதமாகிய அத்தியாசம் நிவிர்த்தியாகிறது; மற்றவனுக்கு இல்லை. ஆதலால், விருத்தி சேதனமே கற்பிதத்திற்கு அதிஷ்டானம். இரச்சுமுதலிய விடயவுபகித சேதனம் அல்ல. இரச்சுவுபகிதசேதனத்தைச் சர்ப்ப, தண்டாதிகட்கு அதிஷ் டானமாக வொப்பிலுல் பத்துப்புருடர்கட்குத் தோன்றுநிற்கும் பத்துப் பதார்த்தங்களும் ஒவ்வொருவனுக்குந் தோன்றவேண்டும். நமது கொள்கை யால், எவனுடைய விருத்திசேதனத்தில் எப்பதார்த்தங்கற்பிதமோ! அஃ தவனுக்கே தோன்றும்; அந்நியனுக்கு இல்லை. இவ்வாற்றல் வாகியசர்ப்பாதி கட்கும், அவைகளின் ஞானங்கட்கும் விருத்தி உபகிதசாட்சியே அதிஷ்டா னம்; சொப்பன பதார்த்தங்கட்கும், அவைகளின் ஞானங்கட்கும் அந்தக்கரண வுபகித சாட்சியே அதிஷ்டானம். இவ்வாறு சதசத்தின் விலட்சணமான அநிர்வசனீயவவித்தையின் பரிணமமாகிய அநிர்வசனீயசர்ப்பாதிகள் அநிர் வசனீயக்கியாதி எனப்படும்.

(59) சங்கை—சதசத்தின் விலட்சண்ம் அநிர்வசனீயமென்னல்கூடாது. யாதிஞலெனின்? யாது சத்திற்குவிலட்சணமோ! அஃதசத்தாம்; ஆகவே, சத்திற்குவிலட்சணம் அசத்தல்லவென்று சொல்லுதல் அசங்கதமாமாகலின் எனின்? உந்தாம்—சொரூபரகிதத்தைச் சத்விலட்சணமென்றும், * வித்திய மான சொரூபத்தை அசத்விலட்சணமென்றுஞ்சொல்லில் ஓர் பதார்த்தத் திலே சொரூபாகித்தியம், சொரூபஸாகித்தியம் என்னும் இரண்டும்பொருந் தாது; ஆதலின் சதசத்விலட்சணத்திற்குப்பொருள் அங்ஙனமன்று.

(60) மற்றெங்ஙனமெனின்? காலத்திரயத்திலும் யாதொன்றிற்கு நாச மில்லையோ! அதுசத்து; யாதொன்றுபாதமாமோ? அதுசத்விலட்சணம். சசசிருங்கம் வந்தியாபுத்திரன்போலச் சொரூபமில்லது அசத்து; அதனின் விலட்சணம் சொரூபமுடையதாம்; இவ்வாற்றுல், பாதயோக்கிய சொரூப முடையது சதசத்விலட்சண சத்தத்திற்குப்பொருளாம்; சத்விலட்சணசத்தத் திற்குப் பாதயோக்கியமென்றுபொருள்; சொரூபமுடையது என்னும் இவ்வ ளவு சத்தத்திற்கு அசத்விலட்சண மென்றுபொருள்; ஆகலின், சதசத்விலட் சணம் அநிர்வசனீயமென்னல் அசங்கதமாகாமைகாண்க. இவ்வாற்றுல், எங்கே பிரம [ஹ்ரீ] ஞானமுண்டு! அங்கே அநிர்வசனீயபதார்த்தங்கண்முழு தும் உற்பத்தியாகின்றன. அந்நியசாஸ்திரங்களில் இராஜதத்தின் உற்பத்தி ஒப்பவில்லை. சத்கியாதிவாதி ஒருவர் ஒப்பினர்; அவர் மதத்தினும் அநிர்வச னீயக்கியாதி விலட்சணமாம்.

(61) இனி அத்தியாசவிலக்கணம்:—தனதபா † வாதிகரணத்திற்றன தவபாசம் அத்தியாசமாம். பாரமார்த்திகமாகவும், வியாவகாரிகமாகவும் இரஜ தாபாவத்தின் அதிகரணமான சுத்தியில் இரஜதமும், அதன்ஞானமும் அநிர் வசனீயமாகத் தோன்றுகின்றமையின், இவ்வத்தியாசவிலக்கணம் பொருந்து மாறுகாண்க; அல்லது, அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடையதினவபா சம் அத்தியாசமாம். அந்நியசாஸ்திரகாரர் ஒப்பியிருக்கும்அத்தியாசவிலக் கண மனேத்தினும் பாஷியகாரர் அருளிச்செய்திருக்கும் இவ்வத்தியாசவிலக் கணம் அசாதாரணமாம். வியாகரணரீதியால், அத்தியாசவவபாசபதங்கட்கு விடயமும் ஞானமும் வாச்சியமாம். ஆகலின், அர்த்தாத்தியாச, ஞானத்தி யாசபேதத்தால், அத்தியாசம் இருவகைத்து; அவற்றுள், அர்தாத்தியாசம் அநேக பிரகாரமாம். ஓரிடத்தில், கேவலம் சம்பந்தமாத்திரம் அத்தியாசமாம். ஓரிடத்தில், சம்பந்தவிசிஷ்டசம்பந்தி அத்தியாசமாம். ஓரிடத்தில், கேவலம் தருமம் அத்தியாசமாம். ஓரிடத்தில், தரும விசிஷ்ட தருமி அத்தியாச மாம். ஓரிடத்தில், அந்நியோந்நியாத்தி யாசமாம். ஓரிடத்தில், அந்நியத ராத்தியாசமாம். இவ்வந்நியதாராத்தியாசமும் இருவகைத்து. ஒன்று ஆத் மாவில் அநாத்மாத்தியாசம் மற்றொன்று அநாத்மாவில் ஆத்மாத்தியாசமாம்; மூறையே இவற்றைச் சொரூபாத் தியாசம், சம்சர்க்காத்தியாசமென்ப. யாதொருபதார்த்தத்தின் சொரூபம் அநிர்வசனீயமாகத்தோன்றுமோ அதைச் சொரூபாத்தியாசமென்பர்; அது இப்பியில் வெள்ளிபோல; இவ்வாறு, ஆத்

* வித்தியமானம்=இருப்பது. † அதிகரணம்=இடம்.

மாவில் அகங்காரமுதலிய அநாத்மாக்கள் சொரூபாத்தியாசமாம். யாதொரு பதார்த்தத்தின்சொரூபம் வியாவகாரிகமாகத்தான், பாரமார்த்திகமாகத்தான் முன்பேயிருக்க அதனதுசம்பந்தம் பிறிதொன்றனிடத்து அநிர்வசனீயமாகத் தோன்றுமோ! அது சம்சர்க்காத்தியாச மென்பர்; அஃதெவ்வாறேவெனின்? முகத்துக்கும், கண்ணுடிக்கும் யாதொரு சம்பந்தமுமின்றேய் இரண்டும் வியாவகாரிகமாக இருக்கக் கண்ணுடியில் முகத்தின் சம்பந்தந் தோற்றுகின்றதால் அதில் அநிர்வசனீயமாக முகத்தின் சம்பந்தமுண்டாயிருப்பதும், அப்படியே சிவப்புநிறமுடையது புடவையென்னுந் தோற்றரவால், சிவப்புநிறமுடைய பதார்த்தத்தின் தாதாத்மியசம்பந்தம் புடவையில் உண்டாயிருக்கின்றது. சிவப்புநிறமுடையது குசும்பாத்திரவியமாகலின், சிவப்புநிறத்தின் தாதாத்மியம் குசும்பாத்திரவியத்திலுண்டு, புடவையில் இல்லை; சிவப்புநிறமுடைய குசும்பாத்திரவியமும், புடவையும் வியாவகாரிகம்; குசும்பாத்திரவியத்திலுள்ள சிவப்புநிறத்தின் தாதாத்மியசம்பந்தம் அநிர்வசனீயமாகப் புடவையிலுண்டாயிருப்பதும், அப்படியே சிவப்புப்படிகமென்னுந் தோற்றரவால், புஷ்பத்திலிருக்கும் சிவப்பு நிறத்தின் தாதாத்மியசம்பந்தம் அஃதில்லாத ஸ்படிகத்தில் அநிர்வசனீயமாக வுண்டாயிருப்பதுங் காண்க.

இவ்வாறு, அநேகவிடங்களில் சம்பந்திகள் வியாவகாரிகமாக இருக்க அவைகளின் சம்பந்தங்களும், சம்பந்தஞானங்களும் அநிர்வசனீயமாக வுண்டாகின்றன. ஆத்மதன்மை சேதனத்தின்கண் உண்டு; அது அகங்காரத்திற்றோற்றுகின்றதால் ஆத்மசேதனத்தின் தாதாத்மியசம்பந்தம் அநிர்வசனீயமாக வகங்காரத்தி லுண்டாயிருக்கின்றது; ஆதலால், சேதனம் கற்பிதமன்று; மற்றியாது கற்பிதமெனின்? அகங்காரத்தில் சேதனத்தின் தாதாத்மியசம்பந்தங் கற்பிதமாம். இவ்வாறு, எங்கே பாரமார்த்திகபதார்த்த மில்லாதிருந்து தோற்றரவாமோ! அங்கே வியாவகாரிகபதார்த்தத்தில் பாரமார்த்திக பதார்த்தத்தின் சம்பந்தமும், சம்பந்தஞானமும் அநிர்வசனீயமாகவே யுண்டாகின்றன. வியாவகாரிகபதார்த்தம் இல்லாதிருந்து எங்கே தோற்றரவாமோ! அங்கே சம்பந்தியும், சம்பந்தியின்ஞானமும் அநிர்வசனீயமாக வேறே யுண்டாகின்றன.

ஓரிடத்தில் சம்பந்தமாத்திரமும், சம்பந்தமாத்திரத்தின் ஞானமும் அநிர்வசனீயமாக உண்டாகின்றன. சகல வதிஷ்டானங்களினும் அத்தியாசத்தின் விஷமசத்தை அநிர்வச னீயசத்தையே. எங்கே அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசமுண்டாமோ! அங்கேயும், அதிஷ்டானமாகிய அநாத்மா வியாவகாரிகம். ஆத்மா அத்தியஸ்தமன்று, ஆத்மாவின் சம்பந்தம் அநாத்மாவில் அத்தியஸ்தமாம்; ஆகலின், அஃதநிர்வசனீயமாம். யாதொன்றனிடத்து ஆதாரத்தன்மை தோற்றுமோ! அஃததிஷ்டானமெனப்படும். அவ்வாதாரத்தன்மை பரமார்த்தமாமேல் ஆகுக; அல்லது, ஆரோபிதமாமேல் ஆகுக. பரமார்த்தமாக ஆதாரமிருக்கில் அஃததிஷ்டானமாம் என்னும் ஆக்கிரகம் இத்தப்பிரசங்கத்தில் இல்லை. என்னை? ஆத்மாவில் அநாத்மாத்தியாசம் எப்படியோ! அப்படி அநாத்மாவில் ஆத்மாத்தியாசம் உண்டு. அநாத்மாவில்

பரமார்த்தமாக ஆத்மாவின் ஆதாரத்தன்மை இல்லை; ஆரோபித ஆதாரத் தன்மையே உண்டு. ஆதலால், ஆதாரமாத்திரத்தை இப்பிரசங்கத்தில் அதிஷ்டானமென்றனர். எங்கே அநாத்மாவில் ஆத்மாத்தியாசமுண்டு! அங்கே அதிஷ்டானம் அநாத்மாவாம்; அதுவியாவகாரிகசத்தையும், ஆத்மா பாரமார்த்திகசத்தையும் உடையனவாகலின் அதிஷ்டானத்தின் விஷமசத்தையுடையதின் அவபாசம் அத்தியாச விலக்கணமாதல் காண்க.

(62) அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை கூறினதற்குத் தாற்பரியம்:—சுத்தபதார்த்தத்தினும் விசிட்டம் பின்னமாம்; ஆகலின், அநாத்மாவில் ஆத்மாவின் சம்பந்தத்தின் அத்தியாசஞ் சொன்னோம்; அங்கே சம்பந்த விசிட்டஆத்மாவுக்கே அத்தியாசமாம்; சொரூபமாக ஆத்மா சத்தியமாகலின், அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை சொரூபதிருஷ்டியாற் கூறினர். அத்தியஸ்தங்கற்பிதமா மாகலின், அநாத்மசம்பந்தவிசிட்டம் கற்பிதமாயினும் சுத்தங்கற்பிதமாகாது; என்னே? சுத்தத்துக்கு விசிட்டம் பின்னமாகலின், விசிட்டத்தின் கற்பிதத்தன்மை சுத்தத்திலுண்டாகாது. கேவலம் ஆன்மசம்பந்தத்திற்கு அத்தியாசஞ்சொல்வதினும் சம்பந்தவிசிட்ட வான்மாவுக்கு அத்தியாசஞ்சொல்லுதலும், அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை சொல்லுதலுமே சிரேஷ்டமாம். எதனாலெனின்? கேவலம் சம்பந்தத்திற்கு அத்தியாசஞ் சொல்லில் அதிஷ்டானத்திற்கு ஆரோபிதத்தினும் விஷமசத்தைகூடாது. சேதனசம்பந்தத்தின் அதிஷ்டானமாகிய அந்தக்காரணமும், கடாதியும் வியாவகாரிகம்; அவைகளில் சேதனத்தின் சம்பந்தமும் வியாவகாரிகம், பிராதிபாசிகமன்று. சேதனத்தின் சம்பந்தம் பிராதிபாசிகமாமேல், பிரமஞானத்தாலல்லாமல் பாதமாகவேண்டும்; பாதமாகாமையின் ஆன்மசம்பந்தமும், அதிஷ்டான அநாத்மாக்களும் வியாவகாரிகசத்தையாம்; ஆகவே, விஷமசத்தையாகாமையின் அத்தியாசவிலக்கணங்கூடாது. ஆகையால், சம்பந்தவிசிட்ட வான்மா அநாத்மாவில் அத்தியாசமாம். விசேஷியபாகம் பாரமார்த்திக சத்தையாகலின் விசிட்டம் பரமார்த்தசத்தையும் அதிஷ்டானம் வியாவகாரிக சத்தையுமாய் இரண்டும் விஷமசத்தையாகலின், அத்தியாசவிலக்கணங் கூடுமென்பது. எங்கே பிரம [ஜ்ஞ] ஞானமுண்டோ! அங்கே சகல அநிர்வசனீய பதார்த்தங்களும் உற்பத்தியாம்.

(63) ஓரிடத்தில் சம்பந்தியின் உற்பத்தியுண்டு; அது சுத்தியில் இரஜதத்தின் உற்பத்தியாம். இரஜதத்தில் சுத்தியிலிருக்குந் தாதாத்மியசம்பந்தத்தின் உற்பத்தியாம். சுத்தியிலிருக்கும் தன் தாதாத்மியம் இரஜதத்தில் அந்நியதாக்கியாதியன்று; அப்படியே சுத்தியில் முன்னேயுள்ளதென்னுந் தன்மையாகிய தருமம் உண்டு; அதன் அநிர்வசனீயசம்பந்தம் இரஜதத்தில் உற்பத்தியாம்; அதுவும் அந்நியதாக்கியாதியன்று; இவ்வாற்றால், அந்நியோந்நியாத்தியாசத்திற்கும் இது உதாரணம், சம்பந்தாத்தியாசத்திற்கும் இது உதாரணம். சம்பந்தி அத்தியாசத்திற்கும் இது உதாரணம். அநிர்வசனீயவத்துவின்றோற்றாவைஞானத்தியாசமென்பர். ஞானத்தின் அநிர்வசனீயவிஷயத்தை அர்த்தாத்தியாசமென்பர். ஆதலால் ஞானத்தியாசம், அர்த்தாத்தியாசங்கட்கும்

இது உதாரணமாம். சுத்தியில் இராஜதத்வ தருமவிசிட்ட இராஜதத்தின் அத்தியாசம் உண்டு; ஆதலால், தருமி அத்தியாசத்திற்கும் இது உதாரணம். எங்கே அந்நியோந்நியாத்தியாசம் உண்டு! அங்கே இரண்டும் பரஸ்பரம் சொரூபமாக வத்தியாசமாகா. மற்றெப்படியெனின்? ஆரோபிதம் சொரூபமாக வத்தியாசமாம். சத்தியவஸ்துவின் தருமம், அல்லது சம்பந்தம் அத்தியாசமாம். சம்பந்தாத்தியாசமும் இருவகைத்தாம். ஓரிடத்தில் தருமத்தின் சம்பந்தம் அத்தியாசமாம்; அது சொல்லிய உதாரணத்தில் சுத்தியிலிருக்கும் இதுவென்னுந் தன்மைரூபமான தருமத்தின்சம்பந்தம் இராஜதத்திலத்தியாசமாவதாம். சிவப்புப்புடவை என்புழி, குசும்பாவிலிருக்குஞ் சிவப்புநிறமாகிய தருமத்தின் சம்பந்தவத்தியாசம் புடவையிலுண்டு. அந்தக்காரணத்திற்கு ஆன்மாவில் சொரூபமாக வத்தியாசமுண்டு. அந்தக்காரணத்தில் ஆன்மாவுக்குச் சொரூபமாக அத்தியாசம் இல்லை; பின்னே எப்படியெனின்? ஆன்மசம்பந்தம் அத்தியாசமாமாகலின், ஆன்மாவிற்குச் சம்சர்க்காத்தியாசமுண்டு. ஞானசொரூபம் ஆன்மாவாம்; அந்தக்காரணமன்று. ஞானத்தின் சம்பந்தம் அந்தக்காரணத்திற் றோன்றுகின்றது. ஆகலின், ஆன்மாவின் சம்பந்தாத்தியாசம் அந்தக்காரணத்திலுண்டு. அப்படியே கடம் விளங்குகிறது, படம் விளங்குகிறது என்றிவ்வாறு ஸ்புரணசம்பந்தம் சர்வ பதார்த்தங்களிலுந் தோன்றுகின்றதாகலின், நிகிலபதார்த்தங்களிலும் ஆன்மசம்பந்தத்தினத்தியாசமுண்டு. ஆன்மாவில் குருடு முதலிய இந்திரியதருமந் தோன்றுகின்றதாகலின், குருடு முதலிய தருமங்களின் அத்தியாசம் ஆன்மாவிலுண்டு. ஆன்மாவில் இந்திரியங்களின் தாதாத்மிய வத்தியாசமில்லை. என்னே? நான் குருடனென்று தோற்றராவாகின்றதல்லாமல் நான் நேத்திரமென்னுந் தோற்றராவாதலில்லை. ஆதலால், நேத்திராதருமமாகிய குருட்டுத்தன்மையின் அத்தியாசம் ஆன்மாவிலுண்டு; நேதத்திரத்தின் அத்தியாசம் இல்லை; இது தருமாத்தியாசத்திற்கு உதாரணம். நேத்திர முதலிய நிகிலபிரபஞ்சத்தின் அத்தியாசமும், ஆன்மாவிலுண்டெனினும், பிரமசேதனத்தில் சர்வபிரபஞ்சத்தின் அத்தியாசமும் உண்டல்லாமல் துவம்பதார்த்தத்தில் நிகிலபிரபஞ்சத்தின் அத்தியாசம் இல்லை. ஒரே பதார்த்தத்தின் ஓர் தருமவிசிட்டத்தின் அத்தியாசம் உண்டாகிறதேயன்றி மற்றோர் தருமவிசிட்டத்தின் அத்தியாசம் உண்டாகிறதில்லை. அவித்தைக்கு இப்படிப்பட்ட வற்புத மகிமையுண்டு; அஃதெங்ஙனம்? பிராமணத்தன்மை முதலிய தருமவிசிட்டமாகிய சரீரத்தின்தாதாத்மியவத்தியாசம் ஆன்மாவிலுண்டாயிருக்கிறதல்லாமல் சரீரத்தன்மை விசிட்ட சரீரத்தின் அத்தியாசம் உண்டாகவில்லை; இதனால், விவேகியும் நான் பிராமணன், நான் மநுடனென்று விவகரிக்கின்றனன்; நான் சரீரமென்று விவகரிக்கிலன். அவித்தைக்கு இப்படிப்பட்ட வற்புதமகிமை யிருத்தலால், ஆன்மாவில் இந்திரியங்களின் அத்தியாசமின்றிக் குருட்டுத்தன்மை முதலிய தருமாத்தியாசம் பொருந்துகின்றது; இது தருமாத்தியாசத்திற்கு உதாரணம். யாது அந்நியாசிரிதமாக விருக்குமோ! சுதந்தரமாக விராதோ! அதைத் தருமமென்பர்; ஆதலால், சம்பந்தமுந்தருமமே; அதன் அத்தியாசமும் தரு

மாத்தியாசமேயாம். சொல்லியவாற்றுல், அதிஷ்டானத்தினும் * விஷமசத் தையுடையதின் † அவபாசம் அத்தியாசமெனவும், அல்லது தனது அபா வாதிகாரணத்திற் றனதவபாசம் அத்தியாசமெனவும் அத்தியாசவிலக்கணம் இருவகைப்படுதல் காண்க. (உஎ)

(64) [தாஷ்டாந்தத்தில் அத்தியாசவிலக்கணங் கூறுகின்றார்.]

இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு மின்றி
ஒப்பமா யிரண்டற் றொன்று யுணர்வொளி நிறைவாய் நிற்கும்
அப்பிர மத்திற் றோன்று மைம்பூத விகார மெல்லாம்
செப்புகற் பனையி னாலே செனித்தவென் றறிந்து கொள்ளே. (உஅ)

இ - ள். இப்படிப்போல=மேற்சொல்லிய சர்ப்பமுதலியவை தமதபா வாதிகாரணங்களான இரச்சு முதலியவற்றில் அவபாசமாவனபோல—நாம ரூபங்கள் இரண்டும் இன்றி=ஓர் நாமமும், ஒருருவமும் தன்கணில்லாமல்—ஒப்பம் ஆய்=சமமாயும்,—இரண்டு அற்று ஒன்று ஆய்=துவிதமற்றேகமா யும்,—உணர்வு ஒளி நிறைவு ஆய்=ஞானமாயும், ஸ்புரணமாயும், பூரணமா யும்,—நிற்கும்=(தான் நின்றவண்ணமே) நிற்கின்ற,—அப்பிரமத்தில்=தம தபாவாதிகாரணமானபிரமத்தில் — ஐம்பூதவிகாரம் எல்லாம்=பஞ்சபூத முத லிய ‡ விகாரங்களனைத்தும்—தோன்றும்=அவபாசமாம்.—[ஆயின், இரச்சு வில் சர்ப்பாத்தியாசத்திற்கு இரச்சுவவச்சின்ன சேதனசிரிதவவித்தை, அல்லது இரச்சுவின் இதுவென்னும் ஆகாரமான அந்தக்காணவிருத்தி யவச்சின்னசேதனவாசிரிதவவித்தை உபாதானகாரணமும், இரச்சுவின் விசேஷ்யபஅப்பிரதீதி நிமித்தகாரணமுமாயிருப்பனபோல ஜகத்துக்கு நிமித்தகாரணமாயிருப்பனவும், ஜகத்துக்கு உபாதானகாரணமாயிருப்பன வுமாகிய பிரமத்திற்கு உபாதானநிமித்தம் யாவையோவெனின்?] செப்புகற்பனையினாலே =இனிக்கூறப்படும் கற்பனைகளாலே—செனித்த என்று = உண்டாயின வென்று—அறிந்துகொள்=நீ தெரிந்துகொள்வாய்.—எ - று.

“கற்பனைகள்” என்றது அவ்வியத்தம், ஈசுரஞானமுதலியவை; இனி வருஞ் செய்யுட்களால் இவைவெளியாம். இவைகளைக்கற்பனை என்றது,

“அவிச்சைவிச்சைகடாமோது மாத்திரமாமூலகுரை வழக்கத் துள்ளன வுண்மையிலில்லை”—

என்னுஞ் சுருதியாலென்க; அல்லது, கற்பனைக்குக்காரணங்களை ஆகு பெயரால் கற்பனையென்றுரைனினும் ஆம்.

“நாம ரூபங்க ளிரண்டு மின்றி, ஒப்பமா யிரண்டற்றொன்று யுணர்வொளி நிறைவாய் நிற்கும்”—

என்று இவ்வளவு விசேடணங்கூறினது சகத்தின் அபாவாதிகாரணம் பிரமமென விளங்குதற் பொருட்டாமென்க.

---

* விஷமசத்தை=சமமல்லாத சத்தை.

† அவபாசம்=தோற்றாவு. ‡ விகாரம்=காரியம்.

அங்ஙனமாயின் அதற்கு,

"நாம ரூபங்க ளிரண்டு மின்றி, ஒப்பமாய்"—

எனும் இத்துணைவிசேடணமே போதுமாகலான், ஏனையவிசேடணங்கள் எற்றிற்குக்கூறினதோவெனின்? சாங்கியமதத்தில் பிரகிருதிக்கு முக்குணமும் சமமாகும்போது "பிரதானம்" எ - ம், "அவ்வியாகிருதம்" எ - ம், அதுவே "சகத்காரணம்" எ - ம் கூறியிருப்பதால் அதில் அதிவியாப்தி நீக்குதற்பொருட்டு,

"நாம ரூபங்க ளிரண்டு மின்றி ஒப்பமாய்"—

என்றெழியாது, "இரண்டற்றென்றுய்" எ - ம், ஆகாசம் இரண்டற்றென்றுயிருத்தலினாலும், நியாயமதத்தில் அதனை "நித்தியம்" என்றெப்பியிருத்தலினாலும் அதில்அதிவியாப்திநீக்குதற்பொருட்டு, "உணர்வொளி நிறைவாய்" எனவுங்கூறினரென்க. ஞானம் அந்தக்கரணத்தின்கண்ணும், ஸ்புரணம் கடாதிக்கண்ணும் நிகழாநிற்கும்; இதனை, சுஉ - வது பிரசங்கத்திற்காண்க. பிரமம் பாரமார்த்திகசத்தையுடையதாகலானும், ஆகாசாதிகள் வியாவகாரிகசத்தை யுடையனவாகலானும் அதிஷ்டானத்தினும் விஷய சத்தையுடைய தனவபாசம் அத்தியாசமென்னும் இலக்கணமும் பொருந்து மாறறிக. (உஅ)

[முன்தோதுத்துக் கூறியதை வதத்துக் கூறுகின்றார்.]

அதுதானெப் படியென் றக்கா லநாதியாஞ் சீவ ரெல்லாம்
பொதுவான சுழுத்தி போலப் பொருந்துமவ் வியத்தந் தன்னில்
இதுகால தத்து வப்பே ரீசனுட் பார்வை யாலே
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே. (உகூ)

இ - ள். அது தான் = (அத்தியாசரூபமான) அச்சிருஷ்டிக்கிரமந்தான் —எப்படியென்றக்கால் = எங்ஙனம்உண்டாயினவென்று கேட்பாயாகின்,—அநாதி ஆம் சீவர் எல்லாம் = அநாதியாயுள்ள சீவகோடிகளியாவும்—பொது ஆன சுழுத்திபோல = (சகலர்க்கும்) சாதாரணவநுபவமானசுழுத்தியிற்போல—அவ்வியத்தந்தன்னில் = (சிருஷ்டிக்குமுன்னே அநாதியாய், சதசத்விலட்சணபாவபதார்த்தமாயுள்ள) மாயையின்கண்ணே—பொருந்தும் = (கருமவாசனைகளோகூட) விலீனமாயிருக்கும்.—இது = இம்மாயையான து—காலதத்துவப்பேர் = காலதத்துவமென்னும் நாமமுடைய—ஈசன் உட்பார்வையாலே = (சீவர்களின் கர்மபரிபாகவசத்தாலெழுவதான) ஈசுரனுடைய சிருஷ்டிபரியாலோசனரூபமாகிய திருஷ்டியினாலே—முது மூலசுபாவம்விட்டு = முன்னிருந்த (சாமியாவஸ்தாரூபமான) காரணத்தன்மையையொழித்து—முக்குணம் வியத்தம் ஆம் = (குலாலாதிகளின் சகாயத்தினால் மண்ணிற் கடசத்திபோல) மூவகைக் குணங்களாகப் பிரகாசமாம்.—எ - று.

சீவத்துவ, ஈசுரத்துவங்கள் அஞ்ஞானதீனமாதலால் அவ்வஞ்ஞானத் திற்கு அநாதிபாவரூபத்தன்மை சித்தியாமல் சீவேசுரர்களுக்குச் சித்தியா தாகலின், சீவர்க்கு அநாதியெனலும் விசேடணந் தந்ததால் மாயைக்கும் அதுதந்து விரித்தாம். அவ்வியத்தம், அஞ்ஞானம், அவித்தை, பிரகிருதி, மாயை, சத்தி என்பன ஒருபொருட்சொற்கள். அவித்தை, மாயை என்ப வற்றிற்கு ஏகதேசிகள் பேதங்கூறுவர். நையாயிகர்முதலியோர், ஞானபாவத் தையே அஞ்ஞானமென்பர். சித்தாந்தத்தில் ஆவரணவிக்ஷேபசத்திகளையுடை யதாய், அநாதியாய், பாவ [ஹாவ] ரூபமாயுள்ள பதார்த்தம் அஞ்ஞானம்.

(65) நாமரூபங்களாக வெளிப்படாமையின் அவ்வியத்தம், வித்தை யினால் நாசமாதலின் அவித்தை, பிரபஞ்சத்திற் குபாதானமாகலின் பிரகிருதி, தூர்க்கடத்தையுஞ் சம்பாதித்தலின் மாயை, சுதந்தரத்தன்மையின்மையின் சத்தி என்பர். அஞ்ஞானத்திற்கு அநாதிபாவரூபத்தன்மை இரண்டாம்பட லத்தில் மாயாலட்சணங் கூறுமிடத்து விரித்துரைக்கப்படும்; ஆண்டுக்காண்க. "சுழற்றிபோலப்பொருந்தும்" என்றதால், கர்மவாசனைகளோடுகூடஎன விரித்தாம். சர்வப்பிரபஞ்சத்தையும் நாசம்பண்ணுவதால் ஈசுரனுக்கு, "காலத் தத்துவம்" என்று பெயர்; இதனை கீதையிலும், விஷ்ணுசகஸ்ர நாமபாஷி யத்துங் காண்க. "ஈசனுட்பார்வையால்" எ - சு, உ - ம் பிரமகீதை.

"காலமுங் கன்மந் தானும் பரிபாக மான வாறே
ஞாலமுண் டாக நல்ல குணத்தினைக் கலந்து நிற்கும்
பாலதொன் றில்லா விந்தச் சத்திமான் படைத்தற் காக
வேலவே யெல்லா மாவோ மென்றுகொண் டிசைந்து பார்த்
தான்"—எனவரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (உக)

(66) [முக்குணங்களி னுருவமுதலியவற்றைக் கூறுகின்றார்.]

உத்தம வெளுப்புச் செம்மை யுரைத்திடு கறுப்பு மாகும்
சத்துவ குணத்தி னோடு ரசோகுணந் தமோகு ணந்தான்
சுத்தமோ டழுக்கி ருட்டாச் சொல்லுமக் குணமு மூன்றுய்
ஒத்துள வேனுந் தம்மு ளொருகுண மதிக மாமே. (ஙo)

இ - ள். வெளி.

"சத்துவ குணத்தி னோடு ரசோகுணந் தமோகு ணந்தான்"—எ - சு, உ - ம் பகவற்கீதை,

"சத்து வம்ரச சோடு தமசென
வுய்த்து வந்த பெயரை யுடையன
வெத்து வந்துவ முந்தரு கிற்பன
மெத்து வந்தவற் றின்செயல் வேறுகேள்"—என வரும்.

"உத்தம வேஞப்புச் செம்மை யுரைத்திடு கறுப்பு மாதும்" —எ - கு, உ - ம் பகவற்கீதை,

"பற்று மாசின்மை யாற்பளிங் கொப்பது
வுற்ற நல்லறி வானதுண் டாக்குவ
தெற்று மின்பமல் லாற்றுன்ப மென்பது
சற்று மில்லது சத்துவ மாவதே"—எ - ம்,

"ஓது ராக வுருவ முடையது
தாது கற்புரை யுண்ணிறஞ் சார்ந்தது
பேது செய்வினை யோடறி வைப்பின்னற்
கேது வாய திராசத மென்பதே"—எ - ம்,

"குறியு நீல மயக்கமுங் கோதிலா
நெறிக டம்மை யிகழ்தலு நித்திரை
செறித லானது மற்றிவற் ரூற்றிண்ணென்
றறிவை மாய்க்கு மதுதம மாவதே"—எ - ம் வரும்.

"சுத்தமோ டழுக்கி நட்டாச் சொல்லுழுக் குணமும்" எ - கு, உ - ம் ஈசுரகீதை,

"ஒத்தமுக் குணங்களாம் பகுதி யுத்தமஞ்
சத்துவ ஞானமாந் தமமஞ் ஞானமாம்
மத்திமங் கலப்பதா மற்றிம் மூன்றையும்
புத்தியின் விகாரமே புலப்ப டுத்துமால்"—எ - ம்,

"தம்முளோரு குணமதிகமாம்"—எ - கு, உ - ம் பகவற்கீதை,

"வாழுஞ் சத்துவ மற்றைய விரண்டையு மறைத்துத்
தாழு மற்றைய விரண்டுமத் தமோகுணந் தழைப்பின்
வீழுஞ் சத்துவந் தமங்களவ் விரசதம் விளைவி
னாழின் மற்றிவை யிரண்டுந்தாழ்ந் தொன்றுமிக் குளதாம்"—

என வரும்.

மற்றும் வருவனவற்ரூற் காண்க. (கூ0)

(67) [சகத்தின் உற்பத்திப்பிரதிபாதனத்தில் வேதத்திற் கபிப்பிராய மின்றென்பதை அறிவித்தற்பொருட்டு இடையே மற்றெருவகைச் சிருட்டி கூறுகின்றார்.]

ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேரூச் சொல்வர்
மருவுமவ் வியத்தந் தானே மகதத்வ மாகு மந்த
அருண்மக தத்து வந்தா னகங்கார மாகு மென்றும்
கருவகங் கார மூன்ரூக் காட்டிய குணமா மென்றும். (கூக)

இ - ள். இது ஒரு வழி ஆம்=(உபநிடதங்களிற் சொல்லுஞ் சகத்துற் பத்திக்கிரமங்களுள்ளே,) இது ஒருகிரமமாம்;—இத்தை—வேறு ஒருவழி யாச் சொல்வர்=மற்றொரு கிரமமாகவும் பெரியோர்சொல்லுவர்.—மருவும் அவ்வியத்தந் தானே=(கர்மவாசனைகளோடு சீவர்கள்) விலீனமாயிருக்கும் அவ்வியத்தமே—மகதத்வம் ஆகும் (என்றும்)=(சமஷ்டிபுத்திரூபமான) மக தத்துவமாகத் தோன்று மென்றும்,—அருள் அந்த மகதத்துவந்தான்=சொல் லிய அந்த மகதத்துவமே—அகங்காரம் ஆகும் என்றும்=அகங்கார தத்துவ மாகத் தோன்றுமென்றும்,—கரு அகங்காரம்=காரணமான அவ்வகங்காரதத் துவமானது—மூன்றுக்காட்டிய குணம் ஆம் என்றும்=மூவகையாக முன்னே அறிவித்த சத்துவாதிகுண ரூபங்களா மென்றும்.—எ - று.

" காட்டிய குணமாமென்றும், ஒருவழி வேறுச்சொல்வர் "—என ஒட்டுக.

இதனை,

" சத்துவ குணத்திற் றோன்றுந் தயங்குமூட் கரண நான்கும்
புத்தியிற் றியங்க ளோந்தும் போந்துதித் திடு மிராச
தத்தில்வாக் காதி யைந்துந் தகும்பிரா ணாதி யைந்து
மத்தமோ குணத்திற் றோன்று மகல்விசும் பாதி பூதம் "—

" அப்பெரும் பூதம் பஞ்சீ கரித்துல காகி நிற்கும் "—

என வேதாந்த சூடாமணியிற் கூறியபடி விரித்துக்காண்க.

(68) இன்னும் சாந்தோக்கியத்தில் சத்துரூப பரமான்மாவினின்றும் அக்கினி, சலம், பிருதிவி என்னும் இவை கிரமமாக உண்டாயிற்றென்றும், தைத்தீரியத்தில், ஆகாசம், வாயு, அக்கினி, சலம், பிருதிவி என்னும் இக்கிர மத்தால் பஞ்சபூதங்கள் உண்டாயினவென்றும், ஓரிடத்தில் சர்வசகத்தையும் பரமேசுரர் சிருட்டித்தாரென்று முறைதெரிக்காதும் உற்பத்தி கூறியிருக் கின்றது. வாஸ்தவமாகச் சகத்திருந்தால் அதனது உற்பத்தி அநேகபிரகார மாக வேதஞ்சொல்லாது. அநேக பிரகாரமாகச் சொல்லியிருப்பதாற் சகத்தி னுற்பத்திப் பிரதி பாதனத்தில் வேதத்திற் கபிப்பிராயமின்றும்; பின்னே யாது! அதனபிப்பிராயம் என்னில்? அத்வைதப் பிரமத்தை யறிவித்தற் பொருட்டுச் சகத்தை நிடேதஞ் செய்வதேயாம்; ஆகலின், மித்தையான சகத்தை யாதானும் ஒருவழியாக ஆரோபஞ் செய்ததென்க. எதுபோலெ னின்? விநோதத்தினிமித்தம் மேலே கிளப்புதற்கு வாணமருந்தை யுள்வைத் துத் தாருவினுல் யானையுருவமைப்பவன் அதன் செவி, வால் முதலிய அவய வங்கோணிப்போமாயின், அவற்றை ஒழுங்குறச்செய்யவேண்டுமென்று முயற் சியாதது போலவென்க.

(69) சூத்திரகாரரும், பாஷியகாரரும் இரண்டாம் அத்தியாயத்தில் உற்பத்திகூறுஞ் சுருதிவாக்கியங்களின் விரோதங்களைப்போக்கி தைத்தீரிய

சுருதி கூறியபடி ஒரே வழியாகச் சகத்துற்பத்தியில் சர்வ உபநிடதங்கட்கும் அபிப்பிராய மூளதென வருளிச்செய்தது எற்றிற்கோவெனின்? உற்பத்தி வாக்கியங்கட்குப் பூருவஞ்சொன்ன அபிப்பிராயமறியாத மந்த சிஞ்ஞாசை யுடையோர்க்கு உபநிடதங்களில் நாநாவிதமாகச் சகத்துற்பத்தி கூறியிருக் கின்றதைப் பார்த்துப் பிராந்தியுளதா மாகலின், அதை நிவிர்த்தித்தற்பொ ருட்டும், பிரமவிசாரத்தால் யதார்த்தஞானம் உதியாதோர்க்கு லயசிந்தன நிமித்தமும் அங்ஙனம் அருளிச்செய்த தென்க. சகத்துற்பத்தி நியமமின் றென்பதை,

"வான்முதலா மண்முதலா நீர்முதலாந் தீமுதலா மற்றைவாயுத், தான்முதலா மிப்படியே சிருட்டிதொறு மோரொன்று தலைமையாகும், யான்முதலோ ரயன்சிருட்டி சிலேடையா வுனக்குரைத்தே னிந்த வாற்றான், மேன்முதலா நியமமிதற் கொன்றுக விலதுபல விதமாய்த் தோன்றும்"—

என்னும் வாசிட்டத்தாலும் அறிக. (கூக)

[தான் எடுத்துக்கூறப்புகுந்த சிருட்டிக்கிரமத்தை இனி விவாணஞ் செய்கின்றார்.]

இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயை தோன்றும்
முக்குணங் களினுந் தூய்தா முதற்குண மாயை யாகும்
அக்குணப் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை
எக்குணங் களும்பற் றுதோ னிமித்தகா ரணனு மீசன். (கூஉ)

இ - ள். இக்குணங்களிலே=மேலேகூறிய சத்துவாதி குணங்களில்—விண் போன்று இருக்கும்=ஆகாசம்போல (அசங்கமாய், வியாபகமாய், சூட் சுமமா) யிருக்கும்—சிற் சாயை தோன்றும்=சித்தின் பிரதிபிம்பம் உண்டா கும்.—முக்குணங்களினும்—தூய்து ஆம் முதற்குணம்=சுத்தமான சத்துவ குணம்—மாயை ஆகும்=மாயையென்று சொல்லப்படும்;—அக்குணப் பிர மச் சாயை=அந்தச் சுத்தசத்துவப் பிரதான மாயையிற் பிரதிபலிக்கும்பிர மத்தின் பிரதிபிம்பமானது—அந்தரியாமி=அந்தரியாமியாம்;—மாயை எக் குணங்களும் பற்றுதோன்=(அவனே தனக்குச் சரீரமான) மாயையிலும், அதன் பரிணமமாகிய சர்வஞ்ஞத்வாதி கல்யாணகுணங்களுள்ளே எந்தக்குணங் களிலும் அகந்தை, மமதைரூப அபிமானமுறுத — நிமித்தகாரணன் ஆம் ஈசன்=நிமித்தகாரணனாகிய ஈசனும்.—எ - று.

"இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயை தோன் றும்"—

எனக்கூறியதால், தமோகுணத்திற் பிரதிபிம்பம் எதென்று ஆசங்கை வரில், அங்ஙனங்கூறியது சத்திநிபாதத்தால் என்க; அல்லது, அதன்காரிய மான பஞ்சதன்மாத்திரையின் சத்துவாம்ச சமஷ்டியினுற்றோன்றும் அந்தக்

காரணத்திலும், அதன்காரியமான சூஷ்மகாரவிருத்தியிலுந் தோன்றும் பிரதி பிம்பத்தை அங்ஙனங் கூறியதாம் என்க. இராசததாமதகுணங்களால்தான் அமிழ்த்தப்படாமல், அவைகளையமிழ்த்தி மேலிட்டிருப்பது சுத்தசத்துவ மாம். இரசோகுண தமோகுணங்களால் அமிழ்த்தப்பட்ட சத்துவம் மலின சத்துவமெனப்படும். சகல சீவர்கட்குள்ளுமிருந்து பிரேரணைசெய்வதால், "அந்தரியாமீ" "மாயை எக்குணங்களும் பற்றுதோன்" எ - து, இவற்கு உபாதியானமாயை "அமோககாரணியாகலின்;" இதனாலே ஈசான் நித் தியமுத்தன் என்பதும், "நிமித்தகாரணனும் ஈசன்" என்றதால், பிரமம் அசங்கமாகலின் சகத்திற்குக் கேவலம் சத்தாஸ் பூர்த்தியைக்கொடுப்பது மாத்திரமாய் இருப்பதேயல்லது சகசிருஷ்டியாதி யாதொரு சம்பந்தமுடைத் தானதன்றென்பதும், சகசிருட்டியாதிசெய்பவனும், பக்தானுக்கிரகார்த்தம் ஆவிர்ப்பவிப்பவனும், சகலவிபூதிகளை யுடைத்தானவனும் காரணப்பிரம மென்னும் இவ்வீசுரனே என்பதும் பெறப்படுகின்றன. சுத்தசத்துவகுண சகிதமாயையும், மாயைக்கதிஷ்டான சேதனமும், மாயையின்கண் ஆபாச மும் மூன்றுங்கூடி ஈசுரனெனப்படும்; இவ்வீசுரனே சகத்துக்குக் காரண மாம்; காரணம் இருவகைத்து. ஒன்று உபாதானகாரணம்; மற்றொன்று நிமித்தகாரணம். கடத்தின் சொரூபத்தில் மண்போல யாது காரியத்தின் சொரூபத்திற் பிரவேசமாமோ யாதின்றிக் காரியத்தின் ஸ்திதிகூடாதோ! அது உபாதானகாரணமெனப்படும். யாது சொரூபத்திற் பிரவேசமாகாமல் காரியத்திற்கு வேறுயிருந்து குலாலன்போலச் செய்கிறதோ! யாது நசித்த தால் காரியங்கெடாதோ! அது நிமித்தகாரணமெனப்படும். உலண்டுபோல, ஈசுரனுடைய சரீரமான சடமாகியமாயை சகத்துக் குபாதானகாரணம்; சேதனபாகம் நிமித்தகாரணமென்றறிக. (நஉ)

[இதுவுமது.]

ஈசனுக் கிதுசூ ழுத்தி யிதுவேகா ரணசரீரம்
கோசமா நந்த மாகுங் குணமிரா சதம வித்தை
தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவ கோடி
நாசமா முயிர்க்கப் போது நாமமும் பிராஞ்ஞ னாமே. (நங)

இ - ள். ஈசனுக்கு = ஈசுரனுக்கு — இது = இம்மாயையே — சூழ்த்தி = சூழ்த்தியவத்தையாம்; — இதுவே காரணசரீரம் கோசம் ஆனந்தம் ஆகும் = இதுவே காரணசரீரமும், ஆனந்தமயகோசமுமாகும். — இராசதகுணம் அவித் தை = இரசோகுணம் அவித்தை (யென்று சொல்லப்படும்;) — தேசறும் அவி த்தைதோறும் = மலினசத்துவமான அவித்தைகடோறும் — சிற்சாயை சீவ கோடி = (பிரதிபிம்பித்துள்ள) சித்தின்பிரதிபிம்பங்களே சீவகோடிகளாம். — நாசம் ஆம் உயிர்க்கு = நாசமாகாநிற்கும் உயிர்களுக்கு — அப்போது = (காரிய சரீரங்களையடையாமல் அவித்தைமாத்திர வுபாதியுடைத்தாயிருக்கும்) அச் சமயத்தில் — நாமமும் = பெயரும் — பிராஞ்ஞன் ஆம் = பிராஞ்ஞனென்று சொல்லப்படும். — எ - று.

(70) "தேசறு மவித்தை தோறும்" என, அவித்தைக்குப் பன்மைப் பொருடரும் இடைச்சொற் கொடுத்ததலால் அவித்தை அநந்தம்; அந்த அநந்த அவித்தைகளிலுல் அநந்த ஈசுரனும், அநந்த பிரமாண்டங்களுங் கற்பிதமா மென்றும், யாதொரு சீவனுக்கு ஞானமுண்டாமோ! அவனது அஞ்ஞான மும், ஈசுரனும், பிரமாண்டமுமே நிவர்த்தியாம், மற்றைச் சீவர்கட்குப் பந்த முண்டென்றுங் கூறுகின்ற வாசஸ்பதிமதமே இவ்வாசிரியர்க்கும் உடம்பா டென்ரு மாலோ வெனின்?

(71) அதில் ஈசுரன், சீவனுடைய அஞ்ஞான கற்பிதமென்று சொல்லி யிருக்கிறது; அது சுருதி, ஸ்மிருதி, புராணங்கட்கு விருத்தமாம்; அதுவே யன்றி, ஈசுரன் அநந்தம் என்பதும், தனித்தனி சீவரிடத்துச் சிருஷ்டி பேதஞ் சொல்லுவதும் விருத்தமாம். நாநாவாக அஞ்ஞானத்தை யொப்பி ஈசுவரனும், சிருட்டியும் ஒன்றென் றெறுப்புவதுங் கூடாதாதலால் இவர்க்கு அஃதுடம் பாடன்று.

(72) பின்னையாதோ! இவர் உடம்பாடெனின்? அஞ்ஞானம் ஒன்றே; அந்தகாரம்போல அம்ஸம் அநேகமாம். எவ்வந்தக்காரணத்தில் ஞானம் உண் டாமோ! அவ்வந்தக்காரண வச்சின்னசேதனத்துள்ள அஞ்ஞானக்கூறு ஞான த்தால் நிவிர்த்தியாம்; அது நிவிர்த்தியாகப்பெற்றவனே முத்தனும். எவ்வந் தக்காரணத்தில் ஞானம் உண்டாகவில்லையோ! அவ்வந்தக்காரணத்தில் அஞ் ஞானக்கூறும் உண்டு; பந்தமும் உண்டு. இவ்வாறு, அஞ்ஞானம் ஒன்றென் னும்பட்சத்தில் பந்தமோட்சவியவகாரங் கூடுமாகலின், அஞ்ஞானம் ஒன் றென்னும் பட்சமே இவர்க்குடம்பாடாம்.

(73) அன்றியும், அஞ்ஞானம் சீவேசுரவிபாகரகிதமான சுத்தப்பிரமத் தின் ஆசிரிதமாய் அச்சுத்தப்பிரமத்தைத்தானே * ஆச்சாதனம் பண்ணு கின்றது. எதுபோலெனில்? அந்தகாரமானது கிரகத்தையே ஆசிரித்துக் கொண்டு அக்கிரகத்தைத்தானே ஆச்சாதனம் பண்ணுவதுபோலென்க; இந்தபட்சத்தைச் சுவாசிரய, சுவவிஷய பட்சமென்பர்; இதற்கு, சுத்தப்பிர மமே மாயைக்கு ஆசிரயம், சுத்தப்பிரமமே மாயைக்கு விஷயம் என்று பொருள். மாயை சுத்தப்பிரமத்தை மறைப்பதே அதனைவிஷயம் பண்ணின தாம். சஞ்சேபசாரீரகம், விவரணம், வேதாந்தபஞ்சதசாவலி, அத்வைதசித்தி, அத்வைத தீபிகை முதலிய கிரந்தகாரர் அஞ்ஞானம் சுவாசிரயம், சுவவிஷயம் என்னும்பட்சமே அங்கீகாரஞ்செய்திருக்கின்றனர். வாசஸ்பதியென்பவர், அஞ்ஞானம் சீவன் ஆசிரிதமாய்ப் பிரமத்தை விஷயம்பண்ணுகிறதென்று ஒப்பினர். எதனலெனின்? நான் அஞ்ஞானி, பிரமத்தை யறிகின்றிலேன் என்னுந் தோற்றரவால் நான் என்னுஞ் சத்தத்துக்குப்பொருளானசீவன் அஞ் ஞானியென்பதால் அஞ்ஞானத்திற்கு ஆசிரயமாக விளங்குகின்றனன். பிர மத்தை யறிகின்றிலேன் என்பதால், அஞ்ஞானத்திற்குவிடயமாகப்பிரமந் தோற்றுகின்றது. இவ்வாற்ரல், அஞ்ஞானம் சீவனுசிரிதமாய்ப் பிரமத்தை விடயம் பண்ணுகின்றதென்பது வாசஸ்பதியினுடையமதம். சீவபாவம் அஞ்

---

* ஆச்சாதனம் = மறைத்தல்.

ஞானத்தின் காரியம்; அஞ்ஞானம் சுதந்தரமாக ஒருகாலும் இராதாதலால், நிராகிரய அஞ்ஞானத்தால் சீவபாவங்கூடாது. முன்னே ஏதேனும் ஒன்ற ஞசிரிதமாக அஞ்ஞானம் இருக்குமாகில், அப்போது அஞ்ஞானகாரியமாகச் சீவபாவம் உண்டாகும். சீவத்துவம்போல ஈசுரத்துவமும் அஞ்ஞானகாரியமா மாகலின், ஈசுரஞசிரிதமாகவும் அஞ்ஞானம் இன்ரும். பின்னே எதனது ஆசிரிதமாமெனின்? சுத்தப்பிரமத்தின் ஆசிரிதமாய் அநாதியாம். சேதன மும், அஞ்ஞானமும் அநாதி; அவைகளின் சம்பந்தமும் அநாதி; சேதன அஞ்ஞானங்களின் அநாதிசம்பந்தத்தால் சீவபாவமும், ஈசுரபாவமும் அநாதி யாம்; அங்ஙனமாயினும் சீவபாவமும், ஈசுரபாவமும் இரண்டும் அஞ்ஞானத் தின் அதீனமாம். ஆதலால், அஞ்ஞானத்தின் காரியமென்று சொல்லப் படும். சீவன் அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானரூப வாசிரயமென்னல் கூடாது; சுத்தப்பிரமமே அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானரூப வாசிரயமாம்; சுத்தப்பிரம மென்னும் அதிஷ்டானத்திஞசிரிதமாகிய அஞ்ஞானம் அந்தச்சுத்தப்பிரமத் தையேஆச்சாதனஞ்செய்கிறது; அதன்பின்னர் நான் அஞ்ஞானியாயிருக்கி றேன் என்னும் இவ்வாற்ரல், சீவன் அஞ்ஞானத்திற்கு அபிமானிரூப வாசி ரயமாகின்ரனென்பதும் இவர்க்கு உடம்பாடாமெனக்கொள்க. உற்பத் திக்கு ஆதியென்றபெயர்; அஃதில்லாதது அநாதி. "அநாதியாஞ்சீவரேல் லாம்" என்று, உகூ - ம் செய்யுளிற்கூறியிருத்தலின் அநாதிக்குநாசங்கூடா தென்றுவரும் ஆசங்கையை, பிராகபாவத்திற்குப்போலச் சீவத்துவத்திற்கு ஞானேதயத்தால் புலிகண்டோன்போல நாசங்கூடுமென்று நிவிர்த்தித்தற் பொருட்டே "நாசமாம் உயிர்க்கு" என்ரார். (கூஙு)

[இதுவுமது.]

அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா னந்த கோசம்
சுழுத்திகா ரணச ரீரஞ் சொன்ன திம்மட்டு மோக
முழுக்குணத் திரண்டால் வந்த மூலவா ரோபஞ் சொன்னேம்
வழுத்துசூக் குமவா ரோப வழியுமீ மொழியக் கேளாய். (கூச)

இ - ள். அழுக்கொடு பற்றும் சீவர்க்கு = மலினசத்துவமான அவித் தையையும், (அதன்காரியமானகிஞ்சிஞ்ஞத்துவமுதலிய ஈனகுணங்களையும் யான், எனதென்று) விசுவசிக்குஞ் சீவர்கட்கு — அதுவே ஆநந்தகோசம் = அவ்வவித்தையே ஆநந்தமயகோசமாம்; — சுழுத்திகாரணசரீரம் = (அதுவே) சுழுத்தியவத்தையும், காரணசரீரமுமாம். — இம்மட்டும் சொன்னது = இது வரையிற் கூறியது — முழுமோக இரண்டுகுணத்தால் வந்த = முழுமோகமான சுத்தசத்துவம், மலினசத்துவம் என்னும்மாயை, அவித்தைகளாலுண்டான — மூலஆரோபஞ்சொன்னேம் = காரண அத்தியாசத்தைக் கூறினேம். — வழு த்து சூக்கும ஆரோபவழியும் = இனிக்கூறத்தக்கதான சூட்சுமப்பிரபஞ்ச வத்தியாசக் கிரமத்தையும் — மொழிய கீகேளாய் = கூற கீகேட்பாய். — எ - று.

அவித்தையின்கண்ணே ஆவரணசத்தி உண்மையின், அது தமது நிச ரூபமான கூடஸ்தசொரூபத்தை மறைத்துக்கோடலால் அவித்தையிலும்,

அதன்காரியமான கிஞ்சிஞ்ஞத்வாதிகளிலும் யான், எனதென்னுஞ் செருக்குச் சீவர்கட்குளவாகலின், "அழக்கொடு பற்றுஞ் சீவர்க்கு" எ - ம், அவித்தை, மாயைகள் காரியப்பிரபஞ்சத்திற்கு மூலமாகலானும், தமோகுணம் போற் பிரியாமையானும் "மோக முழக்கத்தைத் திரண்டால் வந்த" என்றுங் கூறினர். (கூச)

[இதுவுமது.]

ஏமமா யாவி னேதை யீசனு ரருளி னாலே
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும். (கூடு)

இ - ள். ஏமமாயாவினேதை ஈசனுர் = (ஆவரணமின்மையின் சுத்தப்பிரமாஹமென்னும் அநுபூதியினல் எழுங்)களிப்பினையும், மாயையினல் சகசிருட்டியாதி, (திரிபுராசம்மாராதி, இராவணசம்மாராதி) லீலைகளையும் உடைய னை ஈசனுடைய — பூமலி அருளினாலே = சிறப்புமிக்கதண்ணருளினாலே — உயிர்கட்கு எல்லாம் = (சேடகருமத்தோடு அவ்வியத்தத்திற்கிடந்த) சீவர்களுக்கெல்லாம் — போகசாதனம் உண்டாக = போகசாதனமான (சூட்சும தேகங்கள்) உளவாதற் பொருட்டு — தாமதகுணம் = தமோகுணப் பிரதான மாயையானது — வீமம் ஆம் மூடல் என்றும் = கனமான ஆவரணமென்றும், — விவிதம் ஆம் தோற்றம் என்றும் = நாநாவான விட்சேபமென்றும் — இரண்டு சத்தி ஆய் = இருவகைச்சத்திகளாக — பிரிந்து தோன்றும். — எ - று. (கூடு)

[இதுவுமது.]

தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணும் விண்ணிற்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணும்
போற்றுமிவ் வைந்து நொய்ய பூதங்க ளென்று பேராம்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தநுவுண் டாகும். (கூசு)

இ - ள். சொல்லியதோற்றம் ஆம் சத்திதன்னின் = முன்சொல்லிய (அவ்விருவகைச்சத்திகளுள்ளே,) விட்சேபமாகிய சத்தியினின்றும் — விண் ஆம் = (சத்ததன்மாத்திரையான) ஆகாசமுண்டாம். — விண்ணின்காற்றது ஆம் = ஆகாசத்தினின்றும் (பரிசதன்மாத்திரையான) வாயுவுண்டாம். — காற்றின் தீயாம் = வாயுவினின்றும் (ரூபதன்மாத்திரையான) அக்கினியுண்டாம். — கனலின்நீர் = அக்கினியினின்றும் (ரசதன்மாத்திரையான) அப்புவுண்டாம். — நீரின்மண் ஆம் = அப்புவினின்றும் (கந்ததன்மாத்திரையான) பிருதிவியுண்டாம்; — போற்றும் இவ்வைந்தும் = சொல்லாநின்ற இவ்வைந்து தன்மாத்திரைகளுக்கும் — நொய்ய பூதங்கள் என்று பேர் ஆம் = சூட்சும பூதங்களென்றும், (அபஞ்சீகிருத பூதங்களென்றும்) நாமமாம்; — சாற்றும் = சொல்லாநிற்கும் — இவற்றின் = இவ்வபஞ்சீகிருத பூதங்களினின்றும் — போக சாதன தநு உண்டாகும் = போகசாதனமென்னுஞ் சூட்சுமதேகங்களுளவாம். — எ - று. மற்று - அசைநிலை. (கூசு)

[இதுவுமது.]

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும்
கோதில்வெண் குணத்தி லைந்து கூறுணர் கருவி யாகும்
ஓதிய பின்னை பைந்து மூளம்புக்கி யிரண்டா ஞான
சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே. (சுஎ)

இ - ள். ஆதிமுக்குணம் = தமக்குக்காரணமான தமோகுணப் பிரதான மாயையின்கணுள்ள தமசில் சத்துவம், தமசில் இராசதம், தமசில் தமசு என்னும் மூக்குணங்கள் — இப்பூதம் அடங்கலும் = இத்தன்மாத்திரைகண் முழுதினும் — தொடர்ந்து நிற்கும் = சம்பந்தித்து நிற்கும். — கோதில் வெண்குணத்தில் ஐந்துகூறு = (பஞ்சபூதங்களின்) குற்றமற்ற சத்துவகுணக்கூற்றில் (எடுத்து வெவ்வேறுக வைத்த) ஐந்துகூறும் — உணர்கருவி ஆகும் = ஞானேந்திரியங்களாம். — ஓதிய பின்னை ஐந்தும் = சொல்லிய அப்பூதங்களின் சத்துவகுணக்கூற்றில் (எடுத்து ஒன்றுகவைத்த) ஐந்துகூறும் — உளம் புத்தி இரண்டு ஆம் = மனம், புத்தியென்னும் இருவித பரிணமமுடைய அந்தக்காரணமாம். — இவ்வேழும் = இவ்வேழு தத்துவங்களும் — சற்குணப் பிரிவினால் = சத்துவகுணக்கூறுதலால் — ஞானசாதனம் ஆம் = ஞானசாதனமென்று சொல்லப்படும். — எ - று. (சுஎ)

[இதுவுமது.]

இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்
பிரா ணவா யுக்க ளென்றும் பெருந்தொழிற் கருவியென்றும்
பாவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகம்
சுராசுரர் நரர்வி லங்காய்த் தோன்றிய வுயிர்கட் கெல்லாம். (சுஅ)

இ - ள். இராசதகுணத்தில் = (அப்பஞ்சிகிருதபூதங்களின்) இராசோகுணக்கூற்றில் — எடுத்து வேறு இட்டஐந்துகூறும் = எடுத்துத் தனித்தனியேவைத்த ஐந்து கூறுக்கும், — ஐந்தும் = (ஒன்றுகவைத்த) ஐந்து கூறுக்கும் — பெருந்தொழில் கருவி என்றும் = (முறையே) பெரியகருமேந்திரியங்களெனவும், — பிராணவாயுக்கள் என்றும் = பிராணதிவாயுக்களெனவும் — பாவியபெயர் ஆம் = சொல்லாநின்றநாமங்களாம் ; — இந்தப்பதினேழும் = இப்பதினேழுதத்துவங்களும் — சுரர் அசுரர் நரர் விலங்கு ஆய் = தேவர், அசுரர், மநுடர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரங்களாய் — தோன்றிய = உண்டாகிய — உயிர்கட்கு எல்லாம் = ஜீவகோடிகளனைத்திற்கும் — இலிங்கதேகம் = சூட்சுமதேகங்களாம். — எ - று.

பஞ்சபூதங்களின் சத்துவகுணக்கூறுகள்கூடிச் சத்துவமென்னும் அந்தக்காரணத்தையுண்டாக்கின ; அந்தக்காரணம் ஞானத்திற்கு ஏது ; ஞானத்தினுற்பத்தி சத்துவகுணத்தால் அங்கீகரித்திருப்பதால் அந்தக்காரணம் பூதங்களினுடைய சத்துவகுணகாரியமாம். பஞ்சபூதங்களின் காரியமான பஞ்ச ஞானேந்திரியங்கட்கும் சகாயமாமாதலின், பஞ்சபூதங்களின் சமட்டிசத்துவகுணத்தில் அந்தக்காரணவுற்பத்தி சொல்லப்பட்டது. ஞானத்திற்குச் சாதன

மாகத் தேகத்தினுள்ளே இருத்தலின் அந்தக்கரணமெனப்பட்டது. பூதங்களின் சத்துவகுணகாரியமாகலால் அந்தக்கரணத்திற்குச் சத்துவமென்றும் நாமமாம். அந்தக்கரணத்தின் பரிணமத்தை விருத்தியென்பர்; அவ்விருத்தி நான்குவகையாம்: பதார்த்தங்களின் நன்கு, தீங்குகளே நிச்சயிக்கின்ற விருத்தியைப் புத்தியென்றும், சங்கற்பவிகற்பவிருத்தியை மனமென்றும், சிந்தாவிருத்தியைச் சித்தமென்றும், நான் என்னும் அபிமானவிருத்தியை அகங்காரமென்றுஞ் சொல்லுவர்; சித்தத்தை மனத்திலும், அகங்காரத்தைப் புத்தியிலும் அடக்கி இவ்வாசிரியர் அந்தக்கரணவிருத்தி இரண்டென்றார். பஞ்சபூதங்களின் சமட்டி இரசோகுணக்கூற்றால் பிராணனுற்பத்தியாம்; அப்பிராணன் கிரியாபேதத்தினாலும், ஸ்தானபேதத்தினாலும் ஐவகைப்படும். இருதயஸ்தானத்திருந்து பசிதாகக்கிரியைகளைச்செய்வது பிராணன், குதஸ்தானத்திருந்து மூத்திரமலங்களின் அதோநயனக்கிரியை செய்வது அபானன், நாபிஸ்தானத்திருந்து உண்ட அந்நந்தண்ணீர்களைப் பாகயோக்கியமாகச் சமம் பண்ணுவது சமானன், கண்டஸ்தானத்திலிருந்து உசுவாசநிசுவாசக் கிரியை செய்வது உதானன், சரீரமுழுதும் வியாபித்து இரசத்தைச் சேர்க்குங்கிரியையுடையது வியானன். ஒவ்வொருபூதங்களின் சத்துவகுணக்கூறுகள் ஒவ்வொரு ஞானேந்திரியங்களையும், இரசோகுணக்கூறுகள் ஒவ்வொரு கருமேந்திரியங்களையும் உண்டாக்கின. ஆகாசத்தின் சத்துவகுணக்கூற்றினால் சுரோத்திரமும், வாயுவின் சத்துவகுணக்கூற்றினால் துவக்கும், தேயுவின் சத்துவகுணக்கூற்றினால் நேத்திரமும், சலத்தின் சத்துவகுணக்கூற்றினால் * ரசனையும், பிருதிவியின் சத்துவகுணக்கூற்றினால் கிராணேந்திரியமும் உற்பன்னமாம்; இவை ஞானசாதனங்களாகலின், ஞானேந்திரியமெனப்பட்டன. ஞானம் சத்துவகுணத்தினால் உண்டாவதாதலால் பூதங்களின் சத்துவகுணத்தினின்றும் அவற்றிற்கு உற்பத்திசொல்லப்பட்டது. சுரோத்திரேந்திரியம் ஆகாசத்தின் குணத்தைகிரகணஞ்செய்வதால், அதற்கு ஆகாசத்தினின்றும் உற்பத்திசொல்லப்படும். இப்படியே எப்பூதத்தின் குணத்தை எவ்விந்திரியங்கிரகணஞ் செய்கின்றதோ! அப்பூதத்தினின்றும் அவ்விந்திரியத்திற்கு உற்பத்திசொல்லப்படும். ஆகாசத்தின் இரசோகுணக்கூற்றினால் வாக்கிந்திரியமும், வாயுவின் இரசோகுணக்கூற்றினால் பாணீந்திரியமும், தேசசின் இரசோகுணக்கூற்றினால் பாதேந்திரியமும், சலத்தின் இரசோகுணக்கூற்றினால் உபஸ்தேந்திரியமும், பிருதிவியின் இரசோகுணக்கூற்றினால் குதேந்திரியமும் உற்பன்னமாம். [கருமம்=கிரியை.] அப்பஞ்சேந்திரியங்களும் கிரியைக்குச் சாதனங்களாகலின், கருமேந்திரியமெனப்பட்டன. கிரியை இரசோகுணத்தினால் உண்டாவதாதலால் பூதங்களின் இரசோகுணக்கூற்றில் அவற்றிற்கு உற்பத்திசொல்லப்பட்டது. (கூஅ)

[இதுவுமது.]

இவ்வுடன் மருவுஞ் சீவ னிலங்குதை சதனென் றுவன்
இவ்வுடன் மருவு மீச னிரணிய கர்ப்ப னுவன்

---

* ரசனை=ஜிங்குவேந்திரியம்.

இவ்வுட லிரண்டு பேர்க்கு மிலிங்கசூக் குமச ரீரம்
இவ்வுடற் கோச மூன்று மிதுகளு வவத்தை யாமே. (கூகூ)

இ - ள். இவ்வுடல் மருவுஞ்சீவன் = இந்தச் சூட்சும சரீரத்திற்பொருந் திய சீவனுனவன்—இலங்குதைசதன் என்று ஆவன் = விளங்காநின்ற தைசத னென்று சொல்லப்படுவன் ;—இவ்வுடல் மருவும் ஈசன் இராணியகர்ப்பன் ஆவன் = இந்தச்சூட்சும சரீரத்திற்பொருந்திய ஈசுரன் இராணியகர்ப்பனென்று சொல்லப்படுவன் ;—இவ்வுடல் இரண்டு பேர்க்கும் = இப்பதினேழுதத்துவ மயமான தேகமே சீவேசர் இருவர்க்கும்—இலிங்க சூக்கும சரீரம் = இலிங்க தேகமென்னும் பெயரையுடைய சூட்சுமசரீரம் ;—இவ்வுடல் மூன்றுகோசம் ஆம் = இவ்விலிங்கதேகமானது பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம் எனும் மூன்று கோசங்களாம்.—இது கனு அவத்தை ஆம் = இது சொப்பனு வத்தையாம்.—எ - று. (கூகூ)

[இதுவுமது.]

சூக்கும சடமிம் மட்டுஞ் சொல்லினு மிப்பாற் றூலம்
ஆக்குமா ரோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தநுவும்போ கமுமுண் டாகக்
காக்குமவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் றானே. (சO)

இ - ள். சூக்குமசடம் இம்மட்டும் சொல்லினோம் = சூட்சுமசரீர (அத் தியாசத்தை) இதுகாறுங்கூறினோம்.—இப்பால் = இனி—தூலம் ஆக்கும் ஆரோபந் தானும் = தூலதேக (முதலியபிரபஞ்சத்தைச்) சிருட்டிக்கும் அத் தியாரோபத்தையும்—அடைவினில் மொழியக்கேளாய் = கிரமமாகச்சொல்லு துங்கேட்பாய் :—தாக்கும் இவ்வுயிர்க்கு = (லிங்கதேகங்களிற்) சம்பந்தித் திள்ள இவ்வுயிர்கட்கு—தூலதநுவும்போகமும் உண்டாக = (தத்தங்கருமத் திற்குத்தக்கதாகத்) தூலதேகங்களும், (அவ்வதேகங்களுக்குஹிதமான) போகங்களும் உளவாதற்பொருட்டு—காக்கும் அவ்வீசன் = (யாவரையும்) காவல்செய்யும் அவ்வீசுரன்—பஞ்சீகரணங்கள் செய்தான் = (தன்மாத்திரை கள் ஐந்தனையும்) பஞ்சீகரணஞ் செய்தனன்.—எ - று. தான் - ஏ - அசை. ()

[இதுவுமது.]

ஐந்து பூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூத மகாபூத மிவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூல தநுவண்ட புவன போகம். (சக)

இ - ள். ஐந்து பூதமும் பத்து ஆக்கி = ஐந்துபூதங்களுள், ஒவ்வொன் றையும் (சமமாக) இரண் டிரண்டு பாகம்பண்ணி—அவைபாதி நந்நான்கு ஆக்கி = அவைகளின் (ஒவ்வோர்பாதியையைவத்து) மற்ற ஒவ்வோர்பாதியை நான்கு நான்குபாகங்களாகப்பண்ணி—நந்துதம்பாதி விட்டு = பெரிய (அரைப்

பாகங்களில்) தத்தம்பாகத்தைவிட்டு--நான்கொடு நான்கும்கூட்ட=(மற்றை) நான்குபூதங்களின் அரைப்பாகங்களோடு நான்குபாகங்களையுஞ் சேர்க்கவே—தூலபூதம் வந்தன=தூலபூதங்களுண்டாயின;—மகாபூதம் இவற்றின் நின்றும்=(பஞ்சீகிருத) மகாபூதங்களான இவைகளினின்றும்–அண்டம் புவனம் போகம் நான்கு ஆம் தூல தது தந்தன=(இந்திரியங்களின் விடயமான ஸ்தூலப்) பிரமாண்டமும், (பிரமாண்டத்தினுள்ளே பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்னும் மேலேழுபுவனங்களும், அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்னும் கீழேழுபுவனங்களும் ஆகிய சதுர்த்தச) புவனங்களும், சீவர்களின் போக்கியத்திற்கு யோக்கியமான அந்நாதிகளும், போகத்திற்கு ஸ்தானமான சாராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உற்பீஜம் என்னும் நால்வகைப் பிறப்பாகிய (தேவர், மநுடர், பசுவாதிய) தூலசரீரங்களும் (ஈசுரனுற்) சிருஷ்டிக்கப்பட்டன.—எ - று.

பிரமாண்டலட்சணம், அஞ்ஞவதைப்பரணி,

"இரையுமெழு கடலும்வளை யாநின்ற வேழ்புவியு
மெழுமலையு முலகுபதி னலுந்த னூடுருவு
வரையுமிரு சுடரடைய வோரண்ட மாகுமிது
வடவிதையி னளவுமில தாலென்கொ லோதுவதே"—எனவரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

ஒவ்வொரு பூதங்களில் ஐவைந்து பூதங்களைச் சேர்த்துப்பண்ணுகிறதற்குப் பஞ்சீகரணமென்று பெயர். எந்தப்பூதங்கள் பஞ்சீகரணஞ் செய்யப்பட்டனவோ அவைகளைப் பஞ்சீகிருதமென்பர். பஞ்சீகரணத்திற்கு, உ - ம். பிரமகீதை,

"தன்மாத் திரைக ளைந்தினையு மோரொன் றிரண்டாய்ப் பகுத்தொன்றை, நந்நா லாக்கித் தன்பாதி யொழிந்த நாலி னுடன்கூட்டி, யின்னே யல்லா தவைநான்கி னியல்பிற் கூட்ட வாஞ்தி, பின்னே தூல பூதமெனப் பிறக்கு மெனவே பெயர்த் துரைத்தான்."-எனவரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (சக)

[இதுவுமது.]

தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவ னுகும்
தூலமே மருவு மீசன் சொலும்விராட் புருட னுகும்
தூலமே யன்ன கோசந் துன்னுஞ்சாக் கிரவ வத்தை
தூலகற் பனையீ தென்று தொகுத்தது மனத்திற் கொள்வாய். (சஉ)

இ - ள். சொல்லிய தூலமேமருவும் சீவன்=(பஞ்சீகிருதபூதகாரியமாக) முன்னே சொல்லிய தூலதேகத்திற் பொருந்துஞ் சீவனனவன்—விசுவன்

ஆகும் = விசுவன் என்னும் நாமமுடையனும்.— தூலமே மருவும் ஈசன் = அத்தூலதேக சமஷ்டியிற்பொருந்தும் ஈசுரன்— சொலும்விராட்புருடன் ஆகும் = சொல்லாநின்ற விராட் புருடனென்னும் நாம முடையனும்.— தூல மே அன்னகோசம் = ஸ்தூலதேகமே (அந்நவீரியத்திஞ லுண்டாய், அந்நத் திஞல் விருத்தியாதலால்) அந்நமயகோசமாம்;— தன்னும் சாக்கிர அவத் தை = (அத்தூலதேகமே சர்வேந்திரியங்களுஞ்) சம்பூர்ணமாக விவகரிக்கும் சாக்கிராவத்தைக்கிடமென்று சொல்லப்படும்.— தூலகற்பனை ஈது என்று = தூலப்பிரபஞ்ச அத்தியாரோபம் இதுவாமென்று— தொகுத்தது = (நாம்) சங் கேபமாகக்கூறியதை— மனத்தில் கொள்வாய் = (உனது) அந்தக்காரணத்தின் கண்ணே தாரணஞ்செய்து கொள்வாய்.— எ - று.

விளக்கிருக்கு மிடத்தையும் விளக்கென்றுற்போல அவத்தைநிகழும் சரீ ரத்தை, " அவத்தை " என்றார். மாயையிலும், அதன்காரியங்களிலும் மூன்று சரீரங்களும், பஞ்சகோசங்களும் உள. சுத்த சத்துவகுண சகிதமாயை ஈசுர னுடைய காரணசரீரம்; மலினசத்துவ குணசகித அவித்தைக்கூறு சீவனு டைய காரணசரீரம். மனம், புத்தி, பிராணபஞ்சகம், கருமேந்திரியபஞ்சகம், ஞானேந்திரிய பஞ்சகம் என்னும் இப்பதினேழுதத்துவம் சீவனுடைய சூட் சும சரீரம்; சர்வ சீவர்களுடைய சூட்சும சரீரங்களுங்கூடியே ஈசுரனுடைய சூட்சுமசரீரம். சம்பூர்ண ஸ்தூலப்பிரமாண்டம் ஈசுரனுடைய தூலசரீரம்; சீவர்களுடைய வியட்டி தூலசரீரம் பிரசித்தமாம்; இம்மூன்று சரீரங்களிலே பஞ்சகோசங்களுள. காரணசரீரத்துத ஆநந்தமயகோசமென்பர்; விஞ்ஞான மயம், மனோமயம், பிராணமயம் என்னும் மூன்றுகோசங்களுஞ் சூட்சுமசரீ ரத்திலடக்கம்; ஞானேந்திரியங்களைந்தும், நிச்சயரூப அந்தக்கரண விருத்தி யாகிய புத்தியும் விஞ்ஞானமயகோசமெனப்படும்; சங்கற்பவிகற்பரூப அந்தக் கரணவிருத்தியாகிய மனமும், ஞானேந்திரியமும் மனோமயகோசமாம்; பிரா ணாதிவாயுக்களைந்தும், கருமேந்திரியங்களைந்தும் பிராணமயகோசமாம்; தூல சரீரத்தை அந்நமயகோசமென்பர்; இவ்வாற்றால் மூன்று சரீரங்களிலே பஞ்ச கோசங்களும் உள. ஈசுரனுடைய சரீரத்தில் ஈசுரனுடைய கோசமும், சீவ னுடைய சரீரத்தில் சீவனுடைய கோசமும் உள. உறைக்குக்கோச மென்று நாமம்; உறையைப்போலப் பஞ்சகோசங்கள் ஆன்மாவின் சொரூபத்தை ஆச் சாதனஞ்செய்தலின், அந்நமய முதலியவை கோசமென்று சொல்லப்பட்டன. அநேக மந்தமதியுடைய புருடர்கள் பஞ்சகோசங்களாகிய அநான்ம பதார்த்தங் களில் யாதானும் ஒன்றை ஆன்மாவாகக்கொண்டு முக்கிய சாட்சியாகிய ஆன்ம சொரூபத்தில் பராமுகமாகவேயிருக்கின்றனர்; அங்ஙனமிருத்தற்கு அவை ஆன்மாவை ஆச்சாதித்திருத்தலே காரணமாமென்க.

(74) க - வது—விரோசனமதானுசாரியானபாமார், தூலசரீரமான அந்நமயகோசத்தையே ஆன்மாவென்பர். எதனாலெனின்? யாதொன்றி னிடத்து அகம்புத்தியுண்டாமோ! அது ஆன்மாவாம்; அவ்வகம்புத்தி தூல சரீரத்திலேயே உண்டாயிருக்கின்றது; நான் மநுஷியன், நான் பிராமணன் என்னுமிடத்து யாவர்க்கும் மநுடத்தன்மை, பிராமணத்தன்மை தூலசரீரத்

திலேயே காணப்படுகின்றது; ஆகலின், தூலசரீரமே ஆன்மாவென்பதிற் சந்தேகமில்லை. அன்றியும், யாதொன்றில் முக்கியப்பிரீதியுண்டாமோ! அது ஆன்மாவாம்; ஸ்திரீ, புத்திரர், தனம், பசு முதலியவை தூலசரீரத்திற்கு உபகாரமாமேல் அப்போதவைகளிற் பிரீதியுண்டாகின்றது; உபகாரமில்லையேற் பிரீதியில்லை! இவ்வாறு தூலசரீரத்திற்றானே முக்கியமான பிரீதியிருத்தலின் தூலசரீரமே ஆன்மாவாம் எனவும், அதனை வஸ்திர, பூஷண, அஞ்சன, மஞ்சன, நாநாவித போஜனாதிகளால் இனிதுறப்பேணுவதே பரம புருஷார்த்தமாம் எனவுங்கூறுவர்; இது அசுராசுவாமியான விரோசனனுடைய சித்தாந்தம்.

(75) உ - வது—வேறேசிலர், தூலசரீரமே ஆன்மாவன்று; தூலசரீரத்தில் யாதொன்றிருப்பதாற் சீவனவியவகாரமும், யாதொன்றில்லாமற் போவதால் மரணவியவகாரமுமுண்டாமோ அதுவே ஆன்மா; அவ்வான்மா தூலசரீரத்தைப்பார்க்கிலும் வேறும்; சீவன, மரணங்கள் இந்திரியங்களின் அதீனம்; எவ்வளவுகாலஞ் சரீரத்தில் இந்திரியங்களியங்குமோ! அவ்வளவு காலஞ் சீவனமுண்டு; இந்திரியங்கள் எப்போதில்லாமற்போமோ! அப்போதே மரணமென்று சொல்லப்படுகின்றது; நான் பார்க்கிறேன், கேட்கிறேன், சொல்லுகிறேன், என்று அகம்புத்தியும் இந்திரியங்களிலுண்டாகிறது; ஆதலால் இந்திரியங்களே ஆன்மாவென்பர்.

(76) ஊ - வது—இரணியகர்ப்பவுபாசகள், பிராணனே ஆன்மாவென்பர். எதனாலெனின்? ஒருவற்கு மரணசமயமான மூர்ச்சை எப்போதுண்டாகின்றதோ! அப்போது அவனுடைய சம்பந்திகளான புத்திராதிகள் பிராணசேடமிருந்தாற் சீவித்திருக்கிறதாகவும், அஃதில்லையாயின் மரணமாயினனென்றும் அறிகின்றனர்; அன்றியும், சரீரத்தில் நேத்திரேந்திரியமில்லாமல் அந்தன்சரீரமும், சுரோத்திரேந்திரியமில்லாமற் செவிடன் சரீரமும், வாக்கின்றி மூகன் சரீரமுமிருக்கின்றன; இந்திரியங்களும், அவற்றின் வியாபாரங்களுமின்றியும் சரீரம் நிலைத்திருக்கிறது; பிராணனின்றேல், அந்தக்கணமே மயானசமானமாக அமங்கலமாயும், பிறர்க்குப்பயங்கரமாயும் வீழ்ந்துவிடுகின்றது; நான்பார்க்கிறேன், கேட்கிறேன் என்னும் ஞானத்தினாலும் இந்திரியத்தினும் வேறுகவே ஆன்மா சித்தித்திருக்கிறது; எப்படியெனின்? நேத்திரசொரூபனை நான் பார்க்கிறேன், சிரவணசொரூபனை நான் கேட்கிறேன் என அறிவுண்டாமாயின் நேத்திராதிரூபத்தான் ஆன்மாவென்று சித்திக்கும்; அப்படிக்கின்றி நேத்திரமுடைய நான்பார்க்கிறேன், சுரோத்திரமுடைய நான் கேட்கிறேனென அறிவுண்டாவதால் இந்திரியத்தினும் ஆன்மா வேறுதான்; அன்றியும், சுழுத்தியில் சர்வ இந்திரியங்களும் அபாவமாயிருந்தும் பிராணனுடைய இருப்பினால் சீவன வியவகார முண்டாகின்றதாகலின் சீவனமும், மரணமும் இந்திரியங்களுடைய அதீனமல்ல; தூலசரீரங்களினின்றும் பிராணவியோகத்தையே மரணமென்பராதலானும், சீவன மரணங்கள் பிராணனுடைய அதீனமேயாகலானும் அதுவே ஆன்மாவாமென்பர்.

(77) சு - வது—வேறுசிலர், பிராணன் சடமாகலின் கடம்போல அநான்மாவாம்; பந்தமோட்சம் மனத்தின் அதீனம்; விடயத்தில் ஆசக்தியுள்ள மனம் பந்தத்திற்கேது; விடயவாசனைவிட்ட மனம் மோட்சத்திற்கேதுவாம்; மனத்தின் சம்பந்தத்தாலேயே இந்திரியங்கள் ஞானத்திற் கேதுவாகின்றன; மனத்தின் சம்பந்தமின்றி இந்திரியங்களால் ஞானமுண்டாகமாட்டாது. ஆதலால், சர்வ வியவகாரத்திற்கும் ஏது மனந்தான்; அதுவே ஆன்மாவாமென்பர்.

(78) ரு - வது—க்ஷணிகவிஞ்ஞானவாதிகளான பௌத்தர், மனத்தின் வியாபாரம் புத்தியின் அதீனமாம்; புத்தியின் ஆகாரமே மனமாகத் தோன்றுகின்றதாகலின், க்ஷணிகவிஞ்ஞானரூபபுத்தியே ஆன்மாவாம்; மனமன்று. என்னை? சம்பூர்ண பதார்த்தங்களும் விஞ்ஞானத்தினாகாரமே; அவ்விஞ்ஞானம், பிரகாசரூபமாம்; க்ஷணத்துக்கு க்ஷணம் அவ்விஞ்ஞானம் நாசமாம்; பூர்வவிஞ்ஞானத்திற்குச் சமானமாக அந்நியவிஞ்ஞானமுண்டாவதால் பூர்வவிஞ்ஞானம் நாசமாம்; அப்படியே மூன்றும் விஞ்ஞானத்தினுற்பத்தியால் இரண்டாம் விஞ்ஞானமும், நான்காம் விஞ்ஞானத்தினுற்பத்தியால் மூன்றும் விஞ்ஞானமும் நாசமாம்; இவ்வாறு நதியின் பிரவாகம்போல விஞ்ஞானதாரை யுண்டாகாநின்றது; அவ்விஞ்ஞானதாரை இருவகைத்தாம்: ஒன்று ஆலய விஞ்ஞானதாரை, மற்றொன்று பிரவிர்த்தி விஞ்ஞானதாரை; அகம், அகம் எனும் விஞ்ஞானதாரை ஆலய விஞ்ஞானதாரை, அதுவே புத்தி. இது கடம், இது சரீரம் என்னும் விஞ்ஞானதாரை பிரவிர்த்தி விஞ்ஞானதாரை. ஆலய விஞ்ஞானதாரையினின்றும் பிரவிர்த்தி விஞ்ஞானதாரை உண்டாம். மனத்தின்சொரூபமும் பிரவிர்த்தி விஞ்ஞானதாரையில் உள்ளது; ஆகலின் அது ஆலய விஞ்ஞானதாரை ரூபமான புத்தியின் காரியமாம்; அப்புத்தியே ஆன்மாவாம். ஆலய விஞ்ஞானதாரையில் பிரவிர்த்தி விஞ்ஞானதாரையின் பாதசிந்தனத்தால் உளதாகும் நிர்விசேஷ க்ஷணிக விஞ்ஞானதாரையின் ஸ்திதியே மோட்சமாமென்று இவ்வாறு புத்தியையே க்ஷணிகரூபமாகவும், சுயம் பிரகாசரூபமாகவுங் கற்பனைசெய்து அதனையே ஆன்மாவென்பர்.

(79) சூ - வது—பூர்வமீமாஞ்சையின் வார்த்திககாரரான பட்டர், மின்னலைப்போன்ற க்ஷணிகரூபம் ஆன்மாவன்று; ஆன்மா ஸ்திரசொரூபம்; அது சடரூபமும், சேதனரூபமுமாய் இருக்கும்; எதனாலெனின்? சுழுத்தியினின்றும் விழித்த புருடன் நான் சடனாக நித்திரைபண்ணினேனென்பதால் ஆன்மா சடரூபமாம்; ஆயினும், விழித்தவுடன் ஸ்மிருதி யுண்டாகின்றது; அஞ்ஞானத்தின் ஸ்மிருதியுண்டாகமாட்டாது; ஆன்மசொரூபத்தினும் வேறாகச் சுழுத்தியில் ஞானத்திற்கு வேறுசாதனங்களில்லை; ஸ்மிருதிக்கு ஏதுவாகச் சுழுத்தியிலும் ஞானமுண்டு; அந்த ஞானம் ஆன்மாவின் சொரூபமாகவே இருக்கின்றது; இப்படிச் சடரூபமாகவும், ஞானரூபமாகவுமிருத்தலால் ஆன்மா மின்மினிபோலப் பிரகாச, அப்பிரகாசரூபமாமென்பர்; இப்படிப் பிரகாச, அப்பிரகாசரூபமாகவுள்ளது ஆநந்தமயகோசமாம். எதனாலெனின்? சுழுத்தியிலுள்ள சேதனத்தின் ஆபாசகித அஞ்ஞானமே ஆநந்தமயகோசமென்பர்;

அங்கே ஆபாசஞ்ஞ பிரகாசரூபம்; அஞ்ஞானம் அப்பிரகாசரூபம்; இதனால் பட்டருடைய மதத்தில் ஆநந்தமயகோசமே ஆன்மாவாம்.

(80) எ - வது—சூனியவாதியான பௌத்தர், ஏகமான ஆன்மாவைப் பிரகாசரூபமாகவும், அப்பிரகாசரூபமாகவுஞ் சொல்லுதல் கூடாது; மின்மினியினுடைய ஒருகூறு பிரகாசரூபம், மற்றொருகூறு அப்பிரகாசரூபம்; அதைப்போலக் கூறுபாடில்லாத ஆன்மாவின்கண்ணே உபயரூபஞ் சொல்லுதல் அசங்கதம்; உபயரூபசித்தியின்பொருட்டு ஆன்மாவைக் கூறுபாடுடையதாகவே ஒப்பவேண்டும். கூறுபாடுடையபதார்த்தங்களான கடாதிகள் உற்பத்தி நாசமுடையனவாம்; அப்படியே ஆன்மாவுங் கூறுபாடுடைய தாமேல் உற்பத்திநாசமுடையதாகவே ஒப்பவேண்டும். உற்பத்தி, நாசமுடைய பதார்த்தம் யாது அது உற்பத்திக்கு முன்னும், நாசத்திற்குப்பின்னும் அசத்தாம்; யாது ஆதியந்தத்தில் அசத்தாமோ! அது மத்தியிலும் சத்தாகமாட்டாது; அசத்தேயாம். ஆதலால், ஆன்மா அசத்துரூபமாம்; அப்படியே ஆன்மாவிற்கு வேறான சம்பூர்ண பதார்த்தங்களும் உற்பத்தி நாசமுடையனவும், அசத்துரூபமுமாம்; இவ்வாற்றால் ஆன்மா, அநான்மாக்களான சகலவத்துக்களும் அசத்துரூபமேயாவதால் சூன்யமே பரமதத்துவமாமென்பர்; இது சூன்யவாதிகளான மாத்தியமிக பௌத்தருடைய மதம்; அவர்களும் அஞ்ஞானரூபமான ஆநந்தமயகோசத்தைப் பிரதிபாதனஞ் செய்தனர்.

(81) அ - வது—பூருவமீமாஞ்சையின் ஏகதேசியானபிராபாகரும், நையாயிகரும் ஆன்மாச்சூன்யரூபமன்று; எவனொருவன் ஆன்மாவைச் சூன்யரூபமாக ஒப்புவனே! அவனே நீ சூன்யரூபத்தை அநுபவித்தனையா? அல்லது, இல்லையா? என்று வினவுவாம். சூன்யத்தை அநுபவிக்கவில்லையெனின்? அப்போது சூன்யமில்லையென்று சித்தித்தது. சூன்யத்தை அநுபவித்தேனெனின்? யாவன் சூன்யத்தை அநுபவித்தனனே? அவ்வான்மாச் சூன்யத்தினும் விலட்சணமென்று சித்தித்தது. ஆகலின், சூன்யத்தின் விலட்சணமாய் ஆன்மாவுளது; அதன்கண் மனத்தின் சையோகத்தால் ஞானமுண்டாகின்றது. ஞானகுணத்தினால் ஆன்மாச்சேதனமென்று சொல்லப்படும். சொரூபமாக ஆன்மாச்சடமாம்; அப்படியே சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம் முதலிய குணங்கள் ஆன்மாவின்கணுண்டென்பர். அவர்கள் மதத்திலும் ஆநந்தமயகோசமே ஆன்மாவாம். விஞ்ஞானமயகோசத்திலுள்ள புத்தியை ஆன்மாவினுடைய ஞானகுணமென்பர். என்னே? ஆநந்தமயகோசத்தில், சேதனங்கூடமாயிருப்பதால் அது விவேகமின்மையர்க்கு விளங்காது; ஆதலால் பிரபாகரும், நையாயிகரும் ஆன்மாவைச் சுழுத்தியில் ஞானமின்மையதாக ஒப்பிச் சொரூபமாகச் சடமென்பர். இதனால், ஆநந்தமயகோசத்திலேயே அவர்கட்கு ஆன்மப்பிராந்தியிருக்கின்றது. நித்திய ஞானத்தைச் சீவனிடத்து ஒப்பவில்லை; அநித்திய ஞானத்தை ஒப்பினர்; அவ்வநித்திய ஞானம் சித்தாந்தத்தில் அந்தக்கரண விருத்தியாகிய புத்திரூபமாம்; ஆகலின், அவர்கள் மதமும் நன்றன்று. என்னே? ஞானத்திற்கு வேறான கடாதி சடவத்துக்கள் அநித்தியங்களாம்; அப்படியே ஆன்மாவும் ஞானரூபமன்

றெனில் கடாதிகளைப்போலச் சடமாவதால் அநித்யமாம்; ஆகவே, மோட்ச நிமித்தமான சாதனங்கள் நிஷ்பலமாம். இவ்வாறு வேதாந்த வாக்கியங்களில் விசுவாசமின்மையான பகிர்முகமுடைய அநேகர் பஞ்சகோசங்களில் யாதானும் ஒவ்வொன்றை ஆன்மாவாக ஒப்பி முக்கிய ஆன்மசொரூபமான சாட்சியை ஒப்பாதிழக்கின்றனர்; இங்ஙனம் ஆன்மசொரூபந் தெரியவொட்டாமல் மறைத்திருத்தல்பற்றி அந்நமய முதலியவை கோசமெனப்பட்டன.

(82) சீவனுடைய பஞ்சகோசங்கள், சீவனுடைய யதார்த்த சொரூபமான சாட்சியை எப்படி ஆச்சாதனஞ் செய்திருக்கின்றனவோ! அப்படியே ஈசுரனுடைய சமட்டி பஞ்சகோசங்கள் ஈசுரனுடைய யதார்த்த சொரூபத்தை ஆச்சாதனஞ் செய்திருக்கின்றன. எதனாலெனின்? ஈசுரனுடைய யதார்த்த சொரூபம் தற்பதத்தினிலட்சியமாம்; அதனை விடுத்துச் சிலர் மாயாரூப ஆநந்தமயகோச விசிட்டனென்னுந் தற்பதவாச்சியமாகிய அந்தரியாமியையே பரமதத்துவமென்பர். அப்படியே இரணியகர்ப்பன், வைசுவாநரன், விஷ்ணு, பிரமன், சிவன், கணேசன், தேவி, சூரியன் முதல் அசி, குந்தாலம், அரசு, எருக்கு, மூங்கில் பரியந்தமான பதார்த்தங்களில் பரமான்மாவென்னும் பிராந்தியை அடைந்துளர். சர்வ பதார்த்தங்களிலும் லட்சியபாகம் பரமான்மாவினும் பின்னமில்லை; அங்ஙனமிருப்பினும் அவ்வவ்வுபாதி சகிதங்களைப் பரமான்மாவாக ஒப்பியிருப்பது அவர்களது பிராந்தியேயாம்; இவ்வாறு பஞ்சகோசங்களால் ஆவிருதமான சீவேசுரருடைய பரமார்த்த சொரூபத்தினின்றும் பராமுகமாய்த் தேகாதிகளில் ஆன்மப்பிராந்தி யுடையராய்ப் புண்ணிய பாபகர்மங்களைச் செய்கின்றனர். அந்தரியாமி முதல் மூங்கில்பரியந்தமான ஒவ்வொன்றையுமே ஈசுரரூபமாகக் கருதி ஆராதனஞ்செய்து சுகத்தையிச்சிக்கின்றனர்; அவர்கள் ஆராதிக்கும் உபாதியினுடைய தாரதம்மியத்துக்குத் தக்கபயனும் அவைகளால் அவர்கட்கு உளதாம்; ஆயினும் பிரமஞானத்தினலன்றி மோட்சமுளதாகாது. மோட்சவிச்சையுடையோர் சீவேசுரருடைய சொரூபத்தைப் பஞ்சகோசத்தினின்றும் வேறு பிரித்தறியக்கடவர்கள். மாயாகாரியங்களை விஸ்தாரமாக நிரூபணஞ்செய்யப்புகில் கோடி பிரமருடைய ஆயுளாலும் அந்தமாகாவென்று வான்மீகி **பகவான்** அநேக இதிகாசங்களால் வாசிட்டத்தில் நிரூபித்திருப்பதால், "**தொகுத்ததுமனத்திற்கொள்வாய்**"—என்றார். (அஉ)

சீரிய வீச னுக்குஞ் சீவர்க்கு முபாதி யொன்றேல்
ஆரிய குருவே பேத மறிவதெப் படியென் றக்கால்
காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன்
வீரிய மிகுச மட்டி வியட்டியாற் பேத மாமே. (அங)

இ - ள். சீரிய ஈசனுக்கும் சீவர்க்கும்=(சர்வஞ்ஞத்வாதி கல்யாண குணங்களினால்) சிறந்த ஈசுரனுக்கும், சீவர்கட்கும்—உபாதி ஒன்றேல்=(தூலசூட்சும) உபாதி ஒன்றுயின்,—ஆரிய குருவே=சன்மார்க்கத்திருக்கும் ஆசிரியரே—பேதம் அறிவது எப்படி என்றக்கால்=(இவன் சீவன், இவன் ஈசனென்

னும்) வேறுபாடறிவதெங்ஙனமென்று கேட்பாயாகில் — காரிய உபாதி சீவன் = காரியவுபாதியையுடையன் சீவன்;—காரண உபாதி ஈசன் = காரணவுபாதியினையுடையன் ஈசுரன்.—(இவ்விருவரும்) வீரியம் மிகுசமட்டி வியட்டியால் பேதம் ஆம் = மகத்துவமிக்க சமட்டியினாலும், வியட்டியினாலும் பேத முளராமென்றறிதி —எ - று. ஏ - அசை.

ஆரியத்தன்மை, "செயலினுரிய" என்னும் வாசிட்டச்செய்யுளான் அறிக. காரணவுபாதி, காரியவுபாதிகள் முறையே மாயை, அந்தக்கரணம் என்று சஞ்சேபசாரீரகத்திற் கூறியுள்ளன. (சஉ)

[சமஷ்டிவியஷ்டிகளினியல்பு.]

மரங்கள்போல் வியட்டி பேதம் வனமெனல் சமட்டி பேதம்
சரங்கடா வாங்கள் பேதத் தனியுடல் வியட்டி யென்பார்
பரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பதே சமட்டி யென்பார்
இரங்கிய பலசீ வர்க்கு மீசர்க்கும் பேத மீதே. (சச)

இ - ள். வெளி.

இதற்கு, உ - ம். வேதாந்த சூடாமணி,

"மிகுமரப் பன்மை தண்டலை யெனல்போன் மிகுமுயிரெலா மூநா னெனுமோர், தகுமபி மான மிறைசமட் டியதாந் தனித்தனி மரம்பெயர் கொளல்போற், பகுமுட லீறும் வேறுவே றுகப் படுமபி மானமோர்ந் துரைப்பிற், றொகுமுயிர் வியட்டி யுருவமென் குவர் மேற் றொம்பத விலக்கிய முரைப்பாம்"—எனவரும்.

மற்றும் வருவனவற்றுற்காண்க. (சச)

(83) [அத்தியாரோபங் கூறிப்போந்ததற்குபயோகத்தை இனிக்கூறுகின்றார்.]

கற்பனை வந்த வாறு காட்டினேங் காண்ப வெல்லாஞ்
சொற்பனம் போலு மென்றே துணிந்தவன் ஞானி யாவான்
செற்புதை மழைக்கா லம்போய்த் தெளிந்தவா காசம் போல
அற்புத முத்தி சேரு மபவாத வழியுங் கேளாய். (சஞ)

இ - ள். கற்பனை வந்த ஆறு = அத்தியாரோபமுண்டான வழியை—காட்டினேம் = அறிவித்தோம்.—காண்ப எல்லாம் = அகங்காராதிப் பிரபஞ்சமனைத்தும்—சொற்பனம்போலும் என்று = *சொப்பனப்பிரபஞ்சம்போலும்

* சொப்பனம் என்னும் வடமொழி எதுகைநோக்கி, "சொற்பனம்" எனத்திரிந்தது.

(துச்ச) மென்று—துணிந்தவனே=(சமுசயமின்றி) அபரோட்சமாக நிச்சயித்தவனே—ஞானி ஆவான்=ஞானியாம்.—செல்புதை மழைக்காலம்போய்=மேகநெருங்கிய வருடாகால மொழிந்து—தெளிந்த ஆகாசம்போல=(சரற்காலத்திற்) றெளிந்துள்ள ஆகாயம்போலும்—அற்புத முத்தி சேரும்=(சகலவனர்த்தமும் ஒழிந்து) நிரதிசயாநந்தரூப மோட்சமடையக் காரணமாகும்—அபவாதவழியும் கேளாய்=அபவாசவழியையுங்கேட்டி.—எ - று.

"செல்புதை மழைகீகா லம்போயீத் தெளிந்தவா காசம்போல" என்னும் உவமானத்தால், அனர்த்த நிவிர்த்தி வருவித்தாம். **"சோற்பனம் போலும்"** என்றது பற்றிப் பூர்வபட்சிகளின் சங்கை;—

(84) பூர்வம் அத்தியந்தம் அஞ்ஞாதமாவுள்ள பதார்த்தத்தின் ஞானம் சொப்பனத்திலுண்டாதலில்லை. சாக்கிரத்தில் எதனுடைய அநுபவஞானமுள்ளதோ! அதனுடைய ஸ்மிருதிதான் சொப்பனத்திலுமுண்டாகின்றது; அங்ஙனம் சொப்பனத்திலுண்டாகும் ஸ்மிருதி ஞானத்தின்விடயமான சாக்கிரபதார்த்தம் சத்தியமாகலின், சொப்பனத்திலும் அதனது ஸ்மிருதிஞானஞ் சத்தியமாம்; ஆகவே, சொப்பனதிருஷ்டாந்தத்தாற் சாக்கிரபதார்த்தங்களை மித்தையென்னல் பொருந்தாது.

(85) அல்லது, சொப்பனவஸ்தையிற் ஸ்தூலசரீரத்தை விடுத்து லிங்கசரீரம் வாகியத்திற்சென்று சத்தியமாயுள்ள கிரி, சமுத்திராதிகளைப் பார்க்கின்றதாகலின் சொப்பனஞானமும், அதன்விடயமான பதார்த்தங்களுஞ் சத்தியமே; மித்தையன்றும்; ஆகவே, சொப்பனம்போலும் சாக்கிரபிரபஞ்சந் துச்சமென்னல் கூடுமோவெங்ஙனே எனின்?

(86) உத்தரம்—அந்த யானை என்றுண்டாகின்ற பூருவகாலசம்பந்திகளான பதார்த்தங்களின்ஞானம் ஸ்மிருதியாம். எதிரே நிற்கின்ற யானையைக் கண்டு இது யானை என்றுண்டாகின்றஞானம் ஸ்மிருதியல்ல; பிரத்தியட்சமாம். சொப்பனத்தில் இது யானை, இது பருவதம், இது நதி என்றிவ்வாறான ஞானமுண்டாகின்றதாகலின் அது சாக்கிரத்திற்கண்ட பதார்த்தங்களினுடைய ஸ்மிருதியல்ல; பிரத்தியட்சஞானமேயாம். சாக்கிரத்தில் அறியப்படாத பதார்த்தங்களின் ஞானம் சொப்பனத்திலுண்டாகவில்லை; அறியப்பட்ட பதார்த்தங்களின்ஞானமே உண்டாகின்றதாகலின், சொப்பனத்தின் ஞானம் ஸ்மிருதிரூபமேயென்னில் அது கூடாது.

(87) எனெனில்? பிரத்தியட்சஞானம் இருவகைத்து; ஒன்று அபிஞ்ஞாரூபப்பிரத்தியட்சம்; மற்றொன்று பிரத்தியபிஞ்ஞாரூபப் பிரத்தியட்சமாம். கேவலம் இந்திரியசம்பந்தத்தாற் றோன்றும் ஞானம் அபிஞ்ஞாபிரத்தியட்சம்; அது நேத்திரசம்பந்தத்தால் இது யானையென்று தோன்றும் ஞானம். பூர்வஞானசம்ஸ்காரத்தாலும், இந்திரியசம்பந்தத்தாலும் தோன்றும் ஞானம் பிரத்தியபிஞ்ஞாபிரத்தியட்சமாம்; அது பூர்வங்கண்டயானை எதிரேவரில் அந்தயானை இந்தயானை என்றதோன்றும் ஞானம்; அங்கே பூர்வங்கண்ட யானையின்ஞான சம்ஸ்காரமும், யானையோடு நேத்திரசம்பந்தமும்

பிரத்தியபிஞ்ஞா பிரத்தியட்சத்திற்கேதுவாம். ஆதலால், சம்ஸ்காரஜந்நிய ஞானம் *ஸ்மிருதிரூபமே என்னும் நியமமில்லை. இந்திரியசம்பந்தமின்றிக் கேவலம் சம்ஸ்காரஜந்நியஞான முண்டாமாயின், அதுவே ஸ்மிருதிஞான மெனப்படும். சொப்பனத்தில் யானைமுதலியவைகளின் ஞானம் கேவலம் சம்ஸ்காரஜந்நியமல்ல; நித்திராரூப தோஷஜந்நியமாம். சொப்பனத்தில் யானைமுதலியவைகளைப்போலக் கற்பித இந்திரியங்களுமுண்டு; ஆகலின், இந்திரியஜந்நியமுமாம். சொப்பன பதார்த்தங்கள் சாட்சிபாஸ்யமேயல்லாமல் இந்திரியஜந்நிய ஞானவிடயமல்ல; ஆயினும், அவிவேகியினுடைய திருஷ்டியினால் சொப்பனஞானம் இந்திரியஜந்நியமென்று சொல்லப்படுகிறது. நித்திரையினின்றும் விழித்தபுருடன் நான் சொப்பனத்தில் யானை முதலியவைகளைக் கண்டேனென்று சொல்கின்றனன்; ஆதலால் சொப்பனத்திற்றோன்றும் ஞானம் சாக்கிரபதார்த்தங்களின் ஸ்மிருதியல்ல. யானைமுதலியவைகளின் ஸ்மிருதியே உண்டாமாயின், விழித்து நான் சொப்பனத்தில் யானைமுதலியவைகளை ஸ்மரித்துக்கொண்டிருந்தேனென்று சொல்லவேண்டும்; அப்படி ஒருவருஞ் சொல்லவில்லை. ஆதலால், சொப்பனத்திற்றோன்றும் ஞானம் சாக்கிரபதார்த்தத்தின் ஸ்மிருதியல்ல. சாக்கிரத்திற்கண்ட, கேட்ட பதார்த்தங்களின் ஞானமே சொப்பனத்திற்றோன்றுமென்னு நியமமில்லை; சாக்கிரத்தில் அனுஞாதபதார்த்தங்களினுடையஞானமும் சொப்பனத்திற்றோன்றும். தான் கண்டதாகவேனும், கேட்டதாகவேனுமில்லாத பதார்த்தங்களும் ஒவ்வொருகால் சொப்பனத்திற் காணப்படுகின்றன; ஆகலின், அவைகளின் ஞானம் ஸ்மிருதியல்ல. ஆயினும், இந்தச்சன்மத்தின் பதார்த்தஞானசம்ஸ்காரமே ஸ்மிருதிக்கு ஏதுவாமென்னும் நியமமில்லை: அந்நியஜன்மஞான ஜந்நிய சம்ஸ்காரத்தினாலும் ஸ்மிருதி உண்டாகாநிற்கும். என்னை? அநுகூல ஞானத்தினால் பிரவிர்த்தி யுண்டாகின்றது: அநுகூலஞானமன்றிப் பிரவிர்த்தியுண்டாவதில்லை. பாலகனுக்கு ஸ்தநபாநத்தில் பிரதமப் பிரவிர்த்தியுண்டாவதற்குக்காரணம் தான் அந்நியஜன்மங்களில் ஸ்தநபாநம் தனக்கநுகூலமென்றநுபவித்துள்ள சம்ஸ்காரமாம்; ஆகலின், ஜன்மாந்தரத்தின் ஞானசம்ஸ்காரத்தினாலும் ஸ்மிருதியுண்டாகாநிற்கும். அப்படியே இந்தஜன்மத்தில் அனுஞாதபதார்த்தத்தின் ஸ்மிருதியும் அந்நியஜன்மத்திலுளதாகிய ஞானசம்ஸ்காரத்தினால் சொப்பனத்தி லுண்டாகக்கூடும். ஆயினும், சாக்கிரத்தில் யாதொரு ஜன்மத்திலும் அநுபவியாதிருக்கும் பதார்த்தமும் சொப்பனத்திற்றோன்றுகின்றது; அது தனதுசிரச்சேதனத்தைத் தான் நேத்திரத்தால் சொப்பனத்திற் பார்க்கின்றது; ஆதலால் சொப்பனத்திற்றோன்றும் ஞானம் சாக்கிரபதார்த்தங்களின் ஞானசம்ஸ்காரத்தினாற்றோன்றும் ஸ்மிருதியல்ல வென்று சொப்பனத்திற்கு ஸ்மிருதிரூபகண்டனத்தில் அநேகயுத்தி கிரந்தகாரர் கூறியுளர்.

(88) தூலசரீரத்தினின்றும் இலிங்கசரீரமானது வெளிப்பட்டு வாகியத்திற் சத்தியமாயுள்ள கிரி, சமுத்திர முதலியவற்றைப் பார்க்கின்றதெனின்?

* ஸ்மிருதி = சம்ஸ்காரஜந்நியஞானம்.

இலிங்கசரீரம் வெளிப்படுமாயின், மரணுவத்தையைப்போலத் தூலசரீரம் பயங்கரரூபமாகத் தோற்றவேண்டும்; சொப்பனுவத்தையில் அப்படித் தோற்றுமல் சாக்கிரத்திற்போல மங்களரூபமாகவே தோற்றுநிற்கிறது; ஆதலால், தூலசரீரத்தைவிட்டு லிங்கசரீரம் வெளியேபோகவில்லை; அந்தக்கரணத்தின் இயக்கம் பிராணனுடைய அதீனமாதலால் பிராணன் வெளிப்படாமல் அந்தக்கரணமும், ஞானேந்திரியமும் வாகியத்திற்செல்லாவாம். சொப்பனுவத்தையில் தூலசரீரம் பிராணனோடு கூடத்தோற்றுவதால், இலிங்கசரீரம் வாகியத்திற் சென்று சத்தியமாயுள்ள பதார்த்தங்களைச் சொப்பனத்திற் பார்க்கின்றதென்பது கூடாது. அன்றியும், ஓர் புருடன் சொப்பனத்திற் றன் சம்பந்தியோடுகூடி ஓர் வியவகாரத்தைச் செய்ததாகக்கண்டு விழித்துப் பின் அச்சம்பந்தியைத் தான் கண்டபோது இராத்திரி நாம் இருவருங்கூடி இவ்வித வியவகாரத்தைப்பண்ணினோமென்று அவன் சொல்லவில்லை. பூருவ பட்சரீதியினால் வாகியத்தில் வெளிப்பட்டுச் சம்பந்தியோடுகூடிச் சத்தியமாக வியவகரித்தான்; அந்தச் சம்பந்தியோடுகூடின ஞானமும், வியவகாரஞான மும் சம்பந்திக்கும் உளவாதல்வேண்டும்: எப்போது அவன் கூடினானே! அப்போது அவன் சொல்லவும்வேண்டும். சித்தாந்தத்தில் சம்பந்தியும், அவனுடைய கூட்டரவுமுதலியவும் உள்ளேயே கற்பிதமாம். அன்றியும், வாகியத்திற்சென்று சத்தியமான பதார்த்தத்தைப் பார்த்ததுண்டானால், இராத்திரியில் நித்திரை செய்தபுருடன் சிதம்பரத்தில் மத்தியானசூரியனால் வீடுகள் தபிக்கப்படுகிறதாகவும், சிதம்பரத்திற்கு வடக்கே மதுரை இருப்பதாகவும், மதுரைக்குத் தெற்கே சிதம்பரம் இருப்பதாகவுங் காண்கின்றனன்; அங்கே இராத்திரியில் மத்தியான சூரியனும், சிதம்பரத்திற்கு வடக்கே மதுரையும், மதுரைக்குத் தெற்கே சிதம்பரமும் இல்லை; ஆகலானும், சொப்பனத்திற் சத்திய பதார்த்தங்களைப் பார்க்கப்படுகிற தென்பது கூடாது.

(89) பருவதம், சமுத்திரம், நதி, வனம், கிராமம், புரி, சூரியன், சந்திரன் முதலிய எவ்வளவு பதார்த்தங்கள் சொப்பனத்திற் காணப்படுகின்றனவோ! அவை நூதனமாகவே உண்டாகின்றன. சொப்பன பதார்த்தங்களில் நேத்திராதிகளின் விடயத்தன்மை பாகமாகின்றது. வியாவகாரிக நேத்திராதிகளின் விடயத்தன்மை சொப்பனத்தில் பிராதிபாசிக பதார்த்தங்களிற் பொருந்தாது. எதனாலெனின்? சமசத்தையுடைய பதார்த்தங்களே தம்மிற் சாதகபாதகங்களாம்; அதனால் சரீரத்தின் கண்ணிருக்கும் வியாவகாரிக நேத்திராதிகளும், சொப்பன பதார்த்தங்களும் ஒன்றற்கொன்று விஷமசத்தையாவதால் அந்நேத்திராதிகளுக்குச் சொப்பனத்திற் பருவதாதிகள் விடயமாகு மென்கைபொருந்தாது. அன்றியும், வியாவகாரிக இந்திரியங்கள் தத்தங் கோளகைகளைவிட்டுக் காரியஞ்செய்வதில் சமர்த்தமாகா. சொப்பனுவத்தையில் அஸ்த, பாத, வாக்குகளின் கோளகைகள் நிச்சலமாக அந்நியனுக்குக் காணப்படுகின்றன; அஸ்தத்தில் ஓர் திரவியத்தை எடுத்துக் கூப்பிட்டுக் கொண்டு ஓடுகின்றான்; ஆகலின், சொப்பனத்தில் இந்திரியங்களின் உற்பத்தி அவசியம் ஒப்பவேண்டும்; அப்படியே சுகதுக்கமும், அவற்றின் ஞான

மும், சுகதுக்கங்களின் ஆசிரயமான பிரமாதாவும், சொப்பனத்தின்கட் டோற்றுகின்றன; இல்லாத பதார்த்தங்களின்தோற்றம் உண்டாகமாட்டாது; அதனால் சகல திரிபுடிகளும் அந்தச் சொப்பனத்தின்கண்ணே உற்பத்தி யாகின்றன. எவ்வளவு பிரம [ஈ3] ஞானமுண்டாமோ! அவைகளின் விடயங்கண் முழுதும் அநிர்வசனீயமாக உற்பன்னமாகின்றன. விடயமின்றி யாதொருஞானமும் உண்டாகாதென்பதே அநிர்வசனீயக் கியாதியின் சித் தாந்தமாம் எவ்வளவு சொப்பன பதார்த்தங்கள் பிரதீதியாகின்றனவோ! அவைகளினுற்பத்தி அங்கீகரிக்கின் சாக்கிர பதார்த்தங்களைப்போலச் சத் தியமாவதால் சொப்பன திருஷ்டாந்தத்தினாற் சாக்கிர பதார்த்தங்கள் மித்தை யென்று சித்தாந்தத்திற் செல்லாநிற்பது கூடாது. சொப்பனத்திற் பிரதீதி யாகின்ற பதார்த்தங்களினுற்பத்தி ஒப்பாவிடின் இவ்வாறான தோடமின்றும் என்று சங்கிக்கில்:—

(90) யாதொரு வஸ்துவின் உற்பத்திக்கு எவ்வளவு தேசகாலாதி சாமக் கிரிவேண்டுமோ! அவ்வளவு சாமக்கிரியு மின்றியே அது உண்டாமாகில் மித் தையெனப்படும். சொப்பனத்தில் யானை முதலியவைகளி னுற்பத்திக்கு யோக்கியமான தேசகாலங்களில்லை. வெகுகாலத்தில், வெகு தேசத்திலுண் டாக யோக்கியமான யானை முதலியவை க்ஷணமாத்திரகாலத்தில் சூட்சும மான கண்டதேசத்தி லுண்டாகின்றன வாதலால் மித்தையாம். எப்படியும், சொப்பனவத்தையில் காலதேசமும் அதிகமாகப் பிரதீதியாகின்றன; அப் படியானாலும், அந்நிய பதார்த்தங்களைப்போலச் சொப்பனத்தில் அதிக காலம், அதிகதேசம் அநிர்வசனீயப் பிராதிபாசிகமாக உற்பன்னமாகின்றன. எதனாலெனின்? விடயமின்றிப் பிரத்தியட்ச ஞானமுண்டாகமாட்டாது. சொப்பனத்தில் அதிகமான தேசகாலங்களின் ஞானமுண்டாகின்றது; வியா வகாரிக தேசகாலங்கள் நியூனமாக வுள்ளன. இதனால் பிராதிபாசிகமாக உற்பன்னமாகின்றன; இங்ஙனம் சொப்பனவத்தையிலுண்டாகின்ற யாதொரு பிராதிபாசிக தேசகாலங்களுண்டோ! அவை சொப்பனவத்தையின் யானை முதலியவைகட்குக் காரணமல்ல. எதனாலெனின்? யாதுகாரணமாமோ! அது முன்னே உண்டாயிருக்கும்; காரியம் பின்னே உண்டாம். சொப்பனத் தின் தேசகாலங்களும், யானை முதலியவையும் ஒரே சமயத்திலுண்டாகின் றன; ஆதலால், அவைகட்குக் காரிய காரணபாவங் கூடாது. வியாவகாரிக தேசகாலங்கள் நியூனமாய் உள்ளன. ஆதலால், அவை யானை முதலியவை கட்கு யோக்கியமாக இல்லை; இங்ஙனம் தேசகால சாமக்கிரியின்றி உண்டா கின்றன வாதலால் சொப்பன பதார்த்தங்கள் மித்தையாம். இவ்வாற்றால், சொப்பன பதார்த்தங்களி னுற்பத்தியில் வேறே ஒரு சாமக்கிரிகளுமில்லை; நித்திராரூப தோஷசகிதமான அவித்தையே காரணமாம். யாதொன்று தோஷசகித அவித்தையினால் ஜந்நியமாமோ! அது சுத்தி ரஜதம்போல மித்தையாம்; ஆதலால் சொப்பன பதார்த்தங்கள் சத்தியமல்ல: மித்தை யாம். அவைகட்கு உபாதானகாரணம் அந்தக்கரணம், அல்லது சாட் சாத அவித்தையேயாம். முதற்பட்சத்தில் சாட்சி சேதனஞ் சொப்பனத்திற்

கதிஷ்டானம்; இரண்டாம் பட்சத்தில் பிரமசேதனம் சொப்பனத்திற் கதிஷ்டானமாம்; இவ்வாற்றால், அந்தக்காரணத்தினுடைய அல்லது அவித்தையினுடைய பரிணமமும், சேதனத்தினுடைய விவர்த்தமும் சொப்பனமாம். முன் சொல்லிய பட்சம் இரண்டனுள் இரண்டாம் பட்சத்தில் பிரமசேதனஞ் சொப்பனத்திற்கு அதிஷ்டானமென்றும், அவித்தை உபாதான காரணமென்றுஞ் சொல்லப்பட்டது; அங்கே அதிஷ்டான ஞானத்தினால் கற்பித நிவிர்த்தியாம். சொப்பனத்திற்கு அதிஷ்டானம் பிரமமாகலின், பிரமஞானமின்றி அஞ்ஞானிக்குச் சாக்கிரத்தில் சொப்பனம் நிவிர்த்தியாக வேண்டுவதில்லை.

(91) மற்றோர் சங்கை.—எப்படிச் சொப்பனத்தின் அதிஷ்டானம் பிரமமும், உபாதானகாரணம் அவித்தையுமோ! அப்படியே வேதாந்த சித்தாந்தத்தில் சாக்கிரத்தின் * வியாவகாரிக பதார்த்தங்கட்கும் அதிஷ்டானம் பிரமம்: உபாதானகாரணம் அவித்தை; ஆதலால் சாக்கிரம், சொப்பனம் இரண்டும் வியாவகாரிகமாக வேண்டும், அல்லது பிராதிபாசிகமாக வேண்டும். இங்ஙனமன்றிச் சாக்கிரபதார்த்தங்கள் வியாவகாரிகமென்றும், சொப்பனபதார்த்தங்கள் பிராதிபாசிகமென்றுங் கூறுநிற்பது எவ்வாறுகூடும் எனின்? இவ்விரண்டு சங்கையுங்கூடாது. எதனாலெனின்? பிரதமசங்கைக்குச் சமாதானம்; நிவிர்த்தி இருவகையாம்; இது முன்னே உ - வது செய்யுளின் உரையிலுங் கூறப்பட்டிருக்கின்றது. காரணத்தோடுகூடக் காரியத்தின் விநாசரூபமான அத்தியந்த நிவிர்த்தி சொப்பனத்திற்குச் சாக்கிரத்தில் பிரமஞானமின்றிக் கூடாது; ஆயினும், தடிகொண்டடிப்பதால் கடத்திற்கு மிருத்திகையில் லயம் எப்படி உண்டாமோ! அப்படிச் சொப்பனத்திற் கேதுவான நித்திராதோடநாசத்தினால், அல்லது சொப்பனத்தின் விரோதியான சாக்கிரத்தின் உற்பத்தியினால் அவித்தையின்கண் லயரூபமான நிவிர்த்தி சொப்பனத்திற்குப் பிரமஞானமின்றியே கூடும். சாக்கிர சொப்பனங்கள் இரண்டும் சமானமாக வேண்டுமென்னுஞ் சங்கையுங்கூடாது. எதனாலெனின்? சாக்கிரதேகாதி பதார்த்தங்களின் உற்பத்தியிலோ! அந்நியதோஷரகிதமான கேவலம் அநாதியவித்தையே உபாதானகாரணம்: சொப்பனபதார்த்தங்களிலோ ஸாதிநித்திராதோஷமும், அவித்தைக்குச் சகாயமாம்; ஆதலால், அந்நியதோஷரகிதமான கேவலம் அவித்தையினாலுண்டாவது வியாவகாரிகமென்றும், ஸாதிதோஷசகித அவித்தையினாலுண்டாவது பிராதிபாசிகமென்றுஞ் சொல்லப்படும். இவ்வாற்றால், சொப்பனபதார்த்தங்களில் சாக்கிர பதார்த்தங்களைப்பார்க்கிலும் விலட்சணத்தன்மை உண்டு; இவையமுழுதும் மூவிதச்சத்தையையொப்பித் தூலதிருஷ்டியினாற்சொன்னது. விசாரதிருஷ்டியினாற்பார்க்கில் மூவ

---

* வியாவகாரிக, பிராதிபாசிக, பாரமார்த்திகபேதத்தால் சத்தை மூவகைத்தாம்; அம்மூவகையுள், பிரமஞானமின்றி இரச்சுவாதிகளினவச்சின்ன சேதனஞானத்தால் பாதமாகா நிற்கும் இரச்சு சர்ப்பாதிகள் பிராதிபாசிக சத்தை; பிரமஞானமின்றிப் பாதமாகாமல் பிரமஞானத்தால் பாதமாகாநிற்கும் அவித்தையும், அதன் காரியமாகிய ஆகாசாதிகளும் வியாவகாரிகசத்தை; மூன்று காலத்தும் பாதமாகாதது யாது! அது பாரமார்த்திகசத்தை; இப்படிப்பட்டது சேதனமாம்.

கைச்சத்தை கூடாது: சாக்கிர, சொப்பனங்கட்குப் பரஸ்பரம் விலட்சண்தன்மையுங் கூடாது. வேதாந்த பரிபாஷாதி கிரந்தங்களில், முற்கூறிய பிரகாரமாகவே வியாவகாரிக, பிராதிபாசிகபதார்த்தங்கட்குப் பேதங்கூறியிருக்கின்றது. ஆதலால் மூன்றுசத்தையும் ஒப்பியிருக்கின்றது. வித்தியாரண்யசுவாமிகளும் சீவசிருட்டியே சுகதுக்கத்திற்கேதுவாம், ஈசுரசிருட்டி சுகதுக்கத்திற்கேதுவன்று, சீவசிருட்டிபிராதிபாசிகம், ஈசுரசிருட்டி வியாவகாரிகமென்றருளிச்செய்திருக்கின்றனர். வேறேகிரந்தகாரரும் சத்தை மூன்று பிரகாரஞ் சொல்லியிருக்கின்றனர். சேதனத்தினுடைய சத்தை பாரமார்த்திகம்: சேதனத்தினும் வேறான சடபதார்த்தங்களின் சத்தை இருவகையாம்: அவைகளில் ஒன்று வியாவகாரிக சத்தை; மற்றொன்று பிராதிபாசிக சத்தை. சிருட்டியின் ஆதிகாலத்தில் ஈசுரசங்கற்பத்தினு லுண்டான கேவலம் அவித்தையின்காரியமாகிய பஞ்சபூதங்களும், அவைகளின் காரியங்களும் ஆகிய இவைகளின் சத்தை வியாவகாரிகசத்தை; தோஷசகிதமான அவித்தையின்காரியமாகிய சொப்பனமும், சுத்திராஜதாதிகளும் ஆகிய இவைகளின் சத்தை பிராதிபாசிக சத்தையாம்; இவ்வாறு சாக்கிரபதார்த்தங்களுக்கு வியாவகாரிகசத்தையும், சொப்பனபதார்த்தங்களுக்குப் பிராதிபாசிகசத்தையுங் கூறியிருக்கின்றனர்.

(92) தேசகாலசாமக்கிரியின்றிச் சொப்பனத்தில் யானை, பருவதங்கள் தோன்றுகின்றன; ஆதலால், அவை மித்தை. அப்படியே ஆகாசாதிப்பிரபஞ்ச சிருஷ்டியும் பிரமத்தினின்றுந் தோன்றுகின்றன; அப்பிரமத்தில் தேசகாலங்கள் லேசமுமில்லை. சொப்பனத்தில் யானை, பருவதாதிகளுக்கு யோக்கியமான தேசகாலங்களில்லையாயினும், சொற்பதேசகாலங்களுண்டு: ஆகாசாதிகளின் சிருஷ்டியில் அவ்வளவுகூடத் தேசகாலங்களில்லை. என்னை? தேசகாலரகித பரமான்மாவினின்றும் ஆகாசாதிகளின் சிருஷ்டிகூறப்பட்டிருத்தலினென்க.

(93) தைத்திரீயசுருதியில் ஆகாசாதிகளின்சிருஷ்டி கிரமமாகக் கூறியிருக்கின்றன; அதிலும் தேசகாலங்களின் சிருஷ்டிகூறவில்லை. சூத்திரகாரர், பாஷியகாரர்களேனுங் கூறியிருக்கின்றனரோவெனின்? அவர்களும் தேசகாலங்களின் சிருஷ்டிகூறவில்லை; அதனால் தைத்திரீயசுருதிக்கும், சூத்திரகாரர், பாஷியகாரர்கட்கும் ஆகாசாதிப்பிரபஞ்சங்களின் உற்பத்தி தேசகாலசாமக்கிரியின்றி உண்டாமென்பதே அபிப்பிராயமாம்; ஆகலின், ஆகாசாதிகள் சொப்பனம்போல மித்தையாம்.

(94) மதுசூதனசுவாமிகள் தேசகாலங்கள் சாட்சாதவித்தையின் காரியமென்று கூறியிருப்பதுகொண்டு மாயாவிசிஷ்ட பரமான்மாவினின்றும் முன்னே தேசகாலங்கள் மாயையின் பரிணாமமாகத் தோன்றும், அதன்பின்னர் ஆகாசாதிகளின் சிருஷ்டிதோன்றும் என இங்ஙனம் பெறப்படுதலின் யோக்கியமான தேசகாலங்களாலேயே ஆகாசாதிப்பிரபஞ்சங்களின் உற்பத்தி சித்தித்ததே எனின்?

(95) அங்ஙனம் தேசகாலங்கள் முன்னேயுண்டாய், அதன்பின்னே ஆகாசாதிகளுண்டாம் என்பது, மதுசூதனசுவாமிகளின் அபிப்பிராயம் அன்று. எதனாலெனின்? ஆகாசாதிகளின் உற்பத்திக்கு முன்னே தேசகாலங்கள் உண்டாமெனின்? ஆகாசாதிகளின் உற்பத்திகாலத்திற்குப் பூர்வகாலவுபலக்ஷிதமான பரமான்மா தேசகாலங்கட்கு அதிஷ்டானமாமென்பது சித்திக்கும்; அதுசித்திக்கவே, தேசகாலங்களின் உற்பத்தியில் பூர்வகாலமுண்டென்றுவரும். காலத்தின்உற்பத்தியே இல்லாதபோது பூர்வகாலம் எவ்வாறு சித்திக்கும்; இதனால் ஆகாசாதிகள் உண்டாவதற்குப் பூர்வகாலத்தில் தேசகாலாதிகள் உண்டெனல் கூடாதாகலின் என்க.

(96) மற்றியாதோ! மதுசூதனசுவாமிகளின் அபிப்பிராயம் எனின்? பூதபௌதிகப்பிரபஞ்சந் தோன்றுநிற்பதுபோலத் தேசகாலங்களுந் தோன்றுநின்றன. ஆன்மாவுக்கந்நியமாக யாதொன்றும் நித்தியமாகாமையின், தேசகாலங்களும் நித்தியமல்ல: உண்டாகாதவை தோற்றரவாகா வாகலின், ஆகாசாதிகள்போலத் தேசகாலங்கட்கும் உற்பத்தியுண்டு; ஆதலால், அவித்தையின் காரியமாமென்பது மதுசூதனசுவாமிகளின் அபிப்பிராயமாம் என்க.

(97) அத்தேசகாலங்கள் மாயையின் பரிணமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம். யாது விவர்த்தமாம் அது ஒன்றிற்குக்காரணமாகாது; ஆகலின், ஆகாசாதிப்பிரபஞ்சத்தின் உற்பத்தியில் தேசகாலங்கட்குக் காரணத்தன்மை பொருந்தாது. அன்றியும், காரணம் முன்னேயுண்டாகும்: காரியம் பின்னர் உண்டாகும். ஆகாசாதிப்பிரபஞ்சம் உண்டாவதற்குமுன்னே தேசகாலங்கள் உண்டாமென்னல் பொருந்தாது; இதனானும் தேசகாலங்கட்கு ஆகாசாதிப்பிரபஞ்சகாரணத்தன்மை பொருந்தாது. மற்றெங்ஙனெனின்? சொப்பனப்பிதா புத்திரன்போலத் தேசகாலத்தோடுகூட ஆகாசாதிப்பிரபஞ்சம் மாயாவிசிட்டமான பரமான்மாவினின்றும் உற்பன்னமாம். யாதானும் ஒரு பதார்த்தம் யாதானும் ஒரு தேசத்தில், யாதானும் ஒரு காலத்தில் உண்டாகாநிற்கும்: அந்நியதேசத்தில், அந்நியகாலத்தில் உண்டாகாது; இவ்வாறு சகல பதார்த்தங்களும் பிரளயகாலத்தில் உண்டாகா: சிருஷ்டிகாலத்தில் உண்டாகும். ஆதலால் தேசகாலங்கட்குக் காரணத்தன்மையுங் காணப்படுகின்றது; அதுவும், எந்த மாயையினின்றும் தேசகாலத்தோடுகூடப் பிரபஞ்சம் உற்பத்தியாகின்றதோ! அந்த மாயையினாலேயே அத்தேசகாலங்களில் காரணத்தன்மையும், அந்நியமான பிரபஞ்சத்தில் காரியத்தன்மையுங் காணப்படுகின்றன; ஆதலால் ஆகாசாதிப்பிரபஞ்சத்திற்குத் தேசகாலங்கள் காரணமல்ல.

(98) சங்கை - உண்டாகாத பதார்த்தந் தோற்றரவாகாது. சித்தாந்தத்திலோ அது அங்கீகாரமில்லை; அங்ஙனம் அங்கீகரிக்கில் அசத்கியாதியாம். அன்றியும், தேசகாலங்களில் காரணத்தன்மையில்லையாயின் சசசிருங்காதிகள் போல மாயையின்வலியாலும் அது தோற்றரவாக வேண்டுவதில்லை; தோற்றரவாகலின், தேசகாலங்கள் சர்வப்பிரபஞ்சத்திற்குங் காரணங்களாம். அங்ஙனமன்று பிரமமே பிரபஞ்சத்திற்குக் காரணம்; பிரமத்தின் காரணத்தன்மை

தேசகாலங்களில் தோற்றரவாகா நின்றதென்று சித்தாந்தி சொல்லில் அதுவும் பொருந்தாது; எதனலெனின்? எப்படித் தேசகாலங்கட்கு அதிஷ்டானம் பிரமமோ! அப்படிச் சர்வப்பிரபஞ்சத்திற்கும் அதிஷ்டானம் பிரமம். தேசகாலங்களில் மாத்திரந்தான் பிரமத்தின் காரணத்தன்மை தோற்றரவாம், அந்நியத்தில் தோற்றரவாகா தென்பதற்கு ஒரேதுவும் இல்லை. ஆதலால், சர்வப்பிரபஞ்சத்திலும் அக்காரணத்தன்மை ஒரேதன்மையாகத் தோற்றரவாதல் வேண்டுமேயல்லாமல் ஒன்றிற் காரணத்தன்மையும், ஒன்றிற் காரியத்தன்மையுமாக இவ்வாறு தோற்றரவாதல் கூடாது. அன்றியும், தேசகாலங்களில் காரணத்தன்மை இல்லை: பிரமத்தின்கண்ணேதான் காரணத்தன்மை உண்டு; அது தேசகாலங்களிற் ரோன்றுகின்றதெனின்? அது அந்நியதாக்கியாதி என்றுவரும். சித்தாந்தத்தில் அது அங்கீகரிக்கவில்லை. ஈண்டு அந்நியதாக்கியாதி ஒப்பிடில், சுத்தியில் அநிர்வசனீயரஜத உற்பத்தி சித்தாந்தத்தில் ஒப்பினது நிஷ்பலமாம். என்னை? அந்நியதாக்கியாதி மதம் இருவகைத்து; ஒன்று அந்நியதேசத்திலுள்ள பதார்த்தம் அந்நியதேசத்திற் ரோன்றுவது: அது காந்தையின் கரத்திலுள்ள இரஜதம் எதிரே சுத்திதேசத்திற் ரோன்றுவது. மற்ரொன்று அந்நியபதார்த்தம் அந்நியரூபமாகத் தோன்றுவது; அது இப்பியே வெள்ளியுருவாகத் தோன்றுவது. இவ்வாறு சகல பிரம [ஹூ] ஸ்தலத்திலும் அந்நியதாக்கியாதியால் நிர்வாகங்கூடும்; கூடவே, அநிர்வசனீயரஜதாதிகளின் உற்பத்திகூறுவது அசங்கதமாம். விஷயத்தின் சமாஞகாரமாக ஞானம் உண்டாகும்: அந்நியவஸ்துவில் அதற்கந்நியரூபமாக ஞானம் உண்டாகாது. ஆதலால் இரஜதாகாரஞானத்திற்கு விடயமான அநிர்வசனீயரஜதமும் உற்பத்தியாகின்றதென்னும் அத்வைதசித்தாந்தத்தில் காரணத்திற்கு அந்நியமாகிய தேசகாலங்களில் பிரமத்தின்காரணத்தன்மை ஞானம் பொருந்தாதாகலின் தேசகாலங்களிற் ரோன்ரூநிற்குங் காரணத்தன்மையானது உண்டாகாமற் பாநமாகின்றதென்பதும், பிரமத்திலுள்ளது பாநமாகின்றதென்பதுங்கூடாது. தேசகாலங்களிலேயே காரணத்தன்மை உண்டு; அது பாநமாகின்றது. இதனல், ஆகாசாதிப்பிரபஞ்சத்திற்குத் தேசகாலங்கள் காரணமல்லவென்கை அசங்கதமாம் என்னின்? அது கூடாது.

(99) எதனலெனின்? பிரமத்தின் காரணத்தன்மை தேசகாலங்களிற் ரோன்ரூநின்றது; அஃதெங்ஙனமெனின்? செம்பரத்தம் பூவைச்சம்பந்தித்தஸ்படிகத்தில் புஷ்பத்தின் செம்மைநிறந் தோன்றுழி, அநிர்வசனீயமாக அஃது உற்பத்தியாயிற்றென்று அங்கீகாரமில்லை. அந்நியதாக்கியாதியென்ரே அங்கீகரித்திருக்கின்றது; அந்தப்படி சொப்பனத்தின்கண் மித்தியாபதார்த்தங்களில் சத்தியத்தன்மை தோற்றரவாகின்றதால் அங்கே அப்பதார்த்தங்களில் அநிர்வசனீயமாகச் சத்தியத்தன்மை உற்பத்தியாம் என்னின்? அது சத்தியம், மித்தையாம் என்னும் வசனம்போலும். ஆகலின், மித்தியாபதார்த்தங்களிற்ரோன்றும் சத்தியத்தன்மையின் ஞானம் அந்நியதாக்கியாதியென்ரே எங்ஙனங்கொள்ளற்பாலதோ! அங்ஙனம் அதிஷ்டானப் பிரமத்தின் காரணத்

தன்மை தேசகாலங்களில் அந்நியதாக்கியாதியென்றே கொள்ளற்பாலதாம்; ஈண்டு அந்நியதாக்கியாதி ஒப்பிடில் சகல பிரம [ஸ்ரீ] ங்களிலும் அந்நியதாக்கியாதியே ஒப்பவேண்டுமென்னல் கூடாது. என்னை? சுத்திராஜதாதிகளில் அந்நியதாக்கியாதி ஒப்புவதில் விடயத்தின் விலட்சணஞானங்கூடாதென்னுந் தோடங்கூறி யிருத்தலின் என்க. எங்கே ஸ்படிகத்தில் செம்மைநிறத்தின் ஞானம் உண்டு! அங்கே செம்பரத்தம்பூவின் சம்பந்தம் ஸ்படிகத்தில் உண்டு. எப்போது அந்தக்காரணத்தின் விருத்தி செம்பரத்தம்பூவின் ஆகாரமாமோ! அப்போது அவ்விருத்திக்கு விடயமாகவே செம்பரத்தம்பூவின் சம்பந்தியான ஸ்படிகமும் இருப்பதால் புஷ்பத்தின் செம்மைநிறத்தன்மை ஸ்படிகத்திற் ரோன்றுகின்றது. அப்படிச்சுத்தியிலோ! இராஜதரூபஞானங்கூடாது. என்னை? சுத்தியினிடத்து அநிர்வசனீயமாக அல்லது, வியாவகாரிகமாக இராஜதம் அந்நிய மதத்தில் இல்லை: சுத்திதான் உண்டு; அச்சுத்தியின் சம்பந்தத்தால் சுத்தியின் சமாஞகாரமாகவே அந்தக்காரணத்தின் விருத்தி உண்டாகும். இராஜதாகாரமாக அந்தக்காரணத்தின் விருத்தி உண்டாகாது. ஆதலால் அவித்தையின் பரிணமமும், சேதனத்தின் விவர்த்தமுமாக அநிர்வசனீயராஜதமும், அதன் ஞானமும் உற்பன்னமாம். இதனால், எங்கே இரண்டுபதார்த்தங்களின் சம்பந்தம் உண்டு! அங்கே ஒன்றன்தருமம் மற்ரொன்றில் தோற்றாவாம்; அஃதந்நியதாக்கியாதியேயாம். எங்கே இரண்டுபதார்த்தங்களின் சம்பந்தம் இல்லை! அங்கே அந்நியதாக்கியாதியில்லை: அநிர்வசனீயக்கியாதியே. எங்ஙனம் புஷ்பசம்பந்தியான ஸ்படிகத்தில் புஷ்பத்தின் செம்மைநிறத்தன்மை பிரதீதியாகின்றதோ! அங்ஙனம் சொப்பனத்தின் யானை, பருவத முதலியவற்றிற்கும் அதிஷ்டான சேதனத்தோடு சம்பந்தம் உண்டாகின்றது. ஆகலின், சேதனதர்மமாகிய சத்தியத்தன்மையும் சேதனசம்பந்திகளான யானை, பருவத முதலியவற்றிற் ரோன்றுகின்றது; அஃதந்நியதாக்கியாதியேயாம்; இவ்வாறு அதிஷ்டான சேதனதர்மமான காரணத்தன்மையும், அதிஷ்டான சேதனசம்பந்திகளான தேசகாலங்களிற் ரோன்றுகின்றது.

(100) அதிஷ்டான சேதனசம்பந்தம் சர்வப்பிரபஞ்சத்திற்கும் உண்டு. ஆதலால், சம்பந்திதர்மமாகிய காரணத்தன்மை அந்நியதாக்கியாதியால் சர்வப்பிரபஞ்சத்திலுந் தோன்றவேண்டுமென்று பூர்வபக்ஷங்கித்தது கூடாது. என்னை? சொப்பனத்தில் பிதாரூபமாகவும், புத்திராரூபமாகவுந் தோன்றுகின்ற இரண்டு சரீரங்கட்கும் சொப்பனத்தின் அதிஷ்டான சேதனத்தோடு சம்பந்தமுண்டேனும், பிதாசரீரத்தில் அதிஷ்டான சேதனத்தின் காரணத்தன்மை தோன்றுகின்றது; புத்திரசரீரத்தில் அது தோன்ரூமல் பிதாவிலுண்டான புத்திரனென்று புத்திரசரீரத்தில் காரியத்தன்மை தோன்றுகின்றது. இவ்வாறு, அதிஷ்டான சேதனத்தோடு சம்பந்தம் சர்வத்திற்கும் உண்டேனும் தேசகாலங்களில் சேதனதர்மமான காரணத்தன்மையும், மற்றவற்றிற் காரியத்தன்மையுந் தோன்றுகின்றன.

(101) அல்லது, அதிஷ்டான சேதனம் அசங்கம்; அஃதொன்றற்கும் பரமார்த்தமாகக் காரணமன்று. மாயையின் கண்ணுள்ள ஆபாசமே காரணமாம்; ஆயினும், ஆபாச சொரூபம் மித்தை; யாதொன்று தானே மித்தையாம் அது மற்றொன்றற்குக் காரணமாதல் கூடாது. பரமான்மாவில் பிரபஞ்சத்தின் காரணத்தன்மை இருக்குமாயின், அது பிரமையினால் தேசகாலங்களிற் றோன்றக்கூடும்; அப்பரமான்மா காரணமுதலிய தர்மரகித அசங்கமாகலின், அதனது காரணத்தன்மை தேசகாலங்களிற் றோன்றுநின்ற தென்னும் வார்த்தை பொருந்தாது. பின்னையோ! மாயையாற் பண்ணப்பட்ட அநிர்வசனீய தேசகாலங்கள் அநிர்வசனீய காரணத்தன்மையுடையனவாயுள்ளன. பரமார்த்தமாகத் தேசகாலங்கள் காரணமல்ல. புத்திரனில்லாத ஒரு புருடன் சொப்பனத்தில் புத்திரபௌத்திரர் இருவரையுங் கண்டானெனக; அங்கே புத்திர, பௌத்திர சரீரங்கள் அநிர்வசனீயமாக வுண்டாயிருக்கின்றன. புத்திர சரீரத்தில் பௌத்திர சரீரத்தின் காரணத்தன்மை அநிர்வசனீயமாக வுண்டாயிருக்கின்றது; அங்கே பரமார்த்தமாகப் புத்திர, பௌத்திர சரீரங்கள் ஒன்றற்கொன்று காரியகாரண பாவமாக எப்படி உண்டாயிருக்கவில்லையோ! அப்படி அநிர்வசனீயமாகிய காரணம் தேசகாலங்களிற் றோன்றுகின்றது. பரமார்த்தமாகத் தேசகாலங்களும், ஆகாசாதிப் பிரபஞ்சங்களும் காரிய காரண பாவமாக இருக்கவில்லை; இவ்வாற்றால், தேசகால சாமக்கிரியின்றிச் சாக்கிரப்பிரபஞ்சம் உண்டாகின்றதாகலின், சொப்பனம்போலச் சாக்கிரமும் மித்தையாம்; அன்றியும், சொப்பன ஸ்திரீ, புத்திராதிகள் சொப்பனத்திலேயே சுகதுக்கங்கட் கேதுவாயிருந்து சாக்கிரத்தில் அபாவமாவதுபோலச் சாக்கிர பதார்த்தங்களும் சொப்பனத்தில் அபாவமாவதால் இரண்டும் சமானமாம்.

(102) சாக்கிரத்தினின்றும் சொப்பனம் உண்டாய் மீண்டு சாக்கிரம் உண்டாமாயின், அங்கே முன் சாக்கிரத்திலுள்ள பதார்த்தங்களே சொப்பன * வியவகித மற்றைச் சாக்கிரத்திலுள்ளன; முன் சொப்பனபதார்த்தங்கள் மற்றைச் சொப்பனத்திலில்லை. ஆகலின், சொப்பனபதார்த்தங்களிலும் சாக்கிர பதார்த்தங்கள் விலட்சணமாமென்பர். அச்சங்கையும், சித்தாந்தத்தை யறியாமையினால் உண்டாகின்றது. என்னை? சம்சாரப்பிரவாகம் அநாதி: அதில் சீவர்கட்குச் சாக்கிர சொப்பன சுழுத்திகள் உண்டாகின்றன; சாக்கிரகாலத்திற் சொப்பனசுழுத்திகளும், சொப்பனகாலத்தில் சாக்கிரசுழுத்திகளும், சுழுத்திகாலத்திற் சாக்கிரசொப்பனங்களும் நஷ்டமாகின்றன, சொப்பன சுழுத்தியுண்டாமாயின் அப்போது சாக்கிரகாலத்திலுள்ள ஸ்திரீ, புத்திர, தனாதிகள் நீங்காமலிருக்கின்றன அவைகளின் ஞானமே நீங்குகின்றன, மீண்டு சாக்கிரம் உண்டாமாகில் அப்போது முந்தின சாக்கிரத்திலிருந்த பதார்த்தங்களின் ஞானம் உண்டாகின்றன என அஞ்ஞானிகட்கு இவ்வாறான திருஷ்டி உளதாகலின் அச்சங்கையும் உண்டாகின்றதென்க.

---

* வியவகிதம் = மறைப்புடையது.

(103) சித்தாந்தமோவெனின்? சகல பதார்த்தங்களும் சேதனத்தின் விவர்த்தம்: அவித்தையின் பரிணாமமாம். ஆகலின், சுத்திரஜதம்போல எந்தக் காலத்தில் யாதொரு பதார்த்தம் பிரதீதியாகின்றதோ! அந்தக்காலத்தில் அதிஷ்டான சேதனத்தின் ஆசிரிதமான அவித்தையின் தமோகுணக்கூறு கடாதி விஷயரூபமாகவும், சத்துவகுணக்கூறு ஞானரூபமாகவும் பரிணமிக்கின்றன. இவ்வாற்றால், சாக்கிர பதார்த்தங்களும், அவைகளின் ஞானங்களுங் கூடவே யுண்டாய்க் கூடவே நஷ்டமாகின்றன; இது வேதத்தின் கூடமான சித்தாந்தமாகலின், சாக்கிரபதார்த்தம் மற்றைச் சாக்கிரத்தில் உண்டாமென்னல் கூடாது.

(104) சொப்பனத்தினின்றும் விழித்த புருடனுக்குப் பூர்வம் யாதொரு பதார்த்தமிருந்ததோ! அதுவே இந்தப் பதார்த்தமென்று இவ்வாறு பிரத்திய பிஞ்ஞையுண்டாகின்றதாதலால் சாக்கிர பதார்த்தங்கள் ஞானசமகாலத்தில் உற்பத்தி நாசமுடையனவல்ல, ஞானத்திற்கு முன்னே உள்ளன, ஞான நாசத்தின் பின்னரும் உள்ளன எனத்தோற்றினும் சொப்பனத்தில் தற்கால த்திலுண்டான பருவதம், சமுத்திர முதலியவற்றில் நான் ஜனித்தற்கு முன்னே இவை உண்டாயினவென்று வெகுகால ஸ்திரத்துவ பிராந்தி உண்டாகின்றதாகலால் எவ்வவித்தையினால் மித்தையாகிய பருவதம், சமுத்திர முதலியவை உண்டாயினவோ! அவ்வவித்தையினால் வெகுகால ஸ்திரத்தன்மையும், ஸ்திரத்தன்மையின் ஞானமும் அநிர்வசனீயமாக எப்படி உண்டாகின்றனவோ! அப்படிச் சாக்கிர பதார்த்தங்களினிடத்தும் அநேக கால ஸ்திரத்தன்மை அவித்தையின் வலியால் மித்தையாகப் பதார்த்தங்களோடு கூடவே யுண்டாய்த் தோற்றராவாகின்றது. சொப்பன பதார்த்தங்கள் சாட்சாதவித்தையின் பரிணமம். சாக்கிர பதார்த்தங்கள் அப்படிச் சாட்சாதவித்தையின் பரிணமமாக இல்லாமல் கடத்தினுற்பத்தி தண்டசக்கர குலாலரால் உண்டாகின்றது; அப்படியே சர்வ பதார்த்தங்களினுற்பத்தியும் தத்தங் காரணங்களால் உண்டாகின்றது; சாட்சாதவித்தையினால்ல; சாட்சாதவித்தையின் பரிணமமாமேல் ஆகாசாதிக்கிரமத்தால் பஞ்சபூதங்களி னுற்பத்தியும், பஞ்சீகரணமும், பஞ்சீகரணத்தால் பிரமாண்டத்தி னுற்பத்தியுஞ் சுருதியிற் கூறியிருப்பது அசங்கதமாம். ஆதலால் ஈசுரசிருஷ்டியாகிய சாக்கிர பதார்த்தங்கள் தத்தம் உபாதானங்களின் பரிணமங்களாம்; சாட்சாதவித்தையின் பரிணமமல்ல. சொப்பனத்தின் சகல பதார்த்தங்களும் அவித்தையின் பரிணமங்களாம்; அவைகட்கு அவித்தை ஒன்றே உபாதானமாகலின் அப்பதார்த்தங்கட்கும், அவற்றின் ஞானங்கட்கும் ஒரே அவித்தையினால் ஒரே காலத்தில் உற்பத்தி பொருந்தும். சாக்கிர பதார்த்தங்கள் வெவ்வேறு காரணங்களால் உற்பத்தி யாகின்றன. காரியத்திற்கு முன்னே காரணம் உண்டாயிருக்கும்: காரணத்திற் காரியம் லயமாம். ஆதலால் கடத்தி னுற்பத்திக்கு முன்னும், கடநாசத்திற்குப் பின்னும் மண்டிரூள உள்ளது; இவ்வாறு, சில பதார்த்தங்கள் அற்பகால ஸ்திரமாயும், சில அதிககால ஸ்திரமாயும், காரிய கார

ணமாயும் உள்ளன: சொப்பன பதார்த்தங்கள் அப்படியில்லையே யெனின்? அது கூடாது.

(105) என்னை? சாக்கிர பதார்த்தங்கள் போலச் சொப்பன பதார்த்தங்களிலுங் காரிய காரணத்தன்மை தோற்றுகின்றன. அஃதெங்ஙனம்? ஒருவனுக்கு எனது பசு கன்றீன்றது, அல்லது எனது ஸ்திரீ பிரசவித்தாள் என்று இவ்வாறான சொப்பனம் உண்டாகில் அங்கே பசுவினிடத்தும், ஸ்திரீயினிடத்துங் காரணத்தன்மையின் ரூற்றரவும், வெகுகால ஸ்திரத்தன்மையின் ரூற்றரவும் உண்டாகின்றன. கன்றினிடத்தும், புத்திரனிடத்துங் காரியத்தன்மையும், அற்பகால ஸ்திரத்தன்மையுந் தோற்றரவாகின்றன: முழுதும் சமகாலமாம். ஒன்று ஒன்றற்குக் காரணமாக இல்லை. பசு, கன்று, ஸ்திரீ முதலியவற்றிற்கு அவித்தையே உபாதானம்; இதுபோலச் சாக்கிரத்திலும் சில பதார்த்தங்கள் அதிககால ஸ்தாயியாயும், காரணரூபமாயும், சில பதார்த்தங்கள் அற்பகால ஸ்தாயியாயும், காரியரூபமாயும் சொப்பனம்போலத் தோற்றரவாகின்றன: ஒன்று ஒன்றற்குக் காரிய காரணமாக இல்லை; பின்னையோ சாட்சாதவித்தையின் காரியமாம்.

(106) சுருதியிற் கிரமமாகச் சிருஷ்டி கூறியிருப்பது அத்வைதத்தைப் போதித்தற்பொருட்டேயாம்: வேறபிப்பிராயங் கொண்டல்ல. சகல பதார்த்தங்களும் பரமான்மாவினின்றும் உண்டாயிருக்கின்றனவாகலான், அதன் விவர்த்தமாம்; யாது யாதொன்றன் விவர்த்தமோ! அது அதனது சொரூபமேயாதலால் சகலநாம ரூபங்களும் பிரமத்தின் வேறல்ல, பிரமமேயென்னும் பொருளே உணர்த்துதற் பொருட்டுச் சிருஷ்டி கூறிற்று. கிரமமாகச் சிருஷ்டி கூறினது ஸ்தூலதிருஷ்டியுடையோர்க்கு விபரீதக் கிரமமாக லயசிந்தனநிமித்தம் அதற்கும் அத்வைத ஞானமே பிரயோஜனம்; இதனால் கிரமமாகக் கூறுவதிலும் அபிப்பிராயமில்லை: சிருஷ்டியிற் கிரமமில்லை. சகல பதார்த்தங்களும் ஓரவித்தையினு லுண்டாயிருக்கின்றன; அவைகட்குப் பரஸ்பரங் காரியகாரணபாவமும், பூர்வோத்தரபாவமும் அவித்தையாற் பண்ணப்பட்ட சொப்பனம்போலும் மித்தையாகத் தோற்றரவாகின்றன. சகல பதார்த்தங்களும் சாட்சாதவித்தையின் காரியமாம். சுத்திரஜதம்போலும், அல்லது சொப்பனம்போலும் அவித்தையாவிருத்தி உபகிதமான சாட்சியினால் அவைகள் பிரகாசிக்கின்றன; ஆதலால் சகலபதார்த்தங்களும் சாட்சி பாசியங்களாம். ஞானகார, ஞேயாகாரமான அவித்தையின் பரிணமங்கள் ஒரேகாலத்தி லுண்டாய்க் கூடவே நஷ்டமாகின்றன. அதனால் எப்போது பதார்த்தஞானமுண்டாகின்றதோ அப்போதே ஞானத்திற்கு விஷயபதார்த்தமுமுண்டாகின்றது: அந்நியகாலத்தி லுண்டாகவில்லை; இதையே திருஷ்டி, சிருஷ்டிவாதமென்பர். இந்தப்பட்சத்தில் பதார்த்தங்களின் அஞ்ஞாத சத்தை இல்லை: ஞாதசத்தைதானுண்டு, அத்வைதவாதத்தில் இது சித்தாந்த பட்சமாம்; இந்தப்பட்சத்தில் இரண்டு சத்தை தானுண்டு: மூன்றில்லை. எதனாலெனின்? அநான்மபதார்த்தங்கண் முழுவதும் சொப்பனம்போலப் பிராதிபாசிகமாம்: பிரதீதிகாலத்தினன்றி அந்நியகாலத்தில் அநான்மாவிற்குச் சத்தை

இல்லை; இதனுல் மூன்றுவதான வியாவகாரிகசத்தை இல்லை; இத்தப்பட்சத்தில் சகல அநான்மபதார்த்தங்களும் சாட்சிபாசியமாம்: பிரமாதா பிரமாணங்கட்கு விடயமாக யாதொன்றுமில்லை. எதனுலெனின்? அந்தக்காரணம், இந்திரியம், கடாதிகள் ஆகிய சகலதிரிபுடிகளும், அவைகளின் ஞானமும் சொப்பனம்போல ஏககாலத்திலுண்டாகின்றன; அவைகட்கு விஷயவிஷயீபாவங் கூடாது. கடாதி விடயங்கள், நேத்திராதி இந்திரியங்கள், அப்படியே அந்தக்காரணம் இவைகள் ஞானத்திற்கு முன்னரேயிருந்தால் நேத்திராதிவழியாக அந்தக்காரணத்தின் விருத்திரூபஞானம் பிரமாணஜந்நியமாம்; அவ்வந்தக்காரணம், இந்திரியம், விடயம் இம்மூன்றும் ஞானத்திற்குப் பூருவகாலத்தில் இருக்கவில்லை: ஞானசமகாலத்திலேயே சொப்பனம்போலத் திரிபுடி உண்டாகின்றன. ஆதலால், திரிபுடி ஜந்நியஞானம் யாதொன்றுமில்லை. அங்ஙனமாயினும், ஞானத்திற் சொப்பனம்போலத் திரிபுடி ஜந்நியத்தன்மை பிரதியாகின்றது. ஆதலால் சாக்கிர பதார்த்தங்கள் சாட்சிபாசியமாம்: பிரமாண ஜந்நியஞானத்திற்கு விடயமல்ல; இதனுலும் சொப்பனத்திற்குச் சமானமாக மித்தையாம் என்பது பெறப்படும். அன்றியும், சாக்கிரத்தில் எவ்வளவோ பதார்த்தங்கள் மித்தையா ரூபமாக அறியப்பட்டிருக்கின்றன: வேறு சில பதார்த்தங்கள் சத்திய ரூபமாகவே அறியப்பட்டிருக்கின்றன; அவைகள் அநாதிகால பதார்த்தங்கள்; அவைகளிற் சில நஷ்டமுமாகின்றன: வேறே அவைகட்குச் சமானமாக உற்பன்னமுமாகின்றன. இவ்வாறுன பிரபஞ்சதாரை ஓர்போதும் நாசமாவதில்லை. எவனுக்கு ஞானமுண்டாமோ! அவனுக்குப் பிரபஞ்சந் தோன்றுவதில்லை; மற்றையோர்க்குத் தோற்றரவாம்; அந்த ஞானத்திற்குச் சாதனம் வேதமும், குருவுமாம்; அவைகளால் பரமசத்தியம் பெறப்படும் என்று இவ்வாறுன தோற்றரவு சாக்கிரத்திலுண்டாகின்றது; அங்கே சில பதார்த்தங்கட்கு மித்தியாத்தன்மை, சில பதார்த்தங்கட்கு நாசம், சிலவற்றிற்கு உற்பத்தி, வேதத்தினுலும், குருவினுலும் பரமபுருஷார்த்தப்பிராப்தி இவை முழுவதும் அவித்தையினுற் பண்ணப்பட்ட சொப்பனம் போல மித்தையேயாம். வாசிட்டத்தில் கூணமாத்திர சொப்பனத்தில் வெகுகாலத்தோற்றரவும், சாக்கிரம்போல நிலையாகப் பதார்த்தங்களின் ரோற்றரவும், அவற்றுல் வெகுகாலம் போகமும் உண்டாமென்று அநந்த இதிகாசம் உண்டு. இவ்வாற்றுல், சாக்கிரபதார்த்தங்களுக்குச் சொப்பனத்தைப் பார்க்கிலும் கிஞ்சித்தும் விலட்சணத்தன்மை இல்லை. ஆன்மாவுக் கந்நியமான சகலமும் மித்தையாம்; ஆகலின், ''சொப்பனம் போலுமென்றே துணிந்தவன் ஞானியாவான்'' என்றார். இவ்வாறு சொப்பனத்தைப்பற்றி விசாரசாகரநூற்றத்தில் விசாரிக்கப்பட்டிருக்கின்றது.

இனி விருத்திப் பிரபாகரநூற்றத்தில் எடுத்துக் கிஞ்சித்துக் காட்டுதும்:—அத்வைதவாதத்தின் முக்கிய சித்தாந்தம், சேதனம் சத்தியம்; அதற்குப் பின்னமான சகலமுமித்தை: அநிர்வசனீயத்தை மித்தையென்பர். ஆதலால் சேதனத்திற்குப் பின்ன பதார்த்தங்களைச் சத்தியமென்று சொல்லுதல் அப்பிரசித்த கற்பனை. சேதனத்திற்குப் பின்ன பதார்த்தங்களில் அநிர்வசனீயத்

தன்மை அதிப்பிரசித்தமாம். யுத்தியினுல் விசாரஞ்செய்யும்போது யாதோர் அநான்மபதார்த்தங்களின் சொரூபமும் சித்திக்கவில்லை : தோற்றரவாகின்றன வாதலால் சகல அநான்மபதார்த்தங்களும் அநிர்வசனீயமாம். சித்தாந்தத்தில் அநான்ம பதார்த்தங்களொன்றும் சத்தியமல்ல; கந்தர்வநகரம்போலச் சகல பிரபஞ்சமும் திருஷ்டநஷ்ட சுபாவமாம். சொப்பனத்தைப்பார்க்கிலும் சாக்கிர பதார்த்தங்களிற் கிஞ்சித்தும் விலட்சணத்தன்மையில்லை. சுத்தி ரஜதம் பிராதிபாசிகம் : காந்தையின் காமுதலியவற்றிலுள்ள இரஜதம் வியாவகாரிகம். இவ்வாறு அநான்மபதார்த்தங்களில் மித்தியாத்வ, சத்தியத்வமான விலட்சணத்தன்மை பரஸ்பரங் கூறியிருக்கின்றது. அது ஸ்தூலபுத்தியுடையோர்க்கு அத்வைதபோதத்தில் பிரவேசத்தின்பொருட்டு அருந்ததி நியாயத்தாற் கூறினதாம். என்னை? ஸ்தூலபுத்தியுடையோனுக்கு முன்னமே முக்கிய சித்தாந்த ரீதியைச்சொல்லில் அற்புதமான அர்த்தத்தைக்கேட்டு அநான்மாவில் சத்தியத்வபாவனையுடைய அப்புருடன் சாஸ்திரத்திற் பராமுகஞ்ஞப் புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டனுவன்; வியாவகாரிக பிராதிபாசிக பேதத்தால் அநான்மபதார்த்தங்களுக்கு இருவித சத்தைகூறிச் சேதனத்திற்குப் பாரமார்த்திகசத்தைகூறிடில் சேதனத்தினும் நியூனசத்தை பிரபஞ்சத்திற்கு உளதென்பது புத்தியில் ஆரூடமானபின் சொப்பனமுதலிய திருஷ்டாந்தத்தால் சகல அநான்மபதார்த்தங்களையும் பிராதிபாசிகமாக அறிந்து நிஷேதவாக்கியங்களால் அவற்றிற்குச் சத்தாஸ்பூர்த்தியின்மையை அறிந்து கொள்ளுவனென்றே சத்தை பேதம் கூறினர். அநான்மபதார்த்தங்கட்குப் பரஸ்பரம் சத்தை பேதம் கூறுவதில் அத்வைதசாஸ்திரத்திற்குத் தாற்பரியமில்லை என்றிவ்வாறு விருத்திப் பிரபாகாகிரந்தத்திற் கூறியிருக்கின்றமை காண்க.

"சொப்பனம் போலுமென்றே துணிந்தவன் ஞானியாவான்"
எ - கு, உ - ம். வாசிட்டம்,—

"வானநிக ராமனைத்துங் கற்பனைமாத் திரம்வாளா வளரா நின்ற, தானசக நனவுதனிற் கனவுபோ லிராகவனே யறிதி யன்றே, யீனமுறப் பிறப்பில்லை யிறப்பில்லை யெவ்விடத்து மொன்று மென்றும், ஞானபா மார்த்தத்தா லிவையெல்லாம் பொய்யாக நண்ணு மன்றே."
—எனவரும்

மற்றும் வருவனவற்றுற் காண்க. (சடு)

(107) [இனி அபவாதவிலக்கணம்.]

அரவன்று கயிறென் றுற்போ லாளன்று தறியென் றுற்போல்
குரவன்சொல் லுபதே சத்தாற் கூறுநூ லொளியைக் கொண்டு
புரமன்று புவன மன்று பூதங்க ளன்று ஞானத்
திரமென்னும் பிரம மென்று தெளிவதே யபவா தங்காண். (சசு)

இ - ள். அரவு அன்று கயிறு என்ருற்போல்=இது சர்ப்பமன்று இரச்சுத்தான் என்று தெளிந்தாற்போலும்,—ஆள் அன்று தறி என்ருற்போல்=இவ்வுரு புருடன் அன்று கட்டைதான் என்று தெளிந்தாற்போலும்—குரவன் சொல்உபதேசத்தால்=தேசிகர் உபதேசித்த உபதேசவலிகொண்டும்,—கூறும் நூல் ஒளியைக்கொண்டு=(அத்தேசிகர் உபதேசித்தபடியே) உபதேசித்தருளும் சாஸ்திர விவேகத்தைக்கொண்டும்—புரம் அன்று புவனம் அன்று பூதங்கள் அன்று=இது சரீரமன்று, இது புவனமன்று, இவை பூதங்களல்ல—திரு ஞானம் என்னும் பிரமம் என்று=ஸ்திரமான சொரூபஞானமென்னும் பிரமமே என—தெளிவதே அபவாதம்=(சமூசயமின்றித்) துணிவதே அபவாதமாம்.—எ - று.

காண்=முன்னிலையசை.

"தெளிவதே அபவாதம்" என்றதால், சமூசயமின்றி என்பது வருவித்தாம். நாம்வேறு, உலகுவேறு என்னும் அவிவேகவிருளைப் போக்குதலின் நூலால் உளதாகும் விவேகத்தை "ஒளி" என்ருர். "கூறுநூல் வெளிச்சங் கொண்டு" எ - ம், "ஞானத்திரமென்றும் பிரமமென்றும்" எ - ம் பாட முளது. "தீரம்" எ - து, சொரூபஞானமாகிய பிரமம் அந்தக்காரணவிருத்திரூப ஞானம்போலத் தோற்றமொடுக்கமில்லாதிருப்பதை விளக்கிநின்றது. "தூவன்சொல் லுபதே சத்தாற் கூறுநூ லொளியைக் கொண்டு"—என்று இவர் கூறினதுபோலவே, "தேசிகனூற் சொல்வழியிற் செல்லுவாய்" என வாசிட்டத்திற் கூறியிருப்பதுகாண்க. பிரமத்திற் கற்பிதமானசகம் பிரமமே, அந்நியமல்ல என்பது, ஸ்தாணுவிற் கற்பிதமாகிய புருடன் ஸ்தாணுவே, அந்நியமன்று என்பதுபோல வாதசமாஞ்திகாரணமாம் என்க.

"புரமன்று புவனமன்று" எ - கு, உ - ம். வாசிட்டம்,—

"வருங்கற் பகவின் விரைந்தேக வந்தேன் பலசொல் லியும்பய னென், சுருங்கச் சொல்லும் பயன்கேளாய் தோன்ற விங்குள் ளது வுஞ்சித், தொருங்கப் புறத்துஞ் சித்தெல்லை யுள்ள துஞ்சித் தெல்லை யற, நெருங்குற் றதுஞ்சித் தியான்சித்து நீசித் துலக நிறைசித்தே"—எ - ம்,

"என்ரு வெள்ளி யேகியபின் னெல்லா மறிவா முலகினைப்பார்த் துன்ரு வொக்கு மொக்குமெனக் குசரு வுரைத்த துண்மையதே முன்ரு மவனி சித்துலகு மூன்றுஞ் சித்து நான்சித்து நன்ரு லான திசைசித்து நாட்டுகின்ற தெலாஞ் சித்தே."—எ-ம் வரும்.

மற்றும் வருவனவற்ருற் காண்க. (சசு)

[முக்கிய சித்தாந்தமான அபவாதங்கூறி இதற்கு அசமர்த்தனை மந்தப்பிரஜ்ஞனுக்குப் பஞ்சீகரண மகாவாக்கியத்திற் கூறியபடி லயசிந்தனை நுபாபவாதங் கூறுகின்றார்.]

படமூநூ லும்போற் செய்த பணியும்பொன் னும்போற் பார்க்கில்
கடமுமண் ணும்போ லொன்றுங் காரிய காரணங்கள்
உடன்முதற் சுபாவ மீறு வொன்றிலொன் றுதித்த வாறே
அடைவினி லொடுக்கிக் காண்ப தபவாத வுபாய மாமே. (சஎ)

இ - ள். காரியகாரணங்கள் = காரியமாகிய சகத்தையும், அதற்கு உபாதானகாரணமாகிய பிரமத்தையும்—பார்க்கில் = (*சுருதி † தர்க்க ‡ அநுபவங்களால்) விசாரிக்குமிடத்து—படமும் நூலும்போல் = (காரியமாகிய) படமும், (அதற்கு உபாதான்காரணமாகிய) நூலும்போலவும்,—செய்த பணியும் பொன்னும்போல் = செய்யப்பட்ட (காரியமாகிய) ஆபரணமும், (அதற்கு உபாதான காரணமாகிய) பொன்னும்போலவும்,—கடமும் மண்ணும்போல் = (காரியமாகிய) கடமும், (அதற்கு உபாதானகாரணமாகிய) மண்ணும்போலவும்—ஒன்றும் = அநந்நியமாகுமேயன்றி அந்நியமாகா;—உடல் முதல் சுபாவம் ஈறு = (இவ்வத்வைத சித்தாந்தத்தை) தூலதேகமுதல், அவித்தையீறுக—ஒன்றில் ஒன்று உதித்த ஆறே = ஒன்றினின்றும் ஒன்றுண்டானபடியே—அடைவினில் ஒடுக்கிக்காண்பது = முறையே ஒடுக்கிப்பார்ப்பது—அபவாத உபாயம் ஆம் = அபவாதமென்னும் உபாயமாம்.—எ - று.

சுபாவம் = அஞ்ஞானமென்று கீதையிற் பகவானுஞ் சொல்லப்பட்டிருக்கிறது; அஞ்ஞானம், அவ்வியத்தம் ஒன்றிற்கே பரியாயம். அடைவினிலொடுக்கிக் காணுமாறு;—தூலப்பிரமாண்ட முழுவதும் பஞ்சீகிருதபூதகாரியமாம்; அவற்றில் யாது பிருதுவியின்காரியமோ! அது பிருதுவியின்சொரூபம், சலத்தின்காரியம் சலத்தின்சொரூபம் இப்படியே எது எப்பூதத்தின் காரியமோ! அது அப்பூதத்தின்சொரூபமே என இவ்வாறு ஸ்தூலப்பிரமாண்டமுழுவதும் பஞ்சீகிருதபூதசொரூபமே எ - ம்,—பஞ்சீகிருதபூதமும் அபஞ்சீகிருதபூதகாரியமேயாகலின், அபஞ்சீகிருதபூதமே வேறில்லை எ - ம்,—அந்தக்காரணமுதலிய சூட்சுமசிருஷ்டிகளும் அபஞ்சீகிருத பூதகாரியமேயாகலின் அபஞ்சீகிருத பூதசொரூபமேயாம்—அவற்றுள் அந்தக்காரணம் பூதங்களின் சத்துவகுணகாரியமாகலின் சத்துவகுணசொரூபம், பிராணன் பூதங்களின் ரஜோகுணக்கூற்றின் காரியமாகலின் ரஜோகுணசொரூபம், குதேந்திரியம் பிருதுவியின் ரஜோகுணக்கூற்றின் காரியமாகலின் ரஜோகுண சொரூபம், கிராணேந்திரியம் பிருதுவியின் சத்துவகுண காரியமாகலின் பிரு

---

* சுருதி = "ஈதனேத்தும் பிரமமல்லவா" என்பது.

† தர்க்கம் = "காரியம் காரணத்தின்றுப்பின்னமோ! அபின்னமோ"! என்பது முதலியன; அவை பிரமகீதையின் ஐந்தாமத்தியாயத்திற் காண்க.

‡ அநுபவம் = பிரமவித்துக்களின் அநுபவம்.

துவியின் சத்துவகுணசொரூபம், அப்படியே ஜிக்வேந்திரியமும், உபஸ்தேந்திரியமும் சலத்தின் சத்துவகுண ரஜோகுணசொரூபம், நேத்திரேந்திரியமும், பாதேந்திரியமும் தேயுவின் சத்துவகுண ரஜோகுணசொரூபம், துவக்கேந்திரியமும், பாணீந்திரியமும் வாயுவின் சத்துவகுண ரஜோகுணசொரூபம், சுரோத்திரேந்திரியமும், வாக்கிந்திரியமும் ஆகாசத்தின் சத்துவகுண ரஜோகுணசொரூபமாம் என்றிவ்வாறு சூட்சுமசிருஷ்டிகள் முழுவதும் அபஞ்சீகிருதபூதசொரூபமே என்றுஞ் சிந்தித்து, அபஞ்சீகிருதபூதங்களையும் பிருதுவிசலத்தின்காரியமாகலின் சலசொரூபம், சலம் தேயுவின்காரியமாகலின் தேயுவின்சொரூபம், தேயு வாயுவின்காரியமாகலின் வாயுவின்சொரூபம், வாயு ஆகாசகாரியமாகலின் ஆகாசசொரூபம், ஆகாசம் தமோகுணப்பிரதானப்பிரகிருதியின் காரியமாகலின் பிரகிருதியின் சொரூபம், தமோகுணப் பிரதானப் பிரகிருதியும் அவ்வியத்தத்தின் அவஸ்தாவிசேஷமாகலின், அவ்வியத்தசொரூபமாம், அவ்வியத்தம் பிரமசேதனத்தின் சத்தியாம், புருடனிடத்துச் சாமர்த்தியரூபசத்தி புருடனினும் பின்னமாகாமைபோலச் சேதனத்தினிடத்து அவ்வியத்தரூபசத்தி பிரமசேதனத்தினும் பின்னமல்ல என இவ்வாறு சர்வ அநாண்மபதார்த்தங்களையும் பிரமத்தின்கண் லயசிந்தனஞ் செய்து அவ்வத்வைதப் பிரமம் யானுகிறேன் என்று சிந்திப்பதாம் என்க.(சஎ)

[ஆவரணசத்தி எத்தன்மையதாமாலோவெனச் சீடன் சங்கிக்க அதற்கு உத்தரங்கூறத் தொடங்கல்.]

தூடண தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யும்
ஏடணை விகாரஞ் சொன்னீ ரிரண்டுசத் திகளென் றீரே
மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ் சொல்லு மையா
கேடறக் குருவே யென்னக் கிருபையோ டருள்செய் வாரே. (சஅ)

இ - ள். தூடண தமத்தில் வந்த=நிந்திக்கத்தக்க தமப்பிரதான மாயையினின்றுமுண்டான—தோற்றம் ஆம் சத்தி செய்யும்=விட்சேபமாகிய சத்தியுண்டாக்கும்—ஏடணை விகாரம் சொன்னீர்=இச்சாரூபமான (ஆகாசாதிப் பிரபஞ்ச) விகாரத்தை அருளிச்செய்தீர்.—இரண்டு சத்திகள் என்றீரே=(முன்னே தாமதகுணம்) இரண்டுசத்தியாய்ப் பிரிந்து தோன்றுமென்றீராதலால்,—மூடல் ஆம் சத்தி செய்யும் மோகமும்=ஆவரண ரூபமான சத்தி செய்யாநிற்கும் மயக்கத்தையும் — கேடு அற=(எனது) துன்பமற — ஐயா குருவே=எனது பிதாவாகிய ஆசாரியரே—சொல்லும் என்ன=உபதேசித்தருளுமென்று சீடன் வினவ—கிருபையோடு அருள்செய்வார்.—எ - று.

"தொலைவில் பொருளியா வையுமாகித் துன்னி யொன்றுமிச்சை"—

என வாசிட்டத்திற் கூறியிருப்பதால், "ஏடணைவிகாரம்" என்றார்.

"மூடலாஞ் சத்தி செய்யும் மோகம்" எ - கு, உ - ம். வாசிட்டம்,—

" அதுதா னறியார்க் கிடர்நல்கி யதுவே யதுவல் லாததுபோற்
றிதமாய் நிற்கு மிம்மாயைச் சித்தி ரந்தா னற்புதமே
பொதுவா யங்க மத்தனையும் புணர்ந்து பிரிவற் றிருக்கவுந்தா
னிதமா யுயிரை யுயிர்காணு திருக்க மயக்கு மியாரையுமே"

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (சஅ)

(108) [ஆவரணசத்தியின்றன்மையைத் தரிசிப்பிக்கின்றார்.]

தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி நாஸ்திந பாதி யென்னும்
ஊனிடை யுயிர்க ளுள்ளத் துணர்விழி குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடு மழைநிசி யிருள்போன் மூடும். (சகூ)

இ - ள். தனக்குத்தான் நிகர் ஆம் ஈசன்தனையும்=(சர்வஜ்ஞத்வாதி கல்யாணகுணங்களிஞல்) தனக்குத்தானே நிகராகிய ஈசனையும்,—தங்களை தாம் கண்ட ஞானிகள் தமையும்=(பிரத்யகபின்ன பரமான்மாவான) தம்மைத் தாம் அறிந்துள்ள ஞானிகளையும்—அன்றி=தவிர—நாஸ்தி=பிரமமென்பதில்லை,—நபாதி=பாதமாகவில்லை—என்னும்=என்று வியவகரிக்கும்—ஊனிடை உயிர்கள்=உடலின்கண்ணுள்ள மற்றைச் சீவர்களின்—உள்ளத்து உணர்விழி=அந்தக்கரணத்தின் ஞானதிருஷ்டியானது—குருடு ஆம் வண்ணம்=குருடாகும்படிக்கு—வான் நிலம் திசைகள் மூடும்=ஆகாசம், பூமி, திக்குகளை (விழிக்குத் தோன்றுமல்) மறைக்காநின்ற—மழை நிசி இருள்போல் மூடும்=கார்காலத்திரவினிருள்போல மறைக்கும்; (அதுவே ஆவரணசத்தியின் மோகமாம் என்றறிதி.)—எ - று.

"உணர்" எ - து, முதனிலைத் தொழிற்பெயர்.

"நாஸ்தி நபாதியென்னும் உயிர்க ளுணர்விழி குருடாம் வண்ணம் மூடும்" எனக்கூட்டுக.

"நாஸ்தி நபாதி" என்னும் வியவகாரத்திற்கேது ஆவரணசத்தி; இதை, நகூ - ம் செய்யுளுரையில் விரிக்கப்படும்; ஆண்டுக்காண்க. "நாதத்தின் உபாதி ஒன்றே" என்னும் பாடமுமுளது. "நாதம்" எ - து, வேதாந்த சாஸ்திரத்தின் பரிபாஷையான சத்தமன்மையின் அது பிறழ்ந்தபாடமாம் என்க. (சகூ)

["மூடும்" என்று முற்கூறியதைப் புலப்படக் காட்டுகின்றார்.]

மூன்றமாம் பிரமத் துக்கும் புறத்துள விகாரங் கட்கும்
ஆன்றகூ டஸ்த னுக்கு மகத்துள விகாரங் கட்கும்
தோன்றிய பேதஞ் சற்றுந் தோன்றுமன் மறைத்து மூடும்
ஊன்றிய பவவி யாதி யுண்டாக்கு முபாதி யீதே. (ஙo)

இ-ள். பூன்றம் ஆம் பிரமத்துக்கும்=பூரணமாகிய பிரமத்திற்கும்,—புறத்து உள விகாரங்கட்கும்=புறம்பே இதுவென்னும் விருத்திவிடயமாக வுள்ள ஆகாசாதிப் பிரபஞ்சத்திற்கும்;—ஆன்ற கூடஸ்தனுக்கும்=அறிவுருவான கூடஸ்தனுக்கும்,—அகத்து உள விகாரங்கட்கும்=உள்ளே (யான் என்னும் விருத்தி விடயமாகவுள்ள) அகங்காராதிகட்கும்—தோன்றிய பேதம்=(சுபாவசித்தமாக) விளங்குவனவாகிய பேதங்கள்—சற்றும்=கிஞ்சித்தும்—தோன்றுமல் மறைத்து=(உணர்வு விழிக்கு) விளங்காவண்ணம் அதைக் குருடாக்கி—மூடும்=(அப்பேதங்களே ஆவரணசத்தி) மறைக்கும்.—ஊன்றிய பவவியாதி=(கடத்தற்கரிதாம்) வலிமைபெற்றுள்ள ஜநநமாகிய நோயை—உண்டாக்கும் உபாதி=வளர்க்கும் உபாதி—ஈதே=இவ்வாவரண சக்தியேயாம்; (வேறொன்றல்ல.)—எ-று.

அதிஷ்டானமான கூடஸ்தப்பிரமங்கட்கும், ஆரோபமான அகங்காராதிப் பிரபஞ்சங்கட்கும் உள்ளபேதங்கள் முறையே சச்சிதாநந்தமும், அநிருதசடதுக்கமும் ஆம். முற்செய்யுளிற் கூறியிருப்பதானும், இதில் "தோன்றுமன் மறைத்து" என்பதானும் "உணர்வு விழிக்கு" என்பது வருவித்தாம். அதிஷ்டான வாரோபங்களின் பேதங்களோன்றுமன் மூடுவதால் ஆவரணசத்தியை, "மூடல்" எ-ம், அகங்காராதிப் பிரபஞ்சங்களாகத் தோன்றுவதால் விட்சேபசத்தியை, "தோற்றம்" என்றும் ஆங்காங்கே கூறுகின்றனர்.

[ஆவரணசத்தியின் மறைப்பைச் சீடன் நன்றகத் தெரிந்துகொள்ளும்பொருட்டுப் பின்னுங் கடாவிடைகளா லுணர்த்துகின்றார்.]

ஆதார மறைந்து போனு லாரோப மெங்கே தோன்றும்
ஆதார மறையா தாகி லாரோப மிலையே யென்றால்
ஆதாரஞ் சமம்வி சேட மாமென விரண்டு கூறும்
ஆதாரஞ் சமமா மெங்கு மாரோபம் விசேட மாமே. (நிக)

இ-ள். ஆதாரம் மறைந்துபோனால்=(காடாந்தகாரத்தில் இரச்சுப் போல) ஆதாரமான பிரமமானது தோன்றுமல் மறைந்துபோமாயின்—ஆரோபம் எங்கே தோன்றும்=(பிராதிபாசிக சர்ப்பம்போல) ஆரோபமான ஜகத்து ஓரிடத்து முண்டாக மாட்டாதே?—ஆதாரம் மறையாது ஆகில்=(மத்தியான வெய்யிலில் இரச்சுப்போல) ஆதாரமான பிரமமானது மறைபடாமல் விளங்குமாயின்—ஆரோபம் இலையே என்றால்=(பிராதிபாசிக சர்ப்பம் போல) ஆரோபமான ஜகத்து உண்டாக நியாயமில்லையே என்று சங்கிக்கில்,—ஆதாரம் சமம் விசேடம் என இரண்டு கூறு ஆம்=ஆதாரமானது சாமான்யம் எனவும், விசேஷம் எனவும் இரண்டு கூறுடையதாம்;—[அவற்றினிலக்கணம் யாதெனின்?] எங்கும் ஆதாரம் சமம் ஆம்=அதிக தேசம், (அதிக காலத்தில்) உள்ள ஆதாரம் சாமான்ய ஆதாரமாம்:—ஆரோபம் விசேடம் ஆம்=*நியூன காலம், நியூனதேசத்திலுள்ளவை விசேஷமாம்.—எ-று.

* நியூனம்=அற்பம்.

நியூனகாலம், நியூனதேசத்திலுள்ளதென்பார், "ஆரோபம்" என்றார். "எங்கும்" என்றதால், காலம் வருவிக்கப்பட்டது. (நிக)

[இதுவுமது.]

சகமதி லிதுவென் சுட்டாஞ் சமானந்தான் மறைந்தி டாது
மிகவிது கயிறு மென்னும் விசேடந்தான் மறைந்து போகும்
அகமெனுஞ் சமானந் தன்னை யஞ்ஞான மறைத் திடாது
பகர்விசே டமதாஞ் சீவன் பரமெனு மதனை மூடும். (நுஉ)

இ - ள். சகமதில்=உலகில்—இது என் சுட்டு ஆம்=(மந்தாந்தகாரத்தில் எதிரே கிடக்கும் இரச்சுவில் இது சர்ப்பமென்புழி,) இதுவென்று சுட்டப்படுவதான—சமானந்தான் மறைந்திடாது=சாமான்யரூபம் மறையாது:—இது கயிறு ஆம் என்னும்=இஃதிரச்சுவாமென்று காணப்படும்—விசேடந்தான்=(மூஞ்சிரூபமான) விசேஷபாகந்தான்—மிக=பெரும்பாலும்—மறைந்துபோகும்,—(அதுபோல) பகர் விசேடமது ஆம் சீவன்=கற்பித விசேஷமாகச் சொல்லாநிற்குஞ் சீவன்—அகம் எனும் சமானந்தன்னை=யான் உளன் என்னும் சாமான்ய ரூபமாகிய ஆதாரத்தை—அஞ்ஞானம் மறைத்திடாது=ஆவரணசத்தி மறையாது:—பரம் எனும் அதனை மூடும்=(யான் சேதன, ஆநந்த, வியாபக, நித்தியசுத்த, நித்தியமுத்தரூபப்) பிரமம் என்னும் விசேஷ ரூபத்தையே மறைக்கும்.—எ - று.

அஞ்ஞான காரியமாகிய ஆவரணசத்தியை, "அஞ்ஞானம்" எ - து, காரண ஆகுபெயர்.

(109) ஈண்டிஃதிரகசியம்:—இரச்சுவுக்கு இரண்டு ரூபமுண்டு; ஒன்று சாமான்யரூபம்: ஒன்று விசேஷரூபம்; இதுவென்பது சாமான்யரூபம்: இரச்சுவென்பது விசேஷரூபம்; இது சர்ப்பமென்புழி, மித்தியாசர்ப்பத்தோடபின்னமாய்ப் பிராந்தி காலத்திலுந் தோன்றுநிற்கும் இதுவெனும் ரூபம் சாமான்யரூபம்: யாது பிராந்திகாலத்திற் றோன்றுதிருந்து தான்தோன்றுவதால் பிராந்தி நிவிர்த்தியாமோ! அது இரச்சுவின் விசேஷரூபமாம்; அப்படியே ஆன்மாவுக்கும் சாமான்யமும் விசேஷமுமாகிய இரண்டு ரூபமுண்டு; சத்துரூபம் சாமான்யமாம்: அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுத்தத்தன்மை முதலியன விசேஷரூபமாம். என்னை? தூலசூட்சுமசங்காதங்களுள்ளனவென்புழி, தூலசூட்சும சங்காதப்பிராந்தி சமயத்திலும் மித்தியாசங்காதத்தோடபின்னமாய்ச் சத்துரூபந்தோன்றுநிற்பதால் ஆன்மாவின் சத்துரூபம் சாமான்யரூபமாம்: தூலசூட்சும சங்காதங்களின் பிராந்திசமயத்தில் ஆன்மாவின் அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுத்தத்தன்மை முதலிய சொரூபந்தோன்றுமல் அசங்கத்வமுதலிய ஆன்மாவின் சொரூபந் தோன்றுவதால் சங்காதப்பிராந்தி நிவிர்த்தியாகலின் அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுத்தத்தன்மை, வியாபகத்தன்மை முதலியன விசேஷரூபமாம். சர்வப்பிராந்திகளிலும் சாமான்யரூபம் ஆதாரமென்றும், விசேஷ

ரூபம் அதிஷ்டானமென்றுஞ் சொல்லப்படும். எப்படிச் சர்ப்பத்திற்கு ஆசிரயமாவுள்ள இரச்சுவின் சாமான்யமாகிய இதுவெனும் ரூபம் சர்ப்பத்திற்கு ஆதாரமும், விசேஷமான இரச்சுரூபம் அதிஷ்டானமுமாகிறதோ! அப்படியே மித்தியாப் பிரபஞ்சத்திற்கு ஆசிரயமாவுள்ள ஆன்மாவினது சாமான்யமாகிய சத்துரூபம் பிரபஞ்சத்திற்கு ஆதாரமும், அசங்கத்வமுதலிய விசேஷரூபம் அதிஷ்டானமுமாம்; இவ்வாறு, ஆதாரவதிஷ்டானங்கட்குச் சர்வஞ்ஞாத்மா என்னும் மூனிவரால் கிஞ்சித்பேதஞ் சொல்லப்பட்டிருக்கிறது. மந்தாந்தகாரத்தில் சாமான்யரூபத்தால் ஞாதமாயும், விசேஷரூபத்தால் அஞ்ஞாதமாயும் உள்ள இரச்சுவில் சர்ப்பாத்தியாசம் உண்டாகின்றதேயல்லாமல் அத்தியந்தம் ஞாதமாயும், அத்தியந்தம் அஞ்ஞாதமாயுமுள்ள இரச்சுவில் அத்தியாசம் உண்டாகக் காணப்படவில்லை. நிர்விசேஷமான ஆன்மாவில் ஞாத, அஞ்ஞாதத்தன்மைகள் கூடாமையால் பிரபஞ்சவத்தியாசமுங் கூடாதே எனின்? இவ்வார்த்தை பொருந்தாது. என்னை? ஆன்மா உண்டென்பது சகலர்க்குந் தோற்றரவாகின்றது; தன்னுடைய சொரூபத்திற்கு ஆன்மா என்று பெயர்: யான் இலனென்று ஒருவனுக்குந் தோற்றர வுண்டாகவில்லை; பின்னையோ? உளனென்றே தோற்றரவுண்டாகின்றதாகலான் சத்துரூபத்தால் ஆன்மா ஞாதமாயும், யான் சைதந்நியன், ஆநந்தன், வியாபகன், நித்தியசுத்தன், நித்தியமுத்தன் என ஒருவனுக்குந் தோற்றர வுண்டாகாமையின் சைதந்நிய, ஆநந்த, வியாபக, நித்தியசுத்த, முத்தரூபத்தால் ஆன்மா அஞ்ஞாதமாயும் இருக்கின்றது: இவ்வார்த்தை அநுபவசித்தம்; இவ்வநுபவசித்த வார்த்தை யுத்தியினுல் நிவிர்த்தியாகாது. யாவர்க்குந் தோற்றரவாகின்ற ஆன்மாவின் சத்துரூபம் சாமான்யரூபம்: கேவலம் ஞானிக்கே பிரதீதியாகின்ற சேதன, ஆநந்தாதிகள் விசேஷரூபம். யாதொன்று அதிகாலத்தில், அதிக தேசத்திலிருக்கும் அது சாமான்யரூபம்: நியூனகாலத்தில், நியூனதேசத்திலிருப்பது விசேஷரூபம். சத்தைப்போலவே சேதன ஆநந்தாதிகள் ஆன்மாவின் சொரூபமாய் எங்கும் வியாபகமாக இருத்தலால் இவைகட்கு நியூனதேசமும், சத்துரூபத்திற்கு அதிகதேசமும் உளதெனலும், ஆன்மா நிர்விசேஷமாதலால் சத்துரூபம் சாமான்யக்கூறு, சேதன ஆநந்தாதிகள் விசேஷக்கூறு எனலுங் கூடாதே யெனின்? அற்றன்று; சத்தின் ரோற்றரவு யாவர்க்கும் அவித்தியாகாலத்திலும் உண்டு. ஆன்மா சேதனம், ஆநந்தரூபம் என்னுந் தோற்றரவு யாவர்க்கும் அவித்தியாகாலத்தில் இல்லை: கேவலம் ஞானிக்கே உண்டாகின்றது. அவித்தியா காலத்திலும் சேதன, ஆநந்த, முத்தத்துவம், சுத்தத்துவமாதியும் உளவேனுந் தோற்றரவாகாமையின் இல்லாதனபோலும் இருந்தன; இவ்வபிப்பிராயத்தால் அவை நியூனகாலத்துள்ளன எனவும், சத்துரூபம் அதிக காலத்துள்ளது எனவுங் கூறினர். சத்துரூபத்திற்கும், சேதன ஆநந்தாதிகட்கும் சாமான்ய விசேஷபாவம் இல்லையாயினும் அற்பகால, அதிக காலத்திற் ரோற்றரவாகின்றமையின் சாமான்ய விசேஷபாவம்போலும் இருந்தன; இக்காரணத்தால் ஆன்மாவின் சத்துரூபஞ் சாமான்யக்கூறு என்றும், சேதன ஆநந்தாதிகள் விசேஷக்கூறுகள் என்றுஞ் சொல்லப்படும். ஆன்மா நிர்விசேஷமென்னும் சித்தாந்தத்திற்கும் ஆனியில்லை. என்னை? ஆன்மாவி

னிடத்துச் சாமான்ய விசேஷபாவம் அங்கீகரிக்கில் ஆன்மா நிர்விசேஷமென்னுஞ் சித்தாந்தத்திற்கு ஆனியாம்; அவை அங்கீகாரமில்லை: அவித்தையிலுற் சாமான்ய விசேஷம்போலத் தோற்றுவதாற் சாமான்ய விசேஷபாவங் கூறினர்; இவ்வாற்றால் சத்துரூபத்தால் ஞாதமாயும், சேதன, ஆநந்த, நித்தியசுத்த, நித்தியமுத்த பிரமரூபத்தால் அஞ்ஞாதமாயும் உள்ள ஆன்மாவில் பிரபஞ்சம் ஆரோபமாகக்கூடும் என்றறிக.

முன்னே இந்நூற்குரை செய்திருப்போர், "சகமதி லிதுவென் சுட்டாச் சமானகீகண்" என்னும் பாடத்தை ஒப்பினதும், சீவேசுரரை அஞ்ஞான மறைக்கும் என்று பதவுரையிற் கூறினதும், விசேஷவுரையில், "சீவன்பரனெனும் அவரைமூடும்" என்றது, அவர்கள் உணர்வை என்றதும், தாற்பரியத்தில் ஆரோபமான சீவேசுரரைத் தமக்கு ஆதாரமான கூடஸ்தபிரமத்தைப் பார்க்கவொட்டாமல் அவரது உணர்வை இவ்வாவரணம் மறைக்குமேயன்றி ஆதாரத்தை மறைக்கமாட்டாது என்று கூறியிருப்பதும் வேதாந்த சம்பிரதாயப் பொருள் அன்றும்; ஆகலின், அவை சாஸ்திர விருத்தமாம். இலை மறைகாய்போற் செய்யுளிற் புதைந்துகிடக்குந் தத்துவார்த்தங்களை விரிக்காமல் செய்யுட்குப் புறம்பாயுள்ள வார்த்தைகளை விரித்திருக்கின்றனர். சீவேசுரரை ஆவரணம் மறைக்கும் என்று இச்செய்யுட்கு உரைசெய்தோர்,

"தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி"

என்னும் சகு - ம் செய்யுளை மறந்தனர்போலும்.

(110) சீவேசுரர் சொரூபநிரூபணம் கிரந்தகாரர் வெகு விஸ்தாரமாகச் செய்திருக்கின்றனர். அங்கே சீவசொரூபத்தில் ஏகத்துவ, அநேகத்துவ விவாதங்களும் பலவுள. சர்வமதங்களிலும் ஈசுரன் ஒருவன், சர்வஞ்ஞன், நித்தியமுத்தன் என்றொப்பினர். ஈசுரனிடத்து ஆவரண அங்கீகாரம் எந்த அத்வைத வாதகிரந்தங்களிலும் இல்லை. யாரொருவர் ஈசுரனிடத்து ஆவரணம் உண்டென்பரோ! அவர் வேதாந்த சம்பிரதாயத்திற்குப் பகிர்ப்பூதராம்; ஆயினும், நாநா அஞ்ஞான வாதத்தில் அஞ்ஞானம் சீவாசிரிதம், பிரமவிஷயகமாம் என்பது வாசஸ்பதியினுடைய மதம். அவர் சீவனுடைய அஞ்ஞானத்தால் ஈசுரன் கற்பிதம் என்றும், பிரபஞ்சம் நாநா என்றும் ஒப்பினர்; அப்படி ஒப்பினும், சீவனுடைய அஞ்ஞான கற்பிதமான ஈசுரனும் சர்வஞ்ஞன் என்றே ஒப்பினர். ஈசுரனிடத்து ஆவரணம் உண்டென்றங்கீகாரம் இல்லை என்று "விருத்திப் பிரபாகாகிரந்தத்தில் சீவேசுராப்பிராசங்கத்திற்" கூறியிருக்கின்றது. ஈசுரன் உணர்வை ஆவரணசத்தி மறைக்கும் என்று அவ்வுரைகாரர் கூறியது யாதுகருதியோ! அறிகிலேம். (ருஉ)

(111) [ஆவரணசத்தியின் சொரூபத்தை அறிவித்து அஃதே ஜநநத்திற்கு முலகாரணமாம் என்றும், நு0 - ம் செய்யுளிற் கூறியதைச் சீடன் வினவை முன்னிட்டுச் சுருதி, யுக்தி, அநுபவங்களால் அறிவிக்கத் தொடங்கல்.]

கேவல நிலைதோன் றுமற் கெடுத்தது பஞ்ச கோசம்
சீவனுஞ் சகத்து மாகிச் செனித்தவிட் சேப மன்றே
ஆவர ணந்தா னேபா ழனர்த்தமென் றுரைத்த தேதோ
மேவருங் குருவே யென்று விஞவிடின் மகனே கேளாய். (நிங)

இ - ள். கேவல நிலை தோன்றுமல் கெடுத்தது = பிரமான்மவைக்கிய ஸ்தி திமை (இரச்சுவின் விசேஷ ரூபத்தைச் சர்ப்பம்போலும்) விளங்கவொட்டா மன் மறைத்துக் கெடுத்தது—பஞ்சகோசம் சீவனும் சகத்தும் ஆகி = அந்த மயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் பஞ்சகோசங்களும், (அவற்றின் அபிமானியான) சீவனும், ஆகாசாதி சகத்து மாய் — சனித்த = உண்டான—விட்சேபம் அன்றே = விட்சேபசத்தி அல்லவா;—(இங்ஙனம் அதுவே கொடியதாயிருக்க) ஆவரணம் தானே = ஆவரண சத்திதானே—பாழ் (என்றும்) = ("உயிர்க ளுள்ளத் துணர்வினி தருடாம் வண்ணம்" மறைத்துப்) பாழாக்கிற்று என்று சகூ-ம் செய்யுளிலும்,—அனர்த்தம் என்றும் = "ஊன்றிய பவவி யாதி யுண்டாக்கு முபாதி யீதே" என்று நூ0 - ம் செய்யுளிலும்—உரைத்தது எது = அருளியது யாதுகாரணம் —மேவரும் குருவே என்று = கிடைத்தற்கரிய வாசாரியரேயென்று—விஞ விடின் = கேட்கில்—மகனே கேளாய் = மைந்தா (அதற்கு உத்தரஞ் சொல்லு தும்) கேட்பாய்.—எ - று.

"நாமுட லென்னு மாசான் ஞானக்கண் குருடாய்ப் போகும்"
—எ - ம்,

"காசர ணதி மட்டா நானிவ னென்று காணுங்
திரமது தானே மூன்று மகங்காஞ் செகத்தோர்க் கெல்லா
மூரியதா மிகவும் பொல்லா துற்பவ மென்னு நச்சு
மாமெழு மூலமாகும்"—எ - ம்,

வாசிட்டத்தில், விட்சேப சத்தியைத்தானே பொல்லாததாகச் சொல்லி யிருக்கின்றதல்லாமல், ஆவரண சத்தியை அங்ஙனம் சொல்லவில்லையே என் பான்,

"கேவல நிலைதோன் றுமற் கெடுத்தது பஞ்ச கோசஞ்
சீவனுஞ் சகத்து மாகிச் செனித்தவிட் சேப மன்றே
ஆவர ணந்தா னேபா ழனர்த்தமென் றுரைத்த தேதோ"—என்றான். (நிங)

[சுருதி யுத்திகளால் ஆவரணசத்தியின் பிரதிகூலத்தையும்,
விட்சேபசத்தியின் அநுகூலத்தையுங் கூறுகின்றார்.]

தோற்றமாஞ் சத்தி தானுந் தன்பமாம் பவமா னலும்
ஆற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூல மாகுங் காணீ

ஊற்றமாம் பகற்கா லம்போ லுபகார நிகியா லுண்டோ
மாற்றமென் னுரைப்பேன் மைந்தா மறைப்பது மிகப்பொல் லாதே. ()

இ - ள். தோற்றம் ஆம் சத்தி தானும் = விட்சேபரூபமான சத்தியும்— தன்பம் ஆம் பவம் ஆனலும் = (அவிவேகிகட்கு அபிமானரூபமாய்ப் புண் ணிய பாவவசத்தால்) தன்பமயமான ஜநநத்துக்குக் காரணமாயிருப்பினும்— ஆற்றலான் முத்தி சேர்வார்க்கு = (சிரவணதிமுயற்சி) வலியான் மோட்ச மடையவிச்சிக்கின்ற விவேகிகட்கு— அனுகூலம் ஆகும் காண் நீ = (குரு சாஸ் திராதிரூபமாய்ச்) சகாயமாகும் என நீ அறிதி.—(சுருதி உரைக்கப்பட்டது : இனியுத்தி;) ஊற்றம் ஆம் பகல் காலம்போல் = (சாது, அசாது யாவர்க்கும் ஆல சியாதிகளைப் போக்கிச்) சர்வ முயற்சியையும் பயத்தற்குக் காரணமான பகற் காலத்தைப்போல— உபகாரம் நிகியால் உண்டோ = (அச்சாது, அசாதுக ளுக்கு) உதவியானது இராக்காலத்தாலுண்டா? வெகுவிதமான கொடிய தன்பங்களைத் தருதலால் இன்று.)—மாற்றம் என் உரைப்பேன் = (உண் விஞவிற்கு) இவ்வுவமானமேயன்றி வேறு யாது மறுமொழி சொல்லுவேன்; —மைந்தா = மைந்தனே—மறைப்பது = ஆவரண சத்திதான்—மிகப் பொல் லாது = மிகவுங் கொடிது. —எ - று.

"சத்தி தானும்" என்பதன்கண் உம்மை, இறந்தது தழீஇய எச்சப் பொருட்டு.—"பவமானலும்" என்பதன்கண்ணுள்ளது, ஆக்கவும்மை.

இராக்காலம் சிட்டர், துட்டர் யாவர்க்கும் நித்திரைக்குக் காரணமாயிரு ந்து வெகுவித தன்பந்தருதல்போல ஆவரண சத்தியும் விவேகி, அவிவேகி யாவர்க்கும் ஜநநத்திற்கு மூலகாரணமாயிருந்து வெகுவிதமான பிரயாசங்க ளைத் தருதலால் மிகவுங் கொடியதென்பதாம்.

"முத்தி சேர்வார்க் கனுகூல மாதும்" எ - கு, உ - ம். பாகவதம்,—

"மானுட வாக்கை யென்னு மருவருந் தோணி பெற்று
மூனமில் குரவன் சொல்லா மோடமுப்ப வமேனு டென்சி
ரானதோ ரநுகூ லக்கா லணுகவும் பிறவி வேலை
தானெழி தரவெண் ணுதான் றன்னையே கொல்கின் றனும்."

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (நிச)

[இனி அநுபவத்தால் அதன் கொடுமை கூறல்.]

சுழுத்தியிற் பிரள யத்திற் றோற்றமாஞ் சகங்கண் மாண்டும்
அழுத்திய பவம்போய் முத்தி யடைந்தவ ரொருவ ருண்டோ
முழுத்தவிட் சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்கும்
கொழுத்தவா வரண முத்தி கூடாமற் கெடுத்த தேடே. (நிந)

இ - ள். சுழுத்தியில் = (நாள்தோறும் உண்டாகாநிற்கும்) சுழுத்தியி லும்,—பிரளயத்தில் = மகா கற்பத்திலும்—தோற்றம் ஆம் சகங்கள் மாண்டும் = விட்சேபரூபமான சகங்களைத்தும்—அழுத்திய பவம்போய் = அப்போது

தம்மைத் துன்பத்தின் மூழ்கப்பண்ணிய ஜநநமானது மீண்டுண்டாகாமல் நீங்கி—முத்தி அடைந்தவர்=மோட்சமடைந்தோர்—ஒருவர் உண்டோ=ஒரு வரும் இலர்;—(ஆகலின்,) முழுத்தவிட்சேபம் எல்லாம்=முழுதுமான விட் சேபங்களனைத்தும்—முத்தியில் கூட்டுகிற்கும்=மோட்சத்தில் (நேரே அல் லது, பரம்பரையாகக்) கூட்டாநிற்கும்.—கொழுத்த ஆவரணம்=கனமான ஆவரணசத்திதான்—முத்தி கூடாமல் கெடுத்த கேடு=(ஆண்டு வித்தில் அங் குரம்போலச் சீவரிடத்திருந்து அவர்கள்) மோட்சமடையாமற் கெடுத்த கெடு தியாம்.—எ - று.

"சகங்கண் மாண்டும்" எ - கு, உ - ம், வாசிட்டம்,—

"மண்டிய சுழுத்தி தன்னில் வருகளுப் போவ தென்னைக்
கண்டன வுலக மெல்லாங் கற்பனை முடிவிற் போக,"

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. "முத்தி யடைந்தவ ரொருவ நுண்டோ" எ - கு, உ - ம், வாசிட்டம்,—

"அகல்வா தனையின் வித்தான வந்தச் சுழுத்தி வீடளிபாப்,
புகல்வித் தல்லா வாதனைபே துரியம் பொன்ரு வீடளிக்கும்."

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

"முழுத்தவிட் சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்கும்"

எ - கு, உ - ம், பாகவதம்,—

"தரைபுனல் கனல்கால் வானந் தபனன்வெண் டிங்கள் வாரி
வரையுறை யரவு மான்கான் வருகரி பதங்க மீன
முரலளி கணிசெய் கின்ரூன் மொய்குழற் குமரி தேனீ
யுரைதரு புறவு தாசி யூன்கவ ரன்றி ஞகம்."—எ - ம்,

"உறைந்தநூற் சிலம்பி மைந்த னூதுவண் டெடுத்த கீடஞ்
சிறந்தன விவைநான் காறுஞ் சிந்தையிற் குருவென் ரூக்கி
மறந்தரு மிஃது தீதா மற்றிது நன்ரு மென்றிங்
கறிந்தன னின்ப முற்றே னவ்வகை யாச கேண்மோ."—எ - ம்,

"வாக்கி னேக்கடந் தோங்கிமற் றெங்கணு
நீக்க மின்றி நிறைந்த வறிவினை
யூக்க முற்றுணர் தற்கிட ஞகலி
னுக்கை யுங்குரு வாய தரசனை."—எ - ம்,

மற்றும் வருவனவற்றுற் காண்க. (இ)

(112) [ருசு - ம் செய்யுளில், "முத்தி சேர்வார்க் கனுகூல மாதும்" எ - ம், ருடு - ம் செய்யுளில், "முழுத்தவிட் சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்தும்" என்றுங் கூறியதுபற்றி அவ்விட் சேபசத்தி மித்தையாகலின், அதனல்வரும் முத்தியும் மித் தையாம் என்னும் ஆசங்கைகத்த? அற்றன்று, முத்திசத்திய மாம் எனத் திருஷ்டாந்தமுகமாகச் சமாதானங் கூறுகின்றார்.]

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான
சத்தியும் பொய்யே யென்றுற் சத்திசா தனமா வந்த
முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரைவி லங்கால்
நித்திரை தெளியு மாபோ னிருவாண நிலைமெய் யாமே. (ருசு)

இ - ள். சுத்தியில் வெள்ளி போல = இப்பியின்கண் (ஆரோபமான பிராதிபாசிக) ரஜதம்போல—தோன்றிய தோற்றம் ஆன சத்தியும் = (பிரஹ் மத்தின்கண்) ஆரோபமாயுண்டான விட்சேபரூபமான சத்தியும்—பொய்யே என்றுல் = மித்தையே என்று சொல்லில்,—சத்திசாதனமா வந்த முத்தியும் = அவ்விட்சேபசத்திரூபமான குருசாஸ்திராதி சாதனமாகவுண்டான மோட்ச மும்—பொய் ஆம் என்னின் = மித்தையாகும் என்று (பூர்வபட்சிகளின் சங்கையைக்கொண்டு) நீ சங்கிக்கில்,—மோகம் நித்திரை விலங்கால் = பொய் யான நித்திரையிற் கண்ட புலி முதலிய விலங்கினுல்—நித்திரை தெளியுமா போல் = நித்திரை தெளிந்தவழி (நித்திரையின் அபாவரூபமான சாக்கிரம் மெய்யாவது) போல—நிருவாண நிலை மெய் ஆம் = (குரு சாஸ்திராதிகளால் உளதாகும்) நிருவாணஸ்திதியுஞ் சத்தியமாம்.—எ - று.

(113) அவத்தையின் அபிமானமே பந்தம்; அதுவும் விருத்தி விசேஷ மாகலின், விருத்தியினுற் செய்யப்பட்ட பந்தமே சம்சாரமாம். குருவினுலும், வேதாந்த வாக்கியத்தினுலும் உளதாகும் அகம் பிரஹ்மம் என்னும் அந்தக்கர ணத்தின் விருத்தியினுல் பிரபஞ்சத்தோடுகூட அஞ்ஞானத்தினது நிவிர்த் தியே மோட்சம். கற்பிதத்தின் நிவிர்த்தி அதிஷ்டானரூபமாகலின், மோட்சஞ் சத்தியமாம். சர்ப்பத்தினது நிவிர்த்தி எப்படி அதிஷ்டான இரச்சுரூபமோ! அப்படிச் சகல கற்பித வஸ்துக்களினது நிவிர்த்தி அதிஷ்டானரூபந்தான்; அதற்கந்நியமன்று; இது பாஷியகாரரது சித்தாந்தம். இங்கே அனர்த்த நிவிர்த்தி பிரஹ்மரூபமாம். என்னை? சர்வவனர்த்தங்கட்கும் அதிஷ்டானம் பிரஹ்மமாகலானும், அப்பிரஹ்மம் பாவ [ஹாவ] ரூபமாகலானும் மோட்சஞ் சத்தியமாம் என்க. (ருசு)

(114) [நிருவாணஸ்திதி இது எனக்காட்டுங் கருத்தினாலே மாயையை நிவிர்த்திக்கு முறைமை கூறுகின்றார்.]

இம்பரி னஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யும்
அம்பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பர்

வம்பியன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே. (நிஎ)

இ - ள். இம்பரில் = இவ்வுலகில்—நஞ்சை நஞ்சால் = விஷத்தை அதற்குப் பிரதிகூலமான விஷத்தினாலும்,—இரும்பினை இரும்பால் = இரும்பை இரும்பாலும்,—எய்யும் அம்பினை அம்பால் = எய்யாநின்ற அம்பை அதற்குப் பிரதிகூலமான அம்பினாலும்,—பற்றும் அழுக்கினை அழுக்கால் = (புடவையிற்) பற்றிய அழுக்கை (உவர்மண்ணுகிய) அழுக்கினாலும்—மாய்ப்பர் = கெடுப்பர்;—(அதுபோல) வம்பு இயல் மாயை தன்னை = நிலையின்மையான குணத்தினையுடைய அவித்தையை—மாயையால் மாய்ப்பர் = அவித்தையினாற் கெடுப்பார்கள்.—பின்னை,—தம்பம் ஆம் அதுவும் = நிலையாகிய அந்தப் பெரிய மாயையும்—கூட = (நீச மாயையோடு) கூட—சவம் சுடு தடிபோல் போம் = பிணஞ்சுடுந் தடிபோற் கெடும்.—எ - று.

பெரிய மாயையான போதத்தையுஞ் சுமையெனவிட்டு அநுபவத்திருப்பர் என்பது கருத்து.

"மாயை தன்னை மாயையான் மாய்ப்பர்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"கருதி மலத்தான் மலமறுக்குங் காருவென்ன மாயைதனைப்
பெருமா யையினாற் செறல்வேண்டும்."

என வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க.

"தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போம்" எ - கு, உ - ம், பாடுதுறை,—

"பிணஞ்சுடு தடியென்ன வென்னைக்கொண்டே பெரும்பற்றை
யெல்லா மறச்சாடி, யணைந்தவென் னையுமப் படியீறில்போ தத்தில்
விட் டறுபோகத் திருந்தானை."

என வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (நிஎ)

(115) [இவ்வநுபவத்தைக் காதலாமலகம்போலச் சீடனுக்கு உண்டாக்கு வித்தற்பொருட்டு அடியிடுகின்றார்.]

இந்தமா யையினாற் சீவர்க் கெழுவத் தைகளுண் டாகும்
அந்தவே ழுவத்தை தம்மை யடைவினின் மொழியக் கேளாய்
முந்தவுஞ் ஞான மூடன் முளைத்தல்கா ணுத ஞானம்
சந்ததங் கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மை யாதல். (நிஅ)

இ - ள். இந்த மாயையினால் = (சுத்தாசுத்தங்களான) இம்மாயைகளால்—சீவர்க்கு—எழு அவத்தைகள் உண்டாகும் = சத்தாவஸ்தைகளுளவாகும்;—அந்த ஏழ் அவத்தை தம்மை = அச்சத்தாவஸ்தைகளையும்—அடைவினில் மொழியக் கேளாய் = கிரமமாகச் சொல்லுகிறேனுங் கேட்பாய்;—முந்த

அஞ்ஞானம்=(க - வது) அஞ்ஞானம்,—மூடல்=(உ - வது) ஆவரணம்,—முளைத்தல்=(ங - வது) விட்சேபம்,—காணுத ஞானம்=(ச - வது) பரோட்ச ஞானம்,—சந்ததம் கண்ட ஞானம்=(ஞ - வது) அபரோட்ச ஞானம்,—தழல் கெடல்=(ண - வது) சோக நிவர்த்தி,—குளிர்மை யாதல்=(எ - வது) நிரங்குசதிருப்தியாம்.—எ - று.

"சந்ததம்" என்ற விசேஷணம் பிரதிபந்தம் இல்லாமலென்பதைக் காட்டிநின்றது. "தழல்" எ - து, இங்கே துக்கத்தை. (நிஅ)

[இனி நாமமாத்திரங் கூறிய அவ்வவத்தைகளின் இயல்பு கூறுகின்றார்.]

பிரமமாந் தனிம றந்த பேதைமை யேயஞ் ஞானம்
பரனிலை காணு மென்று பகர்தலா வரண மூடல்
நரனெரு கருத்தாற் சீவ னெனைன முளைத்த றோற்றம்
குரவன்வாக் கியத்தாற் றன்னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம். ()

இ - ள். பிரமம் ஆம் தனை மறந்த பேதைமையே=(சிதாபாசன் சுருதி விசாரத்திற்கு முன்னர் சம்சார ஆசக்தியில் மூழ்கி) பிரஹ்மரூபமாகிய பிரத்தியகான்மாவை (யானுர் என்று) ஸ்மரியாதிருந்த அறியாமையே—அஞ்ஞானம்=அஞ்ஞானமாம்.—பரன் இலை காணுமென்று பகர்தல்=(பிரஹ்மத்தை விஷயம் பண்ணுவதான பிரசங்கம் வந்துழி) பிரஹ்மம் இல்லை, பாஷமாகவில்லை என்று சொல்லுதல்—ஆவரண மூடல்=ஆவரண மறைப்பாம்.—(நான்) நரன் (என)=நான் மநுடன் என்றும்,—ஒரு கருத்தால்=(இப்போது கருமங்களைச் செய்வதால் இனிக்கரும பலங்களை அநுபவியாநிற்பேன் என்னும்) ஓர் எண்ணத்தால்—நான் சீவன் என=நான் (கருத்திருத்வ, போத்திருத்வ மூடைய) சீவன் என்றும்—முளைத்தல்=உதித்தலே—தோற்றம்=விட்சேபமாம்.—குரவன் வாக்கியத்தால்=குருவால் உபதேசிக்கப்பட்ட (சத்திய ஞானநந்தம் பிரஹ்மம் என்னும் அவாந்தர) வாக்கியத்தால்—தன்னை குறிக்கொளல்=(பிரத்தியகபின்ன பரமான்மாவான) தன்னை (உண்டு என்று) அறிந்துகொள்ளலே—பரோட்ச ஞானம்=(அசத்தாவரண நிவர்த்தகமான) பரோட்ச ஞானமாம்.—எ - று.

நான் பிரஹ்மத்தை அறிகிறேனில்லை என்னும் வியவகாரத்திற்கு ஏது அஞ்ஞானம். பிரஹ்மமானது இல்லை, பாஷமாகவில்லை என்னும் வியவகாரத்திற்கு ஏது ஆவரணம்; ஆவரணத்தால் இவ்வியவகாரம் உளதாம். என்னை? அஞ்ஞானத்திற்கு அசத்தாவரணம், அபாஷாவரணம் என இருவகைச் சத்திகள் உண்டு; அவ்விரண்டனையும் ஆவரணம் என்பர். வஸ்து இல்லை என்று தோற்றுவிக்கின்ற சத்தி அசத்தாவரணம்: வஸ்து பாஷமாகவில்லை என்று தோற்றுவிக்கின்ற சத்தி அபாஷாவரணமாம்; இவைகளை முறையே அசத்வா

பர்தகசத்தி, அபர்நாபாதகசத்தி என்றுங் கூறுவர். ஜநநமுதலிய சம்சாரம் நிஜரூபமான கூடஸ்தனிடத்திற் பிரதீதியாகின்றதே விட்சேபம்; இதனைப் பிராந்தி என்றும், சோகம் என்றுங் கூறுவர். பிரஹ்மம் இல்லை என்னும் ஆவரணக்கூற்றைப் பிரஹ்மம் உண்டு என்னும் பரோட்சஞானம் நாசம் பண்ணுகின்றது. என்னை? சத்திய ஞானரூபமாகப் பிரஹ்மம் உண்டு என்னும் ஞானத்திற்குப் பரோட்சஞானம் என்று பெயர்; அது பிரஹ்மம் இல்லை என்னும் ஞானத்திற்கு விரோதியாம்: மற்றவைக்கு அல்ல; ஆகலின் என்க.(டுக)

[இதுவுமது.]

தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேக மும்போய்
அத்துவி தந்தா னுத லபரோட்ச ஞான மாகும்
கர்த்தனுஞ் சீவ பேதங் கழிவதே துக்கம் போகல்
முத்தனு யெல்லாஞ் செய்து முடிந்ததா நந்த மாமே. (சூ0)

இ - ள். தத்துவ விசாரம் செய்து = (நீயே பிரஹ்மம் என்னும் மஹா வாக்கியத்தால்) பிரஹ்மவிசாரஞ் செய்து — சகல சந்தேகமும் போய் = (பிரமாணதம், பிரமேயகதம் ஆகிய) சகல சந்தேகங்களும் நீங்கி — அத்துவிதம் தான் ஆதல் = அத்துவிதப்பிரஹ்மமே தானுதல் — அபரோட்ச ஞானம் ஆகும் = (அபாநாவரண நிவர்த்தகமான) அபரோட்ச ஞானமாம். — கர்த்தன் ஆம் சீவ பேதம் கழிவதே = (நான்) கர்த்திரு, (போத்திரு) என்னும் சீவத்வம் நீங்குவதே — துக்கம் போகல் = துக்க நிவர்த்தியாம். — முத்தனுய் எல்லாம் செய்து முடிந்தது = (சகல) துக்கங்களினின்றும் விடுபட்டவனுய் (ச் செய்யத் தக்கன) அனைத்துஞ் செய்து, (அடையத் தக்கன) அனைத்தும் அடைந்தனம் என்னுஞ் சந்தோஷமே — ஆநந்தம் ஆம் = நிரங்குச திருப்தியாம். — எ - று.

நான் பிரஹ்மமாயிருக்கிறேன் என்னும் அபரோட்ச ஞானம் யாது! அது சகல அவித்தியா சாலங்கட்கும் விரோதியாகலின் நான் பிரஹ்மத்தை அறிகிறேனில்லை என்னும் அஞ்ஞானமும், பிரஹ்மம் இல்லை, பாநமாகவில்லை என்னும் ஆவரணமும், புண்ணிய பாவங்களைச் செய்கிற கர்த்தாவும், சுகதுக்கங்களைப் புசிக்கிற போக்தாவும் ஆகிய சீவனுகிறேன் என்னும் பிராந்தியும் ஆகிய அவித்தியா சாலங்களை அபரோட்ச ஞானம் நாசம் பண்ணு நிற்கும்; என்னிடத்துச் சநநமரணமும் இல்லை, சுகதுக்கங்கள் அற்பமும் இல்லை, வேறை ஒரு சம்சார தர்மங்களும் இல்லை, நான் ஜநநரகிதனான கூடஸ்தனுகிறேன் என்னும் இவ்வநுபவம் சோகநிவர்த்தியாம்; இதனைப் பிராந்திநாசம் என்றுங் கூறுவர். நான் அத்வைதப் பிரஹ்மமாயிருக்கிறேன் என்று சமுசயரகிதமாகத் தனது சொரூபஞானம் எப்போதுண்டாகிறதோ! அப்போது தன்னிடத்து உண்டாகா நின்ற சந்தோஷத்தை நிரங்குச திருப்தி என்பர்; இச்சத்தாவஸ்தைகளை விஸ்தாரமாக அறியவேண்டின், "பஞ்சதசியின் திருப்திதீபத்தில்" காண்க. (சூ0)

[நித்தியாபரோட்சமாகிய ஆன்மாவுக்குப் பரோட்சவபரோட்
சங்களின் விஷயத்தன்மையும், ஞாஞஞ்ஞானங்கட்கு
ஆசிரய விஷயத்தன்மையுங் கூடாவென்று வருஞ்
சங்கையைப்பற்றித் தசமனுக்குப்போலச்
சகலழங்கூடும் என்று கூறுகின்றார்.]

இதுநினக் கறியும் வண்ண மிப்படி யொருதிட் டாந்தம்
புதுமையாங் கதைகேள் பத்துப் புருடரோ ராற்றை நீந்தி
உதகதீ ரத்தி லேறி யொருவனென் பதுபே ரெண்ணி
அதனெடு தசமன் ருனென் றறியாமன் மயங்கி நின்ருன். (சுக)

இ - ள். இது நினக்கு அறியும் வண்ணம் = ஆன்மா ஒருவனுக்கே ஏழ வத்தைகளும் உண்டாமென்பது உனக்கு விரோத மில்லாமற் ரூன்றும் படிக்கு — இப்படி = இவ்வாறு — திட்டாந்தம் = திருஷ்டாந்தமாக — புதுமை ஆம் ஒரு கதை கேள் = ஆச்சரியமாகிய ஒரு கதையினைக் கேட்பாய். — பத்துப் புருடர் = தசபுருடர் — ஓர் ஆற்றை நீந்தி = ஓர் நதியைக் கடந்து — உதகதீரத் தில் ஏறி = நதியின் கரையிலேறி — ஒருவன் ஒன்பதுபேர் எண்ணி = ஒருவன் நவபுருடரை எண்ணி — அதனெடு = அந்நவ புருடரோடு — தான் தசமன் என்று = தானே தசமனென்று — அறியாமல் மயங்கி நின்ருன் = அறியாமற் பிரமித்து நின்றனன். — எ - று. (சுக)

[இதுவுமது.]

அறியாத மயலஞ் ஞான மவனில்லை காணு மென்றல்
பிறியாவா வரண மாகும் பீழைகொண் டழல்விட் சேபம்
நெறியாளன் றசம னுண்டு நிற்கின்ரு னென்ற சொல்லைக்
குறியாக வெண்ணி நெஞ்சிற் கொள்வது பரோட்ச ஞானம். (சுஉ)

இ - ள். அறியாத மயல் அஞ்ஞானம் = (நவபுருடரை நன்ருகப் பார்ப்ப வனுகத் தானிருந்தும் பிராந்தியினுல் நவபுருடரை எண்ணிய தன்னைத் தசம னுக) அறியாத மயக்கமே அஞ்ஞானம். — அவன் இல்லை காணும் என்றல் = (தசமனுகிய தான்,) தசமன் இல்லை, தோன்றவில்லை என்று கூறுதல் — பிறியா ஆவரணம் ஆகும் = நீங்காத அசத்தாவரணம், அபாநாவரணமாம். — பீழை கொண்டு அழல் விட்சேபம் = நதியிற்றசமன் இறந்தனன் என்னுந் தக்க முடையவனுய் அழுதன் முதலியவை விட்சேபமாம். — நெறியாளன் = பதிக னை ஆப்தன் — தசமன் உண்டு நிற்கின்ரு னென்ற சொல்லை = தசமன் இறந் திலன், உளன் என்று கூறிய வசனத்தை — நெஞ்சில் குறியாக எண்ணிக் கொள்வது = அந்தக்காரணத்தில் நிச்சயமாகக் கருதிக்கொள்வது — பரோட்ச ஞானம் = பரோட்ச ஞானமாம். — எ - று. (சுஉ)

[இதுவுமது.]

புண்ணிய பதிகன் பின்னும் புருடரொன் பதின்மர் தம்மை
எண்ணுரீ தசம னுவை யென்னவே தன்னைக் காணல்

கண்ணினிற் கண்ட ஞானங் கரைதல்போ வதுநோய் போதல்
திண்ணிய மனதி லேயந் தெளிதலா நந்த மாமே. (சுங)

இ - ள். புண்ணிய பதிகன் = தர்மவானுய் மார்க்கத்திற் செல்லும் ஆப்தனானவன்—பின்னும் = பின்னரும்,—புருடர் ஒன்பதின்மர் தம்மை = நவ புருடரை—எண்ணும் நீ தசமன் ஆவை என்னவே = எண்ணுநிற்கும் நீயே தசமனுவாய் என்று உணர்த்தவே—தன்னைக் காணல் = யான் தசமனுகின் றேன் என்று தன்னை அபரோட்சமாக வறிதலே—கண்ணினில் கண்ட ஞானம் = அபரோட்ச ஞானமாம்.—கரைதல்போவது நோய்போதல் = தசமன் நதியில் இறந்தனன் என்றழுத அழுகை நீங்கினதை துக்கநிவர்த்தி.—திண்ணிய மனதில் = திடமாகிய தனது சித்தத்தில்—ஐயம் தெளிதல் ஆனந்தம் ஆம் = சந்தேகம் நீங்கி முதிதை உண்டாதலே நிரங்குச திருப்தியாம்.—எ - று.

"எண்ணியநீ பத்தாவான்" என்றும் பாடமுளது.

திருஷ்டாந்தத்தில் தசமனுக்குப்போல ஆன்மாவினிடத்தும் அஞ்ஞான முதலிய சப்தாவஸ்தைகள் பொருந்தும் என்பது கருத்து.

(116) [தசமனைப்போலச் சோகமோகங்க ளொழிந்து இன்பமடைய என்னை எனக்குக் காட்டவேண்டும் எனச் சீடன் வினவ ஆசிரியர் சுருதிவாக்கியப்படி அவனை அவனுக்குக் காட்டத் தொடங்கல்.]

தசபுமான் றனைக்கண் டாற்போற் சற்குரு மூர்த்தியே யென்
நிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டு மென்றான்
சுசிபெறு மிலட்சி யார்த்தந் துவம்பதந் தற்ப தங்கட்
கசிபத வைக்கியஞ் செய்யு மதுசெயு முண்மை கேளாய். (சுச)

இ - ள். தசபுமான் தனைக் கண்டால்போல் = தசமபுருடன் தன்னைத் தசமனுகக் கண்டாற்போல—சற்குருமூர்த்தியே—என் நிசவடிவினை யான் காண = எனது நிசரூபமான கூடஸ்தனை (ப் பிரஹ்மமாக) யான் அறியும்படி—நீர் காட்டல்வேண்டும் என்றான் = தேவரீர் தரிசிப்பித்தல்வேண்டும் என்று சீடன் வினவினன்.—துவம்பதம் தற்பதம் = (சாமவேத மஹாவாக்கியமானது) துவம்பத, தற்பதங்களின்—சுசிபெறும் இலட்சியார்த்தங்கட்கு = (உபாதி சம்பந்தமின்மையிற்) சுத்தம் பொருந்திய இலட்சியார்த்தங்களான கூடஸ்த பிரஹ்மங்கட்கு—அசிபத ஐக்கியம் செய்யும் = (அது நீ யாகின்றாய் என்னும்) அவிபதப் பொருளான வைக்கியத்தைப் (பாகத்தியாகலட்சணையினுற்) போதிக்கும்;—அது செயும் உண்மை கேளாய் = அஃதங்ஙனம் போதிக்குந் தத்துவார்த்தத்தை (உபதேசிப்போம்) கேட்பாய்.—எ - று.

சாமவேத மஹாவாக்கியம் தோன்றி எழுவாய். "துவம்" எ - கு, நீ என்று பொருள். "தத்" எ - கு, அது என்று பொருள். "அஸி" எ - கு, அது நீ ஆகின்றாய் என்று பொருள்.

(117) பதத்திற்கு அர்த்தத்தோடு உளதாய சம்பந்தம் விருத்தி எனப்படும்; அவ்விருத்தி இருவகைத்து. ஒன்று சக்திவிருத்தி: மற்றொன்று

இலட்சணவிருத்தி. கடபதத்தில், கேட்பவனுக்குக் கலசரூபமாகிய அர்த்த ஞானத்தை உண்டு பண்ணத்தக்க சாமர்த்தியம் சக்திவிருத்தியாம். அப்படியே படபதத்திலும், கேட்பவனுக்கு வஸ்திர ரூபமாகிய அர்த்தஞானத்தை உண்டு பண்ணத்தக்க சாமர்த்தியம் சக்திவிருத்தியாம்; இவ்வாறே சர்வ பதார்த்தங்களிலுங் காண்க. சக்தி ஆற்றல் என்பன ஒருபொருட்சொற்கள். திருஷ்டாந்தம் :—அக்கினியிற்றன்னோடு கூடின மாத்திரத்திலே வஸ்துக்களைத் தகிக்கும்படியான சாமர்த்திய ரூபசக்தி எப்படியுண்டோ! அப்படியே பதத்தில் சுரோத்திரத்தோடு கூடவே அவ்வஸ்துவின் ஞானத்தை உண்டு பண்ணத்தக்க சாமர்த்தியம் உண்டு; அதுவே சக்தி எனப்படும். இலட்சணையின் ஞானத்தில் சக்கியத்தின் ஞானம் உபயோகியாம். யாதொரு பதத்தில் யாதோரர்த்த சக்தியுண்டோ! அப்பதத்தினுடைய அவ்வர்த்தம் சக்கியமாம்; சக்கியார்த்தத்தையே வாச்சியார்த்தம் என்றுஞ் சொல்லுவர். வாச்சியார்த்த போதகபதம் வாசகம் எனப்படும். சக்கிய சம்பந்தம் இலட்சணையின் சொரூபமாம். யாதோரர்த்தத்தின் ஞானம் பதத்தின் சக்தியினால் உண்டாகாமல் இலட்சணையால் உண்டாமோ! அது பதத்தினுடைய இலட்சியார்த்தம் எனப்படும். விட்டலட்சணை, விடாதலட்சணை, விட்டுவிடாதலட்சணை என இலட்சணை மூவகைத்து; இவற்றை ஜஹல்லட்சணை, அஜஹல்லட்சணை, ஜஹத ஜஹல்லட்சணை என வடநூல் வல்லோர் கூறுப; இவற்றை உதாரணத்தோடு எஅ - வது செய்யுட்டொடங்கி, அக - வது செய்யுள் வரையுங் கூறப்படும்; ஆண்டுக் காண்க. (சுச)

[இதுமுதல் அக - ம் செய்யுள்வரையும் மஹாவாக்கிய விசாரம்.]

விண்ணென்றை மகாவிண் ணென்று மேகவிண் ணென்றும் பாரின்
மண்ணென்று கடவிண் ணென்று மருவிய சலவிண் ணென்றும்
எண்ணுங்கற் பனைபோ லொன்றே யெங்குமாம் பிரம மீசன்
நண்ணுங்கூ டஸ்தன் சீவ னென்குசை தந்த மாமே. (சுரு)

இ - ள். வெளி.

கருத்துரை :— க - வது—பிரமாண்டத்தின் உட்புறமெங்கும் ஏகரசமாய், வியாபகமாயுள்ள ஆகாச சொரூபத்தை மஹாகாசம் என்பர். உ - வது—மேகத்திற்கு அவகாசங் கொடுத்திருக்கின்ற ஆகாசத்தையும், மேகசலத்தில் பிரதிபிம்பித்துள்ள ஆகாசத்தையும் மேகாகாசம் என்பர். ங - வது—சலத்தினுல் நிறைந்திருக்கின்ற கடத்திற்கு எவ்வளவாகாசம் அவகாசங்கொடுத்திருக்கின்றதோ! அவ்வளவாகாசத்தைக் கடாகாசம் என்பர். ச - வது—சலத்தினுல் நிறைந்திருக்கின்ற கடத்தில் மேக நட்சத்திரங்களோடு பிரதிபிம்பித்திருக்கின்ற ஆகாசப் பிரதிபிம்பத்தையும், கடாகாசத்தையுஞ் சேர்த்துச் சலாகாசம் என்பர்.

(118) தாஷ்டாந்தம் :— க - வது—பிரமாண்டத்தினுள்ளும் புறம்பும் மஹாகாசம் போலப் பரிபூரணமான யாதொரு சேதனம் உண்டோ! அது பிரஹ்மம் என்று சொல்லப்படும்; அப்பிரஹ்மம் சமீபமல்ல, தூரமுமல்ல. என்னை?

யாதொரு வஸ்து தனக்குப் பின்னமாயிருக்குமோ! தேசரூப வுபாதியுடைய தாமோ அது தூரம், சமீபம் என்று சொல்வதற் குரித்தாம் பிரஹ்மமானது பின்னம் அன்று, சர்வத்துக்கும் ஆன்மாவாக உள்ளது, தேசமுதலிய வுபாதி ரஹிதமானது; ஆகலின் சமீபம், தூரம் என்று சொல்லத்தக்கதன்று. ஆயினும் பிரஹ்மசத்தத்தின் வாச்சியமும் சோபாதிகமாம். என்னை? வியாபக வஸ்துவிற் குப் பிரஹ்மம் என்று பெயர்; அவ்வியாபகத்தன்மை இருவகைத்து; ஒன்று ஆபேட்சிக வியாபகத்தன்மை, மற்றொன்று நிரபேட்சிகவியாபகத்தன்மை யாதொரு வஸ்து ஒன்றைநோக்க வியாபகமாமோ! மற்றொன்றை நோக்க. வியாபகமாகாதோ அதனிடத்துள்ள வியாபகத்தன்மை ஆபேட்சிக வியாப கத்தன்மை; அஃதெங்ஙனெனின்? பிருதுவி யாதியை நோக்க மாயை வியா பகமாம், சேதனத்தை நோக்க வியாபகம் அன்று; ஆகலின், மாயையின்கண் ஆபேட்சிக வியாபகத்தன்மை உண்டு. யாதொரு வஸ்து சர்வத்தையும் நோக்க வியாபகமாமோ! அதன்கண் நிரபேட்சிக வியாபகத்தன்மை உண்டு; அந்நிரபேட்சிக வியாபகத்தன்மை சேதனத்தின்கண் உண்டு. என்னை? சேத னத்திற்குச் சமானமாகவாவது, சேதனத்தினு மதிகமாகவாவது வேறொரு வியாபகம் இல்லை, சேதனமே சர்வத்தினும் வியாபகமாம்; ஆகலின், சேத னத்தின்கண் நிரபேட்சிக வியாபகத்தன்மை உண்டென்க; இவ்விருவகை வியாபகத்தன்மையோடுங் கூடினவஸ்து யாது அது பிரஹ்மசத்தத்திற்கு வாச் சியமாம்; அவ்விருவகை வியாபகத்தன்மையும் மாயாவிசிஷ்ட சேதனத்தின் கண் உண்டு. என்னை? விசிஷ்டனிடத்துள்ள மாயாபாகத்தில் ஆபேட்சிக வியாபகத்தன்மையும், சேதனபாகத்தில் நிரபேட்சிக வியாபகத்தன்மையும் இருத்தலின் என்க. ஆயினும், மாயாவிசிஷ்ட சேதனத்தினிடத்து நிரபேட் சிக வியாபகத்தன்மை கூடாது. என்னை? மாயை சேதனத்தின் ஏகதேசத்தி லிருப்பதாகலானும், அம்மாயாவிசிஷ்ட சேதனத்தினும் சுத்தசேதனத்தின் வியாபகத்தன்மை அதிகமாகலானும் சுத்தசேதனத்திலேயே நிரபேட்சிக வியாபகத்தன்மை உண்டென்க. இவ்வாற்றால், மாயாவிசிஷ்டமே பிரஹ்மசத் தத்திற்கு வாச்சியம், சுத்தசேதனம் பிரஹ்மசத்தத்திற்கு இலட்சியமாம். ஈசுர சத்தம், பிரஹ்மசத்தம் இரண்டிற்கும் சமானார்த்தமே தோற்றினும் பிரஹ்ம சத்தத்திற்கு அநேக விடங்களில் இலட்சியார்த்தமும், ஒரோ விடங்களில் வாச்சியார்த்தமும் போதிக்கப்பட்டிருக்கின்றது. ஈசுர சத்தத்திற்கு அநேக விடங்களில் வாச்சியார்த்தம் போதிக்கப்பட்டிருக்கின்றது. பிரஹ்மசத்தத் திற்கும், ஈசுரசத்தத்திற்கும் இவ்வளவு பேதம் உண்டு; இங்கே இலட்சியார்த் தத்தைக் கொண்டு பிரஹ்மசத்தார்த்தத்தைப் பின்னமாக நிரூபிக்கப்பட்டது என்க.

(119) உ - வது—மாயையின்கண் சேதனத்தினது ஆபாசம், மாயை க்கு அதிஷ்டானமாகிய சேதனம் இவ்விரண்டையும் ஈசுரன் என்பர்; அவ் வீசுரன் மேகாகாசத்திற்குச் சமானன்; அவ்வீசுரன் அந்தரியாமியும், சதா முத்தனுமாம். இங்ஙனங் கூறியதற் கேதுவென்னையோ வெனின்;—மாயை யினிடத்துச் சுத்த சத்துவகுணம் உண்டு; இராஜோகுண, தமோகுணங்களாற்

சூழ்த்தப்பட்ட சத்துவகுணம் இல்லை. இரஜோகுண, தமோகுணங்களைத் தாழ்த்தித் தான் மேலிட்டிருப்பது யாது அது சுத்த சத்துவகுணம் எனப் படும். சுத்த சத்துவ குணத்திலுல் ஞாலுறபத்தி யாவதால் பிரகாச சுபாவ முடையது சத்துவகுணமாம்; இப்படிப்பட்ட சத்துவகுணத்தை யுடைத் தான மாயையினிடத்து யாதொரு சேதனத்தின் ஆபாசமுண்டோ! அதற் குச் சொரூபத்தினிடத்தும், மற்றைப் பதார்த்தங்களினிடத்தும் ஆவரணம் இல்லாமையிலுல் அவ்வீசுரன் முத்தனும், சர்வஞ்ஞனுமாவன். அதிஷ்டான மாகிய சேதனம் சீவேசுரரிடத்துள்ள பந்தமோட்ச பேதரகிதமாய் ஆகாசம் போல ஏகரசமாயிருக்கின்றது. ஆபாசக் கூற்றிற் பந்தமோட்சம் உண்டு. அதிஷ்டானத்தில் ஆபாசனுக்குப் பிராந்தியிலுற் பிரதிதியாகிறது. கேவலம் ஆபாசத்தில் பந்தமோட்சம் உண்டென்பதிலும் பேதம் உண்டு; அது யாதொரு ஆபாசத்தில் ஆவரணம் உண்டோ அதனிடத்துப் பந்தம் உண்டு. யாதொன்றினிடத்துச் சொரூபத்தின் ஆவரணம் இல்லையோ அது முத்த மாம். ஈசுரனிடத்து ஆவரணம் இல்லையாகலின், ஈசுரன் சதாமுத்தனும். சீவனிடத்து ஆவரணம் இருத்தலின் அவன் பெத்தனும். என்னை? யாதொரு அவித்தைக் கூற்றில் சேதனத்தின் ஆபாசத்தைச் சீவன் என்று சொல்லப் படுகிறதோ அவ்வவித்தைக்கு ஆவரணம் பண்ணுவது சுபாவமாம். ஆயினும் அவித்தை, அஞ்ஞானம், மாயை என்பன ஒன்றற்கே பரியாயம்; அங்ஙன மாயினும் சுத்த சத்துவகுணப் பிரதானத்துவத்தால் மாயையென்றும், மலின சத்துவகுணப் பிரதானத்துவத்தால் அஞ்ஞானமென்றும், அவித்தையென் றுஞ் சொல்லப்படும். இரஜோகுண, தமோகுணங்களாற் சூழ்த்தப்பட்ட சத் துவகுணம் மலின சத்துவகுணமாம். தமோகுண, ரசோகுணங்கள் அதி கரித்திருப்பதால் அவித்தையின்கண்ணுள்ள சீவனுடைய ஆபாசக்கூற்றிற் குத் தன் சொரூபந் தோற்றுமற் போகும்படிக்கு அவ்வவித்தை ஆவரணம் பண்ணுகின்றதால் சீவனிடத்துப் பந்தம் உண்டு, ஈசுரனிடத்து அஃதில்லை. அதிஷ்டான சேதனத்தோடுகூட மாயையில் ஆபாசரூபமான ஈசுரன் தற் பதத்திற்கு வாச்சியன். கேவலம் அதிஷ்டான சேதனம் தற்பதத்திற்கு இலட்சியமாம்.

(120) ங - வது—புத்தி அல்லது, வியஷ்டி அஞ்ஞானத்திற்கு அதிஷ் டான சேதனங் **கூடஸ்தன்** என்று சொல்லப்படும்; எப்பட்சத்தில் புத்தி சகிதசேதனம் ஜீவனை! அப்பட்சத்தில் புத்திக்கு அதிஷ்டானங் கூடஸ்தன் என்று சொல்லப்படும். எப்பட்சத்தில் வியஷ்டி அஞ்ஞான சகிதசேதனஞ் சீவன் என்று சொல்லப்படுமோ! அப்பட்சத்தில் வியஷ்டி அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானங் கூடஸ்தன் என்று சொல்லப்படும். **சித்தாந்தம்**:—சீவத்தன் மைக்கு யாதொரு விசேஷணம் உண்டோ அதனதிஷ்டானத்திற்குக் கூடஸ் தன் என்று நாமம்: அக்கூடஸ்தன் உற்பத்திரகிதன்; இதற்கபிப்பிராயம்:— பிரஹ்மத்திற்கு வேறுக எப்படிச் சிதாபாசன் உற்பன்னமாகின்றனனை அப் படிக் கூடஸ்தன் உற்பன்னமாக இல்லை. பின்னை எப்படியுளனெனின்? பிரஹ்மரூபமாகவே உளன்; இக்கூடஸ்தனை ஆன்மபதத்திற்கு இலட்சியார்த்

தம்; இவனையே பிரத்தியக்கென்றும், நிஜரூபமென்றுங் கூறுவர்; இவனே சீவசாட்சியாம்.

(121) சு - வது—நாநாகாம கர்மங்களோடு கூடிய புத்தியின்கண் பிரதிவிம்பிக்கும் சேதனப் பிரதிவிம்பத்தைச் சீவன் என்பர். கேவலம் பிரதிவிம்ப மாத்திரத்தைச் சீவன் என்கிலர்; எப்படிக் கடாகாசத்தோடுகூட ஆகாசத்தின் பிரதிவிம்பத்தைச் சலாகாசம் என்பரோ! அப்படி விம்பமான கூடஸ்தனுகூடச் சிதாபாசனைச் சீவன் என்பர்; இதனால் புத்தியிற் சிதாபாசனும், புத்திக்கதிஷ்டானமான சேதனமும் ஆகிய இரண்டனது நாமம் சீவனும்; அச்சீவன் துவம்பதத்திற்கு வாச்சியன். அவனிடத்திற் சிதாபாசபாகம் ஒழிந்த கேவலம் கூடஸ்தன் துவம்பதத்திற்கு இலட்சியனும். அகம்பதத்திற்கு வாச்சியஞ் சீவனும்: கேவலங் கூடஸ்தன் இலட்சியமாம் என்றறிக. (சுடு)

[முன்சொல்லிய நான்கு சைதந்நியங்களுள்ளே இவை வாச்சியம், இவை இலட்சியம் எனக்கூறி வாச்சியத்தின் றதான்மியம் ஒழிந்து இலட்சியமாவா யெனல்.]

பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டி னுக்கும்
வாச்சியம் லட்சி யந்தான் மலமிலாப் பிரம மான்மா
காச்சிய பாலி னெய்போற் கலந்தொன்றுங் கடைந் தெடுக்கும்
ஆச்சிய மென்ன வுன்னை யறிந்துநீ பிறிந்து கொள்ளே. (சுசு)

இ - ள். பூச்சிய ஈசன் = (யாவராலும்) பூஜிக்கத்தக்க ஈசனும்—சீவன் = (பூஜகனை) சீவனும்—புகல் பதம் இரண்டினுக்கும் வாச்சியம் = (மஹாவாக்கியத்திற்) சொல்லுந் தற்பதம், துவம்பதம் இரண்டிற்கும் (முறையே) வாச்சியார்த்தமாம். — லட்சியந்தான் = அவற்றிற்கு லட்சியார்த்தமாவன :— மலம் இலா பிரமம் ஆன்மா = அவித்தியாமல மற்ற பிரமமும், கூடஸ்தனுமாம்.—காச்சிய பாலில் நெய்போல் = காய்ச்சப்பட்ட பாலில் நெய்யானது (கலந்தொன்று யிருப்பது) போல—கலந்து ஒன்று ஆம் = (அவ்வாச்சிய லட்சியங்கள் அவிவேகத்தாற்) கலந்து ஏகமாயிருக்கின்றன.—கடைந்து எடுக்கும் ஆச்சியம் என்ன = மத்தினுற் கடைந்தெடுக்கும் நெய்யைப்போல—உன்னை அறிந்து = (விவேகத்தால் இலட்சியார்த்தமான) உன்னை யறிந்து—நீ பிறிந்து கொள் = (வாச்சியார்த்தத்தினின்றும்) நீ வேறுபடுதி.—எ - று.

"காச்சிய பாலி னெய்போற் கலந்தொன்றும்" எ - கு, உ - ம், தேவாரம்,—

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியா
னுறவு கோனட் டுணர்வுக் கயிற்றினன்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே." என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (சுசு)

(122) [அவிவேகத்தால் உளதாகிய அநான்மாவின் றுதான்மிய புத்தியை ஒழிக்குமாறு.]

பிறிவதெப் படியென் றக்காற் பிணமாகு முடலு னென்னும்
அறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூத விகார மன்றே
வெறியதோர் துருத்தி மூக்கின் விடுவது போலுன் மூக்கால்
எறிபிரா ணனுமீ யல்லை யிராசத குணவி காரம். (சுஎ)

இ - ள். பிறிவது எப்படி என்றக்கால்=(வாச்சியத்தினின் றும் என்னை யறிந்து) வேறுபடுவது எவ்வாறுன விவேகத்தாலாமென்று கேட்பாயாகில்,—பிணம் ஆகும் உடல் நான் என்னும் அறிவினைக் கொல்லல் வேண்டும்=(சில நாளிற்) பிணமாய்ச் சிதைந்து போகாநிற்கும் (அந்நமயகோசமான ஸ்தூல) தேகத்தை ஆன்மா என்று கருதும் பிராந்தியைக் கெடுத்தல் வேண்டும்—ஐம் பூத விகாரம் அன்றே=(அத்தேகம் பஞ்சீகிருத) பஞ்சமகா பூதங்களின் காரியமாமாகலின்.—வெறியது ஓர் துருத்தி=வெறுமையான ஓர் தோற் றுருத்தி—மூக்கின் விடுவதுபோல்=மூக்கினுல் (காற்றை) விடுவதுபோல—உன் மூக்கால்=உனது நாசியால்—எறி பிராணனும் நீ அல்லை=வீசுகின்ற (சடமான) பிராணமயகோசமும் நீ யல்லை;—இராசதகுண விகாரம்=(அது அபஞ்சீகிருத பூதங்களின்) இரசோகுணகாரியம் (ஆகலான்.)—எ - று. (சுஎ)

[இதுவுமது.]

காரணமா மனது புத்தி கருத்தாவா மவையான் மாவோ
தாரமுள விரண்டு கோசஞ் சத்துவ குணவி காரம்
வாமறு துயிலா நந்த மயனையு நானென் றுதே
விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகார மாமே. (சுஅ)

இ - ள். காரணம் ஆம் மனது=காரணமாகிய மனமும்,—கருத்தா ஆம் புத்தி=கருத்தாவாகிய புத்தியும்—அவை ஆன்மாவோ=(ஆகிய) அவையும் நீயா! அல்லை;—தாரம் உள இரண்டு கோசம்=(சங்கற்பரூபம், நிச்சயரூபம் எனும்) தாரதம்மியமுள்ள அவ்விரண்டு கோசங்களும்—சத்துவகுண விகாரம்=(அபஞ்சீகிருத பூதத்தின்) சத்துவகுண காரியம் (ஆகலின்.)—வாம் அறு=சிரேஷ்டமற்ற—துயில் ஆனந்த மயனையும்=சுழுத்தியிலுள்ள ஆனந்த மயனையும்—நான் என்றுதே=ஆன்மாவென்று கருதற்க;—விரவிய தம அஞ் ஞான விருத்தியின் விகாரம் ஆம்=பொருந்திய தமோரூபமான அஞ்ஞான விருத்தியின் காரியமாம் (ஆகலின்.)—எ - று.

அந்தக்காரணம் ஒன்றைத்தானே மனோமயம், விஞ்ஞானமயம் என்னும் இருவகைக் கோசங்களாகக் கூறுமா றெங்ஙனெனவரும் ஆசங்கையைப்பற் றிக் காரணபாவத்திலுனும், கருத்தாபாவத்திலுனும் ஒரே அந்தக் காரணத்தின் கட் பேதமுண்மையின் அங்ஙனங் கூறலாம் என்பார், "காரணமா மனது கருத் தாவாம் புத்தி" என்றார். (சுஅ)

(123) [இப்பஞ்சகோசங்கள் மண்ணின் விகாரமான கடம்போலப்
பூதாதி விகாரமாகலின் யானல்லவாயின், இவை
கட்டு வேறுக யான் எத்தன்மையனுயி ளனே
னின் ? அதற்குக் கூறுகின்றார்.]

சத்தொடு சித்தா நந்தஞ் சமந்திரஞ் சாட்சி யேகம்
நித்தியம் வியாபி யான்மா நீயது வாவ றிந்து
பொத்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்க ளான
குத்திர பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய். (சுகூ)

இ - ள். சத்து சித்து ஆநந்தம் = சச்சிதாநந்தான்மகமாய்,—சமம் திரம் சாட்சி ஏகம் = சமமாய், ஸ்திரமாய், சாட்சியாய், ஏகமாய்,—நித்தியம் வியாபி ஆன்மா நீ = நித்தியமாய், வியாபகமாய், (பஞ்சகோசங்களின் * புச்சமான) பிரத்தியகான்மாவே நீ ;—(ஆகலின்) அதுவா அறிந்து = (அத்தன்மையதான) பிரத்தியகான்மாவாகவே (உன்னை) அறிந்து—பொத்து சடம் துக்காதி = அநிருத, சட, துக்காதியான்மகமாய்—பொருந்து பேதங்கள் ஆன = பொருந்துகின்ற (முன்சொன்ன ஆன்ம சுபாவத்திற்கு) விபரீத சுபாவங்களையுடைய அநான்ம வர்க்கங்களாகிய—குத்திர பஞ்சகோசக் குகைவிட்டு = வஞ்சகத்தையுடைய பஞ்சகோசங்களாகிய குகைகளில் (ஆன்மத்துவப் பிராந்தியை) ஒழித்து—வெளியில் ஆவாய் = வெதிரித்தனுவாய்.—எ - று.

ஓடு = எண்ணிடைச்சொல். "ஆதி" சத்தத்தால் விஷமம், அஸ்திரம், சாகூயியம், அநேகம், அநித்தியம், வியாப்பியம் என்பனவுங் கொள்க. சாக்கிராதி அவத்தைகளுள்ளே ஓரவத்தையிலாவது அபாவமாகாமற் சர்வாவத்தைகளிலுஞ் சாட்சியாயிருப்பதால் ஆன்மா சத்து, அந்நமயாதிகோசங்கள் ஓரவத்தையில் பாவமாய்க் காணப்பட்டு மற்றோரவத்தையில் காணப்படாமையின் அசத்து, கோசங்களின் பாவாபாவங்களை ஆன்மா சர்வாவத்தைகளிலுமிருந்து அறிதலிற் சித்து, அவை அறியப்படுதலிற் சடம், கோசங்கள் வெறுப்பாய்க் கைவிடப்படுதலின் துக்கம், ஆன்மா பரமப்பிரேமாஸ்பதமாய்க் கைவிடப்படாமையின் ஆநந்தம், கோசங்கள் தாரதம்மியமாயிருத்தலின் விஷமம், ஆன்மா கோசங்களிற் சத்தாகாரமாய்த் தாரதம்மியமற இருத்தலிற் சமம், கோசங்கள் ஓரவத்தையிலிருந்தது மற்றோரவத்தையிலிராமல் நழுவிப் போதலின் அஸ்திரம், ஆன்மா சர்வாவத்தைகளிலும் நழுவாதிருத்தலின் ஸ்திரம், கோசங்கள் சண்டை செய்பவர்போலத் தத்தந் தொழில்களிற் பிரவிர்த்திக்கிலிற் சாட்சியம், சண்டையைக் காணுதல் செய்பவர்போல் ஆன்மா, உதாசீனமாய் அவைகளைத் தோற்றுவிப்பது மாத்திரமாயிருத்தலின் சாட்சி, கோசங்கள் சுவகதாதி பேதமுடைமையின் அநேகம், ஆன்மா சுவகதாதிபேத ரகிதமாதலின் ஏகம், கோசங்கள் அவத்தைகளிற்றோன்றி யழிவதால் அநித்தியம், ஆன்மா அங்ஙனமன்றிச் சதோதிதமாகலின் நித்தியம், கோசங்கள் தேச

* புச்சம் = ஆதாரம்.

காலாதி பரிச்சேதமுடைமையின் வியாப்பியம், ஆன்மா தேசகாலாதி பரிச்சேத சூனியமாகலின் வியாபி என்றறிக. இங்கே சச்சிதாநந்தாதிப் பிரஹ்ம லட்சணங்களே ஆன்மாவுக்குக் கூறினமையின் ஆன்மாவே பிரஹ்மம் என்பது பெற்றும்; அங்ஙனம் அன்று, ஆன்மாவுக்குப் பிரஹ்மம் அந்நியமாம் எனின்; —கடாதிகள் போலப் பிரஹ்மம் அநான்மாவாம்; பிரஹ்மத்தை அநான்மா வென்கை சுருதி, ஸ்மிருதி, புராணங்கட்கு விரோதமாம்; ஆகலின், ஆன்மாவே பிரஹ்மம் என யூகிக்க. அநான்மாவான பஞ்சகோசங்களும் ஆன்மாவாகத் தோன்றுதலின், "தத்தீர பஞ்சகோசம்" என்றார். "பஞ்ச கோசக் துகைவிட்டு வெளியி லாவாய்" எ - து, குகைக்குள்ளிருக்கும் ஆன்மாவை யறிந்தால் முத்தி உண்டென்னுங் "தைத்திரீய சுருதியைக்" குறிப்பித்ததாம். "சத்தோடு சித்தாநந்தம்" எ - கும் "போத்தோடு சடந்துக்காதி" எ - கும் உ - ம், வாசிட்டம்,—

"மூகமாய்ச் சடமாய்ச் சுகாசுகங் களிலே மூழ்கியோர் பயனற வருந்துந், தேகமார் நீயா ரகோவகோ வீதோர் சித்திர யிருந்தவா காணு, யேகமாய் மெய்யா யிலங்கிய பிரம மெங்குமா யிருக்கவுந் தோன்றுச், சோகமாய்ப் பொய்யாய் விளங்குரு மாயை தோன்றுரு திருக்கவுந் தோன்றும்."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

"பஞ்ச கோசக் துகைவிட்டு வெளியி லாவாய்" எ - கு, உ - ம், பிரமகீதை,—

"யாதொன் றெலும்பு நரம்புமுத லிந்த வுடம்ப தன்னமய
லேது பிராண மயனத்துக் குள்ளாய் வேறு யேயொளிரு
மோது பிராண மயற்கயலா யுள்ளா யொளிரு மனோமயனந்
தீதி யுறவிஞ் ஞானமய னவனுக் குள்ளாய் நிகழுமால்."—எ - ம்,

"அன்னியமாய் விஞ்ஞான மயனுக் குள்ளா மாநந்த மயனன்ன மயன்ற னுள்ளாய், மன்னியவப் பிராணமய னுலே பூர்ணன் மனோமய னுற் பூரணன் மனோ மயன்று, னன்னவகை விஞ்ஞான மயனுற் பூர்ணனானந்த மயனுலே யவன்றன் பூர்ணன், றன்னிகாற் றனேத்தினுக்கு முள்ளாய் வேறுந் தற்பாத்தாற் பூர்ணனது தானே பூர்ணம்."—எ - ம்,

"சச்சி தாநந்த மாகியொன் றும்பாப் பிரமம், புச்ச மென்றுரைத் திடப்படு மிரதமப் பொருளே, யிச்ச தாநந்த மெய்திய யாவனெவ் விடத்துந், துச்ச வாக்கையின் றுயரறுத் தவன்சுகம் பெறுமால்."—எ - ம் வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (சுக)

[குருவருளின்படி பஞ்சகோசங்களை நேதித்து அவைகளின் அபாவத்தைக்கண்டு இதுவோ யான் எனச் சீடன் கலங்கி வினுதல்.]

பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே
விஞ்சிய தது்வல் லாமல் வேறொன்றுங் தெரியக் காணேன்
அஞ்சன விருளே யோநா னகமென வநுப விப்பேன்
வஞ்சமில் குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார். (எ0)

இ - ள். பஞ்சகோசமும் விட்டு = அந்நமய முதலிய வைந்துகோசங்களையும் (சுவாமிகள் உபதேசித்த யூகத்தால்) நேதித்து — அப்பால் = மேல் — பார்க்கின்றபொழுது — பாழே விஞ்சியது = சூனியமே சேஷித்தது ; — அது அல்லாமல் = அச்சூனியத்தையன்றி — வேறு ஒன்றும் = வேறே யொருபொருளும் — தெரியக் காணேன் = தோன்றக் கண்டிலேன். — (ஆகலின்) அஞ்சன இருளேயோ = கரிய வந்தகாரம்போலுஞ் சூனியத்தையோ — நான் = யான் — அகம் என = அகம்பிரஹ்மமென்று — அநுபவிப்பேன் = அநுபவியா நிற்பேன் — வஞ்சம் இல் குருவே என்ற = கபடவர்ஜிதரான குருவே என்று விளுவிய — மகன் மதி தெளியச் சொல்வார் = சீடன் புத்தி தெளியும்படிக்கு உபதேசிப்பார். — எ - று.

பஞ்சகோசங்களை நேதித்தவிடத்து அவைகளின் அபாவத்தைக்கண்டு இதனை யானெனப் பாவிக்கில் யான் சூனியமாய் விடுவேனல்லவா! இதுவா புருஷார்த்தம் என்பான், "அஞ்சன விருளே யோநா னகமென வநுப விப்பேன்" எ - ம், தமது பசியைத் தணித்தற்கு வேறோர் கதியின்மையின் அறங்காட்டுபவர்போல் உலகிலுள்ளோர் பொருளே உபாயத்தாற் கவர்ந்து உபாயமல்லாத யாதேனு மொன்றைக் காதினுள்ளே ஊதிவிடாநிற்கும் வஞ்சகர்போலாது பொருளிச்சையின்மையானும், கருணையே திருவுருவானமையானும் தம்மையடைந்தோர் கடைத்தேறும்படிக்குச் சுருதி சம்மதமான வுபாயத்தை அருளாநிற்கும் ஆசாரியரே என்பான், "வஞ்சமில் குருவே" என்றுங் கூறினன்.

"பாழே விஞ்சியது" எ - கு, உ - ம், விவேகசூடாமணி, —

"என்னவா சானே நோக்கி யேதமில் சீடன் சொல்வான்
சொன்னவிப் பஞ்ச கோசஞ் சுத்தமா மித்தை யென்றே
யுன்னிநா னூகத் தாலே யொதுக்கிய பின்ன ரையா
மன்னுசூ னியமே யன்றி மற்றேது மிங்கு காணேன்." என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (எ0)

[சூன்யத்தை யநுபவியாநின்ற அநுபவருபனை நீ சூன்யத்தின் வேறெனத் தசமதிருஷ்டாந்த முகத்தாற் கூறுகின்றார்.]

முன்புக றசமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி
ஒன்பது பேரைக் கண்ட வொருவனுந் தனைக்கா ணுதத்

பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழவனை பாராய்
அன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பா னீயே. (எக)

இ - ள். முன் புகல் தசமன் = முன்சொன்ன தசமனனவன்—புத்தி மோகத்தால் = புத்தியின்கண் ணுள்ள வஞ்ஞானத்தினால்—எண்ணி எண்ணி = அடிக்கடி யெண்ணி—ஒன்பது பேரைக்கண்ட = நவபுருடரைக்கண்ட—ஒருவன் ஆம் தனை = தசமபுருடனை தன்னை—காணுதபின்பு = (தசமனைக்) காணுதவிடத்து—அவன் இடையில் கண்ட = அவனிடத்தவனைற் காணப்பட்ட—பெரியபாழ் = பெருஞ்சூனியம்—அவனை = அவனவனை!—பாராய் = (இதனை யூகித்துப்) பார்.—அன்பு உள மகனே = (குருவினிடத்தும், சாஸ்திரத்தினிடத்துஞ்) சிரத்தையுள்ள மைந்தா—காண்பது அடங்கலும் = (உன்னைற்) காணப்படுகிற சூனியம் (நீயல்லை: சூனிய முதலிய) திரிசியங்கண் முழுவதும்—காண்பான் நீயே = காண்பவனை சிதானந்த சன்மயனே நீ.—எ - று.

"அன்புள" என்னும் விசேஷம், அநுபவத்தில் விசுவாசந் தவிர்தல் உசிதமல்ல என்னுங் குறிப்பு. "மகனே" என்னும் விளி, புத்திரனைப் பிதா வஞ்சிப்பது உலகிற் காணப்படாமையின் உன்னை வஞ்சிக்கும்பொருட்டு இப்படி உபதேசித்ததல்ல, சுருதி சம்மதமும், மகான்களநுபவமுமாம் இவ்வுபதேசம் என்னுஞ் சூசனை. "காண்ப தடங்கலுங் காண்பா னீயே" எ - கு, உ - ம், விவேகசூடாமணி,—

"விரிவகங் கார மாதி விகாரமற் றதன பாவ
மிருமையா மிவற்றை யெல்லா மிங்கியா துணரு மியாதை
யொருபொரு ளுணரா தந்த வுணர்வுரு வான சாட்சிப்
பொருளினை மிகவு நுண்மைப் புந்தியா லுணர்தி மைந்தா."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (எக)

[முன்னே, "காண்ப தடங்கலுங் காண்பா னீயே" என்று சாமான்யமாக வுபதேசித்ததை விசேஷித்துச் சபத பூர்வகமாக வற்புறுத்துகின்றர்.]

தூலசூட் சுமவஞ் ஞானந் தோன்றுமூன் றவத்தை தாமும்
காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோ லங்கள்
போலவே வந்து வந்து போனவெத் தனையென் பேனுன்
ஆலமர் கடவு ளாணை யவைக்கெலாஞ் சாட்சி நீயே. (எஉ)

இ - ள். தூலசூட்சும அஞ்ஞானம் = ஸ்தூலதேகம், சூட்சுமதேகம், காரணதேகம் (ஆகிய மூவகைத் தேகங்களும்)—தோன்றும் மூன்று அவத்தை

தாமும்=(அம்மூவகைத் தேகங்களைப்பற்றித்) தோன்று நிற்குஞ் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூவகை அவஸ்தைகளும்—காலம் ஓர் மூன்றும்=(பூத, பவிஷ்ய, வர்த்தமானம் என்னும்) முக்காலங்களும்—சன்மக் கடல்=ஜநநமாகிய கடலின் கண்ணே—எழும் கல்லோலங்கள் போலவே=எழு (ந்தழிய) மலைகள்போலவே—வந்து வந்துபோன=உதித்துதித்து அழிந்தனவற்றை—நான் எத்தனை என்பேன்=யான் எவ்வளவென்று (வரையறுத்துக்) கூறுவேன்;—ஆல் அமர் கடவுள் ஆணை=கல்லாலின் நீழலின்கண்ணே யெழுந்தருளிச் சனகாதியர்க்கு ஞானோபதேசஞ் செய்தருளிய ஆதிகுருவாகிய தக்ஷிணமூர்த்தியின்மேற் சத்தியம்—அவைக்கு எலாம் நீயே சாட்சி=அவையனைத்திற்கும் நீயே சாட்சியாம்.—எ - று.

ஜன்மப் பிரதிதியநந்தாம் யாவும் பிரதிதியாதலின், "சன்மக் கடலில் வந்து வந்து" எ - ம், ஜநநத்திற்களவின்மையின், "கடல்" எ - ம், அவைகள் அநிர்வசனீயமா யுதித்தொடுங்குதலின், "கல்லோலங்கள்போல" எ - ம், இங்ஙனம் உதித்தொடுங்கா நிற்பவற்றிற்கு அளவின்மையின், "எத்தனையென் பேனென்" எ - ம், அவைகளைத் தினந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், யுகந்தோறும், கற்பந்தோறும் அறிந்துகொண்டிருத்தலால், "அவைக்கெலாஞ் சாட்சி நீயே" எ - ம், சுருதி, யுத்தி, அநுபவசித்தமான இதனைச் சந்தேகமின்றித் துணிதி என்பார், "ஆலமரீ கடவு ளாணை" எ - ம், கூறினர். "அவைக்கெலாஞ் சாட்சி நீயே" எ - கு, உ - ம், பஞ்சதசி,

"ஒலியொடு முதியு மோதும் வேத்திய
மலிதரு நனவிடை வடிவின் வேறதா
நலிவுசெய் யவற்றின்வே றுகு ஞானந்தான்
பொலிதலி னேகமாய் வேறு பூணுமோ."—எ - ம்,

"இன்னதாங் கனவினு மீண்டு வேத்திய
மன்னுரு நனவிடை மன்னி நின்றிடு
மன்னதாற் பேதமா மவற்றின் வேதனம்
பின்னமன் றேகமாய்ப் பிறங்கும் பெற்றியால்."—எ - ம்,

"துயின்றெழுந் தோனுக்குச் சுழுத்தி காலியி
லியைந்திடுந் தமவறி வெண்ண மாமதூஉம்
பயன்றரு மனுபவம் பற்றி வந்ததா
லயர்தரு தமமப்போ தறியப் பட்டதே."—எ - ம்,

"அறிவது விடயத்தி னயல்மற் றன்றுகாண்
பிறவறி வினிற்கணப் பிறங்கு போதம்போன்
முறையிதி னறிவுமுப் புரத்து மேகமிந்
நெறிபிற ழாதயற் றினத்து நிற்குமால்."—எ - ம்,

"பேதமாய்ச் சென்றதும் பின்னர்ச் சார்வதா
மாதமாண் டுகமொடு மருவு கற்பத்துஞ்
சாதலும் பிறத்தலுந் தணந்த ஞானமொன்
றுதலி னிதுசுய மாகுஞ் சோதியே."—எ - ம், வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (எஉ)

[சூன்யமுதலிய சர்வத்தையுமறியும் பிரகாசரூபமான என்னை வேறே யாதோரு பிரகாச சாதனங்கொண் டறியலா மென்னுஞ் சீடனு சங்கையைப்பற்றி, ஆன்மா சொப்பிரகாசன் என்னுஞ் சுருதி, யுத்தி, அநுபவங்களான் அங்ஙனங் கூடா தென்று கூறுகின்றார்.]

எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென்று
சொல்லாதே சுயமாஞ் சோதிச் சுடருக்குச் சுடர்வே றுண்டோ
பல்லார்முன் றசமன் றன்னைப் பார்ப்பதுந் தனைக்கொண் டேதான்
அல்லாமற் பதினொன் றுறு மவனிடத் துண்டோ பாராய். (எங)

இ - ள். எல்லாம் கண்டு அறியும் என்னை = (சூன்ய முதலிய) சர்வத்தையுஞ் சாட்சியாயறியும் என்னை—எதுகொண்டு அறிவேன் என்று = யாதொரு பிரகாசாந்தரங்கொண்டு அறிவேனென்று—சொல்லாதே = சொல்லற்க.—சுயம் சோதி ஆம் சுடருக்கு = சுயம் பிரகாசமாகிய அறிவுக்கு—சுடர் வேறு உண்டோ = பிரகாசாந்தரமேது?—பல்லார் முன் = நவபுருடரின் முன்னே—தசமன் = பதின்மன்—தன்னைப் பார்ப்பதும் = தன்னைத் தசமனென்றறிவதும்—தனைக்கொண்டே தான் அல்லாமல் = தன்னாலேயேயன்றி—பதின் ஒன்றுறும் = (தனக்கு வேறே) பதினொன்றுமவனும்—அவன் இடத்து உண்டோ பாராய் = அத்தசமனிடத்துண்டா (நீ யூகித்துப்) பார்.—எ - று. (எங)

[நியாயவைசேஷிகர் கொள்கைப்படிக்கு அநுவியவசாய ஞானத்தால் ஞானம் பிரகாசிக்கிறதென் றெப்பிற் படு மிழுக்கென்னையோ வெனின்;—அதற்கு விடை கூறுகின்றார்.]

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்டென் றெண்ணும்
அறிவற்ற குதர்க்க மூடர்க் கனவஸ்தை பலமாய்த் தீரும்
அறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை
அறிபொரு ளாகு முன்னை யனுபவித் தறிவாய் நீயே. (எச)

இ - ள். அறிவுக்கும் அறிவு செய்யும் = (கடாதி) ஞானத்திற்கும் (பிரகாச ரூபமான) அறிவைத்தரும்—அறிவு வேறு = பிரகாசாந்தரம்—உண்டு என்று எண்ணும் = உண்டென்று கருதாநிற்கும்—அறிவு அற்ற = (ஆன்மா சொப்பிரகாசம் என்னும்) ஞானமில்லாத—குதர்க்க மூடர்க்கு = அவிவேக மூலமான பிரலாபத்தையுடைய நியாயவைசேஷிகர்க்கு—அநவஸ்தை பலமா

ய்த்தீரும்=அநவஸ்தா தோஷம் பிரயோஜனமாய் முடியும்.—[அற்றேல், ஆன்மா அஞ்ஞாதவஸ்து வென்றுமோவெனின்?] * அறிபடும்பொருள் நீ அல்லே=ஞாதவஸ்துவாக நீ எப்படியல்லையோ அப்படி— † அறிபடாப் பொருள் நீ அல்லே=அஞ்ஞாதவஸ்துவும் நீயல்லே.—[பின்னே யான் எத்தன்மையனெனின்?] அறிபொருள் ஆகும்=(ஞாதவஞ்ஞாதமாகிய சகல பிரபஞ்சத்தையும் பிரகாசாந்தர வபேட்சையின்றி அறியாநின்ற அநுபவரூபமான) சொப்பிரகாச வஸ்துவே நீயாம்.—(இத்தன்மையனை வென்னையான் எப்படியறிவ தெனின்?] உன்னை அநுபவித்து நீயே அறிவாய்=(அப்படிச் சொப்பிரகாச சொரூபனை) உன்னை (ப் பிரமாண தர்க்கங்களைவிட்டுக் கர்த்திரு, கர்மபாவங் கழன்ற) அநுபவத்திருந்து நீயே சாட்சாத்கரிப்பாய்.—எ - று.

(124) கடாதிகளின் ஞானத்தாற் கடாதிகள் பிரகாசியா நிற்கும்; கடாதிகள் பிரகாசமாயினும் கடாதிகளின் ஞானமும், ஞானத்தின் ஆசிரயமான ஆன்மாவும் பிரகாசமாகா. எப்போது அநுவியவசாய ஞானமுண்டாமோ! அப்போது கடாதி விஷயங்களோடும், ஆன்மாவோடும் கடாதி ஞானங்கள் பிரகாசியா நிற்கும். ஆயினும் அநுவியவசாய ஞானத்தால் வியவசாயத்தின் நிரிபுடி பிரகாசியா நிற்கும், அநுவியவசாயம் பிரகாசிக்கமாட்டாது. எப்போது அநுவியவசாயகோசர அநுவியவசாயமுண்டாமோ! அப்போது பிரதம அநுவியவசாயம் பிரகாசியா நிற்கும்: துதிய அநுவியவசாயம் அப்பிரகாசிதமாகவே யிருக்கும். பிரதம அநுவியவசாயமோ, வியவசாய கோசரமாம்: அநுவியவசாயகோசரம் துதிய அநுவியவசாயமாம். கடஞானத்தை யான் கண்டேன் என்பது துதிய அநுவியவசாயத்தின் சொரூபமாம்; துதிய அநுவியவசாயத்தின் வியவகாரம் இஷ்டமாயின், கடஞானத்தின் ஞானத்தை யான் கண்டேன் என்று திருதிய அநுவியவசாயமுண்டாகா நிற்கும். ஆயினும், நியாயமதத்தில் கடஞானத்தாற் கடத்தின் பிரகாசமுண்டாகிக் கடத்தின் வியவகாரஞ் சித்திக்கும்; கடவியவகாரத்தில் கடஞானப்பிரகாசம் வேண்டுவதில்லே. கடஞான வியவகாரம் இஷ்டமாயின், அப்போது அநுவியவசாயத்தால் கடஞானம் பிரகாசமாய்க் கடஞான வியவகாரமூலதாம்; அதற்கு அநுவியவசாயப் பிரகாசம் வேண்டுவதில்லே. ஆதலால், எதனுடைய வியவகாரம் இஷ்டமாமோ! அதனுடைய ஞானத்தினபேட்சை உண்டு. விஷயத்தின் பிரகாசகமான யாதொரு ஞானமுண்டோ! அது பிரகாசிதமாகுக, அல்லது அப்பிரகாசிதமாகுக; அதனது பிரகாசத்தால் உபயோகமில்லே. பிரகாசிதமான ஞானத்தினுலேயே விஷயம் பிரகாசமாமென்னின்:—நியாயமதத்தில் அநவஸ்தாதோஷமாம். என்னே? எந்த ஞானத்தால் விஷயம் பிரகாசமாமோ! அந்த ஞானம் சொப்பிரகாசமாக நியாயமதத்தில் ஒப்பவில்லே; அதனது பிரகாசகமான ஞானந்தரமுண்டாமேல், அப்போது

---

* அறிபடும்பொருள்=வியாகிருதரூபமான வஸ்து.

† அறிபடாப்பொருள் = வியாகிருதரூபமான ஜகத்திற்குப் பீஜரூபமாகிய அவ்வியாகிருத வஸ்து.

ஞானத்தால் விஷயம் பிரகாசமாம்; அப்பிரதமஞானத்தின் பிரகாசகமான ஞானந்தரத்திற்கு அந்நிய ஞானம் வேண்டும். திருதீயத்தின் பிரகாசகமாகச் சதுர்த்த ஞானம்வேண்டும்; இவ்வாற்றால் அநவஸ்தாதோஷமாம். பரஸ்பராஸாபேட்சப் பிரகாசமொப்பினால் அந்நியோந்நியாசிரய தோஷமும், சக்கிரிகா தோஷமுமாம்; இதனால், விஷயத்தின் பிரகாசத்தில் ஞானம் தனது பிரகாசத்தை யபேட்சிக்கவில்லை. பின்னேயோவெனின்;—தனது வியவகாரத்திற் பிரகாசத்தை யபேட்சிக்கின்றது. எங்கே கடமுதலிய விஷய வியவகாரம் இஷ்டமாமோ! அங்கே கடத்தின் பிரகாசநிமித்தம் கடஞானவபேட்சை உண்டு. அப்பிரகாச ஞானத்தினாலேயே கடவியவகார முளதாம்; அஃதெதுபோலவெனின்;—கடஞான முண்டாகாதபோதும், சலதாரணதிப் பிரயோஜன சித்தியைக் கடம்செய்யா நிற்பதால் தனது காரியத்தில் பிரகாசத்தினபேட்சை எப்படிச் செய்யவில்லையோ! அப்படி ஞானத்தின் காரியம் விஷயப்பிரகாசமாதலால் அவ்விஷயப் பிரகாசரூபமாகிய காரியத்தில் ஞானம் தனது பிரகாசத்தினபேட்சை செய்யவில்லை. கடம்போலத் தனது வியவகாரத்திற் பிரகாசத்தின்பொருட்டு ஞானம் ஞானத்தினபேட்சை செய்கிறது. எந்த ஞானத்தின் வியவகாரம் இஷ்டமாமோ, அந்த ஞானத்தின் ஞானம் உண்டாகாநிற்கும்: ஞானஞானத்தின் பிரகாசாபேட்சை இல்லை. இச்சையின் விஷயத்தை இஷ்டம் என்பர்; இதனால் நியாயமதத்தில் அநவஸ்தா தோஷங்கூறினர்.

(125) நியாயமதத்தில் யாதொரு ஞானமும் சொப்பிரகாசமாக ஒப்பவில்லை. அநுவியவசாய ஞானத்தால் ஞானம் பிரகாசியா நிற்குமென்னும் அவர் வார்த்தை அசங்கதமாம். என்னை? ஞானம் அப்பிரகாச சுபாவமாயின், அதன் சம்பந்தத்தாற் கடாதிகள் பிரகாசமாகா. கடாதிகளைப் பிரகாசிப்பிப்பதில் ஞானம் தனது பிரகாசத்தினபேட்சை செய்யவில்லை. எப்படிக் கடாதிகள் அஞ்ஞாதமாயினும் தமது காரியஞ் செய்கின்றனவோ அப்படி ஞானமும் அஞ்ஞாதமாயினும் விஷயத்தின் பிரகாசரூபமான தனது காரியஞ் செய்யாநிற்கும் என்று கூறுவர்; அது கூடாது. என்னை? பௌதிகஜோதிகள் முழுவதும் தாம் பிரகாசரூபமாயிருந்தே அந்நியங்களைப் பிரகாசிப்பிக்கின்றன; பிரகாசஹீனமான ஜோதிகளால் ஒன்றுவது பிரகாசிப்பது காணப்படவில்லை. பிரகாசஹீனங்களும் தமது வலியினால் தமது சம்பந்திகளைப் பிரகாசஞ் செய்யுமாயின், சுவர்ணத்திலுள்ள ஜோதிர்ப்பாகத்தினாலும் சுவர்ண சம்பந்திகளான கடாதிகள் பிரகாசித்தல்வேண்டும்; அஃதின்மையின் சொரூபப்பிரகாசத்தாற் பிரகாசமுடைய ஞானத்தின் சம்பந்தத்தாற் கடாதிகள் பிரகாசிக்கிறதென் றொப்பவேண்டும்; ஆகலின் ஞானம் பிரகாச சுபாவமாம். கேவலம் திருஷ்டாந்த பலத்தால் ஞானத்திற்குச் சொப்பிரகாசத்தன்மையொப்பினதன்று: அநுபவத்தானும் சொப்பிரகாசத்தன்மை சித்தமாம். எங்கே அறிதற்காரியதாயிருந்த அஞ்ஞாத பதார்த்தத்தின் ஞானம் ஒருவனுக்குண்டாய் அறியத்தக்கதறிந்தாயிற்று, இனி அறியச் சேஷமில்லை என்று சந்தோஷத்தால் இங்ஙனஞ் சொல்வனே! அங்கே அவனுக்கு அந்நிய

புருஷன் இந்த ஞானம் அறியச் சேஷமிருக்கின்றதென்று சொல்லில், அதைக் கேட்டு அவன் நகையா நிற்பன்; ஆதலால் ஞானத்தின் பிரகாசத்தன்மையின் அநுபவஞ் சித்தமாயிருக்கிறது. அன்றியும், கடஞானம் அறியப்பட்டதா? இல்லையா என்னும் இப்படிப்பட்ட வாக்கியம் வசனிப்பவனைப் புத்தியின்மையன் என்பர்; இதனால் ஒருகாலும் ஞானத்தின் கண் அஞ்ஞாததை இல்லை; அஞ்ஞாததையின்மையின் ஞானகோசர அநுவியவசாயம் உளதாகுமென்னல் அசங்கதமாம். யாவனொரு புருஷனுக்காவது எனக்குக் கடஞானமுண்டாயிற்று? அல்லது, இல்லையா என்றிப்படிப்பட்ட சந்தேகம் உண்டாகவில்லை: கடஞானம் அஞ்ஞாதமாமேல், ஒருகால் சந்தேகம் உண்டாதல்வேண்டும்; ஆதலால் ஞானம் அஞ்ஞாதமாகாது. ஞானத்தின் பிரகாசமான அநுவியவசாயம் உண்டாமென்கை அசங்கதமாம். ஞானகோசரஞானம் உண்டாகாவிடில் இது கடமென்றும், கடத்தை நானறிந்தேனென்றும் இவ்வாறு ஞானத்தில் விலட்சணத்தன்மை தோன்றவேண்டுவதில்லை. என்னை? நியாயமதத்தில் பிரதம ஞானத்திற்கு விஷயம் கடம்: துதிய ஞானத்திற்கு விஷயம் கடஞானமாம்; ஆகலின் விஷயபேதத்தால் ஞானங்களின் விலட்சணத்தன்மை சம்பவிக்கலாம். சொப்பிரகாச ஞானவாதியின் மதத்தில் ஞானவிஷயமாக ஞானம் உளதாவதில்லை, இரண்டு ஞானங்களின் விஷயம் ஓர் கடமாகலின் விஷயபேதத்தினபாவத்தால் விலட்சணஞானம் உண்டாகவேண்டுவதில்லை என்று சங்கிக்கில்,—அது பொருந்தாது. ஒரேகடத்தில் ஒருகால் இதுகடம் என்னும் ஞானம் உண்டாகின்றது: ஒருகால் அநித்தியங்கடம் என்னும் ஞானம் உண்டாகின்றது; அங்கே விஷயபேதமின்றி விலட்சண ஞானம் உண்டாகின்றது. ஆயினும் பிரதம ஞானத்திற் கடத்தின் அநித்தியத்தன்மை தோன்றுமல், துதிய ஞானத்தில் அதன் அநித்தியத்தன்மை எப்படித் தோற்றிற்றே! அப்படி இது கடம் என்னும் ஞானத்தில் கடத்தின் ஞாததை தோற்றுமல் கடத்தை நான் கண்டேன் என்னும் ஞானத்தில் கடத்தின் ஞாததை தோற்றுகின்றது. ஞானஜந்ய பிரகடத்தன்மையை ஞாததை என்பர். துதிய ஞானத்தின் விஷயம் கடத்திலுள்ள ஞாததையாம்: கடஞானமல்ல; இதனால் கடஞானத்தின் பின்னர் ஒருகால் கடத்தை நான் கண்டேன் என்னும் ஞானம் உண்டாகின்றது: ஒருகால் அறியப்பட்டது கடம் என்னும் பிரத்தியட்சம் உண்டாகின்றது. அறியப்பட்டது கடம் என்னும் பிரத்தியட்சத்தின் விஷயம் கடத்தின் ஞாததையாம்; இது பட்டர்க்கும் சம்மதமாம்; அன்றியும் அநுபவாநுசாரியுமாம். என்னை? எப்படி அநித்தியம் கடம் என்று சொல்லுவதால் அநித்திய பதார்த்தத்தில் விசேஷணமான அநித்தியத்வத்தின் பிரதீதியானது கடத்தில் சர்வர்க்குஞ் சம்மதமோ அப்படி அறியப்பட்டது கடம் என்று சொல்லுவதால் ஞாதபதார்த்தத்தில் விசேஷணமான ஞாதத்வத்தின் பிரதீதி கடத்தின்கண்ணே சர்வாநுபவ சித்தமாம். அறியப்பட்டது கடம் என்னும் ஞானத்தினவசரத்தில் கடத்தை நான் கண்டேன் என்னும் ஞானமுண்டாகின்றது. ஆதலால் கடத்தை நான் கண்டேன் என்னும் ஞானமும் கடத்தின் ஞாததையை விஷயம்பண்ணுகின்றது; இவ்

வாற்றால் ஞானகோசர ஞானம் ஒப்பாவிடினும் இது கடம், கடத்தை நான் கண்டேன் என்னுந் தன்மையினுன் விலட்சணமாகிய ஞானங்கூடும்; ஆதலான் அநுபவியவசாய ஞானத்தின் விஷயம் ஞானமாம் என்னும் நையாயிகமதம் அசங்கதமாம் என்க.

(126) அப்படியே முராரி மிசிருடைய மதமும், இந்தப் பிரசங்கத்தில் நையாயிகமத துல்லியமாமாகலின் அதுவும் அசங்கதமாம். முராரி மிசிருடைய மதத்தில் ஞானப்பிரகாசசமான அநுபவியவசாயத்தினுலேயே பிரமாத்வம் பிரகாசியா நிற்குமென்னும் இவ்வளவு நியாயமதத்தினும் விசேஷமாயினும், இந்த விசேஷம் * அகிஞ்சித்கரமாம். என்னை? அப்பிரகாச சுபாவமான ஞானத்தின் பிரகாசமானது அநுபவியவசாயத்தால் உண்டாமென்னும் இக்கூற்றில் நியாயமதத்திற்கொப்பாம்; ஆகலின், அசங்கதமாம்.

(127) அப்படியே பட்டருடைய மதத்திலும், அநுமிதியினுல் ஞானம் பரோட்சமாகப் பிரகாசியா நிற்குமென்னல் நியாயத்தினும் அசங்கதமாம். என்னை? அவருடைய மதத்திலும் ஞானத்தின் பிரகாசகமான அநுமிதியினுல் பிரமாத்வம் பிரகாசியா நிற்குமென்னும் இத்துணைக் கூறும் நியாயத்தினும் விலட்சணமாம்: சித்தாந்தத்திற்கநுகூலமுமாம். அப்படியாயினும் கடாதி விஷயங்களே அபரோட்சத்தன்மையவாகப் பண்ணுவதான பிரத்யட்ச ஞானத்தை அநுமிதிரூபப் பரோட்சப்பிரகாசமாமென்னல் நகைக்கிடமாம்.

(128) அப்படியே பிரபாகருடைய மதத்திலும், கடஞான முதலியவை தமது பிரகாசத்தில் அநுபவியவசாயத்தை யபேட்சிக்கவில்லை என்னும் இத்துணைக்கூறு சித்தாந்தத்திற் கநுகூலமாம். பிரமாத்வத்தைக் கவர்வதில் ஞானத்தைக் கவருஞ் சாமக்கிரியினும் அந்நியத்தை யபேட்சிக்கவில்லை என்னுங் கூற்றிலும் சித்தாந்தத்திற் கநுகூலமாம். அங்ஙனமாயினும் பிரபாகர மதமும், சித்தாயோக்கியமல்ல. என்னை? சகலஞானங்களும் சொப்பிரகாசம்: திரிபுடி விஷயகம். கேவலம் விஷயகோசரமாக ஓர் ஞானமும் உண்டாகின்றதில்லை: சகலஞானங்களும் கடத்தை நான் கண்டேன் என்னும் ரீதியினுல் திரிபுடி கோசரமாக உண்டாகின்றன. இது கடம் என்றிவ்வாறு கேவலம் விஷயகோசர ஞானம் அப்பிரசித்தமாம். கடத்தோடு இந்திரியத்துக்குச் சம்பந்தம் உண்டாகில் கடஞானம் உண்டாம்; அது கடத்தையும், தனது சொரூபத்தையும், அப்படியே தனது ஆசிரயமான ஆன்மாவையும் விஷயம் பண்ணுகின்றது. அப்படிக் கடஞானமே தனது தர்மமான பிரமாத்வத்தையும் விஷயம் பண்ணுகின்றது; இத்தன்மையினுற் கடஞானம் தனது பிரகாசத்தில் அந்நியத்தை யபேட்சிக்கவில்லை என்னும் இத்துணைக்கூறும் நன்றும்; ஆயினும் தனது பிரகாசம் தான் செய்கின்றதென்னும் இது விருத்தமாம். ஓர் கிரியைக்கு யாது கர்த்தாவாமோ, அது கர்மமாகாது; இதனுல் பிரகாசத்தின் கர்த்தா அந்தான், பிரகாசத்தின் கர்மமுந் தானே என்று சொல்லுதலும் விருத்தமாம். சித்தாந்தத்தில், ஞானம் பிரகாசரூபமாதலால் சொல்லிய விரோதம் இல்லை; இவ்வாற்றால் பிரகாசரூபமாக ஞானத்தை ஒப்பாத சகல மதங்களும் அசுத்த

* அகிஞ்சித்கரம் = நிஷ்பிரயோஜனம்.

மாம்; இதனால் அநுபவியவசாயத்தினால் ஞானம் பிரகாசியா நிற்குமென்னும் நையாயிகர் வசனம் அசங்கதமாம். சித்தாந்தத்தில், சாட்சியினால் விருத்தி ரூப ஞானம் பிரகாசியா நிற்கும் என்க.

"அறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை, அறிபொரு ளாதும்" எ - கு, உ - ம், பிரமகீதை,—

"வாக்குமன முங்கண்ணு மற்றுளவிந் தியங்களுமே
நோக்கரிய பரஞ்சுடரை நோக்கியிவை செலமாட்டா
தாக்கில்பரம் பரனறியிற் முன்வேறு மறியாதே
போக்குபொழு தினும்வேறும் பரனரிய பொருளன்றே."—எ - ம்.

"வாக்குமனங் கண்செவியான் மன்னிநின்ற பிராணனினு
னீக்கியுள காரணத்தா னின்மலன்கோ சரிக்கவுறுன்
பாற்காணுக் குருவம்போற் பகர்பொரு ளெலாந்திகழ்வ
தாக்கதனைச் சனாதனமாம் பரம்பிரம மெனவறிமின்."

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

"அனுபவித் தறிவாய் நீயே" எ - கு, உ - ம், பிரமகீதை,—

"தர்க்க மானந் தாணுழியத் தாணு யுள்ள பேரொளியை
மிக்க கர்த்தா வாகுதலும் விடய மாகு தலுமொழியப்
பொக்க மறவே றறக்கண்ட பொழுது புரைதீர் பொருளான
தக்க பிரம தத்துவத்தைக் கண்டா னுகுந் தானுக."

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (எச)

(129) [அநுபவநுபமான ஆன்மா அநுபவவிஷயமாகாதென்
பதைத் திருஷ்டாந்தமுகத்தால் உணர்த்துகின்றார்.]

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யார மெல்லாம்
மதுரமாக் கியவ தற்கு மதுரந்தான் சுபாவ மன்றே
அதுவிது வெனுஞ்ச டங்க ளறிவாக வறிவைத் தந்தே
அதுவிது விரண்டு மாகா வகம்பொரு ளறிவாய் நீயே. (எரு)

இ - ள். மதுரம் ஆம் கட்டி சுட்ட = மதுரசுபாவமாகிய வெல்லக்கட்டி (சேர்த்துச்) சுட்ட—மாப் பணியாரம் எல்லாம் = மாவின் பணியாரங்களான தன் சம்பந்திகளெ யெல்லாம்—மதுரம் ஆக்கிய அதற்கு = தன்குணமான மதுரத்தை யுடையனவாகப் பண்ணின வெல்லத்திற்கு—மதுரம் தான் சுபாவம் அன்றே = மதுரமானது * சுபாவமல்லவா.—(அப்படி) அது, இது எனும் சடங்கள் = அஞ்ஞானம், ஞானம் என்னுஞ் சடங்கள்—அறிவாக = விளங்குவதாக—அறிவைத் தந்து = ஸ்பூர்த்தியைக் கொடுத்து—அது, இது இரண்டும்

* சுபாவம் எ - து, கூடவே யுண்டாகுந் தர்ம விசேஷம்.

ஆகா=அஞ்ஞாதம், ஞாதம் என்னும் இரண்டுந்தாஞ்காமல் போதரூபமாய், அவற்றிற்கு விலட்சணமான—அகம் பொருள்=அகம்பதத்தின் லட்சியார்த்தம்—நீயே=நீயேயாம்;—அறிவாய்=(இப்படிப்பட்ட உன்னை அநுபவித்து) அறிவாய்.—எ - று.

வெல்லத்திற்கு மதுரங்கொடுப்பது வேறொன்றில்லையாய்த் தானே மதுரசுபாவமானது எப்படியோ! அப்படியே ஆன்மாவிற்கும் அநுபவ விஷயத்தன்மை வேண்டாவாய்த் தானே அநுபவரூபமாம் என்பார், "அதுவிது வெனுஞ்ச டங்க ளறிவாக வறிவைத் தந்தே, அதுவிது விரண்டு மாகா வகம்பொருள் நீயே" என்றார். ஞாத, அஞ்ஞாதங்களை, விதிதாவிதிதம் என்றுங் கூறுவர். அறியப்பட்டது, அறியப்படாதது என்று பொருள். (எடு)

[ஆன்மாவைப் பஞ்சகோசங்களினின்றும் வேறுபடுத்திச் சோப் பிரகாசமாக அறிவித்துப் புருஷார்த்த சாதனமான ஆன்ம பிரஹ்மவைக்கிய ஞானத்தைச் சுருதி, யுத்தி, அநுபவங்களால் உணர்த்துகின்றார்.]

இந்தநீ துவம்ப தத்தி னிலட்சியப் பொருளா மென்றும்
பந்தமில் பிரம மேதற் பதந்தனி லிலட்சி யார்த்தம்
அந்தமாஞ் சீவ னீச னவர்களே வாச்சி யார்த்தம்
சந்ததம் பேத மாவார் தமக்கயிக் கியங்கூ டாதே. (எசு)

இ - ள். இந்த நீ=சரீரத்திரய விலட்சணமாயும், பஞ்சகோச வெதிரித்தமாயும், அவஸ்தாத்திரய சாட்சியாயும், அகம்பதத்தின் லட்சியார்த்தமாயும் உள்ள நீ—துவம்பதத்தின் இலட்சியப்பொருள் ஆம்=துவம்பதத்திற்கு இலட்சியார்த்தமாம்.—என்றும் பந்தம் இல்=எக்காலத்தும் பந்தமற்ற—பிரமமே—தற்பதந்தனில் இலட்சியார்த்தம்=தற்பதத்திற்கு இலட்சியார்த்தமாம்.—அந்தம் ஆம் சீவன் ஈசன் அவர்களே=(வித்தையினால்) நாசமாகும் சீவேசுரரே—வாச்சியார்த்தம்=(முறையே, அப்பதங்கள் இரண்டிற்கும்) வாச்சியார்த்தங்களாம்.—சந்ததம்=சார்வகாலமும்—பேதம் ஆவார் தமக்கு=(பரஸ்பரம்) பேதமுடையராகும் சீவேசுரர்க்கு—அயிக்கியம் கூடாது=அபேதஞ் சித்தியாது.—எ - று. (எசு)

(130) [சீவேசுரபேதம் யாவையோ வெனின்? அவற்றைக் கூறுகின்றார்.]

பேதமா னதுவுங் கேளாய் பெயராலு மிடங்க ளாலும்
ஓதரு மூபா தி யாலு மூடலாலு முணர்வி னாலும்
பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று நிற்பர்
ஆதலா லிவர்க்கெங் நாளு மைக்கியமென் பதுகூ டாதே. (எஎ)

இ - ள். பேதம் ஆனதுவும் கேளாய்=(சீவேசுரர்க்குப்) பேதமுண்டாயிருப்பதையுங் கேள்.—பெயராலும்=(சீவேசுரரென்னும்) நாமங்களாலும்,—

இடங்களாலும்=(பிண்டாண்டமென்னும்) ஸ்தானங்களாலும்—ஓது அரும் உபாதியாலும்=(சத்து, அசத்தென்று நிச்சயித்துச்) சொல்லுதற்கரிய (காரிய காரண) வுபாதிகளாலும்,—உடலாலும்=(வியஷ்டி, சமஷ்டி) சரீராபிமானங் களாலும்,—உணர்வினாலும்=கிஞ்சிஞ்ஞ, சர்வஞ்ஞங்களாலும்—பாதலம் விசு ம்பு போல=பாதாளமும், விண்ணுலகமும் போல—பலதூரம் அகன்று நிற்பர்=வெகுதூரம் வேறுபட்டு நிற்பர்;—ஆதலால்,—இவர்க்கு=இச்சீவே சுரர்க்கு—எந்நாளும்=சார்வகாலமும்—ஐக்கியம் என்பது=அபேதமென்பது —கூடாது=சித்தியாது.—எ - று.

சாமவேதத்தின் சாந்தோக்கிய உபநிடதத்தில் உத்தாலக முனிவர், தனது புத்திரனை சுவேதகேதுவுக்குச் சகத்தினுற்பத்தி பண்ணுநின்ற ஈசு ரனைக்காட்டி "தத்துவமஸி" என்றருளிச் செய்தனர். "தத்" எ - து, அது: சகத்தினுற்பத்தி பண்ணுநின்ற சர்வசக்தி, சர்வஞ்ஞத்வாதி தர்மசகித ஈசுரன். "துவம்" எ - து, நீ: அற்ப சக்தி, அற்பஞ்ஞத்வாதி தர்மங்களை யுடைய சீவன். "அஸி" எ - து, இங்கே அது நீ ஆகின்றாய் என்று அத னது வாச்சியார்த்தமாம். இப்படிச் சொன்னதனால் ஈசுரனுக்கும், சீவனுக் கும் ஏகத்வம் வாச்சியார்த்தத்தாற் பாசமாகாநின்றது: அது கூடாது. என்னை? ஈசுரன் சர்வ சத்திமான், சீவன் அற்பசத்தியுடையவன். ஈசுரன் சர்வஞ்ஞன், சீவன் அற்பஞ்ஞன். ஈசுரன் விபு, சீவன் பரிச்சின்னன். ஈசுரன் சுதந் தரன், சீவன் கர்மாதீனன். ஈசுரன் பரோட்சன், சீவன் பிரத்தியட்சன். ஈசுரன் மாயையைத் தன் வசம்பண்ணினவன், சீவன் அவித்தியாமோகிதன்; இவர்கள் ஏகமென்று சொல்லுதல் அக்கினி சீதளமாம் என்னுங் கூற்றிற்குச் சமானமாம்; இதனால் வாச்சியார்த்தத்தில் விரோதமுண்டாகலின் என்க.(எஎ)

(131) [அவாதிதசுருதியாற் போதியாநிற்கும் ஜீவேசுர வைகீக்கியத் தீற்று நிஷேதங்கூடாதாகலின், அஃதெங்ஙனே பொருந்துமா றெனின்? அதற்குத்தாங் கூறுகின்றார்.]

வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாசகப் பொருள்சே ராமல்
இடராகிற் பொருளாம் வண்ண மிலக்கணை யுரையாற் கொள்வார்
திடமான வதுவு மூன்றுச் செப்புவார் விட்ட தென்றும்
விடலிலா தென்றும் விட்டு விடாததென் றும்பே ராமே. (எஅ)

இ - ள். வடநூல் வல்லவர்கள்=வடகலைகளில் நிபுணர்களான பண்டி தர்கள்—சொல்லும்=(சுருதி, ஸ்மிருதிகளிற்) சொல்லும்—வாசகப்பொருள் =வாக்கியார்த்தங்கள் —சேராமல்=பொருந்தாமல் — இடர்ஆகில்=விரோத மாமேல்—பொருள் ஆம் வண்ணம்=(விரோதபரிகாரமாய்) அர்த்தமாகும்படி க்கு — இலக்கணை உரையால்=இலட்சணை வாக்கியத்தால் — கொள்வார்= கொள்ளாநிற்பர்;—திடம் ஆன அதுவும்=திடமாகிய அவ்விலட்சணையும்— மூன்றுச் செப்புவார்=மூவகையாகச் சொல்லாநிற்பர்;—(அவை) விட்டது என்றும்=ஜஹல்லட்சணையென்றும்,—விடல் இலாது என்றும்=அஜஹல்

லட்சணையென்றும், — விட்டு விடாதது என்றும்=ஜஹதஜஹல்லட்சணை யென்றுஞ் (சொல்லப்படுகிற)—பெயர் ஆம்=நாமங்களையுடையனவாம்.— எ - று.

"வடநூல் வல்லவர்கள் கொள்வார்" என்றுரைட்டுக. வாக்கியங்களி லுள்ள விரோதங்களைப் பரிகரித்தலால், "திடமான வதுவும்" என்றார்.(எஅ)

[இதுவுமது.]

கங்கையிற் கோஷ மென்றுங் கறுப்புச்சேப் போடு தென்றுந்
தங்கிய ஸோயந் தேவ தத்தனென் றுஞ்சொல் வார்கள்
இங்குதா ரணங்க ளாக்கி யிந்தமூன் றுரைக ளாலே
துங்கநூல் விரோத மான சொல்லெலாம் பொருளாந் தானே. (எக)

இ - ள். கங்கையில் கோஷம் என்றும்=பகீரதியில் கிராமம் இருக் கின்றதென்றும்,—கறுப்பு தங்கிய சேப்பு ஓடுது என்றும்=கறுப்பு நிற்கச் சிவப்போடுகின்றதென்றும்,—ஸோயம் தேவதத்தன் என்றும்=அந்த இத் தேவதத்தனென்றும்—இங்கு உதாரணங்கள் ஆக்கி = (வாக்கியார்த்தங்கள் விரோதமான) இடத்து (இம்மூன்றையும்) உதாரணங்களாகக் கற்பித்து — சொல்வார்கள்= (அவ்வடநூல் வல்லோர்) சொல்லாநிற்பர்.—இந்த மூன்று உரைகளாலே=இம்மூவகை(இலட்சணை) வாக்கியங்களாலே—துங்க நூல்= பெருமைபொருந்திய சாஸ்திரங்களில்—விரோதம் ஆன சொல் எலாம்= விரோதமுடைய வாக்கியங்களெல்லாம்—தானே பொருள் ஆம்=(விரோத பரிகாரமாய்த்) தானே அர்த்தமாம்.—எ - று.

"தங்கிய"=செய்யிய என்னும் வினையெச்சம். "கறுப்புத் தங்கிய சேப்போடுது" என்று பொருள்கொள்ளப்படுவதால் எதிர்நிரனிறைப் பொருள்கோள். ஓடுகின்றது எனற்பாலது, "ஓடுது" என மரீஇயிற்று; "ஏகவுருவாக்கிடக்கது" என்றாற்போல.

வாச்சியார்த்த முழுதும்விட்டு வாச்சியார்த்த சம்பந்தியை யுணர்த்துவது விட்டலட்சணை எனப்படும். எப்படியெனில்? ஒருவன் கங்கையில் கிரா மம் இருக்கின்றது என்னின், அங்கே கங்காபதத்தின் விட்டலட்சணை தீரத்தி லிருக்கின்றது. என்னை? கங்கை என்னும் பதத்தின் வாச்சியார்த்தம் தேவ நதியின் பிரவாகமாம்; அதன்கண்ணே கிராமத்தின் ஸ்திதி கூடாது. ஆக லின், அப்பதம் தன் வாச்சியார்த்தம் முழுதும்விட்டு அதன் தீரத்தை யுணர்த் தல் காண்க. வாச்சியத்தின் சம்பந்தத்திற்கு லட்சணை என்று பெயராம்; இங்கே கங்கை எனும் பதத்தின் வாச்சியமான பிரவாகத்திற்குத் தீரத்தோடு சம்யோக சம்பந்தம் உண்டு; ஆதலால் கங்கை என்னும் பதத்தின் வாச்சியத் திற்குத் தீரத்தோடு உளதாயிருக்கிற சம்பந்தம் லட்சணை. வாச்சியமுழுதுந் தியாகம்பண்ணுவதால் இது விட்டலட்சணை. வாச்சியார்த்தத்தோடுகூட வாச் சியத்தினுடைய சம்பந்தியின் ஞானம் எப்பதத்திலுல் உண்டாமோ! அப்பதத் தில் விடாதலட்சணை உண்டென்றறிக. எங்ஙனெனின்? கறுப்புநின்றது

சிவப்போடிற்று என்று ஒருவன் சொல்லில், அங்கே கறுப்பு சிவப்பென்னும் பதங்களின் விடாதலட்சணை கருநிறம், செந்நிறங்களையுடைய பசுவிலும், அசுவத்திலும் இருக்கின்றன. என்னை? கறுப்பு, சிவப்பென்னும் நாமங்கள் கருநிறம், செந்நிறங்களை உணர்த்தும். ஆகலின் கறுப்பு, சிவப்பென்னும் பதங்களின் வாச்சியம் கருநிறம், செந்நிறங்களாம்; அவைகள் தனியே நிற்றலும், ஓடலுங்கூடா. இக்காரணத்தால் கறுப்பு, சிவப்பென்னும் பதங்களின் வாச்சியமான கருநிறம், செந்நிறங்களோடுகூடப் பசுவிலும், அசுவத்திலும் கருப்புச் சிவப்பென்னும் பதங்களின் விடாதலட்சணை உண்டு. குண குணிகட்குத் தாதாத்மிய சம்பந்தமுண்டென்பர்: கருமை, செம்மைகள் உருவத்தின் பேதமாவதாற் குணமாம். ஆதலால் கருப்பு, சிவப்பென்னும் பதங்களின் வாச்சியமான கருமை, செம்மைக் குணங்கட்கு அவைகளின் குணிகளான பசு, அசுவங்களோடு யாதொரு தாதாத்மிய சம்பந்தமுண்டோ! அது லட்சணை. வாச்சியத்தை விடாமல் அதிகத்தைக் கிரகணஞ்செய்வதால் இது விடாதலட்சணையாம்.

எங்கே பதத்தின் வாச்சியார்த்த மத்தியில் ஓர் பாகந் தியாகமும், ஓர் பாகங் கிரகணமுமாமோ! அங்கே பாகத்தியாகலட்சணை யுண்டு; அந்தப் பாகத்தியாகத்தையே விட்டுவிடாதலட்சணையென்றுங் கூறுவர். எங்ஙனெனின்? முன்னே கண்ட தேவதத்தனென்னும் ஓர் புருஷனை அந்நியதேசத்திற் கண்டு "அவன் இவனும்" என்று ஒருவன் சொல்லில் அங்கே பாகத்தியாகலட்சணை யுண்டு. எதனாலெனின்;—அதீதகாலத்தில் அந்நியதேசத்திலுள்ளவனை அவனென்பர்; ஆகலின் அதீதகாலம், அந்நியதேசங்களோடு கூடினவன் அவனென்னும் பதத்திற்கு வாச்சியார்த்தமாம். வர்த்தமானகாலத்தில், சமீபதேசத்திலுள்ளவனை இவனென்பர்; ஆகலின் வர்த்தமானகாலம், சமீபதேசங்களோடுகூடினவன் இவனென்னும் பதத்திற்கு வாச்சியார்த்தமாம். அதீதகாலத்தோடும், அந்நியதேசத்தோடுங் கூடினவனை வர்த்தமானகாலம், சமீபதேசங்களோடு கூடினவனுமென்னும் இது வாச்சியார்த்தமாம்; ஆகவே அதீதகாலமும், வர்த்தமானகாலமும் ஒன்றுக்கொன்று விரோதமாயும், அப்படியே அந்நியதேசத்திற்கும், சமீபதேசத்திற்கும் விரோதமாயும் உள்ளனவாகலின் இரண்டுபதங்களிலுந் தேசகாலங்களாகிய வாச்சிய பாகத்தைவிட்டு தேவதத்தனுடைய தேகமாத்திரத்தில் இரண்டு பதங்களின் பாகத்தியாகலட்சணை உண்டென்பர். (எக)

[இலட்சணை மூன்றனுள் விட்டலட்சணை, விடாதலட்சணை என்னும் இரண்டும் "மஞ்சோ ஹ்மம்" "சத்திய ஞானநந்தம் பிரஹ்மம்" என்பன முதலிய வாக்கியங்களில் உபயோகமல்லாமல் "தத்துவமஸி" யாதிமஹாவாக்கியங்களில் உபயோகமின்மையின் அவைகளை விரிக்காமலொழித்து, தத்துவமஸி மஹாவாக்கியத்தில் உபயோகமான பாகத்தியாகலட்சணையின் உதாரணத்தை விரித்துரைக்கின்றார்.]

பன்னிய ஸோய மென்னும் பதங்களின் வாச்சி யார்த்தம்
அன்னிய தேசங் கால மவனிவ னென்ப வெல்லாம்

சொன்னவிவ் விரோதம் விட்டுத் தொடரிலக் கியம்வி டாமல்
உன்னிடிற் றேவ தத்த னெருவனே வெளியாக் காட்டும். (அ0)

இ - ள். பன்னிய = (முன்) சொல்லிய—ஸோ அயம் என்னும் பதங்களின் = அவன், இவனென்னும் பதங்களினுடைய—வாச்சியார்த்தம் = வாச்சியார்த்தமாவன :—அந்நியதேசம் காலம் = தூரதேசம், சமீபதேசம், அதீத காலம், வர்த்தமானகாலம்—அவன் இவன் = அந்தத் தேவதத்தன், இந்தத் தேவதத்தன்—என்ப எல்லாம் = என்பனவனைத்துமாம் ;— சொன்ன இவ் விரோதம் விட்டு = (இவை ஒன்றற்கொன்று விரோதமுண்மையின்) சொல்லிய இவ்விரோத தர்மங்களான (வாச்சியார்த்தங்களை) விட்டு—தொடர் இலக்கியம் விடாமல் = (அவைகளை) அநுசரித்திருக்கின்ற இலட்சியார்த்தமென்னும் (சரீரமாத்திரத்தை) விடாமல்—உன்னிடில் = ஆலோசித்துப் பார்க்கில், —தேவதத்தன் ஒருவனே = தேவதத்தனென்னும் ஓர் புருஷனே—வெளியாக் காட்டும் = (விரோதமில்லாமற்) பிரத்தியட்சமாகக் காட்டாநிற்கும் (ஸோயம் தேவதத்தனென்னும் வாக்கியம்.)—எ - று.

"தொகை இலக்கியம் விடாமல்" எ - ம், "தொடர் விசேஷியம் விடாமல்" எ - ம் பாடமுளது. இவ்வுதாரணத்தை முற்செய்யுளின் விசேஷவுரையிலேயே விரித்துரைத்தாம். (அ0)

(132) [பாகத்தியாகலட்சணையைத் தாஷ்டாந்தத்திற் றரிசிப்பிக்கிறார்.]

தத்துவ மெனும்ப தங்கள் பிரமமாய்ச் சாட்சி யான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தை விட்டு
நித்தமு மதுநீ யாகு நீயது வாகு மென்னும்
அர்த்தமு மகண்ட மென்றே யசிபத வைக்கியங் காட்டும். (அக)

இ - ள். தத்துவம் எனும் பதங்கள் = (சாமவேத மஹாவாக்கியமானது) அது நீ என்னும் பதங்களின்—பிரமம் ஆய் சாட்சி ஆன = பிரஹ்மமாயும், சாட்சியாயுமுள்ள—வத்துவை விடாமல் = சேதனபாகமான லட்சியார்த்தத்தை விடாமல்—பேதவாச்சிய அர்த்தத்தைவிட்டு = பேத தர்மங்களையுடைய வாச்சியபாகங்களை விடுத்து—நித்தமும் = சார்வகாலமும்—அது நீ ஆகும் = பிரஹ்மமே நீயாம்,—நீ அது ஆகும் = நீயே பிரஹ்மமாம்—என்னும் அசிபத அர்த்தமும் = என்று சொல்லும் அசிபதத்தின் பொருளும்—அகண்டம் என்றே = ஏகமேயென்று—ஐக்கியம் காட்டும் = ஐக்கியத்தை யுணர்த்தாநிற்கும்.—எ - று.

சாமவேத மஹாவாக்கியம் தோன்ற எழுவாய். "வாக்கியம் விடாமல் விட்டு, அகண்டமென்று, காட்டும்" என முடிக்க.

மாயை, மாயையின் கண்ணுபாசம் மாயைக்கதிஷ்டான சேதனம் மூன்றுங்கூடி சர்வசக்தி, சர்வஜ்ஞத்வாதி தர்மசகிதனான ஈசுரனும் ; அவனே தற்பதத்திற்கு வாச்சியம். வியஷ்டி அவித்தை, அதில் ஆபாசம், அதினதிஷ்

டான சேதனம் மூன்றுங்கூடி அற்பசக்தி, அற்பஞ்ஞத்வாதி தர்மங்களை யுடையனான ஜீவனும்; இவன் துவம்பதத்திற்கு வாச்சியம்; இவரிருவர்க்கும் தத்துவமஸிவாக்கியம் ஏகத்தன்மை போதிக்கின்றது; இது பொருந்தவில்லை. ஆகலின் ஆபாசசகிதமான மாயை, மாயாகிருதமான சர்வசக்தி, சர்வஞ்ஞத்வாதி தர்மம் இவ்வளவு வாச்சிய பாகத்தையும்விட்டு சேதனபாகத்தில் தற்பதத்தின் பாகத்தியாகலட்சணை; அப்படியே ஆபாசசகித அவித்தைக்கூறும், அவித்தையாற் பண்ணப்பட்ட அற்பசக்தி, அற்பஞ்ஞத்வாதி தர்மமான துவம்பதத்தின் வாச்சிய பாகத்தை விடுத்து சேதனபாகத்தில் துவம்பதத்தின் பாகத்தியாகலட்சணை. இவ்வாறு பாகத்தியாகலட்சணையினால் ஈசுரனும், சீவனும் ஆகிய இருவருடைய சொரூபத்தில் லட்சியமான சேதனபாகங்களின் ஏகத்வத்தைத் "தத்துவமஸி" மஹாவாக்கியம் போதியாநின்றது.

(133) அப்படியே "அயமாத்மாப் பிரஹ்மம்" என்னும் மஹாவாக்கியத்தில் ஆன்மபதத்திற்குச் சீவனும், பிரஹ்மபதத்திற்கு ஈசுரனும் வாச்சியம்: பூர்வம்போல இரண்டுபதங்களினும் லட்சணை. இலட்சியார்த்தம் பரோட்சமல்லவென்னும் அர்த்தத்தை அயமெனும்பதம் காட்டிநின்றது. எல்லாருக்கும் அபரோட்சமான ஆன்மாவே பிரஹ்மமாமென்பது வாக்கியார்த்தமாம். "அகம் பிரஹ்மாஸ்மி" என்னும் மஹாவாக்கியத்தில் அகம்பதத்திற்குச் சீவனும், பிரஹ்மபதத்திற்கு ஈசுரனும் வாச்சியம்: இரண்டு பதங்களின் சேதனபாகத்தில் லட்சணை. நான் பிரஹ்மமாயிருக்கிறேனென்பது வாக்கியார்த்தமாம். "பிரஜ்ஞானமானந்தம் பிரஹ்மம்" என்னும் மஹாவாக்கியத்தில் பிரஜ்ஞானபதத்திற்குச் சீவனும், பிரஹ்மபதத்திற்கு ஈசுரனும் வாச்சியம்: பூர்வம்போல லட்சணை. லட்சியமான பிரஹ்மான்மா ஆனந்த குணமுடையதன்று; பின்னே எப்படிப்பட்டதெனின்? ஆனந்தரூபமாமென்னும் அர்த்தத்தைக் காட்டிநின்றது ஆனந்தபதம் என்க. ஆன்மாவுக்கபின்னமான பிரஹ்மம் ஆனந்தரூபமாமென்பது வாக்கியார்த்தம்.

(134) மஹாவாக்கியத்திற்போல அந்நிய வாக்கியங்களிலுள்ள சத்தியஞானானந்தப்பதங்களும் சுத்தப் பிரஹ்மத்தைப் பாகத்தியாக லட்சணையினாலேயே உணர்த்துகின்றன: சக்தியினால் உணர்த்தவில்லை. என்னை? சுத்தப்பிரஹ்மம்யாதாமொரு பதத்திற்கும் வாச்சியமாவதல்ல: இது சித்தாந்தம். இதனால் சகலபதங்களும் விசிஷ்டத்தின் வாசகம்; சுத்தத்தின் இலட்சகமாம். மாயையின் ஆபேட்சிக சத்தியத்தன்மையும், சேதனத்தின் நிரபேட்சிக சத்தியத்தன்மையுங் கூடிநிற்கில், சத்திய பதத்திற்கு வாச்சியம்: நிரபேட்சிக சத்தியம் லட்சியம். புத்திவிருத்தி ரூபஞானமும், சுயம்பிரகாச ஞானமுங் கூடிநிற்கில், ஞானபதத்திற்கு வாச்சியம்: சுயம்பிரகாசபாகம் லட்சியம். விஷய சம்பந்த ஜந்நிய சுகாகார சாத்வீகவந்தக்கரணவிருத்தியும், பரமப்பிரேமாஸ்பத சொரூப சுகமுங் கூடிநிற்கில், ஆனந்த பதத்திற்கு வாச்சியம்: விருத்தி பாகத்தைவிட்ட சொரூபபாகம் லட்சியம்; இவ்வாறு சர்வபதங்களின் லட்சணையும் சுத்தத்தில் சஞ்சேபசாரீரகத்தில் பிரதிபாதனஞ்செய்தனர். முன்னும், பின்

ணும், பிராந்தி சமயத்தும் லட்சியார்த்தங்கட்கு அபேதமுண்மையின், "நித்த முமி" என்றார். அது நீயாகும், நீ அதுவாகும் என்று ஓதப்புரோத பாவமாக வபேதஞ் சொன்னது முறையே பரோட்சப்பிராந்தியும், பரிச்சின்னத்வப் பிராந்தியும் நிவிர்த்தியாகும்பொருட்டென்க. அது நான், நான் அது என மாறிச் சிந்திப்பதை ஓதப்புரோதபாவமென்பர்; இதனைத் தென்மொழியில் குறுக்கு, நெடுக்கென்று பிரயோகிப்பர். (அக)

[சீவப்பிரஹ்மங்களி னபேதத்தைத் திருஷ்டாந்தத்தானும் உணர்த்தி இதனை உனதநுபூதிக்க ணிருந்துறுதி யெனல்.]

கடநீரின் மேக நீரிற் கண்டவா னிரண்டும் பொய்யே
குடவானும் பெரிய வானுங் கூடியொன் றுமெப் போதும்
இடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போது மேகம்
திடமாகச் சுவாநு பூதி சிவோகமென் றிருந்தி டாயே. (அஉ)

இ - ள். கட நீரில்=கடசலத்திலும்,—மேக நீரில்=மேக சலத்திலும்—கண்ட வான் இரண்டும்=பிரதிவிம்பித்திருக்கின்ற சலாகாசம், மேகாகாசங்களிரண்டும்—பொய்யே=(உபாதிகளாற் கற்பிதங்களாதலால்) மித்தையே.—குடவானும் பெரியவானும்=கடாகாசம், மகாகாசம் (இவையிரண்டும்)—எப்போதும்=சார்வகாலமும்—கூடி ஒன்றும்=பேதமில்லாமல் எப்படி)ஏகமோ (அப்படி)—இடம் ஆன பிரஹ்மம்சாட்சி=வியாபகமான பிரஹ்மமும், சாட்சியும்—இரண்டும்=(ஆகிய) இரண்டும்—எப்போதும்=சார்வகாலமும்—ஏகம்=ஐக்கியமாம்;—திடம் ஆக=(இவ்வைக்கியவநுபவம் சமூசயாதிப் பிரதிபந்தமின்றித்) திடமாதற்பொருட்டு—சிவோகம் என்று=சிவமே நான், (நானே சிவம்) என்று (நிதித்தியாசித்து)—சுவாநுபூதி = (நிதித்தியாசன பரிபாக வசத்தாலுளதாகும் அத்வைதாவஸ்தாநரூபமான பிரஹ்மாநுபூதியில்—இருந்திடாய்=இருப்பாய்.—எ - று.

"எப்போதுமேகம்" எ - து, சொரூபதிருஷ்டியினு லென்க. (அஉ)

(135) [குருவருளிய நெறிப்படியே தானநுபவித்தல்.]

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமல்
பஞ்சகோ சமுங்க டந்து பாழையுந் தள்ளி யுள்ளில்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்தன் பிரம மென்னும்
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான். (அங)

இ - ள். தஞ்சம் ஆம் * குருவும் சொன்ன=தனக்குப் பெருந்துணையாகிய ஆசாரியருமருளிய—தத்துவ வழி தப்பாமல்=உண்மை நெறிதவறுமல்—பஞ்சகோசமும் கடந்து=அந்நமயமுதல், ஆநந்தமயகோச பரியந்தம் (தானல்லவென்று) நேதித்து, (அவைகட்கு விலட்சணமாய்,)—பாழையும் தள்ளி=(அதற்குமேலே கண்ட பஞ்சகோசங்களின் அபாவரூபமான) சூனி

* "குருவும்" என்றதன்கண் உம்மை, இறந்தது தழீஇய எச்சம்.

யத்தையும் (அதைக் காணுநிற்கும் அநுபவரூபந் தானென்றென்று) ஒழித்து,—உள்ளில்=அகத்தில்—கொஞ்சம் ஆம் இருப்பும் விட்டு=(பஞ்சகோச சூனியங்களைக் காணுநிற்கும் அநுபவரூபமான சாட்சி தானென்றிருந்த) அற்பமாகிய ஸ்திதியையும் விடுத்து,—கூடஸ்தன் பிரமம் என்னும்=அகம் பிரஹ்மமென்னும்—நெஞ்சமும்=அகண்டாகார விருத்தியும்—நழுவி=(நிதித்தியாசன பரிபாகவசத்தினால் உறங்கினவன் கையிற் பதார்த்தம்போல) நழுவி—ஒன்றாய் நின்ற=அகண்டைகரசமாயுள்ள—பூரணத்தைக் கண்டான்=பரிபூரணமான பிரஹ்மத்தை அநுபவித்தான்.—எ - று.

பஞ்சகோச சூனியங்களாகிய துவிதங்களைத் தானெனல் பந்தமாகலின் அந்தத் துவித விருத்தியை விட்டென்பார், "**பஞ்சகோசமுங் கடந்து பாழையுந்தள்ளி**" எ - ம், சாட்சிதானெனல் பந்தமன்றாயினும் புருஷார்த்த சாதன ஞானமன்றாகலின் சாட்சி விருத்தியையும் விட்டென்பார், "**உள்ளில் கொஞ்சமாமிருப்பும்விட்டு**" எ - ம், புருஷார்த்த சாதன ஞானமாயினும் அத்வைதாவஸ்தாரூபமென்னும் சாத்தியமான நிருவிகற்பவனுபவத்திற்கு அஞ்ஞாதமான அகண்ட பிரஹ்மாகார விருத்தியும் ஒழிதல்வேண்டும். ஆதலான் அகண்டாகார விருத்தியும் விட்டென்பார், "**கூடஸ்தன் பிரஹ்மமென்னும் நெஞ்சமுநழுவி**" எ - ம், வெகுவித பிரயாசங்கட்குக் காரணமான சித்த விகற்பங்களனைத்தும் தொலைத்து அகண்டைகரச சொரூபம் ஆயினனென்பார், "**ஒன்றுயிற்றின்ற பூரணத்தைக் கண்டான்**" என்றும் கூறினார். சமாதிலட்சணம் இரண்டாம் படலத்தில், நஙு - ம் செய்யுளுரையில் விரித்தெழுதப்படும்; ஆண்டுக்காண்க.

இதற்கு, உ - ம், ரிபுகீதை,

"தேகமுத லனைன்ன றுவித விர்த்தி திகழ்சாட்சி நானென்னல் சாட்சி விர்த்தி, யேகபர நானென்ன லகண்ட விர்த்தி யிம்மூன்று விருத்திகளி லிரண்டைத் தள்ளி, யாகுமகண் டாகார விருத்தி தன்னை யநவாத மாதரவா யப்பியா சித்துச், சோகமுறுஞ் சித்தவிகற் பங்க டீர்த்துச் சொன்னவகண் டேகரச சொரூப மாவாய்."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (அங)

(136) [அநுபவத்திற் சீடனடைந்துள்ள ஸ்திதியைக் கூறுகின்றார்.]

அனுபவா நந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்
தனுகர ணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண
நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானன். (அச)

இ - ள். அநுபவ ஆநந்த வெள்ளத்து=அநுபூதிரூபமான பிரஹ்மாநந்த சமுத்திரத்தின் கண்ணே—அழுந்தி=படிந்து—அகண்டம் ஆகி=பேதாதித

மாய்,—தனுகரணங்கள் ஆதி=தேகேந்திரிய முதலிய—சகலமும் இறந்து சித்து ஆய்=அனேத்து நாமரூபங்களும் ஒழிந்து (சலத்திலிட்ட லவணம் போலச்) சித்துரூபமாய்,—மனது பூரணம் ஆய்=மனம் பரிபூரணமாய்,—தேகம் ஆன=(அருளே) திருவுருவான—சற்குருவும் காண=சற்குருவுந் திருக்கண்ணுற் பார்த்தருள—நனவினில் சுழுத்தி ஆகி=நனவிற் சுழுத்தியுடையவனுய்—நன் மகன்=நல்ல சீடனுனவன்—சுபாவம் ஆனன்=தனது சுபாவரூபமாயினன்.—எ - று.

சமாதியில் இந்திரியங்கள் தமது காரணமான அஞ்ஞானத்தில் சுழுத்தியிற்போல லீனமாகாமல் தத்தங் கோளகைகளி லிருத்தலானும், அங்ஙனமிருப்பினும் விஷயாநுபவரூபமான பகிர்முக விருத்தி அவைகட் கின்மையானும் சமாதி நனவிற் சுழுத்தியாம். "நனவினிற் சுழுத்தியாகி" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"நனவிற் சுழுத்தி நிலைமேவி நன்று யெல்லா முள்ளகற்றித், தனதிச் சையில்வந் ததுபுறத்தே சமைப்பாய் சித்த முண்டாகை, கனதுக் கமதாஞ் சித்தமறிற் கனத்த சுகமாஞ் சித்தத்தை, யுனதுட் படுத்தி யுணர்வின்மை யாலே யொழிப்பா யுணர் வுருவாய்."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (அச)

[சீடன் அநுபூதியினின்றெழுந் தானந்தபரவசனுய் ஆசாரியரைப் பணிந்து அவரதருளை வியந்து துதித்துக் கைம்மாறு காணேனெனல்.]

அளிமக னெடும்போ திவ்வா றுனபின் மனது மெள்ள
வெளியில்வந் திடவு ணர்ந்தான் விமலதே சிகனைக் கண்டான்
துளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்தான்
குளிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான்.

இ - ள். அளிமகன் நெடும்போது=அன்புள்ள சீடனுனவன் வெகு நேரம்—இவ்வாறு ஆனபின்=முன் சொல்லியவண்ணம் இருந்ததன்பின்னே,—மனது=அந்தக்கரணமானது—மெள்ள வெளியில் வந்திட=கிரமமாக வெளியில் வர—உணர்ந்தான்=அறிந்து—விமலதேசிகனைக் கண்டான்=அவிதியாமலமற்ற குருவைத் தரிசித்து,—துளிவிழி சொரிய=ஆநந்தபாஷ்பம் விழியுதிர்ப்ப—பாதம் வீழ்ந்து தொழுது=குருவின் சீர்பாதத்தில் (தண்டம்போல) வீழ்ந்து நமஸ்கரித்து,—எழுந்து சூழ்ந்தான்=எழுந்து பிரதட்சணஞ்செய்து—கும்பிட்டு நின்று=கைகூப்பி நின்று—குளிர்முகச் சுவாமி கேட்கச் சொல்வான்=(உவாமதிபோற்) குளிர்ச்சிபொருந்திய திருமுகமுடைய ஸ்ரீ - குருசுவாமி கேட்டருள விண்ணப்பஞ்செய்வான்.—எ - று.

"மெள்ளவெளியில்வந்திட" என்பதை, வாசிட்டத்திற் பிரகலாதர் சமாதியினின்றும் உத்திதமானவிடத்திற் காண்க. (அடு)

[குருவின் கருணைக்குக் கைம்மாறு காணேனெனல்.]

ஐயனே யெனதுள் ளேநின் றநந்தசன் மங்க ளாண்ட
மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யுமா றொன்றுங் காணேன் றிருவடி போற்றி போற்றி. (அசு)

இ - ள். ஐயனே = (எனது) பிதாவே—எனது உள்ளேநின்று = எனது அந்தக் காரணத்தின்கண் (அந்தரியாயியாய்) நின்று—அநந்தசன்மங்கள் ஆண்ட = அநந்தகோடி ஜநநங்களில் கர்மோபாசனைகளிற் செலுத்தி எனது அந்தக் காரணத்தின் கண்ணுள்ள மலதோஷ, விட்சேப தோஷங்களைப்போக்கி என்னை யாண்டருளிய—மெய்யனே = கடவுளே—உபதேசிக்க = (ஆவரண தோஷ நீங்கி எனது நிஜரூபத்தை யான் றரிசித் தாநந்தமடைய) உபதேசித் தருளும் பொருட்டு—வெளிவந்த = வெளியே (அருளே திருவுருவாய்) எழுந் தருளிய — குருவே போற்றி = குருவே (உமக்கு) நமஸ்காரம்.—உய்யவே முத்தி நல்கும் ஓர் உதவிக்கு = (யான்) ஈடேற (அநர்த்த நிவிர்த்தி ஆநந்தப் பிராப்தி ரூபமான) மோட்சத்தை (ஞானவாயிலாகத்) தந்தருளிய இணையற்ற வுதவிக்கு — உதவி = கைம்மாறு—நாயேன் செய்யும் ஆறு = நாயடியேன் செய் யும்படிக்கு—ஒன்றும் காணேன் = யாதொன்றுங் கண்டிலேன் :—திருவடி போற்றி போற்றி = திருவடிக்கு வந்தனம் வந்தனம்.—எ - று.

மெய்ப்பொருள், பொய்ப்பொருளென்னும் இரண்டனுள் மெய்ப் பொருள் உம்மாற்பெற்றமையானும், பொய்ப்பொருளான உடலமாதி இணை யாகாமையானும், திருவடியை யடைந்தவன்றே அவை உம்முடையவாகவே ஆயினமையானும் கைம்மாறொன்றுங் காணேனென்பான், "முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன் செய்யுமா றொன்றுங் காணேன்" எ - ம், உமது திருவடியே தாயுந் தந்தையுஞ் சுற்றமுந் தனமுமாமென்று எனதுடல முள்ள ளவும் புகழ்ந்தேத்துவதே கைம்மாறாகக் கொள்ளல்வேண்டு மென்பான், "திரு வடி போற்றி போற்றி" என்றும் கூறினன். (அசு)

[தனதுபதேசஞ் சீடனிடத்துச் சபலமானமையான், அவனை யாதாவுசெய்து நீ எனக்குச் செய்யுங் கைம்மாறிது வென்றசிரியர் கூறுகின்றார்.]

சிட்டனிவ் வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வெனவி ருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்
துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடரா மற்சொரூப ஞான
நிட்டனை யிருக்கி னீதே நீசெய்யு முதவி யாமே. (அஎ)

இ - ள். சிட்டன் இவ்வாறு கூற = நல்ல சீடனானவன் ஆசிரியர் செய்தவுப காரத்தைப்பாராட்டி அதற்குப் பிரதியுபகாரங் காணேன் என்று சொல்ல—தேசிகர் மகிழ்ந்து நோக்கி = ஆசிரியர் சந்தோஷித்து (த் தமது கிருபாநோக்கத் தால் அவனைப்) பார்த்தருளி—கிட்டவா என இருத்தி = இங்கே வாவென்று

(விளித்து ஆதாவாகத் தமது) சமீபத்தில் வைத்து—கிருபையோடு அருளிச் செய்வார்=கருணையோடுமநுக்கிரகிப்பார்.—துட்டம் ஆம் தடைகள் மூன்றும்=தீமையவாகிய பிரதிபந்தங்கண் மூன்றும்—தொடராமல்=(உன்னை) அடையாமல்—சொரூபஞான நிட்டன் ஆய்=சொரூப ஞானத்தில் ஊறுடனாய்—இருக்கின்=இருந்தனையாயின்,—ஈதே=இதுவே—நீ செய்யும் உதவி ஆம்=நீ (எனக்குச்) செய்யாநிற்கும் பிரதியுபகாரமாகும்.—எ - று.

அபரோட்ச ஞானத்தையும் பேதித்தலால், "துட்டம்" என்றார். "சொரூப ஞான நிட்டனாயிருக்கின் நீதே நீசெய்யு முதவியாம்" என்றதால்,

"மாரிபோன் மாறுவேண் டாதே மீட்சியில் பதத்தைக் கருணையா லளிக்கும் வித்தகக் குரவனே யெவருந், தாட்சிசெய் தேதத் தற் குரியதத் துவமாஞ் சங்கர னென்றிடத் தகுவான்."—

என்னும் பிரமகீதையின் செய்யுட்கு இவ்வாசிரியர் இலக்கியமாயினர் என்றறிக. (அஎ)

[அபரோட்சஞானம் நீங்குமாவென்னுஞ் சீடன்
கடாவிற்கு ஆசிரியர் விடைகூறல்.]

நீநானென் றிரண்டி லாம னிறைந்தபூ ரணமா யெங்கும்
நானெனத் தெளிந்த ஞான நழுவுமோ குருவே யென்றான்
தானெனும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன்றும்
ஆனலுந் தடைக ளுண்டே லநுபவ முறைத்தி டாதே. (அஅ)

இ - ள். நீ நான் என்று=(தற்பத லட்சியார்த்தமான) நீர் பிரஹ்மமென்றும், (துவம்பதலட்சியார்த்தமான) நான் கூடஸ்தனென்றும்—இரண்டு இலாமல்=(கருதாநிற்கும்) இத்துவித கற்பனையுமில்லாமல்—நிறைந்த பூரணம் ஆய்=நிறைந்த பரிபூரணமாய்,—எங்கும்=எவ்விடத்தும்—நான் ஆக=(சின்மயனான) யானொருவனேயுளனாக—தெளிந்த ஞானம்=(அநுபவமாக) அறிந்த ஞானமானது—நழுவுமோ குருவே=நீங்குமோ ஆசாரியரே—என்றான்=என்று (சீடன்) வினவினன்.—தான் ஆகும் பிரமரூபம்=தன்மயமாகும் பிரஹ்ம ரூபமானது—சற்குரு நூலால்தோன்றும்=சற்குரு உபதேசத்தாலும், சற்சாஸ்திர விசாரத்தாலும் அநுபவமாம்;—ஆனலும்=இவ்வாற்றால் பிரஹ்மானுபவமுளதாயினும்—தடைகள் உண்டேல்=பிரதிபந்தங்களுண்டாமாயின்,—அநுபவம் உறைத்திடாது=அவ்வநுபவந் திடப்படமாட்டாது.—எ - று.

இராஜாவானவன் ப (ஹ) ர்ச்சுவை நேத்திராத்தினலறிந்தும் விபரீத பாவனை எப்படி நிவிர்த்தியாகவில்லையோ! அப்படிக் குருவருளாலும், மஹாவாக்கிய விசாரத்தாலும் பிரஹ்மாபரோட்சஞானமுண்டாயினும் யாவருடைய புத்தியில் அசம்பாவனை, விபரீத பாவனையாகிய தோஷமுண்டாமோ! அவருடைய தோஷரூபமான களங்கத்தோடு கூடியஞானம் பலத்திற் கேதுவாகா தென்பார்,

"தானுகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் ரேன்று
மானுஞ் தடைக ளுண்டே. லநுபவ முறைத்திடாதே."—என்ரூர்.

(137) தடையெவை யெனி லஞ்ஞான சந்தேக விபரீ தங்கள்
படர்செயு மிந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே
உடனுடன் வரும் வந்தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளித லாலே.()

இ - ள். தடை எவை எனில்=பிரதிபந்தங்கள் யாவையென்று கேட்பாயாயின்—அஞ்ஞான சந்தேக விபரீதங்கள்=அஞ்ஞானம், சந்தேகம், விபரீதங்களாம்.—[அபரோட்ச ஞானம் வந்தும் இவை யுண்டாதற்குக் காரணம் என்னையோவெனின்?] படர்செயும் இந்த மூன்றும்=துன்பத்தைப் பயவாநின்ற இம்மூவகைப் பிரதிபந்தங்களும்—பலசன்மப் பழக்கத்தாலே=(பூர்வம்) நாநாவித ஜநநங்களிற் (பழகிவந்த) பரிசயத்தினுலே—உடன் உடன் வரும்=அடிக்கடியுண்டாகும்;—[அவையுண்டாயிற் படுமிழுக் கென்னையெனின்?] வந்தக்கால்=அவையுண்டாயின்,—உயர் ஞானம் கெடும்=மேலான (பிரஹ்மான்ம வைக்கிய) ஞானம் (பலத்திற் கேதுவாகாமற்) போம்.—(ஆகலின்) இவற்றை=இவ்வஞ்ஞான சந்தேக விபரீதங்களை—கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே=சிரவண, மனன, நிதித்தியாசனங்களினுலே—திடமுடன் கெடுப்பாய்=தைரியத்தோடு கூடிநின்று நாசம் பண்ணுவாய்.—எ - று.

திடமாவது, சிட்டுக்குருவி தர்ப்பை நூனியாற் சமுத்திரத்தை இறைத்துப் பாழாக்கத் தான்கொண்ட முயற்சிபோலும் பிரதிபந்தங்கள் அடிக்கடியுதிப்பதான் மலையாமல் அவை கெடுதற்குரிய வாயிலில் நெடுங்காலம், நிரந்தரம் ஆதரவோடு கூடிநிற்கு முயற்சி. (அக)

[பிரதிபந்தசகிதஞானம் பலத்திற் கேதுவாகாதென்பதைத் திருஷ்டாந்த முகத்தினுலறிவித்து முற்கூறியதை வற்புறுத்துகின்றார்.]

அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட் டாது
மக்கின ஞானத் தாலே வந்தபந் தமும்வே வாது
சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்த றெளித லாலே
விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே. (கூ0)

இ - ள். அக்கினி கட்டுப்பட்டால்=அக்கினியானது (மணிமந்திர அவுஷதங்களினுலே) அடக்கப்படுமாயின்—அற்பமும் சுடமாட்டாது=கொஞ்சமும் (காஷ்ட முதலியவற்றைத்) தகிக்க யோக்கியமாகாது;—(அதுபோல) மக்கின ஞானத்தாலே=(அஞ்ஞான, சந்தேக, விபரீதங்களாலே) அமிழ்த்தண்ட தத்துவ ஞானமாகிய அக்கினியினுல்—வந்த பந்தமும் வேவாது=(அநாதிகாலந்தொடுத்து) வந்துள்ள (கர்த்திருத்வாதி) பந்தமும் வேகாது.—(ஆகலின்) சிக்கெனப்பழகி கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே=நெடுங்கால நிரந்தரம் நேசத்தோடும் அப்பியசித்துச் சிரவண, மனன, நிதித்தியாசனங்

களாலே—விக்கினமடம் சந்தேகம் விபரீதம்=(ஞானபலமான மோட்சப்) பிரதிபந்தங்களான அஞ்ஞான, சந்தேக, விபரீதமென்பவற்றை—போக்குவாய்=ஒழிப்பாய்.—எ - று. (கo)

[நிவிர்த்திக்கத்தக்கவைகளான பிரதிபந்தங்களின் சொரூபங்களைக் கூறுகின்றார்.]

பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானம்
குரவன்வாக் கியநம் பாமற் குழம்புவ தாஞ்சந் தேகம்
திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முள்ளே
விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர். (கக)

இ - ள். பிரமபாவனையை மூடி = சிவோகமென்னும் பாவனையை மறைத்து—பேதங்காட்டுவது=நான் பிரஹ்மம் அல்லனென்னும் நினைப்பூட்டுவது—அஞ்ஞானம்=அஞ்ஞானமாம்.—குரவன் வாக்கியம் நம்பாமல்=(நீ பிரஹ்மமென்றருளிய) ஆசிரியர் வாக்கியத்தை விசேஷித்து நம்பாமல்—குழம்புவது சந்தேகம் ஆம்=(நான் பிரஹ்மமோ! அலனோ என்று) கலங்குவது சமுசயமாம்.—திரம் அறு சகம் மெய் என்றும்=திருஷ்டாதிருஷ்டமான ஜகத்துச் சத்தியமென்றும்,—தேகம் நான் என்றும்=(அநான்மாவாகிய) தேகம் நானென்றும்—உள்ளே=அகத்தே—விரவிய மோகந் தானே=பொருந்துவதான மோகமே—விபரீதம் என்பர் மேலோர்=விபரீதமாமென்பர் பெரியோர்.—எ - று. (கக)

[முன்சொல்லிய அஞ்ஞானாதிகளின் விரோதிகளான சிரவணாதிகளின் இயல்பு கூறுகின்றார்.]

தத்துவ வநுபோ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பார்
ஒத்துள பொருளை கத்தா லுசாவல்சிந் தித்த லென்பார்
சித்தமே காந்த மான தெரிசனந் தெளித லென்பார்
நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே. (கஉ)

இ - ள். தத்துவ அநுபோகம்=பிரஹ்மாகார விருத்தியை—தான்சாதித்தல்=(வேதாந்தார்த்த சிந்தனத்திலேலே) தான் அடிக்கடி ஆவிர்த்திசெய்யாநிற்பதையே—கேட்டல் என்பார்=சிரவணமென்பர் (பெரியோர்.)—ஒத்துள பொருள்=(சிரவணத்தாற்) சம்மதித்துள்ளபொருளே—ஊகத்தால்=(அபேதத்தைச் சாதிப்பதும், பேதத்தை வாதிப்பதுமான) யுத்தியினால்—உசாவல்=ஆராய்தலே—சிந்தித்தல்என்பார்=மனனமென்று சொல்லுவர்.—சித்தம் ஏகாந்தம் ஆன தெரிசனம்=சித்தம் பிரஹ்மாகாரமாத்திரமாக நிற்கும் அநுபவத்தை—தெளிதல் என்பார்=நிதித்தியாசனமென்பர்.—நித்தம்=நாடோறும்—இப்படிசெய்தக்கால்=இவ்வாறு (சிரவணாதிகளை) அநுஷ்டித்து வந்தாயாயின்,—நீ நிர்வாணம் பெறுவாய்=(அவ் வஞ்ஞானாதிப் பிரதிபந்தங்களைநீங்கி) நீ மோட்சமடைவாய்.—எ - று.

ஈண்டிது விவேகம்:—மோட்சமானது ஞானத்தால் நியமமாக உண்டாகும்; இதுவே சித்தாந்தமாம்; அந்த ஞானம் சிரவணத்தால் உளதாம். சிரவணம் இருவகைத்து; ஒன்று வேதாந்த வாக்கியத்திற்கும், சுரோத்திரத்திற்கும் உளதாய சம்யோகரூபம்: மற்றொன்று வேதாந்த வாக்கியத்தின் விசாரரூபம். ஞானத்திற்கேது பிரதமசிரவணம், இரண்டாவதல்ல. என்னை? சத்தஜந்நியஞானத்தில் இந்திரியத்தோடு சத்தத்தின் சம்யோகமே சர்வத்திர ஏதுவரம். ஆகலின், வேதாந்தவாக்கியத்திற்கும், சுரோத்திரத்திற்கும் உளதாய சம்யோகரூபமான சிரவணம் பிரஹ்மஞானத்திற்கேதுவாம். அவாந்தரவாக்கியத்தின் சிரவணம் பரோட்ச ஞானத்திற்கேதுவாம். மஹாவாக்கியத்தின் சிரவணம் அபரோட்சஞானத்திற் கேதுவாம். ஒருவனுக்கு ஞானம் உதயமாயினும் அசம்பாவனை, விபரீதபாவனைகளுண்டாமாயின் அவனுல் இரண்டாவதான சிரவணமும், மனன நிதித்தியாசனங்களுஞ் செய்யற்பாலனவாம். வேதாந்தவாக்கியத்தின் விசாரரூபமான சிரவணத்தால் வேதாந்த வாக்கியத்தினசம்பாவனை நிவிர்த்தியாம். சமூசயத்தை அசம்பாவனை என்பர்; வேதாந்தவாக்கியம் பிரஹ்மத்தைப் பிரதிபாதிக்கிறதோ! அல்லது, அந்நியங்களைப் பிரதிபாதிக்கிறதோ என்றுளதாகுஞ் சமூசயம் வேதாந்தவாக்கியத்தினசம்பாவனையாம்; அது அதன் விசாரத்தினுல் நிவிர்த்தியாம். மனனத்தினுல் பிரமேயத்தினசம்பாவனை நிவிர்த்தியாம்; சீவபிரஹ்மங்களின் ஏகத்வம் வேதாந்தத்தின் பிரமேயம் என்பர்; அவ்வேகத்வம் சத்தியமோ! அல்லது, சீவபிரஹ்மங்களின் பேதம் சத்தியமோ என்றிவ்வாறுளதாகுஞ் சமூசயம் பிரமேயவசம்பாவனை யெனப்படும்; அது மனனத்தினுல் நிவிர்த்தியாம். விபரீதபாவனை நிதித்தியாசனத்தினுல் நிவிர்த்தியாம். இவ்வாற்றுல், பிரதம சிரவணமோ ஞானவாயிலாக மோட்சத்திற் கேதுவாம். விசாரரூப சிரவணமும், மனன நிதித்தியாசனங்களும் அசம்பாவனை, விபரீதபாவனைகளை நிவிர்த்திக்கும் வாயிலாக மோட்சத்திற்கேதுவாம். இவ்வாறு பிரமாணகத, பிரமேயகத வசம்பாவனைகள் ஞானத்திற்குப் பிரதிபந்தங்களென்று விசாரசாகரத்திற் கூறியிருப்பதுபோல இவ்வாசிரியர் கூறுமல்,

"பிரஹ்மமல நானென்கை யஞ்ஞானம்
நானப் பிரஹ்மமோ வலனெவென் றிடலையம்"—

என்று வேதாந்தசூடாமணியிற் கூறியிருப்பதுபோல, —"பிரமபாவனையை முடிப்பேதங்காட்டுவதஞ் ஞானங், தூவன்வாக்கியநம் பாமற் தூழம்புவ தாஞ்சந் தேகம்" என்று முற்செய்யுளிற் கூறியிருப்பதால், "தத்துவ வநுபோ கந்தான் சாதித்தல் கேட்டல்" என்பதற்கு பிரஹ்மாகாரவிருத்தியை வேதாந்தத்தின் அர்த்த சிந்தனத்தினுலே அடிக்கடி ஆவிர்த்தி செய்யாநிற்பது சிரவணமாமென்று வேதாந்தவாக்கியத்தின் விசாரரூபமான இரண்டாவதான சிரவணத்தை உரைசெய்யப்பட்டது. வேதாந்தத்தின் அர்த்த சிந்தனத்தினுலே அடிக்கடி பிரஹ்மாகார விருத்தியுண்டாகா நிற்கும்; ஆகலான், அடிக்கடி வேதாந்தத்தின் அர்த்த சிந்தனரூபமான இரண்டாவதான சிரவணத்தினுலேயே அஞ்ஞானப் பிரதிபந்தம் நிவிர்த்தியாம். நிதித்தியாசனத்தின்

பரிபாகாவஸ்தையைத்தானே சமாதி யென்பாராகலின், சமாதியும் நிதித்தியாசனத்தில் அந்தர்ப்பாவம் : வேறு சாதனமன்று. கடாகாரமான அந்தக்காரணத்தின் அபரோட்ச விருத்தியைக் கடாநுபவ மென்பது போலப் பிரஹ்மாகாரமான அந்தக்காரணத்தி னபரோட்ச விருத்தியை இங்கே, "தத்துவ வநுபோகம்" என்றார்.

"தொக்க பிறவித் திரள்கடொறுந் தொடர்ந்து வந்த வாதனை தான், மிக்க கால யோகத்தின் பழக்கத் தல்லால் விடாது"—என்று,

வாசிட்டத்திற் கூறியிருப்பதுபற்றி, "நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே."—என்றார். (கூ)

[ஞானத்திற்குப் பிரதிபந்தங்களான அஜ்ஞாநதிகளின் சொநுபமும், அவைகளின் விரோதிகளான சிரவணாதிகளின் சொநுபமுங்கூறி "நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே" என்று முற்செய்யுளில் அருளிச்செய் தமையால் பிரதிபந்த நிவிர்த்தியின்பொருட்டுச் சிரவணாதிகள் சடபரதாதியர்போல மரண பரியந்தம் வேண்டுங்கொல் என வநுமாசங்கையைத் தோலத் தற்கு அவை அநுஷ்டிக்குங் காலவளவை கூறுகின்றார்.]

எத்தனை நாண்ஞா தாவு ஞானமு மிருக்கு முன்பால்
அத்தனை நாளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்ற ஞேயமாத் திரமாய்ச் சீவன்
முத்தரா னவர்வி தேக முத்திபெற் றிருப்பா ரென்றும். (கூஉ)

இ - ள். எத்தனை நாள்=எவ்வளவு காலம்—ஞாதாவும்=(ஞானத்தின் கர்த்தாவாகிய) அந்தக்காரணமும்—ஞானமும்=(பிரஹ்மாகாரமான அந்தக்காரணத்தின் விருத்திரூப) ஞானமும்—உன்பால் இருக்கும்=உன்னிடத்திருக்குமோ—அத்தனை நாளும்=அவ்வளவு காலமும்—வேண்டும்=(அஜ்ஞாநதிப் பிரதிபந்த விரோதிகளான சிரவணாதிகள்) வேண்டும்.—அப்பால்=(ஞாதா, ஞானமென்னும் விகற்பங்களிறந்து மஹாவாக்கியப் பிரமாண ஜந்ய ஞான விஷயமான ஞேயமாத்திரமாக நீ அவசேஷித்த) பின்னர்,—ஓர் செயலும் வேண்டா=(சிரவணாதி யநுஷ்டானங்களுள்) ஓரநுஷ்டானமும் (உனக்கு) வேண்டுவதில்லை.—நித்தமும்=நாடோறும்—வெளிபோல்=ஆகாசம் போல—பற்ற ஞேயமாத்திரம் ஆய்=அசங்கசிதான்மா மாத்திரமாய்—சீவன் முத்தர் ஆனவர்=சீவன்முத்தராயினோர்—விதேக முத்தி பெற்றார்=(பிராரத்த நாசத்தில்) விதேகமுத்தியடைந்து—என்றும் இருப்பார்=சார்வகாலமும் அதுவாயிருப்பர்.—எ - று.

இங்கே இது சித்தாந்தம் :—மந்தமென்றும், திடமென்றும் ஞானம் இருவகைத்தாம் ; சமுசயாதி சகிதஞானம் மந்தஞானமென்றும், சமுசயாதி ரகிதஞானம் திடஞானமென்றுஞ் சொல்லப்படும். யாவர்க்குத் திடஞான

முண்டாமோ! அவர்க்குக் கிஞ்சின்மாத்திரமுங் கர்த்தவ்வியமில்லை. ஓர் போதுற்பந்நமாகும் சமுசயாதிரகித வந்தக்கரணத்தின் விருத்திரூபஞானமே அவித்தையை நாசம்பண்ணித் தானும் நிவிர்த்தியாய்விடும். நன்றாகக்கண்ட ஆன்மாவின்கண் மீண்டும் பிராந்தி யுண்டாகாது. என்னை? பிராந்திக்குக் காரணமாகிய அவித்தை ஓர்போது உற்பந்நமாகும் ஞானத்தால் நஷ்டமாய் விடுதலின். பிராந்தியும், அவித்தையும் இன்மையின் விருத்தி ஞானத்தி னுவிர்த்திக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை. ஆதலால், "அப்பாலோர் செயலும் வேண்டாம்"—எ - ம்,

"ஞானமுதித் ததன்பின்பைங் கோசங்கட்கு நமைவேறாய் மிகவுமறிந் ததுவே போல, ஞானம்வரு முனுங்கோச மவைக்கு வேறாய் நாமிருந்தோ மென்பதுசித் தித்தலாலும்"—என்று,

இலட்சணவிருத்தியிற் கூறியிருப்பதுகொண்டும், தமதநுபூதி பலங்கொண்டும் "நித்தழும் வெளிபோற் பற்ற நேயமாத் தீரமாயீ" என்றுங்கூறினர்; இதனை யூகித்துணர்க. சீவித்திருக்கிற புருஷனுக்குக் கர்த்திருத்வாதி கிலேச வதுவாதலால் பந்தமாம்; அவை நிவிர்த்தியாதலே சீவன் முத்தியாம். எக் காலத்தும், எவ்விடத்தும் ஓர் தேகத்தையும் தானடையாமல் அகண்டை காசப் பிரஹ்மமாத்திரமாயிருப்பதே விதேகமுத்தியாம் என்க. "சீவன் முத் தரா னவர்வி தேக முத்திபெற் றிருப்பா ரென்றும்" எ - கு, உ - ம், ஈசுர கீதை,

"எங்குந் தானுய் யாவையுமாய் நின்றே யொன்று யழிவின்றி
யங்க மொன்றின் றறிவேயாய் நுண்ணி தாய வருள்வடிவைத்
தங்கு ஞான யோகத்தான் முன்பா சரித்துப் பினைவந்தெ
னங்க மான பேரொளியோ டொன்றி யாரு யடங்கிடுவார்."—எ-ம்,

"சுத்தரு யொன்று யென்னைக் கூடிடுந் தொன்மை யோர்க
ளெத்தனை நூறு கோடி கற்பங்க டாஞ்சென் றாலு
மெய்த்தக மீளா ரென்றன் விளங்குமெய் யருளா லென்றே
யித்தகைத் தெனவே வேத மியம்பிடு மென்று னீசன்."—எ - ம்
வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஉ)

(138) [இனிச் சீவன் முத்தர்களின் பேதங் கூறுகின்றார்.]

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
வானிகர் பிரம வித்து வான்வரி யான்வ ரிட்டன்
ஆனவர் நாம மாகு மவர்களிற் பிரம வித்தின்
தானமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன். (கூச)

இ - ள். ஞானம் ஆர் சீவன் முத்தர்=ஞானநிறைந்த சீவன்முத்தர்கள்—நால்வகை ஆவர்=நான்கு பேதமாயிருப்பர்;—கேளாய்=(அப்பேதங்களைச்)

சொல்லக்கேள்.—வானிகர் பிரம வித்து=ஆகாசத்தை யொப்பான பிரஹ்மவித் தெனவும்,—வரன் = வரனெனவும்,—வரியான் = வரியானெனவும்,—வரிட் டன் = வரிட்டனெனவும்—ஆனவர் நாமம் ஆகும் = அச்சீவன் முத்தர்களின் பெயராம்;—அவர்களில் = அந்நால்வர்களுள்ளே—பிரமவித்தின் தானமும் = பிரஹ்மவித்தினுடைய (அநுபவ) வலியையும்,—மற்றை மூவர் = ஏனை மூவ ருடைய — தாரதம்மியமும் = தாரதம்மியத்தையும் — சொல்வேன் = இனிக் கூறுவேன்.—எ - று.

அந்திய பகிர்முகப் புருஷரைக் கர்மோபாசனைகளை யநுஷ்டிக்கப் பண் ணும்பொருட்டு ஆன்மாவை அசங்கமாகவும், கிரியைகளனைத்தையும் மன வாக்குக் காயங்களி னுசிதமாகவும் அறிந்து கர்மோபாசனைகளைப் பிரஹ்ம வித்தாகச் செய்யாநிற்பதால், "வானிகர் பிரமவித்து" என்றார். "ஞானமார் சீவன் முத்தர் நால்வகை" என்றதானும், "மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன்" என்றதானும் இந்நால்வரும் ஞானத்திற் றாரதம்மியம் இன் மையரென்றும், விசிராந்தி சுகத்திற் றாரதம்மிய முடையரென்றும் அறிக. ()

[பிரமவித்தினியல்பு கூறுகின்றார்.]

தீராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா னாலும் பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வர் தீர்ந்த நிலைவிடார் சீவன் முத்தர். (கூடு)

இ - ள். தீர் ஆய்=மனத்தைரியமுடையராய்,—பிரமவித்து ஆய்= பிரஹ்மஞானிகளாகி—தெளிந்தவர்=(யாமார் என்பது முதலிய கலக்கங்கள்) தெளிந்தோர்—தெளியும் முன்னம்=அப்படித் தெளிதற்கு முன்னே—வாரம் ஆய் இருந்த=உரிமையாக விருந்த—தங்கள்=தங்களுடைய—* வருணம் ஆச்சிரமம் சொன்ன=வருணச்சிரமங்களைப் பற்றிய சாஸ்திரங்களிற் சொல் லிய கிரியைகள்—பாரகாரியம் ஆனாலும்=கனமான கிரியைகளாயினும்— † பலர்க்கும் உபகாரம் ஆக=(பகிர்முகரான) பலருக்குஞ் சகாயமாகவேண்டி —நேரதாச்செய்வர்=(மந்திரலோபம், கிரியாலோபம், திரவியலோபமின்றிச்) சாஸ்திரோக்தமாகச் செய்யாநிற்பர்;—(அப்படிச் செய்யாநின்றும்) தீர்ந்த நிலைவிடார்=(சுருதிகளாற் சொல்லிய) முடிவான அத்வைத நிச்சயத்தை விடார்கள்—சீவன் முத்தர்=சீவித்திருக்கும்போதே முத்தராயுள்ளோர்.— எ - று.

இங்கே நிச்சயம் எ - து, அநுபவத்தை. ஈசுரனுற் பராக்குகளாகச் சிருஷ்டித்த இந்திரியங்களை, வேகமுள்ள நதிச்சலத்தைத் திருப்பினாற்போல அகமுகமாக்கிச் சர்வேந்திரியங்கட்கும் ஆந்தரமான பரமான்மாவைச் சாட்

* "வருணமாச்சிரமம்" என்பன அவைகளைப்பற்றிய சாஸ்திரங்கட்கு ஆகுபெயர்.

† "பலர்க்கும்" என்னுமுற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

சாத்கரித்திருப்பதால், "தீரர்" எ - ம், யாமார்! ஜகம் எத்தன்மைத்து என்பன முதலிய கலக்கங்கள் கலங்கனீர் * கதகரேணுவாற்போல பிரஹ்மவித்தையாற் றெளித்திருத்தலால், "பிரமவித்தாயீத்தெளிந்தவர்" எ - ம், ஆப்த காமராதலாற் றமக்கெனச் செய்யாது லோகசங்கிரகார்த்தம் வருணச்சிரமவிதிகளே விதிப்படி செய்வதால், "பலரீக்குப காரமாக, நேரதாச்செயீவர்" எ - ம், சோரநாயகி மனைத்தொழில் செய்யினும் சோரநாயகன் சுகத்தினைவிடாததுபோல அந்நியரைச் சன்மார்க்கத்திற் பிரவிர்த்திப்பித்தற்பொருட்டுக் கர்மோபாசனைகளைச்செய்யினும் பிரஹ்மநாமென்னும் அநுபவம் கூணமும் விடாமையின், "தீரந்த நிலைவிடார்" என்றுங் கூறினர். (கூடு)

[இதுவுமது.]

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்றூர்
தாமரை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வார்
பாமா ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர். (கூசு)

இ - ள். காமம் ஆதிகள் † வந்தாலும்=(பிராரத்தவலியால்) காமமுதலியவை (பிரஹ்மவித்துக்களிடத்து) எழுமாயினும்—(அவை) கணத்தில் போம்=(உடனே திடமான வைராக்கிய முதலிய சுத்தவாசனை பிரயத்தனமின்றி யெழுவதால்) கூணத்தில் நாசமாம்,—மனத்தில்பற்றூர்=(அஞ்ஞானிகளைப்போல அவைகளை) அந்தக்கரணத்தின்கண் (வாசனையாகப்) பற்றூர்கள்,—தாமரை இலைத் தண்ணீர்போல்=தாமரையிலையிற் சலம் (கூடிநின்றும் பற்றுதது) போல—சகத்தொடும் கூடிவாழ்வார்=(அசங்கசிதான்மா நாமென்னும் அநுபூதிவலியால் அகத்திற்பற்றுமலே) பிரபஞ்சத்தோடுங் கூடிவாழாநிற்பர்,—பாமரர் எனக் காண்பிப்பார்=(கர்மகாண்டத்தையும், உபாசனாகாண்டத்தையும் நிச்சேஷமாகவிடுத்து ஞானத்திஞலே முத்தி சம்பாதித்துக்கொண்ட தைரியசத்தியிருப்பினும் உலகத்தில் ஞானவாசனையில்லாமற் கர்மோபாசனைகளே யநுஷ்டிக்கும்) மூடசிரோமணிகளைப்போல(த் தம்மைக்) காட்டுவார்,—பண்டிதத்திறமை காட்டார்=(அநேகமதங்களைக் கண்டித்து, அநேக மதங்களை ஸ்தாபிக்கத்தக்க சக்தியுள்ள சர்வஞ்ஞராயிருந்தும் அடக்கமுடைமையின்) வித்துவத் சாமர்த்தியத்தைக் காட்டார்கள்,—ஊமரும் ஆவார்=(சின்மயமாகிய சிவமே இவையாவையுமென்னும் சுழுத்தி மௌனாநுபூதியால் விகற்பமெழாமையின்) மௌனருமாயிருப்பார்—உள்ளத்து உவகையாம் சீவன்முத்தர்=அந்தக்கரணத்தின்கண் ணிரங்குச திருப்தியுடையரான சீவன்முத்தர்கள்.—எ - று.

"பாமா ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார் ஊமரு மாவார்" எ - கு, பாகவதத்திற் கூறுநிற்கும் சடபாதரை இலக்கியமாகக்

* கதகரேணு=தேற்றாம்பொடி.

† "வந்தாலும்" என்றதன்கணும்மை=எதிர்மறை.

காண்க. "ஊமருமாவார்" என்று இவ்வாசிரியர் கூறியிருப்பதுபோலவே வாசிட்டத்தில் "விவாதமறு மோனத்தோன்" எ - ம்,

"இருப்புழி மௌனஞ் சாந்தி சமமெய்தி யிராகமின்றி"—எ - ம்,

அருளிச்செய் திருப்பது காண்க. இந்திரசாலத்திற் கந்தர்வ நகரத்தைப் பார்ப்பவனுக்கு ஓர் போகத்திலும் இச்சையெழாததுபோல பிரஹ்மஞானிக்கும் மித்தியாப்பிரபஞ்சத்திற் பிராரத்த வலியாலல்லது காம முதலியவை யெழாதாதலால், "காமமா தீகள்வந் தாலும்" என்றார். "காமமாதி" என்றதனால் காமம், சங்கற்பம், சந்தேகம், இராகம், துவேஷம், சிரத்தை, பயம், இலச்சை, இச்சை முதலியவுங்கொள்க.

"காமமா தீகள் வந்தாலும்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"மிகவருகா மாதிகளாம் விகாரமடைந் தும்விண்போன் மிக நொய் தாமே, ரகமெனலின் றிச்செயல்கள் செய்தாலுந் தவிர்ந்தாலு மழுத்த மற்றோர், சகநெறிகள் செய்திடினு மன்னியர்போற் கண்டு குளிர் தன்மை சான்றோர், திகழ்மன தநினைவுமிருந் துஞ்சிறிது மில்லாதோர் சீவன்முத்தர்."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

"கணத்திற்போம்" எ - கு, உ - ம், திருவள்ளுவர்,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

"மனத்திற் பற்றர்" எ - கு, உ - ம், சுவானுபவத்திருவாக்கு,

"காண்பானுங் காண்பவையைக் காணுமிடத் தேகமதாய்ப்
பூண்பனவால் வாதனையும் பூண்டிடுமே - வீண்பயிலும்
வாசனையைச் சித்தத்தில் வையா ததுமுத்தி
யாசிலிதற் கார்த்தமிதை யாம்."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (கசு)

[ஞானிகளின் சரீரவியவகாரத்தில் நியமமில்லை. என்னை? ஞானிகளின் வியவகாரத்திற்கு அஞ்ஞானமும், அதன்காரியமான பேதப்பிராந்தியும், அதனாலுளவாகும் இராகத்துவேஷங்களுமில்லை; மற்றியாதுளதெனின்;–பிராரத்த கர்மசேஷமேயுளது; அதுவே அவர்களின் வியவகாரத்தில் நிமித்தமாம்; அந்தப்பிராரத்த கர்மம் புருஷபேதத்தால் நானாப்பிரகாரமாம்; ஆகலின், ஞானிகளின் பிராரத்தகர்ம ஜந்நிய வியவகாரத்திற்கு நியமமின்றென்னுஞ் சித்தாந்த பட்சத்தை இங்கே கூறுகின்றார்.]

பேதகர் மத்தால் வந்த பிராரத்த நானா வாகும்
ஆதலால் விவகா ரங்க ளவாவர்க் காவ வாகும்

மாதவஞ் செயினுஞ் செய்வார் வாணிபஞ் செயினுஞ் செய்வார்
பூதலம் புரப்பா ரையம் புகுந்துண்பார் சீவன்.முத்தர். (கூள)

இ - ள். பேதகர்மத்தால் வந்த=(கீரைவிற்ற தானியம்போலப்) பேத மான (சஞ்சித) கர்மத்தினுலுண்டான—பிராரத்தம்=பிராரத்த கர்மமும்— நாநா ஆகும்=நாநாப்பிரகாரமாம்;—ஆதலால்,—வியகாரங்கள் அவர் அவர்க்கு ஆவ ஆகும்=வியவகாரங்களும் அவரவர்கட்குப் (பிராரத்தத்திற்குத்) தக்கன வாகப் பொருந்துவன பொருந்தும்.—மாதவம் செயினும் செய்வார்=பெருமை பொருந்தின தவத்தைச் செய்யினுஞ் செய்வார்கள்,—வாணிபம் செயினும் செய்வார்=வியாபாரஞ் செய்யினுஞ் செய்வார்கள்,—பூதலம் புரப்பார்=பூமி யைப் (புரப்பினும்) புரப்பார்,—ஐயம் புகுந்து உண்பார்=பிச்சைபுகுந்து (உண்ணினும்) உண்பார்—சீவன் முத்தர்=சீவன் முத்தர்கள்.—எ - று.

"மாதவஞ் செயினுஞ் செய்வார் வாணிபஞ் செயினுஞ் செய்வார்" என்பதனால், தவசு முதலியவற்றில் ஞானி பிரவிர்த்தியாநிற்பது வேத ஆஞ் ஞையினுலல்ல, தனது இச்சையினுற் பிரவிர்த்தியாநிற்பன் என்றறிக. யாவ ர்க்குப் பிட்சைமாத்திரத்திற் கேதுவாகப் பிராரத்த மிருக்குமோ! அவர்க்கே ஞானமுண்டாம்: அதிக வியவகாரத்திற் கேதுவாக யாவர்க்குப் பிராரத்த மிருக்குமோ! அவர்க்கு ஞானமுண்டாகாது; ஆகலான், பிட்சையுண்டன் முதலிய வியவகாரத்தினும் அதிக வியவகாரம் ஞானிக்குண்டாகாது; யாவர் க்கு அதிகப் பிரவிர்த்தியுண்டாமோ! அவர் ஞானியல்லரென்று சிலர் சங்கை பண்ணு நிற்பர்; அச்சங்கை கூடாது. என்னை? யாக்ஞவல்கியர், ஜனகாதி யர் ஞானியென்று சொல்லப்பட்டிருக்கின்றனர்; இவர்களில், சபாவிஜயத் தினுற் றனசங்கிரக வியவகாரம் யாக்ஞவல்கியருக்கும், இராச்சியபாலன வியவகாரம் ஜனகருக்குஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. வாசிட்டகிரந்தத் தில், அநேக ஞானிகட்கு வியவகாரம் நாநாப்பிரகாரமாகச் சொல்லியிருக்கின் றது. ஆதலால், ஞானியினுடைய பிரவிர்த்திக்கு அல்லது, நிவிர்த்திக்கு நியம மில்லை. எப்படியும் யாக்ஞவல்கியர் சபாவிஜயத்திற்குப் பின்னர் வித்துவத் சந் நியாசரூபமான நிவிர்த்தியைத் தானே அடைந்தனர்: பிரவிர்த்தியில் வைராக் கியத்திற் கேதுவான நாநாவித தோஷங்களைக் கூறினர்; அப்படியாயினும் யாக்ஞவல்கியர்க்கு வித்துவத் சந்நியாசத்திற்கு முன்னம் ஞானம் இல்லை யென்று சொல்வது கூடாது: ஞானமோ முன்னும் இருந்தது. ஆயினும், வித்துவத் சந்நியாசத்திற்கு முன்னே சீவன் முத்தியின் ஆநந்தமடையப் படவில்லை. ஆதலால், சீவன் முத்தியின் ஆநந்தத்தின்பொருட்டுச் சர்வசங்கிர கங்களையுந் நியாகஞ்செய்தனர். யாக்ஞவல்கியர்க்குப் பிராரத்தஞ் சிலகாலம் அதிக போகத்திற்கேதுவாகவும், பிற்காலம் நியூனபோகத்திற் கேதுவாகவும் இருந்தது. ஆகலின், முன்னே யாக்ஞவல்கியர்க்கு வைராக்கியமின்றி அதிக போகமும், பின்னே வைராக்கியத்தினுற் சர்வபோகங்களின் நியாகமுமுண் டாயிருந்தது. ஜனகர்க்குப் பிராரத்தம் மரணபரியந்தம் இராச்சியபார முதலிய அதிக போகத்திற்கே ஏதுவாக இருந்தது; ஆதலால், சதாத்தியாகமில்லா மலே இருந்தது: போகங்களில் வைராக்கியமு முண்டாகவில்லை. வாமதே

வாதிகளின் பிராரத்தம் நியூனபோகத்திற் கேதுவாகவிருந்தது; அவர்கட்குச் சதாபோகத்தில் வைராக்கியத்திஞல் பிரவிர்த்தி இல்லையென்றே சொல்லியிருக்கின்றது. வாசிட்டத்தில், சிகித்துவசனுக்கு ஞானத்திற்குப்பின்னே அதிகப்பிரவிர்த்தியுண்டாயிருந்ததென்னும் பிரசங்கமுமுண்டு; இவ்வாற்ருல், நாநாப்பிரகாரமான விலட்சண வியவகாரம் ஞானிகட்குச் சொல்லியிருக்கின்றது; அவர்களனைவருக்கும் ஞானம் சமானமே; அதனது பலமான மோட்சமும் அப்படியே; பிராரத்தபேதத்தால் வியவகார மாத்திரம் பேதம் என்றறிக. (கூஎ)

[இவ்வாறு ஜீவன் முத்தர்க்கு நாநாவியவகாரம் உண்டென்றல், அஜ்ஞானிகளினும் அவர்களிடத்து விசேஷம் என்னையோ என வரும் ஆசங்கையைப்பற்றி அவர்களிடத்துள்ள விசேஷங்களைக் கூறுகின்றர்.]

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்வின் விழுது வீழ்ந்து
பொன்றின சவம்வாழ்ந் தாலும் புதுமையா வொன்றும் பாரார்
நன்றுதீ தென்னுர் சாட்சி நடுவான சீவன் முத்தர். (கூஅ)

இ - ள். சென்றது கருதார்=(பிரபஞ்சத்தில் மித்தியா புத்தியால் செல்காலத்திற்) போனதைப்பற்றி நினையார்கள்,—நாளை சேர்வது நினையார்=வருகாலத்தில் இனி வாராநிற்பதைப்பற்றியும் நினையார்கள்,—கண்முன் நின்றது புசிப்பார்=(நிகழ்காலத்தில்) கண்முன்னே (பிராரத்தவலியால் வந்து) நிற்கிற போகங்களைப் புசியா நிற்பர்கள்,—வெய்யில் நிலவாய்=சூரிய கிரணமான வெய்யிலானது சந்திரகிரணமான நிலவைப்போலச் சீதளமாகி—விண் விழுது வீழ்ந்து=(ஆலவிருட்சத்திற்போல) ஆகாசத்தினின்றும் விழுதுகளிறங்கி—பொன்றினசவம் வாழ்ந்தாலும்=மரித்துப்போன பிரேதம் பின் சீவித்ததானாலும்—புதுமையா ஒன்றும் பாரார்=ஆச்சரியமாக வொன்றையும் நாடார்கள்,—நன்று தீது என்னுர்=(ஒன்றை இது) நன்றென்றும், (மற்றொன்றை) இது தீதென்றுஞ் சொல்லார்கள்—சாட்சி நடுவான=சாட்சியாய் (த் திரிபுடியின்) நடுவான—சீவன் முத்தர்=சீவன் முத்தர்கள்.—எ - று.

"புதுமையா வொன்றும் பாரார்" எ - து,

"இதுவெனத்தீதான்றிய வெல்லாஞ்சிற் சொரூபமில்வண்ணம் பலசத்தியிலகும்"—

என்னும் அநுபூதிவலியால். "நன்றுதீ தென்னுர்" எ - து,

"செப்புநா மத்தா லுண்மையா லெல்லாத் திகழ்வுமா தேவனே யாகி, லிப்படி யறிந்த ஞானிகைக் கொள்வா னெத்தையன் றென வெத்தை விடுவான்."—

என்னுஞ் சுருதியால் எனக்காண்க. "நடுவான சீவன்முத்தர்" எ - கு, முன்னைய மூன்று பூமிக்கும், பின்னைய மூன்று பூமிக்கும் மத்தியமான சத்வா

பத்தியென்னும் நான்காம் பூமியினையுடைய சீவன் முத்தர் என்று பொருளுரைப்பினும் அமையும்; அமையுமாறு,

"முன்னிலங்க ளேறியமூ வருமப்பி யாசிகளா முத்தரல்லர், பின்னிலங்கள் வான்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர் பேதமாகுஞ், சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாம்"—என்னும்,

இரண்டாம் படலத்து கருசு - ம் செய்யுளாலறிக.

"சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முனின்றது புசிப்பார்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"வானேகு கதிரிரவி நாளியற்றும் வாறென்ன வந்து வந்து, தானேதான் றியதொழிலைப் பற்றின்றிச் செய்து மெனச் சனக ணெண்ணித், தீனைய வருகாலஞ் செல்கால மிமையளவுஞ் சிந்தை செய்யா, னூனேறு நிகழ்காலத் தோரிமைப்பி னகைதலோ டுலாவ லுற்றான்."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூஅ)

["தீராயீ" என்னும் கூரு - ம் செய்யுட்டொடங்கி, "சென்றது" என்னும் கூஅ - ம் செய்யுள்வரையும், பிரஹ்மவித்துக்களினியல்பு கூறி இனி ஏனைய மூவரின் தாரதம்மியமான வியல்பு கூறுகின்றார்.]

பின்னைமூ வரிலி ரண்டு பேர்களுஞ் சமாதி யோகம்
தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தானுய்
உன்னுவோன் வரன்வே வற்றோ லுணர்பவன் வரியா னுகும்
அன்னியர் தம்மாற் றன்னு லறியாதோன் வரிட்ட னுமே. (கூக)

இ - ள். பின்னை மூவரில்=(வரன், வரியான், வரிட்டன் என்னும்) ஏனைய மூவர்களில்—இரண்டு பேர்களும்=(வரன், வரியான் என்னும்) இருவரும்—சமாதியோகந் தன்னை=சமாதி யோகத்தை—உற்று இருப்பார்=பொருந்தி யிருப்பார்கள்.—தேகசஞ்சார நிமித்தம்=தேகஸ்திதி (க் கின்றியமையாத பிட்சை முதலியவற்றின்) பொருட்டு—தான் ஆய் உன்னுவோன்=(பிராரத்த வசத்தால் சமாதியினின்றும்) கேவலம் உத்திதனுய் நினையா நிற்பவன்—வரன்=வரனுகும்.—வேற்றோரால்=(சமீபத்திலுள்ள) அந்நியரான சீடர் முதலியோரால்—உணர்பவன்=அறியா நிற்பவன்—வரியான் ஆகும்=வரியானும்.—அன்னியர் தம்மால் தன்னுல்=அந்நியராலும் தன்னுலும்—அறியாதோன் வரிட்டன் ஆம்=அறியாதவன் வரிட்டனுகும்.—எ - று.

"இரண்டு பேர்களுஞ் சமாதி யோகந், தன்னையுற் றிருப்பார்" என்பதனுல், வரிட்டன் சமாதியிலதீதனு யிருப்பனென்பது அருத்தாபத்தியினுற்

பெறப்படுகின்றது. "வேற் றோ லுணர்பவன் வரியானுதும்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"அறைந்தபத மைந்தாலுந் தானும் போதத் தழுந்தியவின் பத்
தமைவாற் புறனு மூள்ளு, முறைந்தபதார்த் தங்கண்மறந் தயலோர்
வன்பா லுணர்வதுவே பதார்த்தநினை வொழித லாகு, நிறைந்தவிவை
யாரூலும் பேதம் போக்கி நிலைபெறுதற் சுபாவத்தே நிற்ற ரூனே,
மறைந்தபொருள் வெளியாக்குந் துரிய மாகு மாசறுசி வனின்முத்தர்
வழியீ தாகும்."—என வரும்.

மற்றும் வருவனவற்ரூற் காண்க.

"அந்நியர் தம்மாற் றன்னு லறியாதோன்" எ - கு, உ - ம், பாகவதம்,

"சாற்றிய குணமு மாக்கையு மனமுந் தானல வென்பதை
யுணர்ந்தாற், போற்றிய வாக்கை யுடனிருப் பதுவும் போவது மறிந்
திடா ராகி, யேற்றதம் புயமேற் றுகில்கழி வதுவு மிருப்பதும் வெண்
ணறை பருகி, மாற்றரு மதத்தி னறிந்திடா தொழுகு மாக்களைப்
போலுவர் மாதோ."—என வரும்.

மற்றும் வருவனவற்ரூற் காண்க. (கூக)

[இவ்வாறு ஜீவன் முத்தர் நானாவாயின் அவர்கட்கு விதேக
முத்தியும் நானாவாதமோ வெனின்;— அற்றன்று, அது
சமமாம், ஜீவன் முத்திச் சுகமே தாரதம்மிய
மாம் என்று கூறுகின்றார்.]

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னலு முத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றால்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுப விப்பன்
வரியானும் வானு மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார். (கOO)

இ - ள். அரிது ஆகும் இவர்கள்=(திரிலோகத்திலும்) கிடைத்தற்குத் தர்லபமான இச்சீவன்முத்தர்கள்—இவ்வாறு அநேகர் ஆனலும்=இந்தப்பிரகாரம் (பிராரத்தவசத்தால்) நாநாபேதமான வியவகாரங்களை யுடையவராயிருந்தாராயினும்—முத்தி சரி ஆகும்=(ஞானத்திற் ரூரதம்மியமின்மையின், ஞானபலமான) மோட்சசுகம் (அவர்கட்குத் தாரதம்மியமின்றிச்) சமமாம்.—பாடுபட்ட=(வரன் முதலியோர்) வருத்தப்பட்டடைந்திருப்பதான—சமாதிக்கு=(நிர்விகற்ப) சமாதிக்கு—பலன் ஏது என்றால்=பிரயோஜனம் யாதென்று நீ ஆட்சேபிப்பாயாயின்,—பெரிது ஆன திருஷ்ட துக்கம்=(பிராரத்தவசத்தா லுண்டாகாநிற்கும்) பெரிதாகிய பிரத்தியட்ச துக்கத்தை—பிரமவித்து அநுபவிப்பன்=பிரஹ்மவித் தநுபவியாநிற்பன்.—வரியானும் வானும் மற்றை வரிட்டனும்—சுகம் ஆய் வாழ்வார்=(சீவன்முத்திச்) சுகத்தினையே யுடையராய் வாழ்வார்கள்.—எ - று.

யாவர் சிவன்முத்திச் சுகத்தை விடுத்துத் துச்சமான போகங்களிற் பிரவிர்த்தியாநிற்பரோ! அவர் விதேக மோட்சத்தை விடுத்து வைகுண்டாதி யுலகங்களி னிச்சையுடையராய் அங்கே செல்லாநிற்பர் என்று சிலர் சங்கை செய்யா நிற்பர்; அச்சங்கை கூடாது. என்னை? சிவன்முத்திச் சுகத்தைத் தியாகம்பண்ணுவதும், போகத்திற் பிரவிர்த்திப்பதும் ஞானிக்குப் பிராரத்த வலியாற் கூடும், பிராணன் வெளியிற் செல்லாதாகலான் பரலோககமனமும், விதேகமோட்சத்தின் றியாகமுங் கூடா. ஞானத்தினால் அஞ்ஞானம் நிவிர்த்தியாய்ப் பிராரத்த போகத்தி னநந்தரம் ஸ்தூல, சூட்சும சரீராகாரமான அஞ்ஞானம் சேதனத்தின்கண் லயமாவதே விதேக மோட்சமெனப்படும்; அஃத வசிய முண்டாகாநிற்கும். மூலாஞ்ஞானம் சேஷமா யிருக்குமாயின், அல்லது நஷ்டமான அஞ்ஞானம் மீண்டுற்பத்தியாமாயின் விதேகமோட்சம் இன்றும்; அம்மூலாஞ்ஞானத்தின் விரோதியான ஞானமுண்டானபின், அஞ்ஞானம் சேஷமாக இருப்பதில்லை: பிரமாணத்தால் நாசமான வஞ்ஞானம் மீண்டுற் பத்தியாவதுமில்லை; ஆதலால், விதேகமோட்ச மில்லாமற்போகாது. ஞானிக் கிச்சையானது கேவலம் பிராரத்தத்தாலுளதாம். எவ்வளவு சாமக்கிரிகளின்றிப் பிராரத்த போகங்கூடாதோ! அவ்வளவு சாமக்கிரிகளையும் பிராரத்த முண்டு பண்ணுநிற்கும். இச்சையின்றிப் போகங்கூடாதாதலால் ஞானிக்கு இச்சையும் பிராரத்தத்தின் பயனும். அந்நியலோகத்தில் அல்லது, இந்தலோகத்தில் அந்நிய சரீரசம்பந்தம் ஞானிக்குப் பிராரத்தத்தினாலு முளதாகாது; ஆகலின், முன் சங்கித்த சங்கை கூடாதென்க. சிவன்முத்திச் சுகத்திற்கு விரோதியான வர்த்தமான சரீரத்தில் அதிக போகங்களி லிச்சையோ! பிட்சை முதலியவைபோலச் சனகன் முதலியோர்க்குக் கூடும். ஈண்டிது இரகசியம்:—ஞானியிடத் துண்டாகும் வாசியப்பிரவிர்த்தி அவனது சீவன் முத்திக்கு விரோதியல்ல: சீவன்முத்தியின் விலட்சண சுகத்திற்கு விரோதியாம். என்னை? ஆன்மா நித்தியமுத்தமாம். அவித்தையினாற் பந்தம் பிரதியாகின்றது; எப்போது ஞானமுண்டாமோ! அப்போது அவித்தையி னாற் பண்ணப்பட்ட பந்தப்பிராந்தி நஷ்டமாய்விடும். ஞானமுண்டானதன் பின்னே பந்தப்பிராந்தி யுண்டாகாது. சரீரசுகதனுக்குப் பந்தப்பிராந்தியி னபாவமே சீவன்முத்தியெனப்படும். தேகாதிகளின் பிரவிர்த்தியிலாவது, நிவிர்த்தியிலாவது ஞானிக்குப் பந்தப்பிராந்தி ஆன்மாவின்கணுண்டாவதில்லை யாகலின் வாசியப்பிரவிர்த்தியினாற் சீவன் முத்தி தூரமாகாது; ஆயினும், வாசியப்பிரவிர்த்தியில் சீவன் முத்தனுக்கு விலட்சண சுகமுண்டாகாது; எகாக்கிரரூபமான அந்தக்கரண பரிணமத்திலேயே சுகமுண்டாகாநிற்கும்; அவ்வேகாக்கிர பரிணமம் வாசியப் பிரவிர்த்தியி லுண்டாக மாட்டாதாகலின், "பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுபவிப்பான்" எ - ம், "வரியானும் வானும்மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார்" என்றுங் கூறினார்

சீவன்முத்தர் நால்வர்க்கும் ஞானம் சமமாவதால் ஞானபலமான விதேக முத்தி சமமாமென்றும், சித்தவிசிராந்தி தாரதம்மியத்தால் சுகந் தாரதம்மியமா மென்றுங் கூறியதாம். (கஅ0)

[பிரஹ்மவித்துக்கள் வியவகாரத்தில் அஞ்ஞானிகட் கோப்பாயிருத்தலின், அவர்கட்குப் பிறவா நெறி யுறுமா றெதோ? வெனுங் கடாவுக்கு விடையாக அவ்விருவர்க்குமுள்ள கர்த்திருத்வ தாரதம்மியங் கூறுகின்றார்.]

பிரமஞா னிகளுங் கர்மப் பேதையர் போலே வாழ்ந்தால்
திரமுறு மஞ்ஞா னம்போய்ச் செனியாத வழியே தென்றல்
பரவுமா காச மொன்றிற் பற்றது மற்றை நாலும்
விரவின தோடுங் கூடும் விதமிரு வோரு மாவார். (கoக)

இ - ள். பிரமஞானிகளும்=பிரஹ்ம வித்துக்களும்—கர்மப் பேதையர் போலே வாழ்ந்தால்=(ஜநநவேதுவான அவித்தை, காம) கர்மங்களையுடைய அறிவீனரைப்போலவே (பிராரத்தத்திற்குத்தக்க பிரபஞ்ச வியவகாரங்களையுடையர்களாய்ச்) சீவித்தால்—திரம் உறும் அஞ்ஞானம் போய்=(கடத்தற்கரிய) வலிபொருந்திய அவித்தை, (காம, கர்மங்கள்) ஒழிந்து—செனியாத வழி=மீண்டு பிறவாதிருத்தற்குக் காரணம்—ஏது என்றல்=யாதென்று கேட்பாயாகில்,—பரவும் ஆகாசம்=(வாயுவாதி பூதபௌதிகங்களனைத்திலும்) விரிந்திருக்கும் ஆகாசமானது—ஒன்றில் பற்றுது=ஒன்றிலுஞ் சம்பந்தியாமல்—மற்றை நாலும்=ஏனைய (வாயுவாதி) நான்கு பூதங்களும்—விரவின தோடும் கூடும்விதம்=தம்மோடு கலவாநிற்கும் பதார்த்தங்களோடுஞ் சம்பந்தியாநிற்குஞ் செயல்போல—இருவோரும் ஆவார்=ஞானி, அஞ்ஞானிகள் இருவரும் ஆவர்கள்.—எ - று.

ஞானிக்கு ஆன்மாவின்கண் வியவகாரம் பிரதீதியாகின்றதில்லை சம்பூர்ணமான வியவகாரங்களும் தேகாதிகளின் ஆசிரிதமாகப் பிரதீதியாகின்றன. ஆன்மாவின்கண் வியவகார சகிதமான தேகாதிகளின் சம்பந்தம் இல்லையென்னும் புத்தியோடுகூடிச் சகல வியவகாரங்களையும் ஞானி செய்கின்றனன்; இக்காரணத்தால் ஞானியினுடைய பிரவிர்த்தியும் நிவிர்த்தியென்றே சொல்லப்பட்டிருக்கின்றது; இதனால் பிரஹ்மவித்து பிரபஞ்ச வியவகாரங்களுடையனுக அந்நியருக்குத் தோற்றினும், அவன் ஆன்மாவை ஆகாசம்போல அசங்கமாக அறிந்து பிராரத்தவலியாற் பிரபஞ்ச வியவகாரங்களைச் செய்தலால் ஜநநவேதுவான அவித்தை காம கர்மங்களொழிந்து முத்தியடையாநிற்பனென்றறிக. (கoக)

(139) [ஈசுரசேவையால் அதிர்ஷ்டபலமாத்திரமுளதாம்: குருசேவையால் * அதிர்ஷ்டபலம் † திர்ஷ்டபலம் இரண்டு முளவாம்; ஆகலின், முமுட்சுக்கள் ஈசுரனைப் பார்க்கிலுங் குருவினிடத்து அதிகமாகப் பக்திசெய்து ஜநநநிவிர்த்தி யுபாயம் பெறவேண்டு மாகலான், சீவன் முத்தர்களின் மகிமையை இங்கே கூறுகின்றார்.]

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய னெடுமா லான
மூவரு மகிழ நோன்பு முழுவது ஞ் செய்து சன்ம

---

* அதிர்ஷ்டபலம்=புண்ணியம். † திர்ஷ்டபலம்=உபதேசம்.

பாவன மானு மென்று பழமறை முழங்கு மிப்பால்
மேவருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கேளாய். (கoஉ)

இ - ள். சீவன் முத்தரை சேவித்தோர்=ஜீவன் முத்தர்களைச் சேவித்தவர்கள்—சிவன் அயன் நெடுமால் ஆன மூவரும்=அரன், அயன், அரி என்னும் மூவரும்—மகிழ=சந்தோஷிக்க—நோன்பு முழுவதும் செய்து=(திருச்சிர சாந்தராயணமுதலிய)தவங்களனைத்தையுங் குறைவறச்செய்து—சன்ம பாவனம்ஆனுர் என்று=ஜநந பரிசுத்தமானவர்களாமென்று—பழமறை முழங்கும்=அநாதியான வேதங்கள் பிரதிபாதியாநிற்கும்.—இப்பால்=இனி—மேவரும் சீவன்முத்தர்=பொருந்துதற்கரிய சீவன்முத்தர் (அடையாநிற்கும்)—விதேகமுத்தியும்=விதேக கைவல்யத்தையும்—நீ கேளாய்=நீ கேட்பாயாக.—எ - று.

ஜநநம் மலமாகலின், அதனது நிவிர்த்தியைப் "பாவநம்" என்ருர். "துவந்துவங் கடீயேமைசெய்து" என்ருற் போல. "சீவன்முத் தரைச்சேவித்தோர்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"போற்ற வணங்கப் பூசிக்கப் புகழ வருந்திப் போய்க்காண, வாற்ற வரியோ னெவனவன் வன்பிறவி யறுப்போர்க் கனவரதஞ், சாற்று மகத்தாற் றீர்த்தத்தாற் றவத்தாற் ருனத் தாற்கிட்டா, லூற்ற வறிவாற் பிறவிபறுத் தூயர்ந்தோன் பத்தி தரும்பயனே."—என வரும்.

மற்றும் வருவனவற்ருற் காண்க.

"ழுவரு மகிழ" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"அதுலமா தவனே ரங்கைநீ ருணவா யிரமகி ழருந்தவம் புரிந்தான்"—என வரும்.

மற்றும் வருவனவற்ருற் காண்க.

"பழமறை முழங்தும்" எ - து, சசிவர்ணபோதம், முத்திகண்ட முதலிய சுருதியை. (கoஉ)

(140) [கன்மத்திராயவோழிபுகூறல்.]

பஞ்சினை யூழித் தீப்போற் பலசன்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ ருக்கும்
கிஞ்சிதா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சின பிராத் தத்தின் வினையது பவித்துத் தீரும். (கoஊ)

இ - ள். பஞ்சினை=பருத்திப்பஞ்சு முதலியவற்றை—ஊழித் தீப்போல்=வடவாமுகாக்கினி சார்ந்தால் எப்படி யெரித்து நீறெழப் பண்ணுமோ அதுபோல—பலசன்ம விவிதவித்து ஆம்=அநேகவித ஜநங்கட்கு காரணமான

பீஜங்களாகிய—சஞ்சிதம் எல்லாம்=சஞ்சிதகர்மங்க ளனைத்தையும்—ஞானத் தழல்=ஞானுக்கினியான து—சுட்டு வெண்ணீறு ஆக்கும்=எரித்துப் பஸ்ம மாகப் பண்ணும்:—ஆகாமியம் தான்=ஆகாமிய கர்மமான து — கிஞ்சித்= அற்பமும்—கிட்டாமல்=சம்பந்தியாமல்— விட்டுப்போகும்=விட்டுப்போம்: —விஞ்சின=சேஷமான—பிராரத்தத்தின் வினை=பிராரத்த கர்மமான து— அநுபவித்துத் தீரும்=அநுபவித்துத் தொலையும்.—எ - று.

சஞ்சிதம், ஆகாமியம், பிராரத்தம் என்று கர்மங்கள் மூவகையாம்; அவற் றுள், சென்ற ஜந்மங்களிற் செய்து பலத்தை ஆரம்பம் பண்ணுமலிருக்கிற கர்மம் சஞ்சிதமென்றும், இனி வரப்போகிற கர்மம் ஆகாமிய மென்றும், சென்ற ஜந்மங்களிற்செய்து வர்த்தமான ஜந்மத்திற் கேதுவாயுள்ள கர்மம் பிராரத்த கர்மமென்றுஞ் சொல்லப்படும்; அவைகளில் சஞ்சிதகர்மம் ஞானத் தீயினுல் நாசமாம். ஞானிக்கு ஆன்மாவின் கண்ணே கர்த்திருத்வாதி பிரா ந்தியில்லையாதலால், அவனுக்கு ஆகாமிய கர்மத்தின் சம்பந்தமில்லை. எப்பிரா ரத்தகர்மம் ஞானியின் சரீரத்தை ஆரம்பித்ததோ! அப்பிராரத்த கர்மமே சரீர ஸ்திதிக்கேதுவான பிட்சை முதலியவற்றிற் பிரவர்த்திப்பியா நிற்கும்: பிராரத்த கர்மம் அநுபவியாமல் நாசமாகாது.

(141) சஞ்சிதாகாமிய கர்மங்களைப்போல ஞானிக்குப் பிராரத்தகர்மமு மிராதாதலால் போஜனாதிப் பிரவர்த்தியும் ஞானிக்குப் பொருந்தாதென்று ஒரோவிடத்திற் கூறப்படும்; அதற்கபிப்பிராயம்; ஞானியின் திருஷ்டியால் ஆன்மாவில் கர்மம், அதனது பயன் இவைகளின் சம்பந்தமில்லை; இதனுல், ஆன்மாவில் சகல கர்மங்களின் நிஷேதவபிப்பிராயத்தால் பிராரத்தத்தையும் நிஷேதித் திருக்கின்றது. ஞானத்திற்குப் பூருவஞ் செய்யப்பட்ட பிராரத்த போகம் ஞானியின் சரீரத்திற் குண்டாகாதென்னு மபிப்பிராயத்தால் பிரா ரத்தத்தை நிஷேதித்ததல்ல; ஆதலால், "விஞ்சின பிராரத்தத்தின் வினை யநுபவித்துத் தீரும்" என்றார்.

(142) இதனுல் ஓர் சங்கை யுண்டாகாநின்றது; அது எங்கே ஓர் கர்ம மானது நாநா சரீரங்களை யாரம்பிக்கிறதா யிருக்குமோ! அங்கே அப்படிப் பட்ட கர்மத்தினுலுண்டான பிரதம சரீரத்தில் ஒருவனுக்கு ஞானமுண்டா மேல், அந்த ஞானிக்கு அந்நியசரீரப் பிராப்தியு முண்டாதல் வேண்டும். என்னை? பலத்தை யாதொன்றாரம்பித்ததோ! அது பிராரத்த மெனப்படும்; அஃதநுபவியாமல் நாசமாகாது. அநேக சரீரத்திற்கேதுவான ஓர் கர்ம மானது யாதொரு பிரதம சரீரத்தை யுண்டாக்கிற்றே அதில் ஞானமுண்டா யிற்று; ஞானத்தின் பின்னர் அக்கர்மத்தின் பயனுக அந்நிய சரீரம் சேஷ மாக விருக்கின்றதாகலான் ஞானிக்கும் அந்நிய சரீரப்பிராப்தி யுண்டாதல் வேண்டும். பிராரத்தகர்மத்தின் பயனுக எவ்வளவு சரீரமுண்டாகுமோ அவ் வளவு சரீரம் ஞானிக்குண்டாகும்: பிராரத்த போகத்தினும் அதிகமாக வுண் டாகாது. ஆதலால், ஞானமும் சபலமாமென்னின்? அது கூடாது. என்னை? ஞானியினுடைய பிராணன் அந்நியலோகத்தில் அல்லது, இந்த லோகத்தில், அந்நிய சரீரத்திற் செல்லாது. பின்னையோ வெனின்? அந்த ஸ்தானத்தி

லேயே அந்தக்காரணம், இந்திரியம் இவைகளோடுகூட லீனமாமென்று வேத முரசறையாநின்றது. பிராணன் செல்லாமல் அந்நிய சரீரத்தின் பிராப்தி கூடாதாதலால், ஞானிக்குப் பிராரத்த சேஷத்தால் வேறே சரீரமுண்டாகா நிற்குமென்று சொல்லுதல் கூடாது. மற்றேன்னெனின்? எங்கே அநேக சரீரத்தி ஞரம்பகமாக ஓர் கருமமிருக்குமோ அங்கே அந்தமான சரீரத்தி லேயே ஞானமுண்டாகும்: பூருவ சரீரங்களில் ஞானமுண்டாகமாட்டாது. என்னை? அநேக சரீரங்களி ஞரம்பகமான பிராரத்தமே ஞானத்திற்குப் பிரதி பந்தகமாம். விஷயாசக்தி, பிரஞ்ஞாமந்தம், பேதவாதி வசனத்தில் விசுவா சம் ஆகிய இவை ஞானத்திற்கு எப்படிப் பிரதிபந்தகமோ அப்படி விலட் சணமான பிராரத்தமும் ஞானத்திற்குப் பிரதிபந்தகமாம்; எங்கே ஞானத் தின் பிரதிபந்தகமிருந்து ஞானசாதனமான சிரவணாதிக ளிருக்குமோ அங்கே பிரதிபந்தகம் நிவர்த்தியாமாயின் பிரதம ஜநநத்திற்செய்த சிரவணாதி களாலே அந்நிய சரீரத்தில் ஞானமுண்டாகும். எப்படியெனின்? வாம தேவர் பூர்வ ஜன்மத்திற் சிரவணாதிகள் செய்துவந்தனர். அப்போது பிரா ரத்தத்தின் பயனை ஓர் சரீரம் சேஷமிருந்ததால் ஞானமுண்டாகவில்லை; பின்னையெப்போ துண்டாயிற்றெனின்? சிரவணாதிகள் செய்துவர வர்த்த மான சரீரம் விழுந்து அந்நிய சரீரத்தை யடைந்ததால் பூர்வ ஜன்மத்திற் செய்துவந்த சிரவணாதிகளால் கர்ப்பத்தின் கண்ணேயே ஞான முண்டா யிற்று; ஆதலால், ஞானத்திற்குப் பின்னர் அந்நிய சரீர சம்பந்த முண்டாகா தென்றறிக. (கoந)

(143) [ஞானியை இகழாமற் பூஜிக்கவேண்டு மென்பதற்குக் காரணங் கூறுகின்றார்.]

பொறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்குநாட் செய்யுங் கர்மம்
மறுமையிற் றொடர்ந்தி டாமல் மாண்டுபோம் வழியே தென்னூல்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்
அறிவுளோ ரறிந்து பூசித் தறமெலாங் கைக்கொள் வாரே. (கoச)

இ - ள். பொறுமையால் = *திதீட்சையால் — பிராரத்தத்தை = பிரா ரத்த பயனை சுகதுக்காதிகளை — மறுமையில் = சீவன் முத்திந்தசையில் — புசிக்கும் நாள் = அநுபவிக்குங் காலையில் — செய்யும் கர்மம் = சீவன் முத்தர் (சரீராதிகளாற்) செய்யா நிற்கும் (புண்ணிய பாவரூபமான) கர்மங்கள் — தொடர்ந்திடாமல் = அவரைத் தொடராமல் — மாண்டுபோம் வழி = இறந்து போகு மார்க்கம் — ஏது என்னூல் = யாதென்று சங்கிக்கில், — சிறியவர் இகழ் ந்து = அறிவின்மையோர் (தோஷ திருஷ்டியால்) நிந்தித்து — ஞானி செய்த பாவத்தை = அச்சீவன் முத்தர் தேகத்திலுற்செய்த பாவங்களை — கொள்வார் = ஏற்றுக்கொள்ளுவர்: — அறிவுளோர் = அறிவுடையோர் — அறிந்து பூசித்து = ("பிரஹ்மவித்து பிரஹ்மமே" என்னும் சுருதி வாக்கின்படி ஞானியைப்

* திதீட்சை = சுகதுக்கங்களை ஒப்பக்காண்டல்.

பிரஹ்ம சொரூபமென்று) அறிந்து (மனவாக்குக் காயங்களால்) ஆராதித்து— அறம் எலாம்=புண்ணியங்க ளனைத்தையும் — கைக்கொள்வார்=ஏற்றுக் கொள்ளுவர்.—எ - று.

சிவன்முத்தர்க்கு மறுபிறப்பின்றென்று வேதம் முரசறைதலின், "மறுமை" என்றதைச் சிவன்முத்தித் தசை என்றும். (கoச)

(144) [இனி விதேகமுத்தியி னியல்பு கூறல்.]

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீ ருகும்
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நேரம்
உரியசூக் குமச ரீர முலையிரும் புண்ட நீர்போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே. (கoடு)

இ - ள். அரிய=துர்லபமான—மெய்ஞ்ஞானத் தீயால்=தத்துவ ஞான மாகிய அக்கினியால்—அவித்தை ஆம் உடல்=அவித்தையாகிய காரண தேகம்—நீறு ஆகும்=வெந்து நீறாய்விடும்.—பெரிய தூலமும்=கனமான தூலதேகமும்— †காலத்தால்=அதற்கு நியமித்தகாலத்தில்—பிணம் ஆகி விழும்=சவமாய் வீழாநிற்கும்.—அந்நேரம்=அப்பொழுது—உரிய சூக்கும சரீரம்=உரிமையாகிய சூட்சுமதேகமானது—உலை இரும்பு உண்ட நீர் போல்=கொல்லுலையில் (காய்ந்த) இரும்புண்ட நீர்போல்—துரியம் ஆய்= துரியமாயும்,—விபு ஆய்=பூரணமாயும் — நின்ற=(என்றும்) நிற்கின்ற— சொரூபத்தில்=சொரூபத்தின்கண்ணே — இறந்து போம்=லீனமாம்.— எ - று.

"காலத்தால்" எ - து, உருபு மயக்கம். "உரிய" எ - து, தூலதேகங் களைப்போல லிங்கதேகமும் அநேகமாய் வந்து வந்து நாசமாவன வன் மையை. "உலையிரும் புண்ட நீர்போல்" எ - து, மீண்டு ஜநியாமைக்கு உவமானம். தூல, சூட்சும, காரண தேகங்களின் அபிமானிகளான விசுவ, தைஜஸ, பிராஞ்ஞர்கட்குச் சாட்சியாய் நான்காம் பொருளாதலால் சொரூபம் "துரியம்." தேசகால வஸ்துக்களைக் கடந்த பொருளாதலால், "விபு." ஞானி யினுடைய பிராணன் வெளியிற் கமனமாகாதென்னும் சுருதியால் "சொரு பத்தி லிறந்துபோம்" என்றார். (கoடு)

[இதுவுமது.]

கடமெனு முபாதி போனற் ககனமொன் றுனற் போல
உடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும். (கoசு)

இ - ள். கடம் எனும் உபாதிபோனல்=கடமாகிய உபாதியானது அபாவமாயின்,—ககனம் ஒன்று ஆனல் போல=கடாகாசமானது (மகா

† காலம்=பிராரத்தபோகாநந்தரம்.

காசத்தோடு) ஏகமாவதுபோல — உடல் எனும் உபாதி=சரீர (த்திரைய) மாகிய வுபாதிகள்—போன உத்தரம்=நீங்கின உத்தரட்சணம்—சீவன் முத்தர்=சீவன்முத்தர்கள்—அடி முடி நடுவும் இன்றி=ஆதியும், அந்தமும், மத்தியுமில்லாமல்—அகம் புறம் இன்றி=உள்ளும், புறம்புமில்லாமல்—நின்றபடி திகழ்=(தான்) இருந்தபடியே விளங்காநின்ற—விதேகமுத்தி பதம் அடைந்து=விதேக கைவல்லியமாகிய பதத்தைப்பெற்று—என்றும் இருப்பர்=சதா (அவ்வண்ணமே) இருப்பர்.—எ - று.

பூரணமாதலினாலும், அமூர்த்தமாதலினாலும் "அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி" என்றார். "நின்றபடி திகழ் விதேக முத்திப் பதம்" என்றதை,

"சகமாய் நின்றும் புராதனமா மொருமையினிற் பிரியாதாகும் பூரணசின் மாத்திரமாம் பொருளே சொன்னாய்."—

என்ற வாசிட்டப் பிரமாணங்கொண்டு யூகித்துணர்க.

(145) ஞானியின் சரீரத்தியாகத்தில் காலதேச ஆசனுதி விசேஷங்களின் அபேட்சையில்லை. அவன் தேகம் உத்தராயணத்தில் விழுமாயினும் வீழ்க, அல்லது தெட்சணாயனத்தில் விழுமாயினும் வீழ்க, காசி முதலிய புனித தேசத்தில் விழுமாயினும் வீழ்க, அத்தியந்த மலின தேசத்தில் விழுமாயினும் வீழ்க, சவவாசனத்தினின்றும் விழுமாயினும் வீழ்க, சித்தாசனத்தினின்றும் விழுமாயினும் வீழ்க, சாவதானமாகப் பிரஹ்மசிந்தனை செய்துகொண்டு வீழினும் வீழ்க, ரோகவியாகூலத்தால் ஆகாவென்று புலம்பிக்கொண்டு வீழினும் வீழ்க, சர்வதா அவன் முத்தனும். என்னை? எக்காலத்தில் ஞானத்தினால் அஞ்ஞானம் நிவிர்த்தியாயிற்றோ! அக்காலத்திலேயே ஞானி முத்தனும்; அதனால், ஞானிக்கு விதேக மோட்சத்தில் தேசகால ஆசனுதிகளினபேட்சையில்லை. எப்படி ஞானிக்குத் தேகபாதத்தில் தேசகாலாதிகளினபேட்சையில்லையோ! அப்படியே ஞானநிமித்தமான சரவணத்திலும் தேசகாலாதிகளினபேட்சையில்லை.

(146) உபாசகர்க்குத் தேசகாலாதிகளினபேட்சையுண்டு. எப்படியும் பீஷ்மாதியர் ஞானியென்று சொல்லப்பட்டிருக்கின்றனர். பீஷ்மர் உத்தராயணமன்றிப் பிராணத்தியாகஞ் செய்யவில்லை; அப்படியாயினும் பீஷ்மாதியர் அதிகாரி புருஷராதலால், உபாசகர்களின் உபதேச நிமித்தம் அவர் காலவிசேஷத்தையபேட்சித்தனர். வசிட்ட பீஷ்மாதியர் அதிகாரிகளாதலாலே அவர்கட்கு அநேக ஜன்ம முளவாம். என்னை? அதிகாரி புருஷருக்கு ஓர் கற்பபரியந்தம் பிராரத்த மிருக்கும்: கற்பத்தினந்தத்தன்றி விதேக மோட்சம் உண்டாகாது. கற்பத்தினிடையில் அவர்கட்கு இச்சையின் வலியால் நாநா சரீரமுண்டாகும்; அப்படியாயினும் ஆன்மசொரூபத்தின்கண் அவர்க்கு ஜன்ம மரணப் பிராந்தி யுண்டாவதில்லை. ஆகலின், சீவன் முத்தராம்; அவ்வதிகாரி புருஷரின் வியவகார முழுவதும் அந்நியரினுபதேச நிமித்தமாம். ஞானியின் வியவகாரத்தில் அந்நியமாக ஓர் நியமமுமில்லை; இவ்

வபிப்பிராயத்தால், ஞானியின் தேகபாதத்திற்குத் தேசகால ஆசனுதிக ளொன்றுஞ் சொல்லாமல், "**பெரியதூ லழங்கா லத்தாற் பிணமாகி விழும்**" என்றார்.

(147) "சூக்குமந் தனது காரண மடையத் தூலமிங் ஙகன் றதே யென்றுற், சூக்குமந் தனது காரணம் விடுத்துத் தூலமொன் றெடுத்ததென் றுணர்வாய்."—

என்று சுத்தசாதகத்தில் ஸ்ரீ - குமாரதேவசுவாமிகள் அருளிச்செய் திருப்பதால், "**பெரியதூ லழங்கா லத்தாற் பிணமாகி விழும்**" என்று இவ் வாசிரியரருளிய விதேக கைவல்லியத்தி னிலக்கணம் அசங்கதமாகாதோ வெனின் ;—

"காலமே காரணமாய்க் குடும்ப வாழ்விற் காதலொழித்தறச் செறிந்த காயந் தன்னைச், சாலமிகு தொழிற்பறவைக் கிடமாங் கூட்டைச் சானவியின் கரைவரையிற் றூனே தீர்ந்தான், கோலியொரு சுமைசுமப்பான் குறித்த வெல்லைக் கொண்டுபோய்ப் போடுவபோற் குரம்பை போட்டு, மாலுறுபற்றொன்றின்றிப் பூவி னுற்றம் வானுறல் போற் பரமபத வாழ்வுபெற்றான்."—எ - ம்,

விகற்ப மிறந்தவராய், நிர்விகாராராய், அபிராமராய், சகலமல விலாசங்களி னலே யுண்டாயிருக்கிற உபாதி விநிர்முத்தராகிய **உத்தாலகரானவர்**, யாதொரு சுகத்திலே இந்திரனது சுகமும் சமுச்சிரத்திற் றிரணம்போல அற்பமாய்விடுமோ! அப்படிப்பட்ட இரணியகர்ப்பாந்த சுகங்களுந் தாழ்ந்தன வாகத் தான் அவற்றிற்கு ஆதியாயும், அண்டபேதங்களால் அநந்தமாயுள்ள வாகாசங்களே உதாரத்தில் வைத்திருக்குந் திக்குகளே வியாபித்ததாயும், பூரண மாயும், சகலபுவனங்களையுந் தரித்திருக்கிற சுபாவத்தை யுடையதாயும், பாக் கியவான்களா லடையத்தக்கதாயும், சத்தியமாயும், ஆநந்தமாயும், அநந்தமாயு முள்ள வாசாமகோசர பரமசுகத்தை யடைந்து அச்சுகவடிவாயினர்; அவ ருடைய மனம் ஸ்வச்சரூபமான பதத்தை யடைந்தவுடன் அவர் சரீரம் அவ் வரைமீது ஆறுமாதஞ் சூரியகிரணத்தா லுலர்த்தப்பட்டதாய்க் காற்றினு லுண்டாகாநிற்குந் தொனியால் பருவதமாகிய புருஷனுக்குச் சிறு செடிக ளாகிற கைகளால் வாசிக்கத்தக்க நரம்புகளாகிய தந்திகளோடுகூடிய வீணை யாயிற்று. மேற்சொல்லிய ஆறுமாதத்திற்குப்பின், அப்பருவதத்தில் ஆகா சத்தினின்றும் இறங்கியுற்ற பிராமி முதலிய சப்தமாதர்களுள் சகல தேவர்க ளாலும் பூஜிக்கத்தக்க தேவதேவியாகிய சாமுண்டி யென்பவள் சூரியகிர ணத்தா லுலர்ந்துள்ள அவ்வுத்தாலகாது கங்காளத்தைச் சீக்கிரத்திலெடுத்துத் தனது மகுடத்தின்மீது பூஷணமாகச் சூடிக்கொண்டனள் என்றும் சர்வஞ்ஞ ரிஷியாகிய ஸ்ரீ-வான்மீகி பகவான் ஞானவாசிட்டத்தில் அருளிச்செய்திருப் பதால் இவ்வாசிரியர் கூறிய விதேககைவல்லிய விலக்கணம் அசங்கதமா காது ; அன்றியும் பிரபுலிங்கலீலையில்,

"அழிவி லாஜீ வழிந்தன னென்றுநீ
விழியி னுன்மிக வெள்ளம்பெ ருக்கினே
கழிவி லாதவா காயங் கழிந்ததென்
றெழிவி லாம லுளமெலி வார்கள்போல்."—எ - ம்,

"சச்சி தாநந்த சங்கர னுகவே
யச்ச நீங்குபு தன்னை யறிந்தவன்
றுச்ச மாந்துயர்த் தோன்மலி யாக்கையை
யிச்சி யானதை யானென வெண்ணியே."—எ - ம்,

"ஒண்ட ரைக்கண் ணெடிவி லருளுருக்
கொண்ட டுத்த குருவரு ளாற்றன்னைக்
கண்ட மெய்த்தவன் காய்ந்த னையந
முண்ட நெட்டிலை யொப்ப விடுப்பனுல்."—எ - ம்

பிரபுதேவர் அருளிச்செய்திருப்பதாலும் இவர் அருளியது அசங்கத மாகாது. ஸ்ரீ - குமாரதேவசுவாமிகள் சுத்தசாதகத்தில் அருளியதோ! "உவக்தும்வீடே யெவ்வளவிற்றுலக நடையே யுயர்ந்தது" என்னும் ஸ்தூலதிருஷ்டி யுடையோர்க்கு முத்தியின்கண் விருப்பமுண்டாக்குவித்தற் பொருட்டேயாம்; அங்ஙனமன்றிச் சித்தாந்தமாமேல், பிரபல சுருதியான வாசிட்டத்திற்கு அது விருத்தமாம்; அன்றியும் வாசிட்டத்தில்,

"பற்று முனிவு பயஞ்சுகங்கள் பயிலா னெனினும் பயின்றிடி னுஞ், சொற்ற வெவர்க்கும் பிரமேயந் தொடரா னெனினு நன்பா லர், பெற்ற பிரமே யத்துறினும் பெரிய மனத்தோன் காசியிற்சா, வுற்ற பொழுது நாய்க்கெரிப்போ ருழைசா வுறினு முறும்பதங் கேள்."—எ - ம்,

"ஞான மடைந்த பொழுதிலிவ னல்வி டுற்றோன் மனமிறந்தோ
னீன மான வகம்பாவப் பிராந்தி யன்றோ விடர்பந்த
மான வீடா வதுமடமை யந்த காரங் கெடலன்றோ
மான மிகுந்த விவனெய்தின் மனிதர் பூசை செயவேண்டும்."—எ-ம்

கூறியிருப்பதால் தூலதேகம் வீழ்வதும், வீழாமற் போவதும் பந்த மோட்சமல்ல; ஆதலால்,

"சூக்குமந்தனது காரணமடையத் தூலமிங் ககன்றதே யென்றுல்"—

என்னும் சுத்தசாதகம் ஸ்துதியர்த்தவாதமாம். ஞானவாசிட்டக் கருத்தின்படியே பூஜ்யபாதரான ஸ்ரீ - சங்கரபகவத் பாதாசாரியரும் விவேக சூடாமணியி லருளிச்செய்திருப்பது காண்க. திருமந்திரத்தில்,

"அந்தமின் ஞானிதன் ஞகந் தியினில்
வெந்திடி ஞடெலாம் வெப்புத் தியினி
லெந்தது நாய்நரி நூகரி ஞண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும் வையமே."—எ - ம்,

"எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடி
லண்ணறங் கோயி லழலிட்ட தாங்கொக்கு
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமா
மெண்ணரு மன்ன ரிழப்பா ரரசே."—எ - ம்,

"புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது
நண்ணி யனல்போக்கி ஞட்டி லழிவாகு
மண்ணி லழியி லலங்கார பங்கமா
மண்ணுல கெல்லா மயங்குமனன் மண்டியே."—எ - ம்,

"அந்தமில் ஞானி யருளே யடைந்தக்கா
லந்த வுடலூன் குகைசெய் திருத்திடிற்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரு
மந்தமி லின்ப வருள் பெறுவாரே."—எ - ம்

அருளிச் செய்திருப்பதானும், "பேரியதூ லழங்கா லத்தாற் பிண மாகிவிழும்" என்று இவ்வாசிரியரருளிய விதேக கைவல்லிய விலக்கணம் அசங்கதமாகாது. "உரியதூக் தமச ரீர முலையிநும் புண்ட நீர்போற் றூரிய மாயி விபுவாய் நின்ற சொநபத்தி லிறந்து போம்" என்று உலையிரும்புண்ட நீரை உபமானமாகக் காட்டினது இவ்வாறெழும் ஆசங்கையைத் தொலைவித் தற் பொருட்டேயாமென்க. (கoசு)

(148) [பிரஹ்மட்ட பிராப்தியானது கிராமாந்தரப் பிராப்தி போலல்ல, கண்டசாமீகர நியாயம்போலப் பிராப்தப் பிராப் தியாமென்று சொல்லுகின்றார்.]

சொல்லிய மகனே யெங்குஞ் சூழ்வெளி யிருக்க மண்ணைக்
கெல்லிய பின்பு தோன்றுங் கிணற்றிலு காசம் போலே
ஒல்லையாம் பிரம நூலா லுற்றது போலே தோன்றும்
எல்லையி ஞமெப் போது மேகமென் றிருந்து வாழ்வாய். (கoஎ)

இ - ள். சொல்லிய மகனே=("நீ நானென் றிராண்டிலாமல் நிறைந்த பூரணமா யெங்தும், நானுகத் தெளிந்த ஞானம்" என்று முன்னே பிரஹ்மா நுபவங்) கூறியமைந்தா—எங்கும் சூழ் வெளி இருக்க=எவ்விடத்தும் நிறைந் துள்ள ஆகாசம் தானிருந்தபடியே யிருக்க—மண்ணைக் கெல்லிய பின்பு= பூமியை அகழ்ந்த பின்னர்—தோன்றும்=(ஆகாசம் பூரணமென்னும் ஞான

மின்மையனுக்கு நூதனமாக அப்போதுண்டானதுபோலத்) தோன்றுகின்ற—கிணற்றின் ஆகாசம்போல=கூபாகாசம்போலும்—ஒல்லையும் பிரஹ்மம்=ஏற்கெனவே சித்தமாயுள்ள பிரஹ்மம்—நூலால்=(குருவுபதேசத்தாலும்,) சாஸ்திர விசாரத்தாலும்—உற்றதுபோலே தோன்றும்=(அப்போது நூதனமாக) அடையப்பட்டதுபோலவே தோன்றுநிற்கும்; —(அங்ஙனந் தோற்றினும் அது வாஸ்தவமன்மையின்,) எல்லையில் நாம்=அளவிறந்த (வியாபகமான பிரத்தியகபின்ன பிரஹ்மமாகிய) நாம்—எப்போதும்=இதற்கு முன்னும்—ஏகம் என்று=அகண்டைகரசப்பிரஹ்மமேயென்று—இருந்து வாழ்வாய்=இவ்வண்ண மிருந்து வாழ்வாயாக.—எ - று.

"நூலால்" என்னினும்,

"பெரிபமாயை காரணமாம், பொருளன்றுயுங் குருவாக்காற் புகலும் பொருளாய்க் காரணமாய், மருவுமுணர்வாந் தன்னுருவை வழுவாதளிக்கு முணர்வோர்க்கே."—

என்னும் சுருதியால் குருவுபதேசம் வருவித்தாம். கூவந்தொடற்கு முன்னுங் கூவாகாசம் இருப்பதுபோல விசாரத்திற்கு முன்னும் பிரஹ்மத்வம் சித்தமாகலின், "எல்லையிலு மெப்போது மேகமென்றிருந்து வாழ்வாய்" என்றார். இவ்வாசிரியர் கூறினவாறே வாசிட்டத்தில்,

"குருவின்வல்லப விளக்கத்தாற் கண்டன மெனல்வீண் நானு நீதானுங்கண்ட னபரம்பொருட் பொலிவே."—

என்றருளிச் செய்திருப்பது காண்க. (கoஎ)

[கூறிப்போந்த படலத்தின் சாராரித்தத்தைத் தொகுத்து விசேஷித்து நம்புதற்பொருட்டுச் சபதத்தோடுங் கூறுகின்றார்.]

கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க ளூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாந் தறிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய் மகனே யுன்னை நம்மாணை மறந்திடாதே. (கoஅ)

இ - ள். கானல் நீரில்=கானலிற் சலம்போலும்,—கிளிஞ்சில் வெள்ளியில்=சுத்தியில் இராஜதம்போலும், — கந்தர்ப்ப நகரில்=கந்தர்வ நகரம்போலும்,—கஞ ஊரில்=சொப்பன நகரம்போலும்,—வானம் மையில்=ஆகாசத்தில் நீலநிறம்போலும்,—கயிற்றில் பாம்பில்=இரச்சுவிற் சர்ப்பம்போலும்,—மலடி சேயில்=வந்தியாசுதன்போலும்,—முயலின் கோட்டில்=சசவிஷாணம்போலும்,—பீனம் ஆம்=பருமையான — தறிபுமானில்=தாணுவிற் புருஷன்போலும்—பிரபஞ்சம் எல்லாம்=(அகங்காராதிப்) பிரபஞ்சமனேத்தும்—பொய்=மித்தை:—ஞானமே=பிரஞ்ஞானகனப்பிரஹ்மமே—மெய்=சத்தியம்;—மகனே=மைந்தா—உன்னை=இத்தன்மையான உனதுஆன்மாவை—நம் ஆணை=நம்மேலாணை—மறந்திடாதே=நீ மறவாதே,—எ - று.

ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. இல் என்னும் ஐந்தனுருபு எண் ணுப்பொருடொறுங் கூட்டப்பட்டது. சிவோகமென்னும் அதுபூதியினுற் றன்னேடொத்தமையின், "நம்மாணை" என்றார். "பிரபஞ்சமெல்லாம் பொய்யே, ஞானமெய்" எ - கு, உ - ம், பட்டினத்துப்பிள்ளையார் திருக் கழுமல மும்மணிக்கோவை,

"எந்தைதிரு
வளர் நாட்டங் கருணையிற் பெறலும்
யாவையு மெனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரு நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற வெழுதிய
சிற்ப விகற்ப மெல்லா மொன்றிற்
றவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுந் துணிவுபோன் றனவே."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (க0அ)

முதலாவது,
தத்துவவிளக்கப்படலம்
முற்றிற்று.

படலம், க - கீது செய்யுள் - க0அ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது,

சந்தேகந்தெளிதற்படலம்.

["ஐயம்போலாந்தை யுண்டோ" என்று வாசிட்டத்தும், "ஐயந்தவிர்த்து நிலைத்தவாசகலு முத்தியருள்பவன் விகிததருவாம்" என்று வேதாந்த சூடாமணியினுங் கூறியிருத்தலால் ஐயமறுப்பது ஆசிரியர்க்கு கவசியகடமையாகலின் ஈண்டுச் * சந்தேகந் தெளிதற்படலங் கூறத் தொடங்கினர்.]

சமுசயம் ஓர் விசேஷியத்தில் விருத்தமான இரண்டு விசேஷண ஞானமாம்; தனதபாவாதி காரணத்தி லவபாசமாவதால் இதனைப்பிரம [ஸ்ரீ] ம் என்பர்.

(149) சமுசயரூபப் பிரம [ஸ்ரீ]மும் பிரமாண சமுசயம், பிரமேய சமுசயம் என இருவகைத்து. பிரமாண கோசர சந்தேகம் பிரமாண சமுசயமெனப்படும்; அதனையே பிரமாணகத வசம்பாவனை யென்பர். வேதாந்தவாக்கியம் அத்துவிதீயப் பிரஹ்மத்தின் கண்ணே பிரமாணமாகவுண்டோ! இல்லையோ என்பது பிரமாண சமுசயம்; அதனது நிவிர்த்தி சாரீரகத்தின் பிரதமாத்தியாயத்தின் படனத்தால் அல்லது, சிரவணத்தாலுளதாம். பிரமேய சமுசயமும் ஆன்மசமுசய, அநான்ம சமுசயபேதத்தால் இருவகைத்து. அநான்ம சமுசயம் அநந்தவிதம்; அவற்றை விரிப்பதாற் பயனின்று. ஆன்ம சமுசயமும் அநேக பிரகாரமாம்; அவை ஆன்மா பிரஹ்மத்தோடு அபின்னமோ! அல்லது பின்னமோ, அபின்னமாயினும் சர்வதா அபின்னமோ! அல்லது, மோட்சகாலத்திலே தான் அபின்னமோ, சர்வதா அபின்னமாயினும் ஆநந்தாதி ஐசுவரியவானே! ஆநந்தாதி ரகிதனே, ஆநந்தாதி ஐசுவரியவானாயினும் ஆநந்தாதிகள் குணமோ! பிரஹ்மான்மாவின் சொரூபமோ என இவை முதலாகத் தற்பதார்த்தத்திற்கு அபின்னமான துவம்பதார்த்தத்தில் அநேக பிரகாரமான சமுசயங்களுளவாம். அப்படியே கேவலம் துவம்பதார்த்த கோசர சமுசயமும் ஆன்மகோசர சமுசயமேயாம்; அது ஆன்மா தேகாதிகளின் பின்னமோ! பின்னமல்லவோ, பின்னமெனினும் அணுரூபமோ! மத்திம பரிமாணமோ! விபுப்பரிமாணமோ, விபுப்பரிமாணமெனினும் கர்த்

* "சந்தேகம்" = ஐயம், சமுசயம் என்பன ஒருபொருட் கிளவிகள். "தெளிதல்" = நிவிர்த்தி.

தாவோ! அகர்த்தாவோ, அகர்த்தாவெனினும் பரஸ்பரம் பின்னமாக அநேகமோ! அல்லது, ஏகமோ என இவ்வாறு அநேக சமூசயங்கள் கேவலம் துவம்பதார்த்த கோசரமாக வுளவாம். அப்படியே கேவலம் தற்பதார்த்த கோசரமாகவும் அநேக பிரகாரமான சமூசயங்களுள; அவை ஈசுரன் வைகுண்டாதி லோக விசேஷத்தில் வசிக்கும் பரிச்சின்ன அஸ்தபாதாதி அவயவத்தோடு கூடிய சரீரியோ! அல்லது, சரீரம் இன்மையனை விபுவோ, சரீரமின்மையனை விபுவாயினும் சகத்துக்குப் பரமாணுவாதிகளை அபேட்சித்த கர்த்தாவோ! அவைகளை அபேட்சியாத கர்த்தாவோ, பரமாணுவாதிகளை அபேட்சியாத கர்த்தாவெனினும் கேவலம் கர்த்தாவோ! அபின்ன நிமித்தோபாதானரூப கர்த்தாவோ, அபின்ன நிமித்தோபாதானரூப கர்த்தாவெனினும் பிராணிகளின் கருமங்களை அபேட்சியாத கர்த்தாவாய் விஷமகாரிதை முதலிய தோஷமுடையனை! பிராணிகளின் கருமங்களை அபேட்சித்த கர்த்தாவாய் விஷமகாரிதை முதலிய தோஷரகிதனை என இவை முதலிய அநேக பிரகாரமாகத் தற்பதார்த்த கோசர சமூசயமுளவாம்; அச்சமூசயங்கள் யாவும் பிரமேய சமூசயமெனப்படும்; அவைகளின் நிவிர்த்தி மனனத்திஞலுளவாம்; சாரீரகத்தின் இரண்டாம் அத்தியாயத்தின் அத்தியயனத்திஞல், அல்லது சிரவணத்திஞல் மனனம் சித்தியாநிற்கும்; அதஞல் பிரமேய சமூசயம் நிவிர்த்தியாம்.

ஞானசாதன சமூசயமும், மோட்சசாதன சமூசயமும் பிரமேய சமூசயமாம். என்னை? பிரமாவின் விஷயத்தைப் பிரமேயமென்பர். ஞானசாதன, மோட்ச சாதனங்களும் பிரமாவுக்கு விஷயமாகலின் பிரமேயமாம்; ஆதலால், ஞானசாதன சமூசயமும், மோட்சசாதன சமூசயமும் பிரமேய சமூசயமெனப்படும்; அவைகள் சாரீரகத்தின் மூன்றும் அத்தியாயத்தால் நிவிர்த்தியாம். அப்படியே மோட்ச சொரூபத்தின் சமூசயம் பிரமேய சமூசயமேயாம்; அது சாரீரகத்தின் நான்காம் அத்தியாயத்தால் நிவிர்த்தியாம். சாரீரகத்தின் நான்காம் அத்தியாயத்திலே முன்னர் சாதன விசாரமும், பின்னர் பல விசாரமும் உள்ளனவாயினும் நான்காம் அத்தியாயத்தில் சாதன விசாரம் எவ்வளவிலுண்டோ! அவ்வளவு நான்காம் அத்தியாயத்தோடுகூட மூன்றும் அத்தியாயத்தாற் சாதன சமூசயம் நிவிர்த்தியாம்: சேஷமான நான்காம் அத்தியாயத்தால் பல சமூசய நிவிர்த்தியாம். [மோட்சத்தைப் பலம் என்பர்; பலமெனினும் பயனெனினும் ஒக்கும்.] இந்தப்படி விருத்திப்பிரபாகரந் தத்திற் கூறியிருக்கின்றது; இச்சமூசயங்களை இப்படலத்தில் வாராநிற்கும் அவ்வவ்விடங்களிற் காட்டுதும்; ஆங்காங்குணர்க.

[இனி நூதலிப்புதுதல்.]

நரர்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்பம்
உரமுறக் குத்திக் குத்தி யுறைப்பிக்கு முபாயம் போலே
பரமசிற் சொரூபந் தன்னிற் பற்றிய மலைவி ருத்தி
திரநிலை பெறச்சந் தேகந் தெளிதலை மொழிகின் றேனே. (க)

இ - ள். நார்=(உலகில்) மதுடர்—குழிபறித்து=குழி தோண்டி—மெள்ள நாட்டிய=மெள்ள அதில் நிறுத்திய—நெடிய கம்பம்=நீண்ட ஸ்தம்பமானது—உரம் உற=(அசையாமல்) வலியடையும் பொருட்டு—குத்திக் குத்தி=கெட்டித்துக் கெட்டித்து—உறைப்பிக்கும்=பலப்படுத்தாநிற்கும்—உபாயம்போலே=தந்திரம்போலவே(* "தூணகநந நியாயம்" போலேயென்றபடி.)—பரம சிற்சொரூபந் தன்னில்=சர்வோத் கிருஷ்டமான சிதான்ம சொரூபத்தில்—பற்றிய மனோவிருத்தி=(அபேதமாகப்) பொருந்திய (அகண்டாகாரமான) அந்தக்கரணத்தின் விருத்தி—திரநிலைபெற=(அதன்கண்ணே) நிச்சலமாக நிற்றற்பொருட்டு—சந்தேகம் தெளிதலே=சந்தேகந்தெளிதற் படலத்தை—மொழிகின்றேன்=இப்போது கூறுகின்றேன்.—எ - று.()

[சீடன் தருவை யநுசரித்திருந்த திறங்கூறுகின்றார்.]

நற்கருத் துடையோ னாகி ஞானவா னாகி நின்றோன்
மர்க்கட நியாயம் போலே மகாபூத விகாரந் தொட்டு
நிர்க்குண விதேக முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன
சற்குரு வினைவி டாமற் சந்தத மநுச ரித்தான். (உ)

இ - ள். நற்கருத்து உடையோன் ஆகி=சத்துவமான அந்தக் கரணத்தை யுடையவனாய்,—(அதனால்) ஞானவான் ஆகி=(பிரஹ்மான்மவயிக்கிய) ஞானமுடையவனாய்—நின்றோன்=நின்ற சீடன்—மர்க்கட நியாயம்போலே=(† "மார்ச்சால நியாயம்" போலாது,) ‡ "மர்க்கடநியாயம்" போலவே—மகாபூத விகாரம்தொட்டு=பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களின் காரியமான தூலதேகந்தொடுத்து—நிர்க்குண விதேக முத்தி நிலை பரியந்தம்=சத்துவ குணமுமிறந்த விதேக கைவல்யம்வரையும்—சொன்ன=உபதேசித்தருளிய—சற்குருவினை விடாமல்=சற்குருவைவிட்டு நீங்காமல்—சந்ததம்=எப்பொழுதும்—§ அநுசரித்தான்=அநுசரித்திருந்தான்.—எ - று.

"தேசார் குருநூன் மாணாக்கன் சிறக்க விம்மூ வருங்கூடிற்
பாசா தீதப் பரமெய்தும் பன்னூணீங்கா விக்கூட்ட
மேசா வுணர்வைத் தரும்."—

என்னும் வாசிட்டக் கருத்தின்படியே மாணாக்கன் இங்ஙனம் நின்றனனென்க. "மர்க்கடநியாயம்போல" எ - கு, உ - ம், பட்டின்த்துப்பிள்ளையார்,

---

* "தூண" = கம்பம். "கநநம்" = புதைத்தல். "நியாயம்" = திருவிடாந்தம்.

† "மார்ச்சால நியாயம்" = தாய்ப்பூனை தன் குட்டிகள் கிடக்குமிடத்தைத் தேடித் தானே கௌவியெடுத்துப்போய்க் காப்பாற்றுதல்.

‡ "மர்க்கடநியாயம்" = குரங்கின்குட்டி தன் மூய்க்குரங்கு எங்கேதாவினும் தான் அதனைவிடாது பற்றியிருத்தல்.

§ அநுசரித்தல் = வழிபடல்.

"மந்திக் குருவேயொத் தேனில்லை நாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ் சிந்தையை யாரென்செய் வேனெனைத் தீதகற்றிப்
புந்திப் பரிவிற் குருவேயை யேந்திய பூசையைப்போ
லெந்தைக் குரியவன் காணத்த னேகயி லாயத்தனே"—எனவரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (உ)

[குருவானவர் மாணாக்கனை அநுபவம் விளைதல்.]

சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல் விடாம லன்பாம்
மைந்தனை நோக்கிச் சாட்சி மாத்திர மாய்நின் றுயோ
சிந்தையி லைய மெல்லாந் தீர்ந்தவோ தெளிவி னுள்ளே
அந்தரங் கலந்த துண்டோ வநுபவ முரைசெய் வாயே. (ஊ)

இ - ள். புருடன் தன்னைச் சந்ததம்=புருஷனை எப்பொழுதும் (விட்டு நீங்காத)—சாயைபோல்=நிழல்போல—விடாமல் அன்பு ஆம் மைந்தனை நோக்கி=கணமும் நீங்காமற் றன்னிடத் தன்புடையனு யிருக்கும் சீஷனைப் பார்த்து—சாட்சிமாத்திரம் ஆய் நின்றுயோ=(ஞாதா, ஞானங்களொழிந்து ஞேயரூபமான) சாட்சிமாத்திரமாக நிற்கின்றனையோ?—சிந்தையில் ஐயம் எல்லாம்=அந்தக்கரணத்தின் கண்ணுள்ள (பிரமாணகத, பிரமேயகதங்களான) சமுசயங்களனைத்தும்—தீர்ந்தவோ=ஒழிந்தனவோ?—தெளிவின் உள்ளே=(உனது) புத்தியினிடத்தே—அந்தரம் கலந்தது உண்டோ=பேதப்பிராதீதி வந்து பொருந்தின துண்டோ—அநுபவம் உரை செய்வாய்=உனதநுபவம் (எங்ஙனமுளது) அதனைச்சொல்லுதி.—எ - று.

"பராபரமா மப்பொருளை வயங்கக் கண்டாற் பெருமனக்கட்
டறுமைய மறுங்கரும மறும்."

என வாசிட்டத்திற் கூறியபடி ஆருடஞான மடைந்தனையோ என ஆசான் வினவினதாம், அல்லது அசம்பாவனை, சமுசயபாவனை, விபரீதபாவனைகளிறந்த வநுபூதியடைந்தனையோ என வினவினதாம் எனினும் ஒக்கும்.

[தேவரீருடைய கிருபாபலங்கொண்டு பிரதிபந்த மிகந்த வநுபூதியடைந்தேனைல்.]

எனவுரைத் தருளு மாசா னிருபதம் வணங்கி யெந்தாய்
சனனவன் காட்டின் மோகத் தமத்தெழு பேதப் பேய்கள்
உனதரு ளுதய வெற்பி லுபதேச வருக்கன் றோன்றி
மனவிழி தெரிய ஞான வான்கதிர் பாந்தா லுண்டோ. (எ)

இ - ள். என உரைத்து அருளும் ஆசான்=என்று கேட்டருளிய குருவினுடைய—இருபதம் வணங்கி=உபயபாதங்களையும் பணிந்து—எந்தாய்=எனது பிதாவே—சனன வன்காட்டில்=சம்சாரமாகிய வலிய வாரண்யத்தில்—மோகத் தமத்து=அஞ்ஞானமாகிய இருளில்—எழு பேதப் பேய்

கள் = எழாநிற்கும் (பேதப்பிரதீதிகளாகிய) பசாசங்கள்—உனது அருள் உதய வெற்பில் = தேவரீருடைய கிருபையாகிய உதயகிரியினின்றும்—உபதேச அருக்கன் தோன்றி = பிரஹ்மோபதேசமாகிய சூரியன் உதயமாகி—மனவிழி தெரிய = உளக்கண் விளங்க—ஞானவான் கதிர் பரந்தால் = ஞானமாகிய பெருமையையுடைய கிரணங்களைப் பரம்பச்செய்தால்—உண்டோ = அதன் முன் உளவாகா நிற்குமோ! (இல்லாதொழிந்தன.)—எ - று.

ஐநம் எண்பத்துநான்கு லட்சம்யோனி பேதங்களாய்க் கடத்தற்காரி தாகலின் அதனை, "வன்காடு" எ - ம், பொருள்களையும், விழிகளையும் மறைக்கும் இருள்போல அதிஷ்டான வாரோபங்களின் பேதங்களையும், அறிவையும் மறைத்தலால் அஞ்ஞானத்தைத் "தமம்" எ - ம், உண்மையாக இல்லாதிருந்தும் இருளிலுலெழுந்து அச்சந் தந்து இருளொழிவில் தாமும் ஒழிந்து போம் பேய்களின் ரூற்றம்போல உண்மையில் இல்லாதிருந்தும் அஞ்ஞானத்தாலெழுந்து அளவிறந்த வனர்த்தங்களைத் தந்து அஞ்ஞான நாசத்தில் தாமும் ஒழிந்துபோதலின் பேதப்பிரதீதிகளைப் "பேய்கள்" எ - ம், அளத்தற் கருமையானும், பிரஹ்மோபதேசமுண்டாதற் கேதுவாதலானும் குருவரூள, "உதயவேற்பு" எ - ம், பிரஹ்மோபதேசம் முக்கியவதிகாரிக்குத் தசமனுக்கு ஆப்தோபதேசம்போல உடனே அஞ்ஞானத்தையொழிவித்தலால் உபதேசத்தை, "அருக்கன்" எ - ம், சூரியோதயமாகி விழிகள் தோன்றக் கிரணம் எங்கும் வியாபிக்கில் பேய்த்தோற்றத்திற் கவகாசமின்மைபோலப் பரிபூரணப்பிரஹ்மந் தானென்னும் ஞானம் விரிந்துண்டாகி ஆவரணமின்றிப் பரிபூரணப் பிரஹ்மாகாரமாக மனது விளங்கவே பேதப்பிரதீதிகட்கு அவகாசம் இன்மையின் ஞானத்தை, "வான்கதிர்" எ - ம், உருவகப்படுத்திக் கூறினன். "உபதேசவருக்கன்றேன்றி, மனவிழிதெரிய" என்றதால், அஞ்ஞான, சமுசயங்கள் ஒழிந்தன வென்பதைக் குறிப்பா லுணர்த்தினனென்க.

(150) பேதம் ஐந்துவகை; அவை க - வது சீவேசுரபேதமும், உ—வது சீவர்களின் பரஸ்பரபேதமும், ங - வது சீவசடங்களின் பேதமும், ச - வது ஈசுரசடங்களின் பேதமும், ஞ - வது சடங்களினென்றற்கொன்று பேதமும் என்னும் இவைகளாம்.

"சனனவன்காடு" எ - கு, உ - ம், அமிர்தசாரம்,—

> "ஊர்வ பதினென்ரு மொன்பாரு மாநுடவர்
> நீர்பறவை நாற்காலி நேர்பத்தாரு—சீர்திகழு
> மூவாரும் தாபரங்கண் முப்பத்து மும்மையோ
> ராவா ரொருப தாரும்."—என வரும்.

மற்றும் வருவனவற்ரூற் காண்க. (ச)

[அஞ்ஞானம், ஐயழதலியவை ஒழிந்தனவாயினும் புத்திதிடத்தின் பொருட்டு இன்னும் யான் ஆட்சேபித்து அறியத் தக்கவையுள எனத் திருஷ்டாந்த முகமாகக் கூறுகின்றன்.]

மந்திர மூர்த்தி தன்னன் மாற்றிய பேய்போ லுலும்
எந்திர மெழுதிக் கட்டி யினிவரா வகைசெய் வார்போல்

முந்தியுன் னுபதே சத்தான் மோகம்போ னலு மையா
புந்திநின் றுறைக்க வின்னம் புகலும்விண் ணப்ப முண்டே.(நு)

இ - ள். மந்திர மூர்த்தி தன்னுல்=(உலகில்) மந்திர மூர்த்தியினுல்—மாற்றியபேய் போனலும்=நீக்கிய பேயானது (உடலவிட்டு) நீங்கிப்போகினும்—எந்திரம் எழுதிக்கட்டி=மந்திர சக்கரம் எழுதிப் (பேய் நீங்கிய அவ்வுடலிற்) பந்தித்து—இனி வராவகை=மீண்டு மப்பேய் அவ்வுடலில் வந்து சம்பந்தியா திருக்கும்படி — செய்வார்போல்=செய்பவர்போல — முந்தி=முன்னரே—உன் உபதேசத்தால்=தேவரீர் அருளிய பிரஹ்மோபதேசத்தால்—மோகம் போனலும்=அஞ்ஞானம் நிவிர்த்தித்ததேனும்—ஐயா=குருவே—புந்தி நின்று உறைக்க=எனது புத்தியானது (அநுபூதியிற் சலியாமல்) நின்றழுந்த — இன்னம்=மேலும்—புகலும் விண்ணப்பம் உண்டே=(யான்) வினவாநிற்கும் விண்ணப்பங்களுள.—எ - று.

"மோகம்" எ - து, உபலட்சணமாக நிற்றலாற் சமுசய, விபரீதங்களுங் கொள்க. (நு)

[பூருவபடலத்தில் உபதேசித்த வாக்கியங்களைப்பற்றித் தனதந்தக்காரணத்தில் எழாநிற்குஞ் சந்தேகந் தெளிதற்பொருட்டு வினுதல்.]

ஆகமப் பிரமா ணத்தா லறியென்றும் வாக்குக் கெட்டா
தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றும்
சோகமா மனத்திற் கெட்டா சுயஞ்சோ தி யென்றுஞ் சொன்னீர்
மோகமா மிரண்டு சங்கை முளைத்தன பறித்தி டீரே. (சு)

இ - ள். ஆகமப் பிரமாணத்தால் அறி என்றும்=(நீயே பிரஹ்மமென்னும்) சுருதிப் பிரமாணத்தால் (உனது நிஜரூபமான பிரஹ்மத்தை நீ) அறிதியென்றும்,—ஏகம் ஆம் பிரமம்=அகண்டைகரசமான பிரஹ்மமானது—வாக்குக்கு எட்டாது என்றும்=சுருதி வாக்கியத்திற்குக் கோசரமாகா தென்றும்,—இதயத்தால் உணர்வாய் என்றும்=(உனது) மனதினுல் (உன்னை நீயே) உணர்தியென்றும்,—சோகம் ஆம் மனத்திற்கு=துக்கமயமாகிய மனத்திற்கு—எட்டா=விஷயமாகாத—சுயஞ் சோதி என்றும்=சுயம் பிரகாசரூபமென்றும்—சொன்னீர்=உபதேசித்தருளினீர்; (இங்ஙனம் உபதேசித்ததால்)—மோகம் ஆம் இரண்டு சங்கை=மயக்கமாகிய இருவித சந்தேகங்கள்—முளைத்தன=(எனதந்தக்காரணத்தின் கண்ணே) உண்டாயின; — பறித்திடீர்=(அவைகளை) நிவிர்த்தி செய்தருளுவீராக.—எ - று.

"சுசிபெறு மீலட்சி யாரீத்தந் துவம்பதந் தற்பதங்கட், கசிபத வைக்கியஞ் செய்யு மதுசெயு முண்மை கேளாய்." என்னும் கூ - ம் செய்யுண் முதல், "கடநீரின் மேகநீரிற் கண்டவா னிரண்டும் போய்யே, குடவானும் பெரியவானுங் கூடியோன் றுமேப் போது, மிடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமேப் போது மேகம்." என்னும் அஉ - ம் செய்யுள் வரையும் பூர்வபடலத்தில் உபதேசித்தருளிய சுருதி வாக்கியங்களால் என்பான், "ஆகமப்

பிரமா ணத்தா லறியேன்றும் வாக்குக் கெட்டா, தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணரீவா யென்றுஞ், சோகமா மனத்திற் கெட்டா சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர்" எ - ம், தன்னுல் விசேஷித்துத் தெளியக்கூடாமை யின், "மோகமாம்" எ - ம், பயிருக்குக் கோரையாதிய களைகளைப் பறித் தெறியாவிடில் அது, பலத்தைப் பயவாததுபோலச் சந்தேக நிவிர்த்தி செய் யாதளவில் ஞானமும் சம்சார நிவிர்த்திரூபமான பலத்தைப் பயவாதென் பான், "இரண்டு சங்கை முளைத்தன பறித்திடீர்." என்றுங் கூறினுன்.

இவை பிரமாணகத சந்தேகங்கள். (சு)

(151) [முதற்சங்கைக்கு உத்தரம்.]

மற்றைமுப் பிரமா ணத்தால் வத்துநிண் ணயங்கூ டாதே
உற்றதோர் விடயம் பூத முபயமன் றுத லாலே
குற்றமாங் குணவி சேடங் கூடாம லிருக்கை யாலே
இற்றது வாக்குக் கெட்டா தென்பது மறிவாய் நீயே. (எ)

இ - ள். (பிரத்தியகபின்ன பரப்பிரஹ்மம்) உற்றது ஓர் விடயம் (அன்று) = நேத்திராதி இந்திரியங்களோடு, சம்பந்திப்பதான (உருவமுதலிய விஷ யங்களுள்ளே) ஓர் விஷயமுமன்று,—பூதம் (அன்று) = பூதமும் அன்று,— உபயம் அன்று = உபயமும் அன்று;—ஆதலாலே = ஆதலினுலே—மற்றை முப்பிரமாணத்தால் = (பிரத்தியட்சம், அநுமானம், உபமானம் என்னும்) வேனயமூன்று பிரமாணங்களால்—வத்து நிண்ணயம் கூடாது = பிரஹ்ம நிச் சயம் (எப்படிக்) கூடாதோ (அப்படி)—குற்றம் ஆம் குணவிசேடம் = குற்ற மாகிய குணவிசேஷங்களே—கூடாமல் இருக்கையாலே = (பரமார்த்தமாகச்) சம்பந்தியா மலிருத்தலினுலே—இற்றது = இத்தன்மைத்தான அப்பிரஹ்ம மானது—வாக்குக்கு எட்டாது என்பதும் = (ஆகமப்பிரமாணரூபமான) வாக் குக்கு விஷய மாகாதென்பதையும்—நீயே அறிவாய்.—எ - று.

"பூதம்" எ - து, அக்கினி. "உபயம்" எ - து, இரண்டு. பிரத்தி யட்சம், அநுமானம், சப்தம், உபமானம், அர்த்தாபத்தி, அநுபலப்தி எனப் பிரமாணம் அறுவகைத்து.

(152) க - வது—அவற்றுள், சார்வாகர் பிரத்தியட்சப் பிரமாணம் ஒன்றே அங்கீகரித்தனர்.

உ - வது—கணாதசுகதமதாநுசாரியர் பிரத்தியட்சப் பிரமாணமொன்றே யங்கீகரிக்கில் திருப்தி வேண்டினேனுக்குப் போஜனத்தின்கட் பிரவிர்த்தி யுண்டாகாதாகலின், இரண்டாவதான அநுமானப் பிரமாணமும் அங்கீகரித் தனர். என்னே? அபுக்தபோஜனத்தில் திருப்திக்கு ஏதுத்தன்மையின் ஞானம், பிரத்தியட்சப்பிரமாண ஜந்நியமான பிரத்தியட்சஞான மாகவின்றுகலின் * புக்தபோஜனத்தில் அநுபவித்த திருப்திக்கு ஏதுத்தன்மையை அபுக்த

* புக்தபோஜனம் = முன்னே தான் உண்ட அந்நம்.

போஜனத்தின் கண்ணும் அநுமானத்தாலறிந்து திருப்திவேண்டினேன் போஜனத்தின்கட் பிரவிர்த்தித்தலால் என்க.

ங - வது—சாங்கிய சாஸ்திர கர்த்தாவாகிய கபிலமதானுசாரியர் பிரத்தியட்சம், அநுமானம் என்னும் இரண்டேபிரமாணம் அங்கீகரிக்கில் தேசாந்தரத்திற் சென்றிருந்த வொருவன் பிதா மரணமாயினனுக, யதார்த்தஞ் சொல்பவனுன ஒருவன் வந்து உன் பிதா மரணமாயினன் என அது கேட்ட புத்திரனுக்குப் பிதாவின் மரண நிச்சயம் பிரத்தியட்சம், அநுமானங்களா லுண்டாகாமல் சப்தத்தாலுண்டாகலின், சப்தத்தோடு மூன்று பிரமாணம் அங்கீகரித்தனர்.

ச - வது—நியாயசாஸ்திர கர்த்தாவாகிய கௌதம மதானுசாரியர் பிரத்தியட்ச முதலிய மூன்றே பிரமாணம் அங்கீகரிக்கில் மரையறியா ஒருவன் வனவாசி புருஷனுல் பசுவுக்குச் சமானம் மரை என்பதைக் கேட்டிருந்து வனத்திற்சென்று மரையைக் கண்டபோது அவனுக்குப் பசுவுக்குச் சமானமாம் மரை என்று வனவாசி புருஷன் சொன்ன வாக்கியார்த்தத்தின் ஸ்மரணமுண்டாகி அநந்தரம் இது மரை என்னும் ஞானமுண்டாகின்றதாகலான், இப்படிப்பட்ட விலட்சண ஞானத்திற்கு ஏதுவான உபமானப் பிரமாணமும் அங்கீகரித்தனர்.

ஞ - வது—பூர்வ மீமாஞ்சையின் ஏகதேசியும், பட்டருடைய சிஷ்யருமாகிய பிரபாகரர் ஐந்தாவதான அர்த்தாபத்திப்பிரமாணமும் அங்கீகரித்தனர். பகலில் போஜனத்தியாகியான புருஷனுடைய ஸ்தூலத்தைக்கண்டு இவன் இராத்திரியில் போஜனஞ்செய்வன் என்னும் ஞானம் உண்டாகின்றது. அங்கே இராத்திரி போஜனமின்றிப் பகற்போஜனத் தியாகியின்கட் லேத்துவங்கூடாதாகலின், இராத்திரிபோஜனத்தின் சம்பாத்தியம் தூலத்துவமாம். இராத்திரி போஜனம் சம்பாதகம்; சம்பாதகமாகிய யாதொரு இராத்திரி போஜனமுண்டோ! அதனது ஞானத்திற்கேதுவான ஸ்தூலத்துவத்தின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமென்று சொல்லப்படும். இது **விசாரசாகரரீதி.**

ட - வது—பூருவ மீமாஞ்சகரான பட்டர் ஆறுவதான அநுபலப்திப் பிரமாணமும் அங்கீகரித்தனர். வேதாந்தசாஸ்திரத்திலும் ஆறுபிரமாணமங்கீகரித்துளர். கிரக முதலியவற்றில் கட முதலியவற்றின் அபாவஞானம் உளதாதல் அநுபலப்திப் பிரமாணத்தின் பிரயோஜனமாம்; அங்கே யாதொரு பதார்த்தம் பிரதீதியாகவில்லையோ! அதனபாவஞான முளதாம். அப்பிரதீதியை அநுபலப்தியென்பர். கடத்தின் அநுபலப்தியென்னும் அப்பிரதீதியாற் கடத்தினபாவ நிச்சய முண்டாகின்றது. இப்படிப் பதார்த்தங்களின் அபாவ நிச்சயத்திற்கு ஏதுவான பதார்த்தங்களின் அப்பிரதீதியை அநுபலப்திப்பிரமாணம் என்பர்.

(153) பிரமா ஞானத்திற்குக் காணம் யாது அது பிரமாணம் எனப்படும். ஸ்மிருதியின் வேருய், அபாதிதப்பொருளை விஷயமாகவுடையு

ஞானம் யாது அது பிரமா எனப்படும். ஸ்மிருதி ஞானம் பிரமா அல்ல என்னை? பிரமாஞானம் பிரமாதாவிஞ்சிரிதமாம். ஸ்மிருதி பிரமாதாவிஞ்சிரித மல்ல, சாட்சியிஞ்சிரிதம் என்று அங்கீகரித்து இப்படியே பிராந்தி ஞானமும், சமூசயமும் சாட்சியிஞ்சிரிதம் என்றே அங்கீகரித்தனர். இக்காரணத்தால் ஸ்மிருதி ஞானம், சமூசய ஞானம், பிராந்திஞானம் இம்மூன்றும் ஆபாசசகித மான அவித்தியா விருத்தி ரூபமாம்: அந்தக்கரண விருத்திரூபமல்ல; ஆக லின் பிரமாதாவின் ஆசிரிதமல்ல: சாட்சியின் ஆசிரிதமாம்; யாதொன்று அந் தக்கரண விருத்திரூப ஞானமோ அது பிரமாதாவின் ஆசிரிதமாம்; அதுவே பிரமா எனப்படும். ஸ்மிருதி ஞானம் அந்தக்கரணத்தின் விருத்தியல்லாமை யின் பிரமாதாவின் ஆசிரிதமுமல்ல, பிரமாவுமல்ல; ஆதலால், பிரமாவினிலக்க ணத்தில் ஸ்மிருதியின் வேறென்று சொல்லல்வேண்டும். ஸ்மிருதி ஞானம் அபாதிதப்பொருளே விஷயமாகவுடைய ஞானந்தான்; ஆயினும் அது ஸ்மிரு தியின் வேறல்ல; ஆதலான் அபாதிதப்பொருளே விஷயமாகவுடைய ஸ்மிரு தியின்வேறான ஞானம் பிரமா எனப்படும். இவ்விலக்கணத்திற்கு யாதொரு தோஷமும் இன்றும்.

க-வது—பிரத்தியட்சப்பிரமா, உ-வது—அநுமிதிப்பிரமா, ந-வது—உபமிதிப்பிரமா, ச-வது—சாப்திப்பிரமா, ரு-வது—அர்த்தாபத்திப் பிரமா, சூ-வது அபாவப்பிரமா; பூருவஞ்சொன்ன பிரத்தியட்ச முதலிய ஆறு பிரமாணங்களுமே கிரமமாக அந்தப்பிரமாக்கட்குக் காரணங்களாம். [பிரமாவெனினும், பிரமையெனினும் ஒக்கும்.] பிரத்தியட்சப் பிரமாவுக்குக் காரணம் யாது அது பிரத்தியட்சப்பிரமாணம்; அசாதாரண காரணம் யாது அது கரணம். சர்வகாரியங்கட்குங் காரணமாயுள்ளவை சாதாரண காரண மெனப்படும். தர்மாதர்மமுதலியவை சர்வ காரியங்கட்குங் காரணமாதலால் சாதாரண காரணங்களாம். சர்வ காரியங்கட்குங் காரணமாகாமல் யாதானும் ஓர் காரியத்துக்கு யாது காரணமாமோ அஃதசாதாரண காரணமெனப்படும். கடமுதலிய காரிய விசேஷங்கட்குத் தண்டம் எப்படி அசாதாரண காரண மாமோ! அப்படிப் பிரத்தியட்சப் பிரமாவுக்கு ஈசுரனும், அவரது இச்சை முதலியனவும் சாதாரண காரணங்களாம் என்னை? அவையின்றி எவ்வகைக் காரியங்களு முளவாகாமையின் என்க; இதனால் ஈசுரன் முதலியவை சாதா ரண காரணங்களாம். நேத்திர முதலிய இந்திரியங்கள் பிரத்தியட்சப் பிரமா வுக்கு அசாதாரண காரணங்களாம். ஆதலால், அவை பிரத்தியட்சப் பிரமா வுக்குக் காரணங்களாம்.

(154) நேத்திரேந்திரியத்தால் உருவமுடையது, அல்லது நீலம் முத லிய நிறம் இவைகளின் ஞானமுளதாம். பிரஹ்மம் இப்படிப்பட்டதல்ல. ஆத லால் நேத்திரேந்திரிய ஜந்நிய ஞானத்திற்கு அது விஷயமல்ல. துவாச்சேந் திரியம் பரிசத்தையும், பரிசத்தின் ஆசிரயத்தையும் விஷயம்பண்ணும். பிரஹ் மம் பரிசத்தின் ஆசிரயமுமல்ல, பரிசமுமல்ல; ஆதலால் * துவாச்சேந்திரியத்

* துவாச்சேந்திரியம்=துவக்கிந்திரியம்.

துக்குப் பிரஹ்மம் விஷயமல்ல. * ரசனேந்திரியத்தால் ரசஞானமும், கிர ணேந்திரியத்தால் கந்தஞானமும், சுரோத்திரேந்திரியத்தால் சத்தஞானமு முள வாம்; ரசகந்த, சத்தங்கட்குப் பிரஹ்மம் விலட்சணமாதலான் ரசன, கிராண, சுரோத்திரங்களால் பிரஹ்மஞானம் பொருந்தாது. ஆதலால் பிரஹ்மம் பிரத்தி யட்சப் பிரமாண விஷயமன்றென்பார், "உற்றதோர் விடயமன்று ஆதலால்" என்றார்.

(155) அநுமிதிப் பிரமாவுக்குக் காரணம்யாது அஃதநுமானப் பிரமாண மெனப்படும். லிங்கஞானத்தாற் றோன்றும் ஞானம் அநுமிதி; அஃதேங் ஙனம் எனின்? பருவதத்தில் தூமத்தின் பிரத்தியட்சஞான முண்டாய் வன்னி யின் ஞான முண்டாகா நின்றது; அங்கே தூமத்தின் பிரத்தியட்ச ஞானம் லிங்கஞானமாம்; அதனால் வன்னியின் ஞானந் தோன்றுதலால் பருவதத் தில் வன்னியின் ஞானம் அநுமிதி என்க. யாதொன்றினுடைய ஞானத்தி னால் சாத்தியத்தின் ஞானமுண்டாமோ! அது † லிங்கமெனப்படும்: அநு மிதி ஞானத்திற்கு விஷயம் சாத்தியமெனப்படும்; அநுமிதி விஷயம் வன்னி யாதலால் வன்னிசாத்தியமாம். தூமஞானத்தால் வன்னி ரூபசாத்தியத்தின் ஞான முண்டாகின்றதாகலால் ‡ தூமம் லிங்கமாம். வியாப்பிய ஞானத்தால் வியாபகத்தின் ஞான முண்டாவதால் வியாப்பியத்தை லிங்க மென்பர்: வியா பகத்தைச் சாத்தியமென்பர்; வியாப்தியுடையதை வியாப்பிய மென்பர்: வியாப்தி நிரூபகத்தை வியாபகமென்பர்; வியாப்தியின் நிச்சயம் அநுமிதிக் கேதுவாம்.

(156) வேதாந்த வாக்கியங்களால் ஜீவனிடத்துப் பிரஹ்மத்தினபேதம் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது; அஃதநுமானத்தானும் பெறப்படுகின்றது. அநுமானமாமாறு;—சீவன் பிரஹ்மா பின்னன்: சேதனத்துவத்தால்; எங்கே எங்கே சேதனத்துவமுண்டோ அங்கே அங்கே பிரஹ்மாபேதமுண்டு: பிரஹ் மத்திற்போல; இது மூன்றவயவங்களின் சமுதாயரூபமான மஹாவாக்கிய மாகலின், பரார்த்தாநுமான மெனப்படும். இங்கே சீவன்பட்சம் பிரஹ்மா பேதம் சாத்தியம், சேதனத்துவம் ஏது, பிரஹ்மம் திருஷ்டாந்தம்; இங்கே சீவனிடத்துச் சேதனத்துவ ஏதுவோ உண்டு, பிரஹ்மா பேதரூப சாத்திய மில்லை என பட்சத்தில், சேதனத்துவ ஏதுவுக்குப் பிரஹ்மாபேதரூப சாத்தி யத்தோடு வியபிசாரசங்கை பிரதிவாதி செய்யில் தர்க்கத்தால் அச்சங்கை நிவி ர்த்திக்கத்தக்கது; ஜீவனிடத்துச் சேதனத்துவ ஏதுவையொப்பி, பிரஹ்மா பேதரூப சாத்தியத்தை யொப்பாவிடில் சேதனத்திற்கு அத்துவிதீ யத்துவப் பிரதி பாதக சுருதி விரோதமாமென்பது இங்கே தர்க்கத்தின் சொரூபமாம்: சுருதி விரோதம் சர்வ ஆஸ்திகர்கட்கும் அநிஷ்டமாதலால் அச்சங்கை நிவிர்த் தியாம். பிரபஞ்சமித்தை என்பது அநுமானத்தானுஞ் சித்திக்கிறது; அவ் வநுமானமாமாறு;—வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை: ஞான நிவிர்த்தியத்

* ரசனேந்திரியம்=ஜிகுவேந்திரியம்.

† லிங்கம்=குறி. ‡ தூமம்=புகை.

தன்மையால்; எங்கே எங்கே ஞானநிவிர்த்தியத்தன்மை அங்கே அங்கே மித்தியாத்வம்: சுத்திரஜதாதிகள்போல; இங்கே வியாவகாரிகப் பிரபஞ் சம் பட்சம் மித்தியாத்தன்மை சாத்தியம், ஞான நிவிர்த்தியத்தன்மை ஏது: வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை என்பது பிரதிஞ்ஞை; ஞான நிவிர்த் தியத்தன்மையால் என்பது ஏது, எங்கே எங்கே ஞான நிவிர்த்தியத்தன்மை அங்கே அங்கே மித்தியாத்வம் சுத்திரஜதாதிகள் போல என்பது உதாரணம்; இங்கேயும் பிரபஞ்சத்திற்கு ஞான நிவிர்த்தியத்தன்மை ஒப்பி, மித்தியாத் தன்மை ஒப்பாவிடில் சத்திற்கு ஞானத்தால் நிவிர்த்தி கூடாதாகலின் ஞானத் தாற் சகல பிரபஞ்ச நிவிர்த்திப் பிரதிபாதக சுருதி, ஸ்மிருதிகளின் விரோத மூண்டாமென்னும் தர்க்கத்தால் வியபிசாரசங்கை நிவிர்த்தியாம்; இவ்வாறு வேதாந்தார்த்தத்தின் அநுசாரிகளான அநேக அநுமானங்களுள.

(157) ஆயினும், வேதாந்த வாக்கியங்களால் அத்துவிதீயப் பிரஹ்மநிச்ச யம் சித்திப்பதால் சம்பாவனை மாத்திரத்திற்கு அநுமானப் பிரமாணமல்லா மற் சுதந்தரமாகப் பிரஹ்ம நிச்சயத்திற் கேதுவல்ல. என்னை? பிரஹ்மத்தின் கண்ணே வேதாந்த வாக்கியமன்றி அந்நியப் பிரமாணங்களின் பிரவிர்த்தி இல்லை; இது சித்தாந்தம்; ஆகலின் இதனனும், அக்கினி தூமங்கள் போலக் காரிய காரணபாவம் பரமார்த்தமாகப் பிரஹ்மத்தின்கண் இன்மையா யினும் பிரஹ்மம் அநுமானப் பிரமாண விஷயமன்றென்பார், "பூதமன்றத லாலே" என்றார்.

(158) உபமிதிப் பிரமாவுக்குக் காரணம் உபமானப் பிரமாண மெனப் படும். சாதிரூச ஞானத்தால் உபமிதியுண்டாகும்: ஆகாச முதலிய சகல பிர பஞ்சமுங் கந்தர்வ நகரம்போல திருஷ்ட நஷ்டசுபாவம்: இவற்றிற்கு விலட் சணசுபாவம் ஆன்மா: ஆகாசாதிகளில் ஆன்மாவின் சாதிரூசம் கிஞ்சித்து மில்லை, ஆன்மாவுக்கு ஆன்மாந்தரமுண்டானுற் சாதிரூசமாம், ஆன்மாந்தரம் ஔபாதிகமல்லாமல் சொரூபமாகச் சுருதி, யுக்தி, அநுபவங்களாலில்லை ஆக லின் பிரஹ்மம் உபமானப் பிரமாண விஷயமன்றென்பார், "உபயமன்றத லாலே" என்றார்.

(159) சாப்திப்பிரமாவின் காரணத்தை சப்தப்பிரமாண மென்பர். சப் தமும், லௌகீக வைதீக பேதத்தால் இருவகைத்து; வைதீக சப்தரூபமான வாக்கியமும் வியாவகாரிக அர்த்தபோதகம், பரமார்த்த தத்துவபோதகம் என இருவகைத்து; பிரஹ்மத்திற்குப் பின்னமான அனைத்தும் வியாவகாரிக அர்த் தமென்றும், பரமார்த்த தத்துவம் பிரஹ்மமென்றுஞ் சொல்லப்படும். பிரஹ்ம போதக வாக்கியமும் அவாந்தர வாக்கியம், மஹாவாக்கியம் என இருவகை த்து; தற்பதார்த்த, துவம் பதார்த்தங்களின் சொரூபபோதக வாக்கியம் அவாந்தர வாக்கியம்; அவை சத்திய ஞானாநந்தம் பிரஹ்மம் என்பது முதலி யன தற்பதார்த்த, துவம்பதார்த்தங்களின் அபேத போதகமான தத்துவ மஸியாதியவை மஹாவாக்கியம். யாதொரு அர்த்தத்தில் யாதொரு பதத்தி னுடைய விருத்தியுண்டோ அவ்வர்த்தத்தின் பிரதீதி அப்பதத்தினுலுளதாம்.

பதத்திற்கும் அர்த்தத்திற்கு முளதாய சம்பந்தம் விருத்தியெனப்படும். சக்தி, லட்சணை என்னும் பேதத்தால் அவ்விருத்தி இருவகைத்து; பதார்த்தபோத வதுவான சாமர்த்தியத்தைச் சக்தியென்பர். யாதோரர்த்தத்தில் பதத்தின் சக்தியுண்டோ அவ்வர்த்தம் பதத்திற்குச் சக்கியமெனப்படும். சக்கிய சம்பந்தம் இலட்சணை; இப்படிப் பரம்பரா சம்பந்தமான லட்சணை விருத்திக்கு விஷயமேயல்லாமல் சக்திவிருத்திக்கு விஷயமல்லவென்பார், "தூணவி சேடங்கூடாம லிருக்கை யாலே, இற்றது வாக்கதுக் கேட்டாது" என்றார்.

(160) இங்கே இவர் பிரமாணம் நான்கென் றெடுத்துக்கொண்டது நியாய சாஸ்திரப்படி அர்த்தாபத்தியை அநுமானப் பிரமாணத்திலும், அநுபலப்தியைப் பிரத்தியட்சப் பிரமாணத்திலும் அடக்கிக் கொண்டமையின் என்க.

(161) ஆயினும் விருத்திப் பிரபாகரமுதலிய வேதாந்த கிரந்தங்களில் ஆறுபிரமாணம் அங்கீகரித்துள்ளன. அர்த்தாபத்திப் பிரமாவின் கரணத்தை அர்த்தாபத்திப் பிரமாணமென்பர். உபபாதக கற்பனைக்கு வதுவான உபபாத்திய ஞானத்தை அர்த்தாபத்திப் பிரமாணமென்பர்: உபபாதக ஞானத்தை அர்த்தாபத்திப் பிரமாவென்பர். உபபாதகம், சம்பாதகம் என்பன ஒருபொருட்சொற்கள்: உபபாத்தியம், சம்பாத்தியம் என்பனவும் அப்படியே. யாதின்றி யாது சம்பவியாதோ அதற்கு அது உபபாத்தியமெனப்படும். எப்படியெனின்;—இராத்திரி போஜனமின்றிப் பகற்பொழு தூணவொழிந்த புருஷனிடத்து ஸ்தூலத்தன்மை சம்பவியாமையின், தூலத்தன்மை இராத்திரிபோஜனத்தின் உபபாத்தியமாம்: யாதொன்றன் அபாவத்தால் யாதொன்றன் அபாவமுளதாமோ அது அதற்கு உபபாதகமெனப்படும். என்னை? இராத்திரி போஜனத்தின் அபாவத்தால் பகற்பொழுதுண்ணுனுக்கு ஸ்தூலத்தன்மையின் அபாவ முளதாகலின், இராத்திரி போஜனம் ஸ்தூலத்தன்மையின் உபபாதகமா மென்க; இதனால், உபபாத்திய அநுபபத்தி ஞானத்தால் உபபாதக கற்பனை அர்த்தாபத்திப் பிரமாவென்று சொல்லப்படும்: உபபாதக கற்பனைக்கு வதுவான உபபாத்தியத்தின் அநுபபத்தியின் ஞானம் * அர்த்தாபத்திப் பிரமாணமெனப்படும்.

(162) அர்த்தாபத்தியும் திருஷ்டார்த்தாபத்தி, சுருதார்த்தாபத்தி என இருவகைத்து. சிஞ்ஞாசுக்குச் சுருதார்த்தாபத்தியின் அநுகூல உதாரணங் கூறுதும்; அது "ஆத்மவித்து சோகத்தைக் கடக்கின்றான்" என்பது. இங்கே ஞானத்தால் சோகநிவிர்த்தி † சுருதமாம்; அவனதுசோகம் மித்தியாத்வமாயிருக்கினல்லது ஞானத்தால் நிவிர்த்தியாகாதாகலின், பந்தம் மித்தியாத்வமென்னுங் கற்பனையுளதாம்; பந்தமித்தியாத்வம் உபபாதகம்: ஞானத்தாற் சோகநிவிர்த்தி உபபாத்தியம்; அது திருஷ்டமன்று சுருதமாம்; ஆகலான், சுருதார்த்தாபத்தியாம். அப்படியே மஹாவாக்கியத்தால் சீவபிரஹ்மங்

---

* அர்த்தம்=உபபாதகவஸ்து. ஆபத்தி=கற்பனை.

† சுருதம்=கேட்கப்படுகிறது.

களின் அபேதங் கேட்கப்படுகின்றது; அது ஔபாதிகமாகப் பேதமுளதேற் கூடும், சொரூபமாகச் சீவபிரஹ்மங்கட்குப் பேதமுளதேற்கூடாது ஆகலின், பேதம் ஔபாதிகத்வமென்னும் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாண ஜந்நிய மாம்; இங்கே சீவபிரஹ்மங்களின் அபேதம் உபபாத்தியம்; பேதத்தில் ஔபா திகத்தன்மை உபபாதகம், சகல உபபாத்தியஞானமும் பிரமாணமாம்: உப பாதக ஞானம் பிரமாவாம். சீவபிரஹ்மங்களின் அபேதம் வித்துவானுக்குத் திருஷ்டம், அந்நியனுக்குச் சுருதம் ஆதலால் திருஷ்டார்த்தாபத்தி, சுரு தார்த்தாபத்தி என்னும் இரண்டுக்கும் இது உதாரணமாம். மனது விலய மானபின் நிர்விகற்ப சமாதிகாலத்திற் அத்துவிதீயப் பிரஹ்மமாத்திரம் சேஷ மாய் நிற்கின்றது. சகல அநான்மவஸ்துக்கள் மானசமாயினல்லது அதன் விலயத்தால் அவை அபாவமாகா; ஆகலின், சகல தொய்தமும் மனோமாத் திரம் என்னுங் கற்பனையுண்டாகின்றது. இங்கே மனதின் விலயத்தால் சகல தொய்தத்தின் விலயமும் உபபாத்தியமாம்; அதன் ஞானம் அர்த்தாபத் திப் பிரமாணமாம். சகலதொய்தத்திற்கும், மானசத்தன்மை உபபாதமாம்; அதன் ஞானம், அர்த்தாபத்திப் பிரமாவாம்; இங்கே உபபாதகப் பிரமாவின் அசாதாரணகாரணம் அர்த்தாபத்திப் பிரமாணம் என்க.

(163) அபாவப் பிரமாவின் அசாதாரண காரணத்தை அநுபலப்திப் பிர மாணம் என்பர். அபாவப் பிரமாவின் அசாதாரண காரணரூபமான யாதொரு பிரதியோகியின் அநுபலம்பமுண்டோ அது காரணமாவதால் பிரமாணமாம். [உபலம்பம்=ஞானம்;] அதையே பிரதீதி, உபலப்தி என்பர்; அதன் அபா வத்தை அநுபலம்பம், அநு பலப்தி யென்பர்.

(164) சிஞ்ஞாசுக்கு அநுபலப்தி நிரூபணத்தின் உபயோகம் இனிக் கூறுதும்:—"ஈண்டு நாநாவானவை சிறிதுமில்லை" என்பதாதியசுருதி, பிரபஞ்சத்தின் திரைகாலிக அபாவங் கூறுகின்றது அநுபவ சித்தமான பிர பஞ்சத்திற்குத் திரைகாலிக அபாவங்கூடாதாதலான் பிரபஞ்சத்தைச் சொ ரூபமாக நிஷேதஞ் செய்யவில்லை; மற்றெங்ஙனம் நிஷேதஞ் செய்ததோ வெனின்? பிரபஞ்சம் பாரமார்த்திகமல்ல ஆகலான், பாரமார்த்திகத்வ விசிஷ் டப்பிரபஞ்சத்திற்குத் திரைகாலிக அபாவஞ் சுருதி கூறிற்று இதனால் பார மார்த்திகத்வ விசிஷ்டப் பிரபஞ்சத்தின் அபாவம் சுருதி சித்தமாம்:மற்றும்அநு பலப்திப் பிரமாணத்தாலுஞ் சித்தமாம். பிரபஞ்சம் பாரமார்த்திகத்வ விசிஷ் டமாமேல், எப்படிப் பிரபஞ்சம் சொரூபமாக உபலப்தியாகா நின்றதோ அப்படிப் பிரபஞ்சத்தினது பாரமார்த்திகமும் உபலப்தியாம்; அஃதாகாமை யின், பாரமார்த்திகத்வ விசிஷ்டப் பிரபஞ்சத்தின் அபாவமுளது; இவ்வாற் றால், பிரபஞ்சத்தினது அபாவஞானம் அநுபலப்தியினு லுண்டாகின்றது. அந்நிய மதங்களில் எவ்வளவு அபாவஞானம் இந்திரிய ஜந்நியமோ அவ்வளவு ஞானமும் வேதாந்தமதத்தில் கேவலம் அநுபலப்தி ஜந்நியமாம். நையாயிக மதத்தில் இந்திரியங்காரணமாம், அநுபலப்தி சககாரிகாரணமாம் ஆதலால், இந்திரியத்தில் பிரமாணத்தன்மை உண்டு: அநுபலப்தியில் பிரமாணத் தன்மை இல்லை; இதனால் நையாயிகமதத்தில் அநுபலப்தியை வேறு பிர

மாணமாகக் கூறவில்லை. இனம்பற்றி ஏனைய பிரமாணங்களையும் உடன் கூறினர் என்றறிக. (எ)

(165) [இதுவுமது.]

வாக்கியந் தனக்கெட் டாது வத்துவென் றுரைத்த வேதம்
வாக்கிய விருத்தி யாலவ் வத்துவைக் காட்டிற் றன்றே
வாக்கியங் களிலே மான மாவதே தென்ற யாகில்
வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள்பொய் யாது கேளாய் (அ)

இ - ள். வத்து = பிரஹ்மமானது—வாக்கியம் தனக்கு = (யாதொரு) வாக்கியத்திற்கும்—எட்டாது என்று = கோசரமாகாதென்று—உரைத்தவேதம் = பிரதிபாதித்த சுருதியானது—வாக்கிய விருத்தியால் = (தத்துவமஸி) மஹாவாக்கியத்தின் (தற்பத, துவம்பங்களின்) லட்சணை விருத்தியால்—அவ்வத்துவை = அப்பிரஹ்மத்தை—காட்டிற்று அன்றே = தரிசிப்பித்ததல்லவா (ஆகலின், பிரஹ்மமானது சுருதிவாக்கியங்கட்குக் கோசரமாம்.)—வாக்கியங்களில் = (ஆனால் அவ்விருவகை) வாக்கியங்களுள்ளே,—மானம் ஆவது = பிரமாணமாகக் கொள்ளற்பாலது—ஏது என்றுய் ஆகில் = யாதென்று சங்கிப்பாயாகில்—வாக்கியம் இரண்டும் மெய்யே = அவ்வாக்கியங்கள் இரண்டும் உண்மையே:—மறைகள் பொய்யாது = சுருதிகள் அசத்தியங் கூறுவாகலின்;—கேளாய் = (இதற்கு இன்னும் சமாதானங்கூறுதும்) கேட்பாய்.—எ - று.

"காட்டிற்று" என்றதால், இலட்சணை வருவித்தாம். விசேஷண சம்பந்தமுடையதாய் சக்தி விருத்திக்கு விஷயமாகாமையின், பிரஹ்மம் வாக்குக்கு எட்டாதென்பதும், இலட்சணை விருத்தியால் ஞானி கரதலாமலகம்போல அநுபவித்தலால் வாக்குக்கு எட்டுமென்பதும் மெய்யேயென்பார், "வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள் பொய்யாது" என்றார். இங்கே லட்சணை எ - து, பாகத்தியாகலட்சணையை, சக்தி விருத்தி, லட்சணைவிருத்திகளின் சொரூபம் முற்படலத்தில், சுசு - ம் செய்யுளின் விசேஷவுரையிற் காண்க.

(166) [இதுவுமது.]

தன்பதி யல்லாப் பேர்க டமையல்ல னல்ல னென்றுள்
அன்பனைக் கேட்ட நே மவள்வெட்கி மௌன மானுள்
என்பது போல நீக்கி யிதன்றிதன் றெனச்சே டித்த
பின்பரப் பிரமந் தன்னைப் பேசாமற் காட்டும் வேதம். (கூ)

இ - ள். (சில புருஷரோடு கூடிநின்ற நாயகனையுடைய ஓர் நாயகியை மற்றொருத்தி நோக்கி உன் புருஷன் இவனு? இவனு என்று அக்குழுவிலுள்ளோரை ஒவ்வொருவராகச் சுட்டிக் கேட்டுவர அதற்கு அந்நாயகியானவள்) தன்பதி அல்லாப்பேர்கள் தமை = தனது நாயகனல்லாதவர்களை—அல்லன் அல்லன் என்றுள் = (இவன்) அல்லன், (இவன்) அல்லன் எனக் கூறிவந்தனள்—அன்பனைக் கேட்டநேரம் = (தனது) நாயகனைச் சுட்டிக் கேட்டகாலை

யில்—அவள் வெட்கி=அந்நாயகி நாணமுற்று—மௌனம் ஆனாள்=சும்மா விருந்தனள்—என்பதுபோல=என்னும் நியாயம்போல—இதன்று இதன்று எனநீக்கி=(பிரஹ்மமல்லாதவைகள் சடமாதலால்,) அவைகளை இது பிரஹ்மம் அன்று, இது பிரஹ்மம் அன்று என ஒவ்வொன்றாக நிஷேதித்து—பின்=பின்னர்—சேடித்த பரப்பிரஹ்மம் தன்னை=சேஷித்த (சேதனரூபமாகிய) பரப்பிரஹ்மத்தை—பேசாமல்=மௌனமாக—வேதம் காட்டும்=வேதம் தரிசிப்பிக்கும்.—எ - று.

இது "அதத்வியாவிருத்தி" லட்சணமாகிய சுருதி என்க.

தனது நாயகனல்லாதவர்களை அல்லன், அல்லன் என்ற நாயகி மௌனமாயிருந்து நாயகனை அறிவித்தாற்போல, அதத்துக்களை மாத்திரம் இது பிரஹ்மமல்ல இது பிரஹ்மமல்ல என்று நிஷேதித்து வந்து முடிவில் மௌனமாயிருந்தசுருதியும் பிரஹ்மத்தைக் காட்டிற்றுதலால், இதனனும் அச்சங்கை ஒழிதி என்பது கருத்து.

இதற்கு, உ - ம், பாகவதம்,

"புனிதமற் றுன்னை யல்லாப் பொருள்பரப் பிரம மல்ல
வெனவெடுத் துரைப்ப தல்லா லீறுமு தோற்ற மின்றித்
தனிமுத லாகி நின்ற சச்சிதா நந்த மூர்த்தி
நினைவருஞ் சுடரே நின்னை நிகழ்த்துமா றறிகி லேமால்."—என வரும்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூ)

(167) [இரண்டாஞ் சங்கைக்கு உத்தரம்.]

மூந்திய சங்கை தீர மொழிந்ததை யறிந்து கொள்வாய்
பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரநீ கேளாய்
இந்தியங் களுக்கி ராச னிதயமா மதினெண் ணங்கள்
புந்தியு மனமு மென்றே புறத்தகத் துலாவி யாடும். (கo)

இ - ள். மூந்திய சங்கை தீர=பிரஹ்மம் ஆகமப் பிரமாணத்திற்குக் கோசரா கோசரமாவது எவ்வாறும் என நீ சங்கித்த மூதற்சங்கை (உனதந்தக் கரணத்தி னின்றும்) நிவிர்த்தியா தம்படி—மொழிந்ததை அறிந்து கொள்வாய்=நாம் கூறிய உத்தரத்தை அறிந்து அகத்தே கொள்வாய்.—பிந்திய சங்கை தீரப்பேசும் உத்தரம் நீ கேளாய்=சுயஞ்சோதியாகிய பிரஹ்மம் மனத்திற்குக் கோசரா கோசரமாக எவ்வாறும் என்னும் இரண்டாஞ்சங்கை ஒழியும்படி நாம் அருளாநிற்கும் உத்தரத்தையும் இப்போது நீ கேட்பாய்.—இந்தியங்களுக்கு=(நேத்திராதி) சர்வேந்திரியங்களுக்கும்—இதயம் இராஜன் ஆம்=அந்தக்கரணம் இராஜாவாம்;—அதின் எண்ணங்கள்=அவ்வந்தக்கரணத்தினது விருத்திகள்—புந்தியும் மனமும் என்றே=புத்தியும், மனமுமென—புறத்து அகத்து=(தேகத்திற்கு) வெளியிலும், உள்ளிலும்—உலாவி ஆடும்=சஞ்சரித்துக் கூத்தாடாநிற்கும்.—எ - று.

அந்தக்காரணத்தின் பரிணமத்தை விருத்தி என்பர். புத்திரூப பரிணமான அந்தக்காரணத்தை ஞானத்திற்கு ஆசிரயகர்த்தா எ - ம், அந்தக்காரணத்தின் பரிணாமரூபமான மனதை ஞானத்திற்குக் காரணம் எ - ம் கூறுப.

"இந்தியங்களுக்கிராச னிதயமாம்" எ - து,

"மானத நினைத்த தைம்பொறி யியற்று மன்னவர்க் கமைச்சர் போல்"

என்னும் வாசிட்டக் கருத்து. (கo)

[இதுவுமது.]

உன்முகம் போற்கண் ணுடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல்
சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்
நின்மலை விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவும்
தன்மநன் மகனே யித்தைத் தானன்றே ஞான மென்பார். (கக)

இ - ள். உன் முகம் போல்=உனது (கிரிவாஸ்த) முகம்போல்—கண்ணுடிக்குள்=தர்ப்பணத்தினுள்ளே—ஒரு முகம் கண்டால் போல்=மற்றொரு முகம் பிரதிபலித்தாற்போல—சின்மய வடிவின்சாயை=சித்துரூபமான கூடஸ்தனுடைய சாயையானது—சித்துப் போல்=(மற்றொரு) சேதனம் போல—புத்தி தோன்றும்=புத்திரூபமான அந்தக்காரணத்தின் கண்ணே பிரதிவிம்பிக்கும்.—நின் மலை விருத்தி=உன்னுடைய மலைவிருத்தியானது—அந்த நிழல் வழியாய்=அச்சாயையின் வழியநுசரித்ததாய்—உலாவும்=(விஷயதேசத்திற்) சஞ்சரியாநிற்கும்.—தன்ம நன்மகனே=தர்மரூபியான நல்லமைந்தா—இத்தைத்தான் அன்றே=இவ்விருத்தியையல்லவா—ஞானம் என்பார்=ஞானமென்று கூறுவர் (பெரியோர்.)—எ - று. (கக)

(168) [பிரஹ்மத்தின்கட் பல * வியாப்தியி னபாவங்காட்டும் பொருட்டு அநான்ம பதார்த்தங்களில் விருத்தி வியாப்தி, பல வியாப்தி இரண்டும் உண்டென்று காட்டுகின்றர்.]

உருக்கிய தாநீர் நாநா வுருவங்க ளானற் போல
விருத்திகள் கடப டாதி விடயமாய்ப் பரிண மிக்கும்
அருப்பல விடய மெல்லா மாபாசன் றேற்று விக்கும்
இருட்டினில் விளக்குங் கண்ணு மில்லாமற் பொருள்கா ணுதே. (கஉ)

இ - ள். உருக்கிய தாநீர்=(குகையிலிட்டு நெருப்பில் வைத்து) உருகச்செய்த தாச்சலமானது—நாநா உருவங்கள் ஆனல்போல=(அச்சுக்கருவில் விடப்பட்ட மாத்திரத்தில் தான் சென்றுவீழ்ந்த) நாநா அச்சுருவங்கட்குச் சமான உருவமானற்போல—விருத்திகள்=(தேகத்தினின்றும்) நேத்திராதி இந்திரியவாயிலால் வெளிப்படாநின்ற அந்தக்கரண விருத்திகள்—கட

* வியாப்தி=விஷயம்.

படாதி விடயம்ஆய்=கடபட முதலிய விஷய சமாஞகாரமாய்—பரிணமிக்கும்=பரிணமி(த்து விஷயங்களின் ஆவரணத்தைப் பங்கமா)க்கும்.—விடயம் எல்லாம்=(கடபடாதி) விஷயங்களேயெல்லாம்—அருப்பல ஆபாசன் தோற்றுவிக்கும்=அருவமான ஸ்புரணமென்னும் ஆபாசஞனவன் தோற்றுவிப்பன்.—[சொல்லிய நியாயத்தை வியதிரேக திருஷ்டாந்த முகத்தால் விளக்குகின்றார்.] இருட்டினில்=அந்தகாரத்தில்—விளக்கும் கண்ணும் இல்லாமல்=தீபமும், நேத்திரமும் இல்லாமல்—பொருள் காணுதே=கடபடாதி பதார்த்தங்கள் (எப்படிக்) காணப்படாவோ (அப்படி) ஆவரண நிவிர்த்தியின் பொருட்டு விருத்தியும், ஸ்புரணரூபப் பிரயோஜன நிமித்தம் சிதாபாசனும் இல்லாமல் அநான்ம பதார்த்தங்கள் பிரகாசியாவாம்.—எ - று.

இந்திரியத்துக்கும், கடத்துக்கும் சையோக முண்டாகும்போது இந்திரியத் துவாரத்தாற் புறம்போந்து உருக்கி அச்சில் விடப்பட்ட தாராச்சலம் போலக் கடாகாரத்துக்குச் சமாஞகாரத்தையடையும் அந்தக்கரணத்தின் பரிணமத்தை விருத்தியென்பர். அந்தக்கரணம் சத்துவகுணகாரியமாய்ச் சொச்சமாகலின் அதில் சேதனத்தின் ஆபாச மிருப்பதுபோலச் சொச்சமான அந்தக்கரணத்தின் காரியமாகிய விருத்தியிலும் சேதனத்தின் ஆபாசம் உண்டு. விஷயமாகிய கடம் தமோகுண காரியமாதலால், சொரூபமாகவே சடமாம்; ஆகலின், அதன்கண் அஞ்ஞானமும், அதனது ஆவரணமும் உண்டென்னல் கூடாது. விசார திருஷ்டியினல் நோக்கில் அஞ்ஞானமும், அதன் ஆவரணமும் சேதனத்தின்கண் ணுண்டேயல்லாமல் கடத்தின்கண் இல்லை. அஞ்ஞானம் சேதனத்தின் ஆசிரிதமாய்ச் சேதனத்தையே விஷயம் பண்ணுகின்றதென்பது வேதாந்தசித்தாந்தம்; ஆயினும், கடாதிகளின் அதிஷ்டான சேதஞசிரிதமான அஞ்ஞானமும் சேதனத்தை ஆச்சாதித்துச் சுபாவமாக ஆவிருதமான கடாதிகளையும் மறைத்திருக்கிறது உலகிற்பிரசித்தம்; அவ்வஞ்ஞானத்தால் ஆவிருதமான கடத்தை விஷயமாகவுடைய அந்தக்கரணத்தின் ஆபாசசகிதமான கடாகார விருத்தியின்கண் விருத்திபாகமோ கடத்தின் ஆவரணத்தை நிவிர்த்திப்பிக்கின்றது. விருத்தியின் கண்ணுள்ள ஆபாசபாகம் கடத்தைப் பிரகாசஞ் செய்கின்றது; இவ்வாற்றுன் வாகிய பதார்த்தத்தில் விருத்தி, ஆபாசம் இரண்டிற்கும் உபயோகம் உண்டு. திருஷ்டாந்தம்;—அந்தகாரத்தில் குடத்தில் யாதானும் ஓர் பாத்திரம் மூடிவைத்திருந்ததாக அங்கே தடியாலடித்துக் குடத்தை உடைத்தும் பின்னர்த் தீபமின்றி அந்நிராவரண பாத்திரமும் பிரகாசமாகாமற் றீபத்தினுற் பிரகாசமாவதுபோல அஞ்ஞானத்தால் ஆவிருதமான கடத்தின் ஆவரணத்தை விருத்தியானது பங்கஞ்செய்தும் அக்கடம் பிரகாசமாகாது. என்னை? கடமோ சொரூபமாகச் சடம்: விருத்தியுஞ் சடம். விருத்திக்கு ஆவரணபங்கமாத்திரம் பிரயோஜனம்; அதனும் கடமானது பிரகாசியாது; ஆதலால் கடத்தைப் பிரகாசிப்பிக்கிறது ஆபாசமாம்; இங்ஙனங்கூறியது நேத்திரப் பிரத்தியட்சஞானத்தின் றன்மையாம். ஏனைய சுரோத்திராமுதலிய இந்திரியப் பிரத்தியட்சத்திலும் இவ்வாறே அறிக.

(169) [அநான்மாவினும் பிரஹ்மத்தின் கண்ணுள்ள விலட்சணத்தன்மையைத் திருஷ்டாந்தத்தோடுங் காட்டுகின்றார்.]

எரிகின்ற விளக்காற் கண்ணு விருட்பொருள் காணல் வேண்டும்
தெரிகின்ற பரிதி காணச் சென்றிடிற் கண்ணே போதும்
விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும் [கே.
புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெப்பப் பொருள்காண் போர்க்

பலம்=சிதாபாசன்—புரிகின்ற விருத்தி=முமுட்சுக்களால் விரும்பா நிற்கும் அகண்டபிரஹ்மாகார விருத்தி—வேனய பதப்பொருள் வெளி. (கஉ)

(170) [பிரஹ்மத்திற்கு அநான்மாவினும் விலட்சணத் தன்மைகூறிச் சங்கையின் உத்தரம் இவ்வாறுமென்று முடிக்கின்றார்.]

விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மனமென் பார்கள்
கருத்தெழு விருத்தி வேண்டுங் கணக்கினன் மனத்திற் கெட்டும்
வருத்திய பலமா மிந்த மனத்திற்கெட் டாது கண்டாய்
அருத்தமிப் படியென் றைய மகன்றுநீ தெளிந்தி டாயே. (கச)

இ - ள். விருத்தியும்=(அந்தக்காரணத்தின்) விருத்தியும்,—பலமும்=(சிதாபாசமென்னும்) பலமும்—கூடும் விகாரமே=கூடாநிற்கும் பரிணாமமே—மனம் என்பார்கள்=மனமென்று சொல்லுவர் பெரியோர்.—கருத்து எழு விருத்தி வேண்டும் கணக்கினுல்=அந்தக்காரணத்தினின்றும் எழாநிற்கும் பிரஹ்மாகார விருத்தி மாத்திரத்தை யபேட்சிக்கு நியாயத்தால்—மனத்திற்கு எட்டும்=(பிரஹ்மமானது) மனதுக்கு விஷயமாம்.—வருத்திய=(சிருட்டி தொடங்கி இதுகாறும்) தன்பப்படுத்திய—பலம் ஆம் இந்த மனத்திற்கு=(சிதாபாசமென்னும்) பலத்தோடுகூடின இம்மனதுக்கு—எட்டாது கண்டாய்=(பிரஹ்மமானது) விஷயமாகாது.—அருத்தம் இப்படி என்று=(பிரஹ்மமானது மனதிற்கு எட்டும், எட்டாதென்று சுருதி கூறினதற்குப்) பொருள் இவ்வாறுகுமென்றறிந்து—ஐயம் அகன்று=(இது விஷயமாக உன்னிடத் தெழுந்த) சந்தேகம் ஒழிந்து—நீ தெளிந்திடாய்=நீ தெளிவாயாக.—எ - று.

கண்டாய் எ - து, முன்னிலையசை.

(171) மானச ஞானத்திற்குப் பிரஹ்மம் விஷயமல்ல வென்பதற்கு அபிப்பிராயம்:—சமதமாதி சம்ஸ்காரரகித விட்சிப்த மனதினின்றும் உண்டாகாநிற்கும் ஞானத்திற்குப் பிரஹ்மம் விஷயமல்ல. மானச ஞானமாகிய பல வியாப்பியத்தன்மை பிரஹ்மத்தின் கண்ணில்லை. விருத்தியில் சிதாபாசம் பலமென்று சொல்லப்படும்; அதற்குப் பிரஹ்மம் விஷயமன்று. கட முதலிய அநான்ம பதார்த்தங்களே விருத்தியடையுமாகில் அங்கே விருத்தி, சிதாபாசம் இரண்டிற்கும் கட முதலிய பதார்த்தங்கள் விஷயமாம். பிரஹ்மாகார விருத்தியில் உள்ள சிதாபாசனுக்குப் பிரஹ்மம் விஷயமன்று: விருத்தி மாத்திரத்திற்கே பிரஹ்மம் விஷயமாம்.

(172) மனத்தின் விஷயத்தன்மை பிரஹ்மத்தின்கண் நிஷேதிக்கப்பட்டதுபோலவே சத்தத்தின் விஷயத்தன்மையும் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது;

அங்கே சத்தஜந்நிய ஞானத்திற்குப் பிரஹ்மம் விஷயமன்றென்று பொருள் கொள்ளின், மஹாவாக்கியமும் சத்தரூபமேயாகலான் அதனால் உண்டாகா நிற்கும் ஞானத்திற்கும் பிரஹ்மம் விஷயமன்றென்று பொருள்படும்; படவே சித்தாந்தத்திற்கே பங்கம் வரும்; ஆதலால் நிஷேத வசனத்திற்குப் பொருள், சத்தத்தின் லட்சணவிருத்தி ஜந்நிய ஞானத்திற்கு பிரஹ்மம் விஷயமேயல்லாமல், சத்தத்தின் சக்தி விருத்தி ஜந்நிய ஞானத்திற்கு விஷயமன்றென்பதும், அப்படியே லட்சணவிருத்தி ஜந்நிய ஞானத்திலும் ஆவரணபங்கரூப விருத்தி மாத்திர விஷயத்தன்மை பிரஹ்மத்தின்கண் ணுண்டென்பதல்லாமல் சிதாபாசரூப பலத்திற்குப் பிரஹ்மம் விஷயமன்றென்பதும் ஆம். (கச)

(173) [சஞ்சல சுபாவமாய் விஷயபரிணமழடைய சித்தம் சமாதியடையுமாறு எங்ஙனென விளுதல்.]

[வேறு.]

வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன
வழிகளறிந் தேனினியோர் வசனங் கேளீர்
சஞ்சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தந்
ததாகா ரமாவதன்றே சமாதி யோகம்
உஞ்சலையொத் தலைவதுதன் சுபாவ மாகி
யொருகணத்திற் பலவுலகா யுதிக்கு மிந்த
நெஞ்சகம்வத் துவிலசையா நிவாத தீப
நிலையடைவ தெப்படியோ நீர்சொல் வீரே. (கரு)

இ - ள். வஞ்சகம் இல் பரமார்த்த குருவே = (உபாயம் அல்லாதவைகளை உபாயமென்று உபதேசிக்கும்) வஞ்சகக்குணம் இல்லாத மெய்ம்மையான ஆசிரியரே—சொன்ன வழிகள் அறிந்தேன் = (வாக்குக்கும், மனத்துக்கும் பிரஹ்மம் எட்டும், எட்டாதென்பதற்குத் தேவரீர்) அருளிய காரணங்களை நன்குணர்ந்தேன்;—இனி = இப்பொழுது—ஓர் வசனங்கேளீர் = (யான் விளவாநிற்கும்) ஓர் விண்ணப்பங் கேட்டருளுவீர்;—சித்தம் = சித்தமானது—சஞ்சலம் அற்று = அசஞ்சலமாய்,—அகண்டபூரணம் ஆய் = அகண்ட பரிபூரணமாய்—தத் ஆகாரம் ஆவது அன்றே = பிரஹ்மாகாரமாவதல்லவா—சமாதியோகம் = சமாதியென்று சொல்லப்படுஞ் சித்தநிரோதம்;—உஞ்சலை ஒத்து அலைவது = ஊசலைப்போலுமலையா நிற்பதே—தன் சுபாவம் ஆகி = தனது இயற்கையாய்,—ஒரு கணத்தில் = ஒருக்ஷண நேரத்தில்—பல உலகுஆய் உதிக்கும் = நாநா உலகங்களாய்த் தூலியாநிற்கும்—இந்த நெஞ்சகம் = இச்சித்தமானது—வத்துவில் = (அசஞ்சல, அதிசூட்சுமமான) பிரஹ்மத்தில்—அசையா = அசையாத—நிவாத தீப நிலை = நிவாததீபத்தின் ஸ்திதியை—அடைவது எப்படியோ = அடையாநிற்பதெவ்வாறே (யானறியேன்;)—நீர் சொல்வீர் = தேவரீரருள்வீராக.—எ - று.

இது பிரமேய சந்தேகம். (கஎ)

(174) [சங்கைகீ குத்தாங்கூறப்புகுந்து, அதற்கு ஏதுவான விசேஷங்களைக் கூறுகின்றார்.]

கருதுமனை குணமூன்று மூன்றி லொன்று
கதித்தெழுந்தான் மற்றிரண்டுங் காந்து நிற்கும்
தருமமிகுஞ் சத்துவமே லான போது
சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம்
மருவுரசோ குணமாகி லுலக தேக
வாதனையாஞ் சாத்திரவா தனையு மாகும்
அருமகனே தமோகுணமே லான போதி
லசுரசம்பத் துண்டாகு மறிந்து கொள்ளே. (கசு)

இ - ள். கருது மனைகுணம் மூன்று ஆம் = (விஷயங்களைக்) கருதாநிற்கும் மனத்தின் குணங்கள் மூவகைத்தாம்;—மூன்றில் ஒன்று கதித்து எழுந்தால் = அம்மூவகைக் குணங்களுள்ளே ஓர் குணமானது அதிகரித்தெழுந்தாயின்,—மற்று இரண்டும் காந்து நிற்கும் = ஏனைய இரண்டு குணங்களும் அடங்கிநிற்கும்.—தருமம் மிகும் = தருமம் மிகுந்துண்டாதற்குக் காரணமான —சத்துவம்மேல் ஆனபோது = சத்துவகுணம் மேலிட்டபோது—சன்மார்க்கம் ஆனதெய்வ சம்பத்து உண்டாம் = சன்மார்க்கமாகிய தெய்வ சம்பத்துண்டாகும்:—மருவு ரசோகுணம் ஆகில் = கலவாநின்ற இரஜோகுணம் மேலிடுமாயின்—உலக தேகவாதனை ஆம் சாத்திரவாதனையும் ஆகும் = உலகவாசனை, தேகவாசனை, சாஸ்திரவாசனை என்னும் மூவிதவாசனையு முண்டாம்;—அருமகனே = அருமையான மைந்தா—தமோகுணம் மேல் ஆன போதில் = தமோகுணம் மேலிட்டபொழுது—அசுரசம்பத்து உண்டாகும் = (துன்மார்க்கமான) அசுரசம்பத்துண்டாகும்;—அறிந்துகொள் = (நீ இங்ஙனம்) தெரிந்து கொள்ளுதி.—எ - று.

"தூயசத் துவங்கொள் சங்கற்பம் மிக்கநற் றரும ஞானம் வீடுள தாய் வேந்தர்வேந் தெனமிக விளங்கும்"—

என்னும் சுருதியால், "தருமமிதஞ் சத்துவம்" எ - ம், "சத்துவ ஞானமாந் தமமஞ் ஞானமா மத்திமங் கலப்பதாம்" என்னும் சுருதியால், "மருவுராசோகுணம்" என்றுங் கூறினர். சன்மார்க்கமெனவே துன்மார்க்கம் வருவித்தாம்.

(175) சாவயவமாய், அநித்தியமாய் அரக்குச் சுவர்ணம் மெழுகு முதலியவைபோல வெகுவித பரிணமையோக்கியத் திரவியம் யாது அது மனது. நேத்திர முதலிய இந்திரியங்களால் கடபடாதி விளங்குவபோலச் சாட்சியாகிய பிரத்தியகாண்மாவாலே பிரகாசமாக விளங்குவனவான காமக்குரோதாதி விருத்திகட்கு உபாதான காரணமாயிருப்பது மனது. கண்ணுக்கு எதிரே வெளிச்சத்திலிருக்கும் கடபடாதியும், காதுக்குச் சமீபத்திற் றிடமாயுச்சரிக்கும் சத்தமும் யாதொன்று சாவதானமா யில்லாவிடில் அறியப்படாமல்,

யாதொன்று சாவதானமாயிருந்தால் அறியப்படுகின்றனவோ! அதுவே அந்நவய வியதிரேகங்களால் சகலவிஷய ஞானத்திற்கும் சாதாரணகாரணமான மனதென்று பிருகதாரணிய உபநிடதத்திற் கூறியிருக்கிறது; அது மனனம் பண்ணுகின்றமையால் மனதென்றும், சிந்தனைசெய்கின்றமையால் சித்தமென்றுஞ் சொல்லப்படும்; அச்சித்தமானது மூக்குண காரியங்களான ஞானம், பிரவிர்த்தி, மோகம் என்னும் மூன்றனையும் அனுபவித்தலால் திரிகுணாத்மகமாக இருக்கும்; அந்தத்திரி குணங்களும் சமுத்திரத்தினலைபோல நிரந்தரம் பரிணம மடையும்; அப்பொழுது இரண்டு குணம் அடங்கி ஒரு குணம் அதிகரித்திருக்கும். சத்துவகுண மதிகரிக்கும்போது தெய்வசம்பத்தும், ரஜோகுண மதிகரிக்கும்போது உலகவாசனை, தேகவாசனை, சாஸ்திர வாசனையும், தமோகுண மதிகரிக்கும்போது அசுரசம்பத்தும் உண்டாகும்.

(176) வாசனையாவது, திடபாவனையால் முன்பிலுன்றையுமாலோசியாமலுண்டாகுங் குரோதாதி விருத்திக்கேதுவான சித்தத்தின் சூட்சுமாவஸ்தையாகிய சம்ஸ்காரம்; சுத்தாசுத்த பேதத்தால் அஃதிருவகைத்தாம். [அசுத்தமெனினும், மலினமெனினும் ஒக்கும்.]

(177) அவற்றுள் டம்பம், கர்வம், அடங்காதவகங்காரம், காமம், குரோதம், உலோபம், அவிவேகம், நித்திரை, ஆலசியம், பயம், மைதுனம் இவை முதலிய துர்க்குணங்களாகிய அசுரசம்பத்து ஒன்று, உலகவாசனை, சாஸ்திர வாசனை, தேகவாசனை மூன்று ஆகநான்கும் மலினவாசனை; இவற்றுள் தம்பம், தர்ப்ப முதலிய அசுரசம்பத்து நரகத்திற் கேதுவாதலால் மலினமென்பது பிரசித்தம்.

(178) சர்வசனங்களும் நாம் எவ்வாறிருக்கின் நம்மை நிந்தியாமல் ஸ்துதி செய்வரோ அவ்வாறு நடக்கவேண்டுமென்னுந் தாரபிமானம் உலகவாசனை; இது சம்பாதிப்ப தருமையாகலின், மலினவாசனை யெனப்படும்.

(179) இதற்குதாரணம் என்னையோவெனின் :—சர்வகுண சம்பன்னரான ஸ்ரீ - ராமசந்திரரிக்கும், பதிவிரதா சிரோமணியாகிய சீதைக்கும் காதினுற் கேட்கக்கூடாத * அபவாதம் சனங்களாலுண்டாயிருப்பது. தேசபேதத்தால் ஒருவரை யொருவர் நிந்திப்பது காணப்படுகிறது; என்னை? தட்சணதேசத்துப் பிராமணரால் உத்தர தேசத்து நிவாசிகளாய் வேதமறிந்து மாம்சபட்சணம் பண்ணுஞ் சனங்கள் நிந்திக்கப்படுகின்றனர்; உத்தரதேசத்துப் பிராமணரால் மாதுலன் கன்னியை மணம்புரியும் தட்சணதேசத்து நிவாசிகளான பிராமணர்கள் நிந்திக்கப்படுகின்றனர்; இப்படியே தத்தங் குலம், கோத்திரம், பந்துவர்க்கம், இஷ்டதேவதை முதலியவைகளைத் துதிப்பதும், அந்நியகுல கோத்திராதிகளை நிந்திப்பதும் விசுவாசி முதல் கோபாலரீபரியந்தம் பிரசித்தம்.

(180) இவ்வுலகவாசனை நசிக்கும்படியான வுபாயம் என்னையோவெனின் :—சர்வ சனங்கட்கும் சந்தோஷம் வரும்படி நடக்கத் தக்கவுபாயம்

* அபவாதம் = நிந்தை.

யாதொன்றுமில்லை; தத்தம் மனதுக்குத் தோற்றினவாறே சொல்லாநிற்குஞ் சனங்களுடையசொல்லால் நமக்கு என்னை, எவ்வழியானும் நமக்கு உறுதி பயப்பதையே நாம் அநுஷ்டிக்கவேண்டும் என்னும் விவேகமே உலகவாசனை நசித்தற்கு உபாயமாம்; இவ்வபிப்பிராய முட்கொண்டே மோட்ச சாஸ்திரங்களில் அங்கங்கே தியானியாகிய புருஷனுக்கு நிந்தையிலும், ஸ்துதியிலும் சமபுத்தி வேண்டுமென்று கூறியிருக்கின்றது.

(181) கர்மசாஸ்திர பாடாபிமானம், அர்த்தாபிமானம், அநுஷ்டானுபிமானம் எனச் சாஸ்திரவாசனை மூவகைத்தாம்.

(182) அவற்றுள், சாஸ்திர பாடாபிமானத்திற் திதாரணம் என்னையோ வெனின்:—பரத்துவாசர் மூன்று புருஷாயுள்வரையும் வெகு வேதங்களை அத்தியயனம்பண்ணி நாலாம் புருஷாயுளிலே இந்திரனுலே மீண்டும் வேதபாடத்திற் பிரவிர்த்திக்கப்பட்டபொழுது மிஞ்சியிருந்த வேதாத்தியயனத்தின்பொருட்டு முயற்சிபண்ணினர்; அப்படிப்பட்ட பரத்துவாசருக்கே வேதபாடமுழுதுங் கிடைக்காமற் போனதால் அப்பாடாபிமானம் மலினவாசனை யெனப்படும்.

(183) அப்படியே வெகு சாஸ்திரார்த்தங்களை யறியவேண்டுமென்னுமபிமானமும் பரம புருஷார்த்தத்துக்குச் சாதனமாகாமையின் மலினவாசனையே; இதற்குதாரணம்—ஓரிருடியானவர் வெகுவித சாஸ்திர புத்தக பாரத்தோடுகூட மஹாதேவரைத் தரிசித்தற்பொருட்டுச் சந்நிதானத்தில் வர அங்கிருந்த மற்றோரிருடி அவரைப் பார்த்துப் பாரஞ்சுமக்குங் கழுதைபோல நீவிர் புஸ்தகபாரங்களை நன்றுய்ச் சுமக்கின்றீரென்று கிருபையினுலே பரிகாசம்பண்ண அதுகேட்டு அவ்விருடியானவர் புஸ்தகங்களையெல்லாம் லவண சமுத்திரத்தி லெறிந்துவிட்டனர்; அப்போது கிருபாமூர்த்தியாகிய மஹாதேவர் அவ்விருடியை ஆத்மவித்தையிலே பிரவிர்த்திப்பித்தாரென்று சொல்லப்படுகின்றது.

(184) சாஸ்திரார்த்ததத்தின் அநுஷ்டானுபிமானம் மலினவாசனையென்பதற்கு உதாரணம். நிதாகரென்பவர் ரிபுவினுலே அடிக்கடி ஆத்மதத்துவமுபதேசிக்கப்பட்டும் கர்மாநுஷ்டானத்தில் சிரத்தை விடவில்லையென்பதும், தாசூரர் கர்மாநுஷ்டானத்தின் பொருட்டுப் பூமியிலோரிடத்தும் பரிசுத்தவிடத்தை யடைந்திலரென்பதும் ஆம். சாஸ்திரவாசனை பிரஹ்மாப்பியாசத்திற்கு விரோதியாவதானும், மேன்மேற் சென்மத்திற் கேதுவாதலானும், சுவேதகேதுவுக்குத்தப்போலக் கர்வத்திற் கேதுவாதலானும் மலினவாசனை என்ப.

(185) தேகாத்மப் பிராந்தியானும், அதற்குக் குணஞ் சம்பாதிக்க வேண்டுமென்னும் பிராந்தியானும், தோஷத்தைப் போக்கவேண்டுமென்னும் பிராந்தியானும் தேகவாசனை மூவகைத்தாம்; அவற்றுள், தேகாத்மப் பிராந்திரூபமான தேகவாசனை சார்வாகர் முதலியோரிடத்துப் பிரசித்தம்.

(186) லௌகீக, சாஸ்திரீய பேதத்தால் தேகத்திற்குக் குணசம்பாதன மிருவகைத்தாம்; அவற்றுள், நல்ல இராகத்தோடு கூடக் கானம் பண்ணுவ தற்காக விளக்கெண்ணெய், மிளகு, நெய் முதலியவற்றைப் புசிப்பதும், தேகத்தைத் தொடும்போது மெத்தென விருத்தற்காகப் புஷ்டியைப் பண் ணத்தக்க ஔஷதங்களைப் புசிப்பதும், சரீரமழகா யிருத்தற்பொருட்டு அப் பியங்க ஸ்நாந முதலியவை பண்ணி நல்ல வஸ்திராபரணங்களைத் தரிப்பதும், சரீரம் சுகந்தமாயிருத்தற்பொருட்டுப் புஷ்பமாலை யணிந்துகொண்டு சந்தன முதலியவைகளைப் பூசிக்கொள்வதும் லௌகீககுண சம்பாதனம். கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநம் பண்ணுவதும், சாளக்கிராமாதி தீர்த்தத்தைப் புரோட்சித்துக் கொள்வதும் சாஸ்திரீய குணசம்பாதனம்.

(187) தேகத்தின் ரோஷத்தைப் போக்குவதும் லௌகீக, சாஸ்திரீய பேதத்தால் இருவகைத்தாம்; அவற்றில், வைத்திய சாஸ்திரத்திற் சொல்லிய ஔஷதங்களான் முகப்பிரச்சாளனாதி லௌகீகம். சௌச, ஆசமனாதி சாஸ் திரீயம்.

(188) இம்மூவகைத் தேகவாசனைகளும் மலினவாசனைகள். என்னை? தேகமே ஆத்மாவென்பது அப்பிரமாணமாகலானும், சகலதுக்க ஏதுவாகலா னும் மலினவாசனையாம்; இதைப்பெரும்பாலும் பூர்வாசிரியர் கூறியிருத்த லின், யாம் விசேஷமாக வுரைத்திலேம். குணசம்பாதனமும் வெகு முயற்சி பண்ணியக்காலும், அநேகம் பேருக்கு முழுதுஞ் சித்திக்கக்காணேம். என்னை? இராகத்தோடுகானம் பண்ணுவதில் பிரசித்தராயிருக்கிற பாடக ரும், வேதாத்தியயனம் பண்ணுவிக்கிறவரும் கீழ்ச்சொன்ன முயற்சிகளைச் செய்தும் நல்ல கண்டத்தொனியை யடைகிலர்: நியமமாகச் சரீரபுஷ்டியுங் காணப்படவில்லை. அழகும், சுகந்தமும் வஸ்திராபரணங்கட்கும், மாலை முத லியவைகட்குமே யல்லது தேகத்திற் குளவாதலில்லை; இச்சாஸ்திரீயகுண சம் பாதனமும் பிரபலமாகிய ஏனைய சாஸ்திரங்களால் வாதிக்கப்படுகிறது; அவை யாவையோவெனின்:—யாவனொருவன் வாதம், பித்தம், சிலேட்டுமமென் னும் மூவகைத் தாதுக்களோடு கூடிய பிரேதரூபமான தேகத்தில் யானை னும் புத்தியும், புத்திர, மித்திர, களத்திராதிகளில் எனதெனும் மமதையும், பாஷாணம், மிருத்து, தாரு, தாம்பிர முதலியவற்றின் விகாரமான மூர்த்தி களில் மாத்திரம் தெய்வபுத்தியும், கங்கையாகிய ஜலமாத்திரத்தில் தீர்த்தபுத் தியும் உடையனோ அவன் தத்துவ வித்துக்களாகிய பெரியோர் சபையில் கர்த்தபமென்று சொல்லப்படுவனென்னும் பாகவதமும், தேகம் அத்தியந் தம் மலினம், ஆன்மா அத்தியந்தம் நிர்மலம் ஆதலான் தேகத்திற்கு எவ்வளவு சௌசம் பண்ணினும் அது சுத்தியுறாது, ஆன்மா நித்திய சுத்தனாதலால் சௌசப் பிரசித்தியே அவற்கில்லை என்னும் சூதசம்மிதையும் பிரபல சாஸ் திரங்களாம். ஔஷதம் புசித்தல் முதலியவற்றால் சாந்தமான உரோகம் மீண்டு மடிக்கடி யுளதாதலின், லௌகீக சரீரதோஷ நீக்கங்கூடாது. கீழ்ச் சொன்ன பாகவதவசனம், சூதசம்மிதை வசனங்களால் சாஸ்திரீயமான சரீரதோஷ நீக்கமுங்கூடாது; ஆதலால், தேகவாசனை மலினவாசனையே.

(189) சுத்தவாசனைதான் யாதோவெனின் :—பிரத்தியகபின்ன பிரஹ்மத்தைத் திடாபரோட்சமாக வறிந்தவனிடத் திருப்பதாயும், வறுத்தவிதை போலத் தேகஞ் சீவித்தற்பொருட்டு உபயோகிக்கிறதாயும், டம்பம், கர்வ முதலிய வசுரசம்பத்தை யுண்டுபண்ணுததாயும், ஜன்மாந்தரத்திற் கேதுவாகாததாயும் உள்ளவாசனை சுத்தவாசனை என்றறிக. (கசு)

["மனமணி பேதச் சேற்றின் மறைந்தொரு வருக்குந் தோன்ற,
கனமுறு விவேக நீராற் கழுவினுற் சித்தி காட்டும்" என்று
இதற்கு முன்னூலாகிய வாசிட்டத்திற் கூறியபடியே சத்துவ
சொரூபமான மனதில் ஆகந்துகமாக இராஜத தாமதங்
கள் அடைந்திருத்தலின், சன்மார்க்கத்தின் நிரந்தராநு சந்
தானத்தால் அவை நீங்கி, அது சமாதியை யடையுமென்று,
கரு – ம் செய்யுளில் செய்த சங்கைகீது உத்தரங்கூறல்.]

மனதுசத் துவசொரூப மற்றி ரண்டும்
வந்துகலந் தனவவற்றை மாற்றி னுற்போம்
தனது சன்மார்க் கத்தைவிடா திருந்தபோது
தமோகுணமும் ரசோகுணமுஞ் சமிக்கும் பின்னைக்
கனபரிணு மஞ்சலனம் போம்போ னக்காற்
களங்கமற்று நின்றவா காசம் போலும்
நினதுளமப் படியாமப் பிரமத் தொன்றாய்
நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே. (கஎ)

இ - ள். மனது சத்துவசொரூபம் = மனதிற்குச் சத்துவமே (உபாதான மாகலின் அதற்கு அதுவே) சொரூபமாம்.—மற்று இரண்டும் வந்து கலந்தன = வேனையவிரண்டுஞ் (சகாயமாக இடையே) வந்து பொருந்தின ;—அவற்றை மாற்றினுல் போம் = அவைகளை நீக்கினுல் நீங்கும்.—[நீக்குமுபாயங்கூறல்.] தனது சன்மார்க்கத்தை = மனத்தினியற்கை யுருவமான சன்மார்க்க (மாகிய தெய்வ சம்ப) த்தை—விடாது இருந்தபோது = விடாது (அநுஷ்டித்து) நிற்கும்போது—தமோகுணமும் ரசோகுணமும் சமிக்கும் = (விஷய பரிணம வேதுவான) தமோகுணமும், (சலனவேதுவான) ரசோகுணமும் நசிக்கும்.—பின்னை—கனபரிணமம் சலனம்போம் = கனமாகிய (விடய) பரிணமமும், (ஒன்றினின் றொன்றிற் றுவாநிற்குஞ்) சலனமும் (அதன்கணீங்கிப்) போம்;—போனக்கால் = (அவை) போகவே—நினது உளம் = உன் மனமானது—களங்கம் அற்று நின்ற = (மேகபடல முதலிய) களங்கமொழிந்து நின்ற—ஆகாசம்போலும் = (சரற்கால) வானம்போலச் சொச்சமாய், அசஞ்சல அதிசூட்சுமமாம் ; (ஆகவே,)—அப்படி ஆம் அப்பிரமத்து = அப்படி அசஞ்சல அதிசூட்சுமமாகிய அந்தப்பிரஹ்மத்தில்—ஒன்முய் = ஏகாசமாய் —நிருவிகற்ப சமாதியில்—தானேநிற்கும்.—எ - று.

இதன்கருத்து—மனதுக்குச் சத்துவகுணமே முக்கிய உபாதான காரணம் ; ரஜோகுண, தமோகுணங்கள் சகாயமாம் ; ஆகலின், சன்மார்க்கமான

தெய்வ சம்பத்தால் ரஜசு, தமசெனும் இரண்டு குணங்களையும் போக்கும் போது சத்துவகுணமே அந்தக்காரணத்தின் சொரூபமாகச் சேஷிக்கும்; அச் சத்துவகுணமுஞ் சஞ்சலத்திற் கேதுவான ரஜோகுணமின்மையின் ஏகாக்கிர மாயும், பிராந்தியினுற் கற்பிக்கப்பட்ட அநான்மரூபமான ஸ்தூலபதார்த்தா காரத்திற் கேதுவான தமோகுண மின்மையின் சூட்சுமமாயும் ஆன்மதரி சனத்திற்கு யோக்கியமாகுமென்பது. (கள)

[மனது நிருவிகற்ப சமாதியில் பிரஹ்மத்தோடு ஏகமாய் நிற்றற்கு உபமா னங்கூறிச் சந்தேகம் ஒழித்தியென உத்தாத்தை முடித்தல்.]

களங்கமற்ற கண்ணுடி தன்முன் வேரூர்
களங்கமற்ற கண்ணுடி காட்டும் போது
விளங்கியதன் மயமாகி யபேத மாகி
விகற்பமின்றி நிருவிகற்ப மானுற் போல
அளந்தறியப் படாவிபுவாய்ச் சத்தாய்ச் சித்தா
யாநந்த மாம்பிரமத் தைக்கிய மான
உளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே
யுலவெங்கே யென்றுசங்கை யொழித்தி டாயே. (கஅ)

இ - ள். களங்கம் அற்ற கண்ணுடி. தன்முன் = நிர்மலமான (ஓர்) தர்ப் பணத்தினெதிரே—வேறு ஓர் களங்கம் அற்ற கண்ணுடி காட்டும்போது = நிர்மலமான மற்றோர் தர்ப்பணத்தைக் காண்பிக்கும்போது—விளங்கிய தன் மயம் ஆகி = நிர்மலமாகிய அக்கண்ணுடிமயமாய்,—அபேதம் ஆகி = அபேத மாய்—விகற்பம் இன்றி = விகற்பமில்லாமல்,—நிருவிகற்பம் ஆனுல் போல = நிர்விகற்பமாயினுற் போல—அளந்து அறியப்படா விபு ஆய் = இத்துணையள வினதென் றளவிட்டறியப்படாத வியாபகமாய்,—சத்து ஆய் சித்து ஆய் ஆநந் தம் ஆம் பிரமத்து = சத்தாயும், சித்தாயும், ஆநந்தமாயும் உள்ள பிரஹ்மத்தின் கண்—ஐக்கியம் ஆன உளம் = ஏகரசமான அந்தக்காரணம்—தெளிந்தபடி இருந் தால் = (தான்) தெளிந்தவண்ணமே நின்றால்—உலகம் எங்கே = (அதற்கு) உலகரூப பரிணமமேது—உலவு எங்கே = சலன மூளதாதலேது—என்று சங்கை ஒழித்திடாய் = என இவ்வாறு நிச்சயித்து (இதுவிஷயமா யெழுந் துள்ள) சந்தேகத்தை யொழித்திடுதி.—எ - று.

"உளந்தெளிந்த படியிருந்தால்" எ - து, ஆரூடத்தன்மையை; ஆரூ டர்க்குப் பிரபஞ்சத்தின் பாரமார்த்தத்தன்மை அபாவமாய் விடுதலின் அதன் பரிணமமும், அதைப்பற்றி யுளதாகுஞ் சலனமும் அவர்கண் மனத்திற்கில வாம்; ஆகலின், "உளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே யுல வெங்கே யென்றுசங்கை யொழித்தி டாய்" என்றார். இப்படியே,

"தத்துவஞானிகாணிலுஞ் சகத்தைக்கண்டிலன், றத்வமேகண் டான்"—

என்று பிரமகீதையிலும்,

"காதலின்ஞானியத்தைக் கண்ணினுற்றெரியக்காணுன்"

என்று பகவற்கீதையிலுங் கூறியிருப்பது காண்க. (கஅ)

(190) [மனம் போகசாதனமாகலானும், மனமிறந்தோர் முத்தராக லானும் அவர்க்கு அஃதின்றிப் போகங்கூடுமா றெங்ஙனேயென வினுதல்.]

ஏகமாய் மனமிறந்தாற் சீவன் முத்த
ரிருக்குமட்டும் பிராரத்த மெதினு லுண்பார்
போகமா னதுபுசித்துத் தொலைப்ப தன்றே
புசிப்பதென்றுன் மனந்தானும் போன தன்றே
சோகமா மனமிறந்தாற் போக மில்லை
தோன்றுமெனின் முத்தரென்று சொலக்கூ டாதே
மோகமா மிதுதெளியக் குருவே நன்று
மொழிந்தருள்வாய் தெளிந்ததன்றே முத்தி தானே. (ககூ)

இ - ள். ஏகம் ஆய் மனம் இறந்தால்=(நன்னீரிலுப்புப்போலப் பிரஹ்மத்தின்கண்) ஒன்றுய் மனமானது நாசமாயின்,—சீவன்முத்தர்=ஜீவன் முத்தர்கள்—இருக்கும் மட்டும்=(தேகம்) உள்ளளவும்—பிராரத்தம் எதினுல் உண்பார் = பிராரத்தபோகம் எச்சாதனங் கொண்டநுபவிப்பர்;—போகம் ஆனது புசித்துத் தொலைப்பது அன்றே=பிராரத்தபோகம் அநுபவித்துத் தொலைக்கவேண்டுவ (தோ?) அல்லவோ—புசிப்பது என்றுல்=அநுபவித்துத் தொலைக்க வேண்டுவது தானென்னின்?—மனந்தானும் போனது அன்றே=(போகசாதனமான) மனமும் இறந்ததல்லவே,—சோகம் ஆம் மனம் இறந்தால்=துன்பமயமான மனமானது நாசமாலுல்—போகம் இல்லை=(சுழுத்தியிற்போலப்) பிராரத்த போகாநுபவமில்லை;—தோன்றும் எனின்=(அஞ்ஞானிகட்குப்போல மனமிறவாமல்) தோன்றுமாயின்,—முத்தர் என்று சொலக்கூடாதே=ஜீவன் முத்தரென்று சொல்லலாமா?—(ஆகலின்,) மோகம் ஆம் இது தெளிய=மயக்கமாகிய இச்சந்தேகம் ஒழிய—குருவே—நன்று மொழிந்தருள்வாய்=விசேஷமாக உத்தர முபதேசித்தருள்வீராக:—தெளிந்தது அன்றே முத்தி=ஐயந்தெளிந்த நிலையல்லவா ஜீவன்முத்தி.—எ - று.

தான், ஏ - இரண்டும் அசைநிலைகள்.

இப்படியே வாசிட்டத்தில்,

"தனையுணர்ந்தோர், கொள்ளுற்ற தொழிலெல்லா மனத்தன்றே, கொள்மனமன் றியினடக்குங் கொள்கை யென்றே"—

என்று சிகித்துவசனுல் வினவப்பட்டிருக்கிறது. (ககூ)

(191) [சங்கைகீத உத்தரம்.]

மனநாசஞ் சொரூபமென்று மரூப மென்றும்
வகுத்துரைப்பா ரிருவகையா வருமி வற்றில்

வினவாத சீவன்முத்த ரிடத்தி லொன்றும்
விதேகமுத்த ரிடத்திலொன்று மேவுங் கண்டாய்
தனதான சத்துவமாய் மனஞ்சே ஷித்துத்
தமசுரச சுகணசித்தல் சொரூப நாசம்
அனகாசத் துவந்தானு மிலிங்க தேக
மடங்கும்போ தடங்குதலே யரூப நாசம். (உ0)

இ - ள். வெளி.

"ஒன்று மருவு முருவுமென வுளத்திலுசை மோரிரண்டே"—எ - ம்,

"சீவன் முத்தி தனிலுருவ நாசஞ் சித்தந் தனக்குளதாந், தாவி லுடதீர் முத்திதனிற் சாற்று மருவ நாசமுறும்"—எ - ம்,

இதற்கு மூன்னூலாகிய வாசிட்டத்திற் கூறியிருப்பதுபோல இங்குங் கூறினர். (உ0)

(192) [சங்கைக்குத்தாங்கூறி முடித்தல்.]

சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாகுந்
துகளிருள்போ ஞன்மனமென் சொல்லும் போம்போம்
வர்த்தமா னத்தில்வந்த வுணவை யுண்பார்
வருவதும்போ வதுநினைந்து மகிழார் வாடார்
கர்த்தரா மகந்தையைவிட் டகர்த்த ராகிக்
கரணவிருத் திகளவத்தை காண்பா ராகி
முத்தரா யிருக்கலுமாம் புசிப்புங் கூடு
முட்டிலையென் றறிந்துசங்கை மோசிப் பாயே. (உக)

இ - ள். சுத்தம் ஆம் சத்துவமே = சுத்தமான சத்துவகுணமே — உண்மை ஆகும் = (மனத்திற்கு) உபாதானகாரணமாம். — துகள் = துகளென்னும் (இராசோகுணமும்,) — இருள் = இருளென்னும் (தமோகுணமும்) — போனால் = (சன்மார்க்கமான ஞானப்பியாசத்தினால் ஒழிந்து) போமாயின், — மனம் என் சொல்லும் = மனமென்னும் வியவகாரமும் — போம் போம் = ஒழிந்துவிடும். — வர்த்தமானத்தில் = நிகழ்காலத்தில் — வந்த உணவை = (பிராரத்தகர்மத்தால்) வந்துபொருந்துகின்ற உணவுகளே — உண்பார் = உண்ணுகிற்பர். — வருவதும் போவதும் நினைந்து = (இனி) வருவதும், (முன்) போனதுமான (பதார்த்தங்களே அஞ்ஞானிகளேப்போல) நினைந்து நினைந்து — மகிழார் வாடார் = சந்தோஷியார், கிலேசியார். — கர்த்தர் ஆம் அகந்தையைவிட்டு = (நாம் இதற்குக்) கர்த்தாவாமென்னும் அகம்பாவத்தை விடுத்து — அகர்த்தர் ஆகி = அகர்த்தாவாய் — கரண விருத்திகள் = அந்தக்கரணத்தி விருத்திகளையும், — அவத்தை = விருத்திகட்கு ஆதாரகாலமாகிய (சாக்கிர முதலிய) அவஸ்தை

களையும்—காண்பார் ஆகி=காணுஞ் சாட்சி ரூபராய்,—முத்தர் ஆய் இருக்கலும் ஆம்=முத்தராயிருக்கவுங் கூடும்:—புசிப்பும் கூடும்=பிராரத்தபோக முங்கூடும்;—முட்டு இலை என்று அறிந்து=(இவ்வாறிருத்தற்கு) யாதொரு தடையுமின்றென்று நிச்சயித்து—சங்கை மோசிப்பாய்=சங்கையை யொழிப்பாய்.—எ - று.

"சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாதும்" என்றதால், சத்துவ நாசமாகும் விதேக கைவல்யத்தில் உபாதானகாரணம் நசித்துக் காரியம் இராதாதலால் மனதத்தியந்த நாசமாமென்பது பெறப்படுகின்றது

"சுத்தமோ டழுக்கிருட்டாச் சொல்லு முக்குணமும்" என்று, முதற் படலத்திற் கூறியபடியே இராஜததாமதங்களை இங்கும், "துகளிருள்" என்றார்.

"இல்லை யில்லை யென் றீசனியம்பினன்"—

என்பதுபோல, "போம் போம்" என்னும் அடுக்கு நிச்சயப் பொருளில் வந்தது. "வர்த்தமானத்தில்வந்த வுணவை யுண்பார் வருவதும்போவதுநினைந்து மகிழார் வாடார்" எ - கு, அருவமனம் உண்மையானும், உருவமனம் இன்மையானும் என்பது கருத்து; இக்காரணத்தால் முத்தராயிருத்தற்கும், போகம் புசித்தற்கும் சந்தேகமின்றென்றறிதி என்பார், "முத்தராயிருக்கலுமாம் புசிப்புங்கூடு முட்டிலையென் றறிந்துசங்கை மோசிப் பாய்" என்றார். "கர்த்தரா மகந்தையைவிட் டகர்த்த ராகிக் காணவிருத் தீகளவத்தை காண்பாராகி" எ - து, முத்தர்க்கு விசேஷணம்; இவ்விசேஷணத்தில், "கர்த்தரா மகந்தையைவிட்டு" என்ற விசேஷணம், இதற்கு முன்னுலாகிய வாசிட்டத்தில்,

"சித்தமாவது நானெனச் செப்புவர்"—எ - ம்,

"அகங்காரத் துருவா மந்தமன நிச்சயமாகத் திதமாய் நழுவி நெடு நாளாம்."—

என்றுங் கூறியிருப்பதால் இம்முக்கிய மனநாச முண்மையின், முத்தராதல் கூடுமென்று, "தோன்றுமெனின் முத்தரென்று சொலக்கூடாதே" என்னும் ஐயம் ஒழிவித்தற் பொருட்டாமென்க. "காணவிருத் தீகளவத்தை" எ - கு, அந்தக்காரணத்தின் கோர, சாந்த, மூடவிருத்தி ரூபங்களாகிய சாக்கிரமுதலிய அவஸ்தைகளை யெனினும் அமையும்.

"துகளிருள்போ னன்மனமென் சொல்லும் போம் போம்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"உரையெனமன் னவன்கேட்பக் கும்பன் சொல்வா
னுளமென்று சொன்னதுவே றொன்று மன்று
கரையறுபல் பவந்தருவா தனையே யுள்ளங்
கண்டதனை யறிந்தாலக் கவலை யில்லை

வரையறக்கண் டவர்கருமங் களிற் சரிக்கும்
வாதனைதான் மறுபிறப்பை வழங்கா தந்தப்
புரைமனஞ்சத் துவமென்பர் சித்த மென்று
போதமில்லாச் சித்தத்தைப் புகல்வ ரன்றே.”—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (உச)

[விகற்பநடமான வியவகாரமுடையோர்க்கு ஏகாக்கிர சித்தத்தினுல் ஜீவன்முத்தியும் பிரஹ்மானுபவம் அவ்வேகாக்கிர சித்தவோழிவா லொழிந்துபோமல்லவாவென்று சீடன்கொள்ளுமாசங்கையைப் பற்றிக், கேவுண மனநாசமில்லையாயினும் அகங்காரநடமான முக்கிய மனநாசமுண்மையான், ஆருடர்க்கு வியவகாரத்தில் பிரஹ்மானுபவம் நீங்காதென்பதைத் திருஷ்டாந்த முகத்தாற் கூறுகின்றர்.]

விவகார வேளையெலாஞ் சமாதி யென்றல்
விகற்பமன்றே மனமலைந்து விடாதோ விட்டால்
அவதான நழுவுமன்றே வென்று யாகி
லதற்கொருதிட் டாந்தங்கே ளாசை கொண்டு
நவமாகப் பரபுருடன் றன்னைக் கூடி
நயந்தசுக மநுபவித்த நாரி நெஞ்சந்
தவமாக மனைத்தொழில்கள் செய்யும் போதுந்
தழுவியநு பவித்தசுகந் தனைவி டாதே. (உஉ)

அவதானம்=பிரஹ்மான்ம வைக்கியரூபமான நிச்சயம்.—ஏனைய பதப் பொருள் வெளி.

(193) அபிப்பிராயம்—திடஞானம், அதிடஞானம் என ஞானம் இருவகைத்தாம்; அவற்றுள் வைராக்கிய, தியானுப்பியாச வலியாற் சுவாதீன சித்தமுடையோனுக்குத் தத்துவஞான முண்டாகில் அவன்புத்தி சோரநாயகனிடத் தன்புள்ள நாரியின்புத்தி தனது வீட்டுக்காரியஞ் செய்யும்போதும் அச்சோரநாயகனையே தியானியா நிற்பதுபோல நிரந்தரந் தத்துவத்தையே தியானித்துக்கொண்டிருக்கும்; அத்தன்மையான ஞானந் திடஞானமெனப்படும். வைராக்கியம், தியானுப்பியாச மின்மையோனுக்கு ஏதேனு மொரு புண்ணிய விசேஷத்தால் தத்துவஞான முண்டாயினும் அவன் புத்தி சோரநாரியின்புத்தி வீட்டுக்காரியத்தை மறந்து விடுவதுபோல உடனே தத்துவத்தை மறந்துவிடும்; அத்தன்மையான ஞானம் அதிடஞானமெனப்படும். திடஞானமுடையோர் திடப்பிரஞ்ஞர்; இத்திடப்பிரஞ்ஞர் காலபேதத்தால் சமாகிதர், உத்திதர் என இருவகையாயிருப்பர்; அவர்களுடைய லட்சணம் கீதையில் பகவானுற் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே திடப்பிரஞ்ஞரைச் சொன்னதால் அவருக்கு வியவகாரம் விரோதமாகாதென்பது.

இதற்கு, உ - ம், வாசிட்டம்,

"காயத்தில் வேறுகத் தன்னைக் கண்டோன்
காயமீ ரினுமறியான் கன்னற் கட்டி
தீயிற்கா யினுமரிந்த போது மின்பந்
தீராத வாறுபோற் றெளிந்த ஞானி
மாயத்தின் மோகத்தாற் பேத மாகான்
மணந்தபா புருடன்மேன் மனஞ்சேர் மங்கை
நேயத்தான் மனைத்தொழில்கள் செய்யு மாபோ
னிகழ்தொழிற்செய் யினும்பரத் தினிலமை நீங்கான்."—எ-ம்,

"வெறிதி ருக்கினுந் தொழிலினை மேவினும் விடாம
லறிஞ னென்றுதான் சமாதிவிட் டகன்றவ னுகுஞ்
செறியுஞா னஞ்சேர் மனத்தினர் சகத்தொழில் செயினும்
பிறிவி றத்துவ நிட்டராய்ச் சமாதியிற் பெயரார்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (உஉ)

[இனித் திடஞானத்தின்பலத்தை அறிவிக்குங் கருத்தினராயீச்
சீடன்வினவும் வினவைத் தாமே யெடுத்துக் காட்டி
அதற்கு விடைகூறத் தொடங்குகின்றார்.]

தேகத்த னலனுகி யகர்த்த னுகிச்
சீவனின்றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன்
போகத்தை யுண்பனென்றுற் கருத்தா வாமே
பூரணமா மகர்த்தனுக்குப் போக முண்டோ
சோகத்தை யறுத்தருளுங் குருவே யிந்தத்
துகளறுக்க வேண்டுமென்று சொன்னு யாகில்
மாகர்த்தன் மாபோகி மாத்தி யாகி
வகைமூன்று யவரிருக்கு மகிமை கேளாய். (உங)

இ - ள். தேகத்தன் அலன் ஆகி = ஸ்தூல சூட்சும சங்காதங்களி லிருக்கும் மநுஷ்ய, பிராமணச்வாதிகளிற் றுதான்மிய மற்றவனுய்,—அகர்த்தன் ஆகி = அகர்த்தனுய்—சீவன் இன்றி = (அச்சங்காதங்களே விசேஷணமாக வுடைய) ஜீவத்வமிறந்து—பிரமம் ஆய் = பரிபூரணப் பிரஹ்மமாய்—தெளிந்த முத்தன் = தன்னையறிந்திருக்கும் சீவன் முத்தன்—போகத்தை உண்பன்என்றுல் = போகத்தைப் புசிப்பனென்று சொல்லில் = கருத்தா ஆமே = கருமகருத்தாவாகிய ஸ்தூல சூட்சும சங்காதங்களும், சங்காத விசிஷ்டனும் தானுவனே?—பூரணம் ஆம் அகர்த்தனுக்கு = பரிபூரணப் பிரஹ்மமே தானுயிருக்கும் அகர்த்தனுகிய சீவன் முத்தனுக்கு—போகம் உண்டோ = பிராரத்த போகமேது?—சோகத்தை அறுத்தருளும் குருவே = துன்பத்தை யொழித்தருளா

நிற்கும் ஆசிரியரே—இந்தத்துகள் அறுக்கவேண்டும் என்று சொன்னாய் ஆகில்=இச்சந்தேகம் நிவிர்த்திப்பித் தருளவேண்டுமென்று நீ சொல்லில்—மாகர்த்தன் மாபோகி மாத்தியாகி (என)—மூன்றுவகை ஆய்=மூவகையாய்—அவர் இருக்கும்=அச்சீவன் முத்தரிருக்கும்—மகிமை கேளாய்=பெருமையைக் கேட்பாய்.—எ - று.

கிரகத்தன் என்பதுபோல "தேகத்தன்" என்றார். "தேகத்தனாலனாகி" என்பதற்கியற்றிய வுரையின் கருத்தை, கூஉ - ம் பிரசங்கத்தில் தருமாத்தியாசத்திற் குதாரணங் கூறியிருப்புழி காண்க.

விஞ்ஞானின் கருத்து;—யாவனிடத்துத் துக்கமுண்டோ அவன் துக்கநிவிர்த்தி, சுகப்பிராப்திகளி னிமித்தங் கிரியை செய்யாநிற்பன்; அவனே கர்த்தாவாம்; எவன் கர்த்தாவோ அவன் போகத்தை யுண்ணும் போக்தாவுமாம். புண்ணிய பாவங்களின் ஜநகமான கர்மத்திற்குக் கர்த்தாவும், கர்மபலமான சுகதுக்கங்களைப் புசிக்கும் போக்தாவும் ஸ்தூல சூட்சும சங்காதங்களாகலின், அவற்றிற்குச் சாட்சியான பரிபூரணப் பிரஹ்மசொரூபந் தானனசீவன் முத்தனுக்கு எவ்வாறு கர்த்திருத்துவ, போக்திருத்துவங் கூடும் என்பதாம். (உங)

(194) [மஹாகர்த்தன் இலக்கணங் கூறுகின்றார்.]

செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச்
சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்கு மாபோல்
செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்கு மென்முன்
செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யும்
மெய்கலந்த விந்திரிய விகார ரூப
விவகார விருத்திக்கும் விருத்தி தானு
மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சி யேதான்
வெயில்போலென் றுறைத்தவனே விபுமா கர்த்தன். (உச)

இ - ள். செய்கையும்=(ஒன்றைச்) செய்யுந்தன்மையும்,—செய்விக்கையும்=செய்விக்குந் தன்மையும்—அற்று=(தான்) உடைத்தாகாமல்—இருக்கும்=(ஏகமாய்ப் பெரிதாய் அசஞ்சலமாய்) இருக்கின்ற—காந்தச்சிலை மலைமுன்=காந்தக்கல்லாகிய மலையின் முன்னே—இரும்புகள்=(அநேகமாய்ப் பரிச்சின்னங்களாய்த் தமக்கெனச் சேட்டையற்றுள்ள ஊசிமுதலிய) இரும்புகள்—சேட்டிக்குமாபோல்=சலியாநிற்குந் தன்மைபோல—செய்கையும்=(ஒன்றைச்) செய்யுந் தன்மையும்,—செய்விக்கையும்=செய்விக்குந் தன்மையும்—அற்று இருக்கும்=இன்றி (ஏகமாய்ப் பூரணமாய்ச் சித்தாய்) இருக்கும்—என்முன்=எனது சந்நிதியில்—செடம் ஆன உலகம் எலாம்=(அநேகமாய்ப் பரிச்சின்னங்களாய்ச்) சடமாயுள்ள பிரபஞ்சங்களெல்லாம்—சேட்டை செய்யும்=(தத்தம்) வியவகாரங்களைச் செய்யாநிற்கும். — வெயில்போல்=(உலக வியவகாரத்திற்கும், வியவகாரத்தின் அபாவத்திற்கும் சாட்சிமாத்

திரமா யிருக்கும்) சூரியன்போல—மெய்கலந்த=சரீரத்தின்கட் பொருந்திய — இந்திரியவிகாரரூப=(நேத்திராதி) இந்திரியங்களால் * விகாரரூபமான—விவகார விருத்திக்கும்=(காண்டன்மூதலிய) வியவகாரங்களையுடைய (மனை) விருத்திக்கும்—விருத்தி=மனைவிருத்தி—தானை=தன்மயமாக—மெய் கலந்த=பிரஹ்மத்தின்கட் பொருந்திய—சமாதிக்கும்—நான் சாட்சியே என்று=யான் சாட்சி மாத்திரமாகவுளனென்று—உறைத்தவனே=அழுந்திய அநுபவமுடையவனே—வியு மாகர்த்தன்=வியாபகமான மஹாகர்த்தனும்.—எ - று.

"வெயில்" எ - து, சினையாகுபெயர்.

"கூட்டு பொறியின் றொழிலெல்லாங் கொள்ளு மனஞ்செய்குவதன்றே"—எ - ம்,

"தனையுணர்ந் தோர்கொள் ளுற்ற தொழிலெல்லா மனத்ததன்றே"—எ - ம்.

வாசிட்டத்திற் கூறியபடியே இங்கும், "மெய்கலந்த **விந்திரிய விகார நப விவகார விருத்திக்கும்**" என்றார். "செய்கை" =சுயங்கருத்திருத்வம். "செய்விக்கை"=அந்நியப்பிரோணவேது கருத்திருத்வம்; இவ்விரண்டு மில்லையென்பது அகர்த்தாத்ம திடநிச்சயத்தாலென்க. (உச)

[மஹாபோகி, மஹாத்தியாகிகளின் இலக்கணங் கூறுகின்றார்.]

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்த
மபத்தியம்பத் தியமெனவு ணர்ந்தி டாமல்
பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்போற்
போகங்கள் புசிப்பவன்மா போகி யாகும்
சிறிதுபெரி துகடனதந் நியங்க ணன்மை
தீமைகள்சே ரினும்படிகச் செயல்போற் சித்தம்
வெறிதிருக்கு மவனேமாத் தியாகி யாவன்
விரதமிம்மூன் றுடையவரே வீடு ளோரே. (உரு)

இ - ள். அறுசுவையின் உணவுகளுள்—குணம் குற்றம் (என)=(இது) குணமென்றும், (இது) குற்றமென்றும்,—அசுத்தம் சுத்தம் (என)=(இது) அசுத்தமென்றும், (இது) சுத்தமென்றும்,—அபத்தியம் பத்தியம் என=(இது) அபத்தியமென்றும், (இது) பத்தியமென்றும்—ஆய்ந்திடாமல்=பகுத்துப்பாராமல்—பொறுமை உடன்=சகிப்போடுகூட—கிட்டினதைக் காட்டுத்தீப்போல்=(தன்னை) நெருங்கிய சகலத்தையுங் காட்டக்கினி புசிப்பதுபோல்—போகங்கள் புசிப்பவன்=(உணவாதி) போகங்களைப் புசியா நிற்பவன்—மாபோகி ஆகும்=மஹாபோகியாம்.—சிறிது

* விகாரம்=வேறுபாடு.

பெரிதுகள்=சிறிதும், பெரிதுமான பொருள்கள்,—தனது அந்நியங்கள்=தன்னுடையதும், பிறருடையதுமான பொருள்கள்,—நன்மை தீமைகள்=புண்ணியபாவங்கள்—சேரினும்=தன்னேவந் தடையினும்—படிகச் செயல் போல்=(அடுத்த வர்ணங்களேப்பற்றுத) படிகத்தின் றன்மைபோல—சித்தம்—வெறிது இருக்கும் அவனே=பற்றற்றிருக்கு மவனே—மாத்தியாகி ஆவன்=மஹாத்தியாகி யெனப்படுவன்;—இம்மூன்று விரதம் உடைய வரே=(மஹாகர்த்தன், மஹாபோகி, மஹாத்தியாகி என்னும்) இம்மூவகை விரதமுமுடையோரே—வீடு உளோர்=மோட்சத்தை யுடையராவர்.—எ-று.

"தணம்"=ரசமுடைய உக்கிருஷ்டாந்நாதிகள். "தூற்றம்"=ரசமில்லாத நிகிருஷ்டாந்நாதிகள்; அல்லது, சாத்துவீகாகாரம், தாமதாகாரமெனினு மொக்கும். "அசுத்தம்"=ஊசினபழஞ்சோறு, உச்சிஷ்டம், தேவாராதனத்துக்கு அருகமல்லாதது முதலியன. "சுத்தம்" சீராக அப்போது சமைக்கப்பட்டுக் கண்ணுக்கு ரம்மியமாயும், நாவுக்கு ருசியாயுமுள்ள அந்நாதிகள். "அபத்தியம்"=வைத்தியசாஸ்திரத்தில் நிஷேதித்தவை: "பத்தியம்"=அதில் விதித்தவை என்க. இங்கே 'பொறுமை" எ-து, விகாரம் அடையாமையை: காட்டுத் தீயானது இது சந்தனமரம், இஃதெட்டிமரம், இது பச்சைமரம், இது பட்டமரம் என பகுக்காமலும், கிட்டினதைவிட்டு அப்புறந்தாவாமலும், தான் அவைகளின் மயமாகாமலும் தன்மயமாக அவைகளேத் தகிப்பதுபோலத் தத்துவஞானியும் உசிதமான உணவுகளே நிராதிசயாநந்த பூரண அத்வைதாத்மபுத்தியால், அல்லது மித்தியா புத்தியால் பகுத்துப் பாராமலும், கிடைத்ததைவிட்டுக் கிடையாததை இச்சியாமலும், தான் அவைகளின் மயமாகாமலும் தன்மயமாகவே புசிப்பன்; இங்ஙனம் புசிப்பினும் நித்தியதிருப்தாத்ம தரிசனத்தாற் புசித்திலன். "ஊணுயிந்திடாமல்" என்றதால், நன்றெனப்புசியாநிற்ப னென்பது கொள்ளக்கிடந்தது இதற்கு முன்னூலான வாசிட்டத்தில்,

"அகலாசு மிடிகளு நன்றெனப் புசிப்போன்."—

என்று கூறியிருப்பதால் "உணவாதி" என்றும். சுவர்ணத்திலுற் செய்யப்பட்ட வியாக்கிரம் இரம்மியமான சுவர்ணதிருஷ்டியால் இரம்மியமாவது போலப் பிரஹ்மதிருஷ்டியால் சகல போகங்களும் சீவன் முத்தனுக்கு இரம்மியமாகத் தோற்றுவதால், "ஊயிந்திடாமல்" என்றார். "வெறிதிருக்கும்" எ-து, மித்தியாபுத்தியாலென்க. "விரதமிம்முன் றுடையவரே" என்னுந் தேற்றேகாரத்தால் தவம், மகம், தீர்த்தம், சேவை, அருச்சனே, தானமாதிய புறக்கருமங்களேயுடைய மற்றையர் நிராதிசயாநந்த மோட்சம் அடையாரென்பது பெறப்படுகின்றது. இம்மூன்றையும் விஸ்தாரமாக அறியவேண்டில் வாசிட்டத்தில் விரதசயைகதையில் பரமசிவனுல் பிருங்கீசற் கருளிச்செய்யப்பட்டிருப்பதால் அதிற்காண்க. இம்மூவகை விரதங் கூறினவழியால், "போகத்தை யுண்பனென் றற்கருத்தா வாமே பூரணமா மகரித்தனுக்குட் போக முண்டோ" என்னும் சங்கைக்குப் பிராரத்த வசத்தால் போகத்தை

உண்பவனுயும், உசிதமான கருமத்தைச் செய்பவனுயும் ஞானிதோற்றினும் அகர்த்தாத்ம திருஷ்டியால் அவை அவனுக்கு இன்றென் றுத்தரங் கூறின தாம். (உடு)

(195) [ஞானபலமான கிருத கிருத்தியத் தன்மையைப் பற்றி உள தாதும் பிரமேயசந்தேகத்தை நிவிர்த்திசெய்து கோடற்பொருட்டுச் சீடன் வினுதல்.]

[வேறு.]

மெய்யுங் கொண்டுபி ராரத் தந்தரு விதிவழி நின்றிடவும்
உய்யுங் கர்மிக ளுக்கது குணமா வுறுதொழில் செய்திடவும்
செய்யுஞ் செய்கைமு டிந்தவ னென்றுரை செப்புவ தெப்படியோ
நையுந் துன்பம கற்றிய குருவே நலமா வருள்வீரே. (உசு)

இ - ள். மெய்யும் கொண்டு=("சாலமீத தொழிற் பறவைக்கிடமாங் கூடு" என்னும்) சரீரமுந் தரித்துக்கொண்டு—பிராரத்தந்தரு=பிராரத்தத் தால் வரப்பட்ட—விதி வழி=நியதியின் நெறியில்—நின்றிடவும்=நிற்கவும், —உய்யும் கர்மிகளுக்கு=(உறுதியறிந்து தாம்) பிழைக்கவேண்டுமென்னும் கருமகாண்டிகட்கு—அதுகுணமா = அதுகூலமாக—உறுதொழில்=பொரு ந்துகின்ற கருமோபாசனைகளை—செய்திடவும்=செய்யாநிற்கவும்—செய்யும் செய்கை முடிந்தவன் என்று=(ஞானி) கிருதகிருத்தியனுமென்று—உரை செப்புவது=கூறுகிற்பது—எப்படியோ=எவ்வாறே (யான் அறியேன்)— நையும் துன்பம்=(வெகுகாலமாக) வருந்துதற்குக் காரணமாயிருந்த துக்கங் களை—அகற்றிய குருவே=ஒழிவித்தருளிய குருவே—நலமா அருள்வீர்= (இச்சங்கைக்கு) நன்றாக உத்தரம் அருள்செய்வீராக.—எ - று.

ஞானத்தால் அஞ்ஞானநிவிர்த்திசெய்து துன்பம் ஒழிவித்தமையின், "நையுந் துன்பம கற்றிய தருவே" என்றான். (உசு)

[மேலை வினவிற்கு விடைகூறல்.]

ஆடவர் செய்தொழின் மூவகை யாகும வித்தைவசத் துறுநாள்
ஏடணை மமதைய கந்தையு ளார்க்கே யிகபர விவகாரம்
வீடணு குவமெனு மிச்சையு ளார்க்கே வித்தைப டிப்பதெலாம்
பாடன்மி குந்தொழி லாற்பல னுண்டோ பரிபூ ரணமானுல். (உஎ)

இ - ள். அவித்தை வசத்து உறும்நாள்=(தத்துவஞானத்திற்கு முன்னே) அவித்தியாவசத்திற் பொருந்தி யிருக்குங்காலையில்—ஆடவர் செய்தொழில்= (இஷ்டப்பிராப்தி, அநிஷ்டநிவிர்த்திக்காகப்) புருஷராயினோர் செய்யத்தக் கனவான கிருத்தியங்கள்—மூவகை ஆகும்=(உழவாதி, எக்ஞாதி, சிரவணாதி என) மூவிதமாம்;—(அவற்றுள்,) ஏடணை=(போகத்தில்) இச்சையும்,— மமதை=(குடும்பத்தில் எமதென்னும்) அபிமானமும்,—அகந்தை=(தேகத்

தில் ஆத்மத்துவ, பிராமணத்துவாதி) அபிமானமும்—உளார்க்கே=உடையோர்க்கே—இகபர விவகாரம்=(உழவாதிகளான) இகலோக (வியவகாரங்களும், எக்ஞாதிகளான) பரலோக வியவகாரங்களும் (செய்யத்தக்கனவாம்.) —வீடு அணுகுவம் எனும்=(அநேக ஜநந்தொடுத்துத் தாம் அநுஷ்டித்து வந்த நிஷ்காமபுண்ணிய புஞ்சபரிபாகவசத்தால் சித்தசுத்தி யடைந்து சகத்து அநித்தியமென்னும் விவேகமுதயமாகலின், ஏடணை மமதை அகந்தைகள் குறைந்து) மோட்சமடையக் கடவேமென்னும் — இச்சை உளார்க்கே= இச்சை யுடையோர்க்கே — வித்தைபடிப்பது எலாம்=ஞானசாஸ்திர சிரவண, மனன, நிதித்தியாசனங்க ளனைத்தும் (செய்யத்தக்கனவாம்.)—பரிபூரணம் ஆனல்=(தேசகாலவஸ்து பரிச்சேத சூனியமான) பிரஹ்மமேதாமானல் —பாடல்=சிரவண மனனநிதிகளான (மோட்சகிருத்தியங்களாலும்), மிகும் தொழிலால்—மிகுந்த (உழவாதிகளான) இகலோக கிருத்தியங்களாலும், (எக்ஞாதிகளான) பரலோக கிருத்தியங்களாலும்—பலன் உண்டோ—(அவர் அடையத்தக்க) பயன் யாதேனும் உண்டோ? (இல்லை.)—எ - று.

"பாடல்" எ - து, உபலட்சணம்.

"யாதோன் றினைப்பெற் றவரிதனின் மிக்கதொப்ப தண்டென்னூர்."—

என்று கீதையில் பகவானலும், யாதொருலாபத்துக்கு மேலானலாபம் வேறொன்றுமில்லையோ அது பிரஹ்மமென்று ஆத்மபோதத்தில் பூஜ்யபாதரான சங்காசாரியாலும் அருளிச்செய்யப்பட்டிருப்பதானும், தமது அநுபவ பலத்தானும் பிரஹ்மலாபத்துக்கு மேலானதாக ஞானிகளால் அடையத்தக்கதான இலாபம் வேறொன்று மில்லையென்பார், "பலனுண்டோ பரிபூரணமானல்" என்றார்.

குடும்பபுத்தியும், போகத்திச்சையும் இன்மையின், உழவாதிகளும், கிஞ்சிஞ்ஞனுக்கு விஷயமான எக்ஞாதிகள் தனக்கு விஷயமாகாமையின் அவ்வெக்ஞாதிகளும், பிரஹ்மமானது கண்டசாமீகர நியாயம்போல ஞானியால் அடையப்பட்டிருத்தலின் சிரவணாதிகளும் ஞானிக்குச் செய்யவேண்டுவனவாகவில்லை; இதுவே கிருதகிருத்தியத்தன்மை யென்றறிதி என்பதாம்.(உஎ)

(196) [இன்னும் இதனை நன்றாக அறியவேண்டித் தூஷகநந நியாயப்படி சங்கிக்கின்றன்.]

குரவர்சி காமணி யேகே ளீர்நீர் கூறின வழியொக்கும்
பாமுட னிகமுமி ழுந்தவ ரன்றே பழகுவர் மெய்ஞ்ஞானம்
விரவுமு யற்சியின் மீண்டவ ரதையினி வேண்டுவரோவேண்டார்
சிரவண மனனு திகள்வேண் டாவோ சித்தமு றைத்திடவே. (உஅ)

இ - ள். குரவர் சிகாமணியே கேளீர்=தேசிகசிரோரத்னமே (எனது விண்ணப்பம்) கேட்பீராக;—நீர் கூறின வழி ஒக்கும்=("பாடன்மிதுந்

தொழிலாற் பலனுண்டோ பரிபூரணமாஞல்") என்று தேவரீரருளிச்செய்த வழி ஒவ்வும்;—பாமுடன் இகமும் இழந்தவர் அன்றே=பரலோகத்திச்சையும், இகலோகத்திச்சையும் விட்டவரல்லவா—மெய்ஞ்ஞானம் பழகுவர்=தத்துவஞானம் பயிலாநிற்பர்.—விரவும் முயற்சியின் மீண்டவர்=(போகேச்சையுடையரால்) பொருந்தாநிற்கும் (இகலோக பரலோக) முயற்சியினின்றும் (ஞானநெறிக்கண்) மீண்டவர்—அதை இனி வேண்டுவரோ வேண்டார்=அவ்விகலோக பரலோக கிருத்தியங்களாகிய உழவாதி, எக்ஞாதிகளே இனி(ச் செய்ய) விரும்புவரா விரும்பார்.—சித்தம் உறைத்திட=சித்தம் அநுபூதிக்கண்ணழுந்த—சிரவண மனன ஆதிகள்வேண்டாவோ=சிரவண மனன நிதித்தியாசனங்கள் (அவர்க்கு) வேண்டாவோ.—எ - று. (உஅ)

[மேலே விஞவிற்கு விடைகூறல்.]

கிளர்மக னேகேள் தத்துவ மறியார் கேட்டல்செ யக்கடனே
தளர்வறு சிந்தித் தலின்முயல் வார்சிலர் சந்தே கங்களுளார்
தெளிதலி னிற்பார் விபரீ தப்பேய் தீரா வாதனையோர்
வெளியுரு வாயறி வாய்நிறை வாயினர் வேண்டுவ தொன்றுண்டோ.

இ - ள். கிளர் மகனே கேள்=(ஞானமயமாய்) விளங்காநின்ற மைந்தா (உனது விஞவிற்கு யாங்கூறும் விடையினை) நீ கேட்பாய்:—தத்துவம் அறியார்=(அத்துவிதமான) பிரஹ்மத்தை (ஆன்மாவாக) அறியாதவர்—கேட்டல் செயக்கடனே=சிரவணஞ்செய்ய வேண்டுவது முறைமைதான்;—தளர்வு அறு சிந்தித்தலின் முயல்வார்=(சகல) இடருமறுதற்குக்காரணமான மனனத்தின் முயற்சிப்பர்—சந்தேகங்கள் உளார் சிலர்=சந்தேகங்களையுடைய சிலபேர்.—விபரீதப் பேய்தீரா வாதனையோர்=விபரீதப்பேயென்னு மொழியாத (மலின) வாசனையுடையவர்—தெளிதலில் நிற்பார்=நிதித்தியாசனத்தின்கண் (முயற்சியுடையராய்) இருப்பர்.—வெளி உருவு ஆய்=(அஞ்ஞானத்தின்) மறைப்பொழிந்த சொரூபமாய்,—அறிவு ஆய்=(தேகேந்திரியாதிகளுக்காணும்) அறிவாய்,—நிறைவு ஆயினர்=(பன்மைப்பேய்களுக்கவகாசமில்லாத) பூரணரூபமாயினோர்—வேண்டுவது ஒன்று உண்டோ=வேண்டுமென்று (அநுஷ்டிக்கத்தக்கது சிரவண மனன நிதித்தியாசனங்களுள்ளேயாதானும்) ஒன்றுண்டோ! (இல்லை.)—எ - று.

திதி, வார, நட்சத்திர, யோக, காரணங்களை அறியாதோர் பஞ்சாங்கத்தைக் கேட்டாவது, பார்த்தாவது அறியவேண்டுவதுபோலத் தத்துவம் அறியாதோர் சிரவணஞ் செய்யவேண்டுவது. பொன்னின்மாற்று நிர்ணயத்திற் சந்தேகமுள்ளவர்கள், ஆணிவைத்து உரைத்துப் பார்த்துக் கொள்ளுவதுபோலச் சீவபிரஹ்மங்களின் அபேதஞ் சத்தியமா? அல்லது பேதஞ் சத்தியமா என்பது முதலிய சந்தேகமுடையவர்கள் மனனம் பண்ணவேண்டுவது. திக்குப்பிரமை கொண்டோர் அதற்குக் காரணமான சூரியாதிகளை நாடித் தெளிவதுபோல விபரீத பாவனையுடையோர் நிதித்தியாசனஞ் செய்யவேண்டு

வது. "வெளியுருவாயீ" என்றதால், சிரவணஞ் செய்தற்குக் காரணமான அஞ்ஞானமும் "அறிவாயீ" என்றதால், மனனஞ் செய்தற்குக் காரணமாகிய சந்தேகமும், "நிறைவாயீ" என்றதால், நிதித்தியாசனஞ் செய்தற்குக் காரணமான விபரீதபாவனையும் ஆருடர்க்கு இன்றென்பதைக் குறிப்பித்தனர் என்க. (உக)

(197) [வியவகாழுடைய ஞானிகளிடத்து அஞ்ஞான, சந்தேக, விபரீதங்களுள் விபரீதபாவனை இல்லையென்பது எங்ஙனென வினுதல்.]

ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞா னிகள்போலே
செய்யா நின்றேன் கண்டே னுண்டேன் சென்றே னெனலாமோ
பொய்யாம் விபரீ தங்கள வற்குப் போயின வென்றீரே
மெய்யாம் பிரமவி சாரமி தன்றே வெளியா வுரையீரே. (ஈ0)

இ - ள். ஐயா கேளீர்=குருவே கேட்பீராக:—தத்துவஞானியும்=பிரஹ்மஞானியும்—அஞ்ஞானிகள் போலே=அஞ்ஞானிகளைப் போலவே—செய்யாநின்றேன்=(ஸ்நாந முதலியவற்றைச்) செய்கின்றேன்,—கண்டேன்=(இவனைக்) கண்டேன்,—உண்டேன்=(இன்னவந்நாதிகளை) உண்டேன்,—சென்றேன்=(இன்ன கிராமத்திற்குச்) சென்றேன்—எனல் ஆமோ=என்று சொல்லலாமா?—பொய் ஆம் விபரீதங்கள்=மித்தையாகிய விபரீத பாவனைகள்—அவற்குப்போயின என்றீரே=அப்பிரஹ்மஞானிக்கு நீங்கின வென்றருளிச்செய்தீரே—மெய்யாம் பிரமவிசாரம் இது அன்றே=(அவனுக்குரிய) சத்தியமாகிய பிரஹ்மவிசாரம் இஃதல்லவே?—வெளியா உரையீர்=வெளியாக இதனை யருள்வீராக.—எ - று.

"பிரஹ்மவிகாரமிதன்றே" என்றும் பாடமுளது; அது பிறழ்ந்த பாடம். "பிரஹ்மவிசாரமாவது"

"அணுவினுக் கணுவு நானே யப்படி மகத்து நானே
துணியிலெப் பொருளு நானே சோதியுட் சோதி நானே
பணிவுறத் தகுவே னானே பழையனும் புருட னானே
யிணைதனக் கில்லா வீச னகிய வின்ப னானே."—எ - ம்,

"ஒன்றி லணுகே னுன் சரைபற் றுள்ள மமதை யகங்கார, மென்ற வொன்று மிலன், துன்றுகுண மூன்றிலன் சரைசா விலனுன் சுத்தன் றாவறிஞன், நின்ற சாந்தன் சமரசனுன்."—எ - ம்,

"திரண நுனிகள் விசும்பிரவி தேவ ருராகர் நரரிடத்தில், விரியு மறிவே நான், குறுக்கு மேல்கீ ழென்போ தப்பெருமை யுலாவியது."—என்பதுமாம்.

நான் சென்றேன், கண்டேன், உண்டேன் என்பது அதற்கு மூணுதலான், இங்ஙனம் வியவகரியாநின்ற ஞானிக்கு விபரீதபாவனை இன்மூவது எவ்வாறுமென்பது சீடன் கருத்து. (கo)

[அதற்கு விடைகூறல்.]

ஓய்ந்தக ணுவிற் கண்டப ழங்கதை யோதுவன் வாதனையால்
ஆய்ந்தறி வுற்றவ னப்படி செப்புவ ணுபா சனுமாகான்
மாய்ந்தத னுடல்வே மளவும் விண்ணவன் மநுட னெனப்படுவான்
வீய்ந்தசி தாபா சன்போ மளவும் விவகா ரந்தொடரும். (கூ)

இ - ள். ஓய்ந்த கணுவில்=சாக்கிர வியவகார மொழிந்த சொப்பனத்தில்—கண்ட பழங்கதை=(ஒருவன் நாநா வியவகாரங்களைக் கண்டு சாக்கிரத்தில் விழித்துப்) பூர்வந்தான் கண்ட வியவகாரங்களை—வாதனையால்=(பூர்வ) வாசனையால்—ஓதுவன் = (எப்படிச்) சொல்லுவனே—அப்படி—ஆய்ந்து அறிவுற்றவன்=(ஆன்மா, அநான்மாக்களைத்) தேர்ந்து (அநான்மாவாகிய தேகாதிகளில் அத்தியாசமொழிந்து சந்தேகமில்லாமல் ஆன்மாவை) அறிந்தவன்—செப்புவன்=(பூர்வவாசனையால் செய்யாநின்றேன், கண்டேன், உண்டேன், சென்றேன் என்று) வியவகரியாநிற்பன்;—[இங்ஙனம் வியவகரிக்கினும்,] ஆபாசனும் ஆகான்=(வியவகாரகர்த்தாவாகிய) அந்தக்கரண சகிதனும்,(வியவகாரகரணமும்) அவனலனுவன்.—[வியவகாரம் எதுகாறுந்தொடர்ந்து நிற்குமெனின்;]—மாய்ந்த தன் உடல் வேம் அளவும்=(தேவத்துவ மடைவோமென்று அக்கினியிற் பிரவேசமாய்) மாய்ந்த தன் றேகம் வெந்து நீறுகு மளவும்—விண்ணவன்=தேவனு யிருப்பவன்—மநுடன் எனப்படுவான்=(அந்நியரால்) மநுடனென்று (எங்ஙனம்) வியவகரிக்கப்படுவனே (அங்ஙனம்)—வீய்ந்த சிதாபாசன் போம் அளவும்=(தத்துவஞானத்திலுல் அகம்பாவம்) இறந்த சிதாபாசன் (அத்தியந்தம்) அபாவமாகும் (விதேக கைவல்லியம்) அளவும்—விவகாரம் தொடரும்=வியவகாரம் தொடர்ந்து நிற்கும்.—எ - று.

அரசனுயுள்ளோன், நித்திரா மோகத்தாற் சொப்பனத்தில் பிட்சையேற்பவனுகத் தன்னைக் கண்டு விழித்தபின் அம்மோகம் நீங்கி அரசனு யிருந்துகொண்டு முன்னே சொப்பனத்திற் கண்ட வாசனையால் தன்னைப் பிட்சகனுகச் சொல்லினும் உண்மையாகத்தான் பிட்சகனென்பது அவனுக்கு உள்ளே இல்லாமைபோல ஞானியும் பூர்வவாசனையால் சிதாபாசனுகத் தன்னை வியவகாரத்திற் சொல்லினும் அவனுள்ளே அகங்காரக் கிரந்தி யின்மையின் அவன் சிதாபாசனல்லன்.

தான் தேவனுகவேண்டுமென்று அக்கினியிற் புக்கிறந்தோன் உடனே தேவனுனலும் அவன் தேகம் நசிக்குமளவும் மநுடனுக அந்நியரால் எப்படி வியவகரிக்கப்படுவனே அப்படித் தத்துவஞானத்தால் ஞானியும் உடனே பிரஹ்மமானுலும் பிராரத்ததேகம் நசிக்குமளவும் அந்நியருடைய திருஷ்டிக்குச் சிதாபாசனுக வியவகரிக்கப்படுவன்; அவ்வியவகாரம் விதேக கைவல்யமளவும் தொடரா நிற்குமென்பது கருத்து. (கூ)

[திருசியம் மித்தையாயினும், ஞானியும் நிஷ்டைகூட வேண்டுவது ஆவசியகமாதலால், கர்த்தவ்வியமான அதனை அநுஷ்டிக்கு மவன் கிருத கிருத்தியனாவது எங்ஙனென வினுதல்.]

ஆனு லையா குருவே காண்ப தசத்திய மென்றாலும்
நானு விவகா ரந்தூய ரலவோ ஞானசு கந்தருமோ
போனு லன்றே நன்று நிட்டை பொருந்திடல் வேண்டாவோ
தானு நிட்டை புரிந்தாற் செய்கை தவிர்ந்தவ னெப்படியோ. (ஙூ)

இ - ள். ஆனல்=ஞானி வியவகாரம் விதேக கைவல்யமளவுந் தொடரு மாலல்—ஐயா குருவே—காண்பது அசத்தியம் என்றாலும்=திருசியம் பொய் யென்னினும்—நானு விவகாரம் தூயர் அலவோ=(திருசியத்தைப்பற்றிய) நாநா வியவகாரங்கள் துன்பமல்லவா?—ஞானசுகந்தருமோ=பரிபூர்ண பர மாநந்த பரமசீதளமான பிரஹ்மாநந்தத்தைத் தருமா?—போனுல் அன்றே நன்று ஆம்=(அவ்வாகிய வியவகாரம்) நீங்கினல்லவா அவ்வாநந்தமூளதாம்;— (அதற்கு) நிட்டை பொருந்திடல் வேண்டாவோ=நிருவிகற்ப சமாதிகூட வேண்டுமே?—தான் ஆம் நிட்டை புரிந்தால்=தன்மயமாகுஞ் சமாதிசெய் யின்—(அவன்) செய்கை தவிர்ந்தவன் எப்படியோ=கிருத கிருத்தியன் (ஆமாறு) எவ்வாறே யானறியேன்.—எ - று. (ஙூ)

[வினவிற்கு விடைகூறல்.]

தெரிதரு மகனே யாரம் பத்தொடு தீரும் விவகாரம்
உரியதி யானமும் விவகா ரங்களு முள்ளத் தொழி லன்றே
துரியப ரம்பொரு ளானவர் வேறொரு தொழில்செய் வதுமுண்டோ
அரியச மாதிகள் பழகுவ னேலவ னூரு டனுமன்றே. (ஙூ)

இ - ள். தெரிதரும் மகனே=தன்னுண்மை தெரிந்திருக்கு மைந்தா— ஆரம்பத்தொடு விவகாரம் தீரும்=பிராரத்தகர்மத்தோடு கூட வியவகாரம் ஒழியாநிற்கும்.—உரியதியானமும் விவகாரங்களும்=(ஆரூடர்கள் செய்யும்) பிரஹ்மாநந்த மடைதற்குரிய சமாதியும், வாகிய வியவகாரங்களும்—உள்ளத் தொழில் அன்றே=அந்தக்காரணமாத்திரத்தின் வியவகாரமல்லவா (ஆக லின்,)—துரிய பரம்பொருள் ஆனவர்=துரியமாகிய பரம்பொருளேதானான வாரூடர்—வேறு ஒரு தொழில் செய்வதும் உண்டோ=வேறே யாதானு மொரு தொழிலைச் செய்வதும் உண்டா! (இல்லை.)—அரிய சமாதிகள் பழகு வனேல்=அந்நியரா லடைதற்கரிய சமாதிகளே (க் கர்த்தவ்விய புத்தியோடு கூடி) முயலுவனுயின்—அவன் ஆரூடனும் அன்று=அவன் (கிருத கிருத்தி யத்வமுடைய) ஆரூடனுமலனும்.—எ - று.

(198) வியுத்தான சம்ஸ்காரத்திலொழிவும், நிரோத சம்ஸ்காரத்தின் பிரகடத்தன்மையுமாகிய அந்தக்காரணத்தின் ஏகாக்கிரத்தன்மை ரூபமான பரிணமஞ் சமாதி எனப்படும்; அச்சமாதியும் சவிகற்பசமாதி நிருவிகற்ப சமாதி என இருவகைத்தாம். ஞாதா, ஞான, ஞேயரூபத் திரிபுடித் தோற்றத்

தோடுகூட அத்விதீயப் பிரஹ்மத்தின்கண் அந்தக்கரண விருத்தியின் ஸ்திதி சவிகற்பசமாதி எனப்படும்; அதுவும் சத்தாநுவித்தம், சத்தாநநுவித்தம் என இருவகைத்தாம்; அவற்றுள், அகம்பிரஹ்மம் என்னும் சத்தத்தோடு கூடியிருப் பதைச் சத்தாநுவித்தமெனவும், சத்தாரகிதத்தைச் சத்தாநநுவித்த மெனவுங் கூறுவர். திரிபுடித்தோற்றமின்றி அகண்ட பிரஹ்மாகாரமான அந்தக்கரண விருத்தியின் ஸ்திதியை நிருவிகற்ப சமாதியென்பர். இவ்வாறு சவிகற்ப சமாதி, நிருவிகற்ப சமாதிகட்குப் பேதமுண்டு; அவைகளில் சவிகற்பசமாதி சாதனம்: நிருவிகற்பசமாதி பலமாம்; நிருவிகற்பசமாதியும் அத்வைதபாவனை ரூபமென்றும், அத்வைதாவஸ்தாந ரூபமென்றும் இருவகைத்தாம். அத்வை தப் பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தின் அஞ்ஞாத விருத்தியோடு கூடில் அது அத்வைத பாவனைரூப நிருவிகற்ப சமாதியெனப்படும்; அச்சமாதியின் அப்பியாச மிகுதியால் பிரஹ்மாகார விருத்தியுஞ் சாந்தமாய்விடில் விருத்தி ரகிதமான அச்சமாதி அத்வைதாவஸ்தாநரூப நிருவிகற்ப சமாதியெனப்படும். அத்வைதாவஸ்தாந ரூப நிருவிகற்ப சமாதியே முக்கிய பலமாம்: அத்வைத பாவனைரூப நிருவிகற்பசமாதி அதற்குச் சாதனமாம் என்ப; இவ்வபிப்பிரா யத்தால் இவ்வாசிரியருஞ் "சமாதிகள்" என்று பன்மையாக்கூறினர்.

(199) ஆரூடஞானிக்கு மனன, நிதித்தியாசனமும் கர்த்தவ்விய மன்று; சீவன்முத்தியின் ஆநந்தநிமித்தம், மனன நிதித்தியாசனங்களிற் பிர வர்த்தியாநிற்பன்; அதுவும் தனதிச்சையாற் பிரவர்த்திப்பன். நான் வேதத் தின் ஆக்ஞையைச்செய்யாவிடில் எனக்கு ஜநநமரணரூப சம்சார மூளதா மென்னும் புத்தியோடுகூடிக் கிரியை செய்யில் அது கர்த்தவ்வியமெனப் படும். ஞானி ஆன்மாவை அசங்கஞக அறிந்துளனேனும், தேகத்தின் போஜ ஞதி வியவகாரங்களை, அல்லது ஜநகன் முதலியோர் போல அதிகமான இராச்சியபார பாலஞதி வியவகாரங்களைச் செய்வன்; அவ்வியவகாரத்திற்கு ஞானம் விரோதியன்று: வியவகாரமும் ஞானத்திற்கு விரோதியன்று. என்னை? யாதொரு ஆன்மசொரூபத்தை அசங்கமாக அறிந்துளனை அவ் வான்மாவின்கண் வியவகாரந் தோன்றுமாயின் வியவகாரத்திற்கு விரோதி ஞானமாம்; அப்படியே ஞானத்திற்கு விரோதி வியவகாரமாம்; அங்ஙனந் தோன்றுமற் சம்பூர்ண வியவகாரங்களும் தேகாதிகளின் ஆசிரிதமென்றும், ஆன்மாவின்கண் வியவகாரத்தோடு கூடிய தேகாதிகளின் சம்பந்தமில்லை யென்றுந் தோன்றுகின்றது. இக்காரணத்தால் ஞானிக்குப் பிரவிர்த்தியும் நிவிர்த்தியென்றே சொல்லப்படுகிறது. ஆதலான், "உரியதி யானமும் வியவகா ரங்களு முள்ளத் தொழி லன்றே, துரியப ரம்பொரு ளானவர் வேறெரு தொழில்செயீ வதுமுண்டோ" என்றனரென்க. (நக)

[ஆஞல், ஆநடநந் தியாஞதிகள் செயீயக் காணப்படுகின்றனர்; அவை யெற்றிற்கென வினவி அதற்கு விடைகூறல்.]

உத்தம குருவே யாரு டருமா யொருதொழி லற்றவருள்
சித்தம டங்குதி யாஞ திகள்சிலர் செய்குவ தென்னென்றல்

இத்தல மருவும் பிராரத் தப்பிறி வெப்படி யப்படியே
முத்தரும் வெகுவித மாகுவ ரென்பது முன்னே சொன்னேனே. (நச)

இ - ள். உத்தம குருவே = (போதககுரு முதலியோருள்ளே,) உத்தமமான விகிதகுருவே — ஆரூடரும் ஆய் = சொரூபத்தில் நிற்பவரும், (திருசியத்தில் வீழாதவரும்) ஆய் — ஒரு தொழில் அற்றவருள் = யாதொரு தொழிலுந் தமக்கு வேண்டுமென் றில்லாதொழிந்த கிருத கிருத்தியருள்ளே — சிலர் = சிலபேர் — சித்தம் அடங்கு தியானாதிகள் = உளமொடுங்குந் தியான முதலிய வுபாயங்களே — செய்குவது = பயிலா நிற்பது — என் என்றால் = யாது காரணமென்று நீ சங்கிக்கில், — இத்தலம் மருவும் = இவ்வுலகில் அவரவரைப் பொருந்தாநிற்கும் — பிராரத்தப் பிறிவு எப்படி அப்படியே = பிராரத்தபேதம் எவ்வாறோ அவ்வாறே — முத்தரும் = ஜீவன்முத்தரும் — வெகுவிதம் ஆகுவர் என்பது = அநேகப் பிரகாரமான வியவகாரங்களையுடையராவா ரென்பது — முன்னே சொன்னேனே = பூர்வபடலத்தில், கூஎ - வது செய்யுளிற் கூறினேனே. — எ - று. (நச)

[ஆநடரீ வியவகாரம் லோகசங்கிரக நிமித்தமேயல்லாமல் வேறல்லவென மேலும் வற்புறுத்துகின்றார்.]

நல்லவ னேகே ளுலகுப காரம் ஞானிகள் விவகாரம்
அல்லது வேறொரு பெறுபே றும்மிலை யதனுற் பிணியுமிலை
வல்லசி ருட்டிமு தற்பல தொழிலால் வருபுண் ணியபாவம்
எல்லவ ருக்கும நுக்கிர கஞ்செயு மீசன டைந்திலனே. (நடு)

இ - ள். நல்லவனே கேள் = சாதுவே கேளாய்; — ஞானிகள் விவகாரம் = ஞானிகள் செய்யும் வியவகாரம் — உலகு உபகாரம் = உலகுக் குபகாரமாம்; — அல்லது = இதுவே யன்றி — அதனால் = அவ்வியவகாரத்தால் — வேறு ஒரு = வேறேயொரு — பெறுபேறும் இலை = அடையாநிற்கும் இலாபமுமில்லை, — பிணியும் இலை = துன்பமுமில்லை. — [ஞானிகள் செய்யும் வியவகாரங்களால் அவர்க்கின்ப துன்பங்களிலவாமென்ப தெவ்வாறேவெனின்; —] வல்ல சிருட்டி முதல் பலதொழிலால் = வல்லமையுடைய சிருஷ்டி முதலிய அநேக கிருத்தியங்களால் — வரு புண்ணிய பாவம் = வாராநிற்குந் தர்மா தர்மங்களை — எல்லவருக்கும் = சர்வ ஜீவர்கட்கும் — அநுக்கிரகம்செயும் = (மக்களிடத்துத் தாய்போலக்) கிருபை செய்யாநிற்கும் — ஈசன் அடைந்திலனே = ஈசுரன் அடைந்திலனே (அதுபோலும்.) — எ - று.

அகிதகிதி சம்மாரம், திரோபாவங்களால் வரும் பாவத்தையும், இதகிதி சிருஷ்டி, அநுக்கிரகங்களால் வரும் புண்ணியத்தையும் ஈசுரன் அடையாதது போல ஞானி லோக சங்கிரகார்த்தம் புறத்தே கிரியைகளைச் செய்யினும் அகத்தே செய்பவனாக இலன்; ஆகலின், இலாப நஷ்டங்களை யடையா னென்பது கருத்து. (நடு)

(200) [முற்செய்யுளில் ஞானியை ஈசுரனுக்கு ஒப்பாகச் சொன்னதுபற்றி உலகத்திற் பெரும்பாலும் சாமானியமாய் அறிந்தோர்களாலு மடைந்துள்ள விபரீத சங்கையைக் தருமுகத்தால் ஒழிவிக்குங் கருத்தினாலுய் ஞானியும், ஈசுரனும் எப்படி ஒப்பாவர் எனச்சீடன் வினதலும், அதற்கு விடைகூறலும்.]

ஈசனு மாயரு வாயுரு வாகி யெழுந்தரு ளுங்குருவே
ஈசனு ஞானியு மொப்பென் றீரே யெப்படி யொப்பென்றுல்
ஈசனு ஞானியு மமதைய கந்தை யிகந்ததி னலொப்பாம்
ஈசனு மாம்பல சீவரு மாமுல கெல்லா மிவனுமே. (நசு)

இ - ள். அருவாய்= (பரமார்த்தமாக) அருவமான அறிவுருவாய் (இருந்தபடியிருந்தே)—ஈசனும் ஆய்=(மாயையினால் சகத்தின்படைப்பாதிக்குக் காரணமான) ஈசுரனுமாகி,—உருவு ஆகி=(என்போலிகளை இரட்சிக்கும் பொருட்டுக் கருணையினால்) திருவுருவாகி—எழுந்து அருளும் குருவே=வந்தருளாநிற்குங் குருவே—ஈசனும் ஞானியும்—ஒப்பு என்றீரே=சமானமாவரென்று மூற்கூறினீரே;—எப்படி ஒப்பு என்றுல்=எப்படிச் சமானமாவரென்று நீ சங்கிப்பாயாகில்,—ஈசனும் ஞானியும்—மமதை அகந்தை இகந்ததினால் ஒப்பு ஆம்=(மாயை அவித்தைகளிலும், அவைகளின் காரியங்களிலும்) மமத்துவாபிமானமும், அகந்தாபிமானமும் விட்டிருத்தலாற் சமானமாவர்.—இவன்=இந்த ஞானியானவன்—(ஈசுரனுடை முன் சொல்லியவாற்றால் சமானமாவதுந் தவிர, "பிரஹ்மவித்து பிரஹ்மமே" என்னும் சுருதியால் பிரஹ்மத்தின்கண் ணத்தியஸ்தமான) ஈசனும் ஆம்=ஈசுரனுமாவன்,—பல சீவரும் ஆம்=நாநா சீவருமாவன்,—உலகு எல்லாம் ஆம்=உலகனைத்துந் தானுவன்.—எ - று.

அத்தியஸ்தம் அதிஷ்டானத்தைத்தவிர வேறின்மையி னென்க. (நசு)

(201) [ஒருவன் உண்ண மற்றோர்க்குப் பசி நீங்காததுபோல ஞானி அஞ்ஞான நீங்கி முத்தியடைய ஏனைய சீவர் அடையாமையின் இவன் எல்லாச் சீவனும் ஆமெனல் எவ்வாறமென "ஊசி கடாக நியாயம்" போல இடையே சங்கித்தல்.]

எல்லாச் சீவரு மிவனு மென்றீ ரிவன்றான் முத்தியடைந்
தெல்லாச் சீவரு முத்திபெ றுமலி ருப்பா னேனையா
எல்லாச் சீவரும் வெவ்வே றுனு லிவனெல் லாமலனே
எல்லாப் பொருளு முணைத்தருள் குருவே யிதைதீர் மொழியீரே.(நஎ)

இ - ள். எல்லாச் சீவரும்=சுர, நர, திரியக்காதி ரூபங்களாகிய சர்வ சீவரும்—இவன் ஆம் என்றீர்=இஞ்ஞானியாகுமென்றருளினீர்;—இவன் தான் முத்தி அடைந்து=இஞ்ஞானி (அஞ்ஞான நீங்கி) நிரதிசயாநந்தரூப மோட்சமடைந்தனனுக—எல்லாச்சீவரும்=சர்வ சீவரும்—முத்தி பெறுமல்

இருப்பான் என்=மோட்சமடையாமலிருக்கு நிமித்த மென்னை?—எல்லாச் சீவரும்=சர்வ சீவரும்—வெவ்வேறு ஆஞல்=பரஸ்பரம் பின்னமாயின்—இவன் எல்லாம் அலனே=இஞ்ஞானி முழுது மல்லனே?—எல்லாப் பொருளும் உரைத்தருள் குருவே=யான் வினவாநிற்குஞ் சர்வ விஞக்களின் பயன்களையும் உபதேசித்தருளா நிற்கும் ஆசிரியரே—இதை நீர் மொழியீர்=இவ்விஞவின் பயனையும் தேவரீர் அருள்வீராக.—எ - று.

"ஐயா" எ - து விளி. "இருப்பான்" என்பதிலுள்ள பான்விகுதி, தொழிற்பெயர்ப்பொருட்டு. (ஈஎ)

[விம்பப்பிரதிவிம்ப நியாயத்தாற் சங்கைக்கு உத்தரங் கூறுகின்றார்.]

அகமெனு மான்மா பூரண மேகம நேகவி தஞ்சீவர்
அகமெனு மந்தக் காரணை பாதிக ளளவிலை யாதலினுல்
சகமுழு துங்குளிர் சந்திர னேகஞ் சலசந் திரர்பலராம்
சகமதி லேரிகு ளஞ்சிறு குழிசால் சட்டிகு டம்பலவால். (ஈஅ)

இ - ள். அகம் எனும் ஆன்மா=அகமகமென் றனைத்துயிரினிடத்து மிருந் தநவரத முரைப்பதாகிய ஆன்மா—பூரணம் ஏகம்=பரிபூரணமாயேகமாம்;—சீவர்=சீவர்கள்—அநேகவிதம்=பரிச்சின்னராய், அநேகப்பிரகாரமாயிருப்பர்.—[என்னை?] அகம் எனும் அந்தக்கரண உபாதிகள்=நானென்னும் அந்தக்கரண வுபாதிகள்—அளவுஇலை ஆதலினுல்=பரிச்சின்னங்களாய், அநேகங்களா யுள்ளன வாகலின்.—[இனி இவைக்குபமானம்.] சகம் முழுதும் குளிர் சந்திரன் ஏகம்=உலக முழுவதுஞ் சீதளமாதற்குக் காரணமாகும் விம்ப சந்திரன் ஒருவன்:—சல சந்திரர் பலர் ஆம்=சலப்பிரதிவிம்ப சந்திரர் அநேகராம்.—[என்னை?] சகமதில்=உலகில்—ஏரி குளம் சிறுகுழி சால் சட்டி குடம் பலவால்=ஏரியும், குளமும், சிறுபள்ளமும், சாலும், சட்டியும், குடமும் ஆகிய உபாதிகள் பலவாகலின்.—எ - று.

அகம்பதம் ஆன்மாவிற்கும், அந்தக்காரணத்திற்குங் கூறியிருப்பது முறையே லட்சியார்த்தம் வாச்சியார்த்த மாகலான் என்க. "அகம்" எ - து, அந்தக்காரணத்திற்கு இயற்பெயர், ஆன்மாவுக்கு ஆகுபெயர் எனினும் ஒக்கும். (ஈஅ)

[இதுவுமது.]

சட்டிகு டங்களி லொன்றுந சித்திடி னதினுட் சலசந்திரன்
ஒட்டுமு தற்சந் திரனெடு கூடுமொ ழிந்தவை கூடாவே
கட்டுமு பாதிந சித்திடு சீவன் காரண வான்மாவில்
கிட்டும யிக்கியமு பாதிகெ டாதவர் கேவல மாகாரே. (ஈகூ)

இ - ள். சட்டி குடங்களில்=சட்டி குட முதலிய உபாதிகளில்—ஒன்று நசித்திடின்=ஒருபாதி நசிக்கில்—அதினுள் சல சந்திரன்=அதிற் பிரதிவிம்பித்திருந்த சந்திரன்—ஒட்டும் முதல் சந்திரனெடு கூடும்=தான் கூடுதற்குரிய

காரண சந்திரனுடனே கூடும் :—ஒழிந்தவை = உபாதிகெடாத ஏனைய பிரதிவிம் பங்கள்—கூடாவே = (எப்படிக்) கூடாவோ (அப்படி)—கட்டும் உபாதி நசித் திடு சீவன் = பந்தியாநிற்கும் அந்தக்காரணத்தின் கண்ணுள்ள அஞ்ஞான வுபாதி ஞானத்தால் நாசமாகாநிற்குஞ் சீவன்—காரண ஆன்மாவில் = தனக் குக் காரணமாகும் ஆன்மாவின்கண்—அயிக்கியம் கிட்டும் = ஐக்கியத்தைப் பொருந்துவன் :—உபாதிகெடாதவர் = அஞ்ஞானவுபாதி ஞானத்தாற்கெடாத ஏனைய சீவர்—கேவலம் ஆகார் = ஐக்கியமாகார்கள்.—எ - று.

சீவத்துவத்திற்கு முக்கியவுபாதி சுழுத்தியின் கண்ணுள்ள அவித்தைக் கூறும் ; அவ்வவித்தைக்கூறே சாக்கிரத்தில் அந்தக்காரணமாகப் பரிணமித்தலா னும், அது தோன்றின பின்னரே, ஜீவத்வந் தோன்றலானும் அந்தக்காரண த்தைச் சீவவுபாதியென்றனர் ; அவித்தையைச் சீவவுபாதியாகக் கொள்ளாக் கால் பிராஞ்ஞனைச் சொல்லுஞ் சுருதி விரோதமாம்.

எவ்வந்தக்காரணத்தில் ஞானமுண்டாமோ அவ்வந்தக்காரண வவச்சின்ன சேதனத்தின்கண்ணுள்ள அஞ்ஞானக்கூறு ஞானத்தால் நிவிர்த்தியாம் : அஞ் ஞானம் நீங்கிஞனன் முத்தனுவன். எவ்வந்தக்காரணத்தில் ஞானமுண்டாக வில்லையோ அவ்வந்தக்காரணத்தின் அஞ்ஞானக்கூறுமுண்டு, பந்தமுமுண்டு. அஞ்ஞான நீங்கி முத்தனுவன் பிரஹ்மதிருஷ்டியால் சகசீவபரங்களாக விளங்குதலின், அவனெல்லா மாவனென்பதிற் சந்தேகமின்றென் றறிதி யென்பதாம். (நகூ)

(202) [நகூ - ம் செய்யுளில் எப்படி ஒப்பாவனென்று வினவிய தன்கருத்தை இங்கே வெளிப்படுத்துகின்றன்.]

இவனயன் மால்சிவ னுகிய வீசரொ டெப்படி யொப்பாவன்
சிவன்முதன் மூவரு மகிலசி ருட்டி திதிநா சங்கள்செய்வார்
அவர்பிறர் மதிகளு முக்கா லங்களு மறிவார் விபுவாவார்
தவமிகு குருவே யிவனுக் கவையிலொர் சற்றுங் காணேனே. (சo)

இ - ள். இவன் அயன் மால் சிவன் ஆகிய ஈசரொடு = இஞ்ஞானி யென் பவன், அயன், அரி, உருத்திராகிய வீசரோடு—எப்படி ஒப்பு ஆவன் = எங் ஙனம் இணையாவன் ;—சிவன்முதல் மூவரும் = உருத்திரன், நாராயணன், பிரமன் என்னும் அம்மூவரும்—அகில சிருட்டி திதி நாசங்கள் செய்வார் = எல்லா வுலகங்களையுஞ் சிருஷ்டி, திதி, சம்மாரங்கள் செய்யாநிற்பர் ;—அவர் பிறர் மதிகளும் முக்காலங்களும் அறிவார் = அவர்கள் அந்நியருடைய புத்தி களையும், பூத, பவிஷ்ய, வர்த்தமானம் என்னுந் திரிகாலங்களையும் அறியா நிற்பர்.—(இதனால்) விபு ஆவார் = சர்வத்திலுஞ் சம்பந்தித்தவராவார், அல்லது பிரபு வாவார் ;—தவம் மிகு குருவே = தவமிகுந்துள்ள வாசிரியரே—இவ னுக்கு = இஞ்ஞானிக்கு—அவையில் ஓர் சற்றும் காணேனே = அம்மகிமை களில் ஒரு சிறிதுங் கண்டிலேன். (ஆகலின்.)—எ - று.

கண்டிலேன் ஆகலின், "எப்படி யோப்பாவன்" எனக்கூட்டுக. இங்கே, "தவம்" எ - து, மனம் பொறிகளினெருமையை : கிருச்சிர, சாந்த ராயணாதிகளை யல்ல. (சo)

[அதற்கு விடைகூறல்.]

[வேறு.]

தடத்து நீர்நிலாத் திரியொளி யுபயமுந் தழுவுமூர் தனைக்காக் கும், குடத்து நீர்விளக் கினிலொளி யிரண்டுமோர் குடும்பமாத் திரங் காக்கும், அடுத்த மைந்தனே ஞானியு மீசனு மறிவினுற் பிறிவில்லை, கெடுத்த மாயையின் குணங்களான் மேலென்றுங் கீழென்றும் பிரி வாமே. (சக)

இ-ள். தடத்து நீர் = ஊறுணிச்சலமும், — நிலாத்திரி ஒளி = பகல் வத்தியி னெளியும் — உபயமும் = (ஆகிய) இவ்விரண்டும் — தழுவும் ஊர்தனைக் காக்கும் = (தம்மைத்) தழுவாநிற்கும் ஊர்முழுதினையும் இரட்சிக்கும். — குடத்துநீர் = குடத்துச்சலமும், — விளக்கினில் ஒளி = தீபத்தொளியும் — (ஆகிய) இரண் டும் — ஓர் குடும்பமாத்திரம் காக்கும் = ஓர் குடும்பமாத்திரத்தை இரட்சிக்கும். — அடுத்த மைந்தனே = (சற்சங்கத்தைக்) கிட்டிய மைந்தா — ஞானியும் ஈச னும் = தத்துவ ஞானியும், ஈசனும் — அறிவினுல் பிறிவு இல்லை = (நாம் பிரஹ்மமென்னும்) ஞானத்தாற் பேதமில்லை ; — கெடுத்த = (சீவர்கள் முத்தி யடையாமற் போகும்படி அவர்களுணர்வை ஆவரணசத்தியான் மறைத்துக்) கெடுத்த — மாயையின் குணங்களால் = மூலப்பிரகிருதியின் (சத்துவகுண, ரசோ) குணங்களால் — மேல் என்றும் = ஈசன் மேலானென்றும், — கீழ் என் றும் = ஞானி கீழானென்றும் — பிரிவு ஆம் = பேதமாம். — எ - று.

தடத்தினீரும் நிலாத்திரியொளியும், குடத்தினீரும், விளக்கினெளியும் உபாதியாற் பேதமல்லாமற் காக்குந்தன்மையாற் பேதமில்லாமைபோல ஈசர னும், ஞானியும் மாயா குணங்களாற் பேதமல்லாமல் ஞானத்தாற் பேதமிலர் என்பதாம். (சக)

[மேலும் அதனையே விளக்குகின்றார்.]

நரரின் மன்னனைச் சித்தரைப் போலவே நாரணன் முதலான சுரர்கண் மாயைவல் லவரணி மாதிக டொக்கமா தவமிக்கோர் தரணி மாநுடர்க் கவைகளில் லாமையாற் ருழ்வுள ராஞலும் பிரம பாவனை யாலிவ ரவரெனும் பேதமொன் றிலபாராய். (சஉ)

இ - ள். நரரில் = மநுடர்களுக்குள்ளே, — மன்னனைச் சித்தரைப்போல வே = (துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனமுடைய) அரசனையும், (சாபாநுக் கிரக சாமார்த்தியமுடைய) சித்தரையும்போல — நாரணன் முதலான சுரர் கள் = விஷ்ணு முதலான தேவர்கள் — மாயைவல்லவர் = மாயை செய்வதில் சமர்த்தர், — அணிமா ஆதிகள்தொக்க = அணிமா, மகிமா, கரிமா, இலகிமா,

பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அஷ்டசித்திகளுங் கைவந்த—மாதவம் மிக்கோர்=மாதவமிகுந்தோர்.—தரணி மாதுடர்க்கு=பூமியில் மநுடதேகமுடைய ஞானிகட்கு—அவைகள்=அம்மாயாவல்லபமும், அணிமாதி அஷ்டசித்திகளும் — இல்லாமையால்=இன்மையால் — தாழ்வு உளர் ஆனலும்=தாழ்ச்சியுடையராயினும்—பிரமபாவனையால்=(நாம்) பிரஹ்மமென்னும் சம்ஸ்காரத்தினால்—இவர் அவர் எனும் பேதம்=ஞானிகள் தாழ்வுடையவரென்றும், ஈசுரனுயர்ச்சியுடையவனென்றுங் கூறுநிற்கும் பேதம்—ஒன்று இலை=சிறிதுமில்லை;—பாராய்=(இதனை யூகித்துப்) பார்ப்பாயாக—எ - று.

முன்னே, "நாராணன்" எனக்காட்டினது,

"மாயை பண்ணு மவர்களி லரிநான்"—

என்னும் ஈசுராகீதையின் கருத்து. அணிமாதி அஷ்டசித்திகளி னியல்பை திருவிளையாடலில், நகு - வது அஷ்டமாசித்தியுரைத்த படலத்திலும், பாகவதத்தில், ஏக - ம் ஸ்கந்தத்தில் யோகசித்தியுரைத்த வத்தியாயத்திலுங் காண்க. (சஉ)

(203) ["அணிமாதிக டொகுகமாதவ மிக்கோர்" என முற்கூறியதால் அவை ஈசுரனைசுவரியமெனப் பொருள்படுதலின், ஈண்டு முனிவரிடத்துங் காணப்படுவானேனென வினுதலும், அதற்கு விடையும்.]

முத்தி நல்கிய சற்குரு வேபல முனிகளுக் கணிமாதி
சித்தி பூமியிற் கண்டிருக் கவுமந்தச் செல்வமீ சனதென்றீர்
புத்தி யொத்திட வுரைத்தரு ளென்றிடிற் புகழுமீ சனைநோக்கிப்
பத்தி செய்திடுந் தவத்தினு லியோகத்தாற் பலித்ததென் றறிவாயே.

இ - ள். முத்தி நல்கிய சற்குருவே=அநர்த்த நிவிர்த்தி, ஆநந்தப் பிராப்தி ரூபமான மோட்சத்தைத் தந்தருளிய சற்குருவே—பலமுனிகளுக்கு=வாதராயணர் முதலிய அநேக முனிவர்களுக்கு—அணிமா ஆதிசித்தி=அணிமா முதலிய அஷ்டசித்திகள்—பூமியில் கண்டிருக்கவும்=(உள்ளனவாகப்) பூமியிற் காணப்பட்டிருக்கவும்—அந்தச் செல்வம்=அவ்வணிமாதிச் செல்வம்—ஈசனது என்றீர்=ஈசுரனுடைய செல்வமென்றருளினீர்;—புத்தி ஒத்திட=(அச்செல்வம் முனிவர்கட்கு இன்னகாரணத்தா லுளவாயினவென்பதை என்) புத்தி சம்மதித்திட—உரைத்தருள் என்றிடில்=உரைத்தருள்வீரென்று நீ வினவிடில்—புகழும் ஈசனைநோக்கி=(சர்வாபீஷ்டப்பிரதராகலின், சர்வமதஸ்தர்களாலும்) துதியாநிற்கும் ஈசுரனை நாடி—செய்திடும் பத்தி (யால்)=(உட்புறமொத்து மனமொழிமெய்களாற்) செய்யாநிற்கும் வழிபாட்டினாலும்,—தவத்தினால்=கிருச்சிராசாந்தாயணாதி தவங்களாலும்,—யோகத்தால்=இயம நியமாதி அஷ்டாங்க யோகத்தினாலும்—பலித்தது என்ற அறிவாய்=(அணிமாதிச் செல்வம் முனிவர்கட்கு) வாய்த்ததென்றறிவாயாக.—எ - று.

இயம, நியமாதி அஷ்டாங்க யோகத்தை, ஈசுரகீதையின், கக - ம் அத்தியாயத்திற் காண்க. (சஙூ)

(204) [தவழுதலியவற்றல், அணிமாதிச் செல்வம் முனிவர்கட்கு வாயித்ததனல் தவத்தால் பிரஹ்மத்தையறிகவென்னுஞ் சுருதியால் தவமில்லாதோர்க்குத் தத்துவஞானமுங்கூடாதே யென்னுங் கருத்தையுட்கொண்டு ஒருவாறு சீடன் வினுதல்.]

சிவசொ ரூபமாந் தேசிக மூர்த்தியே சித்திமுத் தியிரண்டும்
தவமு ளோரடை குவரெனி லவர்கள்போற் சகலரு மடைவாரே
அவர்கள் பூருவஞ் சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோமே
இவர்கண் ஞானிக ளென்றிடிற் சித்திக ளிவர்க்கிலா வகையேதோ.()

இ - ள். சிவ சொரூபம் ஆம் தேசிக மூர்த்தியே = ஆநந்தவுருவமாகிய குருவே—சித்தி முத்தி இரண்டும் = அணிமாதி சித்தியும், முத்தியுமாகிய இரண்டனேயும் — தவம் உளோர் அடைகுவர் எனில் = தவமுடையோர் அடைவரென்று (சுருதி) சொல்லில்,—அவர்கள்போல் = வாதராயணர் முத லிய பூர்வாசாரியர்போல—சகலரும் அடைவாரே = இக்காலத்துள்ள ஞானிக ளனைவரு மடையாநிற்பரே?—அவர்கள் = அப்பூர்வாசாரியர்—பூருவம் சித்தி யும் ஞானமும் அடைந்ததும் கண்டோமே = பூருவம் அணிமாதி சித்தியும், தத்துவஞானமுமாகிய இரண்டனேயும் அடைந்திருந்ததும் (புராணங்களிற்) கண்டோம்;—இவர்கள் ஞானிகள் என்றிடில் = இக்காலத்துள்ள இவர் ஞானிகளென்று சொல்லில்,—சித்திகள் இவர்க்கு இலாவகை ஏதோ = அணி மாதி சித்திகள் இவர்க்கில்லாதிருக்குங் காரணம் யாதோ! (யானறியேன்; அதனை யருள்வீராக.)—எ - று. (சச)

[அதற்கு விடைகூறல்.]

காமி யத்தவங் காமிய மொன்றையுங் கருதிடாத் தவமென்றும்
பூமி யிற்றவ மிருவகை சித்தியும் போதமுந் தருமைந்தா
ஆமி வற்றிலொன் றியற்றினு லொன்றையே யடைகுவ ரிதுதீர்வை
யாமு ரைத்தவவ் விரண்டையு மியற்றினு ரன்றுள பெரியோரே. (சரு)

இ - ள். காமியத்தவம் (என்றும்) = சகாமதவமெனவும்,—காமியம் ஒன் றையும் கருதிடாத்தவம் என்றும் = இச்சிக்கப்படும்பொரு ளொன்றனேயும் (அடையக்) கருதாத தவமெனவும் (நிஷ்காம தவமென்றபடி.)—பூமியில் தவம் இருவகை = பூமியின்கண்ணே தவமானது இருவகைத்தாம்;—சித்தி யும் போதமும் தரும் = (அவற்றுள், சகாமதவம்) அணிமாதி சித்திகளேயும், (நிஷ்காமதவம்) தத்துவஞானத்தையுங் கொடாநிற்கும். — மைந்தா—ஆம் இவற்றில் ஒன்று இயற்றினுல் = (சித்தி, ஞானங்கட்குச்) சாதனங்களாகும் இவ்விருவகைத் தவங்களுள், ஒரு தவத்தைச் செய்யில்—ஒன்றையே அடை குவர் = ஓர் பயனேயே அடையாநிற்பர்;—இது தீர்வை = இது நியமம்.—

யாம் உரைத்த = நாங்கூறிய — அவ்விரண்டையும் இயற்றினர் = அவ்விரண்டு தவங்களையுஞ் செய்தனர் — அன்று உள பெரியோர் = முற்காலத்துள்ள வாத ராயணர் முதலிய பெரியோர். — எ - று. (சடு)

(205) [மேற்சொன்னதைத் தானே இன்னும் வற்புறுத்துகின்றார்.]

அனக மைந்தனே முத்திஞா னத்தையே யடைந்தன ரல்லாமல்
ஜெனகன் மாபலி பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ
இனிய சித்தியே விரும்பினர் சிலர்சில ரிரண்டையு முயன்றார்ம்
முனிவர் சித்திகள் விஞ்ஞதமாத் திரந்தரு முத்தியைத் தாராவே.(சஅ)

இ - ள். அனக மைந்தனே = பாவமற்ற மைந்தனே — முத்தி ஞானத் தையே அடைந்தனர் அல்லாமல் = (நேரே) மோட்ச சாதனமான தத்துவ ஞானத்தைத் தானே யடைந்தனரன்றி — ஜெனகன், மாபலி, பகீரதன் முத லினோர் — சித்திகள் படித்தாரோ = சித்திகளைப் பழகினரா ! (இல்லை.) — சிலர் இனிய சித்தியே விரும்பினர் = சில முனிகள் (தமக்கு) இனிமையாகிய சித் தியைத்தானே விரும்பினர். — சிலர் இரண்டையும் முயன்றார் = சிலமுனிகள் சித்தி, ஞானம் இரண்டனையும் பழகினர்; — அம்முனிவர் சித்திகள் = அம் முனிவர்களடைந்துள்ள சித்திகள் — விஞ்ஞதம் மாத்திரம் தரும் = (மணியாழி யுலகமெல்லாங் கணநேரத்தில் விளையாடிவரும்) விளையாட்டைமாத்திரந் தரும் :— முத்தியைத்தாராவே = அநர்த்தநிவிர்த்தி, ஆநந்தப்பிராப்தி ரூபமான மோட்சத்தைக் கொடாவாம். — எ - று. (சக)

(206) [ஆயின், முத்தர்களுள்ளுஞ் சிலபேர் அச்சித்திகளின் பொருட் டுச் சரீரவருத்தமுற்ற தென்கொலோவெனுஞ் சீடன் வினவைத் தானே வினவி அதற்கு விடைகூறல்.]

யோக ஞானமே முத்தியைத் தருமெனி லொழிந்தசித் திகள்வேண்டி
மோக மாயுடல் வருந்தினர் சிலசில முத்தர்க ளெனென்றால்
போக மாய்வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன்றே நசித்தேதகும்
ஆகை யாலந்தச் சித்திகள் பிராரத்த மாகுமென் றறிவாயே. (சஎ)

இ - ள். யோக ஞானமே = ஜீவன்ம, பரமான்மாக்களி னையிக்கிய ஞானமே — முத்தியைத் தரும் எனில் = மோட்சத்தைத் தருமென்று சொல் லில் — ஒழிந்த = முத்தியைத் தரவல்லாத — சித்திகள் வேண்டி = சித்திகளை விரும்பி — மோகம் ஆய் = அவை வாய்க்குநெறியிற் பரவசமாய் — சில சில முத்தர்கள் = (சூடாலை முதலிய) சிற்சில ஜீவன்முத்தர்கள் — உடல் வருந்தி னர் என் என்றால் = (முன்னே) மெய்வருத்தமுற்றனர்; அஃதென்கொலோ வென்று நீ வினவிடில் — போகம் ஆய் வரும் பிராரத்தகர்மங்கள் = அநுபோக மாய் வாராநிற்கும் பிராரத்தகர்மங்கள் — புசித்து அன்றே நசித்து ஏகும் = புசித்தல்லவா நசித்துப்போம்; — ஆகையால் = ஆகலின், — அந்தச்சித்திகள் = பூருவஞ் சூடாலை முதலியோரா லடைந்தவச்சித்திகள் — பிராரத்தம் ஆகும் என்று அறிவாய் = அவர்களது பிராரத்தமாமென்று நீ யறிவாயாக. — எ - று.

[குருவை வியந்து மேலும் உபதேசிக்கவேண்டுமென்ப தற்குக் காரணங் கூறுகின்றன்.]

இலக்க மாயிரஞ் சுருதியா லுகத்தா லென்மன மசையாமல் [னேன் பெலக்க வேண்டுமென் றருள்குரு வேயகப் பிராந்தி போய்த் தெளிவா துலக்க மானகண் ணுடியை யடிக்கடி துலக்கினுற் பழுதன்றே அலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமிர்தங்க டெவிட்டாவே.

இ - ள். இலக்கம் ஆயிரம் சுருதியால்=அநேகஞ் சுருதிப் பிரமாணங் களாலும்,—ஊகத்தால்=(அநேக) யுக்திகளாலும்—என் மனம் அசையாமல் =என தந்தக்காரணம் (சொரூபத்தினின் றுஞ் சந்தேகத்தினுற்) சலியாமல்— பெலக்கவேண்டும் என்று=திடமா யதிலழுந்த வேண்டுமென்று—அருள் குருவே=(யான் சங்கிக்குஞ் சங்கைகளுக்கெல்லாம் உத்தரம்) அருளிவரா நின்ற குருவே—அகப் பிராந்தி போய்=(எனது) அந்தக்காரணத்தில் (முன் னிருந்த பஞ்சப்) பிராந்திகளுமொழிந்து—தெளிவு ஆனேன்=தெளிவுடைய வனுயினேன்.—துலக்கம் ஆன கண்ணுடியை=பிரகாசமான கண்ணுடியை —அடிக்கடி துலக்கினுல்=மேலுமேலுந் துலக்கிடில்—பழுது அன்றே= குற்றம் என்னே?—அலக்கண் மாற்றிய=(எனது) துன்பங்களை நீக்கிய— தேவரீர்=சுவாமிகள்—எனக்கு உரை அமிர்தங்கள்=அடியேற்குபதேசியா நிற்கும் வாக்கியாமிர்தங்கள்—தெவிட்டா=தெவிட்டுகின்றில; (ஆதலால், இன்னுந் தேவரீருபதேச மொழிகளைக்கேட்க விரும்புகின்றேன் அருள் செய்தல் வேண்டும்.)—எ - று.

பிரகாசமான கண்ணுடியை மேன்மேலுந் துலக்குவது குறையின்றுதல் போல், பிராந்தி நீங்கித் தெளிவெய்தியவென்னை மேன்மேலுந் தெளிவெய் தப்பண்ணல் குறையின்றுமாகலானும், சுவாமிகளின் வாக்கியாமிர்தத்தில் எனக்கு அமைவுண்டாகாமையானும் இன்னும் உபதேசிக்கவேண்டுமென் பான், "துலக்கின மானகண் ணுடியை யடிக்கடி துலக்கினுற் பழுதன்றே, அலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமிர்தங்க டெவிட்டாவே." என்று கூறினன்.

"அகப்பிராந்தி போய்" எ - கு, உ - ம், வள்ளலார்,

"நித்தனன் றுரைத்த வாக்கியப் படியே நிகழ்த்துவன் பிராந் தியைந் தினையுஞ், சத்திய மிந்தச் சகமெனல் கருவி தணந்திடா துடலெனா னென்னல், கத்தபோத் தாவுந் தானெனல் தானுங் கட வுளும் வேறெனக் கருதல், சித்துரு வாகியிருந்து நானெனன் சிவ னெனல் சிதடர்பா லறியே."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (சுஅ)

(207) [பரஸ்பரம் விரோதமான சுருதி வாக்கியங்களில் யாது வாஸ்தவமாகக் கொள்ளற்பாலதென வினுதல்.]

கைத வங்களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனையாளும் ஐய னேகுரு வேயென வாகிலு மநுபவித் தாலன்றிச்

செய்த கர்மங்கள் விடாவென்ற வசனமுஞ் சென்மசஞ் சிதம்வேவத் துய்ய ஞானத்தீச் சுடுமென்ற வசனமுந் துணிவதெப் படிநானே.(சகூ)

இ - ள். கைதவங்களே = அசத்தியமான வார்த்தைகளே—சாத்திரம் சொல்லுமோ=சாஸ்திரங்கள் போதியாநிற்குமோ! (போதியாதே?)—கருணையால் எனை ஆளும்=கிருபையினாலே அடியேனை ஆண்டருளும்—ஐயனே குருவே=(எனது) பிதாவாகிய ஆசிரியரே—எவராகிலும்=யாவராயிருந்த போதினும்—செய்த கர்மங்கள்=(தாங்கள்) செய்த கர்மபலங்கள்—அநுபவித்தால் அன்றி=அநுபவித்தொழித்தாலல்லது—விடா என்ற வசனமும்=நாசமாகா வென்னும் வசனமும்,—சென்மசஞ்சிதம் வேவ=(அநந்த) ஜநநங்கட்கு (க் காரணமான) சஞ்சிதகர்மங்கள் வெந்து நீறுகும்படி—துய்ய ஞானத்தீ=சுத்தமான ஞானக்கினி—சுடும் என்ற வசனமும்=தகிக்குமென்னும் வசனமும் (ஆகிய இவ்விரண்டில்)—நான் துணிவது எப்படி=(இதுதான் வாஸ்தவம், இஃதல்லவென்று ஒன்றை) எவ்வாறு யான் நிச்சயிப்பது.—எ - று.

சுருதி சம்மதமான சீவபிரஹ்மங்களி னயிக்கியஞான மென்பார், "துயியஞானம்" என்றார். "செய்த கர்மங்கள் விடாவென்ற வசனம்" எ - து,

"நாபுக்தம் க்ஷீயதே கர்மாகல்ப கோடிசதைரபி"—

என்பது முதலிய வசனங்களே; இதற்கு, பலத்தைப் புசியாமற் சுபாசுபகர்மங்க ணூறுகோடி கற்பங்களாலும் நாசமாகா தென்பது பொருள். "சென்மசஞ் சிதம்வேவத் துய்ய ஞானத்தீச் சுடுமென்ற வசனம்" எ - து, கீதையின் நான்காம் அத்தியாயத்தில்,

"எறியாவெரி வருகானிடை யெரியாதன வெவைதா
னறியாவறி வுடையோர்களு மறிவாது விதுபோற்
குறியால்வரு குணஞானமெ யனலேகொள விடுமேல்
பொறியால்வரு வினையானவை பொடியாமிதார் பொருளே."

என்று ஸ்ரீ - பகவானால் அருளிச் செய்யப்பட்டிருப்பது முதலிய வசனங்களே என்றறிக. (சகூ)

[அதற்ற விடைகூறல்.]

சீவ பேதங்க ளளவில்லை மைந்தனே செய்கையு மளவில்லை
ஆவ வாமல வரோதி காரங்க ளறிந்துபக் குவமோக்கிப்
பூவ லர்ந்துபின் பலங்கள்காட் டுவனபோற் பூருவஞ் சித்தாந்தம்
காவல் வேதங்க ளிரண்டையும் வசனிக்குங் காண்டமூ வகையாலே.

இ - ள். மைந்தனே=மைந்தா—சீவபேதங்கள் அளவு இல்லை=(சீவத்துவ வுபாதிகளான அவித்தை, அந்தக்காரணங்கள் அளவின்மையின்) சீவபேதங்களும் அளவில்லை,—செய்கையும் அளவு இல்லை=(பிரவிர்த்திக்குக் காரணங்களான அவரவர் அந்தக்காரணங்களிலுள்ள சுபம், அசுபம், சுபாசுப

மென்னும் வாசனைகள் அளவின்மையின் அவரவர்கள்) செய்கைகளும் அளவில்லை; (ஆகையால்,)—ஆவஆம்=அவைகளால் ஆவனவாகும்.—அவர் அவர் அதிகாரங்கள்=அந்தந்தச் சீவர்களுடைய அதிகாரங்களை—அறிந்து=நிச்சயித்து—பக்குவம் நோக்கி=பக்குவங்களை நாடி—காவல் வேதங்கள்=(கருணையினால் யாவரையும்) இரட்சியாநிற்கும் வேதங்கள்—காண்டம் மூவகையாலே=(கர்மம், உபாசனை, ஞானம் என) மூன்றுகூறுடைய காண்டங்களாலே—பூருவம் சித்தாந்தம் இரண்டையும் வசனிக்கும்=பூருவபட்சம், சித்தாந்தமென்னும் இரண்டையும் பிரதிபாதியாநிற்கும்.—[இனி இதற்குபமானங் கூறுகின்றார்.] பூ அலர்ந்து=(மூன்னே) புஷ்பங்களைத்தோற்றுவித்து—பின்=பின்னே—பலங்கள் காட்டுவனபோல்=பலங்களைக் காட்டாநிற்கும் (வாழை முதலிய) விருட்சங்களைப்போல.—எ - று.

இங்ஙனங் கூறியவாற்றால், "அநுபவித் தாலன்றிச் செய்த கர்மங்கள் விடா" என்ற வசனம் கர்மகாண்டத்தின் பூருவபட்சம், "சென்மசஞ் சிதம் வேவத் துயிய ஞானத்தீச் சுடுமென்ற வசனம்" ஞானகாண்டத்தின் சித்தாந்தம் என்பது கருத்து. (ரு0)

[இதுவுமது.]

ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய மாலுலும்
தான மந்திர விரதவோ மங்களாற் றவிருமென் பதுபொய்யோ
ஈன மாம்பல சன்மசஞ் சிதவினை யெத்தனை யாலுலும்
ஞான மாங்கனல் சுடுமென்ற மறைமொழி நம்பிலுல் வீடுண்டே. (ருக)

இ - ள். ஆன பாவிகள்=(சுபாசுப கர்மங்களுள்ளே, அசுப கர்மங்களைச்) செய்பவரான பாவிகள்—அடைவன நரகங்கள்=அடைவனவான நரகங்களானவை—அவசியம் ஆலுலும்=நிச்சயமாக வுளவேனும்—தான மந்திர விரத ஓமங்களால்=தானம், மந்திரம், விரதம், எக்ஞம் எனும் பிராயச்சித்தங்களால்—தவிரும் என்பது பொய்யோ=(பாவநீங்கி விடுவதால்) அவை வாரா தொழிந்துபோமென்று சாஸ்திரங் கூறுவது அசத்தியமா (அல்லவே?)—(அதுபோல) ஈனம் ஆம்=இழிவான—பலசன்ம சஞ்சிதவினை=அநந்த ஜன்மங்கட்குக் காரணமாகிய சஞ்சித கர்மங்கள்—எத்தனை ஆலுலும்=அனேகங்களாயிருப்பினும்—ஞானம் ஆம் கனல்=(சமூசயரகிதமான பிரஹ்மான்மவியக்கிய) ஞானமாகிய அக்கினியானது—சுடும் என்ற மறைமொழி=(அவற்றைத்) தகித்துவிடுமென்று கூறும் வேத சித்தாந்த வசனத்தை—நம்பிலுல்—வீடு உண்டே=அவை நீங்கி மோட்சமூளதாதல் திண்ணம்.—எ - று.

"மலமேவிய தீவினை யின்வலியான் மகிழும்பர்ப தத்திலி ருந்தவிவன், குலமேவிய தென்புல வாணர்களுங் கொடிதாய்நர கங்குடி யேறினரே."—

என்பது முதலிய சுருதிப்பிரமாணத்தாற் பாவிகள் நரகமடைவது சித்தமாயிருத்தலின், "ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய மாலுலும்"

எ - ம், தான மந்திர விரத வோமங்களாற் பாவந் தவிர்கவென, கர்மகாண்டத்திலீசுரன் விதித்தபடி அவை செய்தோர்க்குத் தவிர்ந்தே யிருப்பதைச் சாஸ்திரத்தும், உலகத்தும் நீ கண்டே யிருக்கின்ரு யென்பார், "தான மந்திர விரதவோ மங்களாற் றவிருமென் பதுபோய்யோ" எ - ம், தத்துவ ஞானத்தாற் சகலசஞ்சித கர்மங்களும் நாசமாகுகவெனும் ஈசுரசங்கற்பமான ஞானகாண்ட சித்தாந்தத்தை நம்பினுல் அவர் சத்திய சங்கற்பரென்று சாஸ்திரங்களிற் பிரசித்தமாகவிருத்தலின், அவர் சங்கற்பப்படி ஞானத்தாலவை நீங்கி நீ அமிர்தமயமாவை என்பார், "ஞான மாங்கனல் சுடுமென்ற மறை மொழி நம்பினுல் வீடுண்டே" என்றுங் கூறினர்.

கர்மகாண்டத்தின் பூர்வபட்சம் அதன் சித்தாந்தமாகிய பிராயச்சித்தத் தாலேயே நீங்காநிற்பதாற் சகல சஞ்சித கர்மங்களையும் ஞானக்கினி சுடுமென்னும் ஞானகாண்ட சிந்தாந்தத்தை நம்பி யநுஷ்டிக்கில் அவை ஏன் நீங்கா, சித்தமாய் நீங்கா நிற்கும் எனத் துணிந்து சந்தேகம் ஒழிதி என்பதாம். (நுக)

(208) [இங்ஙனம் ஞானத்திற்கு அற்புதமான மஹாத்மியமிருக்க அதனை அடைந்துய்யாமல் அறிவுடையோரும் கர்மப்படுகுழியில் ஆழ்ந்தற்குக் காரண மென்னையோவென வினுதல்.]

என்ம னந்திருக் கோயிலாத் தினங்குடி யிருந்தருள் குருமூர்த்தி
சென்ம சஞ்சித வினைகள்வே ரறுத்திடுந் தேவரீர் மெய்ஞ்ஞானம்
தன்ம யந்தரு மகிமையை விபுதராஞ் சமர்த்தரு மறியாமல்
கன்ம மாங்குழி யினில்விழுந் தழிகின்ற காரண முரையீரே. (நுஉ)

இ - ள். என் மனம்=எனது இருதயத்தையே—திருக்கோயிலா=சிறந்த ஆலயமாகக்கொண்டு—தினம் குடி இருந்து அருள்=நாளும் குடியாயெழுந்தருளி யிராநிற்கும்—குருமூர்த்தி=குருவே—தேவரீர் மெய்ஞ்ஞானம்=தேவரீர் (அருளாகின்ற) தத்துவஞானமானது—சென்ம சஞ்சித வினைகள்=ஜநநத்திற்குக் காரணமான சஞ்சிதகர்மங்களின்—வேர் அறுத்திடும்=மூலமாகிய அவித்தையை அரியாநிற்கும்:—தன் மயம் தரும்=(பரிபூரண பரமாநந்த பரம சீதளமான) பிரஹ்மத்தின்கண் ணபேதமாயிருக்கும் மோட்ச சாம்பிராச்சியத்தையுந் தரும்;—மகிமையை=இம் மஹாத்துவத்தை—விபுதர் ஆம் சமர்த்தரும்=மிகக்கற்ரோராய்க் குணதோஷங்களைப் பகுத்தறிய வல்லோரும்—அறியாமல்=அறிந்து அதனைப் பெற்றுய்யாமல் (அல்லது, உணர்ந்து அதனையடைதற்குக் காரணமான நிவிர்த்தி மார்க்கத்தில் புதியமலர்மெல்லணையிற்போலப் பொருந்தாமல்)—கன்மம் ஆம் குழியினில்=கர்மமாகிய படுகுழியில்—விழுந்து அழிகின்ற=விழுந்து வருந்துகின்ற—காரணம் உரையீர்=காரணத்தை யருள்வீராக.—எ - று. (நுஉ)

[அதற்கு விடைகூறல்.]

அழிவி லாததற் பதந்தனை மைந்தனே யகமுகத் தவர்சேர்வர்
வழிந டப்பவர் பராமுக மாயினுன் மலர்ந்தகண் ணிருந்தாலும்

குழியில் வீழ்வர்கா ணப்படி வெளிமுகங் கொண்டுகா மிகளாஞர்
பழித ரும்பிற விக்கட லழுந்துவர் பரகதி யடையாரே. (நிஙூ)

இ - ள். அழிவிலாத தற்பதந்தனே=நித்திய நிரதிசயாநந்த ரூபமான பிரஹ்மபதத்தை—மைந்தனே—அகமுகத்தவர் சேர்வர்=(உள்ளிலும், புறனிலும்) அகமுகமுடையோர் அடையாநிற்பர்.—வழி நடப்பவர்=மார்க்கத்திற் செல்பவர்—பராமுகம் ஆயினல்=பராமுக்மாயின்,—மலர்ந்த கண் இருந்தாலும்=விகசிதமான நேத்திரங்க ளிருப்பினும்—குழியில் வீழ்வர்காண்=(எப்படிக்) குழியின்கண் வீழாநிற்பரோ—அப்படி—வெளி முகங்கொண்டு=(உள்ளிலும், புறனிலும்) பகிர்முகமுடையராய்,—காமிகள் ஆனேர்=சுவர்க்ககாமிகளாயினேர்—பழிதரும் பிறவிக்கடல் அழுந்துவர்=(கருவிநூற் பயிற்சிவலியால் விரிந்தவறி விருந்தாலும்) பழிக்கத்தக்க பிறவிக்கடலி லமிழ்ந்தாநிற்பர் :—பரகதி அடையார்=மோட்சமடையார்.—எ - று.

"மலர்ந்த கண்ணிருந்தாலும்" என்றதற்கியைய விரிந்த அறிவிருந்தாலும் என்பது வருவித்தாம்.

அபிப்பிராயம். —"நாநாவானவை ஈண்டற்பழமில்லே" என்னுஞ் சுருதியால் மித்தையென்றுவது, "ஆன்மாவே யிதனேத்தும்" என்னுஞ் சுருதியால் தானென்றுவது வாகியாந்தரப் பிரபஞ்சத்தைப் பார்ப்பது அகமுகம். அவிவேகத்தால் பிரபஞ்சத்தைச் சத்தியமென்றும், அதில் தேகேந்திரியாதிகள் தானென்றும், புத்திராதாராதிகள் தனதென்றும் இப்படிப் பேதமாகப் பார்ப்பது பகிர்முகம்: இப்பகிர்முகப் பார்வையால் நசுவரமான சுவர்க்காதிகளில் காமமுடையரா யிருக்கையே கர்மப் படுகுழியில் வீழ்வதற்குக் காரணம் என்பதாம்.

"பரகதியடையார்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"வழிபடு மிதனேவிட்டு மற்றுள நூல்க ளென்னுங்
குழிகளிற் புரண்டஞ் ஞானக்குணத்திஞற் பிறப்போர்க் கெல்லா
மொழிவற வொருவர் செய்தற் குரித்தன்ருய்த் தானேயுண்டாங்
கழிதலிற் பரமவின்பங் கற்பங்க ளாலுங் கூடா."—

எனவரும். மற்றும் வருவனவற்ருற் காண்க. (நிங)

(209) [ஈசுான் சுதந்தரன், அந்தர்யாமி என்று சாஸ்திரங்களிற் கூறியிருத்தலின், அசுதந்தரான சீவர்கண்மீது தவறேது என வினுதலும், அதற்கு விடைகூறத் தோடங்கலும்.]

சிறந்த நன்மையுந் தீமையு மீசனர் செய்விக்குஞ் செயலன்ரே, பிறந்த சீவர்க ளென்செய்வா ரவர்கண்மேற் பிழைசொலும் வழியேதோ, துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற் பொருண் மார்க்கம், மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனே யதுகேளாய். (நிச)

இ - ள். சிறந்த நன்மையும் தீமையும் = (யாவர்க்கும் ஒப்பச்) சிறந்த நல்வினையும், (இழிந்த) தீவினையும்—ஈசனுர் செய்விக்கும் செயல் அன்றே = (சூத்திரதாரியைப்போலச் சுதந்தரனை) ஈசுரன் செய்விக்குஞ் செயலல்லவா?—பிறந்த சீவர்கள் = (சூத்திரப் பாவைபோலும், சுதந்தர ஈனராய் அவன் ஜநிப்பித்தபடியே) ஜநித்த சீவர்கள்—என்செய்வார் = யாதுசெய்வர்;—அவர்கள்மேல் = அச்சீவர்கண்மீது—பிழைசொலும் வழி ஏதோ = குற்றங் கூறு நெறி யாது காரணமோ?—துறந்த தேசிக மூர்த்தியே என்றிடில் = (அனைத்தையும்) நீத்த (அற்புத மகிமையுடைய) குருமூர்த்தியேயென்று விளம்பிடில்,—சுருதிநூல் பொருள் மார்க்கம் = வேதசாஸ்திரார்த்த நெறியை—மறந்த மூடர்கள் = மறந்த அறிவிலிகள்—வசனிக்கும் பிராந்திகாண் = சொல்லும் பிராந்திகாண்,—மைந்தனே அது கேளாய் = மைந்தா அதை நீ கேட்பாய்.—எ - று.

"நன்மை தீமை" = சுபாசுபக்கிரியை. "பிராந்தி" = அயதார்த்த ஞானம். "அது" எ - து, சுருதிநூற் பொருண் மார்க்கம். (நுசு)

[ஆனல், வேதசாஸ்திரார்த்த வழி ஏதெனிற் கூறுகின்றார்.]

திகழ்ந்த வீசனுர் சிருட்டியுஞ் சீவனுர் சிருட்டியும் வெவ்வேறே
சகந்த னிற்பொது வீசனுர் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம்
அகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல்லாம்
இகழ்ந்த சீவனுர் சிருட்டிக ளாகுங்கா ணீசனுர் செயலன்றே. (நுநு)

இ - ள். திகழ்ந்த ஈசனுர் சிருட்டியும் = சுத்தப் பிரஹ்மமாக விளங்காநின்ற ஈசுரனது சிருஷ்டியும்,—சீவனுர் சிருட்டியும் = சீவனுடைய சிருஷ்டியும்—வெவ்வேறே = வேறு வேறும்.—[அவையாவை யெனின்;—] சகந்தனில் பொது = சகத்தில் (யாவர்க்கும்) பொதுவான—ஈசனுர் சிருட்டிகள் = ஈசுரனுடைய சிருஷ்டிகள்—சர அசரப் பொருள் எல்லாம் = நடப்பன, நிற்பனவாகிய பொருளனைத்துமாம்.—அகந்தை ஆம் அபிமானங்கள் = (தேகாதிகளில்) நானென்னுமகந்தையும்,—(இதனுல் புத்திரவித்தாதிகளில்) உளவாகும் மமதாபிமானங்களும்,—கோபங்கள் ஆசைகள் = கோபங்களும், ஆசைகளும்—இவை எல்லாம் = ஆகிய அந்தக்கரண கற்பனைகளனைத்தும்—இகழ்ந்த சீவனுர் சிருட்டிகள் ஆகும் காண் = உயர்ந்தோரா லிகழ்ந்து வெறுத்த சீவனது சிருஷ்டியாம்:—ஈசனுர் செயல் அன்று = ஈசுரனுடைய சிருஷ்டியல்ல.—எ - று

மாயாமயமான சராசரப் பிரபஞ்சம் ஈசுரசிருஷ்டி, அந்தக்கரணத்தின் பரிணமமாகிய அகந்தை முதலியவை சீவசிருஷ்டி என்பது வேதசாஸ்திர நிர்ணயமாம் என்க. (நுநு)

[ஈசுர சிருஷ்டி, சீவசிருஷ்டியால் வரும் நன்மை தீமைகளைக் கூறுகின்றார்.]

மூவ ராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா முத்திசா தனமாகும்
சீவ னுர்செயுஞ் சிருட்டிக டங்களைச் சென்றிப்பிக்கும் பிணியாகும்

தாவ ராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சனனங்க ணசியா வாங்
கோப மாதிக ணசித்திடிற் பந்தமாங் கொடும்பிற விகள் போமே (நிசு)

இ - ள். மூவர் ஆம் பான் சிருட்டிகள் = திரிமூர்த்திரூபமான ஈசரு டைய சிருஷ்டிகள்—உயிர்க்கு எலாம் = உயிர்களுக்கெல்லாம்—முத்தி சாதனம் ஆகும் = மோட்சமடைதற்குச் சாதனங்களாம்.—சீவனுர் செயும் சிருட்டிகள் = சீவகற்பிதமான சிருஷ்டிகள்—தங்களைச் சனிப்பிக்கும் பிணி ஆகும் = (தேவ, மநுட, திரியக்காதி யோனிகளில்) தங்களைப் பிறப்பிக்கும் பந்தங்களாம்.—[ஈசுர சிருஷ்டி மோட்ச சாதனம், சீவசிருஷ்டி பந்தகாரணம் என்றதற்கு யுக்தி கூறுகின்றார்.] தாவர ஆதிகள் நசித்திடில் = (ஈசுர சிருஷ்டியான) தாவர முதலியவை நாசமாயின்,—ஒருவர்க்கும் = யாரொருவர்க்கும்—சனனங்கள் நசியாவாம் = ஜநநங்கள் நாசமாகாவாம்.—கோபம் ஆதிகள் நசித்திடில் = (சீவசிருஷ்டியான) குரோத முதலியவை நாசமாயின்,—பந்தம் ஆம் கொடும் பிறவிகள் போம் = பந்தமாகிய கொடிய ஜநநங்களுமாம்.—எ - று.

"படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை."—
என்று தேவாரத்திலும்,
"குலவு மூவ ருருவமுங் கொண்டதே"—

என்று பாகவதத்திலுங் கூறியிருப்பதுபோல இங்கும், "மூவ ராம் பரன்" என்றார். "முத்திசாதனம்" எ - து, குருசாஸ்திராதி ரூபத்தை என்க. (நிசு)

[கூறிப்போந்ததற்கு முக்கியவநுபவம் இனிக் கூறுகின்றார்.]

ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெவர்பவ மொழிந்தார்கள்
தேச காலதே காதிக ளிருக்கவுஞ் சீவகா ரிய மோகம்
நாச மாக்கிய விவேகத்தி னுயிரொடு ஞானமுத் தர்களானர்
பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன்றே.(நிஎ)

இ - ள். ஈசர் காரியம் = (சராசரரூபமான) ஈசுர சிருட்டிகள்—பிரளயத்து ஒழியவும் = (அவாது சங்கற்பத்தின்படியே) பிரளயகாலத்தில் நாசமாகவும்—எவர் பவம் ஒழிந்தார்கள் = யாவர் ஜநநநாசத்தையடைந்தனர்: (ஒருவரும் அடைந்திலர்.)—தேச கால தேகாதிகள் இருக்கவும் = தேசங்காலந் தேக முதலிய ஈசுர சிருஷ்டி யழியாதிருக்கவும்—(குருசாஸ்திராதி ரூபமான ஈசுர சிருஷ்டியாகிய சாதனங்களைக்கொண்டே) சீவ காரிய மோகம் = சீவ சிருஷ்டியாகிய மோகங்களை—நாசம் ஆக்கிய = (மீண்டெழாமல்) நாசஞ் செய்த—விவேகத்தின் = விவேகத்திஞல்—உயிரொடும் = பிராணனோடும்—ஞான முத்தர்கள் ஆனர் = ஞானமுடைய சீவன் முத்தராயினர்;—(ஆகலின்,) பாசமோகங்கள் = பாசமாகிய மோகங்கள்—பசுக்களின் செயல் அன்றி = சீவர்கள் சிருஷ்டியே யல்லாமல்—பசுபதி செயல் அன்று = ஈசுர சிருஷ்டியல்ல.—எ - று.

"நாசமாகிய" எ - ம், பாடமுளது. சுழுத்தியைப்போலப் பிரளயத் தில் அகந்தை முதலிய வாசனைகள் அதுற்புத்தமாயிருத்தலின், சிருஷ்டியாதி யிற் சகல பிராணிகளுந் தத்தம் வாசனையின்படியே நால்வகை யோனிகளை யடைகின்றன; ஆதலால், "எவர்பவ மொழிந்தார்" என்றார்.

"இறப்பிலா விந்தமோக மிறையுமீட் டெண்ணமின்றி, மறப் பதே நல்லதென்று"—

வாசிட்டத்திற் கூறியிருப்பதால், "மீண்டெழாமல்" என்பது வருவித் தாம். "மோகம்" எ - து, அகந்தையாதிகளை; இவை ஜநந பந்தத்திற்குக் காரணமாகலின், "பாசம்" எ - ம், சுதந்தரகீனராகலின் சீவரை "பசுக் கள்" எ - ம், இவர்க்குச் சுதந்தரமுடைய இறையாகலின் ஈசுரனை "பசு பதி" என்றுங் கூறினர். (நஎ)

[ஆசை முதலியவை சீவ சிருஷ்டியே யல்லாமல் ஈசுர சிருஷ்டி யல்ல என்பதற்குச் சுருதிப்பொருளைத் தரிசிப்பிக்கின்றார்.]

அச்சு வத்தமென் றொருமர மதிலிரண் டரும்பற வைகள்வாழும் நச்சு மங்கொரு பறவையம் மாக்கனி நன்றுநன் றெனத்தின்னும் மெச்சு மங்கொரு பறவைதின் றுதென வியங்கியப் பொருளாக வைச்சு மாமறை சீவனை யீசனை வகுத்தவா றறிவாயே. (நஅ)

இ - ள். அச்சு வத்தம் என்று ஒரு மரம்=அரசென்று சொல்லப்பட்ட ஓர் விருட்ச முண்டு;—அதில்=அவ்விருட்சத்தின்கண் — இரண்டு அரும் பறவைகள் வாழும்=இரண்டரிய பட்சிகள் ஆசிரயித்திருக்கும்;—அங்கு= அவ்விருட்சத்தின் கண்ணுள்ள (இரண்டு பட்சிகளுள்,)—நச்சும்=(போகங் களை) விரும்புகின்ற—ஒரு பறவை=ஓர் பட்சி—அம்மரக்கனி=அவ்விருட் சத்தின் கனிகளை—நன்று நன்று எனத் தின்னும்=(இது) நல்லது, (இது) நல்லது என்று புசியாநிற்கும்,—மெச்சும்=(யாவராலும்) கொண்டாடப்பட்ட —அங்கு ஒரு பறவை=அவ்விருட்சத்தின் கண்ணுள்ள மற்றோர் பட்சி யானது—தின்றுது என=(அவ்விருட்சத்தின் கனிகளைப்) புசியாதிருக்கும் என்று—*வியங்கியப்பொருள் ஆக வைச்சு=வியங்கியார்த்தமாக வைத்து— மாமறை=மகத்துவமுடைய முண்டகோபநிடதமானது—சீவனை ஈசனை= சீவனையும், ஈசுரனையும்—வகுத்த ஆறு அறிவாய்=பகுத்துக்கூறிய வழியை நீ விசாரித்தறிவாய்.—எ - று.

(210) முலசுருதியின் பாஷியார்த்தம்.—நியம்ய, நியாமகபாவப் பிரா ப்திரூபமான கமனத்தால், அல்லது பட்சியைப்போல விருட்சத்தை ஆசிர யித்திருப்பதாற் சீவேசுரரை, "பறவை" என்றது. விருட்சம்போலச் சேதிக் கப்படுந் தருமமுடையதா யிருத்தலாற் சரீரத்தை, "விருட்சம்" என்றது.

* வியங்கியப்பொருள் எனினும், குறிப்புப்பொருள் எனினும் ஒக்கும்.

சரீரநப விருட்சமானது மேலான பிரஹ்மத்தை மூலமாகவுடையது, கீழான பிராணன் முதலியவற்றைச் சாகைகளாகவுடையது, தனது திதிநியமம் இன்மையின், அச்சுவத்தம் என்னும் நாமமுடையது, அஞ்ஞானபரியந்தம் இருப்புடையது, க்ஷேத்திரம் என்னும் நாமமுடையது, சர்வப்பிராணிகளின் கர்மபலங்கட்கும் ஆசிரயமானது, பட்சிகள்போல அவித்தை காம கர்மங்களினுடைய வாசனைக்கு ஆசிரயமாகிய லிங்க சரீர வுபாதியுடைய சீவனும், ஈசுரனும் ஆகிய இருவருங் கூடியிருப்பது; கூடியிருக்கும் அவ்விருவருள்ளும், லிங்கசரீரரூபவுபாதியுடைய க்ஷேத்திரஜ்ஞன் என்னுஞ் சீவனே அவ்விருட்சத்தின்கண் ஆசிரயித்திருக்குங் கர்மஜந்நியங்களாகிய சுகதுக்கமயமான அநேகவித வேதனைகளின் அநுபவரூபமென்னும் இஷ்டபலன்களை அவிவேகத்தாற் புசிக்கின்றனன்; நித்தியசுத்த, நித்தியபுத்த, நித்தியமுத்த சுபாவமுடைய சர்வஜ்ஞரூபிய சுத்த சத்துவகுணப் பிரதானமான மாயாவுபாதியுடைய வீசுரன் புசிக்கின்றிலன். என்னை? அவ்வீசுரன் நித்தியமான சாட்சித்தன்மையின் சத்தாமாத்திரத்தால் போக்கியம், போக்தா என்னும் இவ்விரண்டின் பிரேரகனுமாகின் ஆகலின் அவன் புசிக்கின்றிலன், விருட்சத்திற்கு அந்நியனுய்க் கேவலம் பார்ப்பவனுகவே இருக்கின்றனன், அவனுடைய தரிசனமாத்திரத்தாலேயே இராஜாவைப்போலப் பிரேரகத்தன்மை சித்திக்கிறது என்பது ழுலசுருதியின் பாஷியார்த்தம்.

(211) *வியஞ்சனை விருத்தியால் யாதொரு பொருள் தோன்றுநிற்குமோ அது வியங்கியப் பொருளெனப்படும். **வியஞ்சனை விருத்திக்கு உதாரணம்;**—சத்துருவின் நிரகத்திற் போஜனநிமித்தம் புக்க புருடனை அவனிடத் தன்புடைய மற்றொரு புருடன் பார்த்து விஷத்தைப்புசி என்புழி, விஷத்தைப்புசி என்பதற்கு நஞ்சையுண்ணு என்பது சக்தி விருத்தியாற் போந்தபொருளாம். வக்தாவினுடைய தாற்பரியமோ அதுவன்று, புசிக்க வேண்டாம் என்பதாம். போஜனத்தில் சக்தியுடைய அப்பதத்திற்கு அபாவத்தில் சம்பந்தமின்மையால் லட்சணையும் பொருந்தாது. ஆதலால், சத்துரு நிரகத்திற் போஜன நிவிர்த்தி வாக்கியத்தின் வியங்கியார்த்தமாம்; அதுபோலப் பறவை என்னும் பதத்தின் சக்தி விருத்தியானும், இலட்சணை விருத்தியானும் சீவேசுரர் பெறப்படாமல் வியஞ்சனை விருத்தியினுற் பெறப்படுதலின், "**வியங்கியப் பொருளாக**" என்றார். (நிஅ)

(212) [இவ்வாறு சுருதி, யுத்தி, அநுபவங்களால் காமகீதரோதாதிகள் சீவசசெயலேயன்றி சிவன்செயலன்றெனகூறி, இங்ஙனம் அறியாதோர்கீது வரும் அநர்த்தத்தையும், அறிந்தோர்கீதவரும் க்ஷேமத்தையும் இனிகூறுகின்றார்.]

இந்தச் சீவனுல் வருமறு பகையெலா மிவன்செய லென்னுமல்
அந்தத் தேவனுல் வருமென்ற மூடர்க ளதோகெதி யடைவார்கள்

---

* "**வியஞ்சனை விருத்தி**"—பிறிதுமொழிதல் என்னும் அலங்காரமாம்; ஒட்டு அணியெனினும் ஒக்கும்.

இந்தச் சீவனுல் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனு லன்றெனும் விவேகிக ளமலவீ டடைவாரே. (நிகூ)

இ - ள். வெளி.

அறுபகை எனினும், அரிசட்வர்க்கம் எனினும் ஒக்கும். தற்செயலான காம முதலிய ஈன குணங்களைச் சர்வஞ்ஞத்வ முதலிய கல்யாண குணங்களை யுடைய சிவச்செயலாகச் சொல்பவர், பின்னராயினும் அப்படிச் சொல்வது குற்றமென்று கருதி அவைநீங்கி க்ஷேமமடையச் சன்மார்க்க முயற்சி யடையாமையின், தனது உடற்கட்பொருந்திய நோய்க்குச் சிகிச்சை தேடாமல் அபத்தியஞ் செய்து வருபவன் அந்நோய் அதிகரிக்கப்பெற்றுப் பின்னும் நாநாவித துன்பத்து ளாழ்வதுபோலப் பாவம் அதிகரித்துப் பின் நரக முதலிய நாநாவித துன்பங்களை யடைதலால், "அதோகெதியடைவார்" எ - ம், அவ்வீன குணங்களைத் தற்செயலாகவே சொல்லும் விவேகிகள் அவை நீங்கி க்ஷேமமடையக் கருதிச் சன்மார்க்கத்திற் பிரவிர்த்தித்தலாற் புண்ணிய மிகுந்து சித்தசுத்தி யுடையராய் ஞானமடைந்து அஞ்ஞானத்தினும், அதன் காரியமான அநர்த்தத்தினும் நின்றுவிடுபடுவதால், "அமலவீடடைவார்" என்றுங் கூறினர். "மூடர்க ளதோகெதி யடைவார், விவேகிக ளமலவீ டடைவார்" எனக் கூறினும் மூடர்கள் அதோகெதியை விரும்பாமையானும், விவேகிகள் அமலவீடடையத் தாமே சுதந்தராமுடையராகாமையானும் உலகில் அரசனுனென் தனது நியதிப்படி நடவாதோரைத் தண்டித்து, நடப்போரைச் சவுக்கிய மடைவிப்பதுபோல ஈசுரனும் தமதருணுலில் விலக்கியவற்றைச் செய்து, விதித்தவற்றைச் செய்யாதோரை நரக முதலிய துன்பங்களாற் றண்டிப்பன், விலக்கியவற்றைச் செய்யாதொழித்து, விதித்தவற்றை விருப்பமாகச் செய்யாநிற்பவரைப் பரமசவுக்கியமடையப் பண்ணுநிற்பன் என்பது பெறப்படுகின்றது. (நிகூ)

(213) [ஈசுரனிடத்து வைஷம்மிய தோஷங்கூடுமோ என வினுதலும், அதற்கு விடைகூறலும்.]

நலமெய் யையனே யெல்லவர்க் குந்தெய்வ நாயகன் பொதுவாலுல், சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதே னென்றாயேல், குலவு மக்களைத் தந்தைபோற் சிட்டரைக் குளிர்ந்துதுட்டரைக்காய்வன், கலக ணல்வழி வாச்செயுந் தண்டமுங் கருணையென் றறிவாயே. (கூ0)

இ - ள். நலம் மெய் ஐயனே = ஆநந்தந்தானே திருமேனியாகத் (திரண்டுவந்த) குருவே — எல்லவர்க்கும் = (சிஷ்டர், துஷ்டரென்னும்) யாவர்க்கும் — தெய்வ நாயகன் = (பிரஹ்மன், நாரணன், உருத்திரன் என்னும்) தெய்வங்களுக்கு இறைவனுன வீசுரன் — பொதுவாலுல் = சாதாரணமாயின், — சிலரை வாழ்வித்தல் = சில சிஷ்டரை (ப் புக்தி, முக்திகளைக் கொடுத்து) வாழ்வித்த

லும்,—சிலரொடு கோபித்தல்=சில துஷ்டரை முனிதலும்—செய்வது=செய்யாநிற்பது—ஏன் என்றுயேல்=என்ன காரணத்தாலென்று சங்கிப்பையாயின்,—குலவு மக்களே=விளங்காநின்ற (தம்) புத்திரர்களே—தந்தை போல்=(குணங்கண்டு கோதாட்டலும், குற்றங்கண்டு கோபித்தலுஞ் செய்யாநின்ற) பிதாவைப்போல—சிட்டரைக் குளிர்ந்து=(தன்னுல் அருளிச்செய்யப்பட்ட சாஸ்திரவிதி நெறிநடக்குஞ்) சாதுக்களைச் சந்தோஷித்து (இன்பமடையப்பண்ணி,)— துட்டரைக் காய்வன்=(நிஷேத வழியிற்செல்லும்) அசாதுக்களை (நரகாதிகளால்) தண்டிப்பன்;—கலைகள் நல்வழிவர=சாஸ்திரங்களின் (நிஷேத மார்க்கத்தைத் தவிர்த்து,) விதிமார்க்கத்தில் வருதற்பொருட்டு—செய்யும் தண்டமும்=செய்யாநிற்குந் தண்டமும்—கருணை என்று அறிவாய்=கிருபையே (அல்லாமல் வேறல்ல) என்றறிதி.—எ - று.

முனிதல்=தாரித்திரம், வியாதி, நரகமுதலிய துன்பங்களால் வருத்துவிப்பது. நன்னெறியிற் செல்லும் புத்திரரைச் சந்தோஷித்து அவர்கட்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதும், தீநெறியிற் செல்லும் புத்திரரைத் துவேஷித்து நன்னெறியில் வரத்தண்டிப்பதும் பிதாவுக்கு எப்படிப் பாரபட்சமில்லாத கருணையாமோ அப்படியே சாது, அசாது இருவரிடத்தும் ஈசுரன் செய்யும் அருண், முனிவுகள் இரண்டுங் கருணையேயல்லாமல் பாரபட்சமான விஷம திருஷ்டியன்று என்பதாம். (சுo)

[ஈசுரன் விஷம திருஷ்டியின்றி யாவரிடத்தும் சமதிருஷ்டியுடையவன் என்பதை இன்னும் அநேக திருஷ்டாந்தங்களால் வற்புறுத்துகின்றார்.]

மனைவி லங்கறு மைந்தனே கற்பக மரங்கனல் புனன்மூன்றும்
தனைய டைந்தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாளும்[யான்
அனைய வீசனு மடைந்தவர்க் கருள்செய்வ னகன்றவர்க் கருள்செய்
இனைய குற்றங்க ளெவர்குற்ற மாகுமென் றெண்ணிநீ யறிவாயே.(சுக)

இ - ள். மனை விலங்கு அறும் மைந்தனே=குடும்பமாகிய (நடை) விலங்கறப்பெற்ற மைந்தா—கற்பக மரம் கனல் புனல் மூன்றும் (பாரபட்சமில்லாமலிருந்து) தனை அடைந்தவர் வறுமையும் சீதமும் தாகமும்—தவிர்த்து ஆளும்=(முறையே) தவிர்த்து இரட்சிக்கும்;—அனைய ஈசனும்=அவைபோலும் (ஒருவரிடத்து விருப்பும், ஒருவரிடத்து வெறுப்பும் இல்லாத) ஈசுரனும்—அடைந்தவர்க்கு=(பாரபட்சமில்லாதவனென்றறிந்து தன்னை வேதத்தின் காண்டத்திரயவழியால்) ஆராதிப்பவர்க்கு—அருள்செய்வன்=அநுக்கிரகம் பண்ணுவன்:—அகன்றவர்க்கு அருள்செய்யான்=(தன்னை ஆராதனஞ் செய்யாது) நீங்கினோர்க்கு அநுக்கிரகம் பண்ணுன்;—இனைய குற்றங்கள்=இத்தன்மையான தோஷங்கள்—எவர் குற்றம் ஆகும் என்று=யாவருடைய குற்றங்களாகுமென்று—எண்ணி நீ அறிவாய்=நீ விசாரித்தறியக்கடவாய்.—எ - று.

" அனைய வீசனு மடைந்தவர்க் கருள்செய்வ னகன்றவர்க் கருள்செய் யான்" எ - கு, உ - ம், பகவற்கீதை,

" எப்பொரு டனக்கு மியாமெனத் திருத்தலா லெனக்கி யாரு
மொப்பர்க ளினிய ரின்ன தாரென வொருவ ரில்லை
யிப்படி யறியு மன்பர் பக்கலே யானு நிற்ப
னப்படி யவரு மென்பா லங்ஙன மமர்ந்து நிற்பார்."—

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

"இனைய தற்றங்க ளெவர்தற்ற மாதும்" எ - கு, உ - ம், பட்டினத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை,

" பொருதிடங் கொண்ட பொன்னி புரக் கு
மருதிடங் கொண்ட மருத வா ண
நின்னது குற்ற முளதோ நின்னினை ந்
தெண்ண ருங்கோடி யிடர்ப்பகை களைந் து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதை யா
இறப்பையும் பிறப்பையு மிகழ்ந்து சிறப்பொ டு
தேவ ராவின் கன்றெனத் திரியா ப்
பாவிக டமதே பாவம் யாதெனி ன்
முறியற் பெறுக்கன் மூப்பழங் கலந் த
வறுசுவை யடிசி லட்டினி திருப்ப ப்
புசியா தொருவன் பசியால் வருந்து த
லயினியின் குற்ற மன்று வெயிலின்வை த்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப் ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட் கை
தெண்ணீர்க் குற்ற மன்றுகண் ணகன் று
தேன்றுளி சிதறிப் பூந்துணர் தூறு மி
வாலுகங் கிடந்த சோலை கிடப் ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப் ப
வடிபெயர்த் திடுவா னெனரு வ
னெடிது வருந்துத னிழற்றீங் கன் றே."

என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (சுக)

(214) [ஆயின், அக்குற்றம் நீங்கி உய்யச் சீவர்களாற் செய்யற்பால தென்னையோ வெனின்? அதற்குக் கூறுகின்றார்.]

ஒன்று கேண்மக னேபுமான் முயற்சியா லுறைத்துமா நுடர்க் கீசன், நன்று செய்யவே காட்டிய நூல்வழி நடந்துநல் லவர்பின்னே,

சென்று துட்டவா தனைவிட்டு விவேகராய்ச் செனித்தமா யையைத் தள்ளி, நின்று ஞானத்தை யடைந்தவர் பவங்கள்போ நிச்சய மிது தானே. (சூஉ)

இ - ள். மகனே— ஒன்றுகேள்=(சகல ஞான சாஸ்திரங்களின் சார பூதமான) ஒருபாயத்தை(ச் சொல்லுகிறேம்) கேட்பாய்;—புமான் முயற்சி யால் உறைத்து=புருஷப் பிரயத்தனத்தா லழுந்தி—மாநுடர்க்கு ஈசன் நன்று செய்யவே=மநுடர்களுக்கு ஈசுரன் பிரஹ்மா நந்தங் கொடுத்தற் பொருட்டே —காட்டிய=அருளிச்செய்த—நூல் வழி நடந்து=வேதத்தின் (காண்டத் திரய) நெறியில் நடந்து—நல்லவர் பின்னேசென்று=(பின் பிரஹ்மநிஷ்டர்க ளான) பெரியோர்கள் பிறகே திரிந்து—துட்ட வாதனைவிட்டு=(அப்பெரி யோர்கள் சகவாசத்தாற் சாந்தியாதி வாசனைகளையுடையராய் முன்னுள்ள) குரோதாதி மலினவாசனைகளை யொழித்து—விவேகர்ஆய்=ஆன்மா நான்ம விவேகத்தை யுடையவர்களாய்—செனித்த மாயையைத்தள்ளி=அவிவேகத் தாலுண்டான பேதபுத்தியைப்போக்கி—நின்று=(தன்னநுபூதியிற் சிவோ கமென்று) நின்று—ஞானத்தை அடைந்தவர்=(சமூசயாகித பிரஹ்மான்ம வயிக்கிய) ஞானத்தைப் பெற்றவருடைய—பவங்கள்போம்=(சுராதிரியக் காதி ரூபங்களான வெகுவித) ஜநநங்கணீங்கும்;—இது தானே நிச்சயம்= இதுவே (சுருதி, ஸ்மிருதிகளின்) சித்தாந்தமாம்.—எ - று.

எவ்வகை முயற்சிசெய்பவரும், நெடுங்காலம், நிரந்தரம், நேசத்தோடு செய்யினன்றி அவ்வப்பயனை யடையாராகலின், "புமான் முயற்சியா லுறைத்து" என்றார். "மாநுடர்க்கு" எ - து,

"மடல்வி ரிந்தம ரைமலர் வைகுவோன்
சடம னைத்தையுந் தந்துமு வந்தில
னிட ரறுக்குமென் றெண்ணிநன் மாநுட
வுடல்ப டைத்தபி னேகையுற் றனரோ."—

என்னும் பாகவதத்தின் சுருத்தினுல் என்க. ஈசுரார்ப்பணமாகச் செய் யும் நிஷ்காம கர்மானுஷ்டானத்தால் அந்தக்கரணத்தின் மலதோஷமும், ஈசு ரோபாசனையினுல் விக்ஷேபதோஷமும் நீங்கித் தீவிரமான ஞானசையோடு கூடிப் பெரியோர்களை யடைந்தென்பார், "நூல் வழிநடந்து நல்லவர் பின்னே சென்று" என்றார்.

ஞானம் சர்வப் பிராயச்சித்த ரூபமாகலின், இதனைச் சொல்லிய சோபா னக்கிரமமாக வடைந்தாலன்றித் தற்செயலை ஈசுரச் செயலாகச் சொல்லித் திரிந்த பெருந்தோஷந் தவிராது என்பது கருத்து. (சூஉ)

(215) [ஞானத்திற்கு முக்கியவந்தரங்க சாதனம் யாதென்றும், அதன் சொரூபம் யாதென்றுஞ் சங்கித்து அவற்றைக் கூறுகின்றார்.]

இந்த ஞானந்தான் வருவதெப் படியெனி லிடைவிடா விசாரத் தால், வந்த டைந்திடும் விசாரந்தா னேதெனின் மனுதியாஞ் சரீரத்

தில், இந்த நானெவன் சித்தெது சடமெது விரண்டுமொன் றுக்கூடும், பந்த மேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமதாகும். (கூஙு)

இ - ள். இந்த ஞானந்தான்=(சம்சார நிவிர்த்திக்குக் காரணமாக) முன் சொன்ன பிரஹ்மான்மவயிக்கிய ஞானமானது—வருவது எப்படி எனில்= வாராநிற்பது எவ்விதமான முக்கியோபாயத்தாலென்று நீ சங்கிக்கில்,— இடைவிடா விசாரத்தால்=நிரந்தரம், நெடுங்காலம், (நேசத்தோடுகூடிச்) செய்யும் விசாரத்தாலேயே—வந்து அடைந்திடும்=வந்து பொருந்தாநிற்கும் —விசாரந்தான் ஏது எனின்=விசாரத்தின் சொரூபமாவது எவ்விதமா மென்று கேட்பாயாயின்,—இந்தமன ஆதி ஆம் சரீரத்தில்=இம்மன முதலா கிய சரீரத்திரயங்களில்—நான் எவன்=அகம் சத்தார்த்தமாவது யாது?— சித்து எது=இவைகளிற் சித்தாயிருப்பது யாது?—சடம் எது=சடமாயிருப் பது யாது?—இரண்டும் ஒன்றுக்கூடும் பந்தம் ஏது=சிற்சடங்கள் இரண்டும் (தப்தாயபிண்டம்போல) ஒன்றுகப் பொருந்துகின்ற பந்தமாவது யாது?— வீடு ஏது=மோட்சமாவது யாது?—என உசாவுதல்=என்று (நிரந்தரம் அழுந்த) ஆராய்தலே பகர்விசாரமது ஆகும்=(சாஸ்திரங்களாலும், பெரி யோர்களாலும்) கூறுநிற்கும் விசாரரூபமாம்.—எ - று.

(216) "ஞானக்கு முந்துசவ ணுதிகமே காரணம்"—

என வேதாந்தசூடாமணி முதலிய நூல்களிற் கூறியிருப்பதுபோற்கூறு மல் "இடைவிடா விசாரத்தால் வந்த டைந்திடும் விசாரந்தான், நானெவன் சித்தெது சடமெது, எனவுசாவுதல்" என இங்கே கூறினதற்குக் காரண மென்னையோ வெனின்;—விவேகம், வைராக்கியம், சமாதி சட்சம்ப த்தி, முமுட்சுத்துவம் இவை நான்கும், சிரவண, மனன, நிதித்தியாசனங் கண் மூன்றும், தற்பதார்த்தம், துவம்பதார்த்த சோதனையொன்றும் ஆக இவ் வெட்டும் அந்தரங்க சாதனமென்றும், எக்ஞாதிகர்மங்கள் பகிரங்கசாதன மென்றுஞ் சொல்லப்படும்; அவைகளில் சிஞ்ஞாசுக்குப் பகிரங்க சாதனங்கள் தள்ளற்பாலன: அந்தரங்க சாதனங்கள் கொள்ளற்பாலன. சிரவணத்தில் அல் லது, ஞானத்தில் யாது பிரத்தியட்சப்பயனை யுடையது அது அந்தரங்கசா தன மெனப்படும். [பலன் எ - து, இங்கே உபயோகத்தை.] விவேகாதிக ளின்றிப் பகிர்முக புருஷனுக்குச் சிரவணங்கூடாதாகலின், விவேகாதி நான்க னுபயோகஞ் சிரவணத்திலுளது; அப்படியே சிரவணாதிகளின்றி ஞான முண்டாகாதாகலின் சிரவண, மனன, நிதித்தியாசனங்களி னுபயோகம் ஞானத்திலுளது; அப்படியே தற்பதார்த்தம், துவம்பதார்த்தங்களை யறிந்தா லல்லாமல் அபேதஞானம் உண்டாகாது. இவ்வாற்றால், விவேகாதி நான்கு சாதனங்களினுபயோகம் சிரவணத்திலும், சிரவணாதி நான்கு சாதனங்களி னுபயோகம் ஞானத்திலுமிருப்பதால் எட்டும் அந்தரங்க சாதனங்கள்; யாது ஞானத்தில் அல்லது, சிரவணத்தில் பிரத்தியட்சப்பயனை யுடைத்தாகாமல் அந்தக்காரண சுத்தியாகிய பயனை யுடைத்தாயிருக்குமோ அது ஞானத்திற்குப் பகிரங்க சாதனமெனப்படும். இப்படிப்பட்டவை எக்ஞாதி கர்மங்களாம்.

எப்படியும் எக்ஞாதிகர்மங்கள் சம்சாரத்திற்குச் சாதனங்களாகலின் அவை களால் அந்தக்கரணசுத்தி உளதாமெனலுங் கூடாது; அப்படியானலும் சகாம புருஷனுக்குச் சம்சாரத்திற் கேதுவாம்: நிஷ்காமனுக்கு அந்தக்கரணசுத்திக்கு ஏதுவாம்; இவ்வாற்றால், நிஷ்காம புருஷனுக்கு அந்தக்கரணசுத்தி வாயிலாக ஞானத்திற்கு ஏதுவாகலின், பகிரங்க சாதனமென்றும், விவேகாதிகள் அந்த ரங்க சாதனமென்றுஞ் சொல்லப்படும். தூரமாவுள்ளதற்குப் பகிரங்கமென் றும், சமீபமாவுள்ளதற்கு அந்தரங்கமென்றும் பெயர். எக்ஞாதி கர்மங்களை யும், அவைகளின் சாதனங்களான ஸ்திரீ, தன, புத்திராதிகளையும் விடில் அவன் ஞானத்துக்கு அதிகாரியாவன். ஞானத்திற்கு அதிகாரியிடத்து எக் ஞாதிகள் பொருந்தாமையின் அவை தூரமாம்; விவேகாதிகள் ஞானாதிகாரி யிடத்துப் பொருந்தியிருத்தலின் சமீபமாம்; இவற்றினும் பேதமுள; அவை யாவையோவெனின்?—விவேகாதிகளினுபயோகம் சிரவணத்திலும், சிரவ ணாதிகளினுபயோகம் ஞானத்திலு மிருப்பதால் விவேகாதிகளை நோக்கச் சிரவணாதிகள் அந்தரங்கமாம்: சிரவணாதிகளை நோக்க விவேகாதிகள் பகிரங்க மாம். எப்படியும், விவேகாதிகளும் ஞானத்திற்கு அந்தரங்க சாதனங்க ளென்றே சர்வ கிரந்தங்களிலுங் கூறியுள்ளன: பகிரங்கமாகக் கூறவில்லை; அப்படியானலும், விவேகாதிகட்கு ஞானத்தின் சாதனமான சிரவணத்தில் பிரத்தியட்சப் பயனிருக்கின்றது. சிரவணாதிகளைப்போல விவேகாதிகளும் சிஞ்ஞாசுவினு லடையற்பாலனவேயாம்: எக்ஞாதிகளைப்போலத் தள்ளற் பாலனவல்ல; ஆதலால், அந்தரங்கமென்றனர்: எக்ஞாதிகளை நோக்கவும் அந்தரங்கமாம்; ஆகலின், அந்தரங்க சாதனத்திற் சேர்த்துக்கூறினர். விசா ரத்தினுற் பார்க்கில் ஞானத்திற்கு முக்கிய வந்தரங்க சாதனம் தத்துவமவி யாதி மஹாவாக்கியங்களாம்: சிரவணாதிகளுமல்ல. என்னை? யுத்தியினுல் வேதாந்த வாக்கியங்களின் தாற்பரியநிச்சயம் சிரவணமெனப்படும். சீவபிரஹ் மங்களின் அபேதத்தின்சாதகமும், பேதத்தின்பாதகமுமாகிய யுத்திகளால் அத்துவிதீயப் பிரஹ்மத்தின் சிந்தனம் மननமென்று சொல்லப்படும். அநான் மாகார விருத்தியின் வியவதான ரகிதமான பிரமாகார விருத்தியின் ஸ்திதி நிதித்தியாசனமென்று சொல்லப்படும். நிதித்தியாசனத்தின் பரிபாகா வஸ் தையையே சமாதியென்பர்; இதனுல் சமாதியும் நிதித்தியாசனத்தில் அந் தர்ப்பாவமாம்: வேறு சாதனமல்ல; இந்தச் சிரவண மனன நிதித்தியாசனங் கள் ஞானத்திற்குச் சாட்சாத்சாதனமல்ல; பின்னை எப்படிப்பட்டதெ னின்;—புத்தியினது தோஷமாகிய அசம்பாவனை, விபரீதபாவனைகளின் நாச கமாம். சமூசயத்தை அசம்பாவனை என்பர். இப்படி விசாரசாகரத்திற் கூறி யிருக்கின்றது; இவ்வபிப்பிராயத்தினுலேயே இவரும் சிரவண, மனன, நிதித் தியாசனங்களால் ஞானம் வருமென்னுது, "இடைவிடா விசாரத்தால் வந் தடைந்திடும்" என்றார்.

"விசாரமதாம்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"கெடாத சிற்கண்ணு னீதான் கிளர்மே லவர்களுடனே தான்
விடாதிவ் வுலகே தியாமாரென் றுறைக்க மெல்ல விசாரிப்பாய்

தடாதுட் பொருடேர் வித்தைக்கு விசாரந் தானே தனிஞானங் கடாவி யறியத் தக்கததிற் காணும் பாலின் மதுரம்போல்."—எ-ம்,

"முனிய கன்றபின் னெயினர்கோன் றனியிட முந்திநன் மதி யாலே, யனிச நானென்ப தானென நாடின னடிமுதன் முடியீறுந், தனியு டம்பைநா னென்பது புதுமையாஞ் சடவுடல் காண்கேனுன், றுனிசெ யிவ்வுட லசேதனந் தசைமுதற் றுன்னுமா தலினன்றே."—எ - ம்,

"காண மீரைந்து மன்னியஞ் சடமெனுங் கணக்கினு ணன்றித், திரளெ னக்கில வுடன்முத னினலன் சேடமே தெனநோக்கில், விரவு சீவனே சேடமா மின்னதும் வேறொன்றுற் றெரிகின்ற, தாவி தானவே றொன்றினுற் றெரியுமீ தயர்ந்ததத் துவமாகா."—எ - ம்.

"தெரிவ தாகிய விதனையு மகற்றுவன் றெரிபொரு ணுணுமோ
பெரிது சேடமாய் விகற்பமற் றமலமாம் பேரறி வியாலுகு
மரிய யன்சிவ னிந்திர னந்தக னுதியா மிடந்தோறுஞ்
சொரிகொண் முத்தினு ணூலென நிற்குமாற் றொன்றுமிவ் வுயர் போதம்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (சுஉ)

(217) [பிரஹ்மான்ம வயிக்கிய ஞானத்திற்கு விசாரமே முக்கிய அந் தரங்க சாதனமாமென்று முற்கூறியதைத்தானே இச்செய் யுள் தொடங்கி, சுஎ - ம் செய்யுள் வரையில் விளவிடை களாற் சாதிக்கின்றார்.]

போன சன்மங்க டமிலநுட் டித்தநற் புண்ணிய பரிபாகம்
ஞான மாக்குமே விசாரமே னென்றிடி னுமுரைத் திடக்கேளாய்
ஆன புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயி னசுசிபோஞ் சுசியாகும்
மான தம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென் றறிவாயே. (சுச)

இ - ள். போன சன்மங்கள் தமில் அநுட்டித்த=கீழ்ப்போன (அநந்த) ஜநநங்களி லநுஷ்டித்து வந்த—நற்புண்ணிய பரிபாகம்=சற்கரும பரிபாக மானது—ஞானம் ஆக்குமே=ஞாலுதயமாகும்படி செய்யுமே?—விசாரம் என் என்றிடில்=ஆன்மாநான்ம விசாரமெற்றிற்கென்று நீ வினவிடில்,—நாம் உரைத்திடக் கேளாய்=அதற்கு யாங்கூறும் உத்தரத்தைக் கேட்பாய்; —ஆனபுண்ணியம் ஈசுரார்ப்பணம் செயின்=(தத்தம் வருணச்சிரமங்களுக்கு) உசிதமானபுண்ணியங்களே (ப் பலாபேட்சையின்றி) ஈசுரார்ப்பணமாகச் செய் யில்—அசுசி போம் சுசிஆகும்=(அந்தக்காரணத்தின் கண்ணுள்ள) பாவமாகிய அசுத்தம் நீங்கி (மலின நீங்கிய சர்ப்பணம்போல) அது சுத்தமாம்;—மான தம்பினை விசாரித்து=சுத்தமான அம்மனமானது பின்னர்ச் சிற்சடங்களே

விசாரித்து—ஞானத்தை மருவும் என்று அறிவாய்=ஞானத்தைப் பொருந்தா நிற்குமென் றறிவாயாக.—எ - று.

சற்கருமானுஷ்டானமானது சித்தசுத்தி மாத்திரப்பயனைப் பயவா நிற்குமல்லது, விசாரம்போல நேரே ஞானத்தைப் பயவாது என்பதாம்.

இங்ஙனம் விஞ்சியது ஞானசாதன சமுசயம். (சூச)

[சகலத்தையும் பயக்கவல்ல சற்கருமங்கள் அஜ்ஞானத்தை நிவிர்த்தித்தல் இலேசாகலின், விசாரம் ஏனென மீட்டும் விஞ்சுதல்.]

பத்தி யும்வயி ராக்கிய மும்பா லோகமு மணிமாதி
சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியானமுஞ் சாரூப
முத்தி யுந்தரும் விசித்திர கருமங்கண் மோகமாத் திரந்தள்ளும்
புத்தி தந்திட லருமையோ விசாரமேன் புண்ணிய குருமூர்த்தி. (சூடு)

இ - ள். பத்தியும்=ஈசுரனிடத்தன்பும், — வயிராக்கியமும்=(சகலத்தினும்) நிராசையும்,—பாலோகமும்=சுவர்க்கலோகமும்,—அணிமா ஆதி சித்தியும்=அணிமா முதலிய வஷ்டசித்தியும்,—தவ நிட்டையும்=தவத்திலுறுதியாக நிற்றலும்,—யோகமும்=இயமாதியஷ்டாங்க யோகமும்,—தியானமும்=சகுண, நிர்க்குணத் தியானமும்,—சாரூப முத்தியும்=சாரூபமோட்சமும் (ஆகியவிவற்றை)—தரும் விசித்திர கருமங்கள்=கொடுக்கும் ஆச்சரியமான சற்கருமங்கள்—மோகம் மாத்திரம் தள்ளும்=தன்னைப் பிரஹ்மமாக அறியாதவறியாமை மாத்திரத்தை நிவிர்த்திப்பிக்கும்—புத்தி தந்திடல் அருமையோ=ஞானத்தைத் தருதல் அருமையா—விசாரம் ஏன்=விசாரம் யாதுக்கு?—புண்ணிய குருமூர்த்தி=புண்ணியரூபமான குருவே —எ - று (சூடு)

[விசாரத்தாலல்லது, ஞானம் உளதாகாதென்பதை திருஷ்டாந்தமுகத்தா லுணர்த்துகின்றார்.]

வேட மாறிய பேர்களே யறியவே வேண்டிலுன் மகனேகேள்
கூட மாமவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல்
ஓடி யுங்குதித் துந்தலை கீழ்நின்று மூயர்ந்தகம் பத்தேறி
ஆடி யும்பல கருமங்கள் செய்பினு மவருண்மை தெரியாதே. (சூசு)

இ - ள். வேடம் மாறிய பேர்களே=தம்வேடத்தைவிட்டு மாறுவேடங் கொண்டு மறைந்தோரை—அறியவே வேண்டிலுல்=அறியவேண்டின்—மகனேகேள்=மைந்தா நீ கேட்டி;—கூடம் ஆம் அவர்=மறைந்திருப்பவைகளான அவரது—சுபாவங்கள்=குணங்களேயும்,—சீலங்கள்=ஒழுக்கங்களேயும்,—குறிகள்=சின்னங்களேயும்—ஆய்ந்து அறியாமல்=ஆராய்ந்து (அவர் இனையரென) அறியாமல்—ஓடியும்=வெகுதூரங் கால் சலிக்கவோடியும்,—குதித்தும்=வரையிலேறிப் பாய்ந்தும்,—தலைகீழ் நின்றும்=தலைகீழ், (கால் மேலாக) நின்றும்,—உயர்ந்த கம்பத்து ஏறி ஆடியும்=உன்னதமான கம்பத்

தின் மீதேறிக் கூத்தாடியும்,—பலகருமங்கள் செய்யினும்=இன்னும், அநேக கருமங்களைச் செய்யினும்—அவர் உண்மை தெரியாது=வேடமாறிஞெருண்மை யறியவாராது.—எ - று. (சுசு)

[முற்கூறிய திருஷ்டாந்தம்போலத் தார்ஷ்டாந்தத்தும் ஆமென்ல்.]

இன்ன வாறந்தப் பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத்தால் வேதம், சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித்தாலும், அன்ன தானங்க டவங்கண்மந் திரங்களா சாரங்கள் யாகங்கள், என்ன செய்யினுந் தன்னைத்தா னறிகின்ற திவைகளால் வாராதே. (சுஎ)

இ - ள். இன்ன ஆறு=இத்திருஷ்டாந்தப்படி—அந்தப் பிரமத்தை=(நீலாதி வஸ்துக்களோடு கூடி அவ்வண்ணமாய்த் தோற்றும் ஸ்படிகம்போலப் பஞ்சகோசங்களோடு கூடி அவைகளே தானுய்த்தோற்றும்) அப்பிரஹ்மத்தை—இலக்கணத்தால்=(சொரூபம், தடஸ்தம், அதத்வியாவிருத்தி) என்னு மூவகை இலக்கணங்களால்—அறிவிக்கு=அதிகாரிக்குத் தெரிவிக்கும்—வேதம் சொன்ன ஞானமும்=வேதங்களாற் பிரதிபாதிக்கப்பட்ட (பிரஹ்மான்மவயிக்கிய) ஞானமும்—விசாரத்தால் வரும் அன்றி=கூஉ - ம் செய்யுளிற் கூறிய விசாரத்தால் வருமே யல்லாமல்—சுருதி நூல் படித்தாலும்=வேத சாஸ்திரங்களைக் கற்றாலும்,—அன்ன தானங்கள்=அன்னதான (முதலிய தான) ங்களும்,—தவங்கள்=கிருச்சிர சாந்தராயணாதி தவங்களும்,—மந்திரங்கள்=(பஞ்சாட்சர, அஷ்டாட்சராதி) மந்திர செபங்களும்,—ஆசாரங்கள்=(வருணச்சிரம) ஆசாரங்களும்,—யாகங்கள்=(தத்தம் வருணத்திற் குரிய) யாகங்களும்—(ஆகிய இவைகளில்) என்ன செய்யினும்=யாதுசெய்யினும்—தன்னைத் தான் அறிகின்றது=தன்னைத் தானறிவது—இவைகளால் வாராது=இவற்றாலாகாதாகாது.—எ - று.

"தன்னைத்தா னறிகின்றது" என்று பின்னுங் கூறினது ஞானத்தின் சொரூபம் இனைத்தெனக் காட்டினது; இப்படியே திருமந்திரத்தில்,

"தன்னை யறிவ தறிவா மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறி வாகுமே."—

என்றருளிச் செய்திருப்பது காண்க. சொரூபலட்சண முதலிய மூன்றனையும், "ஆகமுதலன" என்னும் வேதாந்த சூடாமணியின் செய்யுளாலறிக. (சுஎ)

(218) [கருமத்தாலன்றி, ஞானத்தால் அஜ்ஞானம் ஒழியுமாறு
எவ்வாறெனத் திருஷ்டாந்த முகத்தாற்
சீடன் வினுதல்.]

துளங்கு தர்ப்பண மழுக்கறக் கைக்கொண்டு துலக்கினும் போமன்றி, விளங்கு புத்தியா லுலகிலார் துலக்கினுர் விமலதே சிக

மூர்த்தி, களங்க மாகுமஞ் ஞானமு மப்படிக் கருமத்தாற் கழுவா மல், உளங்கு றித்தஞா னத்தினு லெப்படி யொழியுமீ தருள்வீரே.

இ - ள். தளங்கு தர்ப்பணம் அழுக்கு அற = ஒளிர்கின்ற கண்ணாடி யிலேறிய அழுக்கறும்படி—கைக்கொண்டு துலக்கினுல்போம் அன்றி = (அதை யகற்றவல்ல சாதனங்களைக்) கையிற்கொண்டு விளக்கினுற் போகு மல்லாமல்—விளங்கு புத்தியால் = விளங்குகின்ற புத்தியினுல்—உலகில் துலக் கினுர் ஆர் = உலகின்கண் விளக்கினேர் யாவர்! (ஒருவருமிலர்)—விமல தேசிக மூர்த்தி = அவித்தியாமல மிறந்த குருவே—அப்படி = அத்திருஷ்டாந்தப்படி —களங்கம் ஆகும் அஞ்ஞானமும் = களங்கமாகிய வஞ்ஞானமும்.—கருமத் தால் கழுவாமல் = சற்கருமத்தால் நீக்கப்படாமல்—உளம் குறித்த ஞானத்தி னுல் = அந்தக்காரணத்தால் (மித்தையென) மதிக்கும் ஞானத்தால்—எப்படி ஒழியும் = எவ்வாறு நீங்கும்;—ஈது அருள்வீர் = இதனை உரைத்தருள்வீராக. —எ - று.

அஞ்ஞானத்தைக் "களங்கம்" எ - து, ஆன்மாவை மறைத்தலின் என்க. (சுஅ)

[முற்செய்யுளிற் சீடன்கூறிய திருஷ்டாந்தம் விஷமமெனக் காண்பித்து மறுத்துத் தாஷ்டாந்தத்திற்குச் சமமான திருஷ்டாந்தம் இது வெனக் காண்பிக்கின்றர்]

தர்ப்ப ணத்தினிற் களிம்புவாஸ் தவமலஞ் சகசமா தலின்மைந்தா
கற்ப ளிங்கினிற் கருநிறஞ் சகசமாக் கறுத்ததன்றுரோபம்
தர்ப்ப ணத்தினி லழுக்கற வேண்டினுற் சாதனத் தொழில்வேண்டும்
கற்ப ளிங்கிலா ரோபமே கறுப்பென்று கண்டிட மனம்போதும். (சுக)

இ - ள். தர்ப்பணத்தினில் களிம்பு = கண்ணாடியின் கண்ணுள்ள களிம் பானது—வாஸ்தவமலம் சகஜம் = * வாஸ்தவமலமும் † சகஜமுமாம்.—மைந்தா = மகனே—கற்பளிங்கினில் = ஸ்படிகக் கல்லில்—கருநிறம் = பற்றி பாய்ந்துள்ள கறுப்புநிறம்—சகசமாக்கறுத்தது அன்று = சகஜமாகக்கறுத்திரு ப்பதல்ல;—ஆரோபம் = பொய்யாக வுள்ளது;—ஆதலின் = ஆதலினுல்,—தர் ப்பணத்தினில் அழுக்கு அறவேண்டினுல் = கண்ணாடியின்கண்ணுள்ள அழுக் கை யொழிக்கவேண்டிடில்—சாதனத்தொழில் வேண்டும் = அதனை யொழி க்கவல்ல சாதனமாகிய தொழில்வேண்டும்:—கற்பளிங்கில் = ஸ்படிகக்கல் லில்—கறுப்பு ஆரோபமே என்று கண்டிட = கருநிறம் பொய்யேயென்று கண்டகற்ற—மனம்போதும் = மனமேபோதும்.—எ - று.

அறுக்கவென்னும் பிறவினையில், "அற" என்னுந் தன்வினைவந்தது. எனைய கண்ணாடியினழுக்கைக் களிம்பென்று வழங்காமையின் இதின் முதற் பாதத்தில் "தர்ப்பணம்" எ - து, செம்புக் கண்ணாடியை; இங்ஙனங்கூறி யது கண்ணாடியின் மலத்திற்குச் சகஜதர்மங் கூறி மறுத்தற்பொருட்டு என்க. (சுக)

* வாஸ்தவம் = சத்தியம். † சகஜம் = கூடவே உண்டானதர்மம்.

[ஸ்படிகம்போலும் அஸ்திபாதிப்பிரிய நுபமான தன்னில் நான் செத்துப் போகிறவன், சடன், துக்கி என்னும் விபரீதப்பிரதீதி மாயையினுல் ஆரோபமாகத் தோற்றுகின்றதாகலின், சற்கருமங்கள் அதற் குச் சாதகமல்லது, பாதகமாகாது என மறுத்து ஞானமே பாதகமாம் என்னுஞ் சித்தாந்தத்தைக் கூறுகின்றார்.]

இங்கு மப்படிச் சச்சிதா நந்தத்தி லிடர்சடம் பொய்மூன்றும்
தங்கு மாயையின் கற்பித மன்றியே சகசவாஸ் தவமன்றே
பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா துறவாக்கும்
துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே. (எ0)

இ - ள். இங்கும் = தாஷ்டாந்தத்திலும் — அப்படி = அத்திருஷ்டாந்தப் படி — சத் சித் ஆநந்தத்தில் = அஸ்தி பாதிப் பிரியரூபமாகிய தன்னில் — பொய் சடம் இடர் மூன்றும் = அசத்து சட துக்கங்கண் மூன்றும் — தங்கும் மாயையின் கற்பிதமே அன்றி = (சுத்தியில் ரஜதம்போல ஆரோபமா) யிருக் கும் (சரீரத்திரய ரூபமான) அஞ்ஞானத்திஞற் கற்பிதமேயல்லாமல் — சகச வாஸ்தவம் அன்று = சகஜமுமன்று, வாஸ்தவமுமன்று. — பங்கம் ஆகும் அஞ் ஞானத்தை = அசத்து சட துக்காத்மகமான அஞ்ஞானத்தை — கருமங்கள் = (புண்ணிய) கருமங்கள் — பகைசெயாது = பகைத்து நாசஞ்செய்யாமல் — உறவு ஆக்கும் = (தமக்கு) உறவாகப்பண்ணும் :— துங்கஞானமே = உயர்வான பிரஹ்மான்மவயிக்கிய ஞானமே — கரும அஞ்ஞானத்தை = கருமத்தையும், அஞ்ஞானத்தையும் — சுடுகின்ற நெருப்பு ஆம் = தகிக்கவல்ல தீயாம். — எ - று.

"மாயையின்" என்னும் பதத்திற்கு, சரீரத்திரய ரூபமானவஞ்ஞானத் திஞல் என்று பொருளுரைத்தது இனி எ - வது செய்யுளில், "உலக மான வஞ்ஞானமும், பலவுமான வஞ்ஞானமும்" என இவ்வாசிரியர் கூறி யிருக்கும் அபிப்பிராயங்கொண்டு என்க. அந்தகாரத்தை மேகபடலம்போலச் சற்கருமங்கள் அகர்த்தா, அபோக்தாவாகிய தன்னைக் கர்த்தா, போக்தாவாகச் செய்தலின், "அஞ்ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா துறவாக்கும்" எ - ம், சூரியன் அந்தக்காரத்தைக் கெடுப்பதுபோலச் சமுசயரகிதமாயெழும் பிரஹ்மான்ம வயிக்கியஞானம் அஞ்ஞான கர்மங்களை நாசஞ் செய்வதால், "துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாம்" என்றுங் கூறினர். (எ0)

[கூறிப்போந்ததைப் பிரசித்தமான அநுபவத்தாற் சாதிக்கின்றார்.]

மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்தவன் வருடநூ றழுதாலும்
நினைத்து ணர்ந்தபின் கிட்டுமப் படியிந்த நின்மல வான்மாவும்
அனர்த்த மானதன் மறதியைக் கெடுத்துத் தன்னறிவினுற் காணுமல்
கனத்த கர்மங்க ணூறுகஞ் செய்யினுங் காணுமோ காணுதே. (எக)

இ - ள். மனைக்குள் வைத்த பண்டங்களை = மனையினுள் வைத்த (அல் லது, புதைத்து வைத்த) இரத்தின முதலிய பதார்த்தங்களை — மறந்தவன் =

வைப்பிடந்தெரியாது மறந்த புருஷன்—வருடம் நூறு அழுதாலும்=நூறு வருஷம் உரோதனஞ்செய்யினும்—நினைத்து உணர்ந்தபின் கிட்டும்=(உரோதனஞ் செய்ததாற் கிடைக்காமல்) யோசித் தறிந்தபின் (அப்பதார்த்தங்கள்) எப்படிக் கிடைக்குமோ—அப்படி=அந்தப்படி—இந்த நின்மல ஆன்மாவும் =யாவர்க்கும் அபரோட்சமான நிர்மலமாகிய ஆன்மாவும்—அனர்த்தம் ஆன =துன்பத்திற்குக் காரணமான—தன் மறதியைக்கெடுத்து=தன தறியாமையை (விசாரத்தால்) நசிப்பித்து—தன் அறிவினுல் காணுமல்=தனது ஞானத்தாற் காணப்படாமல்—கனத்த கர்மங்கள்=பாரமாகிய கர்மங்கள்—நூறு உகம் செய்யினும்=அநேக உகங்களிலியற்றினும்—காணுமோ காணுது =காணப்படுமா? படாது.—எ - று.

"இந்த ஞானந்தான்" என்னுஞ் செய்யுண் முதல், "மனைக்குள் வைத்த" என்னுஞ் செய்யுள்வரையும் ஞானசாதனங் கருமமா? அல்லது, விசாரமா என்றெழுந்த சந்தேகந் தெளிவித்ததாம்.

இவை பிரமேய சந்தேகங்களெனக் காண்க. (எக)

(219) [பிரமாணசந்தேகந் தெளிதற்பொருட்டுச் சீடன் வினுதல்.]

நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞானமே யெனும் வேதம்
தன்ம பாவமிச் சிரங்களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர்
சென்ம மாகுவ சாதியா சாரமே செய்தவஞ் சுகமென்று
கன்ம காண்டத்தில் விதித்ததென் விதித்துள காரண முரையீரே.(எஉ)

இ - ள். குருவே—நன்மை ஆம் சுகம் தருவது=நிரதிசயாநந்தமான சுகத்தைத் தரத்தக்கது—ஞானமே எனும் வேதம்=(பிரஹ்மான்ம வயிக்கிய) ஞானமேயென்று சொல்லும் வேதமானது—தன்ம பாவம் மிச்சிரங்களால்= புண்ணிய கருமம், பாவ கருமம், மிசிர கருமங்களால்—(முறையே) தேவர் கள் (சென்மம்)=தேவ ஜன்மமும்,—விலங்குகள் தரு (சென்மம்)=மிருக முதல், ஸ்தாவர பரியந்தமான ஜன்மமும்,—மாந்தர் சென்மம்=மநுடஜன்ம மும்—ஆகுவ (என்று)=உண்டாவனவாமென்றும்,—சாதி ஆசாரமே செய் தவம் (என்று)=(அவனவன்) சாதியி லெழுக்கமே (அவனவனுக்குச்) செய் யத்தக்கனவான தவமா மென்றும்,—சுகம் என்று=இதனுலே சுகமுண்டா மென்றும்—கன்ம காண்டத்தில் விதித்தது என்=கர்மகாண்டத்தில் விதித் திருப்பது யாது கருதி?—விதித்து உள=(இப்படியாக) விதித்திருக்கின்ற —காரணம் உரையீர்=காரணத்தை யருளிச்செய்வீராக.—எ - று.

புண்ணியம், பாவம், மிசிரம் என்னும் மூவகைக் கருமங்களும் உத்கிரு ஷ்ட, மத்திம, சாமான்யபேதத்தால் ஒவ்வொன்றும் மும்மூன்று விதமாயிருக் கும்; புண்ணிய உத்கிருஷ்டத்தால் இரண்யகர்ப்பாதி சரீரப் பிராப்தியும், புண்ணிய மத்திமத்தால் தேவேந்திராதி சரீரப் பிராப்தியும், புண்ணிய சாமான்யத்தால் யட்ச, ராட்சச, கிந்ர, கிம்புருஷ, பைசாசாதி சரீரப்பிராப்தி யும், பாவ உத்கிருஷ்டத்தால் பிராணிகளுக்குத் துக்கத்தைக் கொடாநிற்கும்

தேள், பாம்பு, கொசுகு, மூடு, புலி, காடி முதலிய சரீரப்பிராப்தியும், பாவ மத்திமத்தால் புளி, மா, பலா, தென்னை, எருமை, பருந்து முதலிய சரீரப் பிராப்தியும், பாபசாமான்யத்தால் பசு, யானை, குதிரை, அரசு, துளசி முத லிய சரீரப்பிராப்தியும், மிசிர உத்கிருஷ்டத்தால் நிஷ்காம புண்ணியபலத்தா லுளதாகுஞ் சித்தசுத்தியும், அதனால் சாதனசதுஷ்டயமும், அவற்றால் சற் குருலாபமும், அதனால் சிரவணாதிகளும், சிரவணாதிகளால் அபரோட்ச ஞான மும் பெற்று அவ்வபரோட்ச ஞானத்தால் சீவன் முத்திச் சுகத்தை யடையத் தக்க சரீரப்பிராப்தியும், மிசிர மத்திமத்தால் ஆசிரமத்திற் குசிதமாகிய காமிய கர்ம யோக்கியமான சரீரப்பிராப்தியும், மிசிரசாமான்யத்தால் சண்டாள, பாண்டு, குஷ்ட, பெருவியாதிகளையுடைய சரீரப்பிராப்தியும் உண்டாவதால், "தன்மபாவ மீச்சிரங்களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர், சென்ம மாதவ" என்றது.

"சாதியா சாரமே செயீதவம்" எ - கு, உ - ம், பகவற்கீதை,

"கறைசெயைம் புலன்களைக் கரண நான்குடன்
றுறைதுறை யடக்கலுந் தவமுந் தூய்மையும்
பொறையொடு கல்வியும் பொருந்து ஞாணமு
மறையவர் தொழிலென வகுக்கப் பட்டதே."—எ - ம்,

"தலைமையுங் கொடையொடு தறுக ணுண்மையு
நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமுங்
கொலைபயில் போர்களிற் புறங்கொ டாமையுஞ்
சிலைமலி தோளினு யாசர் செய்கையே."—எ - ம்,

"உழுதொழில் பசுக்களை யோம்பல் வாணிகம்
வழுவறச் செய்தொழில் வணிகர் வாழ்க்கையாம்
பழுதற விவர்களைப் பாது காத்தலே
விழுமிய தொழில்கள் வேளாளர்க் கென்பவே."—எ - ம்,

"தீரா வகைதஞ் செயலே செயவே
நாரா யணனு முதனு யகனுக்
காரா தனையா மதனு லவனே
வாரா வழியாம் வரமே தருமால்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (எஉ)

[மேலைவினைவிற்ந நான்த செய்யுளால் உத்தராங் கூறல்.]

தினமு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்ட மெதிர் காட்டிக், கனம ருந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற் றாய்போலே, மனைய றங்கள்செய் மகங்கள்செய் நன்றென்று மலர்ந் தவா சகஞ்சொல்லும், நினைவு வேறுகாண் சுவர்க்கமா மிகளந்த நிண் ணயந் தெரியாரே, (எங)

இ - ள். தினமும் = நாள்தோறும் — மண் நுகர் பிள்ளை நோய்க்கு = (சாரமற்ற) மண்ணையுண்ணுந் தன் பிள்ளையின் வியாதிக்கு — இரங்கி = (மனம்) இரங்கி — தீம்பண்டம் எதிர்காட்டி = (அப்பிள்ளைக்கு) இனிப்பான பதார்த்தங்களை எதிரேகாட்டி — கன மருந்துகள் ஒளித்துவைத்து = கனமான அவுஷதங்களை மறைத்துவைத்து — அழைக்கின்ற = (பன்முறை) அழையா நின்ற — கருணை நற்ரூய் போலே = கருணையுடைய நல்ல மாதாவைப் போலவே — மனை அறங்கள் செய் = இல்வாழ்க்கைக்குரிய அறங்களைச் செய்வா யாக, — மகங்கள் செய் = எக்ஞங்களைச் செய்வாயாக — நன்று என்று = (இவற் ரூல்) சுகமுண்டாகுமென்று — மலர்ந்த வாசகம் சொல்லும் = விரிந்த (சுருதி) வாக்கியங்கள் கூறுநிற்கும்; — நினைவு வேறு காண் = (இங்ஙனங் கூறுகின்ற சுருதியின்) கருத்தானது (இதுவல்ல,) வேரூகும்; — சுவர்க்க காமிகள் = சுவர்க்கபோகங்களில் இச்சையுடையோர் — அந்த நிண்ணயம் தெரியார் = அந் நிச்சயத்தை யறியார். — எ - று.

"தினழ மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்ட மெதிர்காட் டிக், கனம நுந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற் றாய் போலே" என்று கூறிய திருஷ்டாந்தத்தால் தாஷ்டாந்தத்தின்கண் ஜநநந் தோறும் சாரமற்ற விஷயங்களை யுண்டு வருவதால் அஞ்ஞானியாகிய பாலனடைந்துள்ள ஜநநமரணரூபமான நோய்க்கு மனமிரங்கி அதனைத் தீர்க்கவல்ல பரமாத்வைத ஞானத்தை யொளித்துவைத்து அவனுக்கிதமாகத் தோற்றுகின்ற சுவர்க்கவின்பங்களைக்காட்டி என்னும்பொருள் கொள்ளக் கிடந்தமை காண்க. **"தீம்பண்ட மெதிர்காட்டிக், கனமநுந்துக ளொளித்து வைத்து"** எ - து, **"தடசிகீவாநியாயம்."** (எஉ)

[அங்ஙனம் விதித்த சுருதியின் கருத்து வேறென்பதற்கு உத்தி கூறுகின்றார்.]

போக மாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பேகாண்
ஆக மங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோ வத்தனை தெரியாதோ
காக மேகறுத் திடுநெறுப் பேசுடு கசந்திடு வேம்பேநீ
வேக வாயுவே யசையென வொருவரும் விதித்திடல் வேண்டாவே.

இ - ள். போகம் ஆர் உயிர் = (ஐம்புலன்களாலும்) போகங்களை யுண் ணுநின்ற வுயிர்கள் — கண்டதை உண்பதும் = நேர்ந்த பதார்த்தங்களை யுண்ணுநிற்பதும், — புணர்வதும் = (நேரிட்ட பெண்களைக்) கலவி செய்வ தும் — இயல்பேகாண் = சுபாவமே (அல்லாமல், வேறில்லை.) — ஆகமங்களும் = சுருதிகளும் — சுபாவத்தை விதிக்குமோ = (உயிர்கட்கு) இயல்பாயுள்ள அவ்வருந்தல், பொருந்தல்களை (விலக்குமே யல்லாமல்,) விதிக்குமோ? — அத்தனை தெரியாதோ = (சர்வஜ்ஞருடைய சுருதிகட்கு) அவ்வளவு தெரி யாதா? — **[சுபாவத்தை விதிக்கவேண்டா மென்பதற்குத் திருஷ்டாந்தங் கூறுகின்றார்.]** காகமே கறுத்திடு = வாயசமே நீ கறுத்திடு, — நெருப்பே சுடு = தீயே நீ சுடு, — வேம்பே கசந்திடு = வேம்பே நீ கைத்திடு, — வேக வாயுவே

அசை=வேகமுடைய வாயுவே நீ சலித்திடு—என=என்று—ஒருவரும்=யாரொருவரும்—விதித்திடல் வேண்டாவே=விதிக்கவேண்டுவதில்லையே.—எ - று.

இதனால், யாதொரு வேதத்திற்கும் பிரவிர்த்தியில் அபிப்பிராயமில்லை; மற்றென்னை அபிப்பிராயமென்னில்;—நிஷித்த சுபாவீகமான பிரவிர்த்தியினின்றுந் தகைவதிற்றானே அபிப்பிராயமாம் என்க. (எச)

["மனைய றங்கள்செய் மகங்கள்செய் நன்றென்று" விதித்த சுருதியின் அபிப்பிராயம் உணர்த்துகின்றார்.]

கள்ளு மூனுநீ விரும்பினன் மகங்கள்செய் காமத்தின் மனதானுல், கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெலாந் தொடானென்றே, தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாகும், விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியமமாம் விதியன்றே. (எடு)

இ - ள். கள்ளும் ஊனும் நீ விரும்பினுல்=மதுவும், மாமிசமும், (உண்ண) நீ இச்சித்தால்—மகங்கள்செய்=யாகங்கள்செய்து (அந்த யாகஸ்தலத்தில் நீ யுண்பாய்,)—காமத்தில் மனது ஆனுல்=ஸ்திரீயின் புணர்ச்சியில் மனதிருந்தால்—கொள்ளும் பெண்டொடு கலவிசெய்=(விவாகத்தால் மனைவியாக) வரித்த ஸ்திரீயுடன் புணர்தலைச்செய்—எனில்=என்று (நாம்) விதிக்கின்,—(நமது ஆக்ஞைக்கஞ்சி) இவன்=இப்புருடனைவன்—குறை எலாம்=(நிரந்தரம்) நேரிட்ட போகங்களையும், நேரிட்ட ஏனைய ஸ்திரீகளையும்—தொடான் தள்ளும் என்றே=ஸ்பரிசியாமல் விட்டுவிடுவனென்றே—வேதத்தின் சம்மதம்=சுருதியின் சம்மதம்;—(ஆகலின்,) சகலமும் தவிர்வதே கருத்து ஆகும்=சகலத்தையும் விட்டொழிவதே அதற்கபிப்பிராயமாம்;—(ஆயின்,) விள்ளும் இவ்விதி என் எனின்=("மனைய றங்கள் செய் மகங்கள்செய் நன்றென்று") மூன் சொல்லிய அவ்விதியானது என்ன விதியென்று நீ சங்கிக்கில்,—பூருவ நியமம் ஆம் விதி=பூருவபட்சமான விதியாம்: (சித்தாந்தமன்று.)—எ - று. அன்று, ஏ - அசைகள். (எடு)

[வேதத்தின் அபிப்பிராயம் நிவிர்த்தியிலேயே யல்லாமல், பிரவிர்த்தியில் இல்லை யென்னுஞ் சித்தாந்தத்தை விரித்தும், சர்வத்தையும் விடுவதால் வேதநிந்தை, உலகநிந்தை இன்றென்பதை அநுபவத்திலுங் காட்டுகின்றார்.]

மதுவி றைச்சிக ளுண்ணென்ற சுருதிபின் மணந்துபா ரெனல் பாராய், மிதுன விச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்ற விதிபாராய், இதையும் விட்டொழி யதிகயிட் டிகவந்நிக் கிகழ்ச்சியற் றதும்பாராய், அதைய றிந்துகன் மங்களா சைகளொழிந் தாநந்த மடைவாயே. (எசு)

இ - ள். மது இறைச்சிகள் உண் என்ற சுருதி = மதுபானம், மாமிச பட்சணங்களில் (இச்சைவரில் நரகதுக்கம் வாராமற் போகும்படி எக்ஞஞ் செய்து அவ்வெக்ஞஸ்தலத்தில்) அவைகளைப் புசிப்பாயாக வென்றவேதம்— பின் = பின்னே—மணந்துபார் எனல்பாராய் = (எக்ஞஸ்தலத்திலும் மது மாமிசங்களை மோந்துபார்ப்பது மாத்திரமாய் ஒழிவாயாகில் வெகுகாலம் சுவர்க்க போகங்களை யனுபவிக்க வருமாகலின், அவைகளை யுண்ணுமல்) மோந்துபாரென்று சொல்லுஞ் சுருதி வசனத்தையும் நீ பார்ப்பாய் :—மிதுன இச்சையும் புத்திர உற்பத்தியால் விரும்பு என்ற விதிபாராய் = மனைவியோடு புணரும் புணர்ச்சி விருப்பும் புத்திரோற்பத்தி நிமித்தம் விரும்புதியென்ற விதியையும் பார்ப்பாய்.—(இனி, இதற்கு விசேஷவுரை ; கேரிட்ட ஸ்திரீகளைப் புணரில் இம்மையிற் பாவமும், பழியும் மறுமைக்கண் நரகதுக்கமும் மூண்டாகுமாதலால், ஒருத்தியை மணஞ்செய்து அவளைப்புணர்தியென்ற வேதம் பின்னே விதியாத தினத்திற்கூடில் தூர்ப்புத்திரனுண்டாய் அவனால் இம்மையிற் பாவமும், பழியும் மறுமையில் நரகதுக்கமும் வருமாதலால், சற் புத்திரனுண்டாய் உனக்கும், உன் குலத்துக்கும் இம்மையிற் புகழும், அற மும் மறுமையிற் சுவர்க்கமுமுண்டாதற்பொருட்டு விதித்ததினத்தில் அவ ளைப் புணர்தியென்று சொல்லும் விதியையும் நீ பார்ப்பாய்.)—இதையும் விட்டு ஒழி (என்ற விதிபாராய்) = (யாகஞ்செய்து மது, மாமிசங்களை மண ந்து பாரென்றும், விதித்ததினத்தில் உன் மனைவியைப் புணர்தியென்றும் விதித்தவேதம் பின்னே உன்னால் யாகத்திற் கொல்லப்பட்ட ஆடானது சுவர்க்கத்தின் கண்ணே இருப்புக்கொம்போடுகூடிச் சினந்து உனது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்து நீ சுவர்க்கத்துக்குப்போகும்போது உன்னை இருப்புக்கொம்பினாற் பாய்ந்து குத்தி, வயிற்றைப்போழ்ந்து துன்பப்படுத்து மாதலால், யாகஞ்செய்வதையும், மனைவி புத்திராதியரிடத்துள்ள ஆசைகள் அநேகவித ஜநநமரண துக்கத்தைக் கொடுப்பதால்,) மனைவி புத்திராதியரை யும் விட்டொழிவாய் என்று கூறுவதையும் பார்ப்பாய் :—யதி நயிட்டிக வர் நிக்கு இகழ்ச்சி அற்றதும் பாராய் = (அவைகளைவிட்ட) சந்நியாசிக்கும், நயிட் டிகப் பிரமசாரிக்கும் நிந்தையற்றிருப்பதையும் நீ பார்ப்பாய் ;—அதை அறிந்து = அங்ஙனங்கூறிய வேதத்தின் சித்தாந்தத்தையும், (சாதனங்க ளோடு கூட யக்ஞாதி கர்மங்களைத்துறந்த சந்நியாசியையும், நயிட்டிகப் பிரம சாரியையும் வேதமும், உலகமும் இகழாமற் புகழாநிற்பதையும்) அறிந்து— கன்மங்கள் ஆசைகள் ஒழிந்து = (யக்ஞாதி சகல) கர்மங்களையும், (ஸ்திரீ, புத்திரர், தன முதலியவற்றிலுள்ள) ஆசைகளையும் விட்டு—ஆநந்தம் அடை வாய் = (சிரவணாதிப் பிரயத்தனத்தா லடையாநிற்கும் சமுசய ரகிதமான பிரஹ் மான்ம வயிக்கியஞானத்தால் சகல அநர்த்தத்தினு நின்று விடுபட்டு) நிரதி சய ஆநந்தமடையக்கடவாய்.—எ - று.

இல்வாழ்வான் மனைவியோடு கூடுதற்கு விதித்த தினங்களாவன :— மாதர்கட்கு இருதுகாலம் வழக்கமாகப் பதினாறுநாட்களாம் ; அவற்றுள், மாத விடாயான முதல் நான்கு தினம் பெரியோர்களால் நிந்திக்கப்படுகின்றது ;

ஆதலால் அங்ஙான்கு தினமும், ஏகாதசி, திரயோதசிகளும் நீக்கி ஏனைப்பத்து தினத்திற் கூடுவதுமுறைமை. மாதவிடாயான நாடொடங்கி ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினன்து, பதினறந்தினங்களி னிரவிற்சேர்ந்தால் பிள்ளைகளும், ஐந்துமுதல் ஒற்றைப்பட்ட நாட்களிற் சேர்ந்தால் பெண் களும் பிறக்கும்; ஆதலால், புத்திர விருப்புள்ளவன் இரட்டைத்தினத்திற் சேரவேண்டியது. எவன் நீக்கவேண்டிய முதல் நான்து தினத்தையும், ஏகா தசி, திரயோதசி, அமாவாசை, பௌர்ணமியையும் நீக்கி மற்றைத் தினத்தி னிரவிற் றன் மனைவியோடு சேருகிறானே அவன் கிரகஸ்தனாக விருப்பினும் பிரமசாரியென்றே சொல்லப்படுகிறானென்று தர்மசாஸ்திரத் திற் சொல்லியிருப்பதால் அவையே மனைவியோடு புணர்தற்கு விதித்ததின மாம் என்க. "இதையும் விட்டொழி" எ - கு, உ - ம், பாகவதம் சு - வது ஸ்கந்தத்தில் பிராச்சீனபரிகி ஆவிர்த்தானனுக்கு நாரதர் அருளிச்செய்வது,

"அயம கத்தினி லாசநீ படுத்தவம் மறிகள்
செயிர்த ழைந்துகண் டீயுக வரவுபார்த் திருக்கும்
பயில்வி சும்புசெல் காலையில் வெருவரப் பாய்ந்து
வயிறு போழும்வல் லிருப்பிணெண் மருப்பினின் மாதோ.—எ - ம்,

"படுத்திடு மறிகள் வேள்வி புரிந்தவன் பனிவி சும்பி
னடுத்திடுங் கால நோக்கி யழல்விழி யொழுகப் பாய்ந்து
வடித்தகா ரிருப்பிற் செய்த மருப்பினுல் வயிறு போழ்ந்த
தெடுத்துநா முரைக்குங் கேட்டி யிறைவவென் றுரைக்க லுற்றான்."
—எ - ம்,

"மகமியற் றுழி மாய்த்தம றியெலாந்
திகழி ருப்பினிற் செய்தம ருப்பினு
னகுபொன் னுட்டக நண்ணுபு ரஞ்சன
னகடு கீண்ட வழன்றெதிர் குத்தியே."—எ - ம்,

"பண்ணவ னகல வொன்றும் பற்றில னுகிச் செங்கட்
கண்ணனை யுளத்து நாடிக் கபிலன திருக்கை சார்ந்து
விண்ணவர் வழுத்தும் வண்ணம் விழுத்தவம் பலவு மாற்றி
யண்ணலந் தனிவீட் டின்ப மண்மின னாச மேறை."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

"கன்மங்க ளாசைகளொழிந் தானந்த மடைவாயி" எ - கு, உ - ம், பிரமகீதை,

"திரமாம ருத்தத்தி னுன்மைந்த ராலுந் தீராத வற்றின்றி யாக த்தி னுலே, யுரமான வேதாந்த மாவாக்கி யத்தா லுற்பன்ன மாம்

விச்சை யாநிச்ச யத்தாற், பரமான வஞ்ஞான வந்தத்தி லேயப் படி ஞான வுபதேச மொன்றலு மேயிப், புரமாமு டம்புக்கு ளேயந்த முத்திப் பொருள்கண்டு வீடெய்து வாரிப்பு விக்கே.”—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

பரமாத்வைத ஞானத்தானன்றிக் கர்மத்தால் ஆநந்தமடையற் பாற்றன்று எனக்கூறினதாம். (எசு)

(220) [தமப்பிரகாசங்கட்த அவிரோதங்கூடாதே என வினதல்.]

உலக மானவஞ் ஞானமுங் கருமமு முறவென்ற வழிகூடும்
பலவு மானவஞ் ஞானமு ஞானமும் பகையென்ப துளதாஞல்
நிலவி லேமறுப் போலவஞ் ஞானமு நிமலஞா னத்தோடே
குலவி நின்றிந்தச் சிருட்டிகள் செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி.(எஎ)

இ - ள். உலகம் ஆன அஞ்ஞானமும் கருமமும்=பிரபஞ்ச ரூபமான வஞ்ஞானமும், சற்கருமங்களும்—உறவு என்றவழி கூடும்=(ஒன்றற்கொன்று பாதகமன்று) சாதகமாமென்று (எ0 - வது செய்யுளிற்) கூறிய நெறியொக்கும்.—பலவும் ஆன அஞ்ஞானமும் ஞானமும்=பலவுந் தானான வஞ்ஞானமும், ஞானமும்—பகை என்பது=பாதகமாமென்பது—உளது ஆனல்=உண்மையாயின்,—நிலவிலே மறுப்போல=சந்திரனிடத்துக் களங்கம்போல—அஞ்ஞானமும்=அஞ்ஞானமான தும்—நிமலஞானத்தோடே குலவிநின்று=நிர்மலமாகிய ஞானத்தோடுகூடப் பொருந்திநின்று—இந்தச் சிருட்டிகள் செய்யவும் கூடுமோ=இச் சகசிருஷ்டிகளைப் பண்ணவுங்கூடுமா?—குருமூர்த்தி=குருவே.—எ - று.

தமப்பிரகாசங்கள் தம்மின் விரோதிகளாகலின், இரண்டுங் கூடி நிற்றல் கூடாதென்பது சீடன் கருத்து. (எஎ)

[அதற்குத்தாங் கூறல்.]

சொரூப ஞானமும் விருத்திஞா னமுமென்று சோதிஞானமு மிரண்டாம், சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த் தோன்றும்வே றிலைமைந்தா, சொரூப ஞானமஞ் ஞானசத் தாருவன்று சுழுத்தியிற் கண்டாயே, சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும்விருத் தியின் ஞானம். (எஅ)

இ - ள். மைந்தா—சோதி ஞானமும்=பிரகாசமான ஞானமானதும்—சொரூப ஞானமும் விருத்தி ஞானமும் என்று இரண்டு ஆம்=சொரூபஞான மெனவும் விருத்தி ஞானமெனவு மிருவகைத்தாம்; [அவைகட்குப் பேத முண்டோவெனின்;—] சொரூபஞானமே=சொரூபஞானந்தானே—விருத்தியின் ஞானம் ஆய்த்தோன்றும்=விருத்தி ஞானமாக வுண்டாகும்.—வேறு இலை=(ஆகலின்,) பேதமில்லை.—(ஆயினும்) சொரூப ஞானம் அஞ்ஞான

சத்துரு அன்று=(காஷ்டத்திலிருக்குஞ் சாமான்ய வக்கினியானது அந்த காரத்திற்கெப்படி விரோதியன்றோ வப்படி) சொரூப ஞானமானது அஞ் ஞானத்திற்கு விரோதியன்று; (பின்னே யெப்படிப்பட்ட தெனின் :—அதற் குச் சாதகமாம்.) [இதற்கு அநுபவங் கூறுகின்றார்.] சுழுத்தியில் கண்டாயே =சுழுத்தியவத்தையில் (பிரகாசசொரூபமான ஆன்மாவின்கண்ணே அஞ் ஞானம் விளங்கா நிற்பதை நீ) அநுபவித்தறிந்தாயல்லவா—(ஆதலால், சொரூ பஞானம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்றும்.) [அஞ்ஞானத்திற்கு விரோதி மற்றியாதெனில்?] சொரூபஞானத்தின் மருவும் அஞ்ஞானத்தை=சொரூப ஞானத்தின் கண்ணே (அதனைப் பாதகமாகப் பொருந்தாமற் சாதகமாகப்) பொருந்தியுள்ள வஞ்ஞானத்தை—விருத்தியின் ஞானம் சுடும்=(அகம்பிரஹ்ம மென் றந்தக்கரணத்தினின்றும் எழாநிற்கும்) விருத்தி ஞானமானது தகிக் கும்; (ஆதலால், விருத்தி ஞானமே அஞ்ஞானத்திற்கு விரோதியென்ற றிதி.)—எ - று.

சொரூப ஞானம் அஞ்ஞான சத்துருவென்றும் பாடமுளது; அது எழு தினவன் எட்டைக்கெடுத்தான் என்னும் வழக்குப்படி எழுதினவனுடைய புத்திதோஷத்தாற் பிறழ்ந்ததேயாம். சாஸ்திர சம்பிரதாய மறியாமல் அதைச் சரியானபாடமாகவொப்பி அவ்வாறே முன் இதற்குரைசெய்தோர் பொருள் கூறியிருப்பது சுருதி, யுத்தி, அநுபவ விருத்தமாம் என்க. (எஅ)

[அஞ்ஞானமானது காரணமான சொரூபஞானத்தால் நிவிர்த்தியாகா மல் காரியமான விருத்தி ஞானத்தால் எங்ஙனம் நிவிர்த்தியாம் என்று சங்கித்து அதற்குத் திருஷ்டாந்த முகத்தாற் சமா தானங் கூறுகின்றார்.]

துருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாததற் சொரூப ஞானந் தானே, விருத்தி ஞானமாய்ச் சுட்டதெப் படியெனில் வெய்யிலா லுலகெங்கும், பரித்த சூரியன் சூரிய காந்தத்திற் பற்றியக் கினியாகி, எரித்த வாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென் றறிவாயே.

இ - ள். துருத்தி மாயையை=துருத்தியைப்போலுஞ் (சங்கோச விகா சங்களையுடைய) அவித்தையை—சுழுத்தியில் சுடாத தற்சொரூப ஞானம் தானே=சுழுத்தியின்கண் (விரோதியாய்த்) தகிக்காமல் (அதற்குச் சாதக மாகவேயிருந்த) சொரூபஞானமே—விருத்திஞானம் ஆய்=விருத்தி ஞான ரூபமாய்—சுட்டது எப்படி எனில்=தகித்ததெவ்வாறென்று நீ சங்கிக்கில்,—வெய்யிலால்=(தனது) கிரணத்தால்—உலகு எங்கும் பரித்த=உலகெங்க ணும் (சாதகமாய் நின்று) காந்த—சூரியன்=சூரியஞனவன்—சூரியகாந்தத் தில்=சூரியகாந்தக் கல்லில்—பற்றி அக்கினி ஆகி=பொருந்தி அக்கினிரூப மாய்த்தோன்றி—எரித்த ஆறுபோல்=சுட்ட தன்மைபோல—சமாதியில்= *சமாதியின்கண் — விருத்தியால்=விருத்திரூப ஞானத்தால் — எரிக்கும்

---

* சமாதியின்சொரூபம், கஙஅ - வது பிரசங்கத்திற் காண்க.

என்று அறிவாய்=(விரோதியாய் நின்று அவ்வஞ்ஞானத்தைச்) சுடுமென்று நீ அறிவாயாக.—எ - று.

(221) ஆன்மா பிரகாசரூபமாயிருப்பினும், ஆன்மாவின் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று; அது அஞ்ஞானத்திற்கு விரோதியாகிற் சுழுத்தியில் பிரகாசரூபமான ஆன்மாவின்கண்ணே அஞ்ஞானம் தோன்றவேண்டுவதில்லை. கோரமான நித்திரையினின்றும் விழித்தவனுக்கு நான் சுகமாக உறங்கினேன், ஒன்றுமறியாதிருந்தேன் என்றிவ்வாரூன ஞான முண்டாகின்றதாகலான் இஞ்ஞானத்திற்குச் சுகமும், அஞ்ஞானமும் விஷயமாகின்றன; இவ்விரண்டு ஞானமும் சாக்கிரகாலத்தில் பிரத்தியட்சரூபமல்ல: ஸ்மிருதி ரூபமாம்; அந்த ஸ்மிருதியும், அஞ்ஞாதவஸ்துவின் ஸ்மிருதியல்ல: ஞாதவஸ்துவின் ஸ்மிருதியேயாம்; ஆகலின், சுழுத்தியின்கண்ணே சுகம், அஞ்ஞானங்களின் ஞானமுண்டு; அச்சுழுத்தியின்கண்ணுள்ள ஞானம் அந்தக்கரணத்தினாலும், இந்திரியங்களாலும் உண்டானதன்று. என்னை? சுழுத்தியின்கண்ணே ஆன்ம சொரூபஞானமேயன்றி அந்தக்கரணமும், இந்திரியங்களும் இல்லையாகலின், அவைகளாலுண்டானதன்று; [ஞானமெனினும் பிரகாசமெனினும் ஒக்கும்.] இவ்வாற்றால், சுழுத்தியின்கண்ணே ஆன்மா பிரகாசரூபமாகவுளது; அந்தப் பிரகாசரூபமான ஆன்மாவிலுல் சொரூபசுகமும் அஞ்ஞானமும் விளங்காநின்றன. ஆன்மசொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியாமாயின், ஆண்டஞ்ஞானம் விளங்கவேண்டுவதில்லை; ஆதலால், ஆன்மாவின் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று: மாறுக அதற்குச் சாதகமாம்; இவ்வபிப்பிராயத்தாலேயே வேதாந்த சாஸ்திரங்களில் சாமான்ய சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று; விசேஷ சைதந்நியமே அஞ்ஞானத்திற்கு விரோதியாம் என்ப; வியாபகமான சைதந்நியம் சாமான்ய சைதந்நியம், விருத்தியின்கண்ணுள்ள சைதந்நியம் விசேஷ சைதந்நியமாம்; காஷ்டத்திலிருக்கும் சாமான்ய அக்கினி அந்தகாரத்திற்கு விரோதியாகாமல் மதனத்திலுல் அதினின்றும் வெளிப்பட்ட வக்கினி வத்தியைப்பற்றி நின்று அந்தகாரத்தை விரோதிப்பதுபோல வியாபக சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாகாமல் வேதாந்தத்தின் விசாரத்திலுண்டாகின்ற அந்தக்கரணத்தின் பிரஹ்மாகாரவிருத்தியின் கண்ணுள்ள சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாகின்றது ஆதலால், கேவலம் சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று.

(222) விருத்தியோடுகூடின சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாம்; அல்லது, சைதந்நியத்தோடுகூடின விருத்தி அஞ்ஞானத்திற்கு விரோதியாம். முதற்பட்சத்தில் அஞ்ஞானநாசத்திற்கேது சைதந்நியமாம்; விருத்திசகாயமாம். இரண்டாம்பட்சத்தில் அஞ்ஞானநாசத்திற்கேது விருத்தியாம். சைதந்நியம் சகாயமாம்; இஃதவச்சேதவாதத்தின் றன்மை.

(223) ஆபாசவாதத்தில் சாமான்ய சைதந்நியத்தைப் போல விசேஷ சைதந்நியமும் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று; பின்னை விரோதியாதோ

வெனின் ;—விருத்தியோடுகூடின ஆபாசம் அல்லது, ஆபாசத்தோடுகூடின விருத்தி அஞ்ஞானத்திற்கு விரோதியாம்; இங்ஙனம் **விசாரசாகாகிரந்தத்** திற் கூறியிருக்கின்றது. **பஞ்சதசி** முதலிய கிரந்தங்களின் அபிப்பிராயமும் இதுவே; ஆதலால், இவ்வாசிரியரும் "**சொரூபஜ்ஞான மஜ்ஞான சத்துரு வன்று**" எ - ம், "**விருத்தியின் ஞானஞ்சுடும்**" எ - ம், "**சமாதியில் விருத்தியா லெரிக்கும்**" என்றுங் கூறினர். முன்னிதற்கு உரைசெய்தோர் சுழுத்தியில் சொரூபஞானம் அஞ்ஞானத்தை யெதிரிட்டுக்காண்டலின், விரோதியா மென்று பதவுரை செய்திருக்கின்றனர்; அந்தகாரத்திற்கு விரோதிகளான சூரியன், அல்லது, தீபம் இவை அந்தகாரத்தை எதிரிடுவது எங்கேனும், யாவரேனுங் கண்டதுண்டா? இங்ஙன முரைசெய்தோர், "**துருத்தி மாயை யைச் சுழத்தியிற் சுடாததற் சொரூபஞானந்தானே, விருத்தி ஞானமாயிச் சுட்டதெப்படி**" என்னும் செய்யுளை உய்த்துணராமற் பொருள்கூறினமை யின், அவருரை * ஸ்வகபோல கற்பனையென்றே நிச்சயிக்கப்படுகிறது. (எகூ)

(224) [ஆநந்தாதி, அஸ்தூலாதி தூணங்களால் இலட்சிதமான வக ண்டைகாசப்பிரஹ்மம் நானென்னும் நிர்க்குண வுபாசனை மானச கர்மமாகலின் அதற்தம், ஞானத்திற்குழள்ள தாரதம் மிய மறியச் சீடன் வினுதல்.]

அருளு மையனே திரிவித காரணத்தா லாகிய தொழிலெல்லாம் கருமம் மல்லவோ விருத்திஞா னமுமந்தக் காரணகா ரியமன்றே உரிய கர்மமஞ் ஞானத்தைக் கெடுக்குமென்றே திஞ லாகாதோ பெரிய ஞானமென் றதற்கொரு பெயரிட்ட பெருமையை யுரையீரே.

இ - ள். அருளும் ஐயனே=(அடியேன் சந்தேகநீங்கிக் கிருதார்த்த ஞகும்பொருட்டு யான் வினவாநிற்கும் சங்கைகட்கெல்லாந் திருவுளத்தின் கண் மூனிவுருமலுத்தரம்) அருளாநின்ற குருவே—திரிவித காரணத்தால்= (மன வாக்குக் காயமென்னும்) மூவகைக் காரணங்களால்—ஆகிய தொழில் எல்லாம்=உளவாகுங் கிரியைகளனைத்தும்—கருமம் அல்லவோ?—விருத்தி ஞானமும்=(அகம்பிரஹ்மமென்னும்) விருத்திஞானமும்—அந்தக்காரண காரி யம் அன்றே=அந்தக்காரணத்தின் (பரிணமமாகலின், அதன்) காரியமல் லவோ—(ஆகலின்,) உரியகர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக்கும் என்று=(கர் மங்களுக்குள்ளே, அஞ்ஞானத்தைக் கெடுத்தற்கு) உரிய (அகம்பிரஹ்மமென் னும் அந்தக்காரணவிருத்தி ரூபமான மானச) கர்மமானது அஞ்ஞானத்தைப் போக்குமென்று—ஓதிஞல் ஆகாதோ?=சொன்ஞல் (அது சாஸ்திரத்திற் கும் பெரியோர்க்குஞ் சம்மதம்) ஆகாதோ?—பெரிய ஞானம் என்று=மஹத் தான ஞானமாமென்று—அதற்கு ஒரு பெயர் இட்ட=அதற்கொருநாமந் தரித்த—பெருமையை உரையீர்=மகிமையை யருள்வீராக.—எ - று. (அ0)

---

* ஸ்வகபோல கற்பனை என்பது, பிரமாணமில்லாமலும், தம்மனத்தின் கண்ணில்லாமலுங் கூறுவது.

[உத்தாங்கூறல்.]

விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு விருத்தியா கிலுமைந்தா
ஒருத்தி மக்களே தங்களிற் பகைக்கின்ற துலகெங்குங் கண்டோமே
கருத்த னுகிய புருடதந் திரங்களாங் கருமங்க ளவைபோல
வருத்த ஞானமோ புருடதந் திரமன்று வஸ்துதந் திரமாமே. (அக)

இ - ள். மைந்தா—விருத்திஞானம்=(நான் பிரஹ்மமாகின்றேனென்னும்) விருத்தி ஞானமானது—அந்தக்காரணத்து விருத்தி ஆகிலும்=அந்தக்காரணத்தினுடைய பரிணாமமாயினும்—ஒருத்தி மக்களே=ஒரு மாதாவின் புத்திரரே—தங்களில் பகைக்கின்றது=தம்மூள் விரோதித் திருக்கின்றதை—உலகு எங்கும் கண்டோம்=உலகிலெவ்விடத்துங் கண்டிருக்கின்றோம்.—கருமங்கள்=கருமங்களானவை—கருத்தன் ஆகிய புருடதந்திரங்கள் ஆம்=கர்த்தாவாகிய புருஷனுடைய அதீனங்களாம்.—வருத்த ஞானமோ=விசாரப் பிரயத்தனத்தா லுளதாகா நிற்கும் விவேகஞானமோ—அவைபோல=அக்கருமங்கள்போல—புருடதந்திரம் அன்று=புருஷனுடைய அதீனமன்று:—வஸ்து தந்திரம் ஆம்=வஸ்துவி னதீனமாம்.—எ - று.

"அந்தக்காரணத்தொடு" என்பதில், ஒடு இசைநிறை யிடைச்சொல்.

ஓர் மாதாவின் புத்திரரில் ஒருவன் வித்துவானுயும், ஒருவன் மூடனுயும், ஒருவன் சிஷ்டனுயும், மற்றொருவன் துஷ்டனுயும், உலகில் மாறுபட்டுக் காணப்படுவதுபோல மானசக் கிரியாரூபமான நிர்க்குண வுபாசனையும், விவேகஞானமும் ஓரந்தக்காரணத்தின் காரியமே யாயினும், உபாசனை கர்த்ததந்திரமாதலானும், ஞானம் வஸ்துதந்திர மாதலானும் அவை தம்மூட் பேதமாமென்பது கருத்து. (அக)

[மானசக் கிரியா நுபமான நிர்க்குண வுபாசனை கர்த்த தந்திரமென்றும், ஞானம் வஸ்து தந்திரமென்றும் முற்கூறினதற்கு யுக்திகூறி உபாசனை அவாஸ்தவமாதலானும், ஞானம் வாஸ்தவமாதலானும் அவை பேதமாமென்கி கூறுகின்றார்.]

வருத்த கர்மங்கள் செய்யவுந் தவிரவு மற்றொன்றுக் கவுங்கூடும், மிருத்த ஞானமப் படியன்று தியானமும் விவேகஞான மும் வேறே, சகத்தி லொன்றையொன் றுவிவன் பாவிக்குந் தியானங் கற் பிதயோகம், முகத்த மாக்கண்ட ஞானமே வாஸ்தவ மோகமாய் மயங்காதே. (அஉ)

இ - ள். வருத்த கர்மங்கள்=(சாஸ்திரங்களில்) விதித்த மானசக் கிரியாரூபமான வுபாசனைகள்—செய்யவும்=(புருஷனுக் கிச்சையுண்டாகில் விதித்தபடி) செய்யவும்,—தவிரவும்=(இச்சையில்லையாகில்) செய்யாமல் விடவும்,—மற்று ஒன்று ஆக்கவும்=(வேறொருபிரகாரமாகச் செய்ய இச்சையுண்டாகில் அப்படியே) வேறொரு பிரகாரமாய்ச் செய்யவும்—கூடும்=இயலும்:—

மிகுத்த ஞானம் அப்படி அன்று=மேலான ஞானமானது (தியானம் போல விதி, புருஷனுடைய இச்சை, விசுவாசம், ஹடம் இவைகளின் அதீனமாயில்லாமல் பிரமாண, பிரமேயங்களின் அதீனமாயிருத்தலின்) செய்யவும், தவிரவும், மற்றொன்றுக்கவுங் கூடாது;—(ஆகலின்,) தியானமும் விவேகஞானமும் வேறே=மானசக் கிரியாரூபமான தியானமும், விசாரஜந்நியமான விவேகஞானமும் (அந்தக்காரண காரியங்களேயாயினும்) வேறுதான்.—செகத்தில்=உலகின்கண்—ஒன்றை ஒன்று இவன் பாவிக்கும் தியானம்=ஒன்றை வேறொன்றுக இவன் தியானிக்குந் தியானமானது—கற்பித யோகம்=கற்பிதத்தியானமாம்:—மூகத்தமாக்கண்ட ஞானமே வாஸ்தவம்=பிரத்தியட்சமாகக் கண்ட ஞானமே வாஸ்தவமாம்;—மோகம் ஆய் மயங் காதே=இவற்றிலறியாமை யுடையனுய்க் கலங்காதொழிதி.—எ - று.

"ஒன்றையொன் றுவிவன் பாவிக்குந் தியானங்கற் பிதம்" என்று இவ்வாசிரியர் கூறியதுபோலவே வாசிட்டத்திலும்,

"ஊன்றுற வொன் றைக்கருத வொன்று வெளிப் படுங்குருவி னுபதேசத்தால்"—

என்று கூறியிருப்பது காண்க. (அஉ)

["தியானங் கற்பிதம், ஞானம் வாஸ்தவம்" என்றதற்குக் காரணங்கூறிச் சங்கையி னுத்தாத்தை முடிக்கின்றார்.]

கண்ட றிந்தது ஞானங்கேட் டதுதனைக் கருதுபா வனையோகம்
கண்ட பேர்சொலக் கேட்டது மறந்துபோங் கண்டது மறவாதே
கண்ட வஸ்துமெய் தியானவஸ் துக்கள்பொய் கறுவியஞ் ஞானத்தைக்
கண்ட வக்கணங் கொல்வது ஞானமே கருமமன் றறிவாயே. (அங)

இ - ள். கண்டு அறிந்தது ஞானம்=ஒன்றை யநுபவித் தறியாநிற்பது ஞானத்தின் (உருவம்.)—கேட்டது தனைக் கருது பாவனையோகம்=கேட்ட வஸ்துவை (க் கேட்டவண்ணம்) பாவியாநிற்கும் மானச கர்மமாகிய பாவனை தியானத்தின் (உருவம்.)—கண்டபேர் சொலக்கேட்டது மறந்துபோம்=அநுபவித்த பெரியோருபதேசிக்கக் கேட்டுத் தியானிப்பது மறந்துவிடும்:—கண்டது மறவாது=கண்டநுபவித்தது மறவாதிருக்கும்;—(ஆகலின்,) கண்ட வஸ்து மெய்=அநுபவித்த வஸ்து மெய்யாம்,—தியான வஸ்துக்கள் பொய்=தியானியா நிற்கும் வஸ்துக்கள் பொய்யாம்,—கறுவி அஞ்ஞானத்தை=கோபித்து அவித்தையை—கண்ட அக்கணம்=தோன்றின அந்தட் சணமே—கொல்வது ஞானமே=நாசமாக்குவது விருத்திஞானமே,—கருமம் அன்று அறிவாய்=கருமமல்ல (என) நீ அறிவாயாக.—எ - று.

மூர்த்தித்தியானம்போலத் தியானமாத்திரத்தால் நாம் பிரஹ்மமென்னு நிச்சயமானது தியானம் விடில் இல்லாமற்போவதால், "தியான வஸ்துக்கள் பொய்" எ - ம், பிராமணனுக்கு நான் பிராமணனென்பது மறந்தும்போகா

ததுபோல ஆருடஞானிக்கு மறந்திருந்தாலும் பிரஹ்மத்துவஞ் சுபாவசித்தமா யிருத்தலால் "கண்டது மறவாது" என்றுங் கூறினர்.

(225) மூன்று செய்யுளின் திரண்டபொருள்.—ஞானமோ பிரமாண, பிரமேயங்களினதீனமாம்: விதி, புருஷனுடைய இச்சை இவைகளினதீன மல்ல. தியானம் விதி, புருஷனுடைய இச்சை, விசுவாசம், அப்படியே ஹடம் இவைகளினதீனமாம். பிரத்தியட்சஞானத்தில் பிரமாணம் நேத்திரம்: பிரமேயம் கடாதிகள்; அங்கே நேத்திரத்திற்கும், கடத்திற்குஞ் சம்பந்தமாமேல் புருஷனுடைய இச்சை யின்றியும் கடஞானம் பிரத்தியட்சமாகின்றது. ஆவணிமாசத்தின் சதுர்த்திதினம் சந்திரதரிசனம் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது: விதியில்லை. புருஷனுக்கும் இன்றைக்குச் சந்திரதரிசனங் கூடாதென்னும் நிச்சயமிருக்கின்றது; இப்படியிருந்தும், ஏதேனுமொருவிதத்திலுல் நேத்திரமான பிரமாணத்திற்குப் பிரமேயமான சந்திரனோடு சம்பந்தமுண்டாகிவிடில் சந்திரஞானம் அவசியம் பிரத்தியட்சமாகின்றது. ஆதலால், ஞானம் பிரமாண பிரமேயங்களின் அதீனமே யல்லாமல் விதி இச்சைகளினதீனமல்ல. ஒருவன் சாலிக்கிராமம் விஷ்ணுவினுருவமென்று தியானஞ்செய்யில், அவனுக்கு உத்தமமான பல மடையப்படும்; அத்தியானத்திலே சாஸ்திரப் பிரமாணத்தால் விஷ்ணுரூபம் சதுர்ப்புஜ மூர்த்தியாகச் சங்கு, சக்கிர, கதை, பத்மம், இலக்குமி இவைகளோடு கூட அறியப்படுகின்றது: நேத்திரப்பிரமாணத்தால் சிலேயாக அறியப்படுகின்றது; அப்படியறியப்படினும் விதி, விசுவாசம், இச்சை இவைகளால் சாலிக்கிராமம் விஷ்ணுவென்று தியானம் பண்ணப்படுகிறது; அத்தியானம் நாநாவிதமாம். ஓரிடத்து ஒன்றை யொன்றுகத் தியானிக்கப்படும்; அது முன்சொன்ன சாலிக்கிராமத்தை விஷ்ணுரூபமாகத் தியானிக்கப்படுவதாம்; இதனைப் பிரதிகத் தியானமென்பர். வேறே வைகுண்டலோக வாசியாகிய விஷ்ணுவைச் சங்குசக்கிராதிகளோடுகூடின சதுர்ப்புஜ மூர்த்தியாகத் தியானிக்குந் தியானம் ஒன்றையொன்றுகத் தியானிக்குந் தியானமல்ல: தியேயாநுசாரத் தியானமாம். என்னை? வைகுண்டவாசியாகிய விஷ்ணுவின் சொரூபம் பிரத்தியட்சமாகவோ இல்லை: கேவலம் சாஸ்திரத்தாலறியப்படுகிறது; சாஸ்திரங்கள் சங்கு, சக்கிராதி சகிதமாகவே விஷ்ணுவின் சொரூபங் கூறுகின்றதாகலின், * தியேயசொரூபத்தி னநுசாரமாகவே அத்தியான முண்டாகின்றதென்க.

விதி, விசுவாசம், இச்சை இவைகளின்றித் தியானமுண்டாகாது; இவற்றுள், விதியாவது இவ்வாறு தியானஞ் செய்வாயாக வென்னும் புருஷனது பிரேரகவசனமாம்; அவ்வசனத்திலுள்ள சிரத்தையை விசுவாசமென்பர். அந்தக்காரணத்தினுடைய காமரூபமான ரஜோகுணவிருத்தி இச்சையாம்; இம்மூன்றும், தியானத்திற்கேதுவே யல்லாமல் ஞானத்திற்கேதுவல்ல; இன்னும், தியானம் அடத்தினுலுமுளதாம்: ஞானத்தில் அடத்தின

* தியேயம்=தியானிக்கப்படுவது.

பேட்சையில்லை. என்னை? நிரந்தரந் தியேயாகாரமான சித்தவிருத்தியைத் தியானமென்பர்; அங்கே விருத்தியில் விட்சேப மூண்டாகுமாயின், அடத்தினுல் விருத்தியின் ஸ்திதி செய்யவேண்டும். ஞானரூபமான அந்தக்கரண விருத்தியினுல் தற்காலம் ஆவரணம் பங்கமாயிடில், விருத்தியின் ஸ்திதிக்கு உபயோகமில்லை; ஆகலின், அடத்தினபேட்சையில்லை. வைகுண்ட வாசியான சதுர்ப்புஜமுடைய விஷ்ணுவின் தியானம்போல நான் பிரஹ்மமாகிறேனென்னுந் தியானமும் தியேயாநுசாரமாம்; ஆகலின், இது பிரதீகத்தியானமல்ல: அகங்கிரகத்தியானமாம். தியேயசொரூபத்தைத் தன்னை டபேதமாகச் சிந்திப்பதை அகங்கிரகத்தியான மென்பர். யாவனொருவனுக்கு அபரோட்சஞான முண்டாகவில்லையோ! அவன் வேதத்தின் ஆக்ஞாரூபமான விதியில் விசுவாசஞ்செய்து அடத்தினுல் நிரந்தரம் நான் பிரஹ்மமாகின்றேனென்னும் விருத்தியின் ஸ்திதிரூபமான அகங்கிரகத்தியானஞ் செய்யவேண்டுவது; அங்ஙனஞ் செய்யில் அவனுக்கு ஞானமுண்டாகி மோட்சமுளதாம். "ஒன்றையொன்று விவன்பாவிக்கும்" எ-து, சாலிக்கிராமத்தில் விஷ்ணுத்தியானம் போலப் பிரதீகமல்ல: வைகுண்டவாசியாகிய விஷ்ணுத்தியானம் போலத் தியேயாநுசாரமாம்; ஆயினும், அபரோட்சமாகுமளவும் மனோமயமாகவிருத்தலின் அங்ஙனங்கூறினர்; இவ்வாறு மானசக் கிரியாரூபமான தியானத்திற்கும், ஞானத்திற்கும் தாரதம்மியமிருத்தலின், இவ்விரண்டும் ஒன்றல்ல. விரோதியல்லாமையின், கர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக்கமாட்டாது; விரோதியாகலின், ஞானமே அஞ்ஞானத்தைக் கெடுக்கும் என்பது.

(226)[[போய்யான மநுத்தலசலம் தாகசாந்தி பண்ணிற்றென்பது ஓரிடத்துங் காணப்படாமையின், போய்யான தியானம் மெய்யான மோட்சத்தை எங்ஙனந் தாற்பாலதா மென்று சங்கித்துச் சமாதானங் கூறுகின்றார்.]

சருவ முத்தியைத் தருகின்ற தியானமுஞ் சத்திய மன்றென்றால், சருவ முத்தியுஞ் சத்திய மன்றென்று சங்கியா தேநீகேள், உருவங் கேட்டவன் றியானிக்கும் பொழுதிலவ் வுருவம்வாஸ் தவ மன்றே, உருவ மாகுமப் பொழுதுகண் ணுற்கண்ட வுருவம்வாஸ் தவமாமே. **(அச)**

இ-ள். சருவ முத்தியைத் தருகின்ற தியானமும்=சர்வ (அனர்த்தத்தின் நிரும்சரூபமான) பிரஹ்மா *வஸ்தாநரூபத்தைத் தாராநின்ற (நிர்க்குணப் பிரஹ்மத்) தியானமும்—சத்தியம் அன்று என்றால்=சத்திய மல்லவென்று கூறிடின்,—சருவமுத்தியும்=சர்வ (அனர்த்தத்தின் நிரும்சரூபமான) பிரஹ்மாவஸ்தாநரூபமும்—சத்தியம் அன்று என்று=அசத்தியமாமென்று—நீ சங்கியாதே=நீ சங்கைசெய்யாதே;—கேள்=(அதற்குச் சமாதானங் கூறுதும்) கேட்பாய்.—உருவம் கேட்டவன்=சங்குசக்கிராதி சின்னங்களையுடைய

---

* அவஸ்தாநம்=சொரூபநிலைபெறல்.

விஷ்ணுவாதி உருவங்களே (ச் சாஸ்திரங்களாலும், பெரியோர்களாலும்) கேள்வியுற்றவன்—தியானிக்கும் பொழுதில்=தியானிக்குங் காலையில்—அவ்வுருவம் வாஸ்தவம் அன்று=அவ்வுருவம் (பாவனைமயமாகலின்,) சத்திய மல்ல:—உருவம் ஆகும் அப்பொழுது=(அப்பாவனையானது திடமாய்) அம் மூர்த்தி தானுகும்போது—கண்ணுல் கண்ட உருவம்=நேத்திரப் பிரமாணத் தினுற் காணுநின்ற அவ்வுருவமானது—வாஸ்தவம் ஆம்=சத்தியமாம்; (அது போலப் பிரஹ்மத்தைச் சாஸ்திரங்களும், பெரியோர்களு முபதேசிக்கக் கேட்டவன் தியானிக்கும்போது பாவனைமாத்திரத்திற் பிரஹ்மமாயிருத்த லின், அப்பாவனைரூபப் பிரஹ்மம் சத்தியமல்ல: தியானபரிபாகவசத்தா லடையாநின்ற பிரஹ்மாவஸ்தாரூபம் சத்தியமாம்.)—எ - று.

தாஷ்டாந்தம் எஞ்சி நின்றதால் வருவித்தாம். சர்ப்பத்தின்ரூம்சரூபம் எப்படி ரச்சுரூபமோ! அப்படிச் சர்வனர்த்தத்தின் ரூம்சரூபம் பிரஹ்மமா வதால், "சர்வமித்தி" என்றார். சர்வனர்த்தத்தின் அபாவரூபம் பிரஹ்ம மென்பதை முதற்படலத்தில், ருகூ - ம் செய்யுளின் விசேஷவுரையிற் காட் டினும்.

"உருவ மாதமப் பொழுதுகண் ணுற்கண்ட வுருவம் வாஸ்தவமாம்"
எ - கு, உ - ம், வாசிட்டம்,

"பிரம னுமே சிருட்டியெலாம் பிறப்ப தெம்பா லென்றுள்ளே
திரம தான மனத்தாலே சிந்தித் துடலிற் சிந்தையற
மரம தென்ன விருத்தலுமே வருநாட் பலபோய் மனுபாவ
முரம தாகி யயனுரு வொருப துலக முளதான."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அசு)

[போய்யாகிய தியானத்திற்கு மெய்யாகிய மோட்சத்தைத் தரும்படி யான திடத்துவமெப்படிக் கூடுமென் றுசங்கித்து அதற்குத் திருஷ் டாந்த முகத்தாற் சமாதானங் கூறுகின்றார்.]

சடம தாகிய தியானமெய் யாகிய சர்வமுத் தியைநல்கும்
திடம தானதெப் படியெனி லவரவர் தியானமே பிறப்பாகும்
உடல மாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்களா குவர்மைந்தா
தொடர்ப வங்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூபமா குவர்
மெய்யே.

இ - ள். சடமது ஆகிய தியானம்=பொய்யாகிய நிர்க்குணத் தியான மானது—மெய் ஆகிய—சர்வ முத்தியை நல்கும்=சர்வ அனர்த்தத்தின் ரூம்சரூபமான பிரஹ்மத்தினவஸ்திதியைத் தரும்—திடமது ஆனது= திடத்தையுடைத்தாயிருப்பது—எப்படி எனில்=எங்ஙன மென்றுசங்கிக்கில், —அவர் அவர் தியானமே பிறப்பு ஆகும்=(மரணகாலத்திலுண்டாகின்ற) அவ ரவர் பாவனையி னநுசாரமாகவே (அவரவர்க்கு) ஜன்மமாமென்று சொல்லப் படும்.—(ஆகலின்,) மைந்தா—உடலம் ஆசையால் தியானிக்கில்=சகுணப்

பிரஹ்மப் பிராப்தியின் இச்சையோடு கூடி (ச் சகுணப் பிரஹ்மங்களை) த் தியானிக்கில்,—தியானித்த உடல்கள் ஆகுவர்=தியானித்த சகுணப்பிரஹ்மங்களாகுவர்.—தொடர்பவம் கெட=அநாதிகாலந் தொடுத்து வந்த ஜன்மமானது (மீண்டுண்டாகாமல்) நாசமாகும்படி—சொரூபமே தியானிக்கில்=(நிர்க்குணப் பிரஹ்மப் பிராப்தியி னிச்சையோடுகூடி) நிர்க்குணப் பிரஹ்மசொரூபத்தையே தியானிக்கில், — சொரூபம் ஆகுவர்=அந்நிர்க்குணப் பிரஹ்ம சொரூபமே யாகுவர்;—மெய்யே=இஃதுண்மையே.—எ - று.

தியானமேற் பிறப்பாகும் என்றும் பாடமுளது. இது சுருதி ஸ்மிருதிகளின் சித்தாந்தமா மென்பார், "மெய்யே" என்றார்.

"அவாவர் தியானமே பிறப்பாதும்" எ - கு, உ - ம், பகவற்கீதை,

"இந்த வுடலம் விடும்பொழுது யாவ னியாதொன் றினைநினைந்தா, னந்த வளவே யந்தப்பா வனையா லதனை யடையுமா, லென்ற னியல்பே யெப்பொழுது மிதயத் திடைகொண் டென்பாளாஞ், சிந்தை யொடும்வா ளமர்தொடங்கி லதனு லெனையே சேருதியால்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அடு)

(227) [நிர்க்குணப் பிரஹ்மத் தியானத்தினுலேயே பிரஹ்மப் பிராப்திநபமான மோட்சமுண்டாமாயின் விசாரமும், விசாரஜந் நியஞானமும் எற்றிற்கு வேண்டற் பாலவாமென் றசங்கித்து அதற்குச் சமாதானங் கூறுகின்றார்.]

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமமா குவரென்றுல்
நர சரீரமாங் குரவனே விசாரமென் ஞானமே னென்னுதே
பர மபாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமே யபரோட்சம்
திரவி சாரமா ஞானமா முத்தியாந் தீர்வையீ தறிவாயே. (அசு)

இ - ள். பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும்=(விசாரத்திற் சமர்த்தர்களாய் நிர்க்குணப்) பிரஹ்மரூபத்தையே தியானித்தவர்களும்—பிரமம் ஆகுவர் என்றுல்=(தியானத்தின் பரிபாகவசத்தால் நிர்க்குணப்) பிரஹ்மரூபமாவரென்று கூறப்படுமாயின்,—நர சரீரம் ஆம் குரவனே=(அருளே திரண்டு) மானுடவடிவமாக வெழுந்தருளிய குருவே—விசாரம் என்=(ஞான ஜநகமான) விசாரமெற்றிற்கு?—ஞானம் என்=(நிரந்தர விசாரப் பிரயத்தனத்தால் ஜநியாநிற்கும்) ஞானமெற்றிற்கு — என்னுதே=என்று சங்கியாதே.—பரம பாவனை=பிரஹ்மத்தியானமானது—பரோட்சம் ஆம்=(முன்னே தியானிக்கும்போது) பரோட்ச புத்தியாம்;—பின்பு=(அத்தியானம் பரிபாகமான) பின்னர்,—அந்தப் பரோட்சமே=அப்பரோட்ச புத்தியே—அபரோட்சம்=(உபாசனையின் சாமர்த்தியத்தால்) அபரோட்ச புத்தியாம்;—திர விசாரம் ஆம் = (இவ்வபரோட்ச புத்தியே) திரமான விசாரமுமாம்,—

ஞானம் ஆம்=(மூலாவித்தையை நிவிர்த்திக்கத் தக்கதான) ஞானமுமாம்,—முத்தி ஆம்=மோட்சமுமாம்;—ஈது தீர்வை அறிவாய்=இது (சுருதி, ஸ்மிருதிகளின்) சித்தாந்தமாமென் றறிவாயாக.—எ - று.

மானசக் கிரியா ரூபமான நிர்க்குண வுபாசனைக்கு முத்தியின் சாதனத்தன்மை கூறிடின், விருத்தமாமே யென்னுஞ் சங்கைக்கு அவிமுக்தமென்னுஞ் சகுணப்பிரஹ்மத்தி னுபாசனையால் தாரகப் பிரஹ்மமாகிய சகுணப் பிரஹ்மத்தின் புத்தியுண்டாவதுபோல நிர்க்குணப் பிரஹ்ம வுபாசனையின் சாமர்த்தியத்தால் மூலாவித்தையை நிவிர்த்திக்கவல்ல புத்தியுண்டாவதால் விரோதமாகாதென்று பஞ்சதசியில் தியானதீபத்தில் வித்தியாரண்ணிய சுவாமிகள் அருளிச்செய்திருப்பதுபோல இவ்வாசிரியருங் கூறின ரென் றறிக.

நிர்க்குணவுபாசனையின் முடிவில் விசாரமும், ஞானமுமுளவாகலின், முத்திக்கு அவை இன்றியமையாதன வென்பது கருத்து. (அசு)

(228) [தத்துவஞானத்தாற் காரியத்தோடுகூட அவித்தை நிவிர்த்தியாயினும் தத்துவஞான நிவிர்த்திக்கு வேறே காரணங் காணப்படாமையின், அகண்டாநுபூதி எங்ஙன்கூடு மென் றுட்சேபித்து அது நிவிர்த்தியாதந் தன்மையைத் திருஷ்டாந்த முகமாகக் கூறுகின்றார்.]

வீட தாம்பரி பூரண சொரூபத்தில் விருத்திஞா னமுங்கூடிச்
சேட மாகிலு லகண்டமா மநுபவ சித்தியெப் படியென்றால்
சாடி நீர்மண்ணைப் பிரித்ததேற் றும்பொடி தானுமண் ணெடுமாயும்
ஊடி ஞானமு மறிவிலா மையைக்கெடுத் தொக்கவே கெடுந்தானே.()

இ - ள். வீடது ஆம் பரிபூரண சொரூபத்தில்=முத்திரூபமான பரிபூரணப் பிரஹ்மசொரூபத்தில்—விருத்தி ஞானமும் கூடிச் சேடம் ஆகிலும்=(காரியத்தோடுகூட அஞ்ஞானத்தை நிவிர்த்தித்த) அந்தக் காரணத்தின் விருத்தி ரூபமான தத்துவஞானமுங் கூடிச் சேஷமாயிருந்தால்—அகண்டம் ஆம் அநுபவ சித்தி=*அகண்டமாகிய வநுபவசித்தி—எப்படி என்றால்=எங்ஙனமாமென் றுட்சேபிக்கின்,—சாடி நீர் மண்ணைப் பிரித்த=குடசலத்திலுள்ள சேற்றை வேறுபடுத்திய—தேற்றும் பொடிதானும் மண்ணெடு மாயும்=கதகரேணுவும் அச்சேற்றோடுகூட எப்படிக் கெடுமோ வப்படி—ஞானமும் ஊடி அறிவிலாமையைக் கெடுத்து=தத்துவஞானமும் பகைத்து அஞ்ஞானத்தை நாசஞ்செய்து—ஒக்கவே தானே கெடும்=(அவ்வஞ்ஞானத்தோடு) கூடவே தானே நாசமாம்.—எ - று.

"தானே" எ - து, தத்துவஞான நிவிர்த்திக்குக் கதகரேணுவுக்குப் போல சாதனாந்தரத்தி னபேட்சை யின்றென்பதை விளக்கிநின்றது.

---

* அகண்டம்=பேதரகிதம்.

மஹாவாக்கிய விசாரத்தால் ஜநியாநிற்கும் அந்தக்காரணத்தின் பிரஹ்மா ரூபமாகிய விருத்திஞானம் காரியத்தோடுகூட அஞ்ஞானத்தை நிவிர்த்தித் துத்தானும் நசித்துப்போய் அகண்டைகரசப் பிரஹ்மமாத்திரம் சேஷித் திருத் தலால், அகண்டாநுபவசித்தி நிர்விவாதமாய்க் கூடுமென்பது கருத்து. (அ எ)

(229) [இவ்வநுபவஞ் சீவன்முத்தரிடத் தெவ்வாறிருக்குமென் றட்சே பித்து அஃதவர்பாலுள்ள தன்மையை யுணர்த்துகின்றார்.]

இந்த நிச்சய முத்தரு ளநுபவ மிருப்பதெப் படியென்றால்
சிந்தை யற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற் சுகமாவர்
பந்த முத்திகண் மறந்துபோ முண்டென்று பலர்சொலி னகையாவர்
அந்த ரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொசுகெனு மவர்களை நகையாரோ.

இ - ள். இந்த நிச்சய அநுபவம்=இந் நிச்சய ரூபமான வகண்டாநு பவமானது—முத்தர் உள்=சீவன் முத்தரிடத்தே—இருப்பது=இருக்கின் றது—எப்படி என்றால்=எவ்வாறென்று நீ விஞவிடில்,—சிந்தை அற்ற= சிந்தனாரூபமான துன்பமற்ற—பூமண்டல இராசனும்=சக்கிரவர்த்திராசா வும்,—சிசுவும்போல்=(அதி) பாலனும்போல—சுகம் ஆவர்=பரமாநந்த சொரூபமாகவே யிருப்பர்:—பந்த முத்திகள் மறந்துபோம்=பந்தமுத்தி (ரூபமான பாவனாவிகற்பங்) களொழிந்துபோம்.—உண்டு என்று=(பந்த முத்திகள்) உளவாமென்று—பலர் சொலில்=பல (மதஸ்த)ர் கூறிடில்— நகையாவர்=(இஃதென்னை! நம்பிராந்தியென்று) நகையாநிற்பர்.—[இதற் குவமை கூறுகின்றார்.] ஓர் கொசுகு=(அற்பமான) ஓர் மசகமானது—அந்த ரத்தை உண்டு உமிழ்ந்தது=(சர்வத்திர பரிபூரணமான) ஆகாசத்தை (யான் காண) உண்டு கக்கிற்று—எனும் அவர்களை=என்று கூறுமப்பிராந்தர்களை— நகையாரோ=யாவர் நகையார்; (அதுபோல.)—எ - று.

சர்வ போகங்களாலுந் திருப்தனை சார்வபூமனனவன் மநுடாநந்தத்தி னவதியை யடைந்து வேண்டற்பாலனவான விஷயங்களின்மையின் இரா காதிரகிதனுய், ஆநந்த மூர்த்தியா யிருப்பதுபோலும், அதிபாலன் ஸ்தன பானஞ்செய்து மிருதுவான சையையிற்கிடந்து சிரித்துக்கொண்டு யானென தென்பன முதலிய ஞானமின்மையின், இராகாதி ரகிதனுய்ச் சுகமூர்த்தி யாகவே யிருப்பதுபோலும், பிரத்தியகபின்ன பிரஹ்ம சாட்சாத்கார முடை யோரும், கிருதகிருத்திய ரூபமான வித்தியாநந்தத்தின் பரம *காஷ்டை யான சீவன் முத்தித்தன்மையை யடைந்து பரமாநந்த சொரூபராகவே யிருப்பரென்பர், "சிந்தையற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற் சுக மாவர்" எ - ம், நித்தியமுத்த ஆன்மசொரூபந்தாமான சீவன்முத்தர் அந்தக் காரணத்தில் முன் பெத்தராயிருந்து பின்முத்தராஞை மென்னும் விகற்பம் மறந்து மெழாமையின், "பந்த முத்திகண் மறந்துபோம்" எ - ம், பதிகாரு வர் ஓரிடத்துப் படித்து ஒருவன் நித்திரை செய்ய மற்றொருவன் விழித்திருந்

* காஷ்டை=அவதி.

தாஞக : நித்திரை செய்யாநிற்கும் ஒருவன் கள்ளர்கள் வந்து தன்னை வாய் திறக்க வொட்டாம லடித்து வுபத்திரவஞ் செய்து கைகால்களைக் கட்டிவிட்டுத் தன்னிடத்துள்ள நிதியைக் கவர்ந்துகொண்டு போவதாக அந்நித்திரா மோகத்திலுற் கண்டு அந்நித்திரையிற்றானே கட்டினை யவிழ்த்துவிட வல்லோர் ஈண்டிலரோவென்று வெளிக்குக் கேட்பக் கூப்பிட்டலறும்போது விழித்திருக்கு மற்றொருவன் ஈதென்ன ! பிராந்தியென்று சிரிப்பதுபோலப் பாமார்த்த திருஷ்டியிலில்லாத பந்தமுத்திகளை உண்டென்று பலமதஸ்தர்கள் வியவகரிக்கில் அவர்களுடைய பிராந்தியின் மகிமையை நாடிச் சிரித்தலின், "உண்டென்று பலர்சொலி னகையாவர்" என்றுங் கூறினர். "அந்தாம்" எ - து, திக்குக், கால, தேசாதிகளால் அபரிச் சின்னமான சொரூபத்திற்கும், "கோசுத" எ - து, மண்ணின்கட் கடசத்தி ஏகதேசம்போல அச் சொரூபத்தின்கண் ஏகதேசமாயுள்ள துச்சரூபமான மாயைக்கும் உபமானம். "பலர்" என்றதால், மதஸ்தர் என்றும். மநுஷ்யாநந்தத்தினவதியையடைந்துள்ள இராசாவைப்போலவென்பது பாமாதிருஷ்டியைப்பற்றிய உபமானமாம் : தத்துவ திருஷ்டியாலோ வெனின் ;—சீவன் முத்தருடைய ஆநந்தத்திற்கு அஃதுபமானமல்ல. "வாக்கானது யாதோன்றின்கட் செல்லாது மீளுமோ" என்பது முதலிய சுருதிகளால் இரணிய கற்பாநந்தாந்தந்திவலையாம், பிரஹ்மாநந்தமளவிறந்த மஹார்ணவமாம் எனப் பிரதிபாதிக்கப்படுதலின் என்று பெரியவாசிட்டத்தில் வியாக்கியானஞ் செய்திருக்கிறது ; இவ்வாறே, "பினவாநந்தங்க ணுரையாம் பிரளய வெள்ளக் கடல்பிரமாநந்தம்" என்று இப்படலத்தின் கஙக - வது செய்யுளிற் கூறியிருப்பதுங் காண்க.

சர்வவனர்த்தங்களும், அவைகட்கு மூலமான சகல விகற்பங்களுமொழிந்து பரிபூர்ண பரமாநந்த பரமசீதளமான பிரஹ்மமாத்திரமாய் நிற்பதே அகண்டாநுபவமா மென்பது கருத்து.

"சிந்தை யற்றபூ மண்டல விராசனும்போல்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"அன்னுன் சமமா மழிவில்லா வான்மா வாய்நின் றிம்பமுறு
மென்னு கினுமொன் றுடுப்பவனு யென்னு கினுமொன் றுண்பவனு
யுன்னு தெங்கா கினுமொருபா லுறங்கு வோனு யாங்கவனே
பொன்னுர் பூமி முழுதாளும் பூபாலனைப்போற் பொலிவு றுமால்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அ அ)

(230) [சீடனுக்கு இவ்வகண்டாநு பூதி சித்திக்கற்குச் சகத்தில் அநாதாபுத்தியுண்டாக வேண்டுமாதலின், அதற்கு வாசிட்டத்திற் கூறியுள்ள பாலகாக்கியாயிகைபோல ஓராக்கியாயிகை இங்கே கூறுகின்றர்.]

மலடி மைந்தனுந் தாணுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி
இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசதம் விலைபேசிக்

கலக மாய்முயற் கொம்பினுற் குத்தியே களைத்திரு வருமாண்டார்
அலகை யாயினு ரெனும்விவ காரத்தை யறிந்தவன் மயங்கானே.(அசு)

இ - ள். மலடி மைந்தனும்=மலடி ஈன்ற மகனும்,—தாணுவில் புருடனும்=கட்டையிற்றோன்றிய புருஷனும்—வான்மலர் முடிசூடி=ஆகாய (த்திலுண்டாகிய) புஷ்பங்களை முடியில் (அலங்காரமாகச்) சூடிக்கொண்டு—இலகு கந்தர்ப்ப நகரிலே=விளங்குகின்ற * கந்தர்வ நகரத்திலே—சுத்திகை இரசதம் விலை பேசி=இப்பிவெள்ளியை விலைகூறி—கலகம் ஆய் முயல் கொம்பினுல் குத்தி=(அதனுற்) கலகம் விளைந்து சசவிஷாணத்தினுல் ஒருவரையொருவர் குத்தி—களைத்து இருவரும் மாண்டார் அலகை ஆயினர்=களை (மேலிட்டு மூர்ச்சி)த்து (வீழ்ந்து) இருவருமடிந்து (அது தன்மரணமாகலின்,) பேயாயினர்—எனும் விவகாரத்தை=என்று கூறும் இவ்வழக்கை—அறிந்தவன் மயங்கான்=(பொய்யென்று தெளியாத பாலன் அல்லது) தெளிந்தவன் மயங்கான்.—எ - று.

"கலக மாயினு ரிடையினிற் கயிற்றராக் கடித்திரு வருமாண்டார்," என்றும் பாடமுளது.

கூறிய ஆக்யாயிகையில் அறிந்தவன் மயங்காமைபோல விவேகியாகிய நீயும் துச்சமான சகத்தின்கண் மயங்காதிருவென்பது கருத்து. (அக)

(231) [பிரத்தியட்சாதி பிரமாணங்களால் அநுபவிக்கப்படாநின்ற சகத்து, பாலகாக்யாயிகை போலத் துச்சமென்பது எவ்வாற்றலாம் என உள்ளே சிந்தித்துக்கொண்டு ஒன்றும் கூறாதிருக்குஞ் சீடன் கருத்தினை யுணர்ந்து காரணந் துச்சமாகலின், காரியமுந் துச்சமாம் என்று ஆசாரியர் கூறுகின்றார்.]

மாயை யென்பது பொய்யெனி லதுபெற்ற வகையெலாம் பொய்யாமே
தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ
சேய சொர்க்கமு நாகமு நன்மையுந் தீமையும் பாராமல்
தூய சத்துச்சித் தாநந்த பூரண சொரூபமா யிருப்பாயே. (கூ0)

இ - ள். மாயை என்பது பொய் எனில்=(சகத்திற்கு உபாதான காரணமான) மாயையென்று சொல்லப்படுவது யாது! அது (சுருதி, யுத்தி, அநுபவங்களான்) மித்தையென்று சொல்லப்படுமாயின்,—அது பெற்ற வகை எலாம்=அம்மாயை கற்பித்த கூறுபாடுகளனைத்தும்—பொய் ஆம்=(அதற்கு முன்னரே) மித்தையாம்.—[இஃதெதுபோலவெனின்;] தாயை அன்றி=தாயையல்லாமல்—மக்களுக்கு=புத்திரர்க்கு—ஒரு பிறவியும் சாதியும்=ஒரு ஜன்மமும், ஒரு ஜாதியும்—வேறு உண்டோ=வேறெயுண்டாமோ (அது போலாம்;)—(ஆகலின்,) சேய சொர்க்கமும் நாகமும்=சேய்மையான சுவ

* கந்தருவநகரம்=கந்தருவருடைய நகரம்போலச் சூன்யவதிஷ்டானத்தில் புராகாரமாக நீலபீதாதி மேகங்களாற் பண்ணப்பட்ட வேறுபாடு.

ர்க்க நரகங்களும்,—நன்மையும் தீமையும்=நன்காயுள்ளன, தீங்காயுள்ளன வும் (ஆகிய பிரபஞ்ச முழுவதையும்)—பாராமல்=(சத்தியமாகப்) பாராமல் (மித்தையென் றுபேட்சித்து)—தூய சத்துச் சித்து ஆநந்த பூரண சொரூபம் ஆய் இருப்பாய்=சுத்தமான சச்சிதாநந்த பரிபூரண பிரஹ்மசொரூபந் தானாய் நிற்பாய்—எ - று.

"வகையெலாம்" எ - து, மகதத்துவம், அகங்காரதத்துவம், பஞ்ச தன் மாத்திராதி ரூபங்களான சகத்தினத்தையும், தாய் யானையாகில் கன்றும் யானையாய், தாய் பசுவாகில் கன்றும் பசுவாய், தாய் புலியாகில் குட்டியும் புலி யாய்ப் பிறக்கக்காண்டலின், "தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ" என்றார்.

"இதுவே நன்றி தன்றென்னு மிதுவே வித்தா மிடரொழுங் குக்கு"—

என்று வாசிட்டத்திற் கூறியிருப்பதால் துக்க நிவிர்த்தியை யிச்சித்திருக் கின்ற நீ காஞ்சன வியதிரிக்தமாகக் கடக, மகுடாதி பூஷணங்களில்லாதது போல அத்தியஸ்தமான சகத்து அதிஷ்டானவியதிரிக்தமாக இன்றென்று நிச்சயித்துச் சகத்தென்னும் வாசனையை யொழித்தென்பார், "சேய சோர்க் கழ நரகழ நன்மையுந் தீமையும் பாராமல்" என்றார். "தூய" என்பது, லட்சியார்த்தத்தைக் காட்டி நின்றது.

பொய்யில் உறக்கமும், மெய்யில் விழிப்புமாகியிரு என்பதாம். (கூ0)

(232) [யாவர்க்கும் நன்மைபயக்கத்தக்கனவான பிரபஞ் சங்களை மித்தையென்றநாதரஞ் செய்யின், அஃதப ராதமாகாதோ என்று சீடன் வினதல்.]

பங்க யாசனன் முதற்பல தேவரும் பாருள பெரியோரும்
கங்கை யாதியாந் தீர்த்தமுந் தேசமுங் காலமு மறைநா லும்
அங்க மாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய மென்சொன்னல்
எங்க ணுயக னேயத னுற்குற்ற மில்லையோ மொழியீரே. (கூக)

இ - ள். பங்கயாசனன் முதல் பல தேவரும்=பிரமன் முதலிய பற்பல தேவர்களும்,—பார்உள பெரியோரும்=பூமியின் கண்ணுள்ள பெரியோர் களும்,—கங்கை ஆதி ஆம் தீர்த்தமும்=கங்கை முதலிய (புண்ணிய) தீர்த் தங்களும்,—தேசமும்=(குருக்கேத்திர முதலிய புண்ணிய) தேசங்களும்,— காலமும்=(அர்த்தோதயம், மஹோதய முதலிய புண்ணிய) காலங்களும்,— மறை நாலும்=இருக்கு முதலிய வேதங்களுன்கும்,—அங்கம் ஆறும்=(சந் தசு, கற்பமுதலிய) ஆறங்கங்களும்,—மந்திரங்களும்=(பஞ்சாட்சர முதலிய) மந்திரங்களும்,—தவங்களும்=(கிருச்சிர சாந்தராயணாதி) தவங்களும்—அசத் தியம் எனச்சொன்னல்=பொய்யென்று சொல்லில்,—எங்கள் நரயகனே= எங்கட்கிறைவனே—அதனல்=(தமக்குறுதி வேண்டினோர் வழிபாடுசெய்து

புண்ணியமேலிட்டுப் பாவமகன்று பரகதியடையக் காரணமாய்ச் சுருதிசித்த மாயுள்ள வுயர்வான பிரபஞ்சங்களைப் பொய்யென்றுசொல்) வதனால்—குற்றம் இல்லையோ=தோஷமில்லையோ?—மொழியீர்=அதன் உண்மையை யுரைத்தருள்வீர்.—எ - று. (கூ)

[அதற்கு விடைகூறல்.]

சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையானால், அற்ப மாயையிற் றோன்றிய சகங்களை யசத்தெனல் பிழையாமே, சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்லலா மெனின்மைந்தா, அற்ப மாயையிற் றோன்றிய சகமெலா மசத்திய மெனலாமே. (கூஉ)

இ - ள். சொற்பனந்தனில் கண்டதை=சொப்பனாவஸ்தையிற் காணப்பட்ட (பிரமாமுதலிய தேவர்கள், கங்கை முதலிய தீர்த்தங்களாதிய சொப்பனசுருதி சித்தமான உயர்வாகிய) பிரபஞ்சங்களை—பொய் என்று சொல்வது=(சாக்கிரத்தில் விழித்தவன்) மித்தையென்று கூறுவது—பிழை ஆனால்=தோஷமாயின்,—அற்பமாயையில் தோன்றிய சகங்களை=(மண்ணிற் கடசத்திபோலத்தன்னில்) ஏகதேசமான மாயையிலுண்டான பிரபஞ்சங்களை—அசத்து எனல் பிழை ஆம்=மித்தையென்று சொல்லுவதுந் தோஷமாம்.—சொற்பனந்தனில் கண்டதை=சொப்பனத்தில் (யோக்கியதேச கால சாமக்கிரியின்றி நித்திராதோஷ சகிதவவித்தையினா லுண்டாய்க்) காணப்பட்ட வுயர்வான பிரபஞ்சங்களை—பொய் என்று சொல்லல் ஆம் எனின்=(சாக்கிரத்தில் விழித்தவன்) மித்தையென்று சொல்லலாம், (அதனாற்றோஷமில்லை) என்று சொல்லிடில்,—மைந்தா=மகனே—அற்பமாயையில் தோன்றிய சகமெலாம்=(பிரத்தியகபின்ன பரமான்மாவாகிய தன்கண்) ஏகதேசமாயையிற் றோன்றிய சகமனைத்தும்—அசத்தியம் எனல் ஆம்=(தன்னில் விழித்த ஞானிக்கு முயற்சியின்றியே மித்தையாகத்தோன்றுதலின், அவன்) மித்தையென்று சொல்லலாம், (அதனாற்றோஷமின் றென்றறிதி.)—எ - று.

சொப்பனத்தில் நித்திராமோகத்தாற் கண்டு யாவராலும் வழிபட்டு வழிபாட்டிற்கேற்ற பலன்களை யடையத்தக்கனவான ஈசுராதிகள் சாக்கிரத்தில் விழிக்கில் அசத்தாய்ப்போதலின், அவைகளை அசத்தென்று சொல்லுதல் அபாதமாகாததுபோலச் சுத்தப்பிரஹ்மத்தில் ஏகதேச கற்பிதமான மூலாஞ் ஞானமாகிய நித்திரையினாற் கற்பிக்கப்பட்டு வழிபட்டுவந்த ஈசுராதிகள் ஞானமாகிய சாக்கிரத்தில் அசத்தாய்ப்போதலின், அசத்தியமென்று சொல்லுவது அபாதமாகாதென்பது.

"அற்பமாயை" எ - கு, உ - ம், பஞ்சதசி,

"பிரமத்தோ ரிடத்தல் லாது பிறங்குறு தன்ன தெங்கும்
வருகுட சத்தி மென்மை மண்ணினி னிகழு மாபோ

லொருபத மஜீனத்தா மீதி ஞெளிருமூப் பதமற் றுண்டு
கருதியோ ரிடத்து மாயை துன்னிடு மென்றுஞ் சொல்லும்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூஉ)

[அபாதமாகா தென்பதைத்தானே இன்னும் வற்புறுத்துகின்றார்.]

பொய்யை மெய்யென்ற மூடர்புண் ணியரென்று புராணங்கூப் பிடுமானுல், மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்த சாத் திரமுண்டோ, பொய்ய தேதெனினுமரூபங்களாம் பூதமா கிய மாயை, மெய்ய தேதெனிற் சச்சிதா நந்தமாய் வியாபிக்கு மான் மாவே. (கூங)

இ - ள். பொய்யை மெய் என்ற மூடர்=(சுருதி, யுத்தி, யநுபவசித்த மான அத்வைதத்தை அநாதரவுசெய்து சுருதியாதிகளால்) மித்தையென்று நிஷேதிக்கப்பட்ட தொய்தத்தைச் சத்தியமென்று கூறுநிற்கும் (சாங்கிய கணுத முதலிய மதாநுசாரியரான) மூடரை—புண்ணியர் என்று=தர்ம வான்களென்று—புராணம் கூப்பிடும் ஆனுல்=புராணங் கூறுமாயின்,—மெய்யை மெய் என்ற ஞானிக்கு=(சுருதியாதிகளாற் சித்தமான) அத் வைதத்தைச் சத்தியமென்று கூறுநிற்கும் ஞானிக்கு—குற்றங்கள் விதித்த சாத்திரம் உண்டோ=அபராதங்களை விதித்த சாஸ்திரம் ஏது? (இல்லை.) —பொய்யது ஏது எனில்=மித்தையாவது யாதெனில்,—நாம ரூபங்கள் ஆம் பூதம் ஆகிய மாயை=நாமரூபங்களான பூதபௌதிக ரூபமாகிய மாயை யாம்.—மெய்யது ஏது எனில்=சத்தியமாவது யாதெனில்,—சத் சித் ஆநந் தம் ஆய்=சச்சிதாநந்தரூபமாய்—வியாபிக்கும் ஆன்மாவே=யாவரிடத்தும் வியாபித்திருக்கும் பிரத்தியகான்மாவே.—எ - று.

சுருதி, யுத்தி, பிரஹ்மவித்துக்க ளநுபவம் இவைகளான் மித்தை யென்று நிஷேதித்த பிரமா முதலிய தேவர்கள், பெரியோர்கள், கங்கைமுத லிய தீர்த்தங்கள், தேசங்கள், காலங்கள், வேதங்கள், அங்கங்கள், மந்திரங்கள், தவங்கள் முதலியவற்றைச் சத்தியமென்று நிச்சயித்துத் தீர்த்தமாடல், சேவை, அர்ச்சனை, தானம், தவம் மகமுதலியவற்றைச் செய்யாநிற்கும் பர மார்த்த வறிவின்மையரையே தர்மவான்களென்று புராணங்க ளதிக்குமாயின் என்பார், "பொய்யை மெய்யென்ற மூடர்புண் ணியரென்று புராணங்கூப் பிடுமானுல்" எ - ம், பரமாத்வைத ஞானியைச் சுருதி, ஸ்மிருதி, இதிகாச, புராணுகமங்களுதிக்கக் கண்டேமல்லது நிந்திக்கக் கண்டிலேமென்பார், "மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத் திரமுண் டோ" என்றுங்கூறினர்.

"ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத் திரமுண்டோ" எ - கு, உ - ம், பிரமகீதை,

"ஈசனு ஞானி யிருந்துள விடத்தே யிருப்பது முத்திதா னந்தத்
தேசிக னேவல் செய்பவன் காலென் சென்னியி லிருப்பது மன்னி

மாசிலாப் பரம ஞானியா முனிக்கு மகேசனு மொப்பலன் மதிக்கி
லாசிலா வரியு மொப்பல னுனுமொப்பல னேவரொப் பாரே.”—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூக)

(233) [மாயை மித்தையென்பதை நன்றுயறிந்து அதனை யகற்றுதற்
பொருட்டு அதனது சொரூபமுதலியவற்றை வினாதல்.]

மாயை யென்பதே துடையா ரெப்படிவந்த தது வருவானேன்
மாயை யென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே
மாயை யென்பதும் பிரமமு மொன்றெனின் வஸ்துவும் பொய்யாமே
மாயை யென்றமே கங்களுக் கொரு சண்டமாருத குருமூர்த்தி.(கூச)

இ - ள். மாயை என்பது = மாயையென்று சொல்லப்படுவது—எது = எப்படிப்பட்ட சொரூபமுடையது?—உடையர் ஆர் = (சீவேசுவருள், அதனை அபிமானவாசிரயமாக) உடையோர் யாவர்?—எப்படி வந்தது = (ஆரம்ப, பரிணாம, விவர்த்தபட்சங்களுள்) அதனதுற்பத்தி எவ்வாறு?—வருவான் என் = என்னகாரணத்தால் (எனக்கு) வந்தது?—மாயை என்பது = மாயையென்று சொல்லப்படுவது—பிரமத்தின் வேறு எனின் = பிரஹ்மத்தைப்பார்க்கிலும் பின்னமென்று சொல்லில்,—வஸ்துவும் இரண்டு ஆமே = பிரஹ்மமும் (தம்பதிபோல) உபயமாமே? — மாயை என்பதும் பிரமமும் = மாயையும், பிரஹ்மமும்—ஒன்று எனின் = அபின்னமென்று சொல்லில்,—வஸ்துவும் பொய் ஆமே = பிரஹ்மமும் (உப்பளத்தில் வீழ்ந்தமாங்கனி முதலியவை தமது தன்மைபோய் அவ்வுப்பாவதுபோலத் தனது சச்சிதானந்த சுபாவங் கெட்டு) அசத்துச்சட துக்கமாமே—மாயை என்ற மேகங்களுக்கு = மாயையென்று சொல்லப்பட்ட மேகங்களைப் போக்குதற்கு—ஒரு = ஒப்பற்ற—சண்டமாருத குருமூர்த்தி = சண்டமாருதமென்று சொல்லுங் குருவே.—எ - று.

“மாயை யென்ற மேகங்களுக்கு” என்று பன்மைகூறினது மாயையானது ஆவரணம், விட்சேபமென்னும் இருகூறுயிருத்தலினென்க. சொரூபத்தை ஆச்சாதனஞ் செய்தலின் மாயையை, “மேகம்” எ - ம், உபாயத்தால் அதனை நிவிர்த்திக்குஞ் சாமர்த்திய மிகுந்துடைமையின் குருவை, “சண்டமாருதம்” என்றுங் கூறினன். (கூச)

(234) [அறுவகை வினாக்களுள், முதலொன்று வினாக்களுக்கு
உத்தரங் கூறுகின்றார்.]

அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையா லவாச்சிய வடிவாகும்
இதுத னக்குள துடலியா னுலகுமெய் யெனுமவ ருடையோர்கள்
கதையி லாதபொய் வந்ததிப் படியென்று கண்டபே ரிலைமைந்தா
விதன மாயையென் வந்ததென் றுற்புத்தி விசாரமற் றதனுலே. (கூடு)

இ - ள். அதனை = அம்மாயையை — இன்னது என்று = (பின்னம், அபின்னம், பின்னுபின்னம், சத்து, அசத்து, சதசத்து, சாவயவம், நிரவய

வம், சாவயவ நிரவயவமென்னும் இவற்றுள்,) இத்தன்மைத்தான சொரூப முடையதென—உரைத்திடப் படாமையால்=நிச்சயித்துச் சொல்லக்கூடா மையின்,—அவாச்சிய வடிவு ஆகும்=அநிர்வசனீய சொரூபமாம்.—இது தன க்கு உளது=இப்புத்திராதி கூத்திராதி தனக்குடையன,—உடல் யான்= இத்தேகம் நான்,—உலகு மெய்=பிரபஞ்சஞ் சத்தியம்—எனும் அவர் உடை யோர்கள்=என்னும் (அபிமானமுடைய) சீவர்களே அதனை யுடையவர்கள். —கதையிலாத பொய்=வாக்கால் (சத்தசத்தென்று) வசனித்தற்கில்லாத அம் மாயை—வந்தது இப்படி என்று=(அநாதியாகலின்,) அண்டானது (ஆரம்பம், பரிணமம், விவர்த்தம் என்னும் பட்சத்திரயங்களுள்,) இவ்விதமா மென்று—கண்டபேர் இலை=கண்டவர் (ஒருவரும்) இலர்.—மைந்தா=மைந் தனே—விதன மாயை=(அசத்துச்சட) துக்காத்மகமான மாயை—என் வந் தது என்றால்=(எனக்கு) என்னகாரணத்தா லுண்டாயிற்றென்று நீ சங்கிக் கில்,—புத்தி விசாரம் அற்றதனால்=(உன்) புத்தியின்கண் (யாமார்? சகத் தேது என்னும்) விசாரமின்மையினாலே (வந்தது என்றறிதி.)—எ - று.

(235) அஞ்ஞானம், அவித்தை, மாயை, பிரகிருதி, சத்தி என்பன ஒரு பொருட்சொற்கள். மாயை, அவித்தையின் பேதவாதம் எகதேசிகள் மதம். நையாயிகர் முதலியோர், ஞானபாவத்தையே அஞ்ஞானமென்பர்; சித்தாந் தத்தில் ஆவரண, விட்சேபசத்திகளையுடைய அநாதிபாவரூபபதார்த்தம் அஞ் ஞானம். அவ்வஞ்ஞானமும், சேதனத்தோடு பின்னமோ? அபின்னமோ எனின்:—அவ்விரண்டு பட்சமுங் கூடாது. என்னை? "ஈண்டு நாநா அற் பமில்லை" என்பது முதலிய சுருதி வசனத்தால் சேதனத்தோடு பின்ன மென்பது நிஷேதிக்கப்படுகிறது. சடசேதனங்கட்கு அபேதங் கூடாமை யின், அபின்னமென்பதுங் கூடாது. பின்னத்துவ, அபின்னத்துவங்கள் பரஸ்பரம் விரோதமாகலின், அஞ்ஞானம் சேதனத்தோடு பின்னபின்ன மென்பதுங் கூடாது. அப்படியே அத்வைதப் பிரதிபாதக சுருதி விரோதத் தால் அஞ்ஞானத்திற்குச் சத்ரூபத்தன்மை கூடாது. பிரபஞ்சத்தின் கார ணத்தன்மை கூடாமையின், துச்சத்துவரூப அசத்ரூபத்தன்மை கூடாது. பரஸ்பரம் விரோதி தர்மங்கள் ஒன்றன்கட் சம்பவியாமையின், சதசத்தென் னல் கூடாது. அப்படியே அஞ்ஞானத்தைச் சாவயவமென்று ஒப்பிடில், நியாயமதத்தில் திரவியவாரம்பக உபாதானத்தை அவயவமென்றனர். சாங் கியாதி மதங்களில் திரவியரூப பரிணமமுடைய உபாதானத்தை அவயவ மென்றனர். உபாதானத்தையே அவயவமென்னில், சத்தத்திற்கு உபாதான வாகாசமும் சத்தத்திற் கவயவமாம்: அப்படியே தமது குணம், கிரியைகட்கு உபாதானகாரணமான கடாதிகளும் உருவ முதலிய குணங்கட்கும், சலன ரூபமான கிரியைக்கும் அவயவமாம்; ஆதலால், திரவியவுபாதான கார ணத்தை அவயவமென்றனர்: அந்நியங்களின் உபாதானத்தை அவயவமென் கிலர்; அவயவத்தினின்றும் ஜந்நியமானதைச் சாவயவமென்பர். அவித்தை திரவியமாயின், சாவயவத்தன்மை கூடும்; திரவியம், திரவியத்துவம் இரண் டும் அதற்குப் பொருந்தாது. என்னை? நித்திய அநித்திய பேதத்தால் திரவி

யம் இருவகைத்தாம்; அவித்தையை நித்தியத்திரவிய ரூபமாக வொப்பிடில், சாவயவத்துவமென்று சொல்லுதல் அசங்கதமாம்: அப்படியே ஞானத்தால் அவித்தை நாசமாக வேண்டுவதில்லை. அநித்தியத்திரவிய ரூபமாக வொப்பிடில், அதனதவயவமும் ஆன்மாவினும் பின்னமாகலின் அநித்தியமேயாம்: அவயவத்தின் அவயவமும் அநித்தியமாவதால் அநவஸ்தாதோஷம் வரும். அந்தியவயவத்தைப் பரமாணுவைப்போல நித்தியமாக வொப்பிடில், அத்வைதப் பிரதிபாதக சுருதிவசனத்திற்கு விரோதமாம். நியாயமதத்தில் பரமாணுவையும், சாங்கியமதத்தில் பிரதானத்தையும் நித்தியமாக அங்கீகரித்திருப்பது சுருதி விருத்தமாம்; இவ்வாற்றால், திரவியத்துவத்தினபாவத்தால் அஞ்ஞானத்தில சாவயவத்துவங் கூடாது. அப்படியே உபாதானத்தன்மை கூடாமையின், அஞ்ஞானம் நிரவயவமென்று சொல்லுதலுங் கூடாது. சாவயவமே உபாதானகாரணமாம். நியாயமதத்தில் சத்தத்திற்குபாதான காரணமான ஆகாசம் நிரவயவமென் றெப்பினர்; அதுவும் ஆன்மாவினின்றும் ஆகாசமுண்டாயிற் றென்னுஞ் சுருதிக்கு விருத்தமாம்: அப்படியே துவியணுகத்தின் உபாதான காரணமான பரமாணு நிரவயவமென்றெப்பினர்; அதுவும் நிரவயவ பரமாணுவின் சம்யோகங்கூடாதென்பது முதலிய தோஷத்தால் சூத்திரகாரர் சாரீரக சாஸ்திரத்தின் துவிதீய அத்தியாயத்திலுள்ள துவிதீய பாதத்தில் நிஷேதித்திருக்கின்றனர். ஆதலால், பிரபஞ்சத்தின் உபாதானமான அஞ்ஞானத்திற்கு நிரவயவத்தன்மை சம்பவியாது. அஞ்ஞானத்திற்குப் பிரபஞ்சத்தின் உபாதானத்தன்மை மாயையைப் பிரகிருதியென் றறியத்தக்கதென்னுஞ் சுருதியில் பிரசித்தமாயிருக்கிறது. மாயை அஞ்ஞானங்கட்குப் பேதமில்லை. இவ்வாற்றால், அஞ்ஞானத்திற்குச் சாவயவத்தன்மை அல்லது, நிரவயவத்தன்மை கூடாது: அப்படியே பரஸ்பரம் விருத்தமான உபயரூபத் தன்மையுங் கூடாது.

இப்படி எவ்வித தர்மத்தினுனும், அஞ்ஞானத்தின் நிரூபணம் அசக்கியமாவதால் அதனை அநிர்வசனீயமென்றனர். அநிர்வசனீயமான வஞ்ஞானம் அநாதிபாவரூப பதார்த்தமாமென்று அதற்குப்பாவ ரூபத்தன்மை சொல்லுவதால் சத்துரூபத்தன்மை சித்திக்கிறது; சத்துரூபத்தன்மை நிஷேதிக்கப்பட்டிருப்பதால் அங்ஙனங் கூறுதல் கூடாதேயெனின்:—அதற்குச் சமாதானம். அஞ்ஞானம் சத்துவிலட்சணமெப்படியோ! அப்படியே அசத்விலட்சணமுமாம். ஆதலால், அபாத்தியரூபசத்துவமோ அஞ்ஞானத்திலில்லையாயினும், துச்சரூபமான அசத்தினும் விலட்சணத்தன்மை ரூபமான சத்துவம் அஞ்ஞானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது; இக்காரணத்தால், சத்து அசத்தினும் விலட்சணமான அநிர்வசனீயம் அஞ்ஞானமாம். சர்வதாவசனத்தினகோசரம் அநிர்வசனீயமல்ல; பாரமார்த்த சத்ரூபப்பிரஹ்மத்தின் விலட்சணமும், சர்வதா சத்தாஸ்பூர்த்தி சூனிய சசசிருங்காதி அசத்தின் விலட்சணமுமே அநிர்வசனீயசத்தத்தின் பாரிபாஷ்கவர்த்தமாம்; ஆதலால், அநாதிபாவ ரூபத்தன்மையதெனல் கூடும்.

உற்பத்தியின்மையின், அநாதியாம். கடம்போல அவயவசமேதரூப மான சாவயவமல்ல: அந்தகாரம்போலச் * சாம்ஸமாம்; ஆகலின் † சர்வதா வசனத்திற் கசோசரமென்னுது, "அதனே யின்னதென் றுரைத்திடப் படா மையா லவாச்சிய வடிவாதும்" எ - ம், அகந்தை மமதையோடுகூடி அசத் தியமான பிரபஞ்சத்தில் சத்தியத்துவப் பிராந்தியையுடைய சீவரிடத்து நான் அஞ்ஞானியென்னும் அநுபவங் காணப்படுதலின், "இது தன்கீதுள துடலியா னுலதுமேயீ யெனுமவ நுடை யோர்கள்" எ - ம், ஆதியின்மை யின் அநாதி: உற்பத்திக்கு ஆதி என்று பெயர்; மாயையின் உற்பத்தி அங்கீ கரிக்கில் புத்திரனினின்றும் பிதாவினுற்பத்தி கூடாததுபோல மாயாகாரிய மான பிரபஞ்சத்தினின்றும் மாயைக்கு உற்பத்தி கூடாது. சேதனத்தி னின்றே மாயைக்கு உற்பத்தியொப்பவேண்டும்; அங்கே சீவபாவமும், ஈசுர பாவமும் மாயையின்காரியமாகலின், மாயை சித்தியாமற் சீவேசுரருருவம் சித்தியாது; ஆதலால் சீவசேதனம், ஈசுரசேதனங்களினின்றும் மாயையினுற் பத்தி கூறுதல் கூடாது. சுத்தசேதனமோ! அசங்கமாயும், அக்கிரியமாயும், நிர்விகாரமாயும் இருப்பதால் அதினின்றும் மாயையி னுற்பத்தி யொப்பிடில், விகாரியாம்; அன்றியும், சுத்தசேதனத்தி னின்றும் மாயை உற்பத்தியா மேல், மோட்சதசைக்கண் பின்னரும் மாயை யுண்டாகாநிற்கும்; அஃதுண் டாகவே, மோட்சநிமித்தமான சாதனங்கள் நிஷ்பலமாம்; இவ்வாற்றான், மாயை உற்பத்திரகிதமா யிருத்தலின், "கதையி லாதபோய் வந்ததிப் படி யென்று கண்டபோலே" எ - ம், பாலனுக்கு அவிவேகத்தால் வெறும் பொய்யான பேய்த்தோற்ற மூண்டாவதுபோல அசத்துச் சடதுக்காத்மக மான மாயை அவிவேகத்தாற் றோன்றுவதால், "விதனமாயையேன் வந்த தென் றற்புத்தி விசாரமற் றதனலே" என்றுங் கூறினர். "விதனம்" என்றதனால், அசத்துச்சடங்கள் வருவித்தாம். (கூடு)

(236) [டு - ம், கூ - ம், விளைவித்த உத்தாங்கூறத் தோடங்கிப் பிரஹ்மத்தின் சத்தி காரியரூபமான லிங்கத்தா லறியற்பாலதெனத் திருஷ்டாந்த முகமாகக் கூறுகின்றார்.]

அருவ மாகுமா யாவிவித் தைகள்விளை யாடுமுன் றெரியாவே
உருவ மாம்பல கந்தர்ப்ப சேனையா யுதித்தபின் வெளியாகும்
பிரம சத்திக ளநந்தமா மதைக்கண்டு பிடித்திடல் கூடாதே
பரவு பூதங்கள் கண்டநு மானத்தாற் பலருக்கும் வெளியாமே. (கூசு)

இ - ள். மாயாவி = இந்திரஜால மறிந்தவனுடைய — அருவம் ஆகும் வித்தைகள் = அருவமாகிய (மணிமந்திராதி ரூபமான) மாயாசத்திகள் — விளை யாடும் முன் = (கந்தர்வநகர முதலானதைக்காட்டி அவன்) விளையாடுதற்கு முன்னே — தெரியா = (ஒருவருக்குந்) தோன்றாதனவாய், — உருவம் ஆம் பல கந்தர்ப்பசேனை ஆய் = உருவமாகிய பற்பலவான கந்தர்வ சேனைகளாகி

---

* சாம்ஸம் = அம்ஸத்தோடு கூடினது; அம்ஸம் = கூறு.

† சர்வதா = சர்வப்பிரகாரம்.

—உதித்தபின் வெளி ஆகும்=உண்டானபின் (யாவர்க்கும்) தோன்றுநிற் கும்;—(அதுபோல) பிரமசத்திகள் அநந்தம் ஆம்=பிரஹ்மத்தின் சத்திகள் அநேகமாம்;—அதைக்கண்டு பிடித்திடல்=அவைகளைக் கண்டறிந்திடல்— கூடாது=(ஒருவருக்கும்) கூடாது:—பாவு பூதங்கள் கண்ட=எங்கும் விரிந் துள்ள ஆகாசாதி பூதங்களைக்கண்டு அநுமானித்த—அநுமானத்தால்=இலி ங்கஞானத்தால்—பலருக்கும் வெளி ஆம்=யாவர்க்கும் (அச்சத்திகள்) வெளி யாகும்.—எ - று.

சத்திகள் காரியத்திற்கு முன் ஒருவானு மறியக்கூடாமையின் காரிய ரூபமான லிங்கத்தால் அறியலாயினவென்பதாம். "பிரம சத்திக ளநந்த மாம்" எ - கு, உ - ம், வாசிட்டம்,

முழுதுசத் தியுமாய்ப் புராணமா யென்று முடிவறு பிரமமா வது தான், பழுதின்ஞா னிகடம் மனமலா தில்லை பாமமா மிதிலிலா தில்லை, பெழுதருஞ் சத்தி யாவுமா யிலங்கு மிவைகளோர் கால மொன் றுளதாம், வழுவிலாப் பிரம முடையசிற் சத்தி மறிதரு மூடல் களிற் றோன் றும்."—எ - ம்,

"காற்றிலே யசைவுங் கல்லிலே திடமுங் கனலிலே சூடும்வான் றனிலே, தோற்றலா மையுநன் னீரிலே நெகிழ்வுந் தொலைவுறு மாய் விலே மாய்வு, மூற்றமாம் விதையின் மரங்களும் போல வுள்ளுறை பிரமசத் திகடா, மாற்றல்சால் காலதேசசித் திரத்தா லவனியிற் சாலி போற் றோன் றும்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூ)

[சத்திக ளநுமானத்தா லறியற்பாலன வல்லது, பிரத்தியட்ச மாகா வென்பதைத் திருஷ்டாந்தமுகமாக வற்புறுத்துகின்றார்.]

காரி யங்களுஞ் சத்தியா தாமுங் காணுமற் றதுமாயம்
பாரி னின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர் கண்காணும்
வீரி யந்திகழ் வித்தையா யினசத்தி வெளிப்படா ததுபோலே
பேரி யற்பிர மத்துக்கு முலகுக்கும் பிறிதுசத் திகளுண்டே. (கூ)

இ - ள். பாரில் நின்ற மாயாவியும்=பூமியின்கண் நிற்கின்ற இந்திரசால மறிந்தவனும்,—சேனையும்=(அவன் இந்திரசால சத்தியிஞல் ஆகாசத்தின் கட் டோற்றுவிக்கின்ற கந்தர்வ) சேனைகளும்—பார்ப்பவர் கண்காணும்= பார்ப்பவர்களுடைய கண்களுக்கு வெளியாகும்:—வீரியம் திகழ்=பராக்கிரம முடையதாய் விளங்குகின்ற—வித்தை ஆயினசத்தி=இந்திரசால வித்தை ரூபசத்தியானது—வெளிப்படாது=(பார்ப்பவர் கண்களுக்கு) வெளியாகக் காணப்படாது;—அதுபோலே=அத்திருஷ்டாந்தம் போலவே,—சத்தி காரி யங்களும்=மாயாசத்தியின் காரியங்க (ளான ஆகாசாதிப்பிரபஞ்சங்க) ளும் —(சத்தி) ஆதாரமும்=மாயாசத்திக் காசிரயமான பிரஹ்மமும்—காணும்=

(பார்ப்பவர்க்குக்) காணப்படும்;—மற்றது மாயம்=(காரியத்திற்கும், ஆதாரத்திற்கும் விலட்சணமான) சத்தியானது காணப்படாது—பேர் இயல் பிரமத்துக்கும்=மஹத்துவமான சுபாவமுடைய (ஆதாரமாகிய) பிரஹ்மத்திற்கும்,—உலகுக்கும்=(காரியமாகிய) சகத்திற்கும்—பிறிது சத்திகள் உண்டு=விலட்சணமாக அநந்த சத்திகளுளவாம்.—எ - று. (கூஎ)

**["மாயை யென்பது பிரஹ்மத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே;
மாயையென்பதும் பிரஹ்மமுமொன்றெனின் வஸ்துவும் பொய்
யாமே" என்று கூ - ம் செய்யுளில் சீடன் வினவிய
வினவிற்கு உத்தரங் கூறுகின்றார்.]**

சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனு மாயாவி
வித்தை காட்டிய விந்திர சாலம்பொய் வித்துவான் மெய்போலப்
புத்தி மைந்தனே சத்திமா னுகிய பூரண வான்மாவின்
வத்து நிர்ணயஞ் சொன்ன திட்டாந்தத்தின் வழிகண்டுதெளிவாயே.

இ - ள். சத்தி=(இந்திரசால) சத்தியானது—சத்தனைத் தவிர=(அதையுடையவனை) இந்திரசாலக்காரனைத் தவிர—வேறு அன்றுகாண்=பின்னமல்ல.—சத்தன் ஆம் மாயாவி=சத்தியுடையவனை இந்திரசாலக்காரன்—வித்தைகாட்டிய=இந்திரசால வித்தையாற் றோற்றுவித்த—இந்திரசாலம் பொய்=இந்திரசாலம் பொய்யாய்,—வித்துவான் மெய்போல=இந்திரசாலக்காரன் மெய்யாயிருப்பது போல—புத்தி மைந்தனே=அறிவுடையமைந்தா—சத்திமான் ஆகிய=சர்வசத்திமானுகிய—பூரண ஆன்மாவின்=பரிபூரண ஆன்மாவினுடைய—வஸ்து நிர்ணயம்=வாஸ்தவநிர்ணயத்தை—சொன்ன திட்டாந்தத்தின் வழி=சொல்லிய திருஷ்டாந்த வாயிலாக—கண்டு=(இந்திரசாலியினுடைய இந்திரசால சத்தியைப்போல அநிர்வசனீய சொரூபமாகிய மாயாசத்தியும் பிரஹ்மத்திற்குப் பின்னமல்லாமையின், வஸ்துவுந் தொய்தமல்ல. இந்திரசாலம் பொய்யாய், இந்திரசாலி மெய்யாயிருப்பது போலப் பிரபஞ்சம் ஓரவத்தையிற் கண்டது மற்றோரவத்தையிற் காணுதலின் அசத்தியமென்றும், பிரஹ்மம் அசங்கமாதலால் அவைகளோடழியாமல் சாட்சியாயிருத்தலின் சத்தியமாமென்றும்) அறிந்து—தெளிவாய்=(பின்னமெனின் வஸ்துவுந் தொய்தமாமே, அபின்னமெனின் வஸ்துவும் மித்தையாமே என்னும்) சந்தேக மொழிவாயாக.—எ - று.

"புத்திமைந்தனே" என்னுஞ் சம்போதனையில், புத்தியென்னும் விசேஷணந்தந்தது பொருணிச்சயத்திற்கு முக்கியகாரணமான அறிவினையுடையையாதலால், நினக்கஃதரிதல்ல வென்பதைக் குறிப்பித்தற்கு என்க. "பூரணவான்மா" எ - து, பிரஹ்மத்தினுடைய பாரமார்த்திகரூபம், "சத்திமான்" எ - து, அதற்கே சோபாதிகரூபம் ஆம்.

கானற்சலத்தால் ஊஷரபூமி நனையாததுபோல மாயையால் பிரஹ்மத்தின்சொரூபம் ஹானியாகாது. மாயையும், மாயாகாரியப் பிரபஞ்சமும் பிரஹ்மமேயல்லாமல் வேறில்லை என்பது கருத்து. (கூஅ)

(237) [முன் அநுமானத்தாற் சாதித்த சத்தியை இன்னும் சங்கித்து உணர்த்துகின்றார்.]

இல்லை யாகிய சத்தியை யுண்டென்ப தெப்படி யெனக்கேட்கில்
புல்லை யாதியா மசேதனப் பொருளெலாம் பூத்துக் காய்ப்பனபாராய்
நல்லை யாமக னேயதிற் சிற்சத்தி நடந்திடா திருந்தக்கால்
தொல்லை யாய்வருஞ் சராசர வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறுமே.

இ - ள். இல்லை ஆகிய சத்தியை=(பிரஹ்மத்தைத் தவிர) வேறில்லை யென்னுஞ் சத்தியை—உண்டு என்பது=உண்டென்று கூறுவது—எப்படி எனக்கேட்கில்=எங்ஙனமென்று நீ வினவிடில்,—புல்லை ஆதி ஆம்=புல் முதலாகிய—அசேதனப்பொருள் எலாம்=அசேதனமாகிய பொருள்களனைத்தும்—பூத்துக் காய்ப்பன பாராய்=(புஷ்பிக்குங் காலத்திற்) புஷ்பித்துக் (காய்க்குங் காலத்திற்) காய்க்கும் விசித்திரங்களைப்பார்.—நல்லை ஆம் மகனே=நற்குணங்களையுடையையாகிய மைந்தா—அதில் சிற்சத்தி=அவ்வப்பொருள்களிற் பிரஹ்மத்தின் சத்தியானது—நடந்திடாது இருந்தக்கால்=சஞ்சரியாதிருந்தால்—தொல்லை ஆய்வரும்=அநாதியாய் வரும்—சர அசர உயிர்க்கு எலாம்=சராசரமாகிய வுயிர்களனைத்திற்கும்—சுபாவங்கள் வேறு ஆம்=இயற்கைகள் வேறாய்விடும்.—எ - று. (கக)

[இன்னும், சரவுயிர்களிடத்துள்ள சத்தி விசித்திரத்தையும், அஃதில்லாவிடிற் பிரபஞ்ச சுபாவம் மாறுபடுமென்பதையும் விரித்துணர்த்துகின்றார்.]

கருப்பை முட்டையுட் பறவைகள் பலநிறங் கலந்தசித் திரம்பாராய்
அருப்ப மாஞ்சத்தி நியமமில் லாவிடி லரசிலா நகர்போலாம்
நெருப்பு நீரதாங் கசப்புமே மதுரமா நீசனு மறையோதும்
பொருப்பு மேகமாங் கடலெலா மண்களாம் புவனமிப் படிப்போமே.

இ - ள். கருப்பை=கருப்பாசயத்திற் (கட்டுப்பட்டுள்ள)—முட்டையுள்=முட்டைக்குள் (சலமயமாயிருந்தகரு)—பறவைகள்=(பின்) பறவைகளாய்—பலநிறம் கலந்த=பற்பலவர்ணங்களோடுங் கூடிவந்த — சித்திரம் பாராய்=ஆச்சரியத்தைப்பார்.—*அருப்பம் ஆம்=அருவமாகிய—சத்தி நியமம் இல்லாவிடில்=சத்தியினது அங்கீகாரம் (அல்லது, நிச்சயம்) இல்லையாயின்,—அரசு இலா நகர் போல் ஆம்=அரசனில்லாத நகரம்போல (ச் சகல பிரபஞ்ச சுபாவமும்) மாறுபடும்;—[அஃதெங்ஙனெனில்,] நெருப்பு நீரது ஆம்=(உஷ்ணசுபாவமான) அக்கினி சலம்போல (ச் சீதளசுபாவம்) ஆம்,—கசப்பு மதுரம் ஆம்=கைப்பு (ச் சுபாவமுடைய வேம்பு) மதுரமுடையதாம்,—நீசனும் மறை ஓதும்=(வேதாத்தியயனத்திற்கு வெகுதூரமான) சண்டாளனும் வேதாத்தியயனஞ் செய்வன்,—பொருப்பு மேகம்ஆம்=(அசஞ்

* அருவம் "அருப்பம்" எனத் திரிந்தது, காவியம் காப்பியமென்றாற்போல் என்றறிக.

ச்ல சுபாவமுடைய) பருப்பதங்கள் மேகங்கள்போல (ச் சலனசுபாவங்களை யுடையன) வாம்,—கடல் எலாம் மண்கள் ஆம்=(இட்சு, க்ஷீராதிசுபாவங்களை யுடைய) சமுத்திரங்களெல்லாம் மண்களாகும்;—புவனம்=சகத்தானது—இப்படிப்போம்=இங்ஙனம் (தத்தஞ்சுபாவ) மாறிப்போம்.—எ - று.

பிரத்தியட்சப்பிரமாண சித்தமான அக்கினியாதிகளின் சொரூபம் பிரதிபந்திக்கக் கூடாமையின், மணிமந்திராதிப் பிரதிபந்தமும் நிர் விஷயமாம் ஆதலால், சத்திமானைப்பார்க்கிலும் பின்னமாகப் பிரதிபந்தத்தின் விஷயமான சத்தியை ஒப்பவேண்டுவதுபோலப் பிரஹ்மத்தினும் பின்னமாகச் சத்தியொப்பவேண்டுமென்பது கருத்து.

மூட்டை கருப்பாசயத்திற் கட்டுப்பட்டுள்ளதென்பதற்கு, உ - ம், சாங்கிய சித்தர் திருவாக்கு,

"கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன் - உருப்பெற்றூல்
ஊட்டி வளர்க்காளே வோகெடுவா யன்னுய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

"நியமமில்லாவிடில்" எ - கு, உ - ம், ஈசுரகீதை,

"உற்பவ சராசரவி யோனியொரு நாலும்
பற்பலவ தாகமொழி பாதலம னேத்தும்
மெப்புவன மும்பிரம ரண்டமவை யாவும்
இப்படியி ருக்குமது வென்றனிய மத்தால்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூ00)

(238) [இவ்வாறு, பிரஹ்மத்திற்குப் பின்னமாகச் சத்தி உண்டென்று ஒப்பப்படுமாயின், அத்வைதபாவனை கூடாமையின் மோட்சப் பிரதிபாதனம் பயனில் கூற்றென்றும்; ஆகலின், அதனை விர்த்தியுபாயங் கூறவேண்டுமென வினுதல்.]

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய வடிவென்றும் சேர்க்கு நாமரூ பப்பயிர் வித்தென்றுஞ் செப்பிய சிற்சத்தி [ரூப் பேர்க்கு மாறெங்ஙன் பிறித்திடப் படாதெனிற் பிரமபா வனையொன் பார்க்கு மாறெங்ஙன் முத்தியா குவதெங்ஙன் பரமசற் குருமூர்த்தி.

இ - ள். ஆர்க்கும்=யாவர்க்கும்—காணவும் அறியவும் படாது என்றும்=(வாகியமான கட படாதிகளைப்போலக்) காணவும், (ஆந்தரவிஷயமான சுகதுக்கங்களைப்போல) அறியவுங் கூடாதென்று, கூசு - கூஎ - ம் செய்யுளிலும்,—அவாச்சிய வடிவு என்றும்="அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையால் அவாச்சிய வடிவாதும்" என்று, கூடு - ம் செய்யுளிலும்,—

நாமரூபப் பயிர் சேர்க்கும் வித்து என்றும்=நாமரூபமாகிய பயிர்களை யுண்டாக்காநிற்கும் விதையென்று, கூகூ – க00 - வது செய்யுளிலும்—செப்பிய சிற்சத்தி=சொல்லியமாயையை—போக்கும் ஆறு எங்ஙன்=நிவிர்த்திக்கும் வழியெப்படி?—பிறித்திடப்படாது எனில்=நிவிர்த்திக்கக் கூடாதென்று சொல்லில்,—பிரமபாவனை ஒன்றுப்பார்க்கும் ஆறு எங்ஙன்=பிரஹ்மத்தியானத்தால் (அல்லது, பிரஹ்மவிசாரத்தால்) பிரஹ்மத்தை ஏகமாகப் பாவிக்கும் விதமெப்படி?—முத்தி ஆகுவது எங்ஙன்=(சர்வனர்த்தநிவிர்த்தி, ஆநந்தப் பிராப்தி ரூபமான) மோட்சமுண்டாவதெப்படி—பரம சற்குருமூர்த்தி=யாவர்க்கு மேலான சற்குருவே.—எ - று. (க0க)

(239) [மாயா நிவிர்த்திக்கு உபாயங் கூறல்.]

வாயுத் தம்பனஞ் சலத்தம்ப னம்மணி மந்திர மருந்தாலே
தேயுத் தம்பனஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத் திகளெங்கே
நீயச் சச்சிதா நந்தமாய் வேறென்று நினைந்திடா திருப்பாயேல்
மாயச் சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற் காணுமே. (க0உ)

இ - ள். வாயுத் தம்பனம்=வாயுஸ்தம்பனமும்,—சலத்தம்பனம்=சலஸ்தம்பனமும்,—தேயுத் தம்பனம்=தேயுஸ்தம்பனமும்—மணிமந்திர மருந்தாலே செய்திடில்=மணிமந்திர வவுடதங்களினாலே (மந்திரவாதியாற்) செய்யப்படுமாயின்,—அதில் அதில்=அவ்வப்பொருள்களில் — சிறந்த சத்திகள் எங்கே=விசேஷமாகவுள்ள (சலன, திரவ, தாக சத்திகள் நாசம், அல்லது திரோதானமாய் நிவிர்த்தித்துப் போமேயல்லது) எங்கே காணப்படும்;—(அதுபோலவே) நீ அச் சத் சித் ஆநந்தம் ஆய்=நீயும் (மாயைக்காதாரமாகிய) சச்சிதாநந்தாத்மகமான பிரஹ்மமாய்—வேறு ஒன்றும் நினைந்திடாது இருப்பாயேல்=அந்நியமொன்றையும் நினையாதிருப்பாயாயின்,—மாயச் சத்திபோம்=(அசத்துச்சட துக்காத்மகமான) மாயாசத்தி (மீண்டெழாமல்) நிவிர்த்தியாய்விடும்;—ஈது அன்றி=(ஜநநமரணரூபமான மாயாநிவிர்த்திக்கு) இத்திருசிய * விஸ்மரண மல்லாமல்—மந்திரம்=குப்தமான வசனம்—மறைகளில் காணும்=சுருதிகளில் யாம் கண்டிலேம்.—எ - று.

சாதன சதுஷ்டய சம்பன்னனான அதிகாரி மாயையை நிவிர்த்தித்தற்கு முக்கியோபாயமான திருசியவிஸ்மரணமே சுருதிகளால் இரகசியமாகக் கூறப்பட்டிருக்கின்றதென்பது கருத்து.

"வேறென்று நினைந்திடா திருப்பாயேல், மாயச் சத்திபோம்" எ - று, உ - ம், வாசிட்டம்,

"பிறப்பிறப்பாம் பெயருடைய விந்த மாயைப்
பெருமையினை முடிவுபெறப் பேச வொண்ணு
வறப்பெரிய தன்மனதை வென்றான் மாளு
மல்லதொரு வகையாலு மகற்ற லாகா

---

* விஸ்மரணம்=நினைவின்மை.

சிறப்புடைய வன்மாயை விரிவி னுள்ள
சித்திரந்தோன் றிடவுனக்குச் செப்புங் காதை
மறப்பறுசிந் தையனுகிக் கேட்டி யென்னு
மனுகுலநா யகனுக்கு வசிட்டன் சொல்வான்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கoஉ)

(240) [அக்கினியின் கண்ணுள்ள தாகசத்தி அதற்குப் பின்னமல்ல வெனின், மணிமந்திராதிப் பிரதிபந்தம் நிர்விஷயமாம்; ஆதலால், அதுபின்னமாவதுபோல மாயையும் பிரஹ்மத்திற்குப் பின்னமென்றும், காரியத்தால் அநுமேயமென்றுங் கூறப்பட்டிருப்பதால், காரியமான திருசியவிஸ்மாணத்தால் காரணமான மாயாசத்தி எங்ஙனம் நிவிர்த்தியாமென்று சீடன் கொள்ளு மாசங்கையை அறிந்து சிருஷ்டிக்குமுன் அவ்வியாகிருதமாயிருந்த சகத்து சிருஷ்டியவசரத்தில் நாமரூபமாகப் பிரகடமாயிற்று; பிரஹ்மத்தின்கண் யாதொரு அசிந்திய மாயையுண்டோ அஃதவ்வியாகிருதநாமமுடையதாம் என்னும்பிருகதாரண்ணியசுருதியால் காரியகாரணங்கள் அபேதமாகலின், காரியமாகிய திருசிய விஸ்மாணத்தால் காரணமாகிய மாயாசத்தியினிவிர்த்திகூடும் என்பதைத் திருஷ்டாந்த முகமாகக் கூறுகின்றர்.]

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் விவகரித் திடவேண்டில்
நாவி ஞன்மண்ணைக் குடமென்ப ரக்குட நசிப்பது நாவாலே
பாவு நாமரூ பங்களை மறந்துமண் பார்ப்பதே பரமார்த்தம்
சீவ பேதகற் பிதங்களை மறந்துநீ சின்மய மாவாயே. (கoஙு)

இ - ள். மேவும் மண்ணில்=திரளையான மண்ணில்—அவ்வியத்தமே=(குலால வியாபாரத்திற்குமுன்) அப்பிரகடமாயிருந்த கடசத்தியே (வெளிப்படாததா யிருந்த வென்றபடி)—வியத்தம் ஆம்=(குலால வியாபாரத்திற்குப் பின்) பிரகடமாய்க் கடமென்னும் நாமத்தையடையும்;—(அதுபோலச் சிருஷ்டிக்குமுன் * அவ்வியாகிருத நாமமுடையதாயிருந்த இந்த ஆகாசமுதலிய சகத்தே பின் சிருஷ்டியவசரத்தில் நாமரூபங்களாகப் பிரகடமாயின; இங்ஙனங்கூறிய பிருகதாரண்ணிய சுருதியின் ரூற்பரியம் காரியகாரணங்கள் அபேதமாகலின், காரியமான திருசிய விஸ்மாணத்தால் காரணமான மாயை நிவிர்த்தித்துப்போமென்பதாம்.) [சத்தியின் காரியமான கடம் மித்தை, சத்தியின் ஆதாரமான மண் சத்தியம் என்னும் சாந்தோக்கிய சுருதியின் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றர்.] விவகரித்திட வேண்டில்=(கடத்தை) வியவகரிக்கவேண்டின்,—நாவினால்=வாக்கினால்—மண்ணைக் குடம் என்

* அவ்வியாகிருதம்=அப்பிரகடம்.

பர்=(மண்ணேத்தவிரக் கடமின்மையிஞன்,) மண்ணேத்தானே கடமென்று வியவகரிப்பர்;—அக்குடம் நசிப்பதும் நாவாலே=அக்கடம் நசித்ததென்னும் வியவகாரமும் வாக்குமாத்திரத்தாலே (உளதாம்,)—(இப்படிக் காரியமான கடம் உபாதான காரணமான மண்ணேத்தவிர வேறின்மையின், உண்டென்பதும், நசித்ததென்பதும் வாக்குமாத்திரமாதலால்,) பாவும் நாம ரூபங்களே மறந்து=சத்தியின் விரிவாகுங் கடமென்னும் நாமமும், (* பிருதுபுத்நோதராகாரமான) உருவமும் ஆகிய இவைகளே (மித்தையென்று) உபேட்சித்து—மண் பார்ப்பதே=(கடம்) மண்ணென்று பார்ப்பதே—பரமார்த்தம்=பரமார்த்தமாம்.—(அதுபோல ஆகாசமென்பது முதலிய நாமமும், அவகாசமென்பது முதலிய உருவமும் அஸ்திபாதிப் பிரியரூபமான பிரஹ்மத்தைத்தவிர வேறின்மையின், சகத்தென்பது வாக்குமாத்திரமாம் ஆகலின்,) சீவபேத கற்பிதங்களே=சீவத்துவிதமாகிய (நாமரூப) கற்பனைகளே—மறந்து=(மித்தையென்று) உபேட்சித்து—நீ சின்மயம் ஆவாய்=நீ (சதாநந்த) சின்மயனுவாய்.—எ - று.

(241) தாஷ்டாந்த ஞானத்தின் பொருட்டுத் திருஷ்டாந்தத்தை விரிக்குதும்:—பிருதுபுத்நோதராகாரமான கடம் காரியம்: சத்தாதி ஐந்து குணங்களோடு கூடிய மண் ஆதாரம்; சத்தி இவ்விரண்டற்கும் விலட்சணம். என்னே? சத்தியின்கண் பிருதுபுத்நாதி காரியதர்மமும் இல்லே, சத்தமுதலான காரண தர்மமுமில்லே; ஆகலான், சத்தி இரண்டற்கும் விலட்சணமாம்; ஆனுல் அஃதேப்படியுளதெனில்? எப்படியோ அப்படியுளது; அப்போத சிந்தியத்தன்மைய தென்றுமாலோவெனின்:—பேதமென்றுவது, அபேதமென்றுவது, அசிந்தியமென்றுவது சொல்ல யோக்கிய முடைய தன்று. காரணசொருபத்தினும் பின்னமாகச் சத்தியிருக்குமேல், காரண சொருபத்தைப்போலத் தோன்றுததேனெனின்;—மண்ணின் சத்தி கடாதி காரியோற்பத்திக்குமுன் மண்ணின்கட் கூடமாயிருந்ததால் தோற்றவில்லே என்க. ஆனுல் பின்னருந் தோன்றுதெனின்:—நவநீத முதலியவை மதநத்தாற் ரூற்ரு நிற்பதுபோலக் குலாலாதிகளின் சகாயத்தாற் கடாதியாகாரத்தை யடையும். உபாதானகாரணத்தினும் பின்னமாகச் சத்தியின் காரியமுண்டென்றல் காரியகாரணங்களின் பேதம் ஏன் றேற்றவில்லேயெனின்:—அவிவேகசனங்கள் பிருதுபுத்நாதி ரூபமான காரியத்தையும், சத்தபரிசாதி குணரூபமான காரணபூதமாகிய மண்ணேயும் ஒன்ரூச் சேர்த்துக் கடமென்று சொல்லுவதால் காரியகாரணங்களின் பேதந் தோற்றவில்லே என்க; அஃத விசாரமென்பது; என்னே? குலால வியாபாரத்திற்குமுன் எத்துணேக்கூறுண்டோ அத்துணேக்கூறுங் கடமல்லாமையின் என்க. ஆனுல் யாது கடமெனின்:—குலாலவியாபாரத்திற்குப் பின் பிருதுபுத்நோதராகாரத்திற்கே கடசத்தத்தின் வாச்சியத்தன்மை யுசிதமாம். என்னே? சொல்லிய ஆகாரத்தினுற்பத்தியின் பின்னரே கடசத்தவியவகாரங்காண்டலின் என்க. மண்ணி

* பிருது=ஸ்தூலம், புத்நம்=வட்டவளவு, உதரம்=வயிறு, ஆகாரம்=வடிவு.

னின்று வேறுசெய்யின் கடம் காணப்படாமையின் மண்ணுக்குப் பின்னமு மல்ல: பூர்வம் பிண்டதசையிற் கடம் காணப்படாமையின், மண்ணுக்கபின் னமுமல்ல; ஆதலால் சத்தியைப்போலக் கடமும் அநிர்வசனீயமேயாகலின், கடம் சத்தியின் காரியமாம். சங்கை:—சத்தியும், காரியமும் அநிர்வசனீய மாயின், சத்தியேன்றும், காரியமென்றும் பேதவியவகாரம் வருவானே னேனீன்!—அவ்வியத்தமாயிருந்தபோது சத்தியென்றும், வியத்தமானபோது கடமென்றுஞ் சொல்லப்படுகிறது; இது பிரசித்தமாகக் காணப்படவில் லையேயெனின்:—இந்திரஜால சம்பந்தியான மாயையும் மணிமந்திராதிப் பிரயோகத்திற்குமுன்னே பிரகடமாகாமல் மணிமந்திராதிப் பிரயோகத்தின் பின்னர்ப் பிரகடமாவதால் இது பிரசித்தமாமென்க. மாயையின் காரியமாத லால் கடாதி விகாரங்கள் மித்தையென்றும், விகாரங்கட் காதாரமான மண் மாத்திரமே சத்தியமென்றும் சுருதி கூறுகின்றது. இதற்கபிப்பிராயமேதோ வெனின்:—சத்தியும், காரியமும் ஒவ்வோர் காலத்தில் தோற்றுவதால் மித்தை, ஆதாரம் மூன்றுகாலத்தினுமிருப்பதால் சத்தியம் என்பதாம். காரியம் மூவகையேதுக்களால் அசத்தியமாம்; மூவகையேதுக்கள், அசத் தாய்த் தோற்றுகின்றதும், உற்பத்தி நாசமுடைத்தாய்க் காணப்படுகின்றதும், உற்பத்தியானபின்னர் வாக்கிந்திரியத்தாற் சனியாநின்ற நாமஸ்வரூபமாக வியவகரிக்கப்படுகின்றதும் ஆம்.

(242) அன்றியும், கடம் நசித்தும் நாமம் நசியாது: மநுடருடைய முகங்களிலே பின்னருமிருக்கின்றது; இதனுல் ஏதாயிற்றெனில்? விவாதத் துக்கு விஷயமான கடம் சத்தரூபமாகைக்கு யோக்கியமாம், கடசத்தத்தால் வியவகரிக்கப்படுதலின், கடசத்தத்தைப்போல என்னும் அநுமானத்தினு லுங் கடம் மித்தையாம்.

(243) இனி விகாரத்திற் கதிஷ்டானரூபமான மண்ணின் சத்தியத் தன்மையின் அநுமானமாமாறு:—மிருத்திகை ரூபமான வஸ்து சத்தியமா கைக்கு யோக்கியமாம்; மூன்று காலத்தினும் ஒரேஆகாரமுடையதா யிருப் பதால், ஆன்மாவைப்போல: மிருத்திகை ரூபமான வஸ்து சத்தியமாம், வாஸ் தவமாவதால், ஆன்மாவைப்போல என்க.

(244) பரிணமம், ஆரம்பம், விவர்த்தம் எனக் காரியோற்பத்தி மூவகை யுள், சித்தாந்தத்தில் விவர்த்தபட்சம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், கூரீரம் போல அந்நியாவஸ்தையை யடையாநின்ற மிருத்திகை, சுவர்னங்கள் விவர்த் தத்திற்கு எப்படித் திருஷ்டாந்தமாமெனின்:—கூரீரமானது பூர்வ ரூப பரித் தியாக பூர்வகமாக அந்நியாவஸ்தையை யடையாநிற்பது உண்மையாகலின், பரிணமமேயாம். மிருத்திகை, சுவர்னங்கள் அந்நியாவஸ்தையை யடையாநிற் பினும் பூர்வ ரூபத்தைவிடாமையின், விவர்த்தத்தன்மையுமாம். மிருத்திகை, சுவர்னங்களைப் பரிணமமும், விவர்த்தமுமாக அங்கீகரித்ததுபோல ஆரம்ப மாகவும் ஏன் அங்கீகரிக்கவில்லை யெனின்:—ஆரம்பவாதி மதத்தில் கார ணத்துவ, காரியத்துவ ரூபவியவகார பேதத்தாற் காரியகாரணங்களின் பேதந்தோற்றுகின்றது. ஆதலால், காரணரூபமாகவும், காரியரூபமாகவும்

காரணம் ஒன்றேயிருப்பதால் காரியத்தின் சொரூபத்தில் காரணத்தின் இருவகைக் குணத்தன்மையுண்டாகும். எப்போது காரணத்தில் இருவகைக் குணத்தன்மை யுண்டாயிற்றோ அப்போது காரணகதமான சத்த, பரிச, ரூப, ரச, கந்தகுண முதலிய தர்மங்களுக்கும், காரியகதமான சத்தாதிகுண முதலிய தர்மங்களுக்கும் இருவகைக் குணத்தன்மையாகிய பின்னத்தன்மை யுண்டாதல்வேண்டும். ஆனாலும், இவை தந்துவின் ரூபாதிகளென்றும், இவை படத்தின் ரூபாதிகளென்றும் இப்படிப்பட்ட வியவகாரங் காணப்படவில்லை. காரியத்துவ, காரணத்துவ வியவகாரபேதத்தால் எங்ஙனம் காரிய காரணங்களினுடைய அபேதஞ் சித்திக்கவில்லையோ அங்ஙனம் தந்து அல்லது, மிருத்திகை முதலிய காரணங்களின் பின்னமாகப் படம், கடம் முதலிய காரியங்கள் தோற்றுமையின், காரியகாரணங்களின் பேதமுஞ் சித்திக்கமாட்டாது. பின்னையோவெனின் :—காரியகாரணங்களின் பேதங் கற்பிதம் : வாஸ்தவம் அபேதமாம் ; ஆதலால், ஆரம்பவாத மசங்கதமாம் என்க. சாந்தோக்கியத்தின் ஆறும் அத்தியாயத்தில் மண், பொன், இரும்பென்னும் மூன்றும் விவர்த்தத்திற்குத் திருஷ்டாந்தமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால், பூதபௌதிகரூபமான சர்வவஸ்துக்களிலும் காரியத்தின் மித்தியாத்தன்மையை அடிக்கடி யநுபவித்து அதனை அவ்வநுபவஜந்ய சம்ஸ்காரரூபமான வாசனைக்கு விஷயமாக்கல் வேண்டும்.

(245) இங்கே ஈதிகசியம் :—இரச்சுவைப்போல மிருத்திகை, சுவர்னங்களை அதிஷ்டானமாக வொப்பிக் கடம், குண்டலாதிகளை விவர்த்தமென்றது ஸ்தூல திருஷ்டியால் ; சூட்சுமதிருஷ்டியால் விசாரித்துப்பார்க்கின், மிருத்திகை முதலியவற்றிற்குக் கடாதிகளின் அதிஷ்டானத்தன்மை பொருந்தாது. என்னை ? சித்தாந்தத்தில் யாதொரு கற்பிதவஸ்துவும் அந்நியகற்பிதங்கட்கு அதிஷ்டான மென்னல் பொருந்தாது. பின்னையாதெனின் :—சேதனமே சர்வத்திற்கும் அதிஷ்டானமாம். மிருத்திகை முதலியவை தாமே கற்பிதமாகலின், கடாதிகட்கு அதிஷ்டானமென்னல் பொருந்தாது. எப்படி இரச்சு வுபகிதசேதனம் கற்பித சர்ப்பத்திற்கு அதிஷ்டானமோ அப்படி மிருத்திகை, சுவர்ன முதலிய தத்தம் உபாதானங்களால் உபகிதமான சேதனம் கடம், குண்டல முதலிய காரியங்கட் கதிஷ்டானமாம். ஆதலால், கடாதிகளில் விவர்த்தத்தன்மை நிர்விவாதத்தால் சித்தமாம். (கoஉ)

(246) [சுத்தியிலாரோபிதமான வெள்ளி சுத்திஞானத்தால் நிவிர்த்தியாவதுபோல, மாயாமயமான சகத்தும் அதிஷ்டான ஞானத்தால் நிவிர்த்தியாகாமற் பூருவம்போலவே தோற்றுவதால் அஃதெவ்வாறு நிவிர்த்தி யாமென் றட்சேபித்துச் சுத்திராஜதம் நிருபாதிகப் பிரமையாகலின், அது அங்ஙனமாம் : சகத்துச் சோபாதிகப்பிரமையாகலின், இதில் மித்தியாத்துவபுத்தி யுளதாதலே நிவிர்த்தி யானதா மென்று திருஷ்டாந்த முகத்தாற் கூறுகின்றார்.]

பூரிக் குங்கன சச்சிதா நந்தத்திற் பொய்சடந் துயர்மூன்றும்
தூரத் தாயினுந் தோன்றுபாழ் விபரிதந் தூடைப்பதெப் படியென்றால்

நீரிற் றோன்றுந்தன் னிழறலை கீழதாய் நின்றலை யினுநோய்ப்
பாரிற் றோன்றிய தன்னேநோக் கிடிலந்தப் பாழ்நிழல் பொய்யாமே. ()

இ - ள். பூரிக்கும்=(பொன்னுனது பூஷணத்தைப்போலச் சர்வத்தையு) நிறைத்துநிற்கும்—கன சத் சித் ஆநந்தத்தில்=பரிபூரணமாகிய சச்சிதாநந்த ரூபப்பிரஹ்மத்தில்—பொய் சடம் துயர் மூன்றும்=அசத்துச் சடதுக்காத்மகமான மாயாம்ச மூன்றும்—தூரத்து ஆயினும்= (நீரிலே புழுதியும், கனலிலே தோயமும்போலச்) சேய்மைத்தாயினும், (இல்லையாயினுமென்றபடி)—தோன்று பாழ் விபரிதம்=தோற்றுநின்ற அபாவரூபமான விபரீதத்தை—துடைப்பது=(தோற்றுமல்) நாசமாக்குவது—எப்படி என்றால்=எவ்வித வுபாயத்தாலென்று நீ ஆட்சேபித்தால்—நீரில் தோன்றும் தன் நிழல்=தடாகசலத்திற் றோன்றுநிற்குந் தன்னுடைய சாயையானது—தலை கீழதாய்=அதோமுகமாய் — நின்று அலையினும்=நின்று சலிப்பினும் — நேர் ஆய்=ஊர்த்தமுகமாய்—பாரில்தோன்றிய=(தடாகக்) கரையினின்று விளங்கிய—தன்னேநோக்கிடில்=தன்னே நாடிடில், — அந்தப் பாழ் நிழல்=அவ்வபாவமான அதோமுகச்சாயை—பொய் ஆம்=மித்தையாம்.—எ - று.

அதுபோலக் காரணஞானத்தாற் காரியம் மித்தையென்னும் ஞானமூளதாம்; இவ்வாறுளதாகும் ஞானத்தையே அத்வைதவாதத்திற் புருஷார்த்தமென் றெப்பினர் என்பது எஞ்சிநின்றது.

தடாகசலத்தில் அதோமுகமாகச் சாயைதோற்றினும் வாஸ்தவமாகப் புருஷன் அப்படிக்கில்லாததுபோலச் சச்சிதாநந்தப் பிரஹ்மத்தில் அநிருத சடதுக்கரூபமான சகத்துத்தோற்றினும் வாஸ்தவமாக இல்லை. யாரொரு புருஷருக்கும் அதோமுகப் புருஷச்சாயையினிடத்து அது சத்தியமென்னும் அபிமானம் யாதொருதேசத்திலும், யாதொருகாலத்திலுங் காணப்படவில்லை. அப்படிச் சோபாதிகப்பிரம [ஜீ] ஸ்தலத்தில் சத்தியபுத்தியின் நாசமே ஞானத்தாலுளதாகும் நிவிர்த்தியெனக் கொள்ளற்பாலதாம் என்பது தாற்பரியம். (கo சு)

(247) [காரணமிது காரியமிது வென்றும், பிராரத்தழள்ளவில் காரியத்தோற்ற மபாவமாகா தாகலின், அதனை மித்தையென் றநாதரஞ்சேய்து காரணமாத்திரமாயி நிற்றியென்று கூறுகின்றார்.]

ஞானங் காரண மறிபொருள் காரிய நாமரூ பப்பேய்கள்
ஆன தெப்படி யழிந்த தெப்படியென வாய்குதல் பலனன்றே
மான மைந்தனே தீர்க்கசொப் பனசகம் வந்ததும் பாராமல்
போன துங்கினை யாமலுன் போதமாய்ப் பூர்ணமா யிருப்பாயே.(கoரு)

இ - ள். ஞானம் காரணம்=அறிவாகிய பொருள் காரணம்:— அறிபொருள் காரியம்=அறியப்படுவனவான பொருள்கள் காரியமாம்.—நாமரூபப்

பேய்கள்=நாமரூபங்களாகிய இப்பசாசங்கள் — ஆனது எப்படி=உண்டா குமா றெங்ஙனம்?—அழிந்தது எப்படி=(அத்தியந்தந் தோன்றுமல்) அழி யுமாறெங்ஙனம்—என ஆய்குதல் பலன் அன்று=என்று விசாரித்தல் பய னன்றும்;—[மற்றியாது பயனேனின்;—] மான மைந்தனே=பெருமை யுடைய மைந்தா—தீர்க்க சொப்பன சகம்=நீண்ட கனவென்னும் பிரபஞ் சம் — வந்ததும் பாராமல்=இன்னகாரணத்தினின்று இவ்வாறுண்டாயிற் றென்பதையும் விசாரியாமல்,—போனதும் நினையாமல்=அத்தியந்தந் தோன் றுமல் (என்னவுபாயத்தால்) நிவிர்த்தியாமென்பதையும் விசாரியாமல்—உன் போதம் ஆய் பூர்ணம்ஆய் இருப்பாய்=உனதான்மாவாய்ப் பரிபூர்ணமாகிய பிரஹ்மமா யிருக்கக்கடவாய்; (இதுவே பயனும்.)—எ - று.

"ஆனது, அழிந்தது" என்பன, இயல்பினுல் வந்த காலவழுவமைதி. அறிதல்காண் காரியம் என்றும் பாடம். பாலனுக்குப் பேய்போல அவி வேகதிருஷ்டிக்கு நாமவுருவங்கள் உண்மையாகத் தோற்றாவாகலின், அவ ற்றை "பேயி" எ - ம், "பன்மைப்பேயி, இயக்கங்காணுப்பொருள்" என்னுஞ் சுருதியாலும், பிராரத்தத்தாற் பிரதிபந்திக்கப்பட்டுள்ள விட்சேப ரூபமான அஞ்ஞானம்ஸமானது பிராரத்தமுள்ளளவில் தக்தபடம்போலத் தோற்றுவதல்லது யாதோருபாயத்தாலும் நிவிர்த்தியாகாதாகலானும், "ஆன தெப்படி யழிந்த தெப்படி யெனவாய்ததல் பலனன்று" என்றுங்கூறி னர். "தீர்க்க சொப்பனசகம்" எ - து, பிராரத்தமுள்ளளவுந் தோற்றாவாக லின். "சொப்பனம்" எ - து, தேசகால சாமக்கிரியின்றித் தோற்றாவாக லின்; அன்றியும், "சொப்பனம்" எ - து, எது கற்ப விசேஷணமுமாம். இதற்கு, உ - ம், வாசிட்டம்,

"பொய்ய தாமுயற் கொம்பினைப் பற்றவும் போக்கவு நினைப்பாரா
ரைய னேபர போதபூ ரணத்திலே யயலொன்று வருமாறென்
பொய்ய தாகிய வநேகபா வனையினைப் பொருந்தல்புன் பிறப்பாகு
மைய மின்றிய வேகபா வனையினி லழுந்துதல் பவந்தீர்தல்."—எ-ம்,

"எங்கே யெனினுந் தோன்றுமிந்த மனதைமுத்திச்
சங்கே தத்தா லுகந்தன்னிற் கூட்டினன்றும்."—எ - ம்,

"யாதினிற் றோன்றிய தென்றுமி யாதீதென்று மிறந்த நெறி யாதென்று மிறந்தாற் றோன்று, மாதலினுல் வன்றுயரின் சாலையான வவித்தை யெனுநோய்க்கு மருந் தருந்தச் செய்தால்."—

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கo)

(248) [பிரஹ்மஞானத்தின் நிடத்துவம் தோயீதத்தின் அநாதா வின் வாயிலாக வுண்டாவதால் சிரவணாதிகள் போலத் தோயீதமித்தை யென்னும் நிராதாவும் சிஞ்ஞாசுக்குக் கர்த் தவ்வியமென்று கூறுகின்றார்.]

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகினு லம்மட்டும் நிசத்தி லுள்விழிப் பார்வையா மிப்படி நிரந்தரப் பழக்கத்தால்

வசத்தி லுன்மன நின்றுசின் மாத்திர வடிவமா யிடின்மைந்தா
கசத்த தேகத்தி லிருக்கினு மாநந்தக் கடல்வடி வாவாயே. (கஅசு)

இ - ள். அசத்தில்=மித்தையான நாமரூபத்தில்—எம்மட்டு உண்டு=எவ்வள வெவ்வள வாதர முண்டோ—அம்மட்டும்=அவ்வள வவ்வள வாதரமும்—பராமுகம் ஆகினுல்=உபேட்சிக்கப் படுமாயின்,—அம்மட்டும்=அவ்வள வவ்வளவும்—நிசத்தில்=சத்தியரூபமான பிரஹ்மத்தில்—உள் விழிப்பார்வை ஆம்=அகமுகதிருஷ்டியுளதாம்.—(எவ்வள வெவ்வளவு பிரஹ்மதரிசனமா மோ! அவ்வள வவ்வளவு நாமரூபம் விடப்படும்.) [நாமரூபத்தின் அநாதரமும், பிரஹ்மதரிசனமுமாகிய இருவித அப்பியாசத்தின் பயன் கூறுகின்றார்.] இப்படி நிரந்தரப் பழக்கத்தால்=இங்ஙனம், நிரந்தரம் (நெடுங்கால மாதரத்தோடு கூடிச்செய்யும்) அப்பியாசத்தால்—மனம் உன் வசத்தில் நின்று—சின்மாத்திரவடிவம் ஆயிடின்=சேதனமாத்திர ரூபமாய் ஸ்திதிபெறில்,—மைந்தா—கசத்த தேகத்தில் இருக்கினும்=வெறுக்கத்தக்க துக்கமயமான தேகத்திலிருப்பினும்—ஆநந்தக் கடல் வடிவு ஆவாய்=நீ ஆநந்த சமுத்திரரூபமாவாய்.—எ - று.

ஆதரவு=அபிமானரூபமான ஆசை. "உள்விழிப் பார்வை" எ - து, பிரஹ்மதரிசனத்தை. எவ்வள வெவ்வளவு பிரஹ்மதரிசனமாமோ அவ்வள வவ்வளவு நாமரூபம் விடப்படும் என்னும் இதற்கு முன்னூலான பஞ்சதசியின் சுலோகார்த்தம் எஞ்சி நின்றதால் அதனை வருவித்தாம். சீவித்தவனுயிருந்தே முத்தனுவாயென்பார், "கசத்த தேகத்தி லிருக்கினு மாநந்தக் கடல்வடி வாவாயீ" என்றார்.

இவ்வாசிரியர் கூறினவாறே, பஞ்சதசியிற் கூறியிருப்பதுமன்றி வாசிட்டத்தும்,

"எத்தனையெத் தனைநீத்தா யகிலத்தைப் பரஞ்சுடரா யெறிக்குஞ் சோதி, யத்தனையத் தனைதோன்றும்"—

என்று கூறியிருப்பது காண்க.

மேலே, கஉக - வது செய்யுள் தொடங்கி இனிக்கூறப்படும் எண்வகையாநந்தங்களுள், இஃதத்துவிதாநந்தம் என்றறிக. (கஅசு)

(249) [ஆசாரியர் மாயாலட்சணங் கூறப்புகுந்த வாயிலாக அத்விதாநந்தஞ் சாதித்தலின், அகமகிழ்ந்த சீடன் ஆன்மாநந்தத்தை யறியுங் கருத்தினனுய் ஆன்மா சச்சிதாநந்த ஏக ரசமாஞல் சநுவ விருத்திகளிலும் சத்தும், சித்தும்போல ஆநந்தம் ஏன் விளங்கவில்லை யென வினுதல்.]

[வேறு.]

தானன்றி வேறொன்று மில்லாத பூரணச்
சச்சிதா நந்த குணமாய்
ஊனின்ற வுயிர்தோறு மொன்றுகு மென்றுலஃ
தொக்கின்ற படிகண்டிலேன்

நானென்ற சீவன்கள் சத்தான வகையொக்கு
ஞானங்கள் வெளிகண்டதால்
ஆனந்த மிதுபோல வெளியாக வுதியாத
வடைவேது குருநாதனே. (கoஎ)

இ - ள். குருநாதனே, —தான் அன்றி வேறு ஒன்றும் இல்லாத = தானல்லாமல் மற்றொன்றும் (பரமார்த்தமாகத் தன்கண்) இல்லாத (ஆன்மா) —பூரண சத் சித் ஆநந்த குணம் ஆய்=பரிபூரண சச்சிதாநந்த சுபாவமாய்— ஊன்நின்ற உயிர்தோறும்=தேகத்தின்கண் நான், நானென்று வியவகரித் துள்ள வுயிர்களோறும்-- ஒன்று ஆகும் என்றல்=ஏகரசமாக இருக்குமென்று கூறப்படுமாயின்,—அஃது ஒக்கின்றபடி கண்டிலேன் = (அவ்வான்மா) அங்ஙனம் பொருந்தாநின்ற தன்மையை யறிந்திலேன்.—[அதற்குக் காரணங் கூறுகின்றான்.] நான் என்ற சீவன்கள் = யான் (கண்டேன், உண்டேன்) என்று வியவகரிக்கின்ற சீவர்கள்—சத்து ஆன வகை ஒக்கும் = சத்தென்னுந் தன்மைகூடும்.—ஞானங்கள் வெளி கண்டது = ஞானங்கள் வெளியாகக் காணப்பட்டது ; — ஆநந்தம் = ஆநந்தமானது—இதுபோல = இச்சத்துஞ் சித்தும் போல—வெளியாக உதியாத = (சர்வவிருத்திகளிலும்) வெளியாகத் தோன்றுத—அடைவு ஏது = முறைமை யாது ?—எ - று. ஆல் = அசை.

" சச்சிதாநந்த குணமாய், ஒன்றதும் " என ஒட்டுக. சீவர்கள் சத்தல்லவாயின், வந்தியாசுதன்போல வியவகாரங் கூடாமையின், " நானென்ற சீவன்கள் சத்தான வகையொக்கும் " எ - ம், நேத்திராதி இந்திரியங்களின் வாயிலாகப் பிரமாணமென்னும் அந்தக்காரணத்தின் விருத்தி வெளிப்பட்டு உருவ முதலிய பிரமேயங்களே யடைந்தபோது நான் கண்டேன், கேட்டேனென்னும் அநுவியவசாய ஞான வியவகாரம் உளதாகலின், " ஞானங்கள் வெளி கண்டதால் " என்றுங் கூறினான். " ஞானங்கள் " என்ற பன்மை உபாதியான விருத்தியின் பன்மையாம் என்க. (கoஎ)

[சச்சிதாநந்தங்கள் ஆன்மாவின் சொரூபமாயின், சத்துஞ் சித்தும் போல ஆநந்தமும் சர்வவிருத்திகளிலும் பாநமாகவேண்டுமே யென்னும் சீடஞசங்கைக்கு அது நியமமில்லையென்று திருஷ்டாந்த முகத்தாற் சமாதானங் கூறுகின்றார்.]

உருவங்க ளிரதங்கள் பரிசங்க ளொருபூவி
லொன்றுகு மென்றலுமே
காரணங்க ளோரொன்றி லோரொன்று தெரியுங்க
ணக்கன்றி வாராதுகாண்
அருமந்த சச்சிதா நந்தச் சுபாவங்க
ளான்மா வின்வடிவாகிலும்
பிரபஞ்ச மயமாம்வி ருத்திபே தத்தினுற்
பேதங்க ளாமைந்தனே. (கoஅ)

இ - ள். ஒரு பூவில்=ஓர் (தாமரைப்) புஷ்பமாகிய திரவியத்தில்,—உருவங்கள் இரதங்கள் பரிசங்கள்=ரூப, ரச, பரிச, கந்தங்கள்—ஒன்று ஆகும் என்றலும்=ஏகமாக இருக்குமாயினும்,—காரணங்கள் ஓர் ஒன்றில்=இந்திரியங்க ளொவ்வொன்றில் — ஓர் ஒன்று=ஒவ்வொரு குணங்கள் — தெரியும் கணக்கு அன்றி=தோன்று மளவினதல்லாமல்—வாராது காண்=(ஓரிந்திரியத்தில் சகல குணங்களுமெப்படித்) தோன்றுவோ (அப்படி)—அருமந்த=அருமருந்தன்ன [அழதமோப்பானவென்று பொருள்.]—சத் சித் ஆநந்தச் சுபாவங்கள்=சச்சிதாநந்தமாகிய குணங்கள்—ஆன்மாவின் வடிவு ஆகிலும்=ஆன்மாவின் சொரூபமாயினும், — பிரபஞ்ச மயம் ஆம்=பிரபஞ்சமயமாகிய—விருத்தி பேதத்தினால்=விருத்திகளின் பேதத்தால் — பேதங்கள் ஆம்=பேதங்களாகப் பாசமாம்—மைந்தனே.—எ - று.

அடைந்தோரை அஜராமரண ரூபமாக்குதலின், "அருமந்த சச்சிதாநந்தச் சுபாவங்கள்" என்றார். (கoஅ)

[இனி விருத்திபேதத்தைத் தெரித்துணர்த்துகின்றார்.]

தாமதமி ராசதஞ் சாத்துவித முக்குணத்
தால்வருமி ருத்திமூன்றும்
ஆமவைகண் மூடமுங் கோரமுஞ் சாந்தமும்
மபிதான மாகுமகனே
ஏமுறவி ருக்கின்ற சச்சிதா நந்தங்க
ளென்றென்று மொன்றுகிலும்
நாமுரைக் கும்விருத் திப்பிரிவி னற்சொரூப
ஞானுதி பிரிவாகுமே. (கoசு)

இ - ள். தாமதம்=தாமதமும், — இராசதம்=இராசதமும், — சாத்துவிதம்=சாத்துவிதமும்—(என்னும்) முக்குணத்தால்=எனப்படும் இம்மூவித குணங்களால்—வரும் விருத்தி மூன்று ஆம்=உண்டாகாநின்ற விருத்திகளும் மூவகையாம்; — ஆம் அவைகள்=அம்மூவகை விருத்திகளும் — (முறையே) மூடமும் கோரமும் சாந்தமும்=மூடவிருத்தியெனவும், கோரவிருத்தியெனவும், சாந்தவிருத்தியெனவும் — அபிதானம் ஆகும்=பேர் பெறும்.—மகனே=மைந்தா—ஏமுற இருக்கின்ற=(அடைந்தோர்) இறுமாப்புறக் காரணமாக விருக்கின்ற—சத் சித் ஆநந்தங்கள்=அஸ்திபாதிப் பிரியங்கள்—என்று என்றும்=சார்வகாலமும் — ஒன்று ஆகிலும்=(ஆன்மாவின் கண்) ஏகரசமாக விருக்கினும்,—நாம் உரைக்கும்=யாங்கூறாநிற்கும்—விருத்திப்பிரிவினால்=(மூட, கோர, சாந்தமென்னும்) விருத்திபேதத்தால், — சொரூப ஞானுதி=ஆன்மாவின், சச்சிதாநந்தங்கள்—பிரிவு ஆகும்=பேதமாக வபிவியத்தியாம்.—எ - று.

"ஏழற விருக்கின்ற" என்பதற்கு, உ - ம், தேவாரம்.

"இறுமாந் திருப்பன் கொலோ வீசன் பல்கணத் தெண்ணப்பட்டுச், சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங் கிறுமாந் திருப்பன் கொலோ."

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கoக)

[விருத்தீபேதத்தால் சச்சிதாநந்தங்கள் பேதமாகப் பாநமாத மென்பதை, அநுபவ வாயிலாகக் காட்டுகின்றார்.]

சடமான மூடத்த ருக்கல்லு மண்களிற்
சத்தொன்று மேதோன்று மால்
விடமான காமாதி கோரத்தி லாநந்தம்
விளையாது மற்றவைகளாம்
திடமான வொழிவாதி சாந்தத்தி லேசச்சி
தாநந்த மூன்றும்வெளியாம்
மடமான மூடங்கள் கோரங்கள் விடுசாந்த
மனமாகி லாநந்தமே. (ககo)

இ - ள். சடம் மூடம் ஆன = சடமும், மூடமுமான — தரு கல்லு மண் களில் = விருட்சம், பாஷாணம், மிருத்திகை முதலியவற்றில், — சத்து ஒன் றுமே தோன்றும் = (பிரஹ்மத்தின் சுபாவங்களுள்,) சத்தொன்றுமே பிரகட மாம்: (அனைய சிதாநந்தங்கள் பிரகடமாகா.) — விடம் ஆன காமாதி கோரத் தில் = விஷம்போலும் (புருஷனை மயக்குவன) ஆன காமக்குரோதாதி (ரூப புத்தியின்) கோரவிருத்தியிலும், (மோகபயாதிரூப புத்தியின் மூடவிருத்தி யிலும்) — ஆநந்தம் விளையாது மற்றவைகள் ஆம் = ஆநந்தம் பிரகடமாகாது: சத்தும், சித்தும் பிரகடமாம். — திடம் ஆன ஒழிவு ஆதி சாந்தத்திலே = திட மாகிய வைராக்கியம், பொருமை, உதார முதலிய (ரூப புத்தியின்) சாந்த விருத்தியில் — சத்சித் ஆநந்தம் மூன்றும் வெளி ஆம் = சச்சிதாநந்தங்கள் மூன் றும் வியத்தமாம், — [இனி விஷயத்தின் வைராக்கியத்திலோ மஹத்தமசுக முண்டாதுமென்று கூறுகின்றார்.] மடம் ஆன மூடங்கள் கோரங்கள் = அறி யாமையினு லுளவாவனவான (மோக பயாதிரூப) மூடவிருத்திகளையும், காமக்குரோதாதிரூப கோரவிருத்திகளையும் — விடுசாந்தமனம் ஆகில் = விட்ட சமையாதிரூபமாகிய அந்தர்முக விருத்தி யுண்டாயின், — ஆநந்தம் (ஆம்) = (நிர்விக்கினமாகப் பிரஹ்மத்தினது) ஆநந்தம் பிரதிவிம்பிக்கும். — எ - று.

கோர, மூடவிருத்திகளில் சுகாநுபவங் காணப்படவில்லை: சாந்தவிரு த்தியில் சுகாநுபங் காணப்படுகின்றது; அதுவும், நியூனமதிகமாகக் காணப் படுகின்றது. கோர, மூட விருத்திகளில் சுகம் ஏன் காணப்படவில்லை எனின்; — கிரகக்ஷேத்திராதி விஷயங்களில் இது நமக்கு வேண்டுமென்னும் இச்சையுண்டாகும்போது கிடைக்குமோ? கிடையாதோ என்னும் சமுசய

முண்டாவதாற் றுக்கமுண்டாகின்றது; கிடையாமற் போமாயின், அத்துக்க மிகுகின்றது. ஒருவரால் விக்கினஞ் செய்யப்படின், குரோதமுண்டாகின் றது: பிரதிபந்தத்தை நிவிர்த்திக்கக்கூடாவிடின், விஷாதமுண்டாகின்றது; இப்படிக் குரோதாதிகளில் மஹத்தானதுக்கமே யிருக்கிறது: சுகமுண் டென்பதற் கிடமில்லை. வாஞ்சிதவஸ்து லபித்தபோது சாந்தவிருத்தி யுண் டாகின்றமையின், மஹத்தாகிய சுகமுண்டாம். போகத்தில் மஹத்தர சுக முண்டாம்: இலாபப்பிரசக்தியில் அற்ப சுகமுண்டாம். சாந்தவிருத்தி யிலும் விஷயலாபத்திற்குத் தக்கதாகத் தாரதம்மிய சுகம் பானமாம். ஞானி க்கு இச்சையி னபாவரூப வைராக்கியத்தால் * மகத்தம சுகமுண்டாகும்; இது விதீயாநந்தமாம் என்றறிக.

கோர, மூடவிருத்தியிரண்டும் கலங்கிய விருத்தியாதலால், சத்தும், சித்து மன்றி அவைகளி லாநந்தந் தோன்றுமல் சாந்தவிருத்தி நிர்மலமாதலால் அதில் சச்சிதாநந்தங்கண் மூன்றும் பாநமாகின்றன; ஆதலால், சத்துஞ் சித்தும் போல ஆநந்தமும், ஆன்மாவின் சொரூபமென்றே அறியற்பாலதென்று தாற் பரியம். (ககo)

(250) [சச்சிதாநந்த விலக்கண மறியும்பொருட்டுச் சீடன் வினதலும், அதற்காசாரியர் விடைகூறலும்.]

இகமான குருநாத னேசச்சி தாநந்த
மெனுமிலக் கணமறிகிலேன்
அகலாத சத்தாவ தேதுசித் தாவதே
தாநந்தமே தென்றிடில்
மிகுகால மூன்றுங்கெ டாதிருப் பதுசத்து
வேறுபா டறிதல்சித்தாம்
மகிழ்காம நுகர்போது சுகமாகு மநுபூதி
வாழ்வென்ப தாநந்தமே. (ககக)

இ - ள். இகம் ஆன குருநாதனே = இகத்தில் (அருளுருவாய்) எழுந் தருளிய குருவாகிய இறைவனே,—சத் சித் ஆநந்தம் எனும் = சச்சிதாநந்த மென்பவற்றின்—இலக்கணம் அறிகிலேன் = இலக்கணங்களே யானறிந்தி லேன்;—அகலாத = நீங்காத—சத்து ஆவது ஏது = சத்தினிலக்கணம் யாது,—சித்து ஆவது ஏது = சித்தினிலக்கணம் யாது,—ஆநந்தம் ஏது = ஆநந்த விலக்கணம் யாது—என்றிடில் = என்று நீ வினவிடில்,—மிகுகாலம் மூன் றும் = மிகுந்த காலத்திரயங்களிலும்—கெடாது இருப்பது = நிவிர்த்தியாகாம லிருப்பது—சத்து = (ஆன்மாவின்) சத்துலட்சணமாம்:—வேறுபாடு அறிதல் = ஒன்றற்கொன்று பிருதக்கான (அகங்காராதிப்) பிரபஞ்சத்தை யறிதலே—சித்து ஆம் = (ஆன்மாவின்) சித்துலட்சணமாம்:—மகிழ் காமம் நுகர்போது =

* மகத்தமம் = நிராதிசயம்.

வாஞ்சித வஸ்து (லபித்து, அதனை) அநுபவிக்கும்போது—சுகம் ஆகும்= (சந்தோஷரூபமான சாந்தவிருத்தியின்கண்) சுகமாயெழுவதான—அநுபூதி வாழ்வு என்பது = அநுபூதி * வாழ்வென்று சொல்லப்படுவதே—ஆநந்தம்= (ஆன்மாவின்) ஆநந்த லட்சணமாம்.—எ - று.

(251) யாதொரு வஸ்து ஞானத்தால் அபாவமாமோ அஃதசத்தென்றும், யாதொரு வஸ்து யாதொரு காலத்தும் நிவிர்த்தியாகாதோ அது சத்தென்றுஞ் சொல்லப்படும் சர்வ பதார்த்தங்கட்கும், அவைகளி னிவிர்த்திக்கும் ஆன்மா அதிஷ்டானமாம்; அன்மாவுக்கு நிவிர்த்தி யுண்டென்னின்;—சூனியத்தில் நிவிர்த்தி கூடாதாகலின் அதற்கு வேறே அதிஷ்டானஞ் சொல்லல் வேண்டும்; ஆன்மாவிற்கும், அதனிவிர்த்திக்கும் அந்நிய அதிஷ்டானமங்கீகரிக்கின் அதற்கு வேறே அதிஷ்டான மங்கீகரிக்கவரும் இவ்வாற்றால், அநவஸ்தையுளதாம்; அன்றியும், ஆன்மாவினிவிர்த்தி அங்கீகரிப்பவரை ஆன்மாவின் நிவிர்த்தியாரோனு மநுபவித்தறுண்டா? அல்லது இன்ரு என்றுவினவுவாம்; அநுபவித்தறுண்டெனின்;—அது பொருந்தாது. என்னை? அநுபவித்தது யாது அது ஆன்மாவாம்; அன்றியும், தன் சொரூபநிவிர்த்தியினநுபவம் தனது மஸ்தகச்சேதனத்திற்குச் சமானவநுபவமாம்; ஆதலால், ஆன்மாவின் நிவிர்த்தியநுபவம் பொருந்தாது; ஆன்மாவின் நிவிர்த்தியுண்டு, அதனநுபவம் ஒருவர்க்கு மில்லையெனின்;—அப்போது ஆன்மாவின் நிவிர்த்தி இல்லை யென்னும் வார்த்தை சித்தித்தது. என்னை? யாரொருவரானும் அநுபவிக்கப்படாத ஒருவஸ்து வந்தியா புத்திரனுக்குச் சமானமாம்; ஆகலின், ஆன்மா ஒருபோதும் நிவிர்த்தியாவதில்லை; இதனால், "மீதுகால முன்றுங்கே டாதிநுப் பதுசத்து" என்ரார்.

(252) ஆன்மா சித்தாம்: பிரகாசரூபமான யாதொரு ஞானமுண்டு அது சித்தெனப்படும். ஆன்மா அப்பிரகாசரூபமென்னின், அநான்மாக்களாகிய சடவஸ்துக்கள் ஓர்போதும் பிரகாசமாகா. அந்தக்கரணம், இந்திரியம் இவைகளால் பதார்த்தங்கள் பிரகாசிக்கின்றன வென்னின்;—அது பொருந்தாது. என்னை? அந்தக்கரணமும் இந்திரியங்களும் பரிச்சின்னங்களாகலின், காரியங்களாம்; தேசகாலங்களால் யாது அந்தமாமோ அது பரிச்சின்னமெனப்படும்; யாதொன்று காரியமாமோ அது சடமாமாகலின், அந்தக்கரணமும் இந்திரியங்களுஞ் சடமாம்; அவைகளால் யாதொரு வஸ்துவும் பிரகாசியாது; ஆதலால், யாதொரு ஆன்மா சர்வத்தையும் பிரகாசிப்பிக்கின்றதோ அது பிரகாசரூபமாம்; ஆன்மா பிரகாசரூபமன்று பின்னையோ சடமாம், அதன்கண் ஞானகுணமுண்டு அந்த ஞானத்தால் ஆன்மாவும், அநான்மாக்களும் பிரகாசிக்கின்றன வெனின்;—இங்ஙனங் கூரநிற்பவரை ஆன்மாவின் ஞானகுணம் நித்தியமா? அல்லது அநித்தியமா என்று வினவுவாம்; நித்தியமெனின்;—ஞானம் ஆன்மாவின் சொரூபமென்றே சித்தித்தது. என்னை? இது நியமம்: யாதொன்று ஆன்மாவின் வேறே அஃதநித்தியமாம்.

* வாழ்வு = இன்பம்.

ஞானத்தை ஆன்மாவின்வேறுக வங்கீகரிக்கில், அநித்தியமேயாம்; ஆதலால், நித்தியமாகவொப்பி ஆன்மாவின் வேறுக ஞானமுண்டென்னல் பொருந்தாது. அநித்தியமாக வங்கீகரிக்கில், கடாதிகள்போலுஞ் சடமாம்; யாதொன்றநித்திய வஸ்துவாமோ அது சடமாம்; ஆதலால், ஞானம் அநித்தியமென்னல் பொருந்தாது. பின்னேயோவெனின்;—ஞானம் நித்தியமேயாம்: அந்நித்தியமான ஞானம் ஆன்மாவின் சொரூபமே; அநித்தியமென் றங்கீகரிக்கில், ஆன்மாவின்கண் ஞானம் ஓர் போதிருப்பதும், ஓர் போதிராததுமாம்; ஆதலால், ஞானம் ஆன்மாவின் வேறுமாம்; ஞானம் நித்தியமென் றங்கீகரிக்கில், வேறுகாது. யாதொன்று குணமாமோ அது குணமுடையதன்கண் ஓர்பொழு திருப்பதும், ஓர்பொழு திராததுமாம்; அஃதெங்ஙனமெனின்;—வஸ்திரத்தின்கண் நீலாதிகுணங்கள் ஒருகாலிருப்பதும், ஒருகாலில்லாமற் போவதும் போலாம்; அப்படிப்போகாமல் ஞானம் நித்தியமா யிருத்தலால், ஆன்மாவின் சொரூபமென்றே கொள்ளற் பாலதாம்.

ஞானத்தை அநித்தியமெனின்;—இந்திரியம், அல்லது அந்தக்கரணம் இவைகளால் ஞானம் உற்பன்னமாயிற்றென்று சொல்லல்வேண்டும்; அது கூடாது. என்னை? சுழுத்தியின்கண் இந்திரியாதிக ளில்லாதிருக்கவும் சுகத்தின் ஞானம் உண்டாகின்றது; அஃதுண்டாகவேண்டுவதில்லை; சுழுத்தியின்கண் சுகத்தின்ஞானம் அங்கீகரிக்கவில்லையாயின், விழித்து நான் சுகமாக நித்திரை செய்தேனென்று சுழுத்திச்சுகத்தின் ஸ்மிருதியுண்டாகின்றது; அஃதுண்டாகவேண்டுவதில்லை. யாதொருவஸ்துவின் ஞானம் பூர்வமுண்டோ அதன் ஸ்மிருதி உண்டாகின்றதேயல்லாமல், அஞ்ஞாதவஸ்துவின் ஸ்மிருதி உண்டாகின்றதில்லை: சுழுத்திச் சுகத்தின் ஸ்மிருதி விழித்தபொழுதுண்டாகின்றது; ஆதலால், சுழுத்தியின்கண் சுகத்தின்ஞானம் உண்டாயிருக்கின்றது; அந்த ஞானத்திற்கு ஜநகமாக இந்திரியாதிகள் சுழுத்தியின்கண் இல்லை; ஆதலால், ஞானம் நித்தியமாம்: ஞானத்தை விடுத்து ஆன்மா ஒருபொழுதுமிருக்கவில்லை; ஆதலான், ஞானம் ஆன்மாவின் சொரூபமாம். எப்படி உஷ்ணத்தன்மையை விடுத்து அக்கினி ஒருபொழுது மிராமையால் உஷ்ணத்தன்மை அக்கினியின் சொரூபமோ அப்படி ஞானமும் ஆன்மாவின் சொரூபமாம். யாதொன்று ஆகமாபாயியாமோ அது குணமாகும்: உஷ்ணத்தன்மையும், ஞானமும் ஆகமாபாயியல்ல; ஆதலால், முறையே அக்கினி, ஆன்மா இவைகளின் சொரூபங்களாம்: யாதொரு வஸ்து ஒருகாலிருந்து ஒருகாலிராதோ அது ஆகமாபாயி யெனப்படும்; உற்பத்தியும், விநாசமும் அந்தக்கரணத்தின் விருத்திக் குளவாகாநிற்கும்: ஞானத்திற்கில்லை. ஆன்ம சொரூபமாகிய யாதொரு ஞானமுண்டோ அது விசேஷ வியவகாரத்திற் கேதுவல்ல; மற்றெது ஏதுவெனின்;—ஞானசகித விருத்தி, அல்லது விருத்தியின்கண் ஆரூடஞானம் வியவகாரத்திற்கேதுவாம்: இஃதவச்சேதவாதத்தின் கொள்கை. ஆபாசவாதத்தில் ஆபாசசகித விருத்தியால் வியவகாரமாம். ஆபாசவாயிலாக அல்லது, நேரே விருத்திவாயிலாக ஆன்மசொரூப ஞானத்தாலேயே சர்வ வியவகாரங்களும் உளவாம்: இல்லையாயின், உளவாகா; இவ்வாறு,

ஆன்மா சர்வப்பிரகாசக ஞானசொரூபமாக இருப்பதால், "வேறுபா டறிதல் சித்தாம்" என்றார்.

(253) ஆன்மா ஆனந்தரூபமாம்; அல்லவெனின்:—விஷயசம்பந்தத்தால் யாதொரு சொரூபாநந்தத்தின் பாகமுண்டாகின்றதோ அஃதுண்டாக வேண்டுவதில்லை. விஷயத்தின்கண் ஆநந்தமில்லை; உண்டெனின்;—யாதொரு விஷயத்தால் எந்தப் புருஷனுக்குச் சுகமுண்டாமோ அதனாலேயே அந்நியனுக்குத் துக்கமுண்டாகின்றது. அஃதெங்ஙனமெனில்:—அக்கினியின் பரிசத்தால் அக்கினிகீடத்துக்கும், சர்ப்பசிம்மங்களி னுருவங்களைக் காண்டலால் * சர்ப்பணி, சிம்மனிகளுக்கும் ஆநந்தமுண்டாகின்றது; அஃதுண்டாக வேண்டுவதில்லை; சித்தாந்தத்திலோ அக்கினிகீடத்துக்கு அக்கினியின் பரிசவிச்சையுண்டாமேல், அப்பொழுது சொரூபாநந்தத்தின் பாகமுண்டாகிறதில்லை; அக்கினி சம்பந்தத்தால் க்ஷணமாத்திரம் இச்சைதீங்கி நிச்சலபுத்தியின்கண் சொரூபாநந்தத்தின் பாகமாகின்றது; அந்நியபுருஷனுக்கு அக்கினி சம்பந்தத்தி னிச்சையில்லை; பின்னே யாதுண்டெனின்:—அந்நிய பதார்த்தத்தி னிச்சையுண்டு; அவ்வன்னிய பதார்த்தத்தினிச்சை அவற்றி னன்றி அக்கினி சம்பந்தத்தா னிவிர்த்தியாகாது. ஆதலால், அவனது சஞ்சல வந்தக்காரணத்தின்கண் அக்கினி சம்பந்தத்தால் ஆநந்தமுண்டாகமாட்டாது. சங்கை:—யாதொரு இச்சாரூபமான அந்தக்காரணத்தின் விருத்தியுண்டோ அது அவ்விஷயப்பிராப்தியால் நாசமாய்விட்டது; அந்நியவிருத்திக்கு யாதொரு நிமித்தமுமில்லை; ஆகலின், அந்நியவிருத்தி உற்பத்தியாகவில்லை. விருத்தியின்றிச் சொரூபாநந்தம் பாகமாகாதாகலின், விஷயத்திலேயே ஆநந்தமுண்டெனின்:—அது கூடாது. என்னை? இச்சாரூப அந்தக்காரணத்தின் விருத்தி அபாவமாயிருக்கின்றதுண்மைதான்; அவ்விச்சாரூபவிருத்தி அபாவமாகாதிருக்கினும் அஃதிராஜதமாகலின், அதன்கண் ஆநந்தம் பிரகாசமாகாது; ஆநந்தத்தின் பிரகாசம் சாத்வீகவிருத்தியின்கட்டோன்றும்: சத்துவகுணத்தால் ஞானமுண்டாமென்பது நியமமாகலின். வாஞ்சிதபதார்த்தங் கிடைத்து அதை விஷயம்பண்ணும்பொருட்டு யாதொரு அந்தக்காரணத்தின் ஞானரூபவிருத்தியுண்டாகின்றதோ அது சாத்வீகந்தான்; அச்சாத்வீகவிருத்தியில் ஆநந்தம் பாகமாம்; ஆயினும், அந்தஞானரூபவிருத்தி பகிர்முகமாக விருப்பதால் அதன் பிருஷ்டபாகத்திலுள்ள அதனுபகிதசேதன சொரூபாநந்தத்தை அது கவராது; ஆதலால், விஷயவுபகிதசேதனரூபாநந்தம் அவ்விருத்தியிற் பாகமாகின்றது; அவ்விஷய வுபகிதசேதனம் ஆன்மாவின் வேறல்ல; ஆகலின், ஆன்மாநந்தமே விஷயத்தில் பாகமாகின்றதென்று சொல்லப்படுகின்றது; அந்த ஞானரூபவிருத்தியில் விஷயத்தோடுகூட நேத்திராதி இந்திரியங்களின் சம்பந்தமே நிமித்தமாம்; அல்லது, யாதொரு ஞானரூப பகிர்முக விருத்தியுண்டோ அதனினுமந்நியமாக அந்தர்முக விருத்தி யுண்டாகின்றது, அதன்கண் அந்தக்காரண வுபகிதசேதன

* சர்ப்பணி, சிம்மனி என்பன, சர்ப்பசிம்மங்களின் பெண்பால்.

ரூப ஆநந்தமே பாநமாகின்றதென்னும் இது உத்தமசித்தாந்தமாம்; அவ் விருத்தியினுற்பத்தியில் இச்சைமுதலியவற்றினபாவமே நிமித்தமாம்; இச்சை முதலியவையின்றி ஏகாந்தத் துதாசீனனுயிருக்கும் புருஷனுக்குப் பகிர் முக ஞானரூபவிருத்தி யுண்டாகாதிருந்தும் ஆநந்தம் பாநமாகின்றது; ஆத லால், இச்சை முதலியவற்றின் அபாவரூப நிமித்தத்தால் ஆநந்தத்தைக் கவர்வ தாய் அந்தர்முக விருத்தி எப்படியுண்டாகின்றதோ அப்படி வாஞ்சித விஷய லாபத்தால் உளதாகும் இச்சை முதலியவற்றினபாவத்தால் ஞானத்திற்குப் பின்னர் அந்தர்முகவிருத்தியுண்டாய் அதனுல், அந்தக்காரணவுபகித வாநந் தமே கவரப்படுகின்றது; அச்சொரூபாநந்தத்தின் கவர்ச்சியும், விஷயத்தின் ஞானமும் அத்தியந்தம் அவ்வியவகிதமாயிருத்தலின், புருஷனுக்கு யான் விஷயத்தில் ஆநந்தமநுபவித்தேனென்னும் பிராந்தியுண்டாகின்றது. பிரதம பட்சத்தினும் இப்பட்சம் உத்தமமாம். என்னே? விஷயஞானரூப விருத்தி யினுன் அந்தக்காரண வுபகித ஆநந்தபானங் கூடாது; கூடுமாயின், மார்க்கத் திற் செல்லுழியுளதாகும் விருட்சத்தின் ஞானரூபவிருத்தியும் சாத்துவிகமே யாதலால், அதனுனும் விருட்சவுபகிதசேதன சொரூபத்தின் ஆநந்தம் பாந மாதல்வேண்டும். அப்படியே சர்வஞானத்தாலும் ஜேயவுபகிதசொரூபத் தின் ஆநந்தம் பாநமாதல்வேண்டும்; அங்ஙனமாகாமல் ஆன்மசொரூபத்தின் ஆநந்தமே பாநமாவதால், "**மகிழ்காம நுகர்போது சுகமாது மநுபூதி வாழ் வென்ப தாநந்தம்**" என்றார். இவ்வாறே வாசிட்டத்தும் சித்தர்,

"அறிவானு மறிபொருளுங் கூடியகூட் டாவிலெழு மறிவா னந்தம், பிறியாத வான்மதத் துவத்தெழுந்த தாமதனைப் பேணல் செய்வாம்."—என்றனர்.

திரிகாலத்தினும் அபாத்தியமாயிருப்பதே சத்திலக்கணமென்றும், சர் வப்பிரகாசக ஞானசொரூபமாக இருப்பதே சித்திலக்கணமென்றும், விஷய சம்பந்தத்தாற் சாத்வீக அந்தக்காரண விருத்தியின்கண் எழாநிற்குஞ் சுகமே ஆநந்தத்தி னிலக்கணமென்றுங் கூறியதாம். (ககக)

(254) [இவ்வாறன சச்சிதாநந்த விலக்கணமுடைய பிரஹ்மமே நீ எனச் சுருதிகளானும், குருவினுனும் உபதேசிக்கினும், நீ யென்னும் சப்தவாச்சியனை புருஷனிடத்து அவற்றி னநு பவ மெவ்வாறுளதெனச் சீடன்வினுதல்.]

நாசச்ச ரீரத்தி ருக்குஞ்ச ரீரிதனை
நால்வேத மாவாக்கியம்
நீசச்சி தாநந்த மென்றிடினு மாசிரியர்
நீபிரம மாகுமெனினும்
மாசற்ற சச்சிதா நந்தநா னென்னவிவன்
மன்னுமநு பவமெங்ஙனே
கோசப்பு ரங்களையி டித்துத்த கர்க்குமத
குஞ்சரக் குருநாதனே. (ககஉ)

இ - ள். நாசச் சரீரத்து இருக்கும் சரீரிதனே = நாசத்தையுடைய சரீரத்தின்கண் (அபிமானியாய்) இருக்குஞ் சரீரியை — நால்வேத மாவாக்கியம் = நான்குவேதங்களிலுள்ள நான்கு மஹாவாக்கியங்களும் — நீ சத் சித் ஆநந்தம் என்றிடினும் = நீயே சச்சிதாநந்தப் பிரஹ்மமென்றுபதேசிக்கினும், ஆசிரியர் நீ பிரமம் ஆகும் எனினும் = நீயே சச்சிதாநந்தப் பிரஹ்மமென்று ஆசிரியருபதேசிக்கினும் — மாசு அற்ற = குற்றமற்ற — சத் சித் ஆநந்தம் நான் என்ன = சச்சிதாநந்தப்பிரஹ்மமே நானென்றநுபவிக்க — இவன் மன்னும் அநுபவம் எங்ஙனே = சரீரியாகிய இப்புருஷனிடத்தே நிலைபெற்ற (அச்சச்சிதாநந்தங்களின்) அநுபவமெவ்வாறு (உள்ளன ?) — கோசப்புரங்களே = பஞ்சகோசமாகிய நகரங்களே — இடித்துத் தகர்க்கும் = இடித்துப் பொடியாக்கும் — மதகுஞ்சரக் குருநாதனே = (ஞான) மதயானையாகிய குருபரனே. — எ - று.

பஞ்சகோசத்தில் நானென்னும் புத்திரூப அபிமானத்தைச் சுருதி, யுத்திகளால் அபாவமாக்குவதை, "இடித்துத்தகர்க்கும்" என்றார். "குஞ்சரம்" எ - து, உருவகம். (கக೮)

[சரீரியின்கண்ணுள்ள சச்சிதாநந்த வநுபவம் யாவர்க்குமொப்ப இரண்டுசெய்யுளாற் கூறுகின்றார்.]

சென்மாந்த ரஞ்செய்த வினைகளுட னருமெனிற்
செல்கால மிவனுண்டலோ
கன்மாநு பவநாக சொர்க்கமெனில் வருகின்ற
காலத்து மிவனுண்டலோ
உன்மாத யாதனு வுடல்கடவு ளுடன்மநுட
வுடன்மாறி மாறியழியும்
தன்மாய வுடல்கெடினு மிவனிருப் பதுகொண்டு
சத்தென்ப தொக்குமகனே. (ககக)

இ - ள். சென்மாந்தரம் செய்த வினைகள் = அந்நிய ஜநங்களில் (தான் மனவாக்குக்காயங்களாற்) செய்த கர்மங்கள் — உடல் தரும் எனின் = தேகத்தைத் தருமென்று சொல்லின், — செல்காலம் = இறந்தகாலத்தும் — இவன் = இச்சரீரியென்பவன் — உண்டலோ = உண்டல்லவா ? — கன்ம அநுபவ நாக சொர்க்கம் எனில் = (நிகழ்காலத்திலிவன் செய்யாநின்ற) பாவபுண்ணியத்திற்கு அநுபோகமாக (முறையே) நாகமும், சொர்க்கமும் வருமென்று சொல்லின், — வருகின்ற காலத்தும் = எதிர்காலத்தும் — இவன் உண்டலோ = இச்சரீரி (யாதனு சரீரந் தேவ சரீரங்களைத் தரித்துக்கொண்டு) உளனல்லவா ? — உன்மாத யாதனு உடல் = சித்தவிப்பிரமைக்குக் காரணமான யாதனு சரீரமும், — கடவுள் உடல் = தேவசரீரமும், — மநுட உடல் = மநுஷசரீரமும் — மாறி மாறி அழியும் = (அநேகமாய்) வேறு வேறுயுண்டாய் நசிக்கும் ; — தன் மாய உடல் கெடினும் = தனது மாயாமய சரீரங்களுசமாயினும், — இவன்

இருப்பது கொண்டு=இச்சரீரி (திரிகாலத்தும் அபாத்தியமாய்) இருப்பதால்—மகனே சத்து என்பது ஒக்கும்=மைந்தா (இவன்) சத்தென்று சொல்லுவது (யாவர்க்குஞ்) சம்மதமாம்.—எ - று.

தரித்திரன், மகாராஜன், கருமி, பக்தன், மூமுட்சு இவ்வைவருடைய வசனத்தால், "சென்மாந்த ரஞ்செய்த வினைகளுட நருமெனிற் செல்கால மிவனுண்டலோ, கன்மாநு பவநாக சோர்க்கமெனில் வருகின்ற காலத்து மிவனுண்டலோ" எனினும் ஆம்; இவ்வைவர் வசனம் வாசுதேவ மனனத்தில் சச்சிதாநந்த நிருபணத்திற் காண்க. (ககஉ)

இருளாக மூடுஞ்சு ழுத்தியி லிராத்திரியி
லிரவிசுட ரற்றபொழுது
மருளாம லிருளையும் பொருளையுந் தெரிகின்ற
வகைகொண்டு சித்தாகுமே
பெருவாழ்வு மிக்கதா னேதன்னி டத்தினிற்
போதாத பிரியமதனல்
அருகாத பிரியஞ்சு கத்தில்வரு மாதலா
லாநந்த மாமைந்தனே. (ககச)

இ - ள். இருள் ஆக மூடும் சுழுத்தியில்=(மழைநிசி) இருள்போல (யாதொரு விஷயமுந் தோன்றுமற்போக) மறையாநிற்குஞ் சுழுத்தியின் கண்—மருளாமல்=மயங்காமல்—இருளையும் பொருளையும்=(அவித்தையாகிய) இருளையும், (அதிற் பிரதிபலியாநிற்கும் ஆநந்தமாகிய) பொருளையும்—இரவி சுடர் அற்றபொழுது=சூரிய (ன் முதலியவாகிய) ப் பிரகாசங்களொழிந்த (காடாந்தகார) சமயத்தில்—இராத்திரியில்=இரவில் (உளதாகுஞ் சாக்கிராத்தின்கண்)—மருளாமல்=மயங்காமல்—இருளையும் பொருளையும்=காடாந்தகாரத்தையும், (அதிற்சாமான்யமாக ஸ்பரிசத்தாற் றோன்றுநிற்குங் கடபடாதிப்) பொருள்களையும்—தெரிகின்ற வகைகொண்டு=அறிகின்றதன்மையால்,—சித்து ஆம்=சித்தென்பதநுபவமாம்.—பெருவாழ்வுமிக்க=பேராநந்தத்தால் நிரதிசயமாகிய—தானே தன்னிடத்தினில்=தான்றானே தன்னிடத்து—போதாத பிரியம் அதனல்=மாறுதபிரேமை வைத்திருப்பதால்—அருகாத பிரியம்=குறைவற்ற பிரியமானது—சுகத்தில் வரும் ஆதலால்=(யாவர்க்குந் துக்கத்தின்கணுண்டாகாமல்) சுகத்தின்கணுண்டாவது உலகிற் பிரசித்தமாதலால்,—மைந்தனே—ஆநந்தம் ஆம்=இவன் ஆநந்தமென்பதநுபவமாம்.—எ - று.

ஓர் விருட்சத்தினின்று முண்டான பீஜம் அந்திய விருட்சத்திற்குக் காரணமாவதல்லது, தன்னையுண்டாக்கிய விருட்சத்திற்குக் காரணமாகாதது போல வர்த்தமான தேகத்தினின்று முண்டாகாநின்ற வினைகள் மேல்வரும் ஜநநத்திற்குக் காரணமாவதல்லது, அச்சநநத்திற்குக் காரண மாகாமையின், "சென்மாந்த ரஞ்செய்த வினைகளுடறநும்" எ - ம், இப்படி உத்தரோத்தரா

ஜநநத்திற்குப் பூர்வ பூர்வவினைகள் காரணமாக முன்சென்ற அநேககோடி கற்பங்களிலும் ஆன்மா சரீரமுடையவனாக இருந்திருத்தலின், "கெல்காலமிவனுண்டலோ" எ - ம், இச்சநநத்தில் சிரவணாதிப்பிரயத்தனத்தால் பிரஹ்மான்ம வயிக்கிய ஞானத்தைப் பிரதிபந்தரகிதமாக அடையாவிடின், பூர்வகர்மத்தின் பயனாக இச்சரீரம் வந்ததுபோல இப்போது செய்யுங் கருமத்திற்குப் பயனாக இன்னும் அநேககோடி ஜநநங்கள் வருமாகவின், அவைகளைத் தரித்துக்கொண்டு இனிவரும் அநேககோடி கற்பங்களிலும் ஆன்மா இருப்பதால், "கன்மாநு டவநாக சொர்க்கமெனில் வருகின்ற காலத்து மிவனுண்டலோ" எ - ம், முன்வந்ததும், இனிவருவதுமாகிய அநேககோடி சரீரங்களழிந்தும் சரீரியழியாமையின், இவன் சத்தெனல் யாவர்க்குமொப்ப அநுபவமாமென்பார், "யாதனு வுடல்கடவு ளுடன்மநுட வுடன்மாறி மாறியழியுந், தன்மாய வுடல்கெடினு மிவனிருப் பதுகொண்டு சத்தென்ப தோக்தம்" என்றுங் கூறினர். "இவி" என்பது, உபலட்சணமாகலின் வாகியப்பிரகாசங்களனைத்துங்கொள்க. "இவிசுட ராற்றபோழ தாத்திரியில்" என்றதால், காடாந்தகார சமயத்தில் என்பதும், "மநுளாம லிருளாயும் பொநுளாயுந் தோகின்ற வகைகொண்டு" என்றதால், சாக்கிரத்தின்கண் என்பதும் வருவிக்கப்பட்டன. வாகியவொளிகளற்ற சாக்கிரமாவது மழை நாளிரவிற் காடாந்தகார சமயத்திலுளதாகுஞ் சாக்கிரம், அல்லது இரவிற் கபாட முதலியவை பந்திக்கப்பட்டுத் தீபமணைந்த அந்தர்க்கிரகத்திலுளதாகும் சாக்கிரமெனினுமாம். இங்ஙனங் கூறியது பிரகாசாந்தர அபேட்சையின்றியே ஆன்மா சொப்பிரகாச சித்துரூபமாயிருக்கும் அநுபவம் விளக்குதற் பொருட்டென்க. சூரியன், சந்திரன், அக்கினி முதலிய பிரகாசங்களொழிந்த சாக்கிரத்தின் கண் நேத்திரமுதலிய இந்திரியவாயிலாக இருண்முதலியவற்றைக் கோசரிக்கும் அந்தக்கரண விருத்தியும், சுழுத்தியின்கண் அஞ்ஞான கோசரம், ஆநந்தகோசரமாகிய அவித்தியாவிருத்தியும் அக்கினியானது உரூபபதார்த்தங்களைப் பிரகாசித்தற்குத் திரி முதலியவைபோல உபாதிமாத்திரமாயிருக்கின்றன. புத்திக்கு ஞான மொருகாலு மின்றென்று ஆன்மபோதத்திற் பூச்சியபாதரான ஸ்ரீ - சங்கராசாரியரால் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது. சாக்கிரம், சுழுத்தி இரண்டிற்கும் மத்தியமான சொப்பனத்தின்கண்ணும் ஞாதா, ஞான, ஞேயரூபமான திரிபுடிகளையும் பிரகாசாந்தரங்களையபேட்சியாமலே ஆன்மாவாகிய தான் பிரகாசிப்பிக்கின்றதும் இவன் "சித்து" என்பதற்கநுபவ மெனக்கொள்க. யானெப்போதுமிலனுகாமல், உளனுதல் வேண்டும் என்றிவ்வாறான பிரேமை ஆன்மாவின்கண் யாவர்க்குமுளது; அந்நியங்களில் யாதொரு பிரேமையுண்டாமோ அதுவும் தன்பொருட்டேயாம்: ஆன்மாவின்கணுள்ள பிரேமையோ அந்நியத்தின் பொருட்டன்று; இப்படி ஆன்மாவின்கண்ணே பரமமான பிரேமை யிருத்தலால் இச்சரீரி, "ஆநந்தம்" என்பது அநுபவமா மென்றறிக.

இதற்கு, உ - ம், பிரமகீதை,

"சீவ னன்று புரமூன்றிற் சித்தாமவனே விளையாடு
மேவு மெல்லா மெய்போல வவனுல் விளைத லான்மெய்யத்

தேவ னேசான் ரூதலினுற் சித்து மவனே யத்துவிதன்
யாவுந் தானு தலினெதினுந் தானேயே விரும்ப லாலின்பன்."—எ - ம்,

"இந்தப் புரங்க ளொருமூன்று மிவன்ற னிடையே யிறப்பதுநிர்த்
தொந்தப் புருட னெருகாலு நசியா னுதலாற் சொல்லு
மந்தப் பாம னேயவன்ரு னறியா மையினு லப்பரனைப்
பந்தப் படுமோர் சீவனெனப் பார்ப்பார் பவத்தே பதைக்கின்ரூர்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்ரூற் காண்க.

"இருளாக ழடுஞ்சு ழுத்தியி லிராத்திரியி லிரவிசுட ராற்றபொழுது" எ - கு, உ - ம், பிரமகீதை,

"காண்டல் கேட்டல் கருதல்செ யப்படு வானலன்ரூன்
காண்டல் கேட்டல் கருதல்செ யப்படு வானெருத்தன்
ரூண்டு சோதியி னுலனல் சோம னருக்கனெல்லா
மாண்ட போதும் விளங்கும னக்கரி யாகிநின்றே."—எ - ம்,

"சித்தமத் தமித்திடத் தபாவழுந் தெரிந்திடுஞ்
சுத்தநற் சுழுத்தியிற் றுய்க்குமாயை கண்டிடு
மத்தமித் தலும்பிறத் தலும்மிலா னபாவபா
வத்தைவிட் டகண்டமா யறிந்தபோ தடங்கவாம்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்ரூற் காண்க. (ககச)

(255) [சுகத்தின் சாதனருபமான அந்நபானுதிகளிடத்துப் பிரீதி காணப்படுவதுபோல ஆன்மாவிடத்தும் பிரீதி காணப்படுதலின், ஆன்மாவும் அந்நபானுதிகள்போலச் சுகசாதன மாதங்கொலென வருமாசங்கையை அந்நபானுதிகளிடத்துப் போகசாதனத்தன்மை நபவுபாதியிருத்தலின், அவை சுகசாதனமாம், ஆன்மாவினிடத்து அஃதில்லாமையின், ஆன்மா சுகசாதனமல்லவென்னும் அபிப்பிராயத்தாற் பரிகரிக்கின்ரூர்.]

அன்னபா னுதிசுக சாதனம தாகையா
லார்க்கும் வெகு பிரியமாகும்
இன்னவா ரூன்மாவு மாநந்த சாதன
மெனக்கருதல் பொரு ளல்லவே
சொன்னவான் மாவையொரு சுகசாத னங்களொடு
சொல்லுவா யாகின் மசுனே
உன்னதா நந்தம்வே றேதநுப விப்பதா
ருபயவான் மாவு முளவோ. (ககடு)

இ - ள். அன்னபான ஆதி = அந்நபான முதலியவை—சுக சாதனமது ஆகையால் = சுகத்திற்குச் சாதனமாமாதலால்,—ஆர்க்கும் வெகு பிரியம் ஆகும் = யாவர்க்கும் அவையதிகப்பிரியமாம்;—இன்ன ஆறு = இந்தப்படி—ஆன்மாவும் ஆநந்தசாதனம் என = ஆன்மாவும் ஆநந்தத்திற்குச் சாதனமா மென்று—கருதல் பொருள் அல்ல = எண்ணு நிற்பது சுருதிவிரோதமாம்; —சொன்ன ஒரு ஆன்மாவை = (சுகரூபமென்று சுருதி) கூறிய ஏகமானவான் மாவை—சுக சாதனங்களொடு = (அந்நபானாதிகளென்னுஞ்) சுகசாதனங்க ளோடு சேர்த்து—சொல்லுவாய் ஆகின் = (இதுவும் சுகசாதனமாமென்று) கூறுவையாயின்,—மகனே—உன்னது ஆநந்தம் வேறு ஏது = உன்னுடைய (அநுகூலவிஷயமான) ஆநந்தம் வேறே ஏது?—அநுபவிப்பது ஆர் = அதனை யநுபவியாநின்ற (கர்த்தா வேறே) யார்?—உபய ஆன்மாவும் உளவோ = (விஷயபாவம், விஷயீபாவமாக) இரண்டான்மாவுமுண்டா?—எ - று.

ஒரே ஆன்மாவுக்கு ஒருகாலத்தில் * உபகாரியத்தன்மை, † உபகாரகத்தன்மையென்னும் இரண்டு தர்மம் விரோதமாமாகலின், அங்ஙனங் கூறுதல் கூடாதென்பார், "உன்னதா நந்தம்வே றேதநுப விப்பதா நுபயவான் மாவுமுளவோ" என்றார்.

(256) [ஆன்மாவுக்கு அந்நாதிகள்போலச் சுகசாதனத் தன்மையில் லையாயினும், சுகம்போலப் போக்தாவி னுபகாரத்தன்மை யிருக்கலாமே யென்று சங்கித்து அவற்கு நிரதிசயப் பிரே மைக்கு விஷயத்தன்மை யிருப்பதால் அங்ஙனங் கூறுகிற் பது பொருந்தாதென்று பரிகரிக்கின்றார்.]

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும்
வெகுபிரிய மான் மாவிலாம்
விடயசுகம் வருபிரிய மாறிவரு மான்மாவில்
வெகுபிரிய மாறாது காண்
விடயசுகம் விடனுமாங் கொளனுமா மான்மாவை
விடுவதெவர் கொள்வ தெவர்பார்
விடயசுக போகங்கள் விடுமவனை யவனுல்
விடப்படா தொரு நாளுமே. (ககசு)

இ - ள். விடய சுகமதில்வருதல் பிரியமாத்திரம் ஆகும் = விஷயஜந்நிய சுகத்தின்கண் வாராநிற்பது பிரீதிமாத்திரமேயாம், (நிரதிசயப்பிரீதியன்று:—) ஆன்மாவில் (வருதல்) வெகு பிரியம் ஆம் = ஆன்மாவின்கண் வாராநிற்பது நிரதிசயப்பிரீதியாம்; (ஆதலால், விஷய ஜந்நியசுகம் போலல்ல)—[எதனு லெனின்] விடயசுகம் வருபிரியம் மாறிவரும் = விஷயஜந்நிய சுகத்தின்கண் வாராநின்ற பிரீதி வியபிசாரத்தை யடைகின்றது: (ஒருகாலந்நியசுகத்திற் செல்கின்றது, அவ்விஷயத்திலேயே நியமமாக விருக்கவில்லை யென்ற

* உபகாரியத்தன்மை = கர்மம். † உபகாரகத்தன்மை = கர்த்தா.

வர்று.)—ஆன்மாவில் மாரூதுகாண்=ஆன்மாவின் கண்ணுள்ள (பிரியம்) வியபிசாரத்தை யடைவதில்லை;—(ஆதலால்,) வெகு பிரியம்=(அவ்வான்மாவின் கண்ணுள்ள பிரீதி) நிரதிசயமாம்:—[**விஷயப்பிரீதியின் வியபிசாரத்தைத் தரிசிப்பிக்கின்றர்.**] விடய சுகம் விடலும்ஆம் கொளலும்ஆம்=ஓர் விஷய ஜந்நிய சுகத்தை விடவுங்கூடும், (அந்நிய விஷயஜந்நிய சுகத்தைப்) பற்றவுங் கூடும்.—[இனி ஆன்மாவின் கண்ணுள்ள **பிரீதி வியபிசார மில்லாதிருப்பதைத் தரிசிப்பிக்கின்றர்.**] ஆன்மாவை விடுவது எவர்கொள்வது எவர் பார்=ஆன்மா (தள்ளத்தக்கவனும், கொள்ளத்தக்கவனும் அலனுதலால்,) அவனை விடத்தக்கவர் யாவர்? கொள்ளத்தக்கவர் யாவர் நீ பாராய்.—[**பலித்ததைச் சொல்லுகின்றர்.**] விடயசுக போகங்கள்விடும் அவனை=விஷய (ஜந்நிய) சுகபோகங்களைத் தியாகஞ்செய்யும் அவ்வான்மாவை—அவனுல் ஒருநாளும் விடப்படாது=அவ்வான்மாவால் சதாத் தியாகம் பண்ணக்கூடாது.—எ-று.

ஆன்மாவைத் தியாகஞ்செய்யவும், கிரகணஞ் செய்யவுங் கூடாமையின், அவனிடத்துள்ள பிரீதி எப்படி வியபிசாரத்தை யடையுமென்பார், "**விடய சுக போகங்கள் விடுமவனை யவனுல் விடப்படா தொருநாளுமே**" என்றர். (ககசு)

(257) [**உலகின்கண்ணே சிலர் துவேஷத்தால் ஆன்மத் தியாகஞ் செய்யக் காணப்படுதலின், ஆன்மா தியாகத்தின் விஷயமன்றெனல் கூடாதென்றுவருஞ் சங்கையை அத் தியாகம் ஆன்மாவின் வேறன தேகத்தின்விஷயமேயன்றி ஆன்ம விஷயமன்றெனப் பரிகரிக்கின்றர்.**]

வேகின்ற கோபங்க ளாலென்னை நான்கொன்று
விடுகிறே னென்று சிலபேர்
சாகின்ற படியினுற் றன்னையே தான்கொன்று
சாவனெனல் சங்கை யலவே
தேகந்த னைக்கொல்லு மவனுல் விடப்பட்ட
தேகமவ னல்லன் மகனை
ஆகந்த னிற்கோப மலதுதனை யொருநாளு
மான்மாவெ றுப்ப திலையே. (ககள)

இ-ள். வேகின்ற கோபங்களால்=(விருட்சந் தானடைந்த தீயால் வேதல்போலத் தாம்) வேகாநின்ற (வியாதி,) கோபங்களால்—என்னை நான்=என்னையான்—கொன்று விடுகிறேன் என்று=கொலைசெய்து தியாகம் பண்ணுகின்றேனென்று சொல்லி—சிலபேர்=சிலர்—சாகின்றபடியினுல்=(ஓரோர்காலத்தில் உலகில்) மரணமாகின்றமையின்,—தன்னையே தான் கொன்று=(ஆன்மாத்) தன்னையேதான் (விருச்சிகாதிகளிற்போலத் துவேஷித்துக்) கொலைசெய்து—சாவன் எனல்=மரணரூபமான தியாகவிஷயமாகின்றனனென்று சங்கித்தல்—சங்கை அல=சங்கையன்று.—[**அஃதியாதி**

னுலேனின்?—] தேகம் தனைக் கொல்லும் அவனுல்=தேகத்தின் வேரு யிருந்து அதனைக் கொன்று தியாகம் பண்ணுகின்ற யாதொரு சீவனுண்டோ அவனுல்—விடப்பட்ட தேகம்=தியாகம் பண்ணப்படுகிற தேகம்—அவன் அல்லன்=அவனல்லனும்.—மகனே—ஆகம்தனில் கோபம் அலது=அங்ஙிய மான தேகத்தின்கண் துவேஷமேயல்லாமல்—தனை ஒரு நாளும்=தன்னை யொருபோதும்—ஆன்மா வெறுப்பது இலை=தான் துவேஷிப்பதில்லை.—எ-று.

ஆன்மா அங்காதிபோலப் பிரிய விஷயமும், விருச்சிகாதிபோலத் துவேஷ விஷயமும் அல்லனுயின், திரணுதிபோல உபேட்சா விஷய மாவனேவெனின் :—உபேட்சிப்பவனுடைய சொரூபமே யாவனுதலால் உபேட்சாவிஷயமு மாகான் என்றறிக. (ககஎ)

(258) [ஆன்மாவே பிரியவஸ்துவாயின், வித்த, புத்திராதிகளும் பிரியவஸ்துக்களாகத் தோற்றுவானேனென்று சங்கித்து ஆன்மாவைச் சமீபித்ததுகொண்டு அவைகளில் தாரதம் மியமான பிரீதி தோன்றுநின்றதென்று அநுபவத்திற்காட்டி அவையனைத்தினும் ஆன்மாவில் அதிகப்பிரிய மிருத்தலால் ஆன்மாவே முக்கியமென்று கூறுகின்றார்.]

தாகப்ப டும்பொருளி லும்மகன் பிரியமாந்
தனயனிலு முடல்பிரியமாம்
ஆகத்தி லும்பிரிய மிந்திரிய மாங்கரண
மதனிலும் பிரியமுயிராம்
ஏகப்பி ராணனிலும் வெகுபிரிய மான்மாவி
லிந்தவான் மாமுக்கியம்
ஊகத்தி னுற்கௌண மித்தைகர்த் தாமூன்று
மோரொன்றி லதிகமகனே. (ககஅ)

இ-ள். தாகப்படும் பொருளிலும்=யாவரும் பிரியப்படுகின்ற தனத்தினும்—மகன் பிரியம் ஆம்=புத்திரன் பிரியமாம்;—தனயனிலும்=புத்திரனிலும்,—உடல் பிரியம் ஆம்=அந்நமயமான தேகம் பிரியமாம்;—ஆகத்திலும்=தேகத்தினும்,—இந்திரியம் பிரியம் ஆம்=இந்திரியங்கள் பிரியமாம்;—கரணம் அதனிலும்=இந்திரியங்களினும்,—உயிர் பிரியம் ஆம்=பிராணன் பிரியமாம்;—ஏகப் பிராணனிலும்=(மனதோடு) ஒன்றுகியபிராணனினும், — ஆன்மாவில் வெகுபிரியம்=ஆன்மாவிடத்துப் பரமப்பிரியமாம்;—இந்த ஆன்மா முக்கியம்=ஆதலின், இச்சாட்சியே பிரதானரூபமாம்.—[ஆயின், ஆன்மாபுத்திரனுன், புத்திரனில்லாதவனுக்குப் பரலோகமில்லை; இம்மநுடலோகமும் புத்திரனுலேயே சம்பாதிக்கப்படுகிறது, அந்நிய கர்மங்களாலில்லை என்று சுருதியின்கண்ணே புத்திரனைப் பிரதானமாகக் கூறியிருப்பது என்னையோவெனச் சங்கித்துப் புத்திராதி

கள் ஓரோர் சமயத்தில் முக்கியமாதல்பற்றி அங்ஙனங் கூறிற்றென்று கூறுகின்றார்.] ஊகத்தினுல்=(சுருதிக் கவிரோதமாகிய) தர்க்க உத்தியால் (ஆராயின்,)—கௌணம் மித்தை கர்த்தா மூன்றும்=கௌணுன்மா, மித்தையான்மா, கர்த்தான்மா இவை மூன்றும்—மகனே—ஓர் ஒன்றில் அதிகம்=ஓரோர் சமயத்திற் பிரதானமாம்.—எ - று.

புத்திராதிகளினுபத்தை நிவாரணஞ் செய்தற்பொருட்டுத் தனத்தைச் செலவிடுதலால் பொருளின், மகன்பிரியம்; தனது தேகத்தை இரட்சித்தற் பொருட்டு ஓர்போது புத்திராதிகளையுந் தானஞ் செய்தலின், தனயனினு முடல்பிரியம்; இந்திரியங்களுக்குற்ற நாசத்தை நீக்குதற்பொருட்டுத் தாடனாதிகளா லுளதாகும் தேகத்தின் பீடையையும் அங்கீகரிக்கப் படுவதால் ஆகத்தின் இந்திரியம் பிரியம்; பிராணனீங்கும்படி வரில் அதைக் காத்தற் பொருட்டு இந்திரியங்களின் சேதனாதிகளையும் அங்கீகாரம் பண்ணப்படுதலின், காரணமதனின் பிரியமுயிராம்; இப்படித் தனமுதல், பிராண பரியந்தமாகிய பதார்த்தங்களில் உத்தரோத்தர மதிகப்பிரியத்தன்மை சர்வானுபவசித்தம். ஆன்மாவின் நிரதிசயப் பிரேமையின் விஷயத்தன்மை ஞானிகளனுபவசித்தமாம். பூர்வ பூர்வ பதார்த்தங்களினும், உத்தரோத்தர பதார்த்தங்களில் அதிகப் பிரீதியிருப்பது ஆன்மாவைச் சமீபித்திருத்தலின் என்க; அவை ஆன்மாவைச் சமீபித்திருக்குமாறு;—ஆன்மாவின் ஆபாசம் சூட்சுமசரீரத்திலுண்டு; மற்றென்றிலில்லை; ஆகலின், ஆபாசவாயிலாக ஆன்மாவுக்குச் சூட்சுமசரீரத்தோடு சம்பந்தமுண்டு. ஸ்தூலசரீரத்தோடு சூட்சுமசரீரத்திற்குச் சம்பந்தமுண்டு; ஆகலின், ஸ்தூலசரீரத்தோடு சூட்சுமசரீரவாயிலாக ஆன்மாவுக்குச் சம்பந்தமுண்டு. புத்திரனோடு ஸ்தூலசரீரவாயிலாகச் சம்பந்தமுண்டு; புத்திரனுடைய மித்திரரோடு புத்திரவாயிலாகச் சம்பந்தமுண்டு. இவ்வாறு உத்தரோத்தரம் யாதொன்று ஆன்மாவின் சமீபமோ அதன்கண் அதிகப் பிரீதியுளது. யாதொரு ஆன்மாவின் சம்பந்தத்தால் பதார்த்தங்களிற் பிரீதியுண்டாகிறதோ அவ்வான்மாவின்கண் முக்கியப் பிரீதியுண்டு: வேறொரு பதார்த்தங்களிலில்லை. புத்திரனுடைய மித்திராதிடத்துப் புத்திரனுடைய சம்பந்தத்தால் பிரீதியுண்டாதலின், புத்திரனிடத்தே அதிகப் பிரீதி பிதாவுக்கு இருப்பதுபோல ஆன்மாவினுடைய அதிகசமீபத்தில் அதிகப்பிரீதி யுண்டாயிருப்பதால் ஆன்மாவின்கண்ணேயே சகலர்க்கும் பிரீதியிருக்கின்றது; அப்பிரீதி ஆநந்தத்திலும், துக்கத்தினபாவத்திலும் உண்டாகின்றது: வேறொன்றில் இல்லை. வேறுபதார்த்தங்களி லுண்டாகும் பிரீதி ஆநந்த நிமித்தமும், துக்கத்தினபாவ நிமித்தமுமேயாகலின், அவையன்றி வேறு பதார்த்தங்களில் பிரீதியில்லை. சகலர்க்கும் பிரீதிக்கு விஷயமான ஆன்மா ஆநந்தரூபமும், துக்கத்தினபாவரூபமுமாம்; சர்ப்பத்தினபாவம் இரச்சுரூபமாவதுபோலக் கற்பிதத்தினபாவம் அதிஷ்டானரூபமாகலின், கற்பிதமாகிய துக்கத்தினபாவமும் ஆன்மரூபமாம்; ஆதலால், "இந்தவான்மா முக்கியம்" என்றார்.

இங்கே பிராணசத்தத்தால் பிராணவுபலட்சிதமான மனதுகொள்ளற் பாலதாம். என்னை? மனது சொரூபானந்தத்தின் பிரதிவிம்பத்தை யுடைத்தா யிருப்பதானும், இந்திரியங்களைப் பிரேரிப்பதால் அவைகட்குச் சுவாமி யாகலானும், நேத்திராதி இந்திரியங்களில் பீடை வந்ததுகொண்டு மனதுக்கு விட்சேப முண்டாகில் அப்போது இந்திரியங்க ளொழிந்துபோமாயின், நான் சுகியாயிருப்பேனென்று மனோவிசிஷ்டனை புருஷன் சொல்வதனாலும், மனத்தின் சஞ்சாரமும் அது தேகத்தினின்று வெளிப்படுதலும் பிராணனின்றிக் கூடாமையானும் பிராணசத்தத்தால் மனது கொள்ளற்பாலதாம் எனப் பஞ்சதசியின், * டிப்பணத்தி லெழுதப்பட்டிருக்கின்றது. வாசிட்டத்தி லும்,

"தொடர்மன மேதென்னின், மெத்து மாகம பூடண ருரைத்தது விசையுயி ரசைவாகும்"—

என வீதகவ்வியர் கதையில், உகூ - வது செய்யுளில் மனதுக்கும், பிராணனுக்கும் அபேதங் கூறியிருக்கிறது; "ஏகப்பிராணன்" என்றது இக் கருத்தே பற்றியென்க. (ககஅ)

(259) [கௌணன்மா முதலியவற்றுள், இத்தருணத்தில் இவ்வான்மா முக்கியமாமென்க் கூறுகின்றார்.]

கெடலான பொழுதிவன் காணிக்கு மகனான
கெவுணவான் மாமுக்கியம்
விடலாத வுடலம்ப ரிக்குநா ளுடலான
மித்தையான் மாமுக்கியம்
திடமான நன்மைகதி வேண்டினுற் கர்த்தனுஞ்
சீவவான் மாமுக்கியம்
சடமாயு முத்தியினின் ஞானவான் மாவான
தானேம காமுக்கியம். (ககக)

இ - ள். கெடல் ஆனபொழுது = ஒருவனுக்கு மரணம் வந்தகாலையில், (தான் மரணமடையினும், புத்திராதிகள் எவ்வாறு தனமுதலியவற்றுல் சீவிப்பரோ அவ்வாறே எத்தனஞ் செய்கின்றதால்)—இவன் காணிக்கு மகன் ஆன = இவன் பூமி முதலியவற்றை ஆளுதற்குரிய புத்திரனாகிய—கெவுண ஆன்மா முக்கியம் = கௌணன்மா பிரதானமாம்.—விடலாத உடலம் பரிக்கும்நாள் = விடத்தக்கதல்லாத அந்நமயகோசமான தேகத்தை (நான் இவ்வுத்தேன், இனிப்புஷ்டியைச் சம்பாதிப்பேனென்று புஷ்டிக்கேதுவான அந்நாதிகளைப் புத்திராதிகளைச் சேர்க்காமல் தானேயுண்டு) இரட்சிக்குங் காலையில்,—உடல் ஆனமித்தை ஆன்மா முக்கியம் = தேகமான மித்தையான்மாப் பிரதானமாம்.—திடம்ஆன நன்மைகதி வேண்டினுல் = உறுதியான (அமிர்

* டிப்பணம் = உரையின் அரும்பதவுரை.

தாதிப்) பிரயோஜனத்தையுடைய சுவர்க்கத்தையடைய விச்சி(த்துத் தேக போகங்களே வெறுத்தொழித்துக் கிருச்சிர சாந்திராயணதிரூப தவத்தினே யாசரி) க்கில், (அப்போது)—கர்த்தன் ஆம் சீவ ஆன்மாமுக்கியம்=கர்த்தா வென்னுஞ் சத்தத்திற்கு வாச்சியமான (விஞ்ஞானமயகோசமாகிய) ஜீவான் மாப் பிரதானமாம்.—[அன்றியும், முக்கியான்மாவினது ஸ்தலத்தை இனிக் கூறுகின்றார்.] சடம் மாயும் முத்தியினின்=அஞ்ஞானம், (அதன் காரியங்க ளனைத்தினுஞ்டும்) அபாவமாகாநிற்கும் மோட்சதசையில்,—ஞான ஆன்மா ஆன தானே=சிதான்மாவாகிய தானே—மகா முக்கியம்=மிகவும் பிரதான மாம்.—எ - று.

சமதமாதி சாதனங்களைச் சம்பாதித்து மோட்சத்தை யடைவேனென் னும் புத்தியை எப்பொழுதடைவனோ அப்பொழுது குருவாலுபதேசிக்கப் பட்ட மஹாவாக்கிய விசாரத்தா லுண்டாகின்ற அபரோட்சஞானத்தால் நான் கர்த்தா முதலிய ரூபனல்லன், சச்சிதாநந்தரூபப் பிரஹ்மமாகிறேன் என்றிப் படிச் சிதாமான்வை யடைகின்றனன். இவ்வியவகாரத்தில் அவனுக்குச் சுத்த சேதனத்தன்மை ரூபமே உசிதமாம், கர்த்தா முதலிய ரூபத்தன்மை அங்கே உசிதமாக இல்லை யென்பார், "முத்தியினின் ஞானவான் மாவான தானே மகாமுக்கியம்" என்றார். சத்தியஞானாநந்தம் பிரஹ்மம், விஞ்ஞானமாநந்தம் பிரஹ்மம், * அநந்தரம், † அபாகியம், சம்பூரணம், ‡ பிரஞ்ஞானகனம் ஆன்மா என்னும் இவை முதலிய சுருதிகளால் ஆன்மாவுக்குப் பிரஹ்மரூபத்தன்மை யுண்டென்க.

(260) சப்தத்தின்கண் சத்திவிருத்தி, லட்சணை விருத்திகள் எப் படியோ அப்படி மூன்றுவதான கௌணீ விருத்தியுமுண்டு; எப்படிச் சத்தி விருத்தியா லுணர்த்தாநின்ற பொருளைச் சக்கியார்த்தம், முக்கியார்த்தம், வாச்சியார்த்தம் என்றும், லட்சணைவிருத்தியா லுணர்த்தா நின்றபொருளை லட்சியார்த்தம் என்றுங் கூறுநிற்பரோ அப்படிக் குணவிருத்தியா லுணர்த் தாநிற்கும் பொருளைக் கௌணார்த்தமென்பர். பதத்தின் வாச்சியார்த்தத்தில் யாதொருகுணமுண்டோ அக்குணமுடைய அவாச்சியார்த்தத்தில் பதத்தின் கௌணீ § விருத்தியுண்டு. "சிம்மம்தேவதத்தன்" என்னும் வாக்கியத்தில் சிம்மசப்தத்தின் வாச்சியார்த்தமான சிம்மமாகிய பசுவின்கண்ணுள்ள சூரத்து வம், குரூரத்துவ முதலிய குணங்களையுடைய சிம்மபதத்தின் அவாச்சியார்த்தத் தில் சிம்மபதத்தின் கௌணீவிருத்தி உண்டு; அப்படி ஆன்மபதத்தின் வாஸ் தவவாச்சியார்த்தமோ சாட்சியாம்; ஆதலால், சாட்சி முக்கியான்மாவெனப் படும். சாட்சியின்கண் ஞரோபிதமாதலால், ஆன்மபதத்திற்கு மித்தியா வாச்சியார்த்தம் லிங்கதேகமும், ஸ்தூலதேக முதலிய சங்காதங்களுமாம்; அச்சங்காதங்களுள் இகலோக, பரலோக சம்பந்திகளான கர்மங்களில் பிரவிர்

---

* அநந்தரம்=அந்தராகிதம். † அபாகியம்=வாகியராகிதம்.
‡ பிரஞ்ஞானகனம்=அதிசயஞானரூபம்.
§ விருத்தி=சம்பந்தம்.

த்திரூபமான யாதொரு குணமுண்டோ அக்குணமுடைய ஆன்மபதத்தின் அவாச்சியமான புத்திராதிகளில் ஆன்மபதத்தின் கௌணீ விருத்தியுண்டு; அக்கௌணீ விருத்தியால் உணர்த்தாநின்ற புத்திராதி ரூபங்களான பதார்த்தங்கள் கௌணனாமவெனப்படும். கள்ளனின் வேறான கட்டையைக் கள்ளனென்பது எப்படி மித்தையோ அப்படிப் பஞ்சகோசங்களே ஆன்மாவென்பது மித்தையாம். சர்வத்தினும் ஆந்தரமாகலின், சர்வத்திற்குஞ் சாட்சியாகிய ஆன்மா முக்கியான்மா வெனப்படும் என்க. (ககக)

(261) [விஷயங்களிலுள்ள விருப்பு, வெறுப்பு, நோதுமல் என்னும் இவை நியமமாயிராமல் மாறுவபோல ஆன்மாவின் கண்ணுள்ள விருப்பு மாறுமையின், ஆன்மாவே ஆநந்தரூபமென்று ஆன்மாநந்தத்தை முடிக்கின்றார்.]

புலியுமறு கூலமெனி லிட்டமாம் பகைசெயிற்
புதல்வனெனினும் வெறுப்பாம்
உலகிலிரு வகையுமல் லாதபுல் லாதியிலு
தாசீன மாமாதலான்
மலினமறு சின்மயன் பலவகையு மிப்படி
மகிழ்ச்சியில் விருப்பமிகழான்
அலகிலா நந்தவடி வாகுமுன் சொரூபத்தை
யாராய்ந்துபார் மைந்தனே. (கஉ0)

இ - ள். புலியும்=(வெறுப்பு விஷயமான) வியாக்கிரமும்,—அது கூலம் எனில் இட்டம் ஆம்=(விழுங்குதப்போர் புரிவதால் சுகத்திற்குச்) சாதனமாமாயின், (அப்போது) பிரிய விஷயமாம்.—பகைசெயில்=பிரதிகூலமான செய்கையை (த் தனக்குச்) செய்யில்,—புதல்வன் எனினும்=(அப்போது விருப்பு விஷயமான) புத்திராதிகளிலும்—வெறுப்பு ஆம்=வெறுப்பு விஷயமாம்.—உலகில்—இருவகையும் அல்லாத=விருப்பு விஷயமும், வெறுப்பு விஷயமுமல்லாத—உதாசீன புல் ஆதியில்=நோதுமல் விஷயமான திரண முதலியவற்றில்,—(இருவகையும்) ஆம்=(தீக்காய் தன் முதலிய செய்கையில் அது பற்றுவித்தன் முதலியவற்றிற் குபகாரியாமாயின், அப்போது) விருப்பும், (நடத்தன் முதலிய செய்கையில் காலின்கண் ணழுந்தத் தைத்தன் முதலியவற்றில் அபகாரியாமாயின், அப்பொழுது) வெறுப்பு முளவாகா நிற்கும்.—மலினம் அறு சின்மயன்=சுத்த சின்மயனான ஆன்மா,—பலவகையும்=பலதிறத்தும்—இப்படி=(வியாக்கிரம், புத்திரன், திரணாதிகளில் விருப்பு, வெறுப்பு, நோதுமல்) இப்போது கூறியபடி நியமமாகவில்லாமல் மீங்காநிற்பனபோல—மகிழ்ச்சியில்=தன்னுநந்தத்தில்—விருப்பம் இகழான்=ஒரு போதும் விருப்பம் விடாமலுடைய ஞகின்றான்;—ஆதலால்,—அலகில் ஆநந்த வடிவு ஆகும் உன் சொரூபத்தை=அபரிச்சின்ன ஆநந்தரூபமான உனது சொரூபத்தை—மைந்தனே—ஆராய்ந்து பார்=(தைத்திரீய சுருதியிற் கூறியபடி பஞ்சகோசத்தை வேறுபடுத்தி அவைகளுள்ளே,) அநுபவித்தறிவாய். —எ - று. (கஉ0)

(262) [இனி இவ்வான்மாநந்தந்தானே யோகாப்பியாசத்தால் முக்கியாநந்தமாக வெளிப்படுகிறதென்றும், சார்வபௌமாதியாநந்தங்கள் இதனது லேசமென்றும் தரிசிப்பித்தற்பொருட்டு ஆநந்தத்தின்பேதமித்தன்மைத்தெனச் சங்கித்துணர்த்துகின்றார்.]

மானஞ்சி றந்தகுரு நாதனே யாநந்த
வகைகளைத் தானெயென்னிலோ
ஞானந்தி கழ்ந்தபிர மாநந்தம் வாசனை
நந்தம்விட யாநந்தமென்
றூநந்த மூன்றுவித மெட்டுவகை யென்பர்சில
ரவ்வைந்து மிதிலடக்கம்
யானந்த வகைசொலக் கேண்மைந்த னேயெட்டு
மிஃதின்ன தின்னதெனவே. (கஉக)

இ - ள். மானம் சிறந்த=பெருமை மிகுந்த—குருநாதனே—ஆநந்த வகைகள்=ஆநந்தத்தின் கூறுபாடுகள்—எத்தனை என்னில்=எத்தனை யென்று நீ வினவில்,—ஞானம் திகழ்ந்த பிரமாநந்தம்=தனது ஞானத்தாலேயே (சுழுத்தியின்கண்) விளங்குவதான பிரஹ்மாநந்தமும்,—வாசனாநந்தம்=(தூஷ்ணீம்ஸ்திதிக்கண் விஷயத்தினநுபவமின்றி விளங்குவதான) வாசனாநந்தமும்,—விடயாநந்தம்=(வாஞ்சித்த விஷயத்தின்லாபத்தால் அந்தர் முகமனத்தின்கண் பிரதிவிம்பிக்கின்ற) விஷயாநந்தமும்—என்று=என—ஆநந்தம் மூன்றுவிதம்=ஆநந்தம் மூவகையாம்; (அம்மூவகை யாநந்தங்களின் வேறுக இச்சகத்தின்கண் யாதொரு ஆநந்தமுமில்லை.)—எட்டுவகை என்பர் சிலர்=ஆநந்தமெண்வகை யென்பர் சிலபெரியோர் :—அவ்வைந்தும் இதில் அடக்கம்=அவர்கூறும் ஏனைய ஆநந்தங்களும் இம்மூவகை ஆநந்தங்களுள், அந்தர்ப்பாவமாம்;—எட்டும் இஃது இன்னது (இஃது) இன்னது என=எட்டினையும் இன்னவாநந்தம் இன்னநாமமுடையது, இன்னவாநந்தம் இன்னநாம முடையதென்று—யான்=நான்—அந்தவகை சொல=அவ்வாநந்த வேறுபாடுகளையும், அவற்றின் நாமவேறுபாடுகளையுங்கூற—மைந்தனே கேள்.—எ - று.

(263) முக்கியாநந்தம், ஆன்மாநந்தம், அத்துவிதாநந்தம் இம்மூன்றும் பிரஹ்மாநந்தத்திற்கு வேறின்மையின், பிரஹ்மாநந்தத்தில் *அந்தர்ப்பாவமாம். என்னென்? பிரஹ்மாநந்தந்தானே அதிவிவேகிக்கு யோகரூபவுபாயத்தால் முக்கியாநந்தமாகவும், மந்தப் பிரஞ்ஞையுடைய சிஞ்ஞாசுக்கு ஆன்மாநந்த விவேக ரூபவாயிலாகப் பரமப்பிரேமாஸ்பத வாநந்தமாகவும் வெளிப்படலானும், ஆன்மாவாகலாற் சஜாதீயமென்னும் கெவுணன்மாவாகிய புத்திரபாரியாதிகளினும், அநான்மாவாகலின், விஜாதீயமென்னும் ஆகாசாதிகளினும் வேறுய்ச்

* அந்தர்ப்பாவம்=உள்ளடங்கியிருப்பது.

* சத்வைதமான ஆன்மாநந்தத்திற்கு அத்துவிதீய முக்கியாநந்தத்தின்றன்மை கூடாதென்றுவரும் வாதியின் சங்கையைப்பற்றி தைத்தீரீய சுருதியிற்கூறிய ஆகாசமுதற் றனது தேகபரியந்தமான சகத்து ஆநந்தத்தின் அந்நியமல்லாமையின், ஆன்மாநந்தத்துக்கு அத்துவிதீயப் பிரஹ்மத்தன்மை உண்டென்று இதற்கு முன்னூலான பஞ்சதசியிற் கூறியிருப்பதனனும் சுழுத்தியின்கண் சுவப்பிரகாசமாயுள்ள பிரஹ்மாநந்தத்தில் முக்கியாநந்தம், ஆன்மாநந்தம், அத்துவிதாநந்தம் மூன்றும் அந்தர்ப்பாவமாம். இவர் யோகாநந்தத்தைப் பஞ்சதசியிற் கூறியபடி நிஜாநந்த மென்னாது முக்கியாநந்தமென்று இனிக்கூறுவது சிரத்தை முதலியவற்றின் வாயிலாக ஓர்பொழுது ஆநந்தத்தி னிச்சயத்தையுடைய புருஷன் உதாசீனகாலத்திலுந் தோன்றுவதான யாதொரு ஆநந்தத்தின் வாசனையுண்டோ அதை யுபேட்சித்து முக்கியாநந்தத்திற் றற்பரனுய் அம்முக்கியாநந்தத்தையே பாவிக்கின்றனனென்று பஞ்சதசியிற் கூறியிருப்பதுகொண்டே என்க. [ஜந்நியமாகலான் விஷயாநந்தம், வாசனாநந்தம் அமுக்கியம்: ஜநகமாகலாற் பிரஹ்மாநந்தம் முக்கியம்: பிரஹ்மாநந்தத்திற்கும், முக்கியாநந்தத்திற்கும் பேதமில்லை.] இவர் நிசாநந்தமென்று இனிக்கூறுவதை வாசனாநந்த நாமமுடையதாகப் பஞ்சதசியிற் கூறியிருக்கின்றனர்: சுழுத்தியினின்றும் எழுந்தகாலையில் சுகதுக்கங்களினபாவமிருத்தலின், அது உதாசீனதசையாம்; அதில் சுழுத்தியில் அநுபவித்த பிரஹ்மாநந்தத்தின் வாசனை சொற்பகாலபரியந்தந் தொடர்ந்திருப்பதால் இச்செய்யுளில் பஞ்சதசியிற் கூறியபடி வாசனாநந்த மென்றனர். அப்படியே சாக்கிரத்தில் எங்கே எங்கே சுகதுக்கமிரண்டும் அபாவமாயிருக்குமோ அவ்வக்காலம் உதாசீனமென்று சொல்லப்படுகிறது. எங்கே சுகமுண்டோ அங்கே இராகமுண்டாம்: எங்கே துக்கமுண்டோ அங்கே துவேஷமுண்டாம்; ஆகலின், சுகதுக்கரூப நிமித்தத்தாலுண்டாகாநிற்கும் இராகத்துவேஷங்களின் அபாவகாலத்தை உதாசீனத்துவமென்றும், தூஷ்ணீம் ஸ்திதியென்றுங் கூறுவர்; ஆதலால், தூஷ்ணீம் பூதாவஸ்தையிலுளதாகும் ஆநந்தம் இங்கே கூறிய வாசனாநந்தத்தில் அந்தர்ப்பாவமாம். என்னை? இரண்டும் நிர்விஷயமாகலின், விஷயாநந்தம்போல வித்தியாநந்தமும் அந்தக்காண விருத்திரூபமேயாதலால், விஷயாநந்தத்தில் அந்தர்ப்பாவமாம் என்றறிக. (கஉக)

(264) [எண்வகையாநந்தங்களின் நாமங்களோடு அவற்றின் நபங்களைத் தொகுத்துக் கூறுகின்றார்.]

போகத்தில் வருசுகம் விடயசுக நித்திரைப்
போதுளது பிரமசுகமாம்
மோகத்த னந்தலிற் சுகம்வா சனைச்சுகமு
மூப்பிரிய மான்மசுகமாம்
யோகத்தி லுளதுமுக் கியசுகமு தாசீன
முற்றசுக நிசசுகமதாம்

* சத்வைதம் = துவைதத்தோடு கூடியது.

ஏகத்தை நோக்கலத் துவிதசுகம் வாக்கியமெ
ழுந்தசுக ஞானசுகமே. (கஉஉ)

இ - ள். போகத்தில் வருசுகம் விடயசுகம்=(இஷ்ட விஷயங்களான மாலை முதலியவை லபித்து அவைகளை) அநுபவிக்கும்போது (இச்சாநிவிர்த்தியின் நிமித்தத்தா லுளதாகாநிற்கும் அந்தர்முக மஞ்ஞெவிருத்தியின்கண் யாதொரு ஆன்மசொரூபாநந்தம்) பிரதிவிம்பியாநிற்குமோ அது விஷயாநந்தமாம்.—நித்திரைப்போது உளது பிரமசுகம் ஆம்=சுழுத்திகாலத்தில் (சொப்பிரகாசமான யாதொரு) சுகமுண்டோ அது பிரஹ்மாநந்தமாம்.—மோகத்து அனந்தலில் சுகம்=(சாகாரணமடைந்த புருஷனுக்கு) மயக்கத்தையுடைய சுழுத்தியின்கண் (அநுபவித்த பிரஹ்மாநந்தத்தின் *வாசனை (பின்னர் சொற்ப காலபரியந்தந் தொடர்ந்திருப்பதால்,)—வாசனைச் சுகம்=வாசனாநந்தமாம்.—மூழுப்பிரியம்=பிரியவஸ்துக்களுள், யானை அதிகப்பிரிய வஸ்துவென்னும் விவேகத்தால் எழாநின்ற வாநந்தம்—ஆன்மசுகம் ஆம்=ஆன்மாநந்தமாம்.—யோகத்தில் உளது சமாதியின்கண் (நிராவரணமாய்த்) தோன்றா நிற்கும் ஆநந்தம்—முக்கிய சுகம்=முக்கியாநந்தமாம்.—உதாசீனம் உற்றசுகம்=உதாசீனகாலத்திற் பொருந்தாநிற்கு மாநந்தம்—நிசசுகமது ஆம்=நிசாநந்தமாம். ஏகத்தை நோக்கல்=(துவிதத்தை மாயாமயமென் றுபேட்சித்து) அத்துவிதமான தன்னை நாடாநிற்கும் (விவேகத்தாற் றேறன்றாநிற்கும்) ஆநந்தம்—அத்துவிதசுகம்=அத்துவிதாநந்தமாம்.—வாக்கியம் எழுந்த சுகம்=மஹாவாக்கிய விசாரத்தாலுண்டாகாநின்ற (சமுசயரகிதமான ஞானத்தால் அந்தக்கரண விருத்தியின்கண் பிரதிவிம்பியாநின்ற) ஆநந்தம்—ஞானசுகம்=வித்தியாநந்தமாம்.—எ - று. (கஉஉ)

(265) [இனி அஷ்டவிதாநந்தங்களை விஸ்தாரமாக்கிக் கூறத்தொடங்கி விஷயாநந்தத்தின் சொரூபத்தைத் தரிசிப்பிக்கின்றார்.]

[வேறு.]

இவ்வா றுரைசெயுஞ் சுகமே தங்களி னியல்பா மவைசொல மகனேகேள், ஒவ்வா நனவினி லுழல்வா னிடர்கெட வுறங்குஞ் சயனம துறுநேரம், செவ்வா மனமக முகமா மதிலொளிர் சித்தின் சுக நிழல் சேருங்காண், அவ்வா றிவனுள மகிழ்வா மநுபவ மதுதான் விஷயசு காநந்தம். (கஉங)

இ - ள். இவ்வாறு உரைசெயும்=இந்தப்படியாகப் (பஞ்சதசீ முதலிய சாஸ்திரங்களிற்) பிரதிபாதியாநிற்கும்—சுகபேதங்களின்=ஆநந்த வேறுபாடுகளின்,—இயல்பு ஆம் அவை சொல=சுபாவங்களையாங்கூற—மகனே கேள்=மைந்தனே கேட்பாய்;—நனவினில் உழல்வான்=சாக்கிரத்தின்கண் (தனக்கு வேண்டுவனவான விஷயங்களைச் சம்பாதித்தன் முதலிய வியவகாரங்களிற்) சுழலாநின்ற சீவனனவன்—ஒவ்வா இடர்கெட=(அவ்வியவ

---

* வாசனை=சம்ஸ்காரம்.

காரங்களா லுளவாகாநிற்கும்) சகிக்கக்கூடாத துன்பங்கள் நீங்குதற் பொருட்டு—உறங்கும் சயனமது உறுநேரம்=நித்திரை பண்ணுதற் கேது வாகும் மிருதுவான சையைமுதலியவற்றிற் சயனஞ்செய்யுஞ் சமயத்தில்—செவ்வாமனம்=செவ்வையாக அவனது புத்தியானது—அகமுகம் ஆம்=அந்தர்முகமாகும்;—அதில்=அவ்வந்தர்முகமான புத்தி விருத்தியின்கண் (தனது எதிரானதர்ப்பணத்தின்கண் முகம்போல)—ஒளிர் சித்தின் சுகநிழல்=விளங்காநின்ற சொரூப பூதாநந்தத்தின் சாயையானது—சேருங்காண்=பிரதிவிம்பியாநிற்கும்;—அவ்வாறு=கூறியவழியாக—இவன் உளம்=புருஷனுடைய புத்திவிருத்தியில்—மகிழ்வு ஆம் அநுபவம் அதுதான்=இன்பமாகிய அவ்வநுபவமே—விஷய சுக ஆநந்தம்=விஷயசுகமான ஆநந்தமாம்.—எ - று.

உரைசெய்த வென்றும் பாடம். (கஉங)

(266) [பிரஹ்மாநந்தவியல்பு கூறுகின்றார்.]

ஈனந் தருசுக விடயந் திரிபுடி யிடரா மெனமன மசையாமல்
சேனந் தனதுகு லாயந் தனில்விழு செயல்போனித்திரை செறிசீவன்
தானந் தமில்பா னுடனென் றுவனெரு தனையல் லதுபிற நினையாமல்
ஆனந் தமயனு மாவன் சுகமிகு மதுதா னுயர்பிர மாநந்தம். (கஉச)

இ - ள். ஈனம் தரு விடயசுகம்=இழிவைத்தராநின்ற விஷயசுகமானது—திரிபுடி இடர் ஆம் என=புசிப்பவன், போகம், போக்கிய ரூபமான திரிபுடியோடு கூடினதால் துக்கமாமென்று கருதி (அத்திரிபுடியா லுண்டாகாநின்ற சிரம நிவிர்த்தியின்பொருட்டு)—மனம் அசையாமல்=மனஞ்சலியாமல்—நித்திரை செறி சீவன்=நித்திரை பொருந்திய அச்சீவனனவன்—அந்தம் இல் பரன் உடன் ஒன்றுவன்=அந்தமற்ற (ஆநந்தரூபமான) பிரஹ்மத்தோடுகூடத் தாதாத்மியத்தை யடைவன்.—ஒரு தனை அல்லது=அத்வைதமான தன்னையல்லாமல்—பிறநினையாமல்=வேறொன்றையுஞ் சிந்தியாமல்—தான் ஆனந்தமயனும் ஆவன்=(சுழுத்தியில் பிரஹ்மத்தோடு ஏகத்துவத்தை யடைகிறானென்னுஞ் சுருதியால்) தானும் அச்சுழுத்தியின்கண்ணுள்ள ஆநந்தரூபனுமாவன்;—மிகுசுகம் அதுதான்=(சுழுத்தியிலுள்ள) மிக்க ஆநந்தமாகிய அதுவே—உயர் பிரமாநந்தம்=உயர்வான பிரஹ்மாநந்தமாம்.—[சொல்லிய சுழுத்தியின்கண்ணுள்ள ஆநந்தத்திற்குச் சேனமுதலிய வேததிருஷ்டாந்தங்கள் சுருதியிற் கூறியிருக்கின்றதென்று கூறுகின்றார்.] சேனம்=பருந்தானது—தனது குலாயம் தனில்=தனது கூட்டில்—விழுசெயல் போல்=ஆகாசத்தினின்றும் வீழாநின்ற செய்கைபோல.—எ - று.

(267) "சேனம்" என்பது, உபலட்சணமாகலின் சுழுத்தியாநந்தத்திற்குத் திருஷ்டாந்தமாகச் சுருதிகளிற்கூறியுள்ள சகுனி, சேனம், குமாரன், மஹாராஜன், மஹாப்பிராமணன் என்னும் ஐவகைத்திருஷ்டாந்தமுங் கொள்ளற்பாலனவாம்; அத்திருஷ்டாந்தங்களாவன; க - வது—அஸ்த, தம்ப மூதலானவைகளிற் கட்டுண்டிருந்த * சகுனிப் பட்சி இரை முதலியவற்றைக்

* சகுனி=இராஜாளிப்பட்சி.

கவர்த்தற்பொருட்டுப் பூர்வாதி திசைகளிற் சுழன்றுதிரிந்து அங்கே விசிராந்தியடையாமற் பின்கட்டுண்ட ஸ்தானமான அஸ்தம் முதலானவைகளே யாசிரயிப்பதுபோலச் சீவனுடைய உபாதிரூபமான மனதும் புண்ணியபாவப் பயனை சுகதுக்கங்களே யநுபவித்தற் பொருட்டுச் சொப்பன, சாக்கிரமென்னும் அவஸ்தைகளில் அங்கங்கே சுழன்று போகப்பிரதமான கன்மம் நசிக்கில் தனது உபாதானமான அஞ்ஞானத்தில் லீனமாம்; அம்மனம் லயமாகின், மனோரூப உபாதியுடைய சீவன் பரமான்மாவே ஆய்விடுவன்; இது சாந்தோகீய சுருதியின் சஷ்டாத்தியாயத்திலுள்ள வாக்கியார்த்தம். உ - வது—ஆகாசத்தின்கண் எங்குஞ் சஞ்சரியாநின்ற சேனமென்னு நாமமுடைய பட்சி ஆகாசத்தில் சஞ்சாரூபநிமித்தத்தாலுளதான சிரமநிவர்த்தியின் பொருட்டுச் சயனஞ்செய்தற்குத் தனது ஸ்தானத்தின் அபிலாஷையொன்றினையே யுடைத்தானதாய்த் தனது குடம்பையிற் பட்சங்களே யொடுக்கிக்கொண்டு அதிவேகமா வீழாநிற்பதுபோல மனோவுபாதியையுடைய சிதாபாசனும் பிரஹ்மாநந்தம் ஒன்றிலேயே அபிலாஷையுடையனாய் யாதொன்றினாலுந் தடைப்படாமல் சுழுத்தியினிமித்தம் இருதயாகாசரூபமான ஸ்தானத்தில் வேகமாகச் செல்லா நின்றனன்; இது பிருகதாரண்ணிய உபநிடத வாக்கியார்த்தம். ஊ - வது—அதிபாலன் கழுத்தளவு நிரம்ப ஸ்தனபானஞ் செய்து மிருதுவான சய்யையிற் சயனித்துக்கொண்டு யான், எனது என்பனவாதிய விசேஷ ஞானமின்மையின், இராகாதிரகிதனாய்ச் சுகமூர்த்தியாகவே யிருக்கின்றனன் என்பதும், சு - வது—சக்கிரவர்த்தியாகிய அரசன் ஞானத்தோடு கூடிய புத்தியின்மையனாயினும், சர்வமநுடாநந்தங்களோடுங் கூடினவனுதலால் பிரார்த்திக்க யோக்கியமான விஷயங்களினபாவத்தால் இராகாதிரகிதனாய், ஆநந்தமூர்த்தியாகவே யிருக்கின்றனன் என்பதும், ரு - வது—மஹாப்பிராமணனென்னும் பிரத்தியகபின்ன பிரஹ்மசாட்சாத்காரமுடையவன் நான் கிருதகிருத்தியனாகின்றேனென்னும் வித்தியாநந்தத்தின் பரமகாஷ்டையையடைந்தவனாய்ப் பரமாநந்தசொரூபமாகவே யிருக்கின்றனன் என்பதும் பிருகதாரண்ணியத்திற் பாலாகிப்பிராமணப் பிரகரணத்திலுள்ளன; இவ்வைந்து திருஷ்டாந்தங்களாலும் சுழுத்தியை யடைந்த புருஷன் ஆநந்தரூபமாகவே யிருக்கின்றமை காண்க.

(268) குமாரன் முதலிய மூவகைப் புருஷரை உதாரணமாகக் கூறியதன் தாற்பரியமேதெனின்;—விவேகரகித புருஷரின் மத்தியில் அதிபாலன் சுகியாயிருக்கின்றனன். * விவேகி புருஷரின் மத்தியில் சாருவபௌமன் சுகியாயிருக்கின்றனன். அதிவிவேக புருஷரின் மத்தியில் ஆனந்தரூபமான ஆன்ம சாட்சாத்காரமுடைய புருஷனே சுகியாயிருக்கின்றனன். அந்நிய புருஷரோ சர்வதா இராகாதியுடையராயிருத்தலின், சுகமின்மையராகவே யிருக்கின்றனர்; ஆதலால், அவர்களைச் சுழுத்தியுடையவனுக்குத் திருஷ்டாந்தமாகக் கூறவில்லை என்க. (கஉசு)

* விவேகி = விவகாராதிகளிற் குசலர்.

(269) [சுழுத்தியின்கண் ஆநந்தமுண் டென்பதைச் சுருதி, யுத்தி, அநுபவங்களா லுணர்த்துகின்றார்.]

தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள்விழி துயில்வோர்கள், தாங்கும் மலரணை நன்ரு கச்சிலர் சம்பா திப்பது தானுகம், தீங்குந் நன்மையு மாண்பெண் முறைமையுந் தெரியா தமளிசெய் பொழுதேபோல், ஆங்குள் வெளிகளு மறியா வநுபவ மதனு லதுபிர மாநந்தம். (கஉடு)

இ - ள். தூங்கும் சுகமது = உறங்கும் (காலையில் சகலப் பிரபஞ்சமும் விலீனமான தமப்பிரதான பிரகிருதியால் ஆச்சாதிதனான சீவனுனவன் அடையாநின்ற) சுகமான து — பிரமச்சுகம் எனல் = பிரஹ்மாநந்தமென்று சொல்லுதல் — சுருதிப்பொருள் = சுருதியின் அர்த்தமாம். — விழி துயில்வோர்கள் = நித்திரை செய்யாநிற்பவருள்ளே, — சிலர் = (தனவான்களான) சிலபேர் — தாங்கும் மலர் அணை = (நித்திரைக்கு விக்கினமாகச் சரீரத்தின்கட் பீடை யுறுமல்) காக்கத்தக்க மிருதுவான பூவணை முதலியவற்றை — நன்ரு க = திரவியஞ் செலவிட்டுச் சரீரபீடை முதலிய வெகு பிரகாரமான பரிசிரமத்தால் — சம்பாதிப்பதுதான் = சம்பாதிப்பதே — ஊகம் = (சுழுத்தியில் பிரஹ்மாநந்தமுண்டென்பதற்கு) உத்தியாம். — தீங்கும் நன்மையும் = நன்மைதீமைகளான வாகிய விருத்தாந்தமும், ஆந்தரவிருத்தாந்தமும், — ஆண் பெண் முறைமையும் = ஆண்பெண்ணென்னு மொழுங்கும் — தெரியாது = (கிஞ்சித்தும்) அறியாமல் — * அமளி செய்பொழுதே போல் = (காமியாகிய புருஷன் தனக்குப் பிரியமான) ஸ்திரீயை ஆலிங்ஙனஞ் செய்யுங்காலையிலே (சுகமூர்த்தியாயிருப்பது) போல — ஆங்கு = அச்சுழுத்தியின்கண் (பிராஞ்ஞனவன் பரமாத்மாவோடுகூட ஏகத்துவத்தை யடைந்தவனுய்) — உள் வெளிகளும் அறியா = ஆந்தரவாகியங்களுள், ஒன்றுமறியாமல் (ஆநந்தமூர்த்தியாகவே) இருப்பது — அநுபவம் = அநுபவமாம்; — அதனுல் = இப்படிச் சுருதி, யுத்தி, அநுபவங்களுளவாகையால், — அது பிரமாநந்தம் = (சுழுத்தியின்கண்ணுள்ள) அவ்வாநந்தம் பிரஹ்மாநந்தமாம். — எ - று.

சுழுத்திகாலத்திற் சகலபிரபஞ்சமும் விலீனமான தமப்பிரதானமாகிய பிரகிருதியால் ஆவிருதனான சீவன் சுகரூபமான பிரஹ்மத்தையடைகின்ரு னென்று அதர்வணவேதத்தின் கைவல்யசுருதி கூறுகின்றதென்பார், "தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள்" எ - ம், சுழுத்தியின்கண் சுகமில்லையாயின், மகத்தரப்பிரயாசத்தால் மிருதுசய்யாதி சாதனங்கள் என் சம்பாதிக்கின்ரூர்களென்பார், "விழிதுயில்வோர்கள், தாங்கும் மலரணை நன்ற கச்சிலர் சம்பா திப்பதுதானுகம்" என்றும் கூறினர். "அமளி செய் பொழுதேபோல்" என்னும் உத்தி பிருகதாரண்யத்தின் ஜோதிர்ப் பிராமண நாமப்பிரகரணத்திலுள்ள வாக்கியம். திருஷ்டாந்தத்தில் வெகு மார்க்கங்கள் எங்கே யொன்ரு கக் கூடுகின்றனவோ அப்படிப்பட்ட ஸ்தானம்

* "அமளிசெய்" என்பது, இடக்காடக்கல்.

அல்லது, லகுமார்க்கம் இவை முதலியவை வாகியவிருத்தாந்தம், கிரகிருத்தியம் ஆந்தர விருத்தாந்தம்: தாஷ்டாந்தத்தில் சாகரணம் வாகியவிருத்தாந்தம், நாடியின்கண்ணுள்ள சொப்பனம் ஆந்தர்விருத்தாந்தம் என்றறிக. "தீங்தந் நன்மையு மாண்பெண் முறைமையும்" என்பது, இவர் கருத்து. இதற்கு முன்னூலான பஞ்சதசியை ஆராய்ந்து இவ்வா றுரைசெய்யாமல் சுவகபோல கற்பனையாக இச்செய்யுளுக்கும், இதற்கு முன்னும் பின்னு மூள்ள செய்யுள்கட்கும் உரைசெய்திருக்கின்றனர்; அறிந்தோர்கள் அதனை உரையென்று ஒப்பார்கள். ஆநந்த மூவகையென்றும், அதன்விரிவு எண்வகையென்றும், ஏனையவைந்தும் மூவகையி லந்தர்ப்பாவமென்றும், பிரஹ்மாநந்தம், வாசனாநந்தம், விஷயாநந்தமென்னும் இம்மூவகை ஆநந்தத்திற்கு அந்நிய மாக உலகில் ஆநந்தமில்லையென்றும் இதற்கு முன்னூலான பஞ்சதசியில் ஸ்ரீ - வித்யாரண்ய சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டிருக்க அதற்கு மாறுக தானசுகமென்று பாடங்கூறி அதற்குரைசெய்திருப்பது வேறே எப்பிரமாணங்கொண்டோ யாம் அறியேம். (கஉடு)

(270) [அநுபவம், ஸ்மரணம் இவ்விரண்டற்கும் அதிகரணம் ஒன்றேயென்னும் நியமத்தால் யான் சுகமாக வுறங்கினேன், ஒன்று மறியாதிருந்தேன் என்று சுழுத்திகாலத்திலுள்ள சுகத்தையும், அஞ்ஞானத்தையும் விஞ்ஞானமய சத்த வாச்சியனை சீவன் ஸ்மரணஞ்செய்யக் காணப்படுவதால் அவனுக்கு கஃதேவ்வாறு கூடுமென்று சீடன் சங்கித்தல்.]

உதவும் புவியினி லொருவன் னநுபவ மொருவன் மனதினி லுதியாதே, மதியுங் கெடுகிற துயில்கொண் டானந்த மயனன் றுசுக முறுகின்றான், இதுவுஞ் ஞான மயனுஞ் சிந்தையி னினைவாய் வந்திட லழகன்றே, சுதைவிண் ணோர்புகழ் குருவே நீரிது சொல்லீர் சகலமும் வல்லீரே. (கஉசு)

இ - ள். உதவும் புவியினில்=(கர்மாநுஷ்டான வாயிலாகச் சர்வாபீஷ்டங்களையும் யாவர்க்கும்) பயவாநிற்கும் பூமியின்கண்ணே—ஒருவன் அநுபவம் ஒருவன் மனதினில் உதியாதே=தேவதத்தன் என்னு மொருவன் அநுபவம் எக்ஞதத்தன் என்னு மற்றொருவன் மனதின்கண் (*ஸ்மரணரூபமாக) உதிக்கமாட்டாதே?—மதியும் கெடுகிற துயில்கொண்டு=(மனோமய கோசத்தோடு) விஞ்ஞானமய கோசமும் நாசமாகின்ற நித்திரையடைந்து—ஆநந்தமயன் அன்றே சுகம் உறுகின்றான்=ஆநந்தமயனல்லவா சுகமநுபவிக்கின்றான்; — இது=இவ்வநுபவம் — விஞ்ஞானமயன் ஆம்=விஞ்ஞானமயனுகும் (கர்த்தாவின்,)—சிந்தையில்=காரணரூபமாகும் மனதில்—நினைவு ஆய் வந்திடல் அழகு அன்றே=ஸ்மரணமா யெழுதலழகல்லவே: (ஆகவின், இது பொருந்துமாறெவ்வாறு?)—சுதை விண்ணோர் புகழ் குருவே=அமுத

* ஸ்மரணம்=ஞாதவஸ்துவின் அநுபவாதின சம்ஸ்கார ஜந்யஞானம்.

(பானஞ்செய்து அஜராமரணராயுள்ள தேவர்களாலுந் துதிசெய்யப்படுகின்ற) மகிமையினையுடைய குருவே—நீர்=தேவரீர்—சகலமும் வல்லீர்=(என்போலிகள் வினவாநிற்குஞ் சந்தேகங்கள்) அனைத்தையும் போக்கவல்ல சர்வஜ்ஞராதலால்,—இது சொல்லீர்=இச்சந்தேகத்துக்குஞ் சமாதான மருள்வீராக.—எ - று.

நினைவாய் வந்திடு மெனல்கண்டேன், என்றும் பாடம். (கஉசு)

[மேலதற்கு உத்தரங் கூறுகின்றார்.]

நெய்யும் வெண்ணெயு மிருபேர் களுமறி நினைவிற் பிறிவறி வினிலில்லை, செய்யுந் நனவினி லிறுகும் மனதொடு சேருஞ் சின்மய விஞ்ஞானன், நையுந் துயர்மன நழுவும் பொழுதுணர் ஞானச் சுக முணு மாநந்தன், பெய்யுந் துளிகளு நீருங்குளமொடு பாகும் போலிவர் பிறிவன்றே. (கஉஎ)

இ - ள். நெய்யும் வெண்ணெயும்=(உருக்கின) நெய்யும், (உருக்காத) நெய்யும் (உருவின்வேறு சுவையிலொன்றுபோல)—இருபேர்களும்=ஆநந்தமயன், விஞ்ஞானமயனென்னு மிருவரும்—நினைவில்பிறிவு அறிவினில் இல்லை=அவித்தை, அந்தக்காரணவிருத்தி (ரூபஉபாதிதிருஷ்டி) யினுற் பிரிவேயன்றிப் பிரதிவிம்பசேதன ரூபதிருஷ்டியினுற் பிரிவில்லை.—[ஓர் பிரதிவிம்ப சேதனந்தானே உபாதிபேதத்தால் இருவகை நாமமடைந்ததே யன்றிச் சொரூபமாகப் பேதமின்றென்பது நன்றக விளங்குதற்பொருட்டு அநேக திருஷ்டாந்த முகத்தால் கூறுகின்றார்.] செய்யும் நனவினில்=(போகப் பிரதமான கர்மவசத்தால் நாநாவியவகாரங்களையுஞ்) செய்யாநின்ற சாக்கிரத்தின்கண்—இறுகும் மனதொடு சேரும்=தூலமாகுமந்தக்காரண வுபாதியோடு கூடாநிற்கும்—சின்மய விஞ்ஞானன்=சின்மயஞனவிஞ்ஞானமய னென்னும் ஆன்மா—நையும் துயர் மனம்=வருந்துந்துன்பகாரணமான அந்தக்காரணம்—நழுவும் பொழுது=(போகப்பிரதமானகர்மக்ஷயவசத்தால் நித்திராரூபமாக) விலீனமாகுங் காலையில்,—உணர்ஞானச் சுகம் உணும் ஆநந்தன்=(காரணசாபேட்சையின்றி அஞ்ஞானத்தை) அறியவல்ல பிரஹ்மாநந்தத்தை அநுபவியாநிற்கும் ஆநந்தமயன் என்று சொல்லப்படுவன்.—(ஆகலின்,) பெய்யும் துளிகளும்=(மேகத்தாற்) சொரிகின்ற மழைத்துளிகளும்,—நீரும்=கூவதடாகாதிகளிலுள்ள புனலும்,—குளமொடு பாகும்போல்=வெல்லமும், பாகும்போலவும்—இவர் பிறிவு அன்று=இவர் வேறல்லர்—அறி=(என) இங்ஙனம் அறிதி.—எ - று.

இக்காரணத்தால், ஆநந்தமய னநுபவஸ்மரணம் விஞ்ஞானமயனுக் குண்டாவதால் விரோதமின்மை மென்பது கருத்து.

இதன் விவரம் முதற்படலத்தில், உங - வது செய்யுளின்விசேஷவுரையில் அவஸ்தைகளி னிலக்கணங் கூறியிருப்புழி காண்க. "ஞானச்சுக முணும்" என்றதால், சுழுத்தியின்கண் ணந்தக்காரணம் அபாவமா யிருத்

தலின், அதனை யுண்ணுதற்கு வேறே காரணமேதெனின்;—சொரூப பூதமான சுகத்தைச் சிதாபாசசகித அஞ்ஞானத்தினின்றும் உற்பன்னமாய்ச் சுகாதிகளை விஷயமாகவுடைய சத்துவகுணத்தின் பரிணாம விசேஷரூபமான விருத்தியால் உண்ணுகின்றன னெனக்கொள்க; இதனை,

"பிரமானந்த முறுமாயா விருத்தியெனு நுண்காரணந் தன்னை நுபவித்தல் சுழுத்தியாம்"—

என்னும் வேதாந்தசூடாமணியானும் அறிக. இங்கே "வெண்ணெய்" எ - து, அக்கினியின் சையோகாதிகளால் உருகிப் பின்னர் வாயுவாதிகளின் சம்பந்தத்தால் உறைந்து வெண்மை நிறமுற்ற நெய்யை. (கஉ ஏ

(271) [சுழுத்தியின்கண் ஆநந்தமயநுபனை சீவனுல் பிரஹ்மசுக மநுபவிக்கப் படுமாயின், அதைப் பரித்தியாகஞ்செய்து வாகியத்தில் துக்காலயமான சாக்கிரத்திற்து வருவானே னென்று சங்கித்துச் சமாதானங் கூறுகின்றார்.]

ஒன்ரு கியபிர மாநந் தச்சுக மொழிவா னேன்வெளி வருவா னேன், என்ரூன் முன்செய்த கருமம் வெளியினி லிழுக்குஞ் சுழுத்தி விட் டெழுந்தோ னும், நன்ரு யினசுக மகலான் வெளியி லு நடவான் மற்றியும் பெறமாட்டான், அன்ரு மெனவிருந் துறங்குஞ் சிலகண மதுவே வாதனை யாநந்தம். (கஉ அ)

இ - ள். (ஆனந்தமயனை சீவனனவன்) ஒன்று ஆகிய பிரமாநந்தச்சுகம் = ஏகமாகிய பிரஹ்மாநந்த சுகத்தை—ஒழிவான் ஏன் = பரித்தியாகஞ் செய்தற்குக் காரணமென்னை?—வெளி வருவான் ஏன் = வெளியே (சாக்கிரத்தில்) வருதற்குக் காரணமென்னை—என்ரூல் = என்று சங்கிக்கின்,—முன்செய்த கருமம் வெளியினில் இழுக்கும் = பூர்வஞ்செய்த (புண்ணிய பாவரூபமான பாசத்தால் கட்டுண்டிருத்தலால்) அக்கர்ம பாசம் (சாட்சாதவ னநுபவித்திருந்த பிரஹ்மாநந்தத்தையும் பரித்தியாகஞ் செய்யும்படி பண்ணி) வாகியத்தில் சாகாரணுதிகளில் இழுக்கும்;—(இப்படிக் கர்மவசத்தால் சாகாரணுதி அவஸ்தைகள் உளவாமென்ப தெதனை லறியப்படுகின்றதெனின்;—சுழுத்தியடைந்த சீவன் சொப்பனம் அல்லது, சாகாரணத்தை யடைகின்றனனென்னும் கைவல்யசுருதி வாக்கியத்தால் அறியப்படுகின்றதென்க.) [சுழுத்தியின்கண் பிரஹ்மாநந்தத்தினநுபவமுண்டென்பதிற் காரணங்கூறுகின்றார்.] சுழுத்தி விட்டு எழுந்தோனும் = சுழுத்தியவஸ்தையைவிட்டுச் சாக்கிரத்தை யடைந்த புருஷனும்—சிலகணம் = சொற்பகால பரியந்தம்—நன்ரூயின சுகம் அகலான் = (சுழுத்தியிலநுபவித்த) பிரஹ்மபூதமான ஆநந்தத்தின் வாசனையை விடாதவன்.—[அதற்குக் காரணம் கூறுகின்றார்.] வெளியிலும் நடவான் = புறத்துஞ் செல்லானுய்,—மறதியும் பெறமாட்டான் = அகத்தே யநுபவித்த ஆநந்தத்தையும் விடாதவன்;—(இங்ஙனங் கூறியவாற்ரூல் நிர்விஷயனுய், சுகியாய், உதாசீனனு யுளனென்பது பெறப்படுகின்றது; இதனுல், பிரஹ்மாநந்த

வாசனை பின்னே தொடர்ந்திருக்கின்றதென்பது கருத்து. இவ்வாறு பொருளுரைத்தது இதற்கு முன்னுலான பஞ்சதசியைக் கொண்டென்க.) "அன்றமெனவிருந் துறங்குஞ் சிலகண மதுவே வாதனை யானந்தம்" எ - து, இவ்வாசிரியர் கருத்து. அன்று ஆம் என = சுழுத்தியுமன்று சுழுத்தியுமாம், சாக்கிரமு மன்று சாக்கிரமுமாம் என்று கூறும்படி—சிலகணம் இருந்து உறங்கும் = சொற்பகாலபரியந்தம் அங்ஙனமிருந்து உறங்காநிற்கும்—அதுவே வாதனை ஆனந்தம் = (சுழுத்தியின் சம்ஸ்காரமாகிய) அத்தூஷ்ணீம் ஸ்திதியே வாசனானந்தமாம்.—எ - று.

"ஒழிவான் வருவான்" என்பனவற்றிலுள்ள வான் விகுதி = தொழிற் பெயர்ப்பொருட்டு. (கஉஅ)

(272) [ஆயின், சர்வதா அங்ஙனம் ஏன் இருக்கவில்லையெனின், அதற்குக் கூறுகின்றார்.]

அந்தக் கணமுட லகமென் றிடர்களி லலைந்தே சுகந்தனை மறந் தேபோம், முந்தைச் செயும்வினை சுகதுக் கந்தரு மோனந் தருநடு வடிவேகாண், எந்தப் புருடனு மொருசிந் தையுமற விருந்தே னெனல நு பவமாகும், இந்தப் படிதனு தாசீனச்சுக மிதுவே நிசமெனு மானந்தம். (கஉக)

இ - ள். அந்தக்கணம் = (சுழுத்தியினின்றும் வெளியேயிழுத்த பூர்வகர்மம் அப்படித் தூஷ்ணீம் பூதனையிருக்கவொட்டாமற் பின்னரும் பிரேரிக்க) அந்தட்சணமே—உடல் அகம் என்று = (சகலபிராணிகளும்) தேகமே தாமென்று (அத்தேகத்தி லபிமானமுற்று)—இடர்களில் அலைந்தே = (பல வேறுவகைப்பட்ட) துக்கங்களிலுழன்று (அத்துக்காநுசந்தானத்தால்)—சுகந்தனை = (அநுபவித்த) பிரஹ்மானந்தத்தை—மறந்தேபோம் = (சொற்பகாலத்தோடு) மறந்தேவிடும்;—(இவ்வாறு தினந்தோறும் மநுடர்க்கு நித்திரைக்கு முன்னும் பின்னும் பிரஹ்மானந்தத்தின்கண் *பட்சபாத முண்டென்றறிக. "உடலகம்" என்றதால், சீவன் தேகத்தோடு தாதான்மியனுய் உதாசீனன், சுகி, துக்கி என்னும் மூவவஸ்தையுடையனு யிருப்பனெனக் கொள்ளக் கிடந்தன; கொள்ளவே, அம்மூவகையுள்) முந்தைச் செயும்வினை = பூர்வ ஜநநங்களிற் செய்த புண்ணிய பாவங்கள்—சுக துக்கம் தரும் = சுகதுக்கமாகிய இரண்டையுந் தரும்; (ஆகலின், அவைகள் கர்மகாரியங்களாம். சுகதுக்கங்களும் வாகியபோகத்தினுனும், மனோராச்சியத்தானும் இருவகையாக வொப்பினர்.)—[முன்றுவதான உதாசீனத் தன்மை எப்போதுண்டாமெனின்;—அதற்குக் கூறுகின்றார்.] நடு வடிவே = சுகதுக்கங்களின் அந்தராளமே—மோனம் தரும் = (உதாசீனமென்னும்) தூஷ்ணீம் ஸ்திதியைத்தரும்;—[இப்படி யோரவஸ்தையுள் தென்பதற்கு அநுபவ மென்னையெனின்;—] எந்தப் புருடனும் = எப்புருஷனும்—ஒரு சிந்தையும் அற = யாதொரு சிந்

*பட்சபாதம் = விரோகம்.

தனையுமில்லாமல்—இருந்தேன் எனல்=(நான்) சுகமாயிருந்தே னென்று சொல்லுதலே—அநுபவம் ஆகும்=அநுபவமாம்;—இந்தப்படி—தன் உதாசீனச்சுகம் இதுவே=தன்னுடைய உதாசீனகாலத்திற் றோன்றுகின்ற இவ்வானந்தமே—நிசம் எனும் ஆனந்தம்=நிசாநந்தமாம்.—எ - று.

சாக்கிராவஸ்தையின்கண்ணும் நிசாநந்தத்தின்றோற்ற முண்டென் றறியத்தக்கதென்பது தாற்பரியம். (கஉசு)

(273) [உதாசீனதசைக்கண்டோன் றுநின்றசுகம் நிசாநந்தமாயின், அது பிரஹ்மாநந்த நுபமாவதால் முற்சொன்ன வாசனுநந்த நுபத்தன்மைய தாகாதென் றுசங்கித்து, உதாசீனதசைக் கண் டோன்றுநின்றசுகம் சாமான்ய வகங்காரத்தால் ஆவி நுதமாயிருத்தலால், பிரஹ்மாநந்தநுபத்தன்மைய தன்றெ ன்று பரிகரிக்கின்றார்.]

நிசமா னதுமுக் கியமோ குடத்துள நீரன் றேவெளி யிரந்தான்
வசமாவ கங்கர மறைந்தா னிசமது படிந்தான் முக்கிய வகையாகும்
திசையார் திரிசய மறியா தேதுயில் செறியா தேயுட றறிபோல
அசையா தேமதி சமமா கியநிலையதுதான் முக்கிய வானந்தம். (கஉ0)

இ - ள். அகங்கார வசமா மறைந்தால்=(நான் தேவதத்தனுகின்றேன் என்பது முதலிய விசேஷத்தோடு கூடாது நானிருக்கின்றேனென்னும் உருவமுடைய சாமான்ய) அகங்காரவசமாய்ப் பிரஹ்மாநந்த மறைவுற்றால்,—நிசம்=(அவ்வுதாசீனதசைக் கண்டோன் றுநின்றவாநந்தம்) நிசாநந்தவாசனையாம்:—(ஆகலின்,) நிசம் ஆனது=அந்நிசாநந்த வாசனையானது—முக்கியமோ=முக்கிய நிஜாநந்தமா? (அன்று)—[முக்கியாநந்தத்தின்வேறுயீ வாசனுநந்தமுண்டென்பதற்குத் திருஷ்டாந்தங் கூறுகின்றார்.] வெளி ஈரம் தான்=(சலத்தாற் பூர்ணமான கும்பத்தினுடைய) வாகியபாகத்தில் ஸ்பரிசத்தாற் றோன்றுகின்ற சீதளத்தன்மை—குடத்து உள நீர் அன்றே=கும்பத்தினுள்ளேயுள்ள முக்கியசலமல்லவே?—(பின்னே அச்சீதளத்தன்மை யாதெனின்? அது சலத்தின்குணமாம்; சீதளத்தன்மை சலத்தின்குணமென எவ்வாறறியப் படுகின்றதெனின்? அச்சீதளத்தன்மைரூப ஏதுவால் சலத்தின் சற்பாவங் கடத்தின்கண் அநுமானத்தா லறியப்படுகின்றது; அஃதெங்ஙனமெனின்;—விவாதவிஷயமான கடத்தின்கட்டோற்றுகின்ற சீதளத்தன்மை சலத்தினின்றும் ஜந்நியமாதற்கு யோக்கியம், சீதளத்தன்மையால், சலத்தின்கட் டோற்றுகின்ற சீதளத்தன்மைபோல என்க.) [அங்ஙனம் சீதளத்தன்மை சலத்தின் அநுமானத்திற் கேதுவாதுக; அதனால், பிரகிருதமான வாசனுநந்தத்திற்கு யாதாயிற்றென்ற சங்கித்து அச்சீதளத்தன்மை போல வாசனுநந்தத்திற்கும் முக்கியாநந்தத்தினுடைய அநுமானத்தின் ஏதுத்தன்மை பெறப்பட்டதெனக் கூறுகின்றார்.] அது *படிந்தால் (" வாகீ

* படிதல்=நிரோதமாதல்.

கது மனத்திடை வைக்குமம்மனம், போக்கிடும் புந்தியுள் புந்தி மானிலேஃ யாக்கிடு மந்தமானிவையனைத்தினுந், தாக்கறுஞ் சாந்தமாந் தன்னிற் சாந்த மாம்." என்னும் சுருதியாற்) கூறுநின்ற நிரோதசமாதியின் அப்பியாச யோகத்தால் (அகங்காரம் விலயமாய் எத்துணை எத்துணைச் சித்தத்தின் சூட்சு மத்தன்மை யுண்டாமோ அத்துணை யத்துணை)—முக்கியவகை ஆகும்=முக் கிய நிசாநந்தம் ஆவிர்ப்பாவமாம் (என இவ்வாறு அநுமானஞ்செய்யப்படு கின்ற தென்பது எஞ்சிநின்றது; இங்கே இஃதநுமானம்: அகங்காரத்தி னது சங்கோசத்தின் விலட்சணத்தன்மையோடு கூடியகூணங்களில் இரண் டாவது முதலிய கூணரூபமான பட்சங்கள் பூர்வகூணத்தினும் அதிக நிசாநந் தத்தின் ஆவிர்ப்பாவமுடையன, அகங்காரத்தினது சங்கோசத்தின் விலட் சணத்தன்மையோடுகூடிய காலரூபமாகலின், அகங்காரத்தினது சங்கோசத் தோடுகூடிய பிரதம கூணத்தைப்போல. இதற்கு மூன்னூலான பஞ்சதசி யின் சுலோகம் வியாக்கியானங்களைக்கொண்டே இவ்வாறு பதங்களை அந்வய யித்துப் பொருளுரைக்கப்பட்டது.) [புத்தியின் சூட்சுமத்தன்மைக்கு அவதி யாதென்று சங்கைவரில்:—அதற்குச் சர்வ அநான்மாகார விருத்திகளும் நிரோதமாயிப் பிரஹ்மாகாரத்தை யடைந்த அந்தக்காரணத்தின்கண் அது நானென உளதாகும் ஞானநுபசாட்சாத்காரமே அவதி என்று கூறுகின்றார்.] மதி=அகங்காரமானது—திசையார் திரிசயம் அறியாதே=சர்வதிக்குகளிலு நிறைந்துள்ள திருசியங்களை நினையாமல் (மறந்து)—துயில் செறியாதே= நித்திரையு மடையாமல்—உடல் தறி போலே=சரீரம் ஸ்தம்பம்போலே—அசையாதே=அசையாமல் இருக்க (பூமியிலே வீழாமலென்றபடி)—(பரம மான சூட்சுமத்தன்மையையடைந்து) சமம் ஆகிய நிலையது தான்=பிரஹ்மா காரமாகிய ஸ்திதியே—முக்கிய ஆநந்தம்=முக்கிய நிசாநந்தமாம்.—எ - று.

புத்தியானது சர்வதிருசியங்களையும் ஸ்மரியாமல் சூட்சுமத் தன்மையை யடையின், அப்போது அது நித்திரையாமேயென்று வரும் சங்கையைப்பற் றிச் சர்வ விருத்திகளும் விலயமாயினும் அந்தக்காரணத்தின் சொரூபம் விலய மாகாமையின், அகங்காரத்தின் சூட்சுமத்தன்மை நித்திரையல்லவென்பார், "துயில் செறியாதே" எ - ம், எங்கே சுழுத்தியாதிகளில் அந்தக்காரணம் விலீனமாமோ அங்கே தேகம் பூமியின்கண் வீழாநிற்பது காணப்படுகின்றது. இங்கே அது வீழாமையின், அகங்காரம் விலீனமாகாமல் கூடமான அந்தக் காரணரூபமாக வுளதென்பதை அறிதற்குத் தேகம் பூமியின்கண் வீழாததே இலிங்கமென்பார், "உடறறிபோலே அசையாதே" என்றுங் கூறினர். எங்கே தொய்தழுந் தோன்றுமல், நித்திரையுமல்லாமலிருக்கின்றதோ அங்கே யுளதாகும் சுகம் பிரஹ்மாநந்தமென்று ஸ்ரீ - பகவானுல் கீதையின் ஆறுமத் தியாயத்திற் கூறப்பட்டிருப்பதுங் காண்க. (கஉ0)

(274) [முக்கியாநந்தத்தின் மகிமைகூறல்.]

மனுடன் மனுடகந் தருவன் றேவநன் மாகந் தருவனெண் பிதி ரோடே, பனுமா ஜானர்கள் கருமத் தேவர்கள் பகர்முக்கி யரிந் திர

ஞசான், கனமார் பிரஜா பதியென் விராட்டுபொன் கர்ப்பப் பிரம னென் றின்னோர்கள், பினவா நந்தங்க ணுரையாம் பிரளய வெள்ளக் கடல்பிர மாநந்தம். (கஙக)

இ - ள். மனுடன்=சார்வபௌமன், — மனுடகந்தருவன்,—தேவநன் மாகந்தருவன்,—ஒண் பிதிரோடே=ஒள்ளிய அக்கினிவிஷ்வாத்தாதி பிதிர ரோடு—பனும் ஆஜானர்கள்=பிதிரர்க்கு மேலாகச் சொல்லாநின்ற ஆஜான தேவர்கள்,—கருமத் தேவர்கள்=(ஆஜான தேவராலும் பூஜிக்கப்பட்ட) கரும தேவர்கள்,—பகர் முக்கியர்=கருமதேவர்க்கு மேலாகச் சொல்லும் (யமன், அக்கினி முதலிய) முக்கியதேவர்கள், — இந்திரன்=(இவர்க்கிறையாகிய) இந்திரன்,—ஆசான்=(பிருகஸ்பதி யென்னும்) தேவகுரு,—கனமார் பிரஜா பதி என் விராட்டு=கனம் பொருந்திய பிரஜாபதியென்னும் நாமமுடைய விராட்டு,—பொன் கர்ப்பப் பிரமன் என்ற இன்னோர்கள்=இரணிய கர்ப்ப னென்னு நாமமுடைய பிரமா என்று தைத்திரியசுருதியிற் கூறுநின்ற இப்பதினொருபேர்களுடைய—பின ஆநந்தங்கள்=(உத்தரோத்தரம் நூறு நூறு பங்கு) அதிகமான ஆநந்தங்கள்—நுரை ஆம்=பேன (புற்புத தரங் கங்கள்போல லேச) மாம்:—பிரளயவெள்ளக்கடல் பிரமாநந்தம்=பிரளயகால த்து மகோததிபோலும் பிரஹ்மாநந்தமாம்.—எ - று.

(275) க - வது—யௌவனனுய், ரூபவானுய், வித்தை, அரோகம், திடசித்தம் இவைகளுடையவனுய்ச் சேனுசமுகங்களோடுகூடிச் சர்வப் பிரு துவியையும் பாலனஞ்செய்பவன், "சார்வபௌமன்." உ - வது—இக்கற் பத்திலேயே மநுடனுயிருந்து புண்ணிய விசேஷத்தால் கந்தருவபதத்தை யடைந்தவன், "மநுடகந்தருவன்." ங - வது—பூர்வ கற்பத்திற்செய்த புண் ணியத்தால் இக்கற்பாதியிலேயே கந்தருவனுனவன், "தேவகந்தருவன்." ச - வது—தமதுலகின்கண் சிலகால பரியந்தம் வாசம்பண்ணுநின்ற அக் கினிவிஷ்வாத்தாதியர் "பிதிரர்." ஞ - வது—கற்பாதியிலேயே தேவத்துவத் தை யடைந்தோர், "ஆஜானதேவர்." ட - வது—வர்த்தமான கற்பத்தில் அசுவமேதாதி கருமங்கள்செய்து மகத்பதத்தையடைந்து ஆஜானதேவர்க ளால் சேவியராயுள்ளோர் "கருமதேவர்." எ - வது—அஷ்டவசு, துவாத சாதித்தியர், ஏகாதச ருத்திரர் இவர் மூப்பத்தொருவரும் "முக்கியதேவர்." அ - ஙு - வது—"இந்திரன்." "பிருகஸ்பதி." பிரசித்தம். க0 - வது—பிர ஜாபதி="விராட்டு." ககு - வது "இரணியகருப்பன்."=பிரமன்; இவர் கள் ஒருவர்க்கொருவர் உத்தரோத்தரம் நூறு நூறுமடங்கு அதிகமான சுகத் தைக் கிரமமாக அடைகின்றனர் எனத் தைத்திரியசுருதி கூறுகின்றதென்ப.

(276) [முக்கிய நிசாநந்தமடைந்தோனைத் துதிக்கின்றார்.]

எவனு கிலுமிந்தத் துரியா தீதத்தி லேழாம் பூமியி லிருந்தா னேல், அவனு ரதன்சுகன் சிவன்மா லயன்முத லறிவோ ரநுபவ சுக போதம், விவகா ரதிர்சய மிதுவே யநுபவ மெனமுன் சொல்லிய

விவகாரி, உவமா னமுமறி மகனே யவனடி யுதிரும் பொடிகளின் முடிமேலே. (கஙஉ)

இ - ள். எவன் ஆகிலும் = யாவனுயிருக்கினும்— இந்தத் துரியாதீதத் தில்ஏழாம் பூமியில் = இத்துரியாதீதமென்னும் ஏழாவது பூமியில்—இருந்தா னேல் = இருந்தானுயின், — அவன் = அம்மகான் — நாரதன் = நாரதனும்,— சுகன் = சுகனும்,—சிவன் = சிவனும்,—மால் = திருமாலும், — அயன் = பிரம னும்—முதல் அறிவோர் = முதலிய அறிஞர்களுடைய—அநுபவ சுகப்பாதம் = அநுபவமான ஆநந்தசின்மயமாவன் ;—(அன்றியும்,) விவகார அதிர்சயம் இதுவே அநுபவம் என = தொய்தந் தோன்றுததும், நித்திரையல்லாதது மான இந்நிலையே முக்கிய நிசாநந்தாநுபவமாமென்று —முன்சொல்லிய = முன்னே (கஙo - வது செய்யுளிற்) கூறிய—விவகாரி = முக்கியாநந்தாநுப விக்கு—உவமானமும் = அந்நாரதாதி சிவன் முதலியோர் உவமானமுமாவர் ; —மகனே அறி = மைந்தா (நீ இதனை) அறிவாய்.—அவன் அடி உதிரும் பொடிகள் = அவன் பாதத்தினின்று முதிராநின்ற துகள்கள்—என் முடி மேலே = எனது சிரசின்மீது (தரிக்கத்தக்கனவாம்.)—எ - று.

பிரஹ்மவித்து பிரஹ்மமேயென்னும் சுருதியால், "அவனு ரதன் சுகன் சிவன்மா லயன்முத லறிவோ ரநுபவ சுகபோதம்." என்றார். விவகார + அதிர்சயம் = விவகாரதிர்சயம் என நிலைமொழியீற்று அகரம் தொகுக்கப்பட் டது.

இப்படியே வாசிட்டத்திலும்,

"மனமெனும் வினையை வென்றோர் மலரடி முடிமேற் கொள் வாம்."—என்றனர். (கஙஉ)

[கஉக - வது செய்யுளில் ஆநந்தம் எண்வகை என நுதலிப்புதுதலின், ஏனைய ஆநந்தங்களோவெனின்? அதற்குக் கூறுகின்றார்.]

[வேறு.]

இந்தவா றைந்துசுகஞ் சொல்லினேனும் வித்தைசுக மினிமேற் சொல்வோம், முந்தமா யையுஞ்சச்சி தாநந்தப் பொருளுமே மொழி யும் போதில், அந்தமா மத்துவித சுகமான்ம சுகமிரண்டு மங்கே சொன்னேம், தொந்தமாற் றியமகனே யின்னமுனக் கையமுண்டோற் சொல்லுவாயே. (கஙஙு)

இ - ள். இந்த ஆறு ஐந்து சுகம் சொல்லினேம் = இந்தப்படி (கஉங - வது செய்யுளில் விஷயாநந்தமும், கஉச - முதல், கஉஎ - வது செய்யுள்வரை யினும் பிரஹ்மாநந்தமும், கஉஅ - வது செய்யுளில் வாசனுநந்தமும், கஉகூ - வது செய்யுளில் நிசாநந்தமென்னும் மற்றோர் வாசனுநந்தமும், கஙo - வது செய்யுளில் முக்கிய நிசாநந்தமும் ஆக) ஐவகை ஆநந்தங்களையுங் கூறினேம் ; —வித்தை சுகம் இனிமேல் சொல்வோம் = வித்தியாநந்தத்தை இனி இற்

நூலினந்தத்திற் கூறுவாம்.—மூந்த=முன்னே—மாயையும் சத் சித் ஆநந்தப் பொருளும் மொழியும் போதில்=மாயையி னிலக்கணத்தையும், சச்சிதாநந்த சத்தங்களின் பொருள்களையுங் கூறுங்காலையில்,—அந்தம் ஆம்=(சுருதியின் கண்) முடிந்த நிலமாகிய—அத்துவிதசுகம்=அத்துவிதாநந்தமும், —ஆன்ம சுகம்=ஆன்மாநந்தமும்—இரண்டும்=ஆகிய இரண்டனையும்—அங்கே சொன்னேம்=முறையே கூடு - வது செய்யுள்முதல், கஉ - செய்யுளானும், ககச - வது செய்யுள்முதல், எ - செய்யுளானும் கூறினேம்;—தொந்தம் மாற்றிய மகனே=(பிரஹ்மாநுபூதிவலியால்) சுகதுக்காதி தொந்தங்களைப் போக்கிய மைந்தா—இன்னம் உனக்கு ஐயம் உண்டேல்=இன்னமும் உனக்குச் சந்தேகமுளவாயின்,—சொல்லுவாய்=வினவியறிவாய்.—எ - று. (கஙஙு)

(277) [சச்சிதாநந்தப் பதங்கள் பிரஹ்மத்தின் பரியாய நாமங்களாகவிராமல் வேறுவேறு பொருளுள்ளனவாகத் தோற்றுதலால் என்மனம் ஒன்றேன்னு மநுபூதியி லழுந்தவில்லை; ஆதலால், அவற்றை அகண்டைகரசமாகக் காட்டல்வேண்டுமெனச் சீடன் வினதல்.]

குகன்றனையு மெனையுமுல கினையுமீன் றளித்தருளுங் குருவே கேளீர், புகன்றசச்சி தாநந்தப் பதங்கடனித் தனியாகிப் பொருள்வேறுளுல், உகண்டமன முறைப்பதெங்ஙன் பரியாய பதங்களைப்போலுறவு காணேன், அகண்டமா யொருசுவையாய்த் தேனீக்கூட்டிய மதுவா வறிவிப் பீரே. (கஙச)

இ - ள். குகன் தனையும்=சுப்பிரமணியனையும், — எனையும்=என்னையும், — உலகினையும்=ஆகாசமுதலிய சகத்தையும்—ஈன்று=படைத்து,—அளித்து அருளும் குருவே=அளித்தருளாநிற்குங் குருவே—கேளீர்—புகன்ற சத் சித் ஆநந்தப் பதங்கள்=(ஆன்மாவின் சொரூபமாக முன்னே) உபதேசித்தருளிய சத்து, சித்து, ஆநந்தம் என்னு மூப்பதங்களும்—தனித் தனி ஆகி=(கடபடமென்னுஞ் சத்தங்களைப் போல) வெவ்வேறுகி — பொருள் வேறு ஆனல்=(கடசத்தத்திற்குக் கலசமும், படசத்தத்திற்கு வஸ்திரமுமாக) வேறுவேறான பொருள்கள் தோன்றாநிற்பனபோல நிவிர்த்தியின்மையது சத்தென்றும், சடத்தின்வேறான பிரகாசரூபஞ் சித்தென்றும், துக்கத்தின் வேறான முக்கியமாகிய பிரீதிக்கு விஷயம் ஆநந்தமென்றும் பொருள்களும் பின்னமாகத் தோற்றுமாயின்,—உகண்ட மனம்=(ஓர் விஷயத்தினின்று மற்றோர் விஷயத்தில்) தாவிச் சஞ்சலப்படாநின்ற அந்தக்கரணம்—உறைப்பது எங்ஙன்=அநுபூதியிலழுந்தாநிற்பது எப்படி?—பரியாய பதங்களைப்போல்=ஒருபொருளைப் போதிப்பவைகளான அஸ்தம், கரம், பாணி என்னும் பரியாய சத்தங்களைப்போல—உறவு காணேன்=சமார்த்தபோதக சத்தங்களாகக் கண்டிலேன்;—(ஆகலின், சச்சிதாநந்த பதங்களை) அகண்டம் ஆய் ஒரு சுவை ஆய்=அகண்டைகரசமாக—தேன் ஈக் கூட்டிய மதுவா

அறிவிப்பீர்=பலபூக்களினின் றெடுத்துத் தேனீக்கள் சேர்த்த மதுப்போல அறிவிப்பீராக.—எ - று.

"தூகன்" என்பதும், "எனை" என்பதும் உபலட்சணமாக நிற்றலின் முறையே ஈசுரவகுப்பும் சீவவகுப்புங் கொள்க. (கஉச)

(278) [முற்செய்யுளிற் சீடன் வினவிய சங்கைகளுக்குச் சுருதி, யுத்தி, அநுபவங்களால் விரித்துச் சமாதானங் கூறத்தொடங்கி அநேக திருஷ்டாந்தமுகமாக அவைகள் அகண்டைகரசமா வுள்ள தன்மையை யுணர்த்துகின்றார்.]

குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினு னீர்மூன்று கூறு யிற்றே, ஒளிதவனஞ் செம்மையென்ற பதங்களா லக்கினியு மொரு மூன் றுமோ, வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து விலக்கி வேதம், எளிதறிய முரண்மொழிந்த சத்தாதி யெனும்பிரம மேகந் தானே. (கஉடு)

இ - ள். குளிர் இளகல் வெண்மை என்ற பதங்களினால்=குளிர்ச்சி, நெகிழ்ச்சி, வெண்மை என்னுஞ் சத்தங்களால்—நீர் மூன்று கூறு ஆயிற்றே =நீரானது மூன்றுபொரு ளாயினதோ?—ஒளி தவனம் செம்மை என்ற பதங்களால் அக்கினியும் ஒரு மூன்று ஆமோ=பிரகாசம், உஷ்ணம், லோகி தம் என்னுஞ் சத்தங்களால் அக்கினி மூன்று பொருளாமோ?—(இவை போல) வெளிமுதல் ஆம் சகம்=ஆகாசமுதல் அகங்கார பரியந்தமான பிர பஞ்சங்கள்—(அத்தியாசத்தால் அஸ்திபாதிப் பிரியரூபங்களாகத் தோன்று நிற்றலால் அவை இரச்சுவிற் சர்ப்பம்போல அத்தியஸ்தமாகலின்,) அசத்து மூடம் இடர் எனப்பிரித்து விலக்கி=அசத்துச் சடதுக்கங்கள் எனப் பிரி த்து ஒழித்து—எளிது அறிய=எளிதாக(ப் பிரத்தியகபின்ன பிரஹ்மத்தை) அறிதற்பொருட்டு — முரண்=(அவ்வசத்துச்சட துக்கங்கட்கு) மாறுக— வேதம் மொழிந்த=சுருதி கூறிய—சத்து ஆதி எனும் பிரமம்=சச்சிதாநந்த மாகிய பிரஹ்மம்—ஏகம் தானே=ஒன்றே.—எ - று.

சச்சிதாநந்தங்கள் பரஸ்பரம் பின்னமல்ல ஏகந்தான்; குணமாயின் பின் னமாம், பிரஹ்மசொரூபமாகலின் பின்னமாகா. பிரஹ்மமொன்றே நிவர்த்தி யின்மையின் சத்தென்றும், சடத்தின் விலட்சணமான பிரகாசரூபமாகலின் சித்தென்றும், துக்கத்தின்வேறாய், முக்கியப் பிரீதிக்கு விஷயமாகலின் ஆநந் தமென்றுங் கூறப்படுகின்றது. சலமானது எப்படி நெகிழ்ச்சி, குளிர்ச்சி, வெண்மைரூபமோ! அக்கினியானது எப்படி லோகிதோஷ்ணப்பிரகாசரூப மோ! அப்படிப் பிரஹ்மமும் சச்சிதாநந்தரூபமென்றறிக. "வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து விலக்கிவேத, மெளிதறிய முரண்மொழி ந்த." எ - து, பிரஹ்மத்தைச் சச்சிதாநந்தமென்று சுருதி கூறினதற்குக் கார ணங்கூறியது; இப்படியே வாசுதேவ மனனத்திலும், ஆன்மசுபாவமாகிய சத்து அசத்தாகிய ஜகசுபாவமாகவும், ஆன்மசுவாபமாகிய சித்து சடமாகிய

புத்தியாதி சுபாவமாகவும், ஆன்மசுபாவமாகிய ஆநந்தம் துக்கரூபமாகிய புத்தி, பாரியாதி சுபாவமாகவுந் தோற்றிக்கொண்டே சகசுபாவமாகிய அசத்து ரூபத்துவமும், புத்தியாதி சுபாவமாகிய சடரூபத்துவமும், புத்திரபாரியாதி சுபாவமாகிய துக்கரூபத்துவமும், நான் செத்துப்போகிறேன், நான் சடன், நான் துக்கி என்று ஆன்மசுபாவமாய்த் தோன்றி நின்றதால், இவ்விபரீதப் பிராந்தியை நிராகரிக்கும் நிமித்தம் ஆன்மா சத்ரூபன், சித்ரூபன், ஆநந்த ரூபன் எனச் சுருதி சொல்லுகின்றதேயல்லாமல் ஆன்மசொரூபமாகிய சச்சி தாநந்தங்கட்கு அந்நியோந்நியபேதஞ் சொல்லுகின்றதில் அதற்குத் தாற்பரிய மில்லை; அன்றியும், சிலமதஸ்தர்கள் ஆன்மா சடரூபனென் றங்கீகரித்து அவனுக்குச் சத்து தர்மமென்றும், சிற்சுகங்கள் குணங்களென்றுஞ் சொல்லா நிற்பதை மறுத்தற்பொருட்டு ஆன்மா சச்சிதாநந்த சொரூபம் எனச் சுருதி சொல்லுகின்றதேயல்லாமல் அவற்றிற்கு அந்நியோந்நியபேதஞ் சொல்லுகின் றதிற் றாற்பரியமே இல்லை; ஆதலால், சத்தே சித்து, சித்தே ஆநந்தம் எனச் சுருதி தாற்பரியாலோசனையால் அபேதஞ் சித்தித்தெனக் கூறியிருப்பதுங் காண்க. (கங)

(279) [சச்சிதாநந்தங்கள் பாஸ்பரம் பின்னமல்லவென்பதைச் சுருதிப்பிரமாணத்தா லுணர்த்துகின்றார்.]

நித்தியம்பூ ரணமேகம் பரமார்த்தம் பரப்பிரம நிதானஞ் சாந் தம், சத்தியங்கே வலந்தூரியஞ் சமந்திருக்குக் கூடஸ்தன் சாட்சி போதம், சுத்தமிலக் கியஞ்சநா தனஞ்சீவன் றத்தூவம்விண் சோதி யான்மா, முத்தம்விபு சூக்குமமென் றிவ்வண்ணம் விதிகுணங்கண் மொழியும் வேதம். (கஙசு)

இ - ள். நித்தியம்=[லட்சணவிருத்தி] பின்னமாகிய எத்தேசத்தினும், எக்காலத்தினும் ஆகாச மொருதன்மைத்தா யிருப்பதுபோலச் சர்வ பிரபஞ் சங்களிலும் பஞ்சகோசங்களுள்ள விடங்களில் கோசங்களாக் காண்பதாகி எப்போதுமிருத்தலின் நித்தியம்,—பூரணம்=[ல - தி] நீரிலூற்பூரிதமான கடம்போலப் பஞ்சகோசங்கள் பூர்வபூர்வம், உத்தரோத்தரங்களாற் பூரித மாய்ச் சீவனுலும் பூரிதமாகிய கோசங்களாற் பஞ்சபூதங்கள் பூரிக்கப்பட்டு அப்பூதங்களாற் பூரிக்கப்பட்டிருப்பது சகம்; அச்சகத்தில் எங்கணும் வியா பித்துள்ள மாயாவிஷ்டனும் பிரஹ்மத்தாற் பூரிதமாய்த் தன்னைப் பூரிப்பதாய் வேறொன்றின்மையாற் பூரணம்,—ஏகம்=[விஷ்ணு சகஸ்திரநாமபாஷியம்] "ஏகமே வாத்துவிதியம்" என்னும் சுருதியால் மாத்திற்குச் சமானஜாதி யான மற்றொரு மாமும், விஜாதியமான கொடி முதலியவையும், ஸ்வகத பேதமான பத்திர, புஷ்ப, பலபேதங்களு மிருப்பனபோலப் பரமார்த்தமாகச் சச்சிதாநந்த பரிபூரணவஸ்துவாக ஒரு சஜாதிய பேதமில்லை, விஜாதியமென் னும் அநிருதசடதுக்காத்மகமான பிரபஞ்சமும் சுத்திரஜதம்போல அநிதுச்ச மாகலின் இல்லை, நிரவயவமாகலின் ஸ்வகதபேதமுமில்லை ஆகலின் ஏகம்,— பரமார்த்தம்=[ல - தி] சொப்பனம் அபரமார்த்தம், சாக்கிரம் பரமார்த்தம்,

சாக்ஷிரத்தின் கண்ணும் மின், மேகம் அபரமார்த்தம், மற்றவை பரமார்த்தம் இவற்றுள்ளும், தேகமுதலிய இவ்வுலக வத்துக்கள் அபரமார்த்தம், சொர்க்க முதலியவை பரமார்த்தம் இவற்றினும், பிரமலோகம் பரமார்த்தம் என இவ்வாறு தாரதம்மியமாகக் கூறுநிற்கும் சகசீவபாங்கண் முழுவதும் ஆராயுங் காலேயில் பரமார்த்தமாகாமையின், சர்ப்பாதிக்கு இரச்சுவாதிபோலத் தான் பரமார்த்த ரூபமாதலானும், தனக்கழிவு வந்து வேறொரு வஸ்து பரமார்த்தமாகாமையினானும் பரமார்த்தம்,—பரப்பிரஹ்மம்=[வி - ச - பா - மீ] சத்திய ஞானாநந்தம் பிரஹ்மமென்னும் சுருதியானும், விஷ்ணுபுராணத்தில் சஜாதீய, விஜாதீய, ஸ்வகதபேதரகிதமாகவும், மனவாக்குகட் கதோசரமாகவும், சத்திய ஞான சுகமாத்திரமாகவும், சுவயம் பிரகாச சுவவேத்தியமாகவும் இருக்கிற ஞானமாத்திரம் பிரஹ்மமென்று நிர்ணயித்தலானும் பரப்பிரஹ்மம்,—நிதானம்=[வி - ச - பா - மீ] காரணமாத்திரம். இதுதானே பிரபஞ்சோற்பத்தியிலே உபாதான காரணமாயிருக்கின்ற பிரகிருதியும், நிமித்தகாரணமாயிருக்கின்ற காலாதியுமாவதால் நிதானமென்னுங் காரணம்,—சாந்தம்=[வி - ச - பா - மீ] நிஷ்களம், நிஷ்கிரியம், சாந்தம் என்னும் சுருதியால் விஷயபோகங்களில் அசங்கமாயிருத்தலால் சாந்தம், அன்றியும், [ல - தீ] காஷ்டத்திலுண்டான வக்கினி அக்காஷ்டத்தைச் சுட்டுத் தானுஞ் சாந்தமாவதுபோலச் சுருதியினும், குருவினுனும் உளதாகாநிற்கும் அகண்டாகார விருத்திஞானம் பிரஹ்மத்திற்குவேறான சாத்திர முதலியவைகளைச் சுட்டுத் தானும் சாட்சியாகிய தன்னிலிறத்தலால், நிஷ்பிரபஞ்சமாகிய தான் சாந்தம்,—சத்தியம்=[வி - ச - பா - மீ] பரமார்த்த சத்தியசொரூபமா யிருக்கையினாலே பிரதீதிக சத்தியமாயிருக்கிற சுத்திரஜத, இரச்சு சர்ப்பாதிகளினும், வியவகார சத்தியமாயிருக்கிற ஆகாசாதிபதார்த்தங்களினும் விசேஷமாக நித்திய பரிபூரண சார்வகாலிக சர்வசாட்சியா யிருத்தலின் சத்தியம்,—கேவலம்=ஏகமாவதால் அல்லது, முழுதுமாவதால் அல்லது, நிச்சயமாயிருத்தலால் அல்லது, ஞானமாயிருத்தலால் அல்லது, சுத்தமாயிருத்தலால் கேவலம்,—துரியம்=[ல - தீ] நான்காம்பொருள்; அஃதெங்ஙனம்? ஓரவஸ்தையுண்டாகில், மற்றோரவஸ்தை தோன்றுமல் அழியாநிற்கும் அவஸ்தாத்திரயப் பிரபஞ்ச மூன்றிற்கும் சாட்சியாய், நான்காம் பொருளாயிருத்தலின் துரியம், — சமம்=[வி - ச - பா - மீ] சர்வவுலகங்களினும் சர்வவியவகார ரகிதமாயிருத்தலால் சமம், அல்லது, [ல - தீ] தாரதம்மியமான உலகங்கள், பிரமாமுதற் றம்பபரியந்தம் உத்தம, மத்திம, அதன்மமான உடல்கள், ஞானி, யோகி, உபாசகன் கர்மியென்னும் சீவர்முதல் ஈசுரன் பரியந்தந் தாரதம்மியமாக விளங்காநிற்கும் வஸ்துக்களனைத்தினும் சத்தாகாரமாய்த் தாரதம்மியமற எப்போதுமிருத்தலால் சமம், —திருக்கு=[ல - தீ] அறிவதுயாது அது திருக்கு, பிரஹ்மம் சர்வதிருஷியங்களையும் அறிவதாயிருத்தலால் திருக்கு,—கூடஸ்தன்=[ஷி] கூடம்=கொல்லன் அடைகல்லு; அதுபோல நிர்விகாரரூபமாயிருத்தலால் கூடஸ்தன், அல்லது [விசாரசாகாரம்] கூடமென்பது மித்தையாகிய புத்தியும், சிதாபாசனுமாம்; அவைகளில் அசங்கரூபமாக இருப்பவன் கூடஸ்தன்,—சாட்சி=[வி -

ச - பா - ம்] வேரே மறைவில்லாமற் சொரூபபூத ஞானத்தாலே சகல பிரபஞ் சத்தையும் பார்ப்பதால் சாட்சி,—போதம்=[பஞ்சதசி] சத்தமுதலான விட யங்க ளைந்தனையும் அறியும் சம்வித்ரூபமாவதால் போதம்,—சுத்தம்=[ல - தீ] சாதிவர்ணச்சிரமாதித் துடக்குற்றசீவன், கிருபையவதாரமுதலிய துடக் குற்ற ஈசுரன், சீவசங்கத்தால் அசுத்தமுற்ற பூதங்கள் இவைக்குவேரூன தான் இவைகளோடு கூடினுந் தன்னே அசுத்தம் பற்றுமையினுனும், இவை தனது விவர்த்தமாதலானும் சுத்தம்,—இலக்கியம்=இலட்சணையினுற் போதிக் கப்பட்ட அர்த்தமாகலின் இலட்சியம்,—சநாதனம்=[முத்திகண்டம்] சந்ததம் ஒரேவடிவாயிருத்தலால் சநாதனன்,—சீவன்=[பிருகத்கோசம்] கடாவச்சின் னாகாசம்போலச் சரீரத்திரயங்களால் அவச்சின்னமா யிருத்தலால் சீவன்,—

"சீவனு யிருந்து காணுஞ் சிற்பர தத்து வத்தே
மேவிய நனவை யுற்றோர்."—

என்னும் வாசிட்டத்துங் காண்க. தத்துவம்=[வி - ச - பா - ம்] தத்து வம், அமிர்தம், சத்தியம், பரமார்த்தம், யது, தது, துவம் என்னும் இவ்வேழு சப்தங்களும் பரமார்த்தசத்தா யிருக்கின்ற பிரஹ்மத்தையுணர்த்துகின்றனவாக லின் தத்துவம் பரப்பிரஹ்மம்,—வின்=[வாசிட்டம்] "தடமான வதன்புற மில்லாமையினுல்" வின், அல்லது அசங்கத்துவாதிதர்மத்தால் ஆகாசசதிருச மாவதால் வின்,—சோதி=[மு - ம்] சூரியன் முதலிய சோதிகளை விளக்கு விக்குஞ் சிற்சோதியாவதால் சோதி, அல்லது [வி - ச - பா - ம்] இதரமாக விருக்கின்ற ஆதித்திய சந்திராதிகளை யபேட்சியாமற் றனேமிகவும் பிரகாச மாகப் பிரகாசிக்கின்றதால் சோதி,—ஆன்மா=[ல - தீ] நானென்றபிமானத் திற்கிடமாய்த் தோன்றுநின்ற புத்திராதி, காரியகாரணதேகம், சீவன் இவை வெவ்வேறுன நாமமடைந்து தனக்கந்நியமாகத் தோன்றலானும் இவைக்கப் பாலாய், ஞானகனப் பிரஹ்மமாகிய தான் அந்நியமாகாமையானும் ஆன்மா,—[வாசிட்டம்.]

"அகமகமென் றனைத்துயிரி னிடத்துமிருந் தனவாத முரைப்ப தாகி, நிகழொளியா யான்மதத் துவமான சொரூபத்தை நினைக்தல் செய்வாம்."—என்றது.

[பிரமகீதை.]

"உரையாடு கின்றநா னென்னு முரைக்கு மறிவுக்கு மறிவாய் நாடுகின்ற வுணர்வொன் றுண்டதுவே யான்மா நமக்கெல்லாம்."—என்றது.

முத்தம்=[வி - ச - பா - ம்] விடுபட்டவனென்னும் சுருதியால் சுபாவ மாகச் சம்சாரபந்தம் சர்வாத்மனு இல்லை யாகலின் முத்தம்,—விபு=[வி - ச - பா - ம்] சகல பிரபஞ்சாகாராகவும், இரண்யகர்ப்பாதி விவிததேவராகவும் நாநாவிதமாக வுண்டாகின்றதால் விபு, அன்றியும் சர்வத்திரபரிபூரணாகவும்,

லோகநாயகராகவும் இருப்பதால், விபு [ல - தீ] அவித்தியா விசிட்டனின் விபு லிங்கதேகம், இதனின் விபு தூலதேகம், இதனின் ஒன்றின் ஒன்று விபு பிருதுவியாதி பூதங்கள், இவற்றிலொன்றிலொன்று விபு இரண்யகர்ப் பாதி, இவைகளான் மட்டிடக்கூடாது விரிந்த மாயாவிசிஷ்டனாலும் மட்டிடக் கூடாது விரிந்த அஸ்திபாதிப் பிரியரூபமாகலின் விபு,—சூக்குமம்=[வி - ச - பா - ம்] "நுண்மை யாமதி னுண்மையாம்" என்னும் சுருதியானும், "சர்வ கதம் சூட்சுமம்" என்னும் சுருதியானும் உத்தரோத்தரம் ஸ்தூல காரணமா யிருக்கின்ற பிருதுவியாதி பூதங்களும், கந்தாதி குணங்களும் பிரளயத்திலே யில்லாமையினுற் சூக்குமம்,—வாசிட்டத்தில், "சூக்கமாயேட் டாமையினுற் சொன்னபரமே பரமாணு" என்றது. என்று இவ்வண்ணம் விதிகுணங் கள் மொழியும் வேதம்=என்றிவ்வாறு விதிகுணங்களைப் பிரதிபாதியாநிற் கும் வேதமானது.—எ - று. (கஉசு)

(280) [இனி நிடேதநாமங்கள் கூறுகின்றார்.]

அசலநிரஞ் சனமமிர்த மப்பிரமே யம்விமலம் வசனு தீதம்
அசடமநா மயமசங்க மதுலநிரந் தரமகோ சரம கண்டம்
அசமநந்த மவிநாசி நிர்க்குண நிட்களநிர வயவ நாதி
அசரீர மவிகார மத்துவித மெனவிலக்கா மநேக முண்டே. (கஉஎ)

இ - ள். அசலம்=[ல - தீ] வீடு, ஊர், தேசம் இவைகளில் ஒன்றை விட்டு மற்றொன்றில் அலைகின்ற ஸ்தூலதேகம், உலகங்களில் ஒன்றினின் றொன்றில் அலைகின்ற லிங்கதேகம், காரணதேகங்களோடு பிருதுவியை வாயமாகச்சுற்றி யலைக்கின்ற அப்பு, அக்கினி இவைகளை யலைக்கின்ற வாயு, இவைகட்கிடமாயுள்ள ஆகாசம் இன்னும் பௌதிக சமஷ்டியோடுகூட இவையனைத்தையும் உடலாகக்கொண்டு அறிவினுள்ளே அலையாநின்ற ஈசு ரனும், அதிவேகமாக ஆகாசத்திற் கருடன் போலப் பத்துத்திக்கினும் நூறு கோடி கற்பங்களோடி அளவிடவேண்டுமென்று பார்க்கினும் அளவுகாணக் கூடாததாய், அங்கங்கே சாட்சியாய் அசைவற்றிருக்கின்றதால் அசலம்,— நிரஞ்சனம்=அஞ்சனம்=தமம்: மலினசுபாவத்தால்; அஃதில்லாமையால் நிரஞ்சனம், அன்றியும், ஆத்மபோதமேகா அஞ்சனாகிதன் நிரஞ்சனன்; அஃ தெங்ஙனம்? மஞ்ஞெயாபாரமே அஞ்சனமாகலின், மனதேயில்லாமலிருத்த லால் நிரஞ்சனம், இன்னும் லட்சணவிருத்தியிலுங் காண்க.—அமிர்தம்= [ல - தீ] மிர்தமற்றது அமிர்தம்: யோகாமிர்தம், தேவாமிர்தங்களைப்புசித்து நமக்கு மரணமில்லை யென்றிருப்பவரும் ஈசுரப்பிரளயத்தில் மரணமாவது போல அநந்தாநந்த சின்மாத்திரமே நாமென்று மோட்சாமிர்தமான தன்னை யடைந்தோர் மரணமாகாமையின் அமிர்தம் [வி - ச - பா - ம்] ஓர்காலத்தும் மரணமில்லாமல் நித்தியமாயும், சத்தியமாயும் இருத்தலின் அமிர்தம்,—அப் பிரமேயம்=[வி - ச - பா - ம்] சர்வப்பிரமாணங்கட்கும் விடயமாகாமையின் அப்பிரமேயம் சத்தஸ், பரிசரூப கந்தாதிகளான குணங்கள் இவரிடத்தில் லாமையினுன் கடபடாதிகள்போலப் பிரத்தியட்ச விஷயாலல, காரியலிங்க

மில்லாமையின் அநுமான விஷயரல்ல, சாதிருசமில்லாமையின் உபமான வேத்தியரல்ல, ஜாதிகுணக் கிரியைகளில்லாமையின் சத்தப்பிரமாண விஷய ருமல்ல, உபாதான தர்மமில்லாமையின் அர்த்தாபத்தி விஷயருமல்ல, பாவ [ஹாவ] ரூபமான சிற்சொரூபராகலின் அபாவகோசரருமல்ல, அபாவத்திற் குச் சாட்சியாயிருத்தலானும் அபாவ விஷயரல்ல; இப்படிச் சகல பிரமாணங் கட்கும் விஷயராகாவிடில் வேதாந்த சாஸ்திரங்களாலே எப்படி யறியப்படுவா ரெனின்;—சகலமான பிரத்தியட்ச, அநுமான, உபமான, சத்த, அர்த்தா பத்தி, அபாவசாஸ்திராதிகட்கும் சாட்சியாக அறிகிறவராகவும், சுவயம் பிர காசராகவும் இருத்தலின் பிரமாணங்கட்கு விஷயராகாவிடினும் தம்மிடத் திற் கற்பிக்கப்பட்ட சகல பிரபஞ்ச பிரமாணங்களையும் சொப்பிரகாசத்தி னாலே மித்தையென்று நிச்சயித்து ஆநந்தசின்மாத்திரமா யிருத்தலால், சாஸ் திரயோனியென்று சொல்லப்படுகிறார்; ஆகலின் அப்பிரமேயம்,—விமலம்= [ல - கீ] மலமற்றது, மலமூத்திராதி மலம்பொருந்திய பிருதுவி, கலங்கல், புகை, புழுதி முதலான மலம்பொருந்திய மற்ற நான்கு பூதங்கள், கோழை, சளி, பித்தம், மலம், மூத்திர முதலான மலமுடைய தூலதேகம், காசபடலங் காமக்குரோத முதலான மலமுடைய லிங்கதேகம், ஞானஞ்ஞான மல முடைய சீவன், பஞ்சகிருத்தியாதி மலமுடைய ஈசுரன் இவைக்கு வேரு யாதொரு மலமுமற்று பிரகாச ஞானஞ்ஞ வடிவாகலின் விமலம்,—வசனு தீதம்=வாக்கின் சக்திவிருத்திக்குக் கோசரமாகாமையின் வசனத்திற் கெட் டாதது,—அசடம்=தேக முதலியவைபோலச் சடமாகாமையின் அசடம்,— அநாமயம்=ஆமயம்=நோய்; அஃதற்றதால் அநாமயம், [ல - கீ] ஆதிவியாதி வாசனையென்னும் மூன்று சரீரத்துச் சுரங்களுந் தனக்கு இல்லாமையின் அநாமயன்,—

"சுழலும்வினை நலனுமன் றியதுநரை மரணமும் பசியைமுத, லுலகுறுந் துயர்முழு துமுடையனன் றொருபொழு தும்."—என்னும்,

பிரமகீதையினுங் காண்க. அசங்கம் = [விசாரசந்தீரோதயம்] சங்கமென்பது, சம்பந்தம்; அது சஜாதீய விஜாதீய சுவகதபேதத்தால் மூவகையாம்: பிராமணனுக்கு அந்நிய பிராமணனோடாகுஞ் சம்பந்தம் சஜாதீயசம்பந்தம், சூத்திராதியரோ டாதாகுஞ் சம்பந்தம் விஜாதீயசம்பந் தம், அஸ்தபாதாதிகளோடுள்ள சம்பந்தம் சுவகதசம்பந்தம். தான் ஏகமாக லின் சாதியில்லை, சீவன், ஈசுரன், பிரமா, விஷ்ணு, சிவன், நான், நீ முதலிய பேதமோ உபாதியாற் பண்ணப்பட்டது ஆகலின், தனக்கு யாதொன்றோ டுஞ் சஜாதீய சம்பந்தமில்லை, அப்படியே தான் அத்வைதமாயும், சத்தாயு மிருத்தலின்தனக்குப் பின்னமாக மாயை, மாயாகாரியமான தூல சூட்சுமப் பிரபஞ்சங்கள் அசத்தாம், அசத்து அற்பமும் வஸ்துவன்று ஆகலின், தனக்கு யாதொன்றோடும் விஜாதீய சம்பந்தமில்லை, அப்படியே தான் நிரவயவமாக லின் சச்சிதாநந்தாதிகளோ தன தவயவமல்ல, பின்னையோ ஏகரூபமாகலின் தனது சொரூபமாம் இதனால் தனக்கு யாதொன்றோடும் சுவகத சம்பந்த

மில்லை; இவ்வாறு சர்வசம்பந்தமு மில்லாமையின் அசங்கம்,—அதுலம்=[வி - ச - பா - ம்] உபமானமற்றது, இதற்குச் சமானவஸ்து ஒருகாலத்தும், ஓரிடத்தும் இல்லாமையின் அதுலம்,—நிரந்தரம்=அந்தரம்=அவகாசம்; அஃதில்லாதது நிரந்தரம், [நிச்சித்திரம் என்றுபொருள்].—இதனை,

"நிலன்விண் கால்கிரி திசையெலா மேவியு நெடுஞ்சிலை புரை யாகா."—

என்னும் வாசிட்டத்தால் அறிக. அகோசரம்=கோசரம்=விடயம், தானென்றிற்கும் விடயமாகாமையின் அகோசரம்,—அகண்டம்=காலதேச வஸ்துக்களால் கண்டிதமாகாமையின் அகண்டம்,—அசம்=ஜநநமில்லாதது, [வி - ச - பா - ம்] நித்திய சித்தமாக இருப்பதுகொண்டு ஜநநத்தை யடை யாமையின் அசம்,—

"ஊறுபட வொன்றினுளே பிறத்தல்பிறந் துளவாதல்
வேறுபட வளர்தல்வளர்ந் தயலொன்றாய் விளைந்தமைதன்
மாறுபடத் தேய்தலற மாய்தலென வருகின்ற
வாறியல்பு மூடம்பன்றி யறிவடை யா."—

என்னும் கீதையினால் அறிக. அநந்தம்=[வி - ச - பா - ம்] நித்தியமாக வும், சர்வகதமாகவும் இருத்தலின் தேசகால வஸ்துக்களால் பரிச்சேதமில் லாமையான் அநந்தம்,—அவிநாசி=நாசரஹிதமாகலின் அவிநாசி,—நிர்க்குணம் =[வி - ச - பா - ம்] பரமார்த்ததசைக்கண் குணத்திரயங்க ளில்லாமையான் நிர்க்குணம், அல்லது சத்த, ஸ்பரிசாதி குணரஹிதமாயும், நித்தியசுத்த ஞான கரூபமாயும் இருத்தலின் நிர்க்குணம், [ல - தீ] சத்துவகுணத்தால் ஈசுரனை யும், இராஜோகுணத்தால் சீவரையும், தமோகுணத்தால் சகத்தையுமுண்டாக்கி அவைகளை யுகந்தோறும் விரித்தடக்கி விளையாநிற்கும் பிரகிருதிக்கு அதீதமாய்ச் சுத்த அதிஷ்டான சுகஸ்வரூபமாகத் தானிருத்தலின் நிர்க் குணம்,—நிட்களம்=கலை=அவயவம்; அஃதின்மையின் நிட்களம், [ல - தீ] பிரஹ்மம் ஆகாசவுருவா யிருக்குமென்றது ஒருவேதம், அதற்கு நாமரூபமில்லை, அமூர்த்தமா யிருக்குமென்றது ஒருவேதம், பிரஹ்மத்திற்கு முன்பின் உட்புற மில்லை, அது சாட்சியாயிருக்குமென்றது ஒருவேதம், அறியப்பட்டது மறியப் படாததும் பிரஹ்மமல்ல, அவைக்கந்நியமாய் அவைகளைப் பிரகாசிப்பிக்கும் அறிவு நிராகாரமென்றது ஒருவேதம்; இவ்வாறு கூறுகின்ற சுருதியானும், சூரியனை நாடாநிற்கும் மனதோடுகூட மீண்ட சிதாபாசனைக் கற்பித சேதன மென்றது கொண்டு வாளால் வெட்டுதலும், அக்கினியாற் சுடுவதும், நீட்டின கரத்திற் முக்குவதுபோற் முக்காமற்போமாயின், சுபாவசித்த ரூபரஹிதமென் னல் வேண்டுமோவென்னும் உத்தியானும், தான் உள்ளிந்திரியம், வெளியிந் திரியங்களுக்கு விஷயமாகாமல் அவைகளைப் பிரகாசிப்பிக்கும் அநுபவத்தா னும் நிஷ்களம்,—நிரவயவம்=[ல - தீ] அஸ்தபாதாதி அவயவங்களையுடைய மூவகைச் சரீரங்கட்கும் அந்நியமாய், ஆகாயம்போலும் உருவமாய், மூவகை

யவஸ்தைகட்குஞ் சாட்சியாய், நித்தியமாகியுள்ள தனக்குத் தனக்கென ஓரவ யவமின்மையானும், தன்போல உண்மையாயில்லாமல் தனதவயவமென்று சொல்லத்தக்கதான பொருளும் அல்லாமல் தன்னிற் கற்பிதமாய்த் தோன்றி நின்ற பிரபஞ்சத்தைக் குறித்தும் ஓரவயவ மின்மையானும் தான் நிரவயவம், —அநாதி=ஆதி=உற்பத்தி, அஃதில்லாதது அநாதி, [வி - ச - பா - ம்] இதற்குக் காரணமில்லை, இதுதானே சகத்பிராந்திக்கு ஆதிகாரணமாயும், அதிஷ்டானமாயு மிருத்தலால் அநாதி [ல - தீ] யாவைக்குங் காரணமான தனக்குக் காரணம் இன்மையானும், அநாதியென்று கூறும் கர்மம், அஞ்ஞானம், வேதம், ஈசன், சீவன் என்னும் சோபாதிகசகத்தும், நிருபாதிக சைதந்நியமான பிரஹ்மமும் ஆகிய இவ்வாறினுள்ளே கற்பிதஅநாதியான ஐந்திற்கும் மூலமான சித்திற்கு ஆதியின்மையின் அநாதி,—அசரீரம்=தேகமின்மையது, [ல - தீ] சரீரங்களையுடைய கருமி, யோகி, உலகபாலர், வைசுவாநரன் முதலிய சீவர்க்கும், சகசரீரமுடைய ஈசுரனுக்கும் அந்நியமாய் விளங்காநிற்குந் தான் சிற்சதாநந்த ரூபமாவதானும், தனக்கொரு சரீரமின்மையானும், சரீரம் என்னதென்னும் அநுபவத்தாற் றனக்குச்சரீரம் அந்நியம், அநித்தியமென்னும் யுத்தி சர்வலோக சம்மதமாவதானும் தான் அசரீரன்,—அவிகாரம்=விகாரமின்மையது, [ல - தீ] பஞ்சகோசங்களையும், அவைகளின் விகாரங்களையும் அறியும் அறிவே வடிவாதலால் அவிகாரம்,—அத்துவிதம்=[ல - தீ] துவிதமென்பது இரண்டு; அஃதின்மையது அத்துவிதம், துவிதசகந் தோன்றுவதனுற் றான் அத்துவிதமென்பது எவ்வாறெனின் :—மரஞ் செடி கொடி முதலியவை மண்ணிலேயுண்டாய் மண்ணிலேயிருந்து, மண்ணுகவே அழிதல்போலச் சாக்கிராதிய அவஸ்தைகளிற் றோன்றுநின்ற சகம் சாட்சியாகிய தன்னிலே யுண்டாய்த் தன்னிலேயிருந்து தானுகவே அழிதலானும், தன்னைப்போல மற்றோர்வஸ்து இன்மையானும் தான் அத்துவிதம்—என விலக்கு ஆம் அநேகம் உண்டு=என்று நிஷேதங்களான நாமங்கள் அநந்தமுள.—எ - று.

அநந்தமென்றமையால், இன்னும் அஸ்தூலம், அநணு, அகிருஸ்வம் அதிர்ச்சயம், அக்கிராகியம், அசப்தம், அஸ்பர்சம், அரூபம், அவ்வியயம் என்பன முதலியவுங் கொள்க. (கஉஎ)

[இப்படி விதிமுகத்தானும், எதிர்மறை முகத்தானும் பிரஹ்மத்தைச் சுருதிகள்கூறும் சத்தங்கள் அநேகமாயினும் பொருளொன்றே யாவது போலச்சச்சிதாநந்த சத்தங்கட்கும் பொருளொன்றேயெனச் சுருதியாற் சந்தேகநிவிர்த்தி செய்கின்றார்.]

இன்னவகை விதிவிலக்குக் குணங்க ணன்முஞ்சேர்ந்தொருமித் தெல்லாங் கூடிச், சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை யொருபொருளைச் சொல்லுஞ் சொற்கள், பின்னபத மாமதனுற் சத்தாதி குணப்பொருளாம் பிரம மேகம், அன்னபொரு ளொருமை யறிந் தகண்டபரி பூரணமா யாவாய் நீயே. (கஉஅ)

இ - ள். இன்னவகை = இப்படி (அநேகமாகச் சுருதிகள் கூறுகிற்கும்) —விதி விலக்குக் குணங்கள் = விதிநிடேதங்களாகிய குணங்கள்— நன்று ஆய்ச்சேர்ந்து ஒருமித்து எல்லாம்கூடிச் சொன்னபொருள் = நன்றாகச் சார்ந்தொன்றுபட்டு முழுவதுந்திரண்டு சொல்லிய வஸ்துவானது—ஒன்று அன்றி இரண்டு இல்லை = ஒன்றேயல்லாமல் உபயமில்லை.—ஒரு பொருளே = அகண்டைகரசமான பிரஹ்மத்தை—சொல்லும் சொற்கள் = பிரதிபாதியாநின்ற சத்தங்கள்—பின்னபதம் ஆம் = (பரஸ்பரம்) பின்னமான சத்தங்களாம்;—அதனால் = அக்காரணத்தால்,—சத்தாதி குணப்பொருள் ஆம் பிரமம் = சத்து, சித்து, ஆநந்தமென்னும் விசேடணத்தையுடைய வஸ்துவாகிய பிரஹ்மம்—ஏகம் = ஏகரூபமாம்—அன்னபொருள் ஒருமை அறிந்து = அத்தன்மையான பிரஹ்மத்தின் ஏகரசத்தன்மையை (ச் சுருதிப்பிரமாணத்தால்) உணர்ந்து—அகண்டபரிபூரணம் ஆய் ஆவாய் நீயே = (சஜாதியாதி) பேதரகிதமான பரிபூரணமாயிருப்பாய் நீ.—எ - று.

கைமலை, கறையடி, புழைக்கை என்னுஞ் சொற்கள் பின்னபதமாயினும் அவைகளின் பொருளான யானை பின்னமாகாமல் ஒன்றேயாவதுபோலும், ஓர் புருடனைப் பிதா, மகன், தம்பி என்னும் அநேகசொற்களாற் சொல்லினும் அவன் அநேகனுகாமல் ஒருவனேயாவதுபோலும் சச்சிதாநந்தாதி பதங்களாற் சுருதி கூறிய பிரஹ்மமும் அகண்டைகரசமாக இருத்தலாற் சந்தேகமொழிந்து அதுவாயிருத்தி யென்பதாம். (கஉஅ)

(281) [பிரஹ்மம் நிர்க்குணமென்றதால் அதற்குக் குணங்கூறுதல் என்தாய் மலடி யெனல்போல அசங்கதமா மென்றசங்கித்துக் குணமாயின் அங்ஙனமாம், சொருப்மாகலின் அங்ஙனமாகா தென்று பரிகரிக்கின்றார்.]

நிற்குணவத் துவின்குணங்க ளுரைப்பதுதாய் மலடியெனனிக ரென் னுதே, சற்குணனே வத்துநிலை யுரையாம லறியவல்ல சதுரருண்டோ, நற்குணவே தங்களிந்தச் சீவன்முத்தி பெறப்பிரம ஞானந்தோன்றச், சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களன்று பிரமமாஞ் சொரூபந் தானே. (கஉக)

இ - ள். நிற்குண வத்துவின் குணங்கள் உரைப்பது = நிர்க்குணவஸ்துவிற்கு (ஆநந்தாதி, அஸ்தூலாதிகளான அநேக) குணங்களைச் சுருதி கூறுவது—தாய் மலடி எனல் நிகர் என்னுதே = (என்) தாய் மலடியென்னுங் கூற்றிற்கினையாய், *வியாகாத மாமென்று சங்கியாதே;—சற்குணனே = (சமாதி) சற்குணங்களையுடைய மைந்தா — வத்துநிலை உரையாமல் = வஸ்துவினுடைய (ஆநந்தாதி, அஸ்தூலாதி) குணங்களை (ச் சுருதியானும், பெரியோர்களானுங்) கற்பியாமல்—அறியவல்ல சதுரர் உண்டோ = அறியச்சாமர்த்தியமுடைய அறிஞருளரா? (இலர்;)—நற்குண வேதங்கள் = (ஆகலின், யாவ

*வியாகாதம் = முன்னுக்குப்பின் விரோதமான வார்த்தை.

ரிடத்துங்) கருணையுடைய சுருதிகள்—இந்தச் சீவன் முத்தி பெற=(கஈ0 - வது செய்யுளிற்கூறிய) லட்சணமுடைய சீவன்முத்திச் சுகமடையவும்,—பிர மஞானம்தோன்ற=(முதற்படலத்தில், ருகூ - கூ0 - வது செய்யுளிற்கூறிய) பிரஹ்மத்தின் பரோட்ச அபரோட்ச விஞ்ஞானம் அதிகாரிக் குண்டாதற் பொருட்டும்—சொல் குணங்கள்=கற்பியாநின்ற குணங்கள்—பிரமத்தின் குணங்கள் அன்று=பிரஹ்மத்தினுடைய குணங்களல்ல;—[மற்றென்னே யெனின்;—] பிரமம் ஆம் சொரூபந்தானே=பிரஹ்மத்தின்சொரூபமே.—எ - று.

"வத்துநிலை யுரையாம லறியுவல்ல சதுரு ணண்டோ" எ - கு, உ - ம், வாசிட்டம்,

"சத்தியம் பிரம மான்மா பரமுதற் சாற்ற வேண்டி
யித்திறப் பெயர்மே லோரா லிடப்பெற்ற விந்த வான்மா."

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

"பிரமமாஞ் சொருபந்தானே" எ - கு, உ - ம், வாசிட்டம்,—

"எல்லாமென் றுரைத்ததெலா மறிவித்தற் பொருட்டேயா மிசையச்சொன்ன, சொல்லாலென் வீணன்றே யாதலினுலோமென்று துணிக வித்தை"—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஈக)

[சச்சிதாநந்தம் ஏகரசமென்பதிற் சுருதிப்பிரமாணத்தால் சந்தேகந் தெளிந்த சீடன் யுத்தியினுலும் சந்தேகநிவிர்த்தி யடைதற் பொருட்டு விளைதல்.]

மோகவிருள் கெடக்கோடி யருணனென வருகுருவே மொழி யக் கேளீர், ஏகபரி பூரணமா மென்சொரூப மென்னுளத்தி லிறுகும் வண்ணம், ஆகமங்கள் சொன்னபடி யென்னையகண் டார்த்தமா வறிந்தே தனையா, ஊகமுமொத் திடவுரைத்தாற் பசுமரத்தி லாணிபோ லுறைக்கு நெஞ்சே. (கசO)

இ - ள். மோக இருள் கெட=(தனது காரியவர்க்கங்களோடு) அஞ் ஞானவிருள் நாசமாக—கோடி அருணன் என வரு குருவே=கோடி ஆதித் தியர்போன் றெழுந்தருளிய குருவே,—ஐயா=ஐயனே—மொழியக் கேளீர் =(அடியேன் ஓர்) விண்ணப்பஞ்செய்யக் கேட்டருள்வீராக;—ஏக பரிபூர ணம் ஆம் என் சொரூபம்=ஏகரச சச்சிதாநந்த பரிபூரணமாகிய எனது சொரூ பவநுபூதி—என் உளத்தில் இறுகும் வண்ணம்=எனது அந்தக்கரணத்தின் கண் ணழுந்தும்படியாக—ஆகமங்கள் சொன்னபடி=சுருதிகள் கூறியவாறு —என்னை அகண்டார்த்தமா அறிந்தேன்=சச்சிதாநந்தமாகியவென்னை அகண் டைகரசப்பொருளாக நிச்சயித்தேகமாயறிந்துகொண்டேன்.—ஊகமும் ஒத்

திட உரைத்தால்=(சச்சிதானந்தம் ஏகமென்பதில்) உத்தியும் எனக்குச் சம்மத மாக வருளிச்செய்தால்—பசுமரத்தில் ஆணிபோல்=பச்சைமரத்தில் (அறைந்த) ஆணிபோல—நெஞ்சு உறைக்கும்=(அநுபூதியின்கண் என்) மனமழுந்தும்.—எ - று.

"மோகவிருள் கெடகீகோடி யருணனென வருதருவே" எ - து, சமுசயத்திற்குக் காரணமான அஞ்ஞானவிருளை அற்பமுஞ் சேடியாமல் சுலபமாகப் போக்குவிக்கும் சுருதி, யுத்தி, அநுபூதிவலியைப் பூரணமாயுடையாராயிருத்தலினென்க. (சுசo)

(282) [உத்தியினால் சச்சிதானந்தங்களினொருமையைத் தெரித்துணர்த்துகின்றார்.]

சத்தேசித் தாகுமய லெனிலசத்தா மசத்தானுற் சாட்சியெங்கே
சித்தேசசத் தாகுமய லெனிற்சடமாஞ் சடங்களுக்குத் திதியு மில்லை
ஒத்தேதோன் றியசத்துஞ் சித்துநல்ல சுகமாகு மூகத் துக்கோர்
வித்தேயன் னியமாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் விளைந்தி டாதே.

இ - ள். சத்தே சித்து ஆகும்=இருக்கின்றதே விளங்குகின்றதாம்;—அயல் எனில்=(இருக்கின்றதற்கு விளங்குகின்றது) அன்னியமெனில்,—அசத்து ஆம்=(இருக்கின்றதற்கு அந்நியமான சித்து இருப்பில்லாமையின், சசவிஷாணம்போல) அசத்தாம்;—அசத்து ஆனால்=(அச்சித்து இருப்பில்லாமற் சசவிஷாணம்போல்) அசத்தாயின்,—சாட்சி எங்கே=அது சாட்சியாதல் எவ்விடத்திற் காணப்படும்: (ஓரிடத்துங் காணப்படாது; ஆகலின், சத்தே சித்தெனக்கொள்ளல்வேண்டும்.)—சித்தே சத்து ஆகும்=விளங்குகின்றதே இருக்கின்றதாம்; அயல் எனில்=(விளங்குகின்றதற்கு இருக்கின்றது) அந்நியமெனில்,—சடம் ஆம்=(அச்சத்திற்கு விளங்குந் தன்மையில்லாமையின், கடபடாதிகள் போல அச்சத்து) சடமாகும்.—சடங்களுக்குத் திதியும் இல்லை=சடபதார்த்தங்கட்கு (இரச்சு சர்ப்பம்போல) இருப்புமில்லை; (ஆகலின், சித்தே சத்தாகுமெனக் கொள்ளல்வேண்டும்.)—ஒத்தே தோன்றிய=(இவ்வாறான யுத்திக்குப் பின்னமாகாமல்) ஏகமாகவே தோன்றிய—சத்தும் சித்தும்=சத்துஞ்சித்துமே—நல்ல சுகம் ஆகும்=பரமப்பிரேமாஸ்பதமான ஆநந்தமாம்;—அன்னியம் ஆகில்=சத்தாகிய சித்துக்கு ஆநந்தமந்நியமாயின்,—சடம் அசத்து ஆம்=சடமும், அசத்துமாம்;—(ஆகவே,) சுகானுபவம் விளைந்திடாதே=ஆநந்தானுபவ முண்டாகாதே? (ஆகலின், சத்தும், சித்துமே ஆநந்தமெனக் கொள்ளல்வேண்டும்; கொள்ளவே, பிரஹ்மம் அகண்டைகரசமென்பது யுத்தியாற் பெறப்படுகின்றது;)—ஊகத்துக்கு ஓர் வித்து=(சச்சிதானந்தங்களே அகண்டார்த்தமாக) யூகித்தற்கு இவ்வுத்தியே தலைமையான யுத்தியாம்.—எ - று.

"ஊகத்துக்கு" என்றதற்கு, ஏனைய நாமங்களையும் ஊகித்தற் கெனினுமாம். (சுசக)

[இன்னும் சச்சிதானந்தங்கள் அகண்டார்த்தமென்பதை யுத்தியால் வற்புறுத்திக்கூறி முடிக்கின்றார்.]

வீயாத சத்துமுன்னம் விளங்குவது தன்னுலோ வேறொன்றி லோ, வாயால்வே றெனிலதுவு மசத்தோசத் தோவசத் தேன் மலடி மைந்தன், பேயாகா ரியஞ் செயுமோ சத்தெனவிப் படியதையும் பிரித்துச் சொன்னுல், ஓயாத வவத்தையாங் குதர்க்கவிகற் பங்களேவிட் டொழிந்தி டாயே. (கசஉ)

இ - ள். வீயாத சத்து=காலத்திரயாபாத்தியமான சத்து—முன்னம் விளங்குவது=ஏற்கெனவே விளங்காநிற்பது—தன்னுலோ வேறு ஒன்றுலோ =(தீபம்போலத்) தன்னுலேயே விளங்குகின்றதா? (அல்லது, தீபத்தினுலே கடம்போலத்) தனக்கு அந்நியமான வேறொரு பதார்த்தத்தினுலே விளங்குகின்றதா?—வாயால் வேறெனில்=வாக்கால் தனக்கந்நியமான ஓர் பதார்த்தத்தால் விளங்காநின்றதென்னின்?—அதுவும்=(ஆன்மசத்திற் கந்நியமான) அப்பதார்த்தமும்,—அசத்தோ சத்தோ=சத்துவிலட்சணமா? அல்லது *சதந்தரமா?—அசத்தேல்=சத்துவிலட்சணமென்று சொல்லுவாயாகின்,—பேயா=மதிகேடனே—மலடி மைந்தன் காரியம் செயுமோ=வந்தியாசுதன் ஓர் காரியஞ் செய்வதுமுண்டா?—(சத்துவிலட்சணம் வந்தியாசுதன்போல அசத்தாகலின், அதற்குச் சத்தைப் பிரகாசிப்பிக்கிற ரூபமான காரியங்கூடாதென்பது கருத்து.) சத்து என=சதந்தரமென்று—இப்படி=இவ்விதம் —அதையும்=அவ்வந்நியத்தையும்—பிரித்துச் சொன்னுல்=பகுத்துக் கூறிடில்,—ஓயாத அவத்தை ஆம்=(அச்சதந்தரம் நிக்கிருஷ்டமாயிருந்துகொண்டு அச்சத்தைத் தோற்றுவிக்கிறதா? அல்லது, சமானமாயிருந்துகொண்டு தோற்றுவிக்கிறதா? அல்லது, ஒன்றினுல் தான் பிரகாசவதிசயம்பெற்றுத் தோற்றுவிக்கிறதா? அல்லது, தானே தோன்றிக்கொண்டு அச்சத்தைத் தோற்றுவிக்கிறதா என்று இப்படி நான்குவிதமான விகற்பம் வரும்; வரவே, அச்சதந்தரம் நிக்கிருஷ்டமாயிருந்துகொண்டு அச்சத்தைத் தோற்றுவிக்கிறதென்னும் முதல் விகற்பங்கூடாது. என்னை? சூரியப்பிரகாசத்திற்கு நிக்கிருஷ்டமாகிய தீபமும் சூரியனைத் தோற்றுவித்தல் வேண்டும்; அங்ஙனங் காணப்படாமையின் என்க. அச்சதந்தரம் சத்துக்குச் சமானமாயிருந்துகொண்டு அச்சத்தைத் தோற்றுவிக்கிறதென்னும் இரண்டாம் விகற்பமுங் கூடாது. என்னை? தீபத்திற்குச் சமானமான மற்றொருதீபம் அத்தீபத்தைத் தோற்றுவித்தல் வேண்டும்; அங்ஙனங் காணப்படாமையின் என்க. அச்சதந்தரம் ஒன்றினுல் தான் பிரகாசவதிசயம்பெற்று அச்சத்தைத் தோற்றுவிக்கிறதென்னும் மூன்றும் விகற்பமுங் கூடாது. என்னை? அச்சதந்தரத்திற்கும் பிரகாசவதிசயந்தருகிற வஸ்து சத்தா? அல்லது, அசத்தா என்று விகற்பிக்க வரும். சத்தென்னின்;—அது சொப்பிரகாசமா? அல்லது, அப்பிரகாசமா என்று விகற்பிக்க வரும்; அது சொப்பிரகாசமாமென்னின்;—அப்பொழுது சொப்

*சதந்தரம்=வேறு சத்து.

பிரகாசமாகிய சத்தே சித்தாகலின், சத்துக்குச் சொப்பிரகாசத்துவமும், அத்துவிதீயத்துவமும் வேதாந்திகட் கந்நியாால் அங்கீகரிக்கப்படவில்லை; ஆதலால், ஆன்மசொரூபமாகிய சத்தைத் தோற்றுவிக்கிற சதந்தரத்திற்குப் பிரகாசவதிசயந் தருகிற சத்து சொப்பிரகாசமென்னல் கூடாது. அப்பிரகாசமென்னின்;—அதுவுங்கூடாது. என்னை? அப்பிரகாசமாகிய வஸ்து பிரகாசமாகிய வஸ்துவுக்குப் பிரகாசவதிசயத்தைத் தருவது கண்டிலேம்; ஆகலின், அப்பிரகாசமெனலுங் கூடாது; ஆனல் அந்நிய வஸ்துவினுற் பிரகாச வதிசயத்தைப் பெற்றுச் சதந்தரம் ஆன்மாவைத் தோற்றுவிக்கிறதென்னின்;—அந்நியவஸ்து அசத்தாகலின், அங்ஙனஞ் சொல்லுதலும் கூடாது; அங்ஙனமாயின், ஆன்மசொரூபமான சத்திற்குப் பிரகாசவதிசயந்தருஞ் சதந்திரத்திற்குப் பிரகாசாதிசயந் தருஞ்சத்து அந்நியமொன் றுண்டெனல்வேண்டும்; அங்ஙனஞ் சொல்லின்;—அச்சத்துக்குப் பிரகாசவதிசயந் தருஞ் சத்து அந்நியமொன்றுண்டென்றும், அச்சத்திற்குப் பிரகாசவதிசயந் தருகிற சத்து அந்நியமொன் றுண்டென்றும் இப்படி) அநவஸ்தாதோஷமும், (சத்திற்கு அப்பிரகாசத்துவமும், தொய்தத்துவமுமுண்டென்று) வரும்.—(உலகின்கண்ணே ஒன்றிற்குப் பிரகாசவதிசயந்தரும் அக்கினியாதிகள் தாம் பிரகாசமாயிருந்துகொண்டே அந்நியங்களைப் பிரகாசிப்பிக்கக்கண்டோம்: தாம் அப்பிரகாசமாயிருந்துகொண்டு அந்நியங்களைப் பிரகாசிப்பிக்கக் கண்டிலேம்; ஆதலால், முன்சொன்ன பட்சத்திரயங்களுங் கூடாமையின், சத்தைத் தோற்றுவிக்கிற சதந்தரம்தானே சொப்பிரகாசமாயிருந்துகொண்டு அச்சத்தாகிய வஸ்துவைத் தோற்றுவிக்கிறதென்றே சொல்லல் வேண்டும்; இங்ஙனஞ் சொல்லில், சொப்பிரகாசமான சதந்தரமே சித்தென்று சித்தித்தது; இங்ஙனமாமேல், உலகின்கண் ஆகாசத்திற்போல உபாதியன்றிச் சத்துத்துவயம் நிரூபித்தல் கூடாது. ஏனெனில்;—நிரூபாதிகமாகிய சத்து அத்துவிதீயமென்று சுருதியாதிகளாற் சொல்லப்படுவதால்; ஆகலின், பிரகாசமாகிய சதந்தரத்தால் அவ்வான்மசத்துத் தோன்றுநிற்கின்றதென்னல் கூடாது; மற்றெங்ஙனெனின்;—ஆன்மசொரூபமாகிய சத்துச் சொப்பிரகாசமாயிருத்தலின், அதுவே சித்தென்று சித்தித்தது; அச்சித்தான சத்திற்கு விலட்சணமான வஸ்து அசத்தாகலின், அதற்கு இரண்டாம் வஸ்து இல்லை; ஆகையால், அச்சித்தான சத்தே ஆநந்தரூபமாயிற்றென்று இப்படி யூகித்து) குதர்க்கவிகற்பங்களைவிட்டு ஒழிந்திடாய்=(முன்னே நீ ஆட்சேபித்த) குதர்க்கமாகிய விகற்பங்களை விட்டொழியக்கடவாய்.—எ - று.

"பேயா" எ - து, சீடன் குதர்க்கங்களைவிட்டு நம்புதற்பொருட்டுத் திருவுள்ளத்தின்கண் சற்றே முனிவுற்றதுபோற் காட்டிக் கூறினது. (கசஉ)

(283) [சச்சிதாநந்தங்கள் அகண்டார்த்தமாகவுள்ள தன்மையை, கூடு - வது செய்யுடோடங்கி, கசஉ - வது செய்யுள் வரையும் சுருதி யுத்திகளா லுணர்த்துவித்து இனி அநுபூதியாலுந் தெரித்துணர்த்துகின்றார்.]

சுருதியுத்தி யொத்ததுபோ லநுபவமுங் கேள்சுழுத்திச் சுகவா நந்மிருதிவடி வாதலிலவ் வாநந்த மேயறிவாம் வேறங் கில்லை [தம்

கருதுபிர ளயஞ்சுழுத்தி யிரண்டிலுநீ யிருந்திருளைக் காண்கின் றுயே
இருதயத்திப் படிநோக்கி யேகபரி பூரணமா யிருந்தி டாயே. (கசஈ)

இ - ள். சுருதி யுத்தி ஒத்ததுபோல்=(சச்சிதாநந்தங்கள் தம்மில் வேறு படாமல் அகண்டார்த்தமா யிருப்பதில்) சுருதியுத்திகள் விரோதியாமல் ஒத்ததுபோல—அநுபவமும் கேள்=அநுபவ மொப்பதையுங் கூறக்கேட்பாய் : —சுழுத்திச் சுக ஆநந்தம்=உனது சுழுத்தியின்கண் (நித்திய, நிருபாதிக, நிரதிசய) சுகசொரூபமாகிய ஆநந்தமானது—மிருதி வடிவு ஆதலில்=(அங்கே அஞ்ஞானத்தைப் பிரகாசிப்பித்துக்கொண்டிருந்து விழித்தபொழுது ஒன்றுமறியாமற் சுகமாயிருந்தேனென்னும்) ஸ்மிருதிரூபமாக உதித்தலால்,—அவ்வாநந்தமே அறிவு ஆம்=அவ்வாநந்தமே சித்தாகும்.—[ஆண்டஞ் ஞானம் வேறென்றல் விளங்கிற்றென்பாயேல்,] அங்கு வேறு இல்லை=அச்சுழுத்தியின்கண் ஆநந்தத்தைத் தவிர பிரகாசாந்தரமில்லை.—கருது பிரளயம் சுழுத்தி இரண்டிலும்=கருதுகின்ற பிரளயமும், சுழுத்தியும் ஆகிய இரண்டவஸ்தைகளிலும்—நீ இருந்து=(சிதாநந்தரூபனை) நீ இருந்தே—இருளைக் காண்கின்றாய்=(அஞ்ஞானமாகிய) இருளைக் காண்கின்றாய்;—(ஆகலின், நீ சச்சிதாநந்த சொரூபனும் : சச்சிதாநந்த சொரூபமே சாஸ்திரங்களிற் பிரஹ்மமென்று கூறியிருப்பதால் பிரஹ்மசொரூபமே ஆன்மா. வியாபகமாயிருப்பதற்குப் பிரஹ்மமென்று பெயராம். தேசத்தால் எதற்கந்தமில்லையோ அது வியாபகமென்று சொல்லப்படும்; அதற்கு ஆன்மா பின்னமாமேல், தேசத்தாலந்தமுடையதாம் : எதற்குத் தேசத்தாலந்தமுண்டோ அதற்குக் காலத்தானும் அந்தமுண்டாம்; இது நியமமாகலின், ஆன்மா அநித்தியமாம் : எதற்குக் காலத்தாலந்தமுண்டோ அஃதநித்தியமெனப்படும்; இதனால், பிரஹ்மத்திற்குப் பின்னமாக ஆன்மா இல்லை; ஆன்மாவிற்குப் பின்னமாகப் பிரஹ்மமில்லை; பின்னமாயின், அநான்மாவாம்; அநான்மாவாகிய கடாதிகள் சடமாகலின், ஆன்மாவிற்குப் பின்னமான பிரஹ்மமும் சடமேயாம்; ஆதலால், ஆன்மாவிற்குப் பின்னமாகப் பிரஹ்மமுமில்லை; பின்னையோ பிரஹ்மசொரூபமே ஆன்மாவாம். சேதனமொன்றே சர்வப் பிரபஞ்சத்திற்கும், மாயைக்கும் அதிஷ்டானமாவதால் பிரஹ்மமென்று சொல்லப்படுகிறது : அவித்தைக்கும், வியஷ்டிதேகாதிகட்கும் அதிஷ்டானமாவதால் ஆன்மாவென்று சொல்லப்படுகிறது. தற்பதலட்சியம் பிரஹ்மமென்றும், துவம்பதலட்சியம் ஆன்மாவென்றுஞ் சொல்லப்படும். ஈசுராசாட்சி தற்பதத்திற்கு லட்சியம், சீவசாட்சி துவம்பதத்திற்கு லட்சியம். வியஷ்டிசங்காத வுபகிதசேதனம் சீவசாட்சி, சமஷ்டி சங்காத வுபகிதசேதனம் ஈசுராசாட்சி. சீவனுக்கும், ஈசுரனுக்கும் ஏகத்தன்மை கூடாதாயினும் சீவசாட்சிக்கும், ஈசுராசாட்சிக்கும் உபாதியினன்றிப் பேதமின்மையாற் சொரூபத்தாலவ்விரண்டுமொன்றே; மடத்தின்கண்ணுள்ள கடாகாச மடாகாசங்கட்கு உபாதியினற் பேதமேயன்றிச் சொரூபத்தாற் பேதமின்மைபோல ஆன்மாவுக்கும், பிரஹ்மத்திற்கும் உபாதிபேதமேயன்றி வேறுபேதமில்லை : இரண்டுமொன்றே; இத்துணையுங் கூறியது,—

" கருதுபிர ளயஞ்சுழுத்தி யிரண்டினுநீ யிருந்திருளைக் காண்கின் றுயே"—

(என்பதன் கருத்துரை.) இருதயத்து இப்படி நோக்கி=உனதிருதயத்தின்கண் இவ்வாறு நாடி—ஏக பரிபூரணம் ஆய் இருந்திடாய்=(சஜாதீய, விஜாதீய, சுவகத) பேதரகிதமான பரிபூரணப் பிரஹ்மமா யிருப்பாய்.—எ - று.

" சுழுத்திச் சுகவா நந்தம் மிருதிவடி வாதலில்" என்பதை,

" பரமமா யுண்டெனல் வடிவாய், மின்னிய சமமா மறிவுகாண் பவற்றின் மேவுற வெழுதல் சங்கற்பம்."—எ - ம்,

" அறிவெனும் விதைசங் கற்பமா முளையாம்"—எ - ம், வரும்.

வாசிட்டச் செய்யுட்களா னுய்த்துணர்க.

கஉக - வது செய்யுளில்,

" சச்சிதா நந்தநா னென்னவிவன் மன்னுமநு பவமெங்ஙனே"—

என்று சீடன் சங்கையின் மேல்வைத்து உபக்கிரமித்ததை இங்கே உபசம்மாரஞ் செய்தன ரென்றறிக. (கசஉ)

(284) [சீடன் தருவருளால் சமாதிநடமான அநுபூதிவாயிலாகச் சந்தேகந் தெளிந்து ஆநடமடைந்ததைக் கூறுகின்றார்.]

பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமநு பவம் விடாமல், பலமலரின் மதுப்போலே சச்சிதா நந்தமொன்றும் பரமார்த்தத்தைப், பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப் பார்த்தபோது, பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்று மொரு படமா னனே. (கசச)

இ - ள். பல கலையும் உணர்ந்த=பல ஞானநூல்களையும் உள்ளபடியறிந்து நிஷ்டையினையுமுடைய—குரு=குருவானவர் — பல மலரின் மதுப் போலே=பல புஷ்பங்களினின்றும் (தேனீக்களா லெடுத்துச் சேர்த்த) தேனைப்போல—சத் சித் ஆநந்தம் ஒன்று ஆம்=சச்சிதாநந்தங்கள் அகண்டை காரமான — பரமார்த்தத்தை=உண்மைநிலையை — மொழிந்தபடி=சுருதி, யுத்தி, அநுபவத்தோடும் உபதேசித்தபடி—இவனும்=இச்சீடனும்—அநுபவம்விடாமல்=(சுருதி, யுத்திகளுக் கொத்ததான) தன்னநுபவத்தை விடாமற்கொண்டு—பலபொழுதும்=பலகாலும்—கண்மூடி=(திசைகளைப் பாராதிருக்கும்படி) கண்களைத் தனது மூக்கின்நுதிமேலேநிறுத்தி—சமாதி இருந்தான்=சமாதியிலிருந்தனன் :—விழித்துப்பார்த்தபோது=(பின்னே சமாதியினின்றும்) உத்திதனாகிப் பார்த்தபோது—பல வடிவு ஆம்=அநேகவித ரூபங்களான—சர அசர சித்திரங்கள் எலாம்=சராசரங்களாகிய சித்திரங்க

ளனைத்தும்—தோன்றும்=(நிச்சித்தமான கண்ணுடியிற் புரம்போலத்) தோன்றுகிற்கும்—ஒருபடம் ஆனன்=அகண்டசச்சிதானந்தப் பிரஹ்மமே தானனன்.—எ - று.

சராசரவுருவங்களைச் சித்திர மென்றமையின், அவற்றிற்காதாரமாகிய அகண்டைகரசனன தன்னை, "படம்" என்றார். தியானிக்கிறவனையும், தியானத்தையும் கிரமமாகப் பரித்தியாகஞ்செய்து தியானிக்கப்படுகின்ற ஒரு பிரஹ்மமாத்திரம் கோசரமுடையதாய் நிவாதஸ்தலதீபம்போ லிருக்குஞ் சித்தஞ் சமாதி யெனப்படும். "**விழித்துப் பார்த்தபோது, பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்று மொரு படமானனே**" எ - கு, உ - ம், வாசிட்டம்.

"கசனுயர் சமாதி நீங்கி யொருபகற் களிக்கு நெஞ்சன்
வசமறத் தழுதழுத்த வசனத்தன் யாது செய்கேன்
றிசையுறவெங்கு செல்கேன் றீர்ப்பதென் கொள்வ தென்னு
மிசையுயர் கற்ப நீர்போல் மேதினி யெங்கு நானே"—எ - ம்,

"மேனியிற் புறத்தினுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில்
வானில்லை யகத்திலெங்கும் யானன்றி மற்றொன் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாது மில்லை
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா நந்த மென்றான்."—எ - ம்,

பாடுதுறை.

"தன்னிலே யெல்லாமி ருக்குமாகிற் றானெல்லாத் துள்ளுமி ருப்பனாகில், பின்னிலன் முன்னில னவனாகிற் பெரிதுமு டிந்ததென் வாழ்க்கைப் பாடே."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கசசு)

[தருவையும், அவாருளாலே வேதாந்த விசாரத்தின் பயனனகர்த்தவ் விய புத்திநிவிர்த்தி தனக்குண்டானதையும் வியந்து முன்னே கூறுஉ - வது செய்யுளில் *உபோத்காதமாகக் தருவருளி யதைப்பற்றி விஞ்ஞதமாகச் சீடன்சங்கிக்கின்றான்.]

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே விஞ்ஞதமன்றி யினி வேறுண்டோ, அதையுணர்த்து மதைநினைத்து மிருப்பதன்றே ஞானி

---

*உபோத்காதம் எ - து, பிரகிருதத்தைச் சொல்லாநிற்கும் உதாரணம்: பிரகிருதார்த்தத்தை வர்ணித்தற்கு அந்நியார்த்தத்தை வர்ணித்தல். திருஷ்டாந்தம். அந்நியனுடைய கிரகத்திற்குப்போய் மோர்வாங்க ஒருவனுக்கு இச்சைவந்தபோது அவன் அன்னியனுடைய கிரகத்திற்குப்போய் முன்னே மோர்கொடுவென்று சொல்லில், உலோபியாகிய மனுடனுல் மோர் கிடைக்க மாட்டாதாகலின், அந்தப் பிரயோஜனத்தை மனதில் வைத்துக் கொண்டு அதன்நிமித்தம் உன்னுடைய பசு கறவல் உண்டா? இல்லையா என்பது முதலிய வார்த்தை யுரைத்தல் உபோத்காதம்.

களுக்கான நீதி, முதலுரைத்த துரியாதீ தமுமேழாம் பூமியுமுக்கியமா மென்ற, பதமுமதின் வகையுமெனக் கெளிதாகத் தெளியும் வண்ணம் பணித்திடீரே. (கசடு)

இ - ள். இதயம் ஒத்த சற்குருவே=எனது மனதுக்கொத்த சத்துபதேசம் பண்ணுகின்ற குருவே—நமக்கு=(கிருதகிருத்தியரான) நமக்கு—இதுவே=(பிரஹ்மாகார விருத்தி யுண்டாதற்குக் காரணமான வேதாந்த வாக்கியங்களால் நமதான்ம சொரூபமான பிரஹ்மத்தைச் சிந்தித்து மகிழா நிற்கும்) இத்தொழில்தானே—விஜ்ஞதம் அன்றி=விஜ்ஞதமாக வுரியதல்லாமல்—இனி வேறுண்டோ=இனிமேல் இதற்கந்நியமான ஒரு கிரியை செய்யத்தக்கதாகவுண்டா, (இல்லை.)—அதை உரைத்தும்= (சிஞ்ஞாசையுடையோர் வரில்) அப்பிரஹ்மத்தைத்தானே அவர்கட் குபதேசித்தும்,—அதை நினைத்தும்=(தனித்திருக்கில்) அதைத்தானே சிந்தித்தும்—இருப்பது அன்றே=இருப்பதல்லவா!—ஞானிகளுக்கு ஆன நீதி=அறிஞர்கட் குரியதான நியாயம்;—(ஆகலின்,) முதல் உரைத்த=முன்னே (கஉ - வது செய்யுளிற்) கூறிய—துரியாதீதமும்,—ஏழாம்பூமியும்,—முக்கியம் ஆம் என்ற பதமும்=முக்கியமாகுமென்று சொல்லிய பதமும்,—அதின் வகையும்=அதன் கூறுபாடும்—எனக்கு—எளிதாகத் தெளியும் வண்ணம்=இலேசாகப்போதமாகும்படி—பணித்திடீர்=அருள்வீராக.—எ - று.

அநேக பிரகாரமாகத் தாஞட்சேபித்த ஆட்சேபங்களுக் கெல்லாஞ் சமாதானம் தன் மனத்துக்குச் சம்மதமாகும்படி யருளிச்செய்து சந்தேகங்களனைத்தையுந் தெளிவித்தலால், ‘‘ இதயமொத்த சற்குருவே ’’ என்றான். (கசடு)

(285) [வேதாந்த சாஸ்திரங்களின் சாரபூதமான ஞானசத்த பூமிகளை விஸ்தாரமாக வறியவேண்டிச் சீடன்கடாவினதற்கு விடையாகக் கீர்த்திக்கத் தொடங்கி அவைகளை விரோதியாகவுடைய அஜ்ஞான சப்தபூமிகளின் நாமங்களை முன்னரிக் கூறுகின்றார்.]

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூமிகளேழென்பார் இனியவற்று ளஞ்ஞான பூமிகளே ழையுமுந்தி யியம்பக்கேளாய் தனிவித்துச் சாக்கிரஞ்சாக் கிரமகா சாக்கிரஞ்சாக்கிரத்தைச் சார்ந்த கனவுகளுக் கனவுசாக் கிரஞ்சுழுத்தி யென்றெழுபேர் கணித்தார் மேலோர். (கசசு)

இ - ள். வினவும் இடத்து=(பூமிகை எத்தனையென்று) ஆசங்கித்தாராயுமிடத்து—அஞ்ஞான பூமிகள் ஏழ் ஞான பூமிகள் ஏழ் என்பார்=அஞ்ஞான பூமிகள் ஏழென்றும், ஞானபூமிகள் ஏழென்றும் (வாசிட்டமுதலிய கிரந்தங்களிற்) பெரியோர் கூறுவர்;—இனி அவற்றுள்=இனி அப்பூமிகளுள்,—அஞ்ஞான பூமிகள் ஏழையும்=அஞ்ஞானசத்த பூமிகளேயும்—முந்தி இயம்பக் கேளாய்=முன்னே சொல்லுகிறேம் கேட்பாய்;—தனிவித்துச்

சாக்கிரம்=க - வது கலப்பில்லாத பீஜசாக்கிரம்,—உ - வது சாக்கிரம்,—ஈ - வது மகாசாக்கிரம்,—சாக்கிரத்தைச்சார்ந்த கனவு=ச - வது சாக்கிர சொப்பனம்,—கனவு=ஞ - வது சொப்பனம்,—கனவு சாக்கிரம்=ஊ - வது சொப்பனசாக்கிரம்,—எ - வது சுழுத்தி—என்று—எழுபேர்=எழுநாமங்கள் —கணித்தார் மேலோர்=மதித்தனர் பெரியோர்.—எ - று.

கணித்தார்=எண்ணினரெனினும் ஆம். (கசஊ)

(286) [பீஜசாக்கிரம், சாக்கிரம், மஹாசாக்கிரம், சாக்கிரசொப் பனம் என்னும் இந்நான்கு பூமிகளின் இலக்கணங் கூறு கின்றார்.]

முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமது தான்முதல்வித் தாகும்
இந்தவறி விற்பண்டில் லாவகந்தை முளைபோலா மிதுநனவாம்
வந்துவந்து பிறவிதொறு மகமமதை வளருமது மகாநனவாம்
நந்துமகங் கொடுநனவின் மனோராச்சி யஞ்செயலே நனக்க னவே. ()

இ - ள். முந்த=சர்க்காதியில் அல்லது, சாக்கிரத்தினுதியில்—அகண் டத்து=மாயா * சபளசைதந்நியத்தினின்றும்—எழும் ஓர் அறிவுமாத்திரம் அதுதான்=எழுகின்ற சிதாபாசத்தோடுகூடின ஒரு அறிவுமாத்திரமான அதுவே—முதல் வித்து ஆகும்=பிரதமாவஸ்தையான பீஜசாக்கிரமாம்;—(பின்னே) இந்த அறிவில்=பீஜசாக்கிர மென்னு மிவ்வறிவின்கண்ணே—பண்டு இல்லா அகந்தை=முன்னில்லாதவையான அகந்தை, (மமதைகள்)—முளைபோல் ஆம்=அங்குரம்போலச் சூட்சுமமாக எழாநிற்கும்;—இது=இவ்வவத்தை—நனவு ஆம்=சாக்கிரமாம்.—வந்து வந்து=உண்டாகி உண்டாகி—பிறவிதொறும்=சநநங்கடோறும்—அகம் மமதை வளரும் அது=அகந்தை மமதைகள் திடதரமா யுதியாநிற்குமதுவே—மகா நனவு ஆம்=மஹாசாக்கிரமாம்.—நந்தும் அகங்கொடு=ஆக்கமுடைய அந்தக்காரணத்தைக் கொண்டு—நனவின்=சாக்கிரத்தின்கண்—மனோராச்சியம் செயலே=(முன்தான் அறிந்ததேனும், அறியாததேனும் அதன்மயமாய் † லவணன்போல) மனோராச்சியஞ் செயலே—நனக்கனவு=சாக்கிரசொப்பனமாம்.—எ - று.

"அகந்தை" என ஒன்றைக்கூறினும், இனம்பற்றி மமதையுங்கொள் ளப்பட்டது. இங்கே, "அகண்டம்" என்பதற்கு, மாயாசபளசைதந்நிய மென்று பொருள் விரித்தது மாயாரகிதத்திற் சிருஷ்டிகூடாதாகலின் என்க; இது பெரியவாசிட்ட வியாக்கியானத்தின் கருத்து; அது சம்பூர்ணமாக லின், "அகண்டம்" என்றார். சிதாபாச ‡ சம்வளிதமான சேதனம் நாம மின்றி, மலமின்றி என்பார், "அறிவுமாத்திரம்" எ - ம், தேகோற்பத்தி அநந்தரமுண்டாய் வளராநிற்கும் சித்தம், சீவன்முதலிய நாமசத்தங்கட்கும்,

* சபளம்=கூடியது.

† லவணன்=வாசிட்டத்திற் கூறியுள்ள ஓராசன்.

‡ சம்வளிதம்=கூடியது.

அவைகளின் அர்த்தங்கட்கும், பீஜபூதமாய் நிற்றலாற் பீஜசாக்கிரமாமென் பார், "விஸ்தாதும்" என்றுங் கூறினர்.

"அகந்தை" எ - து, தேகம் நானென்னும் நிச்சயம். "மமதை" எ - து, போக்கியசமூகம் எனதென்னும் நிச்சயம். "பண்டில்லா" எ - து, "மூளபோலாம்" என்பதற்கேது கூறினது. சஜாதீயமான பூர்வ பூர்வ சம்ஸ்கார உற்போதத்தால் விசேஷ அறிவு திடதரமா யுதியாநிற்கும் சாக் கிரத்தினிச்சயம், "மஹாசாக்கிரம்" என்பார், "வந்துவந்து பிறவிதோறு மகமமதை வளருமது மகாந ஞவாம்" என்றார். (கசஎ)

[ஏனைய ழுன்று பூமிகளின் இலக்கணங் கூறுகின்றார்.]

உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல்சொப் பனமெனும் பேரு டைய தாகும், பண்டுகளுக் கண்டுமறந் ததைமீண்டு நினைப்பதுசொப் பனந ஞவாம், மண்டுமிருண் மூடுவது சுழுத்தியா மஞ்ஞான வகை கள் சொன்னேனும், விண்டுநிறை முத்திதரு ஞானபூ மிகளேழும் விளம் பக் கேளாய். (கசஅ)

இ - ள். உண்டு உறங்கி=போஜனஞ்செய்து (பாயலிற் படுத்து) நித் திரைசெய்து—மனோராச்சியம் செயல்=(அற்பகாலத்தில் அநேககால வியா பாரரூபமான) மனோராச்சியஞ்செய்து (நித்திரையினந்தத்தில் நித்திராகாலத் தில் அநுபவித்ததை) நினைப்பதே—சொப்பனம் எனும் பேருடையது ஆகும் =சொப்பனமாம்.—பண்டு கனுக்கண்டு மறந்ததை=பூர்வஞ் சொப்பனங் கண்டு மறந்ததை—மீண்டும் நினைப்பது=திரும்பவும் (திடமான அபினி வேசத்தால் வெகுகால ஸ்தாயியாகப்) பார்ப்பது—சொப்பன நனு ஆம்=சொப் பனசாக்கிரமாம். (சொப்பனம் சாக்கிரம்போலச் சாக்கிரத்தின்கண்ணே தோன்றுதலின், சொப்பனசாக்கிரமாம். அரிச்சந்திரனுக்குத் துவாதசாத்மக வருடம்போல; இது பெரிய வாசிட்டீயாக்கியானக் கருத்து.)—மண்டும் இருள் மூடுவது=(மேலநுபவிக்கத்தக்க வாசனை கருமங்கள்) நெருங்கியிருக் கும் அஞ்ஞான விருண்மூடிச் சடமாயிருப்பது—சுழுத்தி ஆம்=சுழுத்தி யென்னும் ஏழாம்பூமியாம்.—முந்தின ஆறவஸ்தைகளும் கர்மபலபோக பூமி யாகலின், கர்மஜந்நியங்கள்: சுழுத்தியோ பூர்வகர்மங்கள் போகத்தினால் நாச மாகி மேல்கர்மங்க ளுண்டாகாமலிருக்கும்போது மத்தியில் *சத்திர நாசத் திற்போலச் சர்வசூட்சும, ஸ்தூலப் பிரபஞ்ச விலயத்தில் அவைகளின் பீஜ மான அஞ்ஞான மாத்திரஞ் சேடித்திருப்பதால் அதன் உபகிதமான ஆன்மா மாத்திரஞ் சேடித்திருப்பதான உருவமுடையது சுழுத்தியென் றபிப்பிரா யம். [அஞ்ஞான பூமிகளை முடித்து ஞானபூமிகளைக் கீர்த்திக்கத் தொடங் கல்.] அஞ்ஞான வகைகள் சொன்னேனும்=அஞ்ஞான சத்தபூமிகளின் கூறு பாடுகளைக் கூறினேனும்; —(இனி) விண்டு நிறை முத்திதரும்=வியாபகமாக நிறைந்துள்ள மோட்சத்தைக்கொடுக்கும்—ஞானபூமிகள் ஏழும் விளம்பக் கேளாய்=ஞானபூமிக ளேழையுங் கூறக்கேட்பாயாக.—எ - று.

*சத்திரம்=குடை.

"விண்டு" என்பதற்கு, அஞ்ஞானத்தை யொழித்து எனப்பொருள் கூறினும் அமையும்; அங்கே "விண்டு" என்னுந் தன்வினை "தடிபோன் றிக் தூற்றமாங்கேதரும்." என்றாற்போலப் பிறவினைப் பொருடந்து நின்ற தெனக் கொள்க. (கசஅ)

(287) [ஞானபூமிகளின் நாமங்களை மாத்திரங் கீர்த்திக்கின்றார்.]

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சை விசா ரணையிரண்டாம் பூமி யாகும், நலதநுமா னசிமூன்றும் பூமிசத்து வாபத்தி நாலாம் பூமி, சொலுமசம்சத் திப்பேரும் பதார்த்தாபா வனைப்பேரும் தூரியப் பே ரும், மலினமறு மகனேயைந் தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர்.

இ - ள். புலவர் புகழ்=(சகலசகத்துந் துச்சமென் றவற்றின்கண்ணே அவாவொழிந்து அறியத்தக்கனவான அனைத்தினையும் அறிந்த) பெரியோர் கீர்த்தியாநிற்கும் (ஞானசத்த பூமிகளுள்,)—சுபேச்சைமுதல் பூமி=சுபே ச்சையென்பது முதற்பூமியாம்.—விசாரணை இரண்டாம் பூமிஆகும்=விசா ரணையென்பது இரண்டாம் பூமியாம்.—நலதநுமானசி மூன்றும் பூமி=நல் லதநுமானசி யென்பது மூன்றும் பூமியாகும்.—சத்துவாபத்தி நாலாம் பூமி= சத்துவாபத்தியென்பது நான்காம் பூமியாகும்.—சொலும் அசம்சத்திப்பே ரும்=சொல்லுகின்ற அசம்சத்தியென்னு நாமமுடையதையும்,—பதார்த்தா பாவனைப் பேரும்=பதார்த்தாபாவனையென்னு நாமமுடையதையும்,—தூரி யப்பேரும்=தூரியமென்னு நாமமுடையதையும்—(மூறையே) ஐந்து ஆறு ஏழு பூமிகளா=ஐந்தாம்பூமி, ஆறும்பூமி, ஏழாம்பூமிகளாக—வகுத்தார் மேலோர்=வகுத்தனர் பெரியோர்.—எ - று.

"மலின மறுமகனே" என்றது, விளி. (கசகூ)

(288) [அவற்றுள், மூந்தின நான்து பூமிகளின் இலக்கணங் கூறல்.]

தூற்சங்க நிவிர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சை யாகும் நற்சங்க மொழிவினவி ஞான நூல் பழகல் விசாரணையா நம்பி முற்சங்க வேடணைகள் விடறநுமா னசியிந்த மூன்றிலுஞ்சற் சங்க மனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவா பத்தி தானே. (கடo)

இ - ள். தூற்சங்க நிவிர்த்தி வந்து சிவஞானம் விரும்புவது=மனவி, புத்திராதிய (குசங்கங்களோடுகூடி இத்துணைநாளும் மூடமாயிருந்த காரண மென்னை? இனி அங்ஙனம் மோசம்போகாமல்) இக்குசங்கங்களை வயிராக்கி யத்தாற் றுறந்து (அந்நிராசையிலுல் பிரஹ்மநிஷ்டரான பெரியோர்களானும், ஞானசாஸ்திரங்களானும் அடையவேண்டிய) பிரஹ்மஞானத்தை (அடையக் கடவேமென்று அதனை) இச்சிப்பது—சுபேச்சை ஆகும்=சுபேச்சையென் னும் முதற்பூமியாம்.—நற்சங்கமொழி=(சுபேச்சை மூதிர்ந்து) சற்சங்க மான பெரியோரையடைந்து அவர்கள் வாக்கால்—ஞான நூல் வினவி=வேதா ந்தசாஸ்திரங்களைக்கேட்டு — பழகல்=அதை மனனம்பண்ணுவது — விசா

ரணை ஆம் = விசாரணையென்னு மிரண்டாம்பூமியாம்.—நம்பி = (முன்சொன்ன இரண்டு பூமிகளின் அப்பியாசவலியால்) குருசாஸ்திர வாக்கியார்த்தங்களை விசுவசித்து—மூற்சங்க ஏடணைகள் விடல் = (நிதித்தியாசனஞ்செய்து அந்நிதித்தியாசன வப்பியாசவலியால் சவிகற்ப சமாதிபரியந்தஞ் சித்தித்து) முன்னுள்ள மலினவாசனைகளான இச்சைகளை விடுதலை—தநுமானசி = தநுமானசியென்னும் மூன்றும் பூமியாம்;—இந்த மூன்றிலுலும் = இம்மூன்று பூமியப்பியாசவலியிலுலும்—சற்சங்க மனதில் = (வாக்கியார்த்த விடயங்களில் சம்ஸ்காரநாசத்தால் ஆத்தியந்திக நிடவயிராக்கியரூப) சத்துவாசனையோடுகூடிய மனதின்கண்—உண்மை அறிவு உதித்தல் = ஆன்ம சாட்சாத்காரமுண்டாதல்—சத்துவாபத்தி = சத்துவாபத்தியென்னு நான்காம் பூமியாம்.—எ - று.

"துற்சங்கநிவர்த்தி." எ - து, சாதனசதுஷ்டய வுபலட்சணம்; இப்படிக் கூறினதலுல் நிஷித்தவர்ச்சிதமாயும், நிஷ்காமமாயும் இருக்கின்ற யக்ஞும், தானமுதலிய அனுஷ்டானத்தாலுண்டானதாயும், சந்நியாசம், சாதனசதுஷ்டயம் இவைகளோடு கூடினதாயும், முத்தியை முடிவாகவுடையதாயும், சிரவணாதிப் பிரவிர்த்தி பலத்தோடுகூடினதாயுமுள்ள ஆன்ம சாட்சாத்காரத்தின் தீவிரவிச்சையே முதற்பூமி. அந்நியம் சித்தசுத்தி ஏதுவாகலால் முன்னமே சித்தித்திருத்தலின், குருசுசுரூஷை, பிட்சாடனம், சௌசமுதலிய யதிதர்மபாலனத்தோடுகூடின சிரவண மனனங்களான சதாசாரமே என்பார், "நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையாம்" என்றார். சாதனசதுஷ்டய சம்பத்தியாதி பூர்வகமான சிரவண மனனங்களோடுகூடின நிதித்தியாசனத்திலுன் மனதுக்குச் சத்தாதி விஷயங்களில் இச்சையொழிந்து சவிகற்ப சமாதியான யாதொரு சூட்சுமத்தன்மையுண்டோ அது, "தநுமானசி." தநு = சூக்குமதமம். மனது சூக்குமதமமான தன்மையையடைதலின், "தநுமானசி" எனப்பெயராயிற்று. இவ்வாறு சுரோத்திரமுதலான காரணங்களால் சத்தாதி விஷயங்களைக் கவர்வது எதுவரையிலுண்டோ அதுவரையில் தியானம்; அதற்குமேல் சமாதியென்று யோகசாஸ்திரத்திற் சொல்லியிருக்கின்றது. வாக்கியார்த்த விஷயங்களில் சம்ஸ்காரநாசத்தால் ஆத்தியந்திகமான சித்தத்தின் கண்ணுள்ள நிடவையாக்கியத்தால் மாயை, அதன் காரியம், அவஸ்தாத்திரயம் இவைகளினின்றுஞ் சோதிக்கப்பட்ட சர்வாதிஷ்டான சன்மாத்திர ரூபமான ஆன்மாவின்கண் கூர்சோதகம் போலுந் திரிபுடி விலயமாய்ச் சாட்சாத்கார பரியந்தமாக வுளதான நிருவிகற்ப சமாதி ரூபஸ்திதியே சத்துவாபத்தி. மனது பரமாத்ம சத்துவரூபமாக ஆனமையின், சத்துவாபத்தி என்றறிக. (கடு0)

[ஏனைய மூன்று பூமிகளி னிலக்கணங் கூறல்.]

தத்துவத்தின் மனமுறைத்து மித்தையெலா மறத்தலசம் சத்தியாகும், அத்துவிதா நந்தம்வருந் திரிபுடிபோம் பதார்த்தாபா வனையதாகும், வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவு னசுபாவந் துரியமாகும், இத்துரிய பூமியைமுன் றுரியாதீ தப்பதமென் றதுவுங் கேளாய். ()

இ - ள். தத்துவத்தின் மனம் உறைத்து=(முன்சொன்ன நான்கு பூமியின் அப்பியாசவலியால் நிரதிசயாநந்த நித்தியாபரோட்ச) பிரஹ்மான்மபாவத்தில். மனதழுந்தி—மித்தை எலாம் மறத்தல்=மித்தையான அஞ்ஞானம், அதன் காரியங்க ளனைத்தையு நினையாதிருத்தலே—அசம் சத்தி ஆகும்=அசம் சத்தியென்னும் ஐந்தாம் பூமியாம்.—அத்துவித ஆநந்தம் வரும்=(ஐந்துபூமிகளின் அப்பியாசவலியால்) அத்துவிதமான ஆன்மாநந்தம் மேலிடும்; (மேலிடவே,)—திரிபுடி போம்=(வாகியாந்தரங்களாயுள்ள) திரிபுடிரூபமான பதார்த்தங்கள் அபாவமாம்;—அது பதார்த்த அபாவனை ஆகும்=அதுவே பதார்த்தாபாவனையென்னும் ஆறும் பூமியாம்.—வத்துநிலை=(ஆறு பூமிகளின் அப்பியாசத்தால்) ஆன்மசுபாவத்தில்—இருந்தபடி இருந்த=இருந்தபடியேயிருக்கும்—மவுன சுபாவம்=மோனநிஷ்டையே—துரியம் ஆகும்=துரியமென்னும் ஏழாம் பூமியாம்;—இத்துரிய பூமியை=இத்தத்துரியமென்னும் ஏழாம் பூமியையே—முன் துரியாதீதப்பதம் என்றதுவும்=முன்னே (கஉ - வது செய்யுளில்) துரியாதீதப்பதமென்று கூறின வகையையும்—கேளாய்=இப்போது கூறுதுங் கேட்பாய்.—எ - று.

உத்தமாதிகாரிகட்கு இரண்டாம் பூமியிலுஞ் சாட்சாத்காரம் சாப்தாபரோட்சத்தாற் பிரசித்தமாயினும் மந்த மத்திமாதிகாரிகட்கும் ஆத்தியந்திகமான துவிதசம்ஸ்கார நாசத்தாலுண்டான உத்கர்ஷமான அதிசயமுடைய நான்காம் பூமியின் முடிவிலுண்டான சாட்சாத்காரம் ஐந்தாம் பூமியில் நிரூடதரமாக உண்டாகுமென்பதைக் குறிப்பித்தற் பொருட்டு, "மனமுறைத்து" என்றார். வாகியாந்தரங்களான ஆகாரங்களோடும், அவைகளின் சம்ஸ்காரங்களோடும் சம்பந்தமில்லாமை * "அசம்சத்தி." வாகியாந்தர பதார்த்தங்களினுடைய அநுசந்தானமில்லாமை, "பதார்த்தாபாவனை." ஆயின், தேகயாத்திரை எங்ஙன் கூடுமெனின், சிரகாலப் பரப்பிரயத்தனத்தாற் கூடுமென்க. † சுபாவீக நிஷ்டத்துவமென்பார், "வத்துநிலை யிருந்தபடி யிருந்த" என்றார். பரப்பிரயத்தனத்தாலும் பேதத்தை யறியாமலென்பார், "மவுனசுபாவம்" என்றார். சாக்கிராதி மூவவத்தைகளினும் விடுபட்டதால், "துரியம்." பிரஹ்மவித்து முதலியோருள் நான்காமவனை யடைதலின், ஏழாம்பூமியைத் துரியகாவென்றுங் கூறுவர். அஞ்ஞானசத்தபூமி, ஞானசத்தபூமி இவைகட்கு, உ - ம், வாசிட்டத்தில் உற்பத்திப்பிரகரணத்திற் காண்க. (கடுக)

(289) [முன்னே, கஉ - வது செய்யுளில் துரியபூமியைத் துரியாதீதமென்று கூறினதற்குக் காரணங் கூறுகின்றார்.]

மூற்புவிமூன் றிணுமுலகந் தோன்றுதலாற் சாக்கிரமா மூன்றற்கப்பால், சொற்பனமா மதுவுமெள்ள நழுவுமைந்தாம் பூமியே சுழுத்தி யாகும், அற்புதமாஞ் சுகானுபவ மிகுமாறும் புவிதுரிய மதற்கப்

---

* சம்சத்தி=சம்பந்தம்; அஃதில்லாமை அசம்சத்தி.

† சுபாவீக நிஷ்டத்துவம்=சொரூபமாயிருத்தல்.

பாலோர், கற்பனையி லாதவிட மதீதமென்று மௌனமாக் காட்டும் வேதம். (கடுஉ)

இ - ள். முற்புவி மூன்றினும் உலகம் தோன்றுதலால்=சுபேச்சை யாதி மூன்றுபூமிகளிலும் (பூரணஞான மின்மையின்) சகத்துச் சத்திய மாய்த் தோற்றுதலின்,—சாக்கிரம் ஆம்=அம்மூன்றும் சாக்கிரமாம்;—மூன் றற்கு அப்பால்=அம்மூன்றிற்குமேல்—(நான்காம் பூமியிற் சகத்துச் சொப் பனம்போல மித்தையாகப் பிரதீதியாவதால்) சொற்பனம் ஆம்=அதுசொப் பனமாகும்;—அதுவும் மெள்ள நழுவும்=அம்மித்தியாப் பிரதீதியுங் கிரம மாக நீங்காநிற்கும்—ஐந்தாம்பூமியே—சுழுத்தி ஆகும்=(சுழுத்திக்குச் சமான மாயிருப்பதாற்) சுழுத்தியாம்.—அற்புதம்ஆம் சுகானுபவம் மிகும்=ஆச்சரிய மான ஆநந்தானுபவ மிகுந்துண்டாகாநிற்கும்—ஆறும் புவி=ஆறும்பூமி—துரியம்=(நான்காமவத்தையாவதால்) துரியமாம்;—அதற்கு அப்பால்= அதற்குமேல்—ஓர் கற்பனை இலாத இடம்=(சத்து, அசத்து முதலிய) கற் பனைகளுள்ளே யாதொரு கற்பனையுமில்லாத ஏழாம்பூமியை—அதீதம் என்று =(சகலவிஷயசம்பந்தங்களு மற்றிருத்தலால்) துரியாதீதமென்று—மௌ னமாக்காட்டும் வேதம்=சுருதி மௌனமாகத் தரிசிப்பிக்கும்.—எ - று.

சுருதி மௌனமாக் காட்டுவது அதத்துவியாவிருத்தி லட்சணம், அல் லது, சக்திவிருத்தியாற் காட்டாமல் லட்சணைவிருத்தியாற் காட்டுவதாம் என்க; அதனை இப்படலத்தில், அ - கூ - வது செய்யுளால் அறிக.

ஏழாம் பூமிக்குமேல் பிராரத்தக்ஷயத்தி லுண்டாவதான விதேககைவல் யமே யல்லாமல் சமாதிபூமி வேறொன்றின்மையின் இதுவே முக்கியமான பதமாமென்பதுதோன்ற, "எவனுகிலுமிந்தத் துரியாதீதத்திலேழாம் பூமி யிலிருந்தானேல்" எ - ம், துரியமென்னும் பெயரையுடைய ஏழாம்பூமி யையே அவஸ்தாவிபாகத்தாற் றுரியாதீதமாம் எ - ம், முன்னே நம்மால் கீர்த் திக்கப்பட்டதென்பது கருத்து. (கடுஉ)

(290) [ஆனால், வாசிட்டத்தில் உற்பத்திப் பிரகரணத்தில் இங்ங னங் கூறுது விதேககைவல்யத்தைத் துரியாதீதப்பத மென்று கூறினது என்னை? என்றசங்கித்துச் சமாதானங் கூறுகின்றார்.]

துரியநிலந் தனைத்துரியா தீதமெனின் மயக்கமென்று கருதி மேலோர், அரியதொரு விதேகமுத்தி யதீதமென்பா ரதுகணக்கி லாரும் பூமி, மருவுசுழுத் திபிற்காட்சி சுழுத்தியென்பா ரென்பது நீ மனத்திற் கொள்வாய், பெருமைதரு ஞானபூ மியின்விகற்ப மின்ன முண்டு பேசக் கேளாய். (கடுங)

இ - ள். துரியநிலந் தனைத் துரியாதீதம் எனின்=(தேகத்தோடு கூடிச் சீவித்திருப்பவர்களால் அடைந்திருக்கும்) துரியமென்னும் பெயரை

யுடைய ஏழாம்பூமியைத் தரியாதீத பதமென்றுகூறிடில்,—மயக்கம் என்று கருதி=(தூலதிருஷ்டி யுடையோர்க்கு) மயக்கமுண்டாகுமென்றெண்ணி—மேலோர்=பெரியோர்—அரியது ஒரு விதேகமுத்தி=அரிதான வொப்பற்ற விதேககைவல்யத்தை—அதீதம் என்பார்=தரியாதீதபதமாமென்று கூறுவர்;—அது=அங்ஙனங் கூறுநிற்பது — கணக்கில்=பூமியின் கணக்கில்—(முதல் மூன்றனையுஞ் சாக்கிரமென்றும், நான்காவதனைச் சொப்பனமென்றும் முற்கூறிய முறைப்படியேகொண்டு) சுழுத்தியில்=(ஐந்தாவதான) சுழுத்தியில்—மருவு=கிட்டினதான—ஆறும் பூமி=ஆறும்பூமியான பதார்த்தாபாவனையை (ச் சேர்த்து)—காட்சி சுழுத்தி என்பார்=அற்புதமான காட சுழுத்தியென்றுகூறுவர்—என்பதும் நீ மனத்தில் கொள்வாய்=என்று இங்ஙனம் கூறுநிற்பதனையும் நீ மனத்தின்கண் தரிப்பாய்.—பெருமை தரும்=(சிறுமையைப்போக்கிப்) பெருமையைத்தாராநிற்கும்—ஞானபூமியின் விகற்பம்=ஞானபூமிகளின் வேறுபாடான விசேடணம்—இன்னம் உண்டு=மேலுமுள;—பேசக் கேளாய்=அவற்றையுங் கூறக்கேட்பாய்.—எ - று.

சுருதி மேலோர் என்றும் பாடமுளது. இங்கே மயக்கம் எ - து, ஐயுறவை. காடசுழுத்தி=கனசுழுத்தி; பரப்பிரயத்தனத்தால் வெளிப்படுதலினென்க. "பெருமைதரும்" என்றதால், சிறுமைபோக்கி என்பது, வருவித்தாம்.

"சிறுமைபெருமை" எ - கு, உ - ம், பிரமகீதை,—

"யாவனொருவன் றனையிழந்தே யளவில்வேறு படக்கண்டும்
யாவனொருசொல் வேறுபடக் கேட்டுமறிந்தும் வருகின்றான்
யாவனொருவன் றனக்கென்றுஞ் சிறுமையதுவேபிறப்பிறப்புப்
போவதில்லாக் காரணமு மதுவேயென்று புகன்றனனால்."—எ - ம்,

"அருளினு லியாவன் றன்க ணிவையில்வே றொன்று காணு
தருளினுல் வேறு கேளா தறிந்திடா திருக்கி லஃதே
யருளதாம் பெருமை தானு மழிந்திடாச் சுகமு மெல்லா
விருளிலா வீடு தானு மென்றன னிமையோர்க் கெல்லாம்."

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஞஉ)

(291) [சீடன் வினவித்த விடைகூறி முடித்து ஞானபூமிகளின் விசேஷணங்களாகக் கூறுகின்றார்.]

முன்னிலங்க ளேறியமூ வருமப்பி யாசிகளா முத்தரல்லர், பின்னிலங்கள் வரன்வரியான் வரிட்டனனுஞ் சீவன்முத்தர் பேதமாகும், சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந் தூய முத்தர், இன்னமுமப் பூமிகளின் பெருமைதனை யேறிய யான்சொல் வேனே. (கஞச)

இ - ள். முன் நிலங்கள் ஏறிய மூவரும் = சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்னும் முன் மூன்று பூமிகளில் ஏறியிருக்கும் மூவரும் — அப்பியாசிகள் ஆம் = அப்பியாசிகளாகும் :— முத்தர் அல்லர் = ஜீவன்முத்தரல்லராம்.— பின் நிலங்கள் = அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியம் என்னும் பின்மூன்று பூமிகளில் (ஏறியிருப்பவர்) — வரன் வரியான் வரிட்டன் எனும் சீவன்முத்தர் பேதம் ஆகும் = வரன், வரியான் வரிட்டனென்கின்ற ஜீவன்முத்தரின் வேறுபாடாம் — சொன்ன நடுப்பூமி வந்த ஞானிகளே = சொல்லிய (சத்துவாபத்தி என்னும்) மத்திய பூமியில் வந்த அறிஞரே — பிரம விச்து ஆம் தூயமுத்தர் = பிரஹ்மவித்தாகிய பரிசுத்த முத்தராம் ; — இன்னமும் = மேலும் — அப்பூமிகளின் பெருமைதனை = அந்த ஞானபூமிகளின் மகிமையை — நீ அறிய யான் சொல்வேன் = நீயறியும்படி யான் கூறுவேன். — எ - று.

பிரபஞ்சஞ் சத்தியமென்னும் புத்தியும், தேகந்தாமென்னும் புத்தியும் மறந்தும் வாராமையின், "தூயமுத்தர்." என்றார். (கடுசு)

(292) [ஜன்மந் துக்கமென்று கண்டு அது நிவர்த்தித்தற்பொருட்டுச் சிஞ்ஞாசையிலை யோகபூமி யப்பியாசத்திற்றுணை விக்கினங்களாதலாற் பாலோக சாதனங்களான கர்மானுஷ்டானங்களைவிட்டு முதற்பூமி, இரண்டாம்பூமி, மூன்றும்பூமி அப்பியாசத்தோடு கூடிநின்று பிரதிபந்தத்தால் மோட்ச சாதனமான யோகசித்தியடையாமல் மரணமானவன் மேக மண்டலத்தினின்றும் பிரிந்தமேகம் மற்றேர் மேகத்தோடு கூடாமல் மத்தியினின்று வியர்த்தமாவதுபோல வியர்த்தமாவனே? அலனே என்று வருமாசங்கையைப்பற்றிக் கூறுகின்றார்.]

நாலாம்பூமியில்வருமுன் மூன்றுபூமியுமடைந்து நடந்து மாண்டோர்
மேலான பதமடைந்து பிறந்துமெள்ள மெள்ளவந்து வீடு சேர்வார்
மாலான பவத்தில்விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்தமைந்தா
காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே. (கருரு)

இ - ள். நாலாம் பூமியில் வரும் முன் = (சத்துவாபத்தியென்னும் ஆரூட பூமியாகிய) நான்காம் பூமியில் வருதற்கு முன்னே — மூன்று பூமியும் அடைந்து நடந்து மாண்டோர் = சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்னும் அப்பியாச பூமிகண் மூன்றனையும் அடைந்து நடந்து மரணமாயினோர், — மேல் ஆன பதம் அடைந்து = (தேவவிமானத்தின்மீது ஆரூடராய்ச் சென்று) உயர்வான சுவர்க்க முதலிய பதங்களையடைந்து (அங்குள்ள திவ்வியபோகங்களைப் புஜித்து) — பிறந்து = (பூமியில் சுத்தராயும், ஸ்ரீமான்களாயும் உள்ளோர் மனையின்கண்ணே அல்லது, யோகிகள் வம்சத்தில்) ஜனித்து — மெள்ள மெள்ள வந்து = கிரமமாக ஆரூடதசையாகிய நான்காம் பூமியில் வந்து — வீடு சேர்வார் = மோட்சமடைவார் :— மால் ஆன பவத்தில் விழார் = மயக்கத்திற்குக் காரணமான ஜநநங்களில் வீழார்கள். (பூர்வகதியினும்

நிக்கிருஷ்டகதியை யடையாரென்றபடி.)—முதல் பூமிகிடைப்பதுவே வருத்தம்=சுபேச்சையென்னும் முதற்பூமி கிடைப்பதே பிரயாசம்.—மைந்தா=மைந்தனே—காலான முதற்பூமி கைவந்தால்=(மற்றைப் பூமிகட்கு) வழியான முதற்பூமி ஒருவனுக்கு வசமாகில்,—முத்தியும் கைவந்தது ஆம்=முத்தியும் அவனுக்கு வசமானதாம்.—எ - று.

"முதற்பூமி கிடைப்பதுவே வருத்தம்" எ - து,

"எறியுங் கடலி னுகத்தினியி லாமைக் கழுத்துப் புகுவது போற், பொறிவெம் பிறவி யநேகத்தாற் புருடன் விவேகி யெனப் பிறந்து."—

என்னும் வாசிட்டகீ கருத்து.

"மறுபூமிக்கிந்த வொன்றே சநநபூமியென முடிவில் வெளியாம்."—

என்று வாசிட்டத்திற் கூறியிருப்பதால், "காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்ததாம்" என்றார். (கருடு)

[ஞானபூமிகளின் மகிமைதோன்றச் சபதத்தோடும் அதனைப் புகழ்ந்துகூறி உபசம்மரிக்கின்றார்.]

இப்புவியி லிஞ்ஞான பூமியொன்று லிரண்டிலடைந் திருந்தா ராஞல்
அப்புருடர் மிலேச்சரா கிலுமுத்தர் குருபாதத் தாணைமெய்யே
தப்புரையென் றவர்கெடுவார் நடுவான மறைகளை நீ சங்கியாதே
செப்புமொழி வழிதிடமா யகம்பிரம மென்றிருந்து தெளிந்திடாயே.

இ - ள். இப்புவியில் = இப்பூமியின்கண்—இஞ்ஞானபூமி ஒன்றில் இரண்டில்=ஞானபூமிகளுள், சுபேச்சையென்னும் முதற் பூமியிலாவது, விசாரணையென்னும் இரண்டாம் பூமியிலாவது—அடைந்து இருந்தாராஞல் =அப்பியாச முடையராயிருப்பார்களாயின்,—அப்புருடர் = அந்தப்புருடர்கள்—மிலேச்சர் ஆகிலும்=மிலேச்சராயினும்—முத்தர்=முத்தராவர் :—குருபாதத்து ஆணை மெய்யே=சற்குருபாதத்தின்மீதாணை இது சத்தியமே;—தப்புரை என்றவர்=இதகபடவார்த்தையென்று சொல்பவர்—கெடுவார்=நாசமாவார்.—நடுவான மறைகளை=(மக்களிடத்துத் தாய்போலும்) பாரபட்சமற்ற சுருதி வாக்கியங்களை—நீ சங்கியாதே=நீ சங்கைசெய்யாதே;—செப்பும் மொழி வழி=சுருதி உபதேசியாநிற்கும் வாக்கிய நெறியில்—திடம் ஆய்=உறுதி யுடையவனாய்—அகம் பிரமம் என்று இருந்து=நான் பிரஹ்மமாகின்றேனென் றதுசந்தானித்துப் பிரஹ்மமாகவேயிருந்து—தெளிந்திடாய்=*தெளிந்திடுதி.—எ - று.

*தெளிதல்=சந்தேக நீங்குதல்.

"மிலேச்சர்" எ - து, உபலட்சணமாகலின் இராட்சதர், அசுரர், மிருக முதலியனவுங்கொள்க. அசாமளன், கஜேந்திரன் இவர் ஞானபூமியடைந்தால் மோட்சமடைந்தனர் என வாசிட்ட ஆறயிர வியாக்கியானத்திலும், அநுமன், கற்கடி, பிரகலாதர் முதலியோர் ஞானபூமியிலுல் முத்தியடைந்தனர் எனப் பெரியவாசிட்ட வியாக்கியானத்திலுங் கூறப்பட்டிருக்கின்றது. "தருபாதத்தாணை" என்றதால். இங்ஙனங்கூறினது அர்த்தவாதமன்றென்பதும், "மெய்யே" என்றதால், சுருதி, ஸ்மிருதி, புராணுதிகளின் சித்தாந்தமென்பது பெறப்படுகின்றன. உலகில் அரசனுடைய வாக்கியத்தை அவன் குடைக்கீழ் வாழ்வோர் அவமதிக்கில் அவர் கேமமடையாமல் நாசமடைவது போல இறைவன் நிருவாக்கான சுருதியை அவமதிப்பவரும் கேமமடையாமல் நாசமடைவரென்பார், "தப்புரையென்றவர் கெடுவார்" என்றார். (கடுசு)

(293) [வருணச்சிரம துரபிமானிகளான் சிலருடைய பிராந்தி வசனத்தைக் தருவாக்கால் நிவிர்த்திப்பிக்குங் கருத்தினனுயிச் சீடன் வினுதல்.]

பொல்லாத மிலேச்சருக்கும் விதேகமுத்தி தருஞானபூமியென்று, நெல்லாகி முளைக்குமெனைத் தண்டுலமாக் கியகுருவே நீர் சொன் னீரே, இல்லாளுங் குடும்பம்விட்டுச் சந்நியா சம்புகுந்தே காங்கியானேர், அல்லாமன் முத்திபெறு ரென்றுசிலர் சொலுமயக்க மகற்று வீரே. (கருஎ)

இ - ள். பொல்லாத *மிலேச்சருக்கும் = துஷ்டத்தன்மையுடைய மிலேச்சருக்கும்—ஞானபூமி விதேகமுத்திதரும் என்று=(சுபேச்சையாதி) ஞானபூமி (அடையப்படுமாயின்,) விதேதகைவல்யத்தைக் கொடுக்குமென்று —நெல் ஆகி முளைக்கும் எனை=(உமியாதிகளோடு கூடி அங்குரியாநிற்கும்) நெல்லைப்போல (ஜநந ஏதுவான அவித்தை, காம, கர்மங்களோடுகூடி) ஜநித்து மரியாநிற்குமென்னை—தண்டுலம் ஆக்கிய குருவே=(அங்குர ஏதுவான உமியாதிகளைக் குத்திப்போக்கிய) அரிசியைப்போல (ஜநந ஏதுவான அவித்தையாதிகளைச் சுருதி, யுத்தி, அநுபவங்களாற் போக்கி ஜன்மஜராமரணமில்லாத) பிரஹ்மரூபமாகப் பண்ணிய ஆசிரியரே—நீர் சொன்னீரே=தேவரீ ரருளிச்செய்தீரே;—(இதற்கு முரணுக) சிலர்=உலகின்கட் சிலபேர் (நான்கு வருணங்களுட் சிறந்த பிராமண வருணத்திலும்)—இல்லாளும் குடும்பம்விட்டு =மனைவியையும், குடும்பத்தையுந் துறந்து—சந்நியாசம் புகுந்து=(தண்ட தாரணதிரூப) துரியாச்சிரமமடைந்து—ஏகாங்கி ஆனேர் அல்லாமல்=(விஜனப்பிரதேசமாகிய பருவதக்குகை முதலானவைகளில் தனித்திருந்து ஞான பூமியை அப்பியாசிப்பவர் மோட்சமடைவரேயல்லது—முத்திபெறார் என்று =(பிராமணரிற் கிரகாச்சிரம முடையோரும், ஏனைய க்ஷத்திரிய, வைசிய,

*மிலேச்சர்=கோமாம்சாதி பட்சிக்கும் கிராதாதி ஜாதிபேதம்.

சூத்திராதியரும் ஞானபூமியப்பியாசத்தால்) மோட்சமடையார்களென்று—சொலும் மயக்கம் அகற்றுவீர்=சொல்லாநிற்கும் பிராந்தியை நீக்குவிப்பீராக.—எ - று. (மஹி)

(294) [சீடனையும், அவன் சங்கையையும் புகழ்ந்து சங்கைக்குத் தாங் கூறப்புகுந்து சந்நியாச வகைகளும், அவற்றின் நாமங்களும், சந்நியாசத்துக்கு முக்கிய காரணமுங் கூறுகின்றார்.]

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கைநன்று தெரியக் கேளாய்
கட்டழியுந் துறவுநால் வகையாகு மவைகளுக்கங் காகும் பேர்கள்
பட்டதுயர் கெடுங்குடி சகம்வெகு தகமஞ்சம் பரம வஞ்சம்
விட்டகலுந் துறவுக்கு விராகங்கா ரணமன்றிவேட மன்றே. (கருஅ)

இ - ள். சிட்டர் புகழ் மகனே=பெரியோராற் புகழப்படாநின்றமைந்தா—நீ சங்கித்த சங்கை நன்று=நீ ஆட்சேபித்த ஆட்சேபம் நல்ல ஆட்சேபம்;—தெரியக் கேளாய்=(அதற்குச் சமாதானம்) உனக்குத் தோன்றக் கூறுதுங் கேட்பாய்.—கட்டு அழியும் துறவு=குடும்பசம்பந்தங் கெடுதற்குக் காரணமான சந்நியாசம்—நால்வகை ஆகும்=நான்கு வகுப்பாம்;—அவைகளுக்கு ஆகும் பேர்கள்=அந்நால்வகை சந்நியாசங்கட்கும் உளவாகு நாமங்கள்—குடி சகம், வெகுதகம், அஞ்சம், பரம அஞ்சம் (என்பவையாம்;)—பட்டதுயர் கெடும்=(இவைகளாற் சம்சாரத்திற்) பட்ட துன்பங் கெடும்.—விட்டு அகலும் துறவுக்கு=(குடும்பத்தை) விட்டொழியுஞ் சந்நியாசத்திற்கு—விராகம் காரணம் அன்றி வேடம் அன்று=விராகங் காரணமேயல்லாமல், (காஷாய வஸ்திராதாரண முதலிய) வேஷங் காரணமன்று.—எ - று.

"அங்கு"=ஆங்கு என்னும் அசைநிலை யிடைச்சொற்றிரிபு. "நீ சங்கித்த சங்கைநன்று" எ - து, துறவறமடையாதவரும், சூத்திராதியரும் ஞானபூமி யப்பியாசத்திற்கு அருகரல்லர் என்னும் மித்தியா வசனத்தால் ஞானசாஸ்திரத்திற் புகாதிருப்பவருடைய பெருஞ் சந்தேகத்தைப்போக்கிப் புகச்செய்து ஞானவாயிலால் அநர்த்தநிவிர்த்தி ஆநந்தப்பிராப்திரூபமான மோட்சமடையப் பண்ணுவதாலென்க. (கருஅ)

[விராகம் மூவகைத்தென்றும், அவற்றின் இலக்கணம், இனையவென்றுங் கூறுகின்றார்.]

மந்தமுந்தீ விரமுந்தீ விரதரமு மெனமூன்று வகைவி ராகம்;
வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத்துவரும் விராக
மந்தம், இந்தவுட லளவுமுண தனம்வேண்டா மெனவிடறீ விரமென்
பார்கள், அந்தணனூர் மித்தையென விடலதுதீ விரதரமா மறிந்தி
டாயே. (கருகூ)

இ - ள். விராகம்=வைராக்கியமானது—மந்தமும், தீவிரமும், தீவிரதரமும்—என மூன்று வகை=என மூவகையாம்;—(அம்மூவகையுள்,) வெம்துயரம் வரும்பொழுது=(புத்திராதாரதனாதி கணசித்துப்போனதனால்) கொ

டிய துக்க முண்டாகும்பொழுது—குடும்பத்தை வெறுத்து வரும் விராகம்=(அத்துக்கஞ் சகிக்கமாட்டாமல் இச்சம்சாரம் மகாகொடியது, இதனைச்சுட வேண்டும் என்று அக்காலத்தில்மட்டும்) குடும்பத்தை யுவர்த்துவரும் வைராக்கியம்—மந்தம்=மந்தவிராகமாம்.—இந்த உடல் அளவும்=(சொற்ப புண்ணியத்தால்) இத்தேக முள்ளளவும்—மனை தனம் வேண்டாம் எனவிடல்=தாரதன முதலிய சம்சாரம் நமக்கு வேண்டாம் என்று வெறுத்துவிடுகின்ற திடபுத்தியை—தீவிரம் என்பார்கள்=தீவிர வைராக்கியமென்பர்.—அந்தனன் ஊர்மித்தை எனவிடலது=(மகாபுண்ணியபலத்தால் மீண்டும் ஜநநத்தையுடைத்தான) பிரஹ்மலோக முதலியவையும் மித்தையாகவின், நமக்கு வேண்டாம் என்று வெறுத்துவிடுதலே—தீவிரதரம் ஆம்=தீவிரதரவைராக்கியமாம்—அறிந்திடாய்=(என) அறிவாய்.—எ - று. (கடுக)

[முன் சொன்ன விராகங்கண் முன்றனுள் மந்தவிராகம் சந்நியாசங்கட்குக் காரணமன்றென் றெழித்துத் தீவிரவிராகத்தா லுளவாதஞ் சந்நியாச வேறுபாடுகளும், அவற்றின் இலக்கணங்களுங் கூறுகின்றார்.]

பாவிமந்த விராகத்திற் சந்நியா சங்களொன்றும் பலித்திடாதே, தீவிரத்திற் குடிசகமும் வெகூதகமு மென்றிரண்டு திறங்களுண்டாம், தாவிநடந திடத்திடமி லாதவர்க்குக் குடிசகமுஞ் சகங்களெங்கும், மேவிநடந் திடத்திடமுள் ளவர்க்குவெகூ தகமுமென விதித்தார் மேலோர். (கசுஂ)

இ - ள். பாவி மந்த விராகத்தில்=பாவியினது மந்த வைராக்கியத்தில்—சந்நியாசங்கள் ஒன்றும் பலித்திடாது=(நால்வகைச் சந்நியாசங்களுள்,) யாதொரு சந்நியாசமுஞ் சித்திக்கமாட்டாது.—தீவிரத்தில்=தீவிரவைராக்கியத்தில்—குடிசகமும் வெகூதகமும் என்று இரண்டு திறங்கள் உண்டாம்=குடிசகம், பகூதகமென்று சொல்லும் இருவித சந்நியாசங்களுளவாம்;—[இனி அவற்றின் இலக்கணங் கூறுகின்றார்.] தாவி நடந்திடத் திடம் இலாதவர்க்குக் குடிசகமும்=தாவி யாத்திரை முதலியவை செய்யச் சத்தியில்லாதோர்க்குக் குடிசகமும்,—சகங்கள் எங்கும்=உலகங்களில் எவ்விடத்தும்—மேவி நடந்திடத் திடம் உள்ளவர்க்கு=தாவி யாத்திரை முதலிய செய்யச் சத்தி யுள்ளோர்க்கு—வெகூதகமும் என=பகூதகமும் உரியதென்று—விதித்தார் மேலோர்=விதித்தனர் பெரியோர்.—எ - று.

துக்கம் பாவபலமாகவின், அதனுலடையப்படும் மந்த விராகமுடையவனை, "பாவி" எ - ம், மயானவைராக்கியம்போலும், கிராமிய தர்மானந்தரவைராக்கியம்போலும் மந்த விராகம் உடனே மாறுதலால், "பாவிமந்த விராகத்தி ற் சந்நியா சங்களொன்றும் பலித்திடாது" என்றுங் கூறினர். "இந்தவுட லளவுமனை தனம்வேண்டா மெனவிடறீ விராகம்" என முன்னே கூறினதனுல் அது காரணமாகவுளவாகும் குடிசகம், பகூதகங்கள் மறுமைப்பயன் குறித்ததென்றும், கர்மசந்நியாசங்க ளென்றும் அறிக. (கசுஂ)

[தீவிரதர விராகங்காரணமாக உளவாதுஞ் சந்நியாசங்களை இப்போது கூறுகின்றார்.]

இருவகைதீ விரதரத்து மஞ்சனென்றும் பரமாஞ்ச னென்றுஞ் சொல்வர், வருமஞ்ச னுக்குமுத்தி சத்தியலோ கத்தன்றி வாரா தென்பார், பரமாஞ்ச னுக்குமுத்தி யிவ்வுலகின் ஞானத்தாற் பலிக்கு மென்பார், திரமருவும் பரமாஞ்சன் முனுமிரு வகையாகுஞ் செப்பக் கேளாய். (ககூக)

இ - ள். தீவிரதரத்தும் = தீவிரதர வைராக்கியத்தும்—அஞ்சன் என்றும் பரமாஞ்சன் என்றும் = ஹம்சனென்றும், பரமஹம்சனென்றும்—இரு வகை சொல்வர் = இருவித சந்நியாசாதிகார முண்டென்று சொல்லுவர் ;—(அவ்விரண்டில்) வரும் அஞ்சனுக்கு = வாராநின்ற ஹம்சசந்நியாச முடையோ னுக்கு—முத்தி = மோட்சமானது—சத்தியலோகத்து அன்றி வாராது என் பார் = பிரஹ்மலோகத்தில் வருமேயன்றி (இந்த லோகத்தில்) வாராதென்று சொல்லுவர்.—பர அஞ்சனுக்கு = பரமஹம்ச சந்நியாசமுடையோனுக்கு—முத்தி = மோட்சமானது—இவ்வுலகில் ஞானத்தால் பலிக்கும் என்பார் = இவ்வுலகத்திலேயே தத்துவஞானத்தால் வாய்க்குமென்று கூறுவர்.—திரம் மருவும்—திட (விராகமும், தீவிரசிஞ்ஞாசையும்) பொருந்தாநிற்கும்—பர அஞ்சன் தானும் = பரமஹம்சனும்—இருவகை ஆகும் = இருவிதக் கூறுபாடு டைய சந்நியாசமுடையவனுயிருப்பன் ;—செப்பக் கேளாய் = அவ்விருவகைச் சந்நியாசங்களின் நாமமும், இலக்கணமும் இனிக்கூறக் கேட்பாய்.—எ - று.

பிரஹ்மலோக விச்சையால் முமுட்சுத்துவமில்லாவிடில் ஹம்சனென் றும், கீழ்ப்போன அநந்த ஜநநங்களிற் செய்துவந்த புண்ணிய புஞ்ச பரிபாகவ சத்தாலுண்டான சித்தசுத்தியினுன் முமுட்சுத்துவ முண்டாயிருந்தால் நேரே ஞானசாதனமான பரமஹம்ச சந்நியாசமுடையவனென்றுஞ் சொல்லப்படும் என்றறிக. (ககூக)

[பரமஹம்ச சந்நியாசத்தின் கூறுபாடான சந்நியாசங்களின் நாமமும், உடையோர் இலக்கணமுங் கூறுகின்றார்.]

சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்களவ ரிற்சிஞ்ஞாசு, மெய்ஞ்ஞான பூமியின்முன் முன்றுபூ மியுணடக்கும் விவேகியா னுன், சுஞ்ஞான வானென்போன் சீவன்முத்தி யடைந்திருக்குந் தூயமேலோன், அஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசு மிருவகையா மதுவுங் கேளாய. (ககூஉ)

இ - ள். (பரமஹம்ஸ சந்நியாசமுடையோரும்) சிஞ்ஞாசு ஞானவான் என்று = சிஞ்ஞாசென்றும், ஞானவானென்றும்—இரண்டு பேர்கள் = இரு விதபேத முடையராயிருப்பர் ;—அவரில் = அவ்விருவருள்,—சிஞ்ஞாசு = சிஞ் ஞாசென்பவன்—மெய்ஞ்ஞான பூமியில் = தத்துவஞான பூமிகளுள்,—முன்

மூன்று பூமியுள் நடக்கும்=முன்னவையாகிய (சுபேச்சை, விசாரணை, தனுமானசி என்னும்) மூன்று பூமி யப்பியாசத்திற் செல்லும்—விவேகி ஆனேன்=விவேகியாம்.—சுஞ்ஞானவான் என்போன்=நல்ல ஞானவானென்று சொல்லப்படுவோன்—சீவன் முத்தி அடைந்து இருக்கும்=சீவன் முத்தியை யடைந்துள்ள—தூய மேலோன்=சுத்தனான பெரியோனும்.—அஞ்ஞானம் அகலும்=அஞ்ஞானம் கிரமமாக நீங்கப்படும்—அந்தச் சிஞ்ஞாசும்=அச்சிஞ்ஞாசுவின் பாகுபாடும்—இருவகை ஆம்=இருவிதமாக விருக்கும்;—அதுவும் கேளாய்=அவ்விருவகைப் பாகுபாட்டையுங் கேட்பாயாக.—எ - று.

தன்னையறிய இச்சிப்பவன், "சிஞ்ஞாசு." தன்னைப் பிரதிபந்த ரகிதமாயறிந்தவன், "ஞானவான்" என்க.

"அஞ்ஞானமகலும்" என்றதை,

"மாறுத வஞ்ஞான முழுதுமகல் வதுகூறின்"

என்னும் சோபாநந்த உபநிடதத்தின், ஈo - ம் செய்யுளாலறிக.

[சிஞ்ஞாசுகளின் பாகுபாடான இருவகை நிலைமையின் இலக்கணங் கூறல்.]

பந்தமான துறந்துசில ராதிகளா யிருந்தடைவர் பரம ஞானம் அந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர் ஞானம் இந்தவகைச் சாத்திரத்து முலகத்து நடப்பதுகண் டிருந்து மைந்தா சிந்தனையின் மயக்கமென்னே சுருதியுத்தி யநுபவத்தாற் றெளிந்திடாயே. (ககூஉ)

இ - ள். சிலர்=சிலபேர்—பந்த மான துறந்து=(மமத்துவாபிமானத்தால்) பந்தரூபமான மனைவி, புத்திரர், தனங்களே (பிரைஷமந்திரோச்சாரண பூர்வகமாக)ச் சந்நியாசித்து—*அதிதிகள் ஆய் இருந்து=(தண்டதாரணாதியாச்சிரமரூபமான) யதிதிகளாய் (க் குருவையடைந்து) நின்று—பரமஞானம் அடைவர்=(ஞானபூமியை அப்பியாசித்துப்) பிரஹ்மஞானமடைவர்.—சிலர்=(யாதாயினும் ஓர் நிமித்தத்தால் பிரசித்தமான வாகியசந்நியாசஞ் செய்து கொள்ளப் பிரதிபந்தமுடையரான) சிலபேர்—அந்தணர் மன்னவர் வணிகர் சூத்திரர் ஆய் இருந்து=பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திராய் (மனைவி புத்திராதியரோடுகூடித் தத்தம் வருணத்திற்குரிய தருமங்களைச் செய்துகொண்டு மேன்மேற் சமநத்தைக்கொடுக்கத் தக்கனவான கர்மபலத்திலிச்சையைமாத்திரம் விடுவதான மானச சந்நியாசத்தையுடையராய்க் குருவையடைந்து) நின்று—ஞானம் அடைவர்=(ஞானபூமி யப்பியாசத்தால்) பிரஹ்ம ஞானத்தை யடையாநிற்பர்;—இந்தவகைச் சாத்திரத்தும் உலகத்தும் நடப்பது கண்டு இருந்தும்=இந்தப்படி சாத்திரங்களிலும், உலகின்கண்ணும் (முறையே) பிரதிபாதிப்பதையும், நடப்பதையு மறிந்திருந்தும்—மைந்தா=

*அதிதி=பரதேசி.

மைந்தனே—சிந்தனையில் மயக்கம் என்னே=(சிலருடைய பிராந்தி வசனத்தால்) உனது மனத்தின்கண் மயக்கமுண்டாதல் இஃதென்னே!—சுருதியுத்தி அநுபவத்தால் தெளிந்திடாய்=சுருதியுத்தியநுபவங்களிலுலே இச்சந்தேகமொழிந்து வித்தியாநந்தமடைதி.—எ - று.

"என்னே" என்பது அதிசய இரக்கச்சொல். இவ்வாறு நான்குவிதமான சந்நியாசங்கள் பாராசரீ ஸ்மிருதியிற் கூறியிருக்கின்றன.

"இல்லாளுங் குடும்பம்விட்டுச் சந்நியா சம்புகுந்தே காங்கியாதே, ரல்லாமன் முத்திபெறு ரென்றுசிலர் சொலுமயக்க மகற்றுவீர்."—

என்று, கருள - ம் செய்யுளிற் சீடனுட்சேபித்தபடி உலகின்கட் பெரும்பாலும் மயக்கத்திற்குக் காரணமாயுள்ள ஆட்சேபத்திற்கு விருத்திப்பிரபாகரகிரந்தத்திற் சமாதானங்கூறியிருப்பதையும் இங்ஙனம் உதாரணமாக எடுத்துக் காட்டுதும்.

(295) ஓர் கிரந்தகாரர் மதம்,—சந்நியாசவிதாயகமான வெருவாக்கியங்களிற் பிராமணபதமிருப்பதால், பிராமணர் மாத்திரத்திற்குச் சந்நியாசவதிகாரமிருக்கிறது, சந்நியாசமின்றிக் கிரகஸ்தர் முதலியோருக்குப் பிரஹ்மவிசாரத்திற் கவகாசமில்லை; ஆகலின், சந்நியாசத்திலும், அப்படியே பிரஹ்மசிரவணத்திலும் கூத்திரிய வைசியர்க்கும் அதிகாமில்லை என்பது.

(296) மற்றோர் கிரந்தகாரர் மதம்,—சந்நியாசத்திற் கேவலம் பிராமணர்க்கு அதிகாரமுளதேனும் பிரஹ்மசிரவணத்தில் கூத்திரிய வைசியர்க்கும் அதிகாரமுளது; ஆயினும், ஜன்மாந்தர சம்ஸ்காரத்தால் எவ்வுத்தம புருடர்க்கு விடயங்களிற் நீனத்துவ முதலிய தோடமுண்டாகவில்லையோ அப்படிப்பட்ட சுத்தபுத்தியுடையோர்க்குச் சந்நியாசமின்றியே ஞானமுண்டாகாநிற்கும்; இக்காரணத்தால், கிரகஸ்தாச்சிரமத்திலே அநேக ராஜரிஷிகள் பிரஹ்மவித்தென்று சொல்லப்பட்டிருக்கின்றனர் என்பது.

(297) வேறுசிலர்,—எப்படிப் பிரஹ்ம சிரவணத்திகளில் கூத்திரிய வைசியர்க்கு அதிகாரமுளதோ அப்படிச் சந்நியாசத்திலும் கூத்திரிய வைசியர்க்கு நிஷேதமில்லை. ஞாலுதயத்தால் கருத்திருத்துவ, போக்திருத்துவ புத்தியும், அப்படியே ஜாதி ஆச்சிரமவபிமானமும் அபாவமாகா நிற்கும்; கருத்திருத்துவ, போக்திருத்துவ புத்தியன்றியும், ஜாதிஆச்சிரமங்களினபிமானமன்றியும் கருமாதிகாரங் கூடாமையின், சர்வகர்ம பரித்தியாக பூர்வகமாக அக்கிரிய, அசங்க ஆன்மசொரூபத்தோடு ஸ்திதிரூபமான வித்துவத்சந்நியாசத்திலும் கூத்திரிய வைசியர்க்கு அதிகாரமுண்டு, கேவலம் விவிதிஷா சந்நியாசத்திலீ அதிகாமில்லை என்பர்.

(298) வார்த்திககாரான சுரேசுராசாரியர் மதம்,—விவிதிஷா சந்நியாசத்திலும் கூத்திரிய வைசியர்க்கு அதிகாரமுண்டு: அநேக சுருதிவாக்கி

யங்களில் பிராமணர்க்குச் சந்நியாசஞ் சொல்லியிருந்தாலும் சந்நியாச விதாயக ஜாபாலசுருதியில் பிராமண பதமில்லாமலே கேவலம் வைராக்கிய சம்பத்தியால் சந்நியாசஞ் சொல்லியிருக்கின்றது; ஆதலால், அநேக சுருதி வாக்கியங்களில் *துவிஜர்க்கட்கு உபலட்சணமாகப் பிராமண பதமுள்ளது; ஸ்மிருதியிலோவென்றால், † ப்³ராஹ்மணக்ஷத்ரியொவாவி வைஶ்யோவா வ்ரத்யஜந்மநாம். த்ரயாணாம் வர்ணாநாம் வேதாத்⁴யயநாத்க்ரியா சூத்ரஸ்ய ஸம்ஸ்காரோ மந்த்ரைர்ஹீந இதி ஸ்ம்ருதி: ॥

(ப்ராஹ்மண: க்ஷத்ரியோவாபி வைஸ்யோ வாப்ரவ்ருஜேத்க்ருஹாத் த்ரயாணாம் வர்ணநாம் வேதமதீசத்யத்வார ஆஸ்ரமா:) என்னும் வசனமிருப்பதால் க்ஷத்திரிய வைசியர்க்குச் சந்நியாசத்தில் அதிகாரம் உண்டென்பது.

(299) வேறே ஒரு கிரந்தகாரர் மதம்,—சந்நியாச விதாயக சுருதிவாக்கியங்களிற் பிராமணபதம் உண்டு; அதற்குத் துவிஜர் மாத்திரத்திற்கு உபலட்சண முண்டென்பதிற் பிரமாணமில்லை. ஜாபாலசுருதியில் பிராமண பத மில்லையாயினும், அநேக சுருதியநுசாரத்தால் அங்கேயும் பிராமணகர்த்தாவுக்கு ‡ அத்தியாகாரம் உண்டு; ஆகலின், க்ஷத்திரிய வைசியர்க்குச் சந்நியாசத்தி லதிகாரமில்லையாயினும், அநேக ஸ்தானத்தில் கிரகஸ்தரான இராஜாக்கள் ஞானவான்களா யிருந்தனரென்று கூறப்பட்டிருக்கின்றனர்; ஆகலின், பிராமணர்க்குப் பிரஹ்மவிசாரத்திற்குச் சந்நியாசம் அங்கமாம்; சந்நியாசமின்றிக் கிரகஸ்தாதி ஆச்சிரமத்திலுள்ள பிராமணர்க்குப் பிரஹ்மவிசாரத்தி லதிகாரமில்லை: சந்நியாசியாகிய பிராமணனுக்கே பிரஹ்மவிசாரத்தில் அதிகாரமுண்டு. க்ஷத்திரிய வைசியர்க்குச் சந்நியாசமின்றியே பிரஹ்மவிசாரத்தில் அதிகாரமுண்டென் றொப்பவேண்டும். என்னை? சந்நியாசவிதாயக வசனத்திற் பிராமணபதமிருத்தலின் என்க. க்ஷத்திரிய வைசியர்க்குச் சந்நியாசத்தின் விதியில்லை. ஆன்மகாமனுக்கு ஆன்ம சிரவணத்தின் அபாவஞ் சொல்லுகை பொருந்தாது; இதனால், க்ஷத்திரிய, வைசியர்க்கு ஞானத்தினுபயோகியான அதிருஷ்டமானது கேவலங் கருமத்தினாலேயே உண்டாகாநிற்கும் சந்நியாசஜந்நியமான அதிருஷ்டத்தினபேட்சை க்ஷத்திரிய, வைசியர்க்கு ஞானத்திலில்லை; இதனாற்றான் கீதையிலும்,

“காதலா லரசன் சனகனே முதலோர் கருமமோ டொழுகியே யன்றோ, போதரா யுலகம் புக்கது.”

என்றிவ்வாறு பாமேசுரர் கூறியிருக்கின்றனர்; இவ்வாக்கியத்தில், “போதராய்” என்பதற்கு அந்தக்காரணத்தின் சுத்தி அல்லது, ஞானம்

---

* துவிஜர் = மூவருணத்தர்.

† ப்³ராஹ்மண: + க்ஷத்ரிய: = அந்தணன், க்ஷத்திரியன், வைசியன்

இம்மூவரும் கிரஹஸ்தாசிரமத்தைவிட்டு சந்நியாசாசிரமத்தை யடைந்து காட்டுக்குப்போகவேண்டும்; இம்மூன்று வருணத்தரும் வேதம் கற்றுக்கொள்ளலாம்; இவர்க்கு பிரமச்சரிய, கிரஹஸ்த, வானப்பிரஸ்த, சந்நியாசம் என்னும் நான்காச்சிரமங்களும் உண்டு.

‡ அத்தியாகாரம் = அவாய்நிலை; அது ஒருசொல் மற்றொரு சொல்லை அவாவிநிற்றல்.

என்றுபொருள். பாஷியார்த்தம், சந்நியாசாசிதமான கேவலம் கருமத்தால் அந்தக்காரணசுத்தியை ஜனகர் முதலியோர் அடைந்தனர் அல்லது, சந்நியாசாசிதமான கேவலங் கருமத்தால் ஞானப்பிரதிபந்தக நிவிர்த்திவாயிலாகச் சிரவணத்தால் ஞானத்தையடைந்தனர் என்பது; இவ்விருவகையாலும் கூத்திரிய, வைசியர்க்குச் சந்நியாசநிரபேட்சமான கேவலங் கருமமே ஞானப்பிரதிபந்தகமான பாவநிவிர்த்திக்கேதுவாயிருக்கிறது. பிராமணர்க்குச் சந்நியாசசகிதமானகருமத்தால் ஞானப்பிரதிபந்தகமான பாவநிவிர்த்தியுளதாம். சிரவணத்திற்கங்கம் சந்நியாசமாமென்னும் இப்பட்சத்திலும் சந்நியாசம் பிராமணர்களின் சிரவணத்திற்கே அங்கமாம்: கூத்திரிய, வைசியரின் சிரவணத்திற்கு அங்கமன்று. பின்னேயோ பலாபிலாஷையும், குரோதாதி தோஷங்களும் இல்லாமல் ஈசுரார்ப்பணபுத்தியோடு செய்யும் தத்தம் வருணச்சிரம தருமானுஷ்டானத்தோடு கூடிய கரும அவகாசகாலத்தில் சிரவணத்திலுலேயே கூத்திரிய, வைசியர்க்கு ஞானமுண்டாகும். சர்வதா வித்தையினுபயோகியான கருமத்திலும், சிரவணத்திலும் அதிகாரமுண்டு. என்னே? பிராமணரைப்போல ஞானேச்சை கூத்திரிய, வைசியர்க்குஞ் சமமாம். பலத்தையிச்சித்தவனுக்குச் சாதனத்தில் அதிகாரமுண்டு; ஆதலால், ஆன்மகாமரான கூத்திரிய, வைசியர்க்கு வேதாந்த சிரவணத்தில் அதிகாரம் உளதென்பது.

(300) மற்றோர் கிரந்தகாரர் மதம்,—மநுடர் மாத்திரத்திற்கு ஆன்ம விருப்பம் பொருந்தியிருப்பதால் கூத்திரிய, வைசியர்போல ஞானேச்சையின் சத்பாவத்தால் சூத்திரர்க்கும் சொல்லியவாற்றால் வேதாந்த சிரவணத்தின் அதிகாரமுண்டாகவேண்டியதேயாயினும், சூத்திரர்க்கு உபதேசங்கூடாதென்று நிஷேதித்திருப்பதால் சர்வதா உபதேசாசிதபுருடர்க்கு விவேகாதிகூடாமையின், ஞானேச்சைகூடாது; அப்படியே சூத்திரர்க்கு யக்ஞாதி கருமங்களும் நிஷேதித்திருப்பதால் வித்தையினுபயோகியான கர்மத்தினபாவத்தால் அவர்க்கு ஞான, ஏதுவான சிரவணத்தினதிகாரமில்லை என்பது.

(301) வேறெரு கிரந்தகாரரது மதம்,—உபநயன பூர்வகமாக வேதாத்தியயனஞ் சொல்லியிருக்கிறது. சூத்திரர்க்கு உபநயனஞ்சொல்லவில்லை; ஆதலால், வேதசிரவணத்திலோ சூத்திரர்க்கு அதிகாரமில்லை; அப்படியானலும், * "ஶ்ரூவையெத-ூரொவண-ூாநு।" என்பது முதலிய வசனத்தால் இதிகாசபுராணாதிகளின் சிரவணத்தில் சூத்திரர்க்கும் அதிகாரமுண்டு. பூர்வஞ் சூத்திரர்க்கு உபதேசநிஷேதஞ் சொல்லியிருத்தற்கு அபிப்பிராயம்; வைதிகமந்திரத்தோடுகூடின யக்ஞமுதலிய கருமவுபதேசம் சூத்திரர்க்குச் செய்யற்க; அப்படியே வேதோக்த பிராணிய சகுணோபாசனையைச் சூத்திரர்க்கு உபதேசஞ் செய்யற்க என்பதாம். உபதேசமாத்திரத்தை நிஷேதிக்கவில்லை; உபதேசமாத்திரத்தை நிஷேதித்திருக்கிறதென்றால், தர்மசாஸ்திரத்தில் சூத்திரஜாதியின் தர்மநிரூபணம் நிஷ்பலமாய்விடும். வித்தையினுபயோகிகளான கருமத்தினபாவத்தால் வித்தையில் அதிகாரமில்லை

* ஶ்ரூவ+வண-ூாநு=நான்கு வருணங்களையுங் கேட்பிக்கலாம்.

எனச் சொல்வார்களாயின், அதற்குச் சமாதானம்; சாதாரணம், அசாதாரணமான சகல சுப கருமங்களுக்கும் வித்தையிலுபயோக மிருக்கின்றது. சத்தியம், அஸ்தேயம், க்ஷமை, சௌசம், தானம், விடயத்தின் விமுகதை, பாகவதாமோச்சாரணம், தீர்த்தஸ்நாநம், பஞ்சாட்சர மந்திராஜாதிகளின் ஜபம் இவை முதலிய சகல வருணங்களின் சாதாரண தருமங்களிலும், அப்படியே சூத்திரகமலாகரத்திற் சொன்ன சதுர்வருணங்களின் அசாதாரண தருமத்திலும் சூத்திரர்க்கு அதிகாரமுண்டு; அக்கருமங்களின் அநுஷ்டானத்தால் அந்தக்கரண சுத்திவாயிலாக வித்தையின் பிராப்திகூடும்; ஆகலின், இதிகாச புராணாதிகளின் சிரவணத்தால் விவேகாதிகள் பொருந்தாநிற்பதால் சூத்திரர்க்கும் ஞானேச்சையுண்டு; ஆகலின், வேதத்திற்குப் பின்னமான அத்யாத்மகிரந்தங்களின் சிரவணாதிகளிற் சூத்திரர்க்கும் அதிகாரமுண்டு; பாஷியகாரும், பிரதமாத்தியாயத்தின் திருதீயபாதத்தில் உபநயனபூர்வகமாக வேதத்தின் அத்தியயனஞ் சொல்லியிருக்கிறது: சூத்திரர்க்கு உபநயனமின்மையின், வேதத்தில் அதிகாரமில்லை யாயினும் புராணாதிகளின் சிரவணத்தால் சூத்திரர்க்கும் ஞான முண்டாய்விடில், ஞானசமகாலத்திலேயே சூத்திரர்க்கும் பிரதிபந்தரகிதமாக மோட்ச முண்டாகா நிற்கும் எனக்கூறி யிருக்கின்றனர்; இவ்வாறுன பாஷியகாருடைய வசனத்திலுலும் வேதத்திற்கு வேறன ஞானவேதுவாகிய அத்தியான்ம கிரந்தத்தின் சிரவணத்தில் சூத்திரர்க்கு அதிகாரம் உண்டு.

(302) ஜன்மாந்தர சம்ஸ்காரத்தால் அந்திய ஜாதிகட்கும் சிஞ்ஞாசையுண்டாய்விடில் பௌருஷேய வசனத்தால் அவர்கட்கும் ஞானமுண்டாகிக் காரியத்தோடுகூட அவித்தையின் நிவிர்த்திரூபமான மோட்சமுண்டாய்விடும். ஆகலின், வேதாநுசாரிகளைப்போலச் சகலமநுடர்க்கும் தத்துவஞானத்தின் அதிகாரம் உண்டு. ஆன்மசொரூபத்தின் யதார்த்தஞானத்தைத் தத்துவஞானமென்பர். ஆன்மஹீனமாய் ஓர் சரீரமுளதாயின், அதற்கு ஞானத்தின் அநதிகாரமுண்டு; ஆகலின், ஆன்மஞானத்தின் சாமர்த்தியம் மநுஷியர் மாத்திரத்திலுண்டு.

(303) ஆயினும், எந்தச் சரீரத்தில் தெய்வசம்பத்துண்டோ அதற்குத் தத்துவஞானமுண்டாகாநிற்கும்; அசுரசம்பத்திற் றத்துவஞான முண்டாகமாட்டாது. சர்வபூதங்களிலும் தயை, க்ஷமை, சத்தியம், *ஆர்ஜவம், சந்தோஷாதிகளான தெய்வசம்பத்தின் பிராப்தி பிராமணரிடத்திலுண்டு. க்ஷத்திரியர்க்குப் பிரஜைகளைப் பாலனஞ்செய்யும் பொருட்டுப் பிரவிர்த்திதரும முண்டாவதால் பிராமணரினும் கிஞ்சித்து நியூனமான தெய்வசம்பத்து உண்டு. சரமபுத்தியால் பிரஜாசம்ரட்சணத்தின் பொருட்டுத் துஷ்டப்பிராணிகளை இம்சிப்பது அகிஞ்சையாம்; ஆதலால், தெய்வசம்பத்தின் அசம்பவமில்லை. அப்படியே வைசியர்க்கும் கிருஷி, வாணிச்சிய முதலிய சரீரவியாபாரம்

* ஆர்ஜவம்=சிரத்தையோடு கேட்பவனிடத்து நிச்சயித்தபொருளை மறையாமை.

க்ஷத்திரியரைப் பார்க்கிலும் அதிகமுண்டாவதால் ஆன்மவிசாரத்திற்கு அவகாசங்கூடாமையின், அவர்க்குச் சாமர்த்தியங் கூடாமலிருக்கிறது; அப்படியாஞலும் எத்தனையோ பாக்கியசாலிகளான வைசியர்க்குச் சரீர வியாபாரமில்லாமலே சகல வியவகாரங்களின் நிர்வாகமுமுண்டாகாநிற்கின்றது; அவர் கட்குத் தெய்வசம்பத்தின் பேறருவான சாமர்த்தியங்கூடும். எவ்வாசிரியர் மதத்தில் க்ஷத்திரிய, வைசியர்க்குச் சங்நியாசத்தின் அதிகாரமுண்டோ அவர் மதத்தில் அநாயாசமாகவே தெய்வசம்பத்து கூடும். சதுர்த்த வருணத்திலும், அப்படியே அந்தியஜாதிகளிலும் தெய்வசம்பத்து துர்லபமாயினும் கர்மபலம் அநந்தவிதமாம்; ஆகலின், ஒருவர்க்கு ஜன்மாந்தரத்தின் கர்மத்தால் தெய்வசம்பத்தின் பேறுண்டாய்விடின், புராணேதிகளின் விசாரத்தால் சதுர்த்த வருணத்திற்கும், பாஷாப் பிரபந்தாதிகளின் சிரவணத்தால் அந்தியஜாதிகட்கும் பகவத்பக்தியும், தத்துவ ஞானப்பேற்றின்வாயிலாக மோட்சப்பேறும் நிர்விக்கினமாகவுளவாம்; இவ்வாற்றுல், பகவத்பக்தியும், தத்துவஞானத்தின் அதிகாரமும் சகல மநுடர்க்குமுண்டு; இது சாஸ்திரங்களின் நிர்ணயமா மென்று **விருத்திப்பிரபாகாத்தின்** அஷ்டமப்பிரகாசத்திற் கூறியிருக்கின்றது. (கசூக)

(304) [கூஈ - ம் செய்யுளில் இனி வித்தியாநந்தங்கூறுவோ மென்றவாறே அதனைக் கூறத்தொடங்கிப் புருடனெவன் ஆன்மாவை இவனே நானென்றறிந்தால் பின்னையாருக்குப் போகநிமித்தமாக, எந்தப்போகத்தைக் குறித்து, சரீரதாபப்படுவன் என்னும் பிருகதாரண்யகருதியின் றுற்பரியமான இகலோக துக்காபாவழும், புண்ணியம் என்று வரும், பாவம் என்றுபோம் என்னும் சிந்தனுபமான பரலோக துக்காபாவழும் நான்து செய்யுளாற் கூறுகின்றர்.]

[வேறு.]

பிறந்ததுண் டானு லன்றே பிறகு சாவதுதா னுண்டாம்
பிறந்ததே யில்லை யென்னும் பிரமமா வதுவு நானே
பிறந்தது நானென் றுகிற் பிரமமன் றந்த நானே
பிறந்தது மிறந்த தற்ற பிரமமா நானே நானே. (கசூச)

இ - ள். பிறந்தது உண்டானுல் அன்றே = (மூன் ஒன்றினின்றும் நான்) ஜனித்ததுண்டாயினல்லவா—பிறகு சாவதுதான் உண்டாம் = பின்பு (ஒன்றுல்) மரிப்பது எனக்குண்டாகும்.—[ஜநநமரணம் உமக்கேனில்லை யெனின்;—அதற்குக் கூறுகின்றர்.] பிறந்ததே இல்லை என்னும் பிரமம் ஆவதுவும் நானே = (சகலமும் ஜநநமாதற்கு அதிஷ்டானமாகலின்,) அஜன்மம், அசங்கம் என்று சுருதியாதிகள்கூறும் பிரஹ்மரூபமாகிய அப்பொருளும் நானுகிறேன்;—(ஆகலின், எனக்கு ஜன்மாதி சட்பாவ விகாரங்களின்றன்பது கருத்து.) [ஜன்மாதி சட்பாவ விகாரங்கள் உலகில் பிரசித்தமா

யிருப்பதுமன்றி நீரும் இன்னுனுடைய புத்திரன் என்பது பிரசித்தமாக விருத்தலின், உமக்கு ஜநநமாணழண்டேயென்று மேலுஞ்சங்கித்து அதற்குக் கூறுகின்றார்.] பிறந்தது நான் என்றுகில்=(பூமியிற்) சனித்தது நானென்று சொல்லப்படுமாயின்,—அந்த நான் பிரமம் அன்று=(ஜன்ம ஏதுவான அவித்தை காமகர்மங்களோடுகூடிச் சனியாகின்ற) அகம்சத்த வாச்சியமான அகங்காரம் பிரஹ்மமன்று:—பிறந்ததும் இறந்தது (ம்) அற்ற பிரமம் ஆம் நானே நானே=ஜநமும், மாணமுமாகிய விகாரமிறந்த அசங்க பிரஹ்மரூபமாகிய (அகம் சப்தலட்சியார்த்தமான) கூடஸ்தனே நான்.—எ - று.

தக்காபாவங் கூறத்தொடங்கி "பிறந்ததுண் டாஞ லன்றே" என்று முன்னே ஜன்மத்தை யெடுத்தது ஜன்மப்பிரதீதி யநந்தரம் சர்வவநர்த்தங்களுந் தோன்றுகின்றனவாகலின், அது நிஷேதமாகவே சர்வவநர்த்தங்களும் நிஷேதமாமென்னுங் கருத்தால் என்க. (கசுச)

[நான் என்னும் சத்தத்தின் பொருளைப் பிரசித்தமான வநுபவத்திற் காட்டுகின்றார்.]

நானென்ற பிரமமான நானேநா னறியே னென்றுல்
நானென்ப தேது பின்னே நம்முடைப் புந்தி யென்னில்
தானது மயக்கந் தன்னிற் சாகுமே சாவா தாகி
நானென நிறைந்தி ருந்த ஞானமா நானே நானே. (கசுரு)

இ - ள். நான் என்ற பிரமம் ஆன நானே நான்=(தூஷ்ணீம்பூதாவஸ்தையில், யாதொரு குடும்பசிந்தனையு மில்லாமல்) யான் (இருந்தேன்) என்று கூறுகின்ற பிரஹ்மரூபமான ஆன்மாவே நான்.—அறியேன் என்றுல்=(தூஷ்ணீம் பூதாவஸ்தையில் ஆன்மாவை) அறியேனென்று சொல்லில்,—பின்னே=பின்னர்—நான் என்பது ஏது=(விசேஷமாக) நான் (தேவதத்தன், நான் எக்ஞதத்தன்) என்று கூறுவது யாது?—நம்முடைப் புந்தி என்னில்=நம்முடைய புத்திதான் அங்ஙனங் கூறுநிற்கின்றதென்று சொல்லில்,—அதுதான் மயக்கந்தன்னில் சாகுமே=அப்புத்தி நித்திராமோகத்தி லபாவமாமே;—(அங்ஙனம்,) சாவாதாகி நான் என நிறைந்து இருந்த=(சுழுத்தியின்கண்) அபாவமாகாததாய் நானுக நிறைந்திருந்த—ஞானம் ஆம் நானே நான்=ஞானரூபமாகிய ஆன்மாவே நான்.—எ - று.

"நானென்ற" என்று சாமான்யமாகக் கூறினதால், நிஜாநந்த சத்பாவமுள்ள சுகதுக்கங்களி னந்தராளமாகிய தூஷ்ணீம்பூதா வஸ்தையும், "பின்னே" என்றதால், தேவதத்தன், எக்ஞதத்தன் என்பனவும் வருவித்தாம். "சாவா தாகி, நானென நிறைந்திருந்த ஞானமா நானே நானே." என்றதால், தன்னிடத்துப் போக்திருத்துவ மிறந்திருப்பதைக் குறிப்பித்தனர். (கசுரு

[அகம்சத்தத்தின் இலட்சியார்த்தமான ஆன்மாவைப் பிரசித்தமான அநுபவத்தாற் காட்டிச் சுழுத்தியில் ஆநந்தமாயிருக்கும் ஏதுவைக் கொண்டு இவ்வான்மாவே பிரஹ்மமென்று சாதிக்கின்றர்.]

நிறைந்தவா றெந்த வாறு நீலைதெரிந் திலனென் றுரையேல்
அறிந்ததாஞ் சுழுத்தி தன்னி லாநந்த மதுவே யாகும்
குறைந்ததற் காநந் தந்தான் குவலயந் தன்னி லில்லை
நிறைந்ததே யிந்த வான்மா நிதானமிவ் வறிவு தானே. (கசுசு)

இ - ள். நிறைந்த ஆறு எந்த ஆறு=(ஞானரூபமாகிய ஆன்மா) பூரணமாயிருக்குந்தன்மை எந்த வேதவிஞல்—நீலை தெரிந்திலன் என்றுரையேல்=அந்நிச்சயமான ஏதுவை யானறிந்திலன் என்று நீ சங்கிப்பாயாகில்,—சுழுத்திதன்னில்=சுழுத்தியின்கண் — அறிந்ததாம்=(அஞ்ஞானத்தை) அறிந்திருந்ததாகிய — அது=அவ்வான்மா — ஆநந்தம் ஆகும்=நிரதிசயாநந்தரூபமாம்; (ஆகலின், ஆன்மாவே பரிபூரணப்பிரஹ்மமாம்.)--[இஃதெங்கேனுங் கண்டதுண்டோவெனின்;—உலகில் பிரசித்தமென்று கூறுகின்றர்.] குறைந்ததற்கு ஆநந்தந்தான்=குறைந்திருப்பதற்கு ஆநந்தமானது—குவலயந் தன்னில் இல்லை=உலகில் ஓரிடத்துங் காணப்படவில்லை;—(ஆகலின்,) இந்த ஆன்மா நிறைந்ததே=(சுழுத்தியின்கண் ஆநந்தமாயுள்ள) இவ்வான்மா பூரணந்தான்;—இவ்வறிவுதானே நிதானம்=இப்பரிபூரணப் பிரஹ்ம சைதந்நியமே சகத்திற்கு ஆதிகாரணமாம்.—எ - று.

உலகில் தனதான்யாதி சம்பத்துண்டாயிருப்பினும் புத்திரன் இலனென்னுங் குறையுளதேற் சுகமில்லை; புத்திரர், மித்திரர், களத்திராதிகள் நிறைந்திருப்பினும் தனமில்லையென்னுங் குறையுளதேற் சுகமில்லை; பிறவும் இங்ஙனம் உலகிற் காணப்படுதலின், "குறைந்ததற் காநந் தந்தான் குவலயந் தன்னி லில்லை" என்றார். (கசுசு)

[பிரகாராந்தரமாக ஆன்மாநந்தவாயிலாற் றன்னிடத்துப் போக்திருத்துவாபாவத்தைக் காட்டித் தோய்தமித்தை யென்னும் சிந்தநுபமான அத்துவிதாநந்தவாயிலால் போக்கிய அபாவத்தையுங் குறிப்பாக வுணர்த்துகின்றர்.]

மனத்தினு லெண்ணித் தானே வந்தநிவ் வுலக மாகும்
நினைத்திடி லநேக லோக நிற்பதவ் வறிவி லன்றே
அனைத்தையுங் கடந்தப் பாலு மந்தமற் றறிவி தாமென்
றெனைத்தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோ னானே. (கசுஎ)

இ - ள். இவ்வுலகம்=(ஆகாசமுதற் றேகபரியந்தமான) இப்பிரபஞ்சம்—மனத்தினுல் எண்ணித்தானே=மனத்தால் பாவனைசெய்தே—வந்தது ஆகும்=உண்டானதாம்.—நினைத்திடில்=ஆராயின், — அநேக லோகம் நிற்பது=(மனதின் பாவனையாலுண்டான) அநேகவித வுலகங்களும் (அம்மனத்தோடுகூட) நிற்பது—அவ்வறிவில் அன்றே=(வாயுவசத்தால் சமுத்

திரத்திலுண்டான தரங்கபேன புற்புதங்கள் சமுத்திரத்திற்போல மனத் திற்கு ஆதாரமான) அப்பிரஹ்ம சைதந்நியத்திலல்லவா;—(ஆகலின்,) இது அறிவு ஆம் என்று=(அறிவிலுண்டாகி, அறிவில் நிற்கும்) இம்மன முதலான பிரபஞ்சம் அறிவேயாகுமென்று—எனைத் தனி விசாரித்திட்டால்= (அறிவாகிய) என்னைச் சுத்தமாக (இங்ஙனம்) விசாரித்திடில்,—அனைத்தை யும் கடந்து=(மன முதலான) பிரபஞ்சமனைத்தையுங் கடந்து—அப்பாலும் =அதற்குமேலும்—அந்தம் அற்று=முடிவிறந்து—ஏகம் ஆய்=சுவகதாதி பேதரகிதமாய்—நிறைந்தோன் நான்=நிறைந்திருப்பவன் யான்.—எ - று.

நான்கு செய்யுளின் அபிப்பிராயம்,—சீவான்மா, பரமான்மா என ஆன்மா இருவகைத்தாம்; அவற்றுள், சேதனரூபமான ஆன்மா மூவகைத் தேகத்தோடுகூடத் தாதான்மியத்தாற் சீவஞைப் போக்திருத்துவத்தை யடைந்துளது. சச்சிதானந்த சொரூபமான பரமான்மா நாமரூபகற்பனைக் கதிஷ்டானமாகலின், அந்நாமரூபங்களோடு தாதான்மிய மடைந்து போக்கிய த்துவத்தை யடைந்துளது. கசுஉ, கசுரு, கசுசு - ம் செய்யுட்களிற் பிரகா ராந்தரமாகச் சொன்ன ஆன்மாநந்தவாயிலானும், இந்த கசுள - ம் செய்யுளிற் றொகுத்துக்கூறிய அத்துவிதாநந்த வாயிலானும் முறையே மூன்று தேகத்தி னின்றும், பிரபஞ்சத்தினின்றும் சீவான்மாவையும், பரமான்மாவையும் பிரித் தறியும்பொழுது போக்தா, போக்கியம் என்னும் இவையில்லாமற் போத லின், போக்தா, போக்கியங்களின் சம்பந்தத்தால் உளவாகாநிற்கும் மூவகைச் சரீரங்களின் சுரங்களான இகலோகதுக்கமும், அக்கினியிலிடும் பஞ்சுபோலச் சமூசயாகிதமான பிரமான்மவயிக்கிய ஞானத்தால் சகல சஞ்சித கர்மங்களும் வெந்துபோனதனாலும், தாமரை யிலையிற் சலம்போல அகர்த்திருத்துவ ஞானத்தால் ஆகாமியகர்மங்கள் பற்றுமற்போனதனாலும், புண்ணியபாவ சிந் தனாரூபமான பாலோகதுக்கமும் அபாவமாயின என்பதாம். (கசுள)

(305) [இனிச் சர்வகாமாப்தி கூறத்தொடங்கிச் சார்வபௌமன் முதல், இரண்டயகர்ப்பாந்தமான கசுக - ம் செய்யுளில் முன்சொன்ன சர்வாநந்தங்களிலும் ஞானி ஆசையில்லாமல் அநந்தினவன்போல வமைந்திருப்பதனாலும், தனதுதேகத் தின்கண் ஆநந்தாகாரமான புத்திக்குச் சாட்சியா யிருப்ப தால் ஆநந்தியாயிருப்பதுபோலச் சார்வபௌமன்முதலிய தேகங்களிலும் ஆநந்தாகார புத்திக்குச் சாடசியாயிருப்ப தால் ஆநந்தியாயிருப்பதனாலும், சாமவேதத்திற் சொல்லிய படி சர்வான்மபாவத்தால் சர்வபோக்கிய நுபழநாஞகி றேன், சர்வபோக்தா நுபழநாஞகிறேன் என்னும் அநுப வத்தினாலும் சர்வகாமாப்தி ஞானிக்குண்டென்று முன்னூலான பஞ்சதசியிற் கூறியிருப்பதை இங்கே ஆட்சேப சமாதான வாயிலாக கசுஅ - ம் செய்யுண் முதல் நான்கு செய்யுட்க ளாற்கூறுகின்றார்]

அந்தவா றிருந்து கொண்டே யாநந்த மநுப விக்க
எந்தவா றிருந்து கொண்டா லெனக்கிது தெரியு மென்னில்

இந்தமூன் றவஸ்தை தம்மு ளெழுந்திடும் விருத்தி நீக்கில்
அந்தவா றிருந்து நீயு மாநந்த மடைய லாமே. (ககூஅ)

இ - ள். அந்த ஆறு இருந்துகொண்டு = முன்சொன்னபடி சர்வாதீதமாய், அநந்தமாய், ஏகமாய்ப் பூரணமா யிருந்துகொண்டு — ஆநந்தம் அநுபவிக்க = சர்வகாமாப்தியென்னும் வித்தியாநந்தத்தை யநுபவிக்க — எந்த ஆறு இருந்து கொண்டால் = எவ்வாறிருந்தால் — எனக்கு — இது தெரியும் என்னில் = இச் சர்வகாமாப்தி தோன்றுமென்று நீ சங்கிக்கில், — இந்த மூன்று அவஸ்தை தம்முள் = இச்சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூவித அவஸ்தை களில் — எழுந்திடும் விருத்தி நீக்கில் = எழாநிற்கும் கோர, மூடமுதலிய விரு த்திகளை ஒழிப்பாயாகில், — அந்த ஆறு இருந்து = முன் கூறிய வழியேநின்று — நீயும் — ஆநந்தம் அடையலாம் = வித்தியாநந்தம் பெறலாம். — எ - று.

[விருத்தினாசவுபாயங் கூறல்.]

வாதனை வசத்தி னாலே வருகிற விருத்தி யெல்லாம்
ஏதினு லடக்க லாகு மென்றுதான் விசாரஞ் செய்யில்
போதமா மிராசன் ரூனுப்ப் புந்தியைம் புலன்க ளெல்லாம்
தாதரா யிருக்கப் பெற்றுற் சகலமு மடங்குந் தானே. (ககூக)

இ - ள். வாதனை வசத்தினாலே = சம்ஸ்காரவசத்தால் — வருகிறவிருத்தி எல்லாம் = (அந்தக்காரணத்தினின்றும்) எழுகின்ற விருத்திகளனைத்தையும் — ஏதினால் அடக்கல் ஆகும் என்று = யாதோருபாயத்தால் நிரோதித்தல் கூடும் என — விசாரம் செய்யில் = நீ ஆராயில், — போதம் ஆம் இராசன் தான் ஆய் = ஞானரூபமாகிய (ஆன்மதத்துவ) அரசன்ரூனுகி — புந்தி ஐம்புலன்கள் எல் லாம் = அந்தக்காரணமும், ஐவகை ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங் களும் ஆகிய வனைத்தும் — தாதர் ஆய் இருக்கப்பெற்றால் = (தனது) ஆளாக விருக்கப்பெறில், (தனது வசமாக விருக்கப்பெறில் என்றபடி.) — சகலமும் தானே அடங்கும் = சகலவாசனைகளுந் தானே நிரோதமாம். — எ - று.

இரண்டாம் பாதத்திலுள்ள தான் அசை.

"போதமா மிராசன் ரூனுப்ப் புந்தியைம் புலன்க ளெல்லாந், தாதரா யிருக்கப் பெற்றால்" எ - து,

"அந்தமந் திரியந்த வேந்தா லெளிதுவென் றிடில் வணங் குறும்" —

என்னும் வாசிட்டக் கருத்து. "விருத்தி" எ - து, அகந்தை, மமதை, காமக்குரோதாதிரூப அந்தக்காரணத்தின் பரிணமங்களை. (கசூக)

[விருத்தினாசத்திற்கு இன்னும் அநேக வுபாயங்கூறல்.]

விருத்திக ளடக்க வின்னம் விஞ்ஞதமாம் யோகத் தாலே
விருத்திபோ லாது மூச்சைச் சுகமுட னடக்கி னிற்கும்

கருத்ததற் கில்லே யென்னிற் காரண சரீ ரமாகிப்
பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே. (கஎ0)

இ - ள். விருத்திகள் அடக்க = விருத்திகளையடக்க (வேண்டின்,)— இன்னம் = மேலும் — விஞ்ஞதம் ஆம் யோகத்தாலே = (வாசிட்டத்தில், வீத கவ்வியர் கதையிற் கூறியிருக்கிறபடி) விஞ்ஞதமாக (ச் செய்யாநிற்கும் ரேசக, பூரக, கும்பகாதிப் பிரயத்தனரூபமான) யோகாப்பியாசத்தால்— திருத்திபோல் ஊதும் மூச்சை = (கொல்லன்) திருத்திபோல (நாசித்துளை வழி) வீசாநிற்கும் பிராணவாயுவை — சுகம் உடன் அடக்கில் = அநாயாசமாக நிரோதஞ்செய்யில், — நிற்கும் = (வாயுவடங்கினுல் ஆகாசத்திற் றூளியடங்குவதுபோல) விருத்திகளடங்கும்; — அதற்குக் கருத்து இல்லே என்னில் = அவ்வியோக மப்பியாசித்தற்கு விருப்பமில்லையாயின், — காரணசரீரம் ஆகி = (தூல சூக்கும சரீரங்கட்குக்) காரணசரீரமாய், — பெருத்தது ஓர் அவித்தை தன்னை = (காடாந்தகாரம்போலுங்) கனத்திருப்பதான ஓரவித்தையை — பிடுங்கிடில் = நாசஞ்செய்யில், — தானே அடங்கும் = (உபாதான நாசத்தால்) வேறொருநிமித்தத்தை யபேட்சியாமலே விருத்திகள் நாசமாம். — எ - று.

விருத்திகடாமும் என்றும் பாடமுளது. பேரிடரை யளிப்பதாகிய அடையோகமல்லாத தானவென்பார், "விஞ்ஞதமாம்" என்றார். இதில் "பிடுங்கிடில்" என்பதும், பின்வருஞ் செய்யுளில், "கூளவது" என்பதும் விருட்சத்திற்கு வேர்போல விருத்திகட்கு அவித்தை உபாதான காரணமான மூலமாகலின், அது நீங்கவே விருத்திகள் நிச்சயமாக நீங்காநிற்கும் என்னும் பொருளைக் குறிப்பித்து நின்றன.

"காரண சரீ ரமாகிப், பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே" என்று இவ்வாசிரியர் கூறினதுபோலவே வாசிட்டத்தில்,

"உலகமெலாம் பிரமமெனும் பாவனையா லஞ்ஞானமொழிந்து போனன், மலமுறுவா தனைமீதான்று"—

என்று கூறியிருப்பது காண்க. (கஎ0)

[காரண சரீரத்தைப் போக்கும் உபாயம் யாதென் றட்சேபித்து அவ்வுபாயங் கூறுகின்றார்.]

காரண சரீரந் தன்னைக் கூளவதெவ் வாறென் றோதில்
ஆரணம் பொய்சொல் லாதே யதன்பொரு ளகத்தி லுய்த்துப்
பூரண மாகு மென்மேற் புவனங்க டோற்ற மென்று
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே. (சுஎக)

இ - ள். காரணசரீரம் தன்னைக் கூளவது = காரணதேகமான அவித்தையைப் போக்குவது — எவ்வாறு என்று ஓதில் = எத்தன்மையான உபாயத்தாலாம் என்று ஆட்சேபிக்கில், — ஆரணம் பொய் சொல்லாதே = (ஏனைய தூல்போலச்) சுருதி அசத்தியஞ் சொல்லமாட்டாதே; — (ஆகலின்,) அதன்

பொருள் அகத்தில் உய்த்து=("ஈண்டு நாநாவானவை அற்பழமில்லை, ஈத னைத்தும் பிரஹ்மமல்லவா" என்பனமுதலிய) சுருதியின் அர்த்தத்தை மனத் தின்கண்ணே (திடமாகத்) தரித்து—பூரணம் ஆகும் என்மேல்=பரிபூரண சொரூபமான என்கண்—புவனங்கள் தோற்றம் என்று=பிரபஞ்சங்கள் பிரதி பாசமாத்திரமாம் என்று—தாரணை வந்தது ஆகில்=* நிச்சயம் வந்ததாயின்,— எங்கே தரித்திடும் அவித்தை=அவித்தை எங்கேயிருக்கும்: (ஓரிடத்தும் இராமல் நாசமாய் விடும்.)— எ - று.

"பூரண மாது மென்மேற் புவனங்க டோற்றம்" எ - து, கண்ணுடியிற் பிரதிவிம்பியாநின்ற நகரம்போலும், அருகின் மரங்கள் வாவிசலத்திற்போ லும் என்றறிக. சூரியோதயமாயின், அந்தகாரம் ஓரிடத்துங் காணுமல் ஒழி ந்து போவதுபோலச் சமுசயரகிதமான திடஞானத்தால் ஆவரணரூபாம்ச மான அஞ்ஞானம் லேசமுமில்லாமல் ஒழிந்துபோவதால், "தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தையெங்கே" என்றார்.

சமுசயரகிதமாகப் பரிபூரண பிரஹ்மாநுபூதி எழவே அவித்தை நிவிர்த்தி யாம்; உபாதானகாரணமான அவித்தை நீங்கவே, அநாதி காலவாசனைகள் ஒழிந்துபோம்; அவை ஒழியவே, அவற்றின் வசத்தால் எழாநிற்கும் விருத்தி கள் அடங்கிவிடும்; விடவே, தன்தேகத்தில் ஆநந்தாகார விருத்திக்குச் சாட் சியா யிருப்பதுபோலச் சார்வபௌமன் முதலியோர் தேகங்களிலும் ஆநந்தா கார விருத்திக்குச் சாட்சியாயிருப்பதால், சர்வகாமாப்தி யுளதாம் என்பதாம்.

(306) [இனிக் கிருதகிருத்தியத்தன்மை கூறுகின்றார்.]

அப்படி யிருக்கச் சித்த மலைதலால் விவகா ரத்தில்
எப்படி கூடு மென்னி லென்னைவிட் டொன்று மில்லை
இப்படி கண்ட வெல்லா மென்மய மென்க ளுப்போல்
கற்பித மென்று தானே காண்கின்ற சித்து நானே. (களஉ)

இ - ள். அப்படி இருக்க=முன்சொன்னபடி (பரிபூரணமான என் கண் அகங்காராதி, ஆகாசாதிப் பிரபஞ்சந் தோற்றரவு மாத்திரம் என்னுந் தாரணையோடுகூடி) நிற்க—விவகாரத்தில் சித்தம் அலைதலால்=(பிராரத்த வசத்தால் வராநின்ற லௌகிகமோ அல்லது, வைதிகமோ யாதானுமொரு) வியவகாரத்திற் (பிரவிர்த்திக்குங்கால்) சித்தம் விட்சேபப்படுவதால்—எப்படி கூடும் என்னில்=எங்ஙனங்கூடும் என்று சங்கிக்கில்,—என்னை விட்டு ஒன் றும் இல்லை=(அசங்க சிதான்மாவான) என்னைத் தவிர யாதொரு (பிரபஞ்ச மும் சசவிஷாணம்போலும், வந்தியாசுதன்போலும்) இல்லை.—[அநுபவ கோசரமான பிரபஞ்சத்திற்குச் சசவிஷாணம் போலும், வந்தியாசுதன் போலும்திரைகாலிக அபாவத்துவங் கூடாதேயெனின்;—அதற்குக் கூறு கின்றார்.] இப்படிகண்ட எல்லாம்=இங்ஙனம்(நாமரூபங்களாகக்) காணுகின்ற (பிரபஞ்சங்கள்) அனைத்தும்—என் மயம்=(தரங்கபேனபுற்புதங்கள் எப்ப

*நிச்சயம்=சமுசயத்தின் வேறான ஞானம்.

டிச் சலமயமோ, கடகமகுடாதி பூடணங்கள் எப்படிச் சுவர்ணமயமோ அப் படி அகண்டைகரச சச்சிதானந்தரூபனை) எனது மயமாம்,—(அல்லது,) என்கனவுபோல் கற்பிதம்=எனது சொப்பனப் பிரபஞ்சம்போல மித்தையாம் —என்று=என்று (நிச்சயித்து உபேட்சித்து)—தானே காண்கின்ற=(வாகி யமாயும், ஆந்தரமாயுமுள்ள பிரபஞ்சங்களைச்) சுயமே அறியாநின்ற—சித்தே நான்=அசங்கசிதான்மாவே நான்.—எ - று. (கஎஉ)

[இதுவுமது.]

சித்துநா னிறைந்தோ னென்ற திடமற வாதி ருந்தால்
எத்தனை யெண்ணி னுலு மேதுசெய் தாலு மென்ன
நித்திரை யுணர்ந்த பின்பு நிற்கின்ற கனவே போல
அத்தனை யும்பொய் தானே யாநந்த வடிவு நானே. (கஎந)

இ - ள். சித்து நான்=அசங்க சிதான்மாவாகிய நான்—நிறைந்தோன் =பரிபூரணப்பிரஹ்ம மானேன்—என்ற திடம்=என்னுமுறுதி—மறவாது இருந்தால்=(பிராமணனுக்குப் பிராமணத்துவம்போல) மறவாதிருக்கின்,— (கிருதகிருத்தியனை என்னுடைய புத்தியானது லோகாநுக்கிரகவிச்சை யால்) எத்தனை எண்ணினாலும்=எத்தனை (விஷ்ணுவாதி மூர்த்திகளைத் தியானிக்கினும் (தியானிக்க, அன்றிப் பிரஹ்மாநந்தத்தின்கண்ணே லீனமா யினும் ஆகுக,)—ஏதுசெய்தாலும்=(சரீரமானது தேவார்ச்சனை, ஸ்நானம், சௌசம், பிட்சை முதலியவற்றில்) யாதுசெய்யினும் (செய்க, வாக்கானது பிரணவ ஜபம், வேதாந்தசாஸ்திரபாடம் முதலியவற்றுள், யாதுசெய்யினுஞ் செய்க)—என்ன=(அவைகளை நான்செய்பவனும், செய்விப்பவனும் அலனாகி லின்,) அவைகளால் எனக்கு என்ன (ஆனி : ஒன்றுமில்லை.)—நித்திரை உணர்ந்த பின்பு=நித்திரையினின்றும் விழித்த பின்னர்—நிற்கின்ற கனவே போல=(பிரயத்தனமில்லாமலே மித்தையாகத்தோன்றி) நிற்குஞ் சொப்பன (வியவகார) ம் போல—அத்தனையும், பொய்தான்= (காயவியவகாரமான தேவார்ச்சனை முதலியனவும், வாக்கின் வியவகாரமான ஜப முதலியனவும், புத்திவியவகாரமான மூர்த்திதியானாதிகளும் ஆகிய) அவ்வளவும் மித்தை தான்;—ஆநந்த வடிவு நான்=பரமாநந்த பூரணரூபன் நானும்.—எ - று.

இங்ஙனங் கூறியவாற்றால் எனக்குச் செய்யற்பாலனவனைத்துஞ் செய்து முடிந்தனவாம் என்பது கருத்து. (கஎஙு)

(307) [இனி பிராப்தப் பிராப்பியத்தன்மை;—கிருத கிருத்தியத் தன்மையால் திருப்தனானவன் பின்னர், பிராப்தப் பிராப்பி யத் தன்மையாற் றிருப்தனாயத் தனது மனதினால் நிரந்தரம் இவ்வாறு கருதுகின்றனன் என்பதைத் தன்மையிடத்து வைத்துக் கூறுகின்றனர்.]

நானென வுடலைத் தானே நம்பினே னனேக சன்மம்
ஈனாய்ப் பெரியோ ராகி யிருந்தவை யெலாமிப் போது

கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவி ஞலே
நானென வென்னைத் தானே நம்பியீ டேறி னேனே. (களச)

இ - ள். அநேக சன்மம் = (கீழ்ப்போன) அநந்த ஜநங்களில்—நான் என உடலைத்தானே நம்பினேன் = யானென்று (சுர, நர, திரியக்காதி ரூபங்களான) தேகங்களையே (அறியாமையால்) விசுவசித்திருந்தேன்.—(அப்போது) ஈனர்ஆய் பெரியோர் ஆகி இருந்தவை எலாம் = இழிந்தோராயும், உயர்ந்தோராயும் இருந்த அவையனேத்தையும்—இப்போது = இப்பொழுது—சற்குருவிஞலே = (கிருபாமூர்த்தியான சற்குருவிஞலே—கானலில் வெள்ளம்போலக் கண்டு = கானலிடத்து (த் தோன்றுகின்ற பிராதிபாசிக) சலம் போல (மித்தையாக) க் கண்டு—நான் என என்னைத்தானே நம்பி = நானென்று (பிரத்தியகபின்ன பரமான்மாவான) என்னையே விசுவசித்து—ஈடேறினேன் = உய்யப்பேற்றேன்.—எ - று.

இது குருவை வியந்தது. (களச)

[இதுவுமது.]

என்னபுண் ணியமோ செய்தே னேதுபாக் கியமோ காணேன்
நன்னிலந் தனிலெ ழுந்த நாரணன் கிருபை யாலே
தன்னிய ஞனே ஞனுத் தரியத்தை வீசு கின்றேன்
தன்னிய னின்னு நானே தாண்டவ மாடு கின்றேன். (களடு)

இ - ள். என்ன புண்ணியமோ செய்தேன் = எப்படிப்பட்ட (உத்கிருஷ்டமான) புண்ணியங்களை யான் செய்தேனே!—ஏது பாக்கியமோ = யாது அதிஷ்டமோ!—காணேன் = யான் அறியேன்.—நன்னிலந்தனில் எழுந்த = நன்னிலமென்னும் மதுவனத்தில் (அருளே உருவமாய்) எழுந்தருளிய—நாரணன் கிருபையாலே = நாராயணதேசிகருடைய பெருங்கருணையினாலே—நான் தன்னியன் ஆனேன் = நான் கிருதார்த்தனானேன்,—உத்தரியத்தை வீசுகின்றேன் = ஏகாசத்தை ஆகாசத்திலெறிந்து விளையாடுகின்றேன்;—தன்னியன் நான் = கிருதார்த்தனான யான்—இன்னும் தாண்டவம் ஆடுகின்றேன் = மேலும் ஆநந்தக் கூத்தாடுகின்றேன்.—எ - று. (களஎ)

[குருவை வியந்து துதித்தல்.]

தத்துவ ஞானம் வந்த சந்தோட வதிச யத்தால்
நித்தமா மெவன்கா ணென்ற நிலைமுன்ன மேய றிந்த
சத்திய மதனு லன்றே தாண்டவா வென்ற ழைத்தார்
அத்தனே மகிமை யுள்ளோ ரன்னையும் பிதாவுந் தாமே. (களஅ)

இ - ள். தத்துவ ஞானம் வந்த = (சகல வசார்த்தங்களையுமொழித்து நிராதிசயாநந்தத்தை நேரே பயக்கவல்ல) தத்துவ ஞானத்தா லுண்டான—சந்தோட அதிசயத்தால் = வித்தியாநந்த மேலீட்டால்—நித்தம் ஆவென்கா ண்

என்றநிலே=நாடோறும் (இவ்வாரூநந்த) நடனஞ்செய்யாநிற்பனென்னும் நிர்ணயத்தை—முன்னமே அறிந்த=திருவடியை யடைந்தவன்றே திருவுளத்தின்கண்ணே யுணர்ந்த—சத்தியம் அதனால் அன்ரே=உண்மையான சர்வஜ்ஞத்வத்தாலல்லவா—தாண்டவா என்று அழைத்தார்=தாண்டவாவென்று (காரண) நாமமிட்டு விளித்தனர்;—(ஆகலின்,) அத்தனை மகிமை உள்ளோர் தாமே=அவ்வளவு மகிமையுள்ள எனது குருவே—அன்னையும் பிதாவும்=(எனக்குத்) தாயுந் தந்தையுமாம்.—எ - று.

"இந்தவி டும்பையு டம்புறு மேது
தந்தையெ னப்புகழ் கின்றிலர் தக்கோ
ரந்தமி லாதவ கண்டமு நம்மூட்
டந்தவர் தந்தையெ னச்சமை வுற்றூர்."—

என்று பிரமகீதையிற் கூறியிருப்பதால், இவரும் "அன்னையும் பிதாவும்" என்று குருவையே கூறினர் எனக்கொள்க. அன்றியும்,

"தந்தை தாயுமெய்த் தகையுடை யுறவும்"—

என்னுஞ் செய்யுளானுமறிக. "தாண்டவராயன்" என்னுந் திருநாமம் தருவினால் இடப்பட்டது. (களசு)

[இன்னும் குருசாஸ்திராதிகளைப் புகழ்ந்து வணங்குதல்.]

வந்தேதா ரிவ்வா நந்த மகிழ்ச்சியா ருடன்சொல் வேன்யான்
சிந்தையி லெழுந்து பொங்கிச் செகமெலா நிறைந்து தேங்கி
அந்தமில் லாத தாயிற் றப்படி குருவே தாந்த
மந்திர மருளு மீசன் மலரடி வணங்கி னேனே. (களஎ)

இ - ள். வந்தது ஓர் இவ்வாநந்த மகிழ்ச்சி=பிரஹ்மவித்தையாலுண்டானதான ஒப்பற்ற இவ்வித்தியாநந்தத்தின் மகிழ்ச்சியை—ஆருடன் சொல்வேன் யான்=யான் யாவரோடு கூறுவேன்!—சிந்தையில் எழுந்து பொங்கி=புத்திவிருத்தியின்கண் ஊதயமாகி மேலிட்டு,—செகம் எலாம் நிறைந்து தேங்கி=ஜகத்தனைத்தினும் வியாபித்துப் பூரணமாய்,—அந்தம் இல்லாதது ஆயிற்று=கரையிறந்த தாயினது;—அப்படி (அருளும்)=அப்படி (ப் பட்ட வித்தியாநந்தத்தை) அருளாநிற்கும்—குரு=பிரஹ்மநிஷ்டரையும்,—வேதாந்தமந்திரம்=வேதாந்த வாக்கியங்களையும்—அருளும் ஈசன்=(குருரூபமாகவும், வேதாந்தவாக்கிய ரூபமாகவும் இருந்து) அருளாநிற்கும் (சர்வக்ஞசிகாமணியாகிய) ஈசுரனுடைய—மலர் அடி வணங்கினேன்=மலர்போலுந் திருவடியையும் பணிந்தேன்.—எ - று. (களஎ)

(308) [சொல்லிவந்த வித்தியாநந்தத்தை முடிப்பதோடு நூற் பயன் கூறல்.]

வித்தியா நந்த மிந்த விதமென விளம்பி னேமே
பத்தியா லிந்த நூலைப் பார்த்தநு பவித்த பேர்கள்

நித்திய தரும நிட்டை நிலைதனை யறிந்து சீவன்
முத்தியை யடைந்தி ருந்த முனிவரா குவாரே. (களஅ)

இ - ள். வித்தியாநந்தம் இந்த விதம் என விளம்பிலேனும்=தத்துவ ஞான (த்தால் ஆவிர்ப்பவியாநின்ற) ஆநந்தம் இந்தப்படி (துக்காபாவம், சர்வ காமாப்தி, கிருதகிருத்தியம், பிராப்தப்பிராப்பியம்) என (நான்குவகைத்தா மென்று) கூறினேனும்.—பத்தியால் இந்த நூலைப்பார்த்து=விசுவாசத்தோடு (கூடிப் பிரஹ்மநிஷ்டரான குருவையடைந்து அவர் முகத்தினால்) இந்நூலை (க் கேட்டு) விசாரித்து—அநுபவித்தபேர்கள்=(இந்நூலின் விடயமான பிரஹ்மாந்ம வயிக்கியத்தை இதிற் கூறியபடியே) அநுபவித்தோர்கள்—நித்திய தருமநிட்டை நிலைதனை அறிந்து=நித்தியமான புண்ணிய விசேஷத்தை யுடைய சமாதியின் ஆரூடத்தை அநுபவித்து—சீவன்முத்தியை அடைந்து இருந்த=சீவன்முத்தியையடைந்து (பூர்வம்) இருந்த—முனிவரர் ஆகுவாரே =*முனிவரர் நிகராவர்.—எ - று.

இங்கே, "தருமம்" எ - து, தனது † விலாசத்தோடுகூட அவித்தையை நிவர்த்தித்தற்கு நேரேகாரணமான சாட்சாத்காரத்திற்குப் பிரதிபந்தங்களான மலவிட்சேப தோடங்களை நிவர்த்திப்பிப்பது வாயிலாகச் சாதனபூதமான புண்ணிய விசேஷத்தை. (களஅ)

(309) [தருவின் ஆக்ஞாபலங்கொண்டு இப்பிரபந்தம் முற்றுவித்தே னெனல்.]

ஆரணப் பொருளாம் வித்தி யாநந்தம் விளங்க வேதும்
காரணங் குறைவி லாமற் கைவல்ய நவநீ தத்தைப்
பூரண மாக்க வேண்டிப் பூர்வமா நன்னி லத்தில்
நாரண குருந மக்கு நவின்றனர் யோகில் வந்தே. (களகூ)

இ - ள். ஆரணப்பொருள் ஆம்=சுருதியின் பொருளான—வித்தியா நந்தம் விளங்க=(சாதனசதுஷ்டய முதல்)—வித்தியாநந்த (பரியந்தம் அதி காரிக்கு நன்கு) விளங்க—காரணம் ஏதும் குறைவு இலாமல் (எடுத்துக்கூற வேண்டுங்) காரணங்களுள், யாதொன்றுங் குறைவுபடாமல்—கைவல்ய நவ நீதத்தை=கைவல்யநவநீத (மென்னு நாமமுடைய இப்பிரபந்த) த்தை—பூரணம் ஆக்கவேண்டி=சம்பூரணமாக்கி (உலகுக் களித்தற்பொருட்டுக் கருணை கூர்ந்து)—பூர்வம் ஆம் நன்னிலத்தில்=பழைமையாகிய நன்னிலமென்னும் ஸ்தலத்தின்கண்—நாரணகுரு=நாராயண ரென்னுந் திருநாமமுடைய குரு வான்—நமக்கு—யோகில்வந்து=தியான (ம் பண்ணுங்) காலையில் ஆவிர்ப்ப வித்து—நவின்றனர்=ஆக்ஞாபித்தனர்.—எ - று.

---

*முனி=மனனசீலர் : வரர்=சிரேஷ்டர் ; இவர் சுகர், நாரதர் முதலி யோர்.

† விலாசம்=காரியசமூகம்.

இங்ஙனங் கூறினதுகொண்டு கல்வி, கேள்விகளா லுளதாகிய எனது புத்திவலிகொண்டு இந்நூல் கூறினனல்லன் என அவையடக்கங் கூறினவாறு மாயிற்று. (களக)

(310) [அநேக ஞானசாஸ்திரப் பொருள்களையும் இந்நூல் ஒன்றி லேயே அறியலாதமெனத் திருஷ்டாந்த முகத்தாற் கூறு கின்றார்.]

குலவுசற் குருவின் பாதக் குளிர்புனற் றலைமேற் கொண்டால்
உலகினிற் றீர்த்த மெல்லா முற்றபே றடைவார் போல
நலமையா குங்கை வல்ய நவநீத நூலைக் கற்றோர்
பலகலை ஞான நூல்கள் படித்தஞா னிகளாய் வாழ்வார். (கஅ0)

இ - ள். குலவுசற்குருவின் = (அகண்டைகரசப் பிரஹ்மசொரூபமாய்ப்) பிரகாசியாநிற்குஞ் சற்குருவினுடைய — பாதக்குளிர்புனல் = சீர்பாதத்தில் அபிஷேகஞ்செய்த சீதளதீர்த்தத்தை — தலைமேல் கொண்டால் = சிரசின் மீது புரோட்சித்துக்கொள்ளில், — (அப்படிக்கொண்டவர்) உலகினில் தீர்த் தம் எல்லாம் உற்றபேறு = உலகின்கண்ணுள்ள கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களனைத்திலுஞ் சென்று ஸ்நாநஞ்செய்தோர் பெற்ற பேறனைத்தும் — அடைவார்போல = (எப்படிப்) பெறுவாரோ அதுபோல — நலமை ஆகும் = (அநர்த்தநிவிர்த்தி, ஆநந்தப்பிராப்திரூபமான) பயனைக் கொடுப்பதாகிய — கைவல்ய நவநீத நூலைக் கற்றோர் = கைவல்யநவநீத மென்னு நாமமுடைய இந்நூலைக் கற்றோர்கள் — பலகலை ஞான நூல்கள் = பலகலைகளாகிய ஞான நூல்களனைத்தையும் — படித்த ஞானிகள் ஆய் வாழ்வார் = கற்றுணர்ந்த ஞானி கட்கொப்பாய் வாழ்வார்கள். — எ - று.

இங்ஙனங் கூறினமையின் உலகில் தீர்த்தங்களோ அநந்தம்; அவ்வநந்த தீர்த்தத்திலும் ஆடி அவைகளால் வரும் பேறடைதல் யாவர்க்கும் அரிது: குருபாதோதகந் தலைமேற்கொள்ளப்பெறில், அவ்வளவிறந்த தீர்த்தப்பேறும் பெறுதல் எளிதாவதுபோல, அளவிறந்த ஞான நூல்களையு மாராய்ந்து அவற் றின் பொருள்களையறிதல் யாவர்க்கு மரிது: இக்கைவல்ய ஞானநூலினைக் கற்கப்பெறில், அளவிறந்த ஞானநூற்பொருள்களனைத்தையும் இதனாற் பெறுதல் யாவர்க்கும் எளிதாகும்; ஆகலின், சிஞ்ஞாசையுடையோர் வேதாந் தத்தின் சூத்திரரூபமான இந்நூலை அவசியங் கற்கவேண்டும் என்பது கருத்து. (கஅ0)

சந்தேகந்தெளிதற்படலம்
மூற்றிற்று.

ஆக படலம் உ - க்கு செய்யுள் - உஅஅ.

கைவல்லியநவநீதம் தத்துவார்த்த தீபவுரை
மூற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

[இந்நூலாசிரியர் மாணிக்கர்
இவ்வாசிரியரையும், இந்நூலாலடையும்
அநுபூதியையுந் துதித்தல்.]

அண்ணறன் னருளி ஞலே யகம்புற மன்றி யொன்ரூய்
எண்ணமி லக்கி யார்த்தத் தின்பொரு ளதுநா னென்ன
நண்ணின சரீர மாதி நாதத்தி னுபாதி யென்றே
கண்ணதா யனேத்துங் காணக் காட்டினன் முண்ட வேசன். (க)

ஆன்ற பதமா மூன்றற்கு மதுரீ யாஞ யெனும்பொருளிற்
சான்ற துரியா தீதமெனுந் தடையற் றிலங்கொண் சைதந்நியம்
ஊன்றி யுணர்ந்தோர் விகற்பமயக் கொழித்துத் தடையு மூடறுத்துத்
தோன்றித் தானே தானுவர் துலங்குந் தமக்கே சுவாநுபவம். (உ)

என்னு மாவாக் கியநான்கு மிசைக்கும் வித்தியா நந்தம்
சொன்ன நாரா யணன்பாதந் தொழுது துதித்தோர் துகளற்றோர்
இன்ன மாணக் கன்குருவாற் சந்தே கந்தீர்ந் திடுபதத்தே
துன்னி நிறைந்து நின்ரோர்க யே முத்த ராகுவரே. (ங)

தத்துவ விளக்கத் தாலுஞ் சந்தேகந் தெளித லாலும்
ஒத்திருள் விடாத மாயா வுள்ளிரு ளிரிய வோங்கும்
சித்தநா மொளிவி ளங்கச் செய்துபின் விருத்தி பேதப்
புத்தியால் வருமை யத்தைப் புரையறத் தெளிவித் தாண்டான். (ச)

ஆண்டதே சிகனு மைய ஞாண னனந்தன் பாதம்
பூண்டவா ரோபத் தான்மூன் பொய்ம்மயக் காய்வந் தத்தை
மாண்டநல் லபவா தத்தான் மாய்த்தரு ணேக்கத் தென்றும்
காண்டிட வைத்த ளித்த காரணு போற்றி போற்றி. (ஞ)

சற்குருவேதுணை.

புத்தகவிளம்பரம்.

			ரூ.	அ.	பை.
ஸ்ரீ ஆத்மபுராணம் ...	...	விலை ...	8	0	0
வேதாந்த மஹா சிந்தாமணி	...	டை ...	4	0	0
நியாயப்பிரகாசம் ...	..	டை ...	4	0	0
தத்துவாநு சந்தானம் ...	...	டை ...	2	8	0
ஞானசாதக சகாயம் ...	...	டை ...	0	12	0
ஆத்திச்சூடி பாஹிய ... / ஆந்தார்த்தம் ...	...	டை ...	0	6	0
பிரமகீதை சுத்தபதிப்பு ...	...	டை ...	0	5	0
மஹாவாக்கியரகஸியம் ...	...	டை ...	0	4	0
வேதாந்தமஹா சிந்தாமணி / தத்துவாநு சந்தானம் / நியாயப்பிரகாசம் / இம்மூன்றும் யேககாலத்தில் / வாங்குபவர்களுக்கு	...	டை ...	7	0	0
ஸ்ரீ-பர்த்ருஹரி-வைராக்கியசதகம் ...		டை ...	0	3	0
சொரூபாநுசந்தானம் ...	...	டை ...	0	3	0

கிடைக்குமிடம்:—

அரங்கசாமி முதலியார், கிளார்க்கு
மதராஸ் பாங்கி,
வெங்கடாசல செட்டி வீதி, ரெட்டவுஸ்,
திருவல்லிக்கேணி
சென்னை.

கே. இரத்தின முதலியார்,
நெ. 4, பெரியநெய்யக்கார வீதி,
சாவுகார்பேட்டை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கைவல்லிய நவநீதச்செய்யுளின்

முதற்குறிப்பகராதி.

பாடல்.		பக்கம்.	பாடல்.		பக்கம்.
அ.			ஆதாரம	...	கூக
அகமெனு	...	ககூள	ஆதிமுக்கு	...	சுங
அக்கினிக	..	கஙக	ஆரணப்	...	நசக
அசத்திலெ	...	உசுo	ஆரோப	...	சo
அசலநிர	...	நoo	ஆர்க்கு	...	உருங
அச்சுவத்	...	உகo	ஆனபாவி	...	உoரு
அடங்கிய	...	ந உ	ஆனபின்	...	உக
அதனெயி	...	உசசு	ஆனலெயா	...	ககங
அதுதானெ	...	நுச	இ.		
அத்தியாரோ	...	ங்க	இகமான	...	உசுரு
அந்தக்கண	...	உகo	இக்குணங்	...	நுஅ
அந்தமுநடு	...	உக	இங்குமப்படி	...	உஉஉ
அந்தவாறி	...	ஙநச	இதயமொத்த	...	ங்கக
அப்படியிரு	...	நநள	இதுநினக்	...	கoஉ
அரவன்று	...	அசு	இந்தச்சீவ	...	உகக
அரிதாகு	...	கசஉ	இந்தஞான	...	உகரு
அரியமெ	...	கசஅ	இந்தநிச்ச	...	உசo
அருவமாகு	...	உசக	இந்தநீ	...	கஉo
அருளுமை	...	உநஉ	இந்தமாயை	...	கூக
அழிவிலாத	...	உoசு	இந்தவாறை	...	உகச
அழுக்கொடு	...	சுக	இப்படிப்	...	நுங
அளிமகனெ	...	கஉஅ	இப்புவியி	...	நஉக
அறியாதம	..	கoஉ	இம்பரின	...	கஅ
அறிவுக்கு	..	ககச	இராசத	...	சுங
அறுசுவை	...	கஅசு	இருவகை	...	நஉரு
அனகமை	...	உoஉ	இருளாக	...	உஎக
அனுபவா	...	கஉள	இலக்கமா	...	உoங
அன்னபா	...	உளங	இல்லெயா	...	உருஉ
அன்னதன்	...	நக	இவனதி	...	உஅ
ஆ.			இவனயன்	...	ககஅ
ஆகமப்பிர	...	கசுo	இவ்வாறுரை	...	உஅங
ஆடவர்	...	கஅஅ	இவ்வுடன்	...	சுச

பாடல்.		பக்கம்.
இன்னதுதே	...	நடு
இன்னவகை	...	நடந
இன்னவாற	...	உஉ0
ஈ.		
ஈசர்காரிய	...	உ0க
ஈசனுக்கிது	...	நுக
ஈசனுமா	...	ககசு
ஈனந்தரு	...	உ அச
ஈன்றளித்	...	கள
உ.		
உண்டுறங்	...	நகச
உதவும்புவி	...	உ அள
உத்தமவெ	...	நுடு
உத்தமகு	...	ககச
உருக்கிய த	..	கள0
உருவங்களி	...	உசுஉ
உலகமான	...	உஉக
உன்முகம்	...	கள0
எ.		
எத்தனைநா	...	கநச
எரிகின்ற	...	கள உ
எல்லாங்க	...	ககச
எல்லாச்சீவ	...	ககசு
எவருடை	...	கள
எவனுகிலு	...	உகநட
எனவுரைத்	...	கடுஅ
என்மனந்	...	உ0சு
என்னபுண்	...	நடுக
என் னுடை	...	கக
என்னைத்தா	...	நடு
ஏ.		
ஏகமாய்	...	கஅ0
ஏமமாயா	...	சுஉ
ஐ.		
ஐந்தபூதமு	...	சுடு
ஐயனேயெ	...	கஉக
ஐயாகேளீர்	...	ககக
ஒ.		
ஒருவழியி	...	நுசு
ஒன்றுகிய	...	உ அக
ஒன்றுகேண்	...	உகச
ஓ.		
ஓய்ந்தகனை	...	ககஉ

பாடல்.		பக்கம்.
க.		
கங்கையிற்	...	கஉஉ
கடநீரின்	...	கஉசு
கடமெனு	...	கசஅ
கண்டறிந்	...	உநச
கரணமா	...	க0அ
கருதும	...	களச
கருப்பை	...	உடுஉ
களங்கமற்	...	களக
கள்ளுமூனு	...	உஉசு
கற்பனைவந்த	...	எஉ
கா.		
காமமா திக	...	கநள
காமியத்த	...	உ0க
காரணசரீ	...	நநசு
காரியங்க	...	உடு0
கானனீர்	..	கடுந
கி.		
கிளர்மக	...	ககூ0
கு.		
குகன்றனை	...	உகடு
குரவர்சிகா	...	கஅக
குலவுசற்	...	நசஉ
குளிரிளக	...	உகசு
கெ.		
கெடலான	...	உளஅ
கே.		
கேவலநிலை	...	கூடு
கை.		
கைதவங்க	..	உ0ந
ச.		
சகமதிலி	...	கூஉ
சடமதாகி	...	உநள
சடமான	...	உசுச
சட்டிகுட	...	ககள
சத்திசத்தனை	...	உடுக
சத்தேசித்	...	நு0சு
சத்தொடுசித்	...	க0க
சந்ததம்பு	...	கடுஅ
சமந்தமம்	...	உசு
சருவமுத்	...	உநசு
சா.		
சாதனமின்	...	உள

பாடல்.	பக்கம்.
சி.	
சிஞ்ஞாசு	... ஙஉடு
சிட்டர்புக	.. ஙஉங
சிட்டனிவ்	.. கஉக
சித்துஙா	... ஙஙஅ
சிரவணப்	... உசு
சிவசொரூ	... உ0க
சிறந்தநன்	... உ0எ
சீ.	
சீரியவீச	... எக
சீவபேத	... உ0ச
சீவன்முத்	... கசச
சு.	
சுத்தமாஞ்	... கஅக
சுத்தியில்	.. கூஅ
சுருதியுத்தி	... ஙஉ0அ
சுழுத்தியி	... கூசு
சூ.	
சூக்குமச	... சுடு
செ.	
செய்கையு	... கஅடு
சென்மாந்த	... உஎ0
சென்றதுக	... கச0
சொ.	
சொரூபஞா	... உஉக
சொல்லிய	.. கடுஉ
சொற்பன	... உசச
சொன்னது	... ஙஉ
ஞா.	
ஞானங்கார	... உடுகூ
ஞானமார்	... கஙடு
த.	
தசபுமான்	... க0ங
தஞ்சமாங்	... கஉசு
தடத்துறீ	... ககக
தடையெ	... கங்க
தத்துவஞா	.. ஙஙக
தத்துவத்தி	... ஙகசு
தத்துவமெ	... கஉச
தத்துவவநு	... கங்உ
தத்துவவிசா	... க0க
தர்ப்பணத்தி	... உஉக
தன்பதியல்	... கசுஅ
தன்னையுங்	... ஙச

பாடல்.	பக்கம்.
தா.	
தாகப்படும்	... உஎசு
தாமதமிரா	... உசுங
தாலத்தின்	... ஙஅ
தானன்றி	... உசுக
தானிகர்	... கூ0
தி.	
திகழ்ந்தவீ	... உ0அ
தினமுமண்	... உஉச
தீ.	
தீராய்	... கஙசு
து.	
துரியநில	... ஙகஅ
துருத்திமா	... உங0
துற்ச்சங்க	... ஙகடு
துளங்குத	... உஉ0
தூ.	
தூங்குஞ்சுக	... உஅசு
தூடணதம	... அகூ
தூலசூட்சு	... ககஉ
தூலமேம	... சுசு
தெ.	
தெரிதரும	... கஙங
தே.	
தேகத்தனல	... கஅச
தேகமல்லா	... ஙசு
தொ.	
தொடர்பவ	... ஙக
தோ.	
தோற்றமாஞ்சத்திதன்	... சுஉ
தோற்றமாஞ்சத்திதாஞ	... கூடு
ந.	
நரரின்ம	... கஙக
நரர்குழிப	... கடுசு
நலமெய்	... உகஉ
நல்லவனே	... கஙடு
நற்கருத்துடை	... கடுஎ
நனவுகண்	... ஙஎ
நன்மையா	... உஉங
நா.	
நாசச்சரீ	... உசுக
நாலாம்பூமி	... ஙஉ0
நானென	... ஙங்அ
நானென்ற	... ஙங்உ

பாடல்.	பக்கம்.
நி.	
நிசமானது ...	உகக
நித்தியம்பூ ...	உகள
நித்தியவஸ்தி ...	உடு
நிறைந்தவா ...	நநந
நிற்குணவ ...	நoச
நீ.	
நீனானென் ...	கந0
நெ.	
நெய்யும் ...	உஅஅ
ப.	
பங்கயாசன ...	உசங
பஞ்சகோச ...	ககக
பஞ்சினையூழி ...	கசடு
படமூநூலு ...	அஅ
படர்ந்தவே ...	உஉ
பத்தியும்வ ...	உகக
பந்தமனது ...	ந உசு
பலகலையுமு ...	நக0
பன்னிய ...	கஉங
பா.	
பாவிமந்த ...	நஉச
பி.	
பிரமஞானி ...	கசச
பிரமபாவனை ...	கங்உ
பிரமமாந்த ...	க00
பிரமரூபத் ...	உநஅ
பிறந்ததுண் ...	நநக
பிறிவதெப் ...	க0அ
பின்னைமூவ ...	கசக
பு.	
புண்ணிய ...	க0உ
புலவர்புக ...	நகடு
புலியுமநு ...	உஅ0
பூ.	
பூச்சியவீச ...	க0எ
பூரிக்குங்க ...	உடுஅ
பூன்றமா ...	கூ0
பே.	
பேதகர்மத் ...	கநஅ
பேதமானது ...	கஉ0
பொ.	
பொய்யைமெ ...	உசடு
பொல்லாத ...	நஉஉ
பொறுமை ...	கசஎ
பொன்னில ...	ந
போ.	
போகத்தில் ...	உஅஉ
போகமாரு ...	உஉடு
போனசன் ...	உகஅ
ம.	
மதுரமாங்க ...	ககக
மதுவிறைச் ...	உஉசு
மந்தமூந்தி ...	நஉங
மந்திரமூர் ...	கடுக
மரங்கள் ...	எஉ
மலடிமை ...	உசக
மற்றைமு ...	ககக
மனதுசத் ...	கஎஅ
மனத்திலு ...	நநந
மனநாசஞ் ...	கஅ0
மனுடன் ...	உகஉ
மனைக்குள் ...	உஉஉ
மனைவிலங் ...	உகங
மா.	
மாயையென்பது ...	உசஉ
மாயையென்பதே ...	உசசு
மானஞ்சி ...	உஅக
மு.	
முத்தனேவே ...	உச
முத்திநல் ...	உ00
முந்தவகண் ...	நகநு
முந்தியசங் ...	கசுகூ
முற்புவிமூன் ...	நகள
முன்புகறச ...	ககக
முன்னிலங்க ...	நகக
மூ.	
மூவராம்பர ...	உ0அ
மெ.	
மெய்யுங் ...	கஅஅ
மே.	
மேவுமண் ...	உடுடு
மோ.	
மோகவிருள் ...	கூ0டு
யோ.	
யோகஞா ..	உ0உ
வ.	
வகுத்தகர் ...	உகங

பாடல்.	பக்கம்.	பாடல்.	பக்கம்.
வஞ்சகமி ...	களந	வித்தியாந ...	நசo
வடநூல்வல் ...	கலக	விருத்திக ...	சoக
வணங்கிநி ...	நo	விருத்திஞா ...	உநந
வந்ததோ ...	நசo	விருத்தியும் ...	களல
வா.		விவகாரவே ...	கஅந
வாக்கியந்த ...	கசுஅ	வினவுமிட ...	நகல
வாதனுவசத் ...	நநடு	வீ.	
வாயுத்தம்ப ...	உடுச	வீடதாம்பரி ...	உநக
வராயென் ...	நந	வீயாசசத் ...	நoள
வி.		வே.	
விடயசுக ...	உளச	வேகின்ற ...	உளடு
விண்ணெனன் ...	கoச	வேடமாறி ...	உகக

கைவல்லியநவநீதச்செய்யுளின்
முதற்குறிப்பகராதி
முற்றிற்று.

உ

சிவமயம்.

கைவல்லிய நவநீதப்

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கூ	அ	காமகுரோத	காமக்குரோத
ககு	நக	அருளுருகொண்டு	அருளுருக்கொண்டு
கஉ	எ	ரோன்றிக்கண	ரோன்றிக்கண்
,,	உஅ	துதியும	துதியும்
கந	நு	ரூர்பரியம்	ரூற்பரியம்
,,	கள	தேவையான	தேவயான
கச	க	நாநாலுகற்பித	நாலுகற்பித
கடு	கக	உணர்த்துணர்ந்து	உணர்ந்துணர்ந்து
,,	உo	கிருபாலு	கிருபாளு
,,	நங	உபலட்சணத்திற்ரு	உபலட்சணத்திற்கு
கசு	கச	கூரிய	கூறிய
ககூ	கச	என்னுடைகுருவாய்	என்னுடைக்குருவாய்
,,	உச	பிரஜ்ஞை	பிரஞ்ஞை
உக	ககூ	தத்துவ	தத்துவம்
உசு	நo	எனர்பாலது	எனற்பாலது
உள	எ	உபதேசிக்கபபட்ட	உபதேசிக்கப்பட்ட

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
,,	ஈடு	சாதனங்ளை	சாதனங்களை
உஅ	உசூ	புழுபோல்	புழுப்போல்
,,	ஈஉ	ஏவ்வாசிரமி	எவ்வாச்சிரமி
உக	உசூ	மான்போல	மான்போல்
ஙக	கஅ	ஒருபாயம்	ஒருபாயம்
சக	உக	அர்தாத்தியாசம்	அர்த்தாத்தியாசம்
ஞஉ	உச	நேதநிரத்தின்	நேத்திரத்தின்
ஞக	ஙக	காண	காரண
சுஉ	கஅ	முடல்	மூடல்
சுங	ச	பைந்து	யைந்து
,,	கஉ	ஒதிய	ஒதிய
,,	ஙச	அந்தத்கரண	அந்தக்கரண
எஉ	உ	காரியவபாதி	காரியவுபாதி
எசு	க0	செல்லாநிற்பது	சொல்லாநிற்பது
கூள	கச	வீடளிபாப்	வீடளியாப்
கக0	கச	சித்திரயிரு	சித்திரமிரு
கஙங	உ	சிந்தாந்தம்	சித்தாந்தம்
கஞக	கக	காய்ந்தனை	காயந்தனை
கசுஉ	கஅ	பூர்வமிமா	பூருவமீமா
,,	உஅ	பூருவமிமா	பூருவமீமா
கசுஞ	கஅ	யினும்பிர	ணும்பிர
கசுசு	உங	பொழுதுதுண்	பொழுதுண்
கசுள	கச	உபபாதமாம்	உபபாதகமாம்
கசுஅ	கக	துவம்பங்களின்	துவம்பதங்களின்
உ0சு	கஉ	சிந்தாந்தத்தை	சித்தாந்தத்தை
உஉஉ	உள	அந்தக்காரத்தை	அந்தகாரத்தை
உஉஞ	உசு	நெறுப்பேசுடு	நெருப்பேசுடு
உசஞ	உ	கருதியோ	சுருதியோ
உசஅ	சு	அந்தியவயவத்தை	அந்தியவவயவத்தை
,,	க0	அஞ்ஞானத்தில	அஞ்ஞானத்தில்
உஞசு	கள	ஆதரம்	ஆதாரம்
உஞள	சு	னெனீன்	னெனின்
உசச	உச	பொருமை	பொறுமை
,,	ஙங	சுகாநுபங்	சுகாநுபவங்
உசுசு	அ	அன்மாவுக்கு	ஆன்மாவுக்கு
உளஉ	ச0	மெப்போல	மெய்போல
உளக	கச	சிதாமான்வை	சிதான்மாவை
உஅஞ	கஅ	சய்யையிற்	சையையிற்
உகக	ந0	சீதளதன்மை	சீதளத்தன்மை
ஙகங	அ	பூமீகள்	பூமிகள்
ஙஉஞ	உக	மூன்று	மூன்று
ஙஙச	நக	சாடசியா	சாட்சியா